


RDB

ප්‍රාදේශීය සංවර්ධන බැංකුව
பிரதேச அபிவிருத்தி வங்கி
Regional Development Bank

வருடாந்த அறிக்கை 2022



புதுமையின் மூலமான மாற்றம்

ஏறக்குறைய நான்கு தசாப்தங்களாக
எமது வாடிக்கையாளர்கள் மற்றும் பங்குதாரர்களின்
தேவைகளை நிறைவேற்ற எம்மை அர்ப்பணித்துக் கொண்டுள்ளோம்.
இந்தப் பயணத்தின் போது, நிதியியல் மற்றும் நிதித் தொழில்களில்
அதிநவீன உத்திகளை நாங்கள் தொடர்ந்து பயன்படுத்தியுள்ளோம்.
எங்களின் உறுதியான உதவியின் மூலம்
எங்கள் பங்குதாரர்கள் அனைவரும்
தங்கள் இலக்குகளையும் நோக்கங்களையும் நிறைவேற்றிக் கொள்ள முடிந்துள்ளது.

கடந்த ஆண்டுகளில், வீரைவான மற்றும்
திறமையான தீர்வுகளை செயல்படுத்துவதன் மூலமாகவும்
புதுமையான மேம்பாடுகள் மூலமாகவும்
எமது வாடிக்கையாளர்களுக்கும் ஊழியர்களுக்கும்
நாங்கள் வழிகாட்டி வசதிகளை வழங்கியுள்ளோம்.

டிஜிட்டல் மாற்றம் மூலம் நாங்கள் இப்போது
தடையற்ற நிதி மற்றும் பணச் சேவைகளில்
கவனம் செலுத்தி பங்குதாரர்களின் அதிகாரமளிப்பை
அடுத்த கட்டத்திற்கு எடுத்துச் செல்கிறோம்.
இந்த டிஜிட்டல் பரிணாமமானது
பாரம்பரிய வரம்புகளைக் கடந்து
பாதுகாப்பான, திறமையான மற்றும் தொழில்நுட்ப ரீதியாக
மேம்பட்ட அனுபவத்தை வழங்கும்,
மேலும் பாதுகாப்பான மற்றும் வளமான எதிர்காலத்திற்கு வழி வகுக்கும்.

உள்ளடக்கம்

தொலைநோக்கு | பணி 04
எம்மைப் பற்றி 05
எமது பயணம்/ மைல்கற்கள் 06
நிதிச் சிறப்பம்சங்கள் 08
தலைவரின் செய்தி 10
பொது முகாமையாளர்/ பிரதம நிறைவேற்று அதிகாரியின் மீளாய்வு 15

பணியாட்கள்
பணிப்பாளர்கள் சபை 22
கூட்டுறவு முகாமைத்துவ அணி 28
சிரேஷ்ட உதவிப் பொது முகாமையாளர்கள்/
பிராந்திய பொது முகாமையாளர்கள் 30
உதவிப் பொதுமுகாமையாளர்கள்/ துறைத் தலைவர்கள் 32

முகாமைத்துவக் கலந்துரையாடல் மற்றும் பகுப்பாய்வு
நிதி மீளாய்வு 38
வாடிக்கையாளர் மற்றும் உறவு மீளாய்வு 42
தகவல் தொழில்நுட்ப மீளாய்வு 46
சந்தைப்படுத்தல் மீளாய்வு 47
சமூக மற்றும் சுற்றாடல் மீளாய்வு 52
பணியாட்கள் மீளாய்வு 54
விசேட நிகழ்வுகள் 56
இடர் முகாமைத்துவம் 63

உள்ளடக்கம்

கூட்டுறவு ஆளுகை

கூட்டுறவு ஆளுகை மீதான கணக்காய்வாளர் நாயகத்தின் அறிக்கை 78

கூட்டுறவு ஆளுகை 80

சபை மற்றும் சபைக் குழுக்களுக்கான சமூகம் 110

பணிப்பாளர் சபையின் வருடாந்த அறிக்கை 112

சபையின் மனித வளங்கள் மற்றும் ஊதியங்கள் குழு (BHRRC)

சபைத் தெரிவுக்குழு (BNC) அறிக்கை 118

சபை கணக்காய்வுக் குழுவின் (BAC) அறிக்கை 120

சபையின் ஒருங்கிணைக்கப்பட்ட இடர் முகாமைத்துவக் குழு அறிக்கை 122

பிரதம நிறைவேற்று அதிகாரி மற்றும் பிரதம நிதி அதிகாரி ஆகியோரின் பொறுப்புக் கூற்று 126

உள்ளகக் கட்டுப்பாடு தொடர்பான கணக்காய்வாளர் நாயகத்தின் அறிக்கை128

நிதி அறிக்கையிடல் மீதான உள்ளகக் கட்டுப்பாடு குறித்த பணிப்பாளர்களின் அறிக்கை 130

நிதி அறிக்கையிடலுக்கான பணிப்பாளரின் பொறுப்பு 132

நிதி அறிக்கை

கணக்காய்வாளர் நாயகத்தின் அறிக்கை 136

வருமானக் கூற்று 140

விரிவான வருமானக் கூற்று 141

நிதி நிலைமைக் கூற்று 142

ஒப்புரவு மாற்றம் பற்றிய கூற்று 143

நிதிப் பாய்ச்சல் கூற்று 144

நிதிக் கூற்றுக்களுக்கான குறிப்புகள் 146

துணைநிலைத் தகவல்கள்

ஐந்து வருட சாராம்சம் 232

முதலீட்டாளர் தகவல் 234

கிளைகளின் புவியியல்சார் பங்கீடு 235

குறிப்புகள் 238

கூட்டுறவுத் தகவல்கள் - உள் பின் அட்டை 239

தொலைநோக்கு

“தேசத்திற்கு நம்பகமான அபிவிருத்தி நிதியிடல் பங்காளராகத் திகழ்தல்”

பணி

“அனைவரையும் உள்ளடக்கும்,
அபிவிருத்தியை ஊக்குவிக்கின்ற அதேவேளை,
தொழில் முயற்சிகளுக்கும்,
தொழில் முயற்சியாளர்களுக்கும்
நிதியியல் மற்றும் இணைந்த
சேவைகளை வழங்குதல்”

எம்மைப் பற்றி

1985 ஆம் ஆண்டு, பிரதேச கிராமிய அபிவிருத்தி வங்கிகள் என்ற வகையின் கீழ், மாவட்ட மட்டத்தில் வங்கிகள் உருவாகத் தொடங்கிய காலகட்டத்திலேயே "பிரதேச அபிவிருத்தி வங்கி" (RDB) யின் செயற்பாடுகள் ஆரம்பமாயின. 1997 இல் அத்தகைய பதினேழு (17) பிரதேச கிராமிய அபிவிருத்தி வங்கிகள் ஒன்றிணைக்கப்பட்டு, 06 மாகாண மட்ட வங்கிகளாக உருவாக்கப்பட்டன. அவையாவன - ரஜரட்டை, ருஹுணு, வயம்ப, ஊவா, கந்துரட்ட மற்றும் சப்ரகமுவ அபிவிருத்தி வங்கி என்பனவாகும். இந்த 06 மாகாண மட்டத்திலான வங்கிகளும், 2010 மே மாதத்தில் ஒரு தேசிய மட்ட அபிவிருத்தி வங்கியாக மேலும் இணைக்கப்பட்டதுடன், பிரதேச அபிவிருத்தி வங்கி (RDB) எனப் பெயரிடப்பட்டது.

கிராமியப் பொருளாதாரத்தை மேம்படச் செய்ய பங்களிப்பு வழங்கும் வகையில் அணுகக்கூடிய மற்றும் தம்மால் தாங்கக்கூடிய நிதிச் சேவைகளை கிராமிய மக்களுக்கு வழங்குவதன் மூலம், அவர்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதற்கான நீண்டகால குறிக்கோள்களுடன் RDB 2008 ஆம் ஆண்டின் 41 ஆம் இலக்க பிரதேச அபிவிருத்தி வங்கி சட்டத்தின் கீழ் முழுமையாக அரசு உரிமை கொள்ளப்பட்ட தேசிய மட்ட வங்கியாக ஸ்தாபிக்கப்பட்டது.

ஆரம்பத்தில் "வெற்றுக் காலுடன் கூடிய வங்கிக் கோட்பாடு" (Barefoot banking concept) என்பதன் அடிப்படையில் செயற்படத் தொடங்கிய வங்கி, புதுமையான, இலகுவான மற்றும் வினைத்திறனான நிதிக் கருவிகளை (பிரதானமாக, சேமிப்பு அணி திரட்டல் மற்றும் கடன்) நடுத்தர மற்றும் கீழ்மட்ட வருமானம் பெறுபவர்களுக்கு வழங்கி வருகிறது. வங்கி, அதன் வாடிக்கையாளர்களை நுண், சிறிய மற்றும் நடுத்தர மட்ட கைத்தொழில் துறைகள், மகளிர் முயற்சியாளர்கள் மற்றும் விவசாயம், கால்நடை, மீன்பிடி, மற்றும் ஏனைய சிறு கைத்தொழில் துறை என்பவற்றை ஊக்குவிப்பதில் அக்கறை செலுத்துவதுடன், இவை அனைத்தும் நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்குப் பங்களிப்புச் செய்யும். வங்கி, சேமிப்பு மற்றும் நிலையான வைப்புகளுக்கு அதி உயர் திரும்பல்களை வழங்குவதன் மூலம், கிராமிய மக்கள் மத்தியில் சேமிப்புப் பழக்கத்தை உருவாக்குவதற்கு முயற்சிகளை மேற்கொண்டுள்ளது. அதேவேளை, பாடசாலை மாணவர்களுக்கும், சிறுவர்களுக்கும் சேமிக்கும் பழக்கத்தை ஊக்குவித்துள்ளது.

இன்று, 272 கிளைகளையும், 2,530 க்கும் மேற்பட்ட தொழில் வல்லமை சார்ந்த நிரந்தர பணியாளர்களையும் கொண்டு, ஆறு மில்லியன் நம்பகமான கணக்குரிமையாளர்களுக்கு சேவைகளை வழங்கி வரும் RDB, எமது நாட்டின் சமூக, பொருளாதார செழுமைக்கு உந்து சக்தியாக அமையும் தொழில் முனைவோரை வளர்த்தல் என்ற தனது நோக்கை அமுல்படுத்தக்கூடிய வகையில் அனைத்தையும் கொண்டுள்ளது.

எமது பயணம் மற்றும் மைல்கற்கள்

ஆறு மாகாண அபிவிருத்தி வங்கிகளை ஒரு தேசிய மட்ட அபிவிருத்தி வங்கியாக இணைத்த பின்னரான வெற்றிப் பயணம்

1985 - 2009 வரையான இருபத்து நான்கு வருட காலப் பகுதியில், மாகாண அபிவிருத்தி வங்கிகள் (ரஜரட்ட, ருஹுண, வயம்ப, ஊவா, கந்துரட்ட மற்றும் சப்ரகமுவ அபிவிருத்தி வங்கிகள்) அடைந்த பெறுபேறுகள், *2010* ஆம் ஆண்டில் அனைத்து மாகாண வங்கிகளும் ஒன்றிணைக்கப்பட்டு, பிரதேச அபிவிருத்தி வங்கி (**RDB**) ஸ்தாபிக்கப்பட்ட பின்னர் பன்னிரண்டு வருடங்களுக்குள் *(2010 - 2022)* துரிதமாக அதிகரித்தது.

மொத்த சொத்துக்களின் வளர்ச்சி

595%

41 பில்லியன் ரூபாவிலிருந்து 285 பில்லியன் ரூபா

மொத்த வைப்புக்களின் வளர்ச்சி

556%

32 பில்லியன் ரூபாவிலிருந்து 210 பில்லியன் ரூபா

மொத்தக் கடன்கள் மற்றும் முற்பண வளர்ச்சி

616%

30 பில்லியன் ரூபாவிலிருந்து 215 பில்லியன் ரூபா

செயற்பாட்டு இலாப வளர்ச்சி

438%

371 மில்லியன் ரூபாவிலிருந்து 1998 மில்லியன் ரூபா

மொத்தப் பங்குகளின் வளர்ச்சி

433%

3 பில்லியன் ரூபாவிலிருந்து 16 பில்லியன் ரூபா

2010 மே முதல் 2022 டிசம்பர் வரை

- *RDB* யின் மொத்த வைப்புகள் *32,350* மில்லியன் ரூபாயில் இருந்து *210,301* மில்லியன் ரூபாய்களாக *178* பில்லியன் ரூபாய்களினால் அதிகரித்துள்ளது.
- *RDB* யின் மொத்தக் கடன்களும் முற்பணங்களும் *30,311* மில்லியன் ரூபாயில் இருந்து *215,373* மில்லியன் ரூபாய்களாக *185* பில்லியன் ரூபாய்களினால் அதிகரித்துள்ளது.
- *RDB* யின் மொத்தச் சொத்துகள் *41,018* மில்லியன் ரூபாயில் இருந்து *285,395* மில்லியன் ரூபாய்களாக *244* பில்லியன் ரூபாய்களினால் அதிகரித்துள்ளது.

RDB யின் வரலாறு

1985	*17* பிராந்திய கிராம அபிவிருத்தி வங்கிகளை நிறுவியமை
1997	*06* மாகாண அபிவிருத்தி வங்கிகளை நிறுவியமை
2010	பிரதேச அபிவிருத்தி வங்கி என தேசிய அளவிலான ஒரு நிறுவனம் அமைக்கப்பட்டமை
2018	லங்காபுத்ர அபிவிருத்தி வங்கியைக் கையகப்படுத்தியமை

RDB யின் வரலாறு, *1985*ஆம் ஆண்டின் *15*ஆம் இலக்க பிரதேச கிராமிய அபிவிருத்தி வங்கிகள் சட்டத்தின் கீழ், "பிரதேச கிராமிய அபிவிருத்தி வங்கிகள்" என்ற வகையில், மாவட்ட மட்டத்திலான வங்கிகள் உருவாக்கப்பட்டதில் இருந்து ஆரம்பிக்கிறது.

இதனையடுத்து, *1997* இல், *1997* ஆம் ஆண்டின் *06*ஆம் இலக்க பிரதேச அபிவிருத்தி வங்கி சட்டத்தின் கீழ் *17* பிரதேச கிராமிய அபிவிருத்தி வங்கிகள், *06* மாகாண வங்கிகளாக ஒன்றிணைக்கப்பட்டன. அவையாவன, ரஜரட்டை, ருஹுண, வயம்ப, ஊவா, கந்துரட்ட மற்றும் சப்ரகமுவ அபிவிருத்தி வங்கி என்பனவாகும். *2008* ஆம் ஆண்டின் *41*ஆம் இலக்க பிரதேச அபிவிருத்தி வங்கி சட்டம் அறிமுகப்படுத்தப்பட்டதைத் தொடர்ந்து மேற்குறிப்பிட்ட *06* வங்கிகளும் *2010* ஆம்

ஆண்டு மே மாதம் 01ஆம் திகதி பிரதேச அபிவிருத்தி வங்கி என தேசிய நிறுவனமாக ஒன்றிணைக்கப்பட்டது.

RDB தேசிய மட்ட அரச அங்கீகாரம் பெற்ற அபிவிருத்தி வங்கியாக உள்ளதுடன், விவசாயம், கைத்தொழில் துறை, வியாபாரம், வர்த்தகம், கால்நடை, மீன்பிடி மற்றும் மகளிர் மேம்பாடு போன்ற அபிவிருத்தி நடவடிக்கைகளை ஊக்குவித்தல், முக்கியமாக, நுண் நிதி நிறுவனங்கள் மற்றும் சிறிய மற்றும் நடுத்தர அளவிலான நிறுவனங்களுக்கு நிதி உதவிகளை வழங்குவதன் மூலம் இலங்கையின் ஒட்டுமொத்த பிராந்திய பொருளாதார அபிவிருத்திக்கு உதவுவதே வங்கியின் நோக்கமாகும்.

நிதிச் சிறப்பம்சங்கள்

வங்கித்துறையை அபிவிருத்தி செய்வதற்காக அர்ப்பணிப்புடன் செயற்பட்டு வரும் நிதி நிறுவனம் என்ற அடிப்படையில், *RDB* நாட்டின் சமூக மற்றும் பொருளாதார அபிவிருத்தி நடவடிக்கைகளை முன்னேற்றுவதில் முக்கிய பங்கு வகித்து வருகிறது. ஒரு நிதி வழங்குநர் என்ற அடிப்படையில், நாட்டில் அனைத்துப் பொருளாதார நிகழ்ச்சித் திட்டங்களிலும் எமது வங்கி முன்னணி வகிக்கிறது. வடக்கு, கிழக்கு உள்ளடங்கலாக, நாடு பூராகவும் பரந்துள்ள 06 மில்லியனுக்கும் மேற்பட்ட எமது வாடிக்கையாளர் தளம், எமது முக்கியமான சொத்தாகும். நாட்டையும், நாட்டு மக்களையும் அபிவிருத்தி செய்வதிலும் வங்கி பிரதான கவனம் செலுத்தி வருகிறது. எனவே, நாட்டு மக்களை முன்னேற்றுவதற்கு வங்கி கடமைப்பட்டிருப்பதன் மூலம், நாடு பூராகவும் பரந்துள்ள 272 கிளைகளின் வலையமைப்பு ஊடாக நாட்டை அபிவிருத்தி செய்து வருகிறது.

கடந்த வருடத்துடன் ஒப்பிடுகையில், வங்கியின் மொத்த வருமானம் 48% ஆல் அதிகரித்துள்ளது. 2022 ஆம் ஆண்டில் செயற்படு இலாபம் 1,998 மில்லியன் ரூபாய்களாக அதிகரித்துள்ளதுடன், இது, 2021 ஆம் ஆண்டில் பதிவு செய்யப்பட்ட 1,927 மில்லியன் ரூபா தொழிற்படு இலாபத்துடன், ஒப்பிடுகையில், 3.70% அதிகரிப்பாகும்.

2020 ஆம் ஆண்டில் 0.78% ஆகவிருந்த வரிக்கு முந்திய சொத்துக்கள் மீதான திரும்பல் (*ROA*), 0.47% ஆகப் பதிவு செய்யப்பட்டுள்ளது.

எமது வாடிக்கையாளர்களுக்கான துணைநிலைச் சேவைகள்

NDB உடன் வெஸ்டர்ன் யூனியன்

வெஸ்டர்ன் யூனியன் ஊடாக எந்த ஒரு வெளிநாட்டில் இருந்தும் எமது நாட்டிற்கு முழுமையான பாதுகாப்புடன், இலகுவாகவும், துரிதமாகவும் பணத்தை அனுப்ப முடியும். இவ்வாறு அனுப்பப்படும் பணத்தை, வாடிக்கையாளர்கள் கிராமிய மற்றும் நகரங்களுக்கு இடையிலான பிரதேசங்களில் பரந்துள்ள எமது *RDB* கிளைகள் ஊடாக பணத்தைப் பெற்றுக்கொள்ள முடியும்.

DFCC உடன் லங்கா மணி டிரான்ஸ்பர் (LMT)

லங்கா மணி டிரான்ஸ்பர், வாடிக்கையாளர்களின் வங்கிக் கணக்கிற்கு நேரடியாகவும், உடனடியாகவும்

பணத்தை வைப்புச் செய்கிறது. லங்கா மணி டிரான்ஸ்பர் 275 க்கும் மேற்பட்ட இடங்களில் உள்ள ஒரு பரந்த சர்வதேச வலையமைப்பாகவிருப்பதுடன், நாடு பூராவும் 272 *RDB* கிளைகளில் இவ்வசதியைப் பெற்றுக் கொள்ள இயலும்.

பயன்பாட்டுப் பட்டியல் கட்டணங்கள்

ஸ்ரீலங்கா டெலிகொம், இலங்கை மின்சார சபை (*CEB*) தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபை (*NWSDB*) என்பனவற்றுடனான பயன்பாட்டுப் பட்டியல் கட்டணங்களைச் செலுத்தும் சேவையானது *RDB* கிளைகளிலும் அதேசமயம் எமது தொரின் தொர சேமிப்பு உதவியாளரிடம் இலகுவாக செலுத்தப்படலாம்.

RDB ATM வசதி

எமது வாடிக்கையாளர்கள் தற்போது நாடு பூராகவுமுள்ள 4,000 க்கும் மேற்பட்ட *ATM* களில் இருந்து தங்களது பணத்தை மீளப் பெற முடியும். வாடிக்கையாளர்களுக்கு தற்போது வரை சுமார் 350,000 *ATM* அட்டைகள் விநியோகிக்கப்பட்டுள்ளன.

பொது இலத்திரனியல் நிதி மாற்றல் முறைமை (CEFT)

வங்கிகளுக்கிடையிலான பணப் பரிமாற்ற வசதிகள் எமது வாடிக்கையாளர்களுக்கும் உள்ளது.

பண வைப்பு இயந்திரங்கள் (CDM)

தெரிவு செய்யப்பட்ட சில கிளைகளில் மாத்திரம் உள்ளது.

RDB QR வசதி

RDB 2021 இல் வணிகர்களுக்காக "RDB QR" ஐ அறிமுகப்படுத்துகிறது. அதன்படி, RDB வணிக வாடிக்கையாளர்கள் பணம் அல்லது அட்டையைப் பயன்படுத்தாமல் QR குறியீடு மூலம் பரிவர்த்தனைகளைச் செய்ய முடியும். வணிகர்கள் மற்றும் கொள்வனவாளர்களுக்கு இது ஒரு தொந்தரவு இல்லாத பரிவர்த்தனை முறையாகும்.

நிதிச் சிறப்பம்சங்கள்


	2021 இ. ரூ 000	2020 இ. ரூ 000	மாற்றம் %
வருடத்திற்கான செயற்பாட்டுப் பெறுபேறுகள்			
மொத்த வருமானம்	**36,202,750**	24,492,769	47.81%
வரிக்கு முன்னரான செயற்படு இலாபம்	**1,998,116**	1.926.728	3.70%
வரி விதிப்பு	**648,721**	160,749	-59.97%
வரிக்குப் பிந்திய இலாபம்	**1,349,395**	306,303	340.54%
பங்குதாரர்களுக்கு வழங்க வேண்டிய இலாபம்	**1,458,769**	279,005	422.85%
சொத்துக்களும் பொறுப்புக்களும்			
வாடிக்கையாளர் வைப்புகள்	**210,301,323**	187,752,465	12.01%
கடன்கள் மற்றும் வரவுகள்	**215,372,502**	189,039,666	13.93%
மொத்த சொத்துக்கள்	**285,395,150**	245,889,512	16.07%
மொத்தப் பொறுப்புகள்	**269,169,023**	230,496,189	16.78%
பங்குதாரர்களின் நிதியம்	**16,226,127**	15,393,322	5.41%
இலாபத்தன்மை			
சொத்துக்கள் மீதான திரும்பல் (செயற்படு இலாபங்கள்)	**0.47%**	0.78%	-0.31%
பங்குரிமை மீதான திரும்பல்	**8.54%**	8.32%	-0.22%
செயற்திறனற்ற கடன் விகிதம்	**8.46%**	8.71%	-0.25%

ஒழுங்குபடுத்தல் விகிதங்கள்

மூலதன போதுமை விகிதம் (பாசல் III இன்படி)	2022 (%)	குறைந்தபட்ச தேவைப்பாடு	2021 (%)	குறைந்தபட்ச தேவைப்பாடு
மூலதனம் உட்பட பொது ஒப்புரவு அடுக்கு 1 பாதுகாப்பு தாங்கல்	**8.29%**	**7.5%**	8.72%	7.5%
மூலதனப் பாதுகாப்பு தாங்கல் உட்பட மொத்த அடுக்கு 1	**8.29%**	**8.5%**	8.72%	8.5%
மூலதனப் பாதுகாப்பு தாங்கல் உட்பட மொத்த மூலதன விகிதம்	**15.22%**	**12.5%**	14.27%	12.5%
நியதிச் சட்ட திரவச் சொத்துக்கள் விகிதம்	**27.83%**	**20.0%**	26.18%	20.0%


மொத்த வருமானம்

36,203 மில் ரூ




வரிக்கு முந்திய செயற்படு இலாபம்

36,203 மில் ரூ




வாடிக்கையாளர் வைப்புகள்

210,301 மில் ரூ




வரிக்கு பிந்திய இலாபம்

1,349 மில் ரூ




கடன்களும் பெறுகைகளும்

215,373 மில் ரூ



பங்குதாரர்களின் நிதியம்

16,226 மில் ரூ





தலைவரின் செய்தி

அன்பார்ந்த பங்குதாரர்களே,

இலங்கைக்கு கடினமான ஒரு வருடத்தின் முடிவிற்கு நாம் வரும்போது, ஆண்டின் முதல் பாதியில் நிலவிய அரசியல் அமைதியின்மை மற்றும் பொருளாதார ஸ்திரமின்மை ஆகியவை தனிநபர்கள் மற்றும் சமூகங்கள் இரண்டிலும், மிகவும் பின்தங்கிய மற்றும் பாதிக்கப்படக்கூடிய உறுப்பினர்களுடன் ஆழமான தாக்கத்தை ஏற்படுத்தியது என்பது தெளிவாகிறது. இந்த விளைவுகளின் சுமைகளை சமூகம் தாங்குகிறது. கிராமப்புற சமூகங்களைச் செயல்படுத்தவென அர்ப்பணிக்கப்பட்ட ஒரு அபிவிருத்தி வங்கி, இந்தத் தடைகளை எதிர்கொண்டு சூழ்நிலையின் எதிர்மறையான விளைவுகளைச் சமாளிக்க வேண்டிய கட்டாயம் ஏற்பட்டது. சவாலான சூழ்நிலையிலும் நிலையான வளர்ச்சியை ஊக்குவிப்பதில் எங்களின் மன உறுதியும் இந்த நேரத்தில் சோதனைக்கு உள்ளாகியது. இக் காலகட்டம் முழுவதும், நாம் எமது முக்கிய நோக்கங்களில் கவனம் செலுத்தினோம்.

சமீபகால வரலாற்றில் மிகவும் சவால்மிக்க 12 மாதங்களில் நாம் வெற்றிகரமாகத் தப்பிப்பிழைத்து, எங்கள் நம்பிக்கையான வாடிக்கையாளர்களின் நம்பிக்கையைப் பேணி, அவர்களின் நிதிச் சிக்கல்களைத் தீர்ப்பதற்கு அவர்களுக்கு உதவுவதற்கு சந்தர்ப்பம் கிடைத்தமையினைட்டு மகிழ்ச்சி அடைகிறேன். சவாலான இக்காலகட்டத்தில் எம்மை வழிநடத்திய வலிமை, விடாமுயற்சியை வெளிப்படுத்தும் வகையில், 31 டிசம்பர் 2022 இல் முடிவடைந்த நிதியாண்டிற்கான வருடாந்த அறிக்கை மற்றும் நிதியறிக்கைகளை நான் உங்களுக்குச் சமர்ப்பிப்பதில் பெருமிதம் கொள்கிறேன்.

இப்பொருளாதார நெருக்கடி பெரும் சவால்களை உருவாக்கியது. 2021 ஆம் ஆண்டின் இதே காலப்பகுதியில் 9.3% அதிகரிப்புக்கு மாறாக, 2022 ஆம் ஆண்டின் முதல் பாதியில் இலங்கையின் பொருளாதாரம் ஆண்டுக்கு 4.8% ஆக சுருங்கியுள்ளது என்று தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களத்தின் மாகாண மட்ட மதிப்பீடுகள் தெரிவிக்கின்றன. ஆண்டின் தொடக்கத்தில் மெதுவான மீள் எழுச்சிக்கான அறிகுறிகள் இருந்தபோதிலும், அந்நிய செலாவாணி நெருக்கடியால் அதிகரித்த நிச்சயமற்ற தன்மை காரணமாக நெருக்கடி மோசமடைந்ததால், இரண்டாவது காலாண்டில் இந்த போக்கானது மீளவும் திரும்பியது. இதன் விளைவாக அனைத்து முக்கிய பொருளாதாரத் துறைகளும் மந்தநிலையைச் சந்தித்ததுடன் பல்வேறு சிரமங்களையும் எதிர்கொண்டன. இலங்கை ரூபாவின் பெறுமதியில் கூர்மையான சரிவு காணப்பட்டதுடன், பணவீக்கம் விரைவாக அதிகரித்துக் கொண்டிருந்தது.

இந்தச் சூழலில், பணத்தின் மதிப்பிழப்பு,

அதிகரித்து வரும் பணவீக்கம் மற்றும் செயற்படாக் கடன்களின் அதிகரிப்பு உள்ளிட்ட கணிசமான சவால்களை வங்கித் துறை எதிர்கொண்டது. சந்தை வட்டி விகிதங்களின் கூர்மையான அதிகரிப்பு வங்கிகளை அதிக கடன் ஆபத்தில் ஆழ்த்தியது. இதன் விளைவாக, வங்கிகளின் நிதி ஆரோக்கியம் கணிசமான அழுத்தத்திற்கு உட்பட்டதுடன், செயற்படாக் கடன் விகிதம் கடுமையாக உயர்ந்ததுடன் இது கடன் பெறுபவர்கள் அனுபவிக்கும் கடினமான நிதி நிலைமைகளை எடுத்துக்காட்டுகிறது.

இந்தச் சவால்களைத் தணிக்க, நுண், சிறு மற்றும் நடுத்தர நிறுவனங்களுக்கும், தனிநபர்களுக்கும், தகுதியுள்ள கடன் பெறுநர்கள் தங்களது வருமானம் ஈட்டும் நடவடிக்கைகளைத் தொடரவும், படிப்படியாகக் கடனைத் திரும்பச் செலுத்தவும் உதவும் முகமாக சலுகை நடவடிக்கைகள் அறிமுகப்படுத்தப்பட்டன.

தலைவரின் செய்தி

எமது அணுகுமுறை

ஒரு அபிவிருத்தி வங்கி என்ற முறையில், எமது அனைத்து வாடிக்கையாளர்களும் இலங்கை மத்திய வங்கியால் (CBSL) அமைக்கப்பட்டுள்ள சலுகை விதிமுறைகளுக்கு உட்பட்டவர்களாவர். இதன் விளைவாக, பல்வேறு துறைகளிலும் உள்ள பாதிக்கப்பட்ட கடன் பெறுநர்களுக்கு நிவாரணம் வழங்க நாம் கடமைப்பட்டுள்ளோம்.

இந்த சலுகைகளில் கடன் மறுசீரமைப்பு அல்லது மீள்கட்டமைப்பு, மீள் அறவீட்டு நடவடிக்கைகளின் இடைநிறுத்தம், குறைந்த வட்டியுடனான செயற்பாட்டு மூலதனக் கடன்கள் மற்றும் குறிப்பாக நுண், சிறு மற்றும் நடுத்தர தொழில் முயற்சியாண்மைகளில்ஈடுபட்டுள்ள வாடிக்கையாளர்கள் உட்பட விவசாயத்தில், கால்நடை வளர்ப்பு மற்றும் மீன்பிடித் துறையில் ஈடுபட்டுள்ள பெண்களுக்கு குறிப்பிட்ட சில வங்கி பரிவர்த்தனைகளுக்கான கட்டணங்களை தள்ளுபடி செய்தல், இதன் விளைவாக எம்மால் கடன் விதிமுறைகளுக்கான நிலையான கடன் விகிதங்களை மாற்றவோ அல்லது வணிக வங்கிகள் வழங்கும் வட்டி விகிதங்களை விட அதிக வட்டி விகிதங்களை பரிந்துரைக்கவோ முடியவில்லை. இச் சூழ்நிலையால் எங்களின் நிதிச் செயற்பாடுகள் கடுமையாகப் பாதிக்கப்பட்டன. மேலதிகமாக, தற்போதைய நெருக்கடியின் காரணமாக செயற்படாக் கடன்களின் அதிகரிப்பானது கடுமையான அறவீட்டு நடவடிக்கைகளைச் செயற்படுத்தவும், கடன்களை வழங்குவதற்கு முன் கடன் வாங்குபவர்களின் சுயவிவரங்களை மதிப்பிடும் போது மிகவும் கடுமையான மதிப்பீட்டு செயல்முறையை பின்பற்றவும் எங்களைத் தூண்டியது.

இந்த சவாலான காலகட்டத்தில், மிகவும் பயனுள்ள அணுகுமுறைகளைப் பயன்படுத்தி கடினமான சூழ்நிலைகளைச் சமாளிக்க எங்கள் வாடிக்கையாளர்களுக்கு உதவ நாங்கள் உறுதிபூண்டுள்ளோம். இந்த முயற்சியின் ஒரு பகுதியாக, தேர்ந்தெடுக்கப்பட்ட சில தயாரிப்புகளுக்கு ஒரு வருடம் வரை சிறப்பு வட்டி விகிதங்களை அறிமுகப்படுத்தினோம், மேலும் இரண்டு தயாரிப்புகளின் வட்டி விகிதங்களில் மிதமான அதிகரிப்புகளை (2-3%) மாத்திரமே செய்தோம்: "திலின" (தனிநபர் கடன்கள்) மற்றும் "தெடுசவி" (ஓய்வூதியர் கடன்கள்). மேலதிகமாக, சிறு மற்றும் நடுத்தர தொழில்முனைவோருக்கு உதவுவதற்காக அரசாங்க ஆதரவுடன் கூடிய மறுநிதியளிப்பு கடன் திட்டங்களை நாங்கள் தொடர்ந்து வழங்கி வருகிறோம்.

RDB இல், செயல்திறனுக்கான டிஜிட்டல் உருமாற்றம்

வங்கித் துறையில் தொழில்நுட்பத்தின் மீதான கவனம் அதிகரித்து வருவதாலும், டிஜிட்டல் நிதி பரிவர்த்தனைகளுக்கான தேவை அதிகரித்து வருவதாலும், எந்தவொரு கையடக்கத் தொலைபேசி செயலி மூலமாகவும் QR கொடுப்பனவு முறை மற்றும் JustPay கொடுப்பனவு வசதியை வெற்றிகரமாக அறிமுகப்படுத்தினோம். இதற்கு மேலதிகமாக, ஒரு புதிய கடன் உருவாக்க முறையைச் செயற்படுத்த நாம் திட்டமிட்டுள்ளோம். செயற்றிறனை மேலும் மேம்படுத்த, எமது வைப்புக் கலவையை மேம்படுத்துவதற்கான உத்திகளை நாங்கள் ஏற்றுக்கொண்டதுடன், இது வட்டிச் செலவுகளைக் குறைக்க உதவுகிறது. இந்த முயற்சிகள் வாடிக்கையாளர் வசதி மற்றும் வாடிக்கையாளர்களின் திருப்தியை கணிசமாக மேம்படுத்தும் என்றும் எமது சேவைத் தரங்களை ஒரு புதிய நிலைக்கு உயர்த்தும் என்று நாம் நம்புகிறோம்.

RDB செயற்றிறன்

இந்த மூலோபாய முயற்சிகள் மூலம், எமது வாடிக்கையாளர்களின் மதிப்பை உருவாக்குவதை நாங்கள் தொடர்ந்து மேற்கொண்டு வருகிறோம், நிதி உள்ளடக்கம் மூலம் கிராமப்புற சமூகங்களை மேம்படுத்துவதற்கான எங்கள் உறுதிப்பாட்டைப் பேணுகிறோம். இந்த ஆண்டு முழுவதும், எமது திறைசேறி நடவடிக்கைகளில் குறிப்பிடத்தக்க அளவிற்கு அதாவது 203% முன்னேற்றத்துடன், வலுவான பெறுபேறுகளை நாம் பெற்றுக் கொண்டுள்ளோம். வைப்பு விகிதங்களின் அதிகரிப்பு வங்கியினுள்ளே அதிக நிதியை ஈர்க்க உதவியது, பணப்புழக்கத்தை அதிகரித்தது. வாடிக்கையாளர் வைப்புகள் 12% அதிகரித்துள்ளது, அதே நேரத்தில் கடன்கள் மற்றும் பெறத்தக்கவைகள் 13.93% அதிகரித்துள்ளன. வங்கியின் செயற்பாட்டு இலாபமானது முன்னைய ஆண்டை விட 3.70% மிதமான அதிகரிப்பைப் பதிவுசெய்திருந்தாலும் கூட, மொத்த வருமானத்தில் ரூ. 36 பில்லியன் அதிகரிப்பைப் பதிவு செய்துள்ளது.

வளர்ந்து வரும் வணிகச் சூழலுக்கு ஏற்றவாறு சிறந்த மூலோபாய நடவடிக்கைகளை செயற்படுத்துவதன் மூலமாகவும், சரியான நேரத்தில் தலையீடுகளைச் செய்வதன் மூலமாகவும், இக் காலகட்டத்தில் நாம் எமது நிலையை வலுப்படுத்தினோம். இந்த அணுகுமுறையானது நெருக்கடியை வெற்றிகரமாகச் சமாளிக்கவும், உறுதியான செயற்றிறனைப் பராமரித்துக் கொள்ளவும், எமது வாடிக்கையாளர் தளத்தைப் பாதுகாத்துக் கொள்ளவும் எங்களுக்கு

வழியேற்படுத்தியது. சவால்மிக்க இச்சமயத்தில், எமது வாடிக்கையாளர்களை ஆதரிப்பது என்பது எமது முன்னுரிமையாக மாறியது, அவர்களின் தேவைகள் எங்கள் சொந்த நலன்களை விட முன்னுரிமை பெற்றன. எமது RDB குழுவின் அசைக்க முடியாத அர்ப்பணிப்பு மற்றும் வாடிக்கையாளர்களுடனான எங்கள் நெருங்கிய உறவு, வங்கியின் முக்கிய நோக்கங்களை அடைய ஒன்றிணைந்து செயற்படுதல் என்பவற்றின் மூலம் இது சாத்தியமானது.

கூட்டுறவு ஆளுகை

எங்கள் வளர்ச்சியும் வெற்றியும் ஒரு வலுவான நிர்வாகக் கட்டமைப்பால் இயக்கப்படுகின்றன, இது எங்கள் செயல்பாடுகளின் அடித்தளமாகச் செயல்பட்டு, எங்கள் செயல்பாடுகளின் ஒவ்வொரு அம்சத்திலும் வெளிப்படைத்தன்மை, பொறுப்புக்கூறல் மற்றும் நெறிமுறை நடைமுறைகளை உறுதி செய்கிறது. இதன் விளைவாக, நாங்கள் தொடர்புடைய அனைத்து நிர்வாகத் தரநிலைகள் மற்றும் சட்டப்பூர்வ தேவைகளையும் கடைப்பிடிக்கிறோம். இந்த உறுதியான நிர்வாகத் தளம் நம்பிக்கையை வளர்ப்பதன் மூலமும், ஒருமைப்பாட்டைப் பேணுவதன் மூலமும், விதிவிலக்கான சேவைத் தரங்களை நிலைநிறுத்துவதன் மூலமும் எங்கள் வாடிக்கையாளர்களுக்கு மதிப்பை வழங்குவதற்கான எங்கள் திறனை மேம்படுத்தியுள்ளது.

முன்னோக்கிய பாதை

எதிர்வரும் நிதியாண்டில் மேம்பட்ட செயற்பாட்டு சூழலுடன் ஏற்படக்கூடிய வளர்ச்சி வாய்ப்புகளைப் பயன்படுத்திக் கொள்ள நாம் ஆர்வமாக உள்ளோம். மிகவும் கடினமான காலகட்டங்களை மீள்தன்மையுடனும், மூலோபாய தொலைநோக்குப் பார்வையுடனும் கடந்து வந்த நாம், பிரதேச அபிவிருத்தி வங்கியின் வளர்ச்சியின் அடுத்த கட்டத்திற்குள் நுழையத் தயாராக உள்ளோம். அடிமட்ட தொழில்முனைவோரின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்த அணுகக்கூடிய மற்றும் மலிவு கடன் வசதிகளை வழங்குவதன் மூலம் அவர்களை ஆதரிப்பதில் எங்கள் கவனம் தங்கியிருக்கும்.

இதைச் செய்யும்போது, எமது வாடிக்கையாளர்களின் வளர்ந்து வரும் தேவைகளைப் பூர்த்தி செய்ய எமது தயாரிப்புக்களுக்கான சலுகைகளைத் தொடர்ந்து செம்மைப்படுத்துவது ஒரு முக்கிய முன்னுரிமையான விடயமாக இருக்கும். எமது வாடிக்கையாளர்களின் வளர்ந்து வரும் தேவைகளை சிறப்பாகப் பூர்த்தி செய்ய எங்கள் உற்பத்திப் பிரிவை மேம்படுத்துவோம், டிஜிட்டல் வங்கியியல் துறைக்கு அதிக முக்கியத்துவம் கொடுப்போம். மற்றும் எமது இலக்கு வாடிக்கையாளர் தளத்தின் அதிக இருப்பைக் கொண்ட பிராந்தியங்களுக்கு எமது கிளை வலையமைப்பை விரிவுபடுத்துவதாகும். நாட்டின் கிராமப்புற பொருளாதாரத்திற்கு மிகவும் திறம்பட சேவை செய்வதற்கான எங்கள் திறனை மேம்படுத்த, அரசாங்க உத்தரவுகளுக்கு இணங்க, மற்றொரு நிதி நிறுவனத்துடன் எங்கள் திட்டமிடப்பட்ட இணைப்பின் மூலம் இந்த முயற்சிகள் மேலும் வலுப்படுத்தப்படும்.

நன்றி

இந்த சவாலான காலகட்டத்தில் உறுதியான தலைமைத்துவத்தினை வழங்கியமைக்காக எமது பொது முகாமையாளர்/ பிரதான நிறைவேற்று அதிகாரி மற்றும் பணிப்பாளர் சபைக்கு நான் எனது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். பணிப்பாளர் சபை சார்பில், இச்சவால்மிக்க காலப்பகுதியிலும் கூட, தொடர்ந்தும் வங்கிக்கு விசுவாசம் மிக்கவர்களாக இருக்கும் அனைத்து எமது வாடிக்கையாளர்களுக்கும், ஏனைய பங்குதாரர்களுக்கும் எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றேன். எங்கள் வாடிக்கையாளர்களுக்கு தடையற்ற சேவையை வழங்குவதில் அர்ப்பணிப்புடன் செயற்பட்ட எமது முகாமைத்துவக் குழு மற்றும் ஊழியர்களுக்கும் எனது பாராட்டுகள் உரித்தாகட்டும். மிகவும் சவாலான காலகட்டத்தில் இருந்து வெளிவந்துள்ளதால், ஒரு உறுதியான நிர்வாக அடித்தளத்துடன் வலுப்படுத்தப்பட்ட எங்கள் அர்ப்பணிப்பானது, எமது இலக்குகளை அடைவதற்கும் நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்கு அர்த்தமுள்ள பங்களிப்பைச் செய்வதற்கும் எங்களைத் தூண்டும் என்றும் நான் நம்புகிறேன்.



மஹிந்த சாலிய

தலைவர்

பொது முகாமையாளர்/ பிரதம நிறைவேற்று அதிகாரியின் மீளாய்வு

டிசம்பர் 31, 2022 அன்று முடிவடைந்த ஆண்டிற்கான பிரதேச அபிவிருத்தி வங்கியின் வருடாந்த அறிக்கை மற்றும் நிதியறிக்கைகளை நான் மிகுந்த மகிழ்ச்சியுடன் சமர்ப்பிக்கிறேன். கடந்த ஆண்டு நாட்டின் பொருளாதாரத்திற்கு மிகவும் சவாலான ஆண்டாக அமைந்திருந்ததுடன் இது அனைத்து துறைகளையும் பாதித்ததுடன், கடுமையான நிதி நெருக்கடியையும் பெரும்பாலானவர்களுக்கு குறிப்பிடத்தக்க சிரமத்தையும் ஏற்படுத்தியது. இவ்வாறான சவால்கள் இருந்தபோதிலும் கூட, கடினமான சூழ்நிலைகளை வழிநடத்தவும், நமது வளர்ச்சியைப் பராமரிக்கவும் தேவையான உத்திகளைச் செயற்படுத்தியதன் மூலம் எமது வங்கியானது மீள்தன்மையை வெளிப்படுத்தியது. குறைந்த கிரயத்தில் கடன் வசதிகளை வழங்குவதன் மூலம் கிராமப்புற சமூகங்களின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்துவதற்கான எங்கள் பணியில் நாம் உறுதியாக இருப்பதுடன், இதன் மூலமாக கிராமப்புற பொருளாதாரத்தை வலுப்படுத்துவதில் நாம் பங்களிக்கிறோம்.

2022 நிதியாண்டின் தொடக்கத்தில், நாடு நீண்ட தொற்றுநோய் அபாயத்திலிருந்து மீண்டு, அன்றாட வாழ்க்கை மற்றும் பொருளாதாரம் இரண்டிலுமாக படிப்படியாக இயல்பு நிலைக்குத் திரும்பும் செயற்பாட்டில் இருந்தது. இருப்பினும், அந்த மீட்சி குறுகிய காலத்திற்கானதாக இருந்தது, ஏனெனில் நாடு ஆண்டின் இரண்டாவது காலாண்டில் சுதந்திரத்திற்குப் பிறகு சந்தித்த மோசமான பொருளாதார நெருக்கடியால் பாதிக்கப்பட்டது. இந்த நெருக்கடியானது பொருளாதாரத்தில் 7.8% சுருக்கத்திற்கு வழிவகுத்ததுடன் அனைத்து முக்கிய துறைகளும் சரிவைச் சந்தித்தன. நீடித்த மின்வெட்டு, அத்தியாவசியப் பொருட்களின் பற்றாக்குறை மற்றும் விநியோகச் சங்கிலிப் பொறிமுறையில் ஏற்பட்ட இடையூறுகள் காரணமாக எரிபொருள் மற்றும் மூலப்பொருட்களின் பற்றாக்குறை உள்ளிட்ட சவால்கள் தொடர்ந்து அதிகரித்தன, இது தனிநபர்களையும் அதேசமயம் வணிகங்களையும் கூட பாதித்தது. இந்தக் காலகட்டத்தில், அதிகரித்துச் சென்ற பணவீக்கம் மற்றும் வாழ்க்கைச் செலவுகள் கொள்வனவு திறனில் குறிப்பிடத்தக்க அழுத்தத்தை ஏற்படுத்தின, அதே நேரத்தில் அமெரிக்க டாலருக்கு எதிராக இலங்கை ரூபாயின் மதிப்பும் வெகுவாக சரிவடைந்தது.

இவ்வாறான நிகழ்வுகளால் குறைந்த வருமானத்தினைப் பெறும் மக்கள் கடுமையாகப் பாதிப்பிற்கு உள்ளானதுடன், அதன் விளைவாக ஆண்டு முழுவதும் போராட்டங்களும் கணிசமான அளவில் சமூக அமைதியின்மையும் ஏற்பட்டது.



இந்த சவால்களில் இருந்தும் அதன் தாக்கங்களில் இருந்தும் வங்கித் துறையும் கூட தப்பவில்லை. அதிக வட்டி விகிதம் மற்றும் மக்களின் கொள்வனவு திறனில் ஏற்பட்ட குறைவு போன்றவை வங்கித்துறையை மோசமாகப் பாதித்தன. நாங்கள் எதிர்கொண்ட ஒரு முக்கிய பிரச்சினை யாதெனில், அதிகரித்து வரும் சந்தை விகிதங்களுடன் ஒத்துப்போகும் வகையில் எங்கள் கடன் வட்டி விகிதங்களை சரிசெய்ய வேண்டிய அவசியம் ஏற்பட்டமையானது எமது இலாபத்தில் கணிசமாக பாதிப்பினை ஏற்படுத்தியதுடன், வருமான வரம்புகளில் குறிப்பிடத்தக்க குறைவிற்கு வழிவகுத்தது. இக் காலகட்டத்தில், வங்கித் துறையை ஆதரிப்பதை நோக்கமாகக் கொண்ட ஒழுங்குமுறை நடவடிக்கைகளை இலங்கை மத்திய வங்கி தொடர்ந்து செயற்படுத்தியதுடன், வங்கித் துறையின் ஸ்திரத்தன்மை மற்றும் உறுதிப்பாட்டைப் பேணி பொருளாதாரத்திற்கு திறமையான கடன் ஓட்டத்தை உறுதி செய்தது.

உத்திகளும் செயற்றிறனும்

வங்கியைச் சவால்களின் ஊடாக வழிநடத்தவும், அதன் நிலையான வளர்ச்சியை உறுதி செய்யவும் கவனமாக மூலோபாய நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படவும் தேவைப்பட்ட காலகட்டம் இதுவாகும். இலங்கை மத்திய வங்கியின் வழிகாட்டுதலுடனும், நிதியுதவிகளின் மூலம் கிராமப்புற தொழில் முனைவோரை ஆதரிப்பதில் எங்களுக்கு இருந்த அசைக்க முடியாத அர்ப்பணிப்புடனும், இந்த கடினமான காலங்களில் எங்கள் மதிப்புமிக்க வாடிக்கையாளர்களுக்கு உதவுவதில் நாங்கள் கவனம் செலுத்தினோம். இந்த நிவாரண நடவடிக்கைகளுக்குத் தகுதி பெற்ற வாடிக்கையாளர்களின் நிதிச் சுமையைக் குறைக்க, கடன் தயாரிப்புகளுக்கான குறைந்த வட்டி விகிதங்கள், கடன்களை மீளச்செலுத்துவதனை பிற்போடுதல் மற்றும் நெகிழ்வான கட்டண விதிமுறைகள் உள்ளிட்ட பல்வேறு சலுகைகளை நாங்கள் வழங்கினோம்.

நுண், சிறு மற்றும் நடுத்தர தொழில்களில் ஈடுபட்டுள்ள கிராமப்புற வாடிக்கையாளர்களையும், விவசாயம், கால்நடை வளர்ப்பு மற்றும் மீன்பிடித்துறையில் உள்ள பெண்களை வலுப்படுத்துவதில் நாம் கவனம் செலுத்துவதால், பிற வணிக வங்கிகள் வழங்கும் அதிக வட்டி வீதங்களுடன் போட்டி இடுவதில் நாங்கள் சவால்களை எதிர்கொண்டோம். மேலும் எமது வாடிக்கையாளர்களில் பலர் நிலையான வட்டியுடனான கடன்களைப் பெற்றுக் கொண்டிருந்தமையினால் எமது கடன் விகிதங்களை சீர்செய்வது கடினமான விடயமாக இருந்தது.

நாட்டின் தற்போதைய சூழ்நிலை காரணமாக எமது வாடிக்கையாளர்கள் மீது அதிகரித்து வருகின்ற பொருளாதார நெருக்கடி தொடர்பில் நாங்கள் முழுமையாக அறிந்து கொண்டிருந்ததுடன், அவர்களின் நிதிச் சுமையைக் குறைக்கவும் உறுதிபூண்டிருந்தோம். இதன் விளைவாக, "திலின" (தனிநபர் கடன்கள்) மற்றும் "தெடுசவி" (ஓய்வூதியர் கடன்கள்) ஆகிய இரண்டு தயாரிப்புகளுக்கான வட்டி வீதங்களை மிதமாக (2-3%) உயர்த்த முடிவு செய்தோம். தேர்ந்தெடுக்கப்பட்ட சில உற்பத்திகளுக்கு சிறப்பு வட்டி விகிதங்களையும் நாம் ஒரு வருட காலத்திற்கு மாத்திரமே பொருந்தும் விதத்தில் வழங்கினோம், மேலதிகமாக, சில துறைகளுக்கு அரசாங்கத்தின் மீள்நிதிக் கடனுதவித் திட்டங்களினூடாக தொடர்ந்து நாம் ஆதரவளித்தோம். இந்தக் காலகட்டத்தில் கடன்களை மீளச்செலுத்தாத நிலைமைகள் அதிகரித்ததால், கடன் அறவீடானது வங்கிக்கு ஒரு குறிப்பிடத்தக்க சவாலாக மாறியது, இதனால் நிலுவையில் உள்ள தொகைகளை அறவிட மூலோபாய மீள்அறவீட்டு நடவடிக்கைகளை செயற்படுத்த வேண்டியிருந்தது. மீளாய்வு காலம் முழுவதும், எங்கள் நிகர செயற்படாக் கடன்கள் விகிதமானது 6.5% ஆகவே இருந்தது. இதற்கு முகங்கொடுக்கும் விதமாக, புதிய கடன்களை அங்கீகரிப்பதற்கு முன்பாக கடன் பெறுநர்களின் கடனை மீளச் செலுத்தும் திறன் தொடர்பாக கவனமாக மதிப்பிடுவதற்காக எங்கள் கடன் மதிப்பீட்டு செயன்முறையை வலுப்படுத்திய அதே வேளை, விசேட கடன் அறவீட்டு வேலைத்திட்டங்களையும் நாம் ஆரம்பித்தோம்.

சவால்கள் காணப்பட்ட போதும் கூட வைப்பு விகிதங்களின் அதிகரிப்பால் வங்கி பயனடைந்ததுடன் புதிய வாடிக்கையாளர்களை வங்கியின்பால் ஈர்க்கவும், ஏற்கனவே உள்ள வாடிக்கையாளர்களின் வைப்புத்தொகைகளைத் தக்கவைத்துக் கொள்ளவும் உதவியது. இதன் விளைவாக, எமது திறைசேரிச் செயற்பாடுகள் குறிப்பிடத்தக்க முன்னேற்றத்தைப் பதிவு செய்ததுடன், பாதீட்டு செய்யப்பட்ட இலக்குகளில் 203% உம் எட்டப்பட்டது. இந்த நிதி வருமானமானது, மற்ற பிரிவுகளில் ஏற்பட்ட சரிவுகளுக்கு மத்தியில் மிகவும் தேவையான நிவாரணத்தை அளித்தது. இந்த நிதியாண்டில், வரிக்குப் பிந்திய அதிக இலாபமானது 1,349 மில்லியன் ரூபாய்களாகப் பதிவு செய்யப்பட்டதுடன், இது முன்னைய ஆண்டில் 306 மில்லியன் ரூபாய்களாக இருந்தது. வாடிக்கையாளர் வைப்புகள் 12% இனால் அதிகரித்து 210 பில்லியன் ரூபாய்களை எட்டியது. கடன்கள் மற்றும் பெறத்தக்கவைகள் 13.93% அதிகரித்து 215 பில்லியன் ரூபாய்களை எட்டியதுடன், எமது மொத்த சொத்துக்கள் 16.07% அதிகரித்தன. மேலும் நாம் வெற்றிகரமாக எமது மூலதன போதுமை விகிதத்தினை தொழில்துறையின்

குறைந்தபட்சத் தேவையை விட அதிகமாகப் பராமரித்தோம்.

இக் காலகட்டத்தில், வங்கி அதன் செலவுகளைக் குறைக்க கடுமையான செலவுக் கட்டுப்பாட்டு நடவடிக்கைகளைச் செயற்படுத்தியதுடன், குறைக்கப்பட்ட பாதீட்டுடன் செயற்பட்டு, அரசுக்குச் சொந்தமான நிறுவனங்களுக்கு நிதி அமைச்சினால் நிர்ணயிக்கப்பட்ட வழிகாட்டுதல்களுக்கு இணங்க அத்தியாவசியமற்ற செலவுகளைக் குறைத்தது.

முக்கிய மைல்கற்கள்

சவாலான செயற்பாட்டுச் சூழல் காணப்பட்ட போதிலும் எமது வளர்ச்சி தொடர்பான நோக்கங்களில் நாம் கவனம் செலுத்தினோம். வாடிக்கையாளர் அனுபவத்தை மேம்படுததுவனை நோக்கமாகக் கொண்டு கிளைகளுக்கான அணுகலை மேம்படுத்த சில கிளைகளை இடமாற்றம் செய்தோம். நிதியாண்டில் மையகப்படுத்தப்பட்ட அறவீட்டு முகாமைத்துவ முறையை வெற்றிகரமாக செயல்படுத்தியதைத் தொடர்ந்து, தொழில்நுட்பத்தைப் பொறுத்தவரை, கடன் உருவாக்க முறையை நாம் ஆரம்பித்தோம். அடுத்த நிதியாண்டில் முழுமையாக செயற்படுத்தப்படவுள்ள RDB கொடுப்பனவு செயலியையும் நாம் ஆரம்பித்துள்ளோம். மேலும், வீசா பற்று அட்டையினை அறிமுகப்படுத்தும் செயல்முறையைத் தொடங்கினோம், இது தற்போது செயற்பாட்டில் உள்ளது.

இந்த ஆண்டில் எமது தகவல் தொழில்நுட்பத் துறை சாதனைகளை அங்கீகரிக்கும் வகையில் பல சிறப்பு விருதுகள் வழங்கப்பட்டன. இவற்றில் LankPay தொழில்நுட்ப கண்டுபிடிப்பு விருதுகள் *2023* இல் தங்க விருது, ஆண்டின் சிறந்த LankPay அட்டை செயற்படுத்துநருக்கான தங்க விருது, மற்றும் ஆண்டின் சிறந்த பொது ஏடிஎம் செயற்படுத்துநருக்கான மெரிட் விருது ஆகியவை அடங்கும்.

மார்ச் *2023* இல் மத்திய வங்கி கேட்போர் கூடத்தில் நடைபெற்ற “திரி அபிமானி திட்டம்” மற்றொரு குறிப்பிடத்தக்க சாதனையாகும். மாவட்ட, மாகாண மற்றும் தேசிய மட்டங்களில் விதிவிலக்கான பெண் தொழில்முனைவோரை அடையாளம் கண்டு, அவர்களுக்கு நிதிசார் வெகுமதிகளையும் பிற சலுகைகளையும் வழங்கி கௌரவிப்பதே இதன் நோக்கமாகும்.

LMD Brand வருடாந்த அறிக்கையின்படி, வங்கியின் தரவரிசை *2021* இல் காணப்பட்ட *44* வது இடத்திலிருந்து *2022* இல் *43* வது இடத்திற்கு முன்னேறியது.

முன்னோக்கி நோக்குகின்றேன்

இந்த ஆண்டின் இறுதியில் பொருளாதாரம் படிப்படியாக மீட்சி அடைவதற்கான அறிகுறிகளைக் காட்டியதால், விவசாயம், கால்நடை வளர்ப்பு மற்றும் மீன்பிடித்துறையில் பெண்கள் உட்பட கிராமப்புற தொழில்முனைவோரின் முக்கிய பங்காளராக பிரதேச அபிவிருத்தி வங்கியின் பங்கு, நாட்டின் பொருளாதார வளர்ச்சியை முன்னெடுப்பதில் இன்னும் முக்கியமானதாக மாறியது. எனவே, நிதிச் சேவைகளை அணுகுவதில் சவால்களை எதிர்கொள்ளும் இந்தத் துறைகளில் உள்ள வசதி குறைந்த வாடிக்கையாளர்களைச் சென்றடைவதில் நாங்கள் தொடர்ந்து உறுதியாக இருப்போம். இத்துடன், வாடிக்கையாளர் சேவைகளை மேம்படுத்த எங்கள் கடன் வழங்கும் முறையை முழுமையாக தானியங்கிமயமாக்கி, எமது தொழில்நுட்ப ரீதியான முன்னேற்றங்களைத் தொடர்ந்து விரைவுபடுத்துவோம்.

புதிய மையக வங்கி முறையை செயல்படுத்தும் பணியிலும் நாங்கள் ஈடுபட்டுள்ளோம்.

நன்றிகள்

நிறைவாக, ஒரு சவாலான காலகட்டத்தில் வங்கியை வழிநடத்துவதில் பெறுமதியான வழிகாட்டுதல்கள் மற்றும் தலைமைத்துவத்தினை வழங்கியமைக்காக தலைவர் மற்றும் பணிப்பாளர் சபைக்கு நான் எனது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். இந்த நிதியாண்டு முழுவதும் என்னுடனும் வங்கியுடனும் தொடர்ந்து ஆதரவுடன் செயற்பட்டமைக்காகவும் ஒத்துழைத்தமைக்காகவும் இலங்கை மத்திய வங்கி, நிதியமைச்சு மற்றும் பிற அரசு நிறுவனங்களின் அதிகாரிகளுக்கும் எனது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

எமது மதிப்பிற்குரிய வாடிக்கையாளர்கள் எம்மீது தொடர்ந்து நம்பிக்கை வைத்துள்ளதற்கும், அவர்களின் நிதியியல் சார்ந்த நல்வாழ்வை ஆதரிப்பதற்கும் நாங்கள் அர்ப்பணிப்புடன் உள்ளோம். கடினமான

காலங்களில் அவர்களுக்கு உதவுவதற்கும், நிதி ரீதியான சவால்களை எதிர்கொள்ளவும், சமாளிக்கவும் அவர்களுக்கு உறுதியளிப்பதற்கும், பலத்தை வழங்குவதற்கும் நாங்கள் அர்ப்பணிப்புடன் இருக்கிறோம்.

இறுதியாக, வங்கியின் முக்கிய நோக்கங்களை நிறைவேற்ற பாடுபடும் அதே வேளையில், எங்கள் வாடிக்கையாளர்களுக்கு நிதியியல் பலத்தினை வழங்கி உதவுவதில் அவர்களின் அசைக்க முடியாத அர்ப்பணிப்பு மற்றும் கடின உழைப்பிற்காக எங்கள் அனைத்து அர்ப்பணிப்புள்ள ஊழியர்களுக்கும் எனது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். கடினமான காலங்களில் வங்கியை வழிநடத்துவதில் எங்கள் குழுவின் கூட்டு முயற்சிகள் முக்கிய பங்கு வகித்துள்ளன. நாம் எதிர்நோக்கும்போது, எதிர்காலத்தில் மேம்படும் செயல்பாட்டு சூழலால் இயக்கப்படும், முன்னால் இருக்கும் வாய்ப்புகள் குறித்து நான் உற்சாகமாக இருக்கிறேன்.

இறுதியாக, வங்கியின் முக்கிய இலக்குகளை ஈடேற்ற பாடுபடும் அதே வேளை, நிதியியல் ரீதியாக பலத்தினைப் பெற்றுக் கொள்ள எங்கள் வாடிக்கையாளர்களுக்கு உதவுவதற்காக அயராது முயற்சிக்கும் எங்கள் ஒவ்வொரு ஊழியருக்கும் நான் எனது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். எமது குழுவின் ஒருங்கிணைந்த முயற்சிகள், வங்கி சவாலான காலங்களை கடக்க உதவுவதில் முக்கிய பங்கு வகித்துள்ளன. விரைவாக மேம்படும் செயற்பாட்டுச் சூழலைக் கருத்திற் கொண்டு வரவிருக்கும் வாய்ப்புகள் குறித்து நான் உற்சாகமடைகின்றேன்.



பீ.எஸ் எதிரிசூரிய

பொது முகாமையாளர்/ பிரதான நிறைவேற்று அதிகாரி

(பதில் கடமையாற்றும்)



பணியாட்கள்

பணிப்பாளர்கள் சபை | 22
கூட்டுறவு முகாமைத்துவ அணி | 28
சிரேஷ்ட உதவிப் பொது முகாமையாளர்கள்/
பிராந்திய பொது முகாமையாளர்கள் | 30
உதவிப் பொதுமுகாமையாளர்கள்/ துறைத் தலைவர்கள் | 32

பணிப்பாளர் சபை

திரு. M மஹிந்த சாலிய

தலைவர்
(31.12.2022ஆம் திகதி இளைப்பாறினார்)



திரு. மஹிந்த சாலிய, களனி பல்கலைக்கழகத்தின் வர்த்தகத்துறை (விசேட) பட்டதாரியாவார். பிஸ்கால் கொள்கை, அரசாங்க நிதி, புள்ளிவிபரவியல் ஆகியவற்றிலும், வருடாந்த அரச வரவு செலவுத் திட்டத்தைத் தயாரிப்பதிலும் நன்கு அனுபவம் உள்ளவராவார். அரச துறையில் 34 வருடங்கள் பணியாற்றி உள்ள இவர் இக்காலப் பகுதியில் இலங்கை மத்திய வங்கியில் ஒரு சிரேஷ்ட உதவிப் பணிப்பாளராக, பிராந்திய முகாமையாளராகக் கடமையாற்றியுள்ளார். மேலும், அரச திறைசேரியில் பிரதிப் பணிப்பாளர், பிரதி வரவு செலவுத் திட்ட மற்றும் அரசாங்கக் கணக்குகள் துறையின் மேலதிகப் பணிப்பாளர் நாயகமாகவும் சேவையாற்றியுள்ளார். இவர் திறைசேரியின் பிரதிநிதியாக பல்வேறு அரசாங்க நிறுவனங்களில் பணிப்பாளர் சபைகளைப் பிரதிநிதித்துவம் செய்துள்ளார்.

ரஜரட்ட அபிவிருத்தி வங்கி, கொத்தலாவல பாதுகாப்பு பல்கலைக்கழகம், பாதுகாப்பு சேவைக் கட்டளை மற்றும் பணியாட்கள் கல்லூரி, ரக்னா லங்கா பாதுகாப்பு நிறுவகம், இலங்கை காணி அபிவிருத்திக் கூட்டுத்தாபனம், டவர் ஹோல் திரையரங்கு மற்றும் செலிசினி தொலைக்காட்சி ஆகிய நிறுவனங்களின் பணிப்பாளர் சபைகளில் திரு. சாலிய ஒரு உறுப்பினராக பிரதிநிதித்துவம் செய்துள்ளார்.

திரு. K. ரவீந்திரன்

சுயாதீனமற்ற/ நிறைவேற்றுநர் அல்லாத பணிப்பாளர்
(13.10.2023 இலிருந்து அமுலுக்கு வரும் விதத்தில் இராஜினாமா செய்துள்ளார்)



திரு. ரவீந்திரன், தற்போது தேசிய சேமிப்பு வங்கியின் சிரேஷ்ட பதில் பொது முகாமையாளராகக் கடமையாற்றி வருகிறார். அத்துடன், வங்கியின் செயற்பாடுகள், நிதி மற்றும் திட்டமிடல், இளைப்பாறல் மற்றும் ஆய்வு, அபிவிருத்திப் பணிகள் என்பவற்றையும் அவர் மேற்பார்வை செய்துவருகிறார். இவருக்கு வங்கி, நிதித்துறையில் 24 வருடங்களுக்கும் மேற்பட்ட அனுபவம் உள்ளது.

இவர் தேசிய சேமிப்பு வங்கியில் 19 வருடங்களுக்கு மேற்பட்ட காலம் பணி புரிந்துள்ளார். மேலே குறிப்பிடப்பட்ட பணிகளுடன், சிரேஷ்ட பதில் பொது முகாமையாளராகப் பதவியேற்க முன்பாக நிதி, கணக்காய்வு மற்றும் ஆய்வு மற்றும் அபிவிருத்தி ஆகிய துறைகளில் உதவிப் பொது முகாமையாளர் மற்றும் பதில் பொது முகாமையாளராகவும் கடமையாற்றியுள்ளார். மேலும், இவர், வங்கியின் இடர் முகாமைத்துவப் பணிகளையும் மேற்பார்வை செய்துள்ளதுடன் தேசிய சேமிப்பு வங்கியில் இணைந்து கொள்ள முன்னர், பீபல்ஸ் மேர்ச்சன்ட் வங்கியில் கூட்டுறவு நிதிப் பிரிவில் நிதிப் பகுப்பாய்வாளராகவும், CDIC Sasoon Cumberbatch Stockbrokers நிறுவகத்தில் ஆய்வுப் பகுப்பாய்வாளராகவும் கடமையாற்றியுள்ளார்.

திரு. ரவீந்திரன் ஜயவர்தனபுர பல்கலைக்கழகம், வங்கியாளர் நிறுவகம் என்பவற்றில் வருகைதரு விரிவுரையாளராகவும் கடமையாற்றியுள்ளார். மேலும், இவர், இலங்கை பட்டயக் கணக்காளர் நிறுவனத்தினால் நடத்தப்படும் நிதி முகாமைத்துவப் பரீட்சையில் பல்துறை விரிவுரையாளராகவும் கடமையாற்றியுள்ளார். இலங்கை பட்டயக் கணக்காளர்கள் நிறுவனத்தின் சக உறுப்பினராகவும், இலங்கையின் முகாமைத்துவக் கணக்காளர்கள் (CMA) நிறுவகத்தின் உறுப்பினராகவும் இருந்து வருகிறார். இவர், ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகத்தின் வர்த்தக நிர்வாகத் துறையில் BSc கௌரவப் பட்டம் பெற்றுள்ளார். மேலும், கொழும்பு பல்கலைக்கழகத்தில் வங்கி மற்றும் நிதித்துறையில் பட்டப் பின் டிப்ளோமாவையும் பெற்றுள்ளார்.

ஏனைய தற்போதைய நியமனங்கள்

- இலங்கை தொழிற்துறை வங்கியாளர் அமைப்பு பேரவையின் (APB) உறுப்பினராவார்.
- மாற்றுப் பணிப்பாளராக இலங்கை வங்கியாளர்கள் நிறுவனத்தில் (IBSL) பணிப்பாளர் சபையின் உறுப்பினராக பணியாற்றியுள்ளார்.

பணிப்பாளர் சபை

திரு. W.M கருணாரத்ன

சுயாதீன/ நிறைவேற்றுநர் அல்லாத பணிப்பாளர் (31.12.2022ஆம் திகதி இளைப்பாறினார்)



திரு. W.M கருணாரத்ன, பிரதேச அபிவிருத்தி வங்கியின் ஒரு சுயாதீன/ நிறைவேற்றுநர் அல்லாத பணிப்பாளராகப் பணிப்பாளர் சபைக்கு 03.01.2020இல் நியமிக்கப்பட்டார்.

இவர் இலங்கை மத்திய வங்கியில் இருந்து ஓய்வு பெற்ற ஒரு உதவி ஆளுநராவார். வங்கித் துறையில் 30 வருடங்களுக்கும் மேற்பட்ட அனுபவம் இவருக்குண்டு. நிதியமைச்சினால் நிர்வகிக்கப்படும், உலக வங்கியினால் நிதியளிக்கப்பட்ட "பண்டகசாலை வரவுகள் நிதித் திட்டம்" என்ற திட்டத்தில் ஆலோசகராகப் பணிபுரிந்துள்ள இவர், அனுராதபுரம் RRDB யின் தலைவர்/ பிரதான நிறைவேற்று அதிகாரியாகவும் பதவி வகித்துள்ளார். மேலும், ருஹுணு அபிவிருத்தி வங்கியின் பணிப்பாளர் சபை உறுப்பினராகவும் இருந்துள்ளார். கனேடிய அரசாங்கத்தின் அனுசரணையுடன் 03 வருட காலத்திற்கு பெறுமதி சங்கிலி அபிவிருத்தி திட்டத்திற்கான பெறுமதி சங்கிலி நிதி நிபுணராகவும் பணியாற்றியுள்ளார்.

இவர் இரண்டு புத்தகங்களைப் பிரசுரித்துள்ளார். அவை, வறுமை மற்றும் கிராமிய சேமிப்புகள் அணி திரட்டல் பற்றியதாகும். அத்துடன், வறுமை கடன், SME நிதியிடல், இறைப்பு பாசனம், வீட்டுத் தோட்டம், பால் உற்பத்தி, நிதிசார் கல்வி ஆகிய விடயங்கள் தொடர்பாக 06 புத்தகங்களையும், பண்டகசாலை வரவுகள் நிதியிடல் சம்பந்தமாக ஒரு நூலையும் வெளியிட்டுள்ளார்.

இவர் பேராதனை பல்கலைக்கழகத்தில் சமூக விஞ்ஞான கௌரவப் பட்டம் பெற்றவராவார். அத்துடன், இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தில் சட்டமாணி கௌரவப் பட்டம் பெற்றுள்ளார். மேலும், 2002 ஆம் ஆண்டில் இருந்து சட்டத்தரணியாகவும் கடமையாற்றி வருகிறார்.

பேராசிரியர் H.M.W. ஆரியரத்ன ஹேரத்

சுயாதீன/ நிறைவேற்றுநர் அல்லாத பணிப்பாளர் (31.12.2022ஆம் திகதி இளைப்பாறினார்)



பேராசிரியர் H.M.W. ஆரியரத்ன ஹேரத் பேராதனை பல்கலைக்கழகத்தில் பொருளியல் துறையில் கலைமாணி (சிறப்பு) பட்டம் பெற்றுள்ளார். அதே பல்கலைக்கழகத்திலிருந்து பொருளியல் துறையில் தத்துவ முதுமாணிப் பட்டத்தையும் பெற்றுள்ளார். மேலும், நோர்வேஜியன் உயிரியல் விஞ்ஞான பல்கலைக்கழகத்தில், அபிவிருத்தி மற்றும் வள பொருளியல் துறையில் விஞ்ஞான முதுமாணிப் பட்டத்தையும், பேராதனைப் பல்கலைக்கழகத்தின் பட்டப்பின் விவசாய நிறுவனத்தில் கலாநிதிப் பட்டத்தையும் பெற்றுள்ளார். அபிவிருத்தி பொருளியல், நிதி மற்றும் வங்கி, திட்டப் பகுப்பாய்வு, நுண் நிதி மற்றும் வறுமைப் பகுப்பாய்வு ஆகிய துறைகளில் முதன்மையான கல்வியாளராகவும், ஆய்வாளராகவும் திகழ்ந்து வருகிறார்.

பேராதனை பல்கலைக்கழகத்தில் 27 வருடங்களாக விரிவுரையாளர், சிரேஷ்ட விரிவுரையாளர் மற்றும் பேராசிரியராகக் கடமையாற்றியுள்ள இவர் இக்காலப்பகுதியின் போது, பொல்கொல்லையில் அமைந்துள்ள கூட்டுறவு அபிவிருத்தி தேசிய நிறுவனத்தின் பணிப்பாளர் (கல்விசார் மற்றும் அபிவிருத்தி) பதவி, பேராதனை பல்கலைக்கழக சர்வதேச ஆய்வு மத்திய நிலையத்தின் உதவிப் பணிப்பாளர் பதவியையும் வகித்துள்ளார். தற்போது இவர் பேராதனை பல்கலைக்கழகத்தில் பொருளியல் மற்றும் புள்ளிவிபரவியல் திணைக்களத்தின் தலைவராகப் பதவி வகிக்கிறார்.

பேராசிரியர் H.M.W. ஆரியரத்ன ஹேரத் ஆலோசகராகவும், கொழும்பு, Pathfinder Foundation, PLAN International Sri Lanka, UNDP மற்றும் திறன் அபிவிருத்தி இராஜாங்க அமைச்சு, தொழிற்கல்வி, ஆராய்ச்சி மற்றும் புத்தாக்கம் - கொழும்பு, மத்திய மாகாண சபை ஆகிய பல்வேறு தேசிய மற்றும் சர்வதேச நிறுவனங்களில் ஆலோசகராகப் பணி புரிந்து பல்வேறு அறிக்கைகளையும் தயாரித்துள்ளார். இவர், பல்வேறு துறைகளில் ஆய்வுகளை மேற்கொண்டு, பல்வேறு நூல்களையும் பிரசுரித்துள்ளார். கோட்பாடுகள் மற்றும் நிகழ்ச்சி திட்டமிடல் மற்றும் மதிப்பீடு, நுண் நிதி, கொள்கை மற்றும் நடைமுறை, இலங்கையின் வரவு செலவுத் திட்ட செயன்முறையில் பால் நிலை பதில் ஆகியன இந்த நூல்களில் சிலவாகும். அத்துடன், இவர், சர்வதேச நடுவர் சஞ்சிகைகளில் பல்வேறு ஆய்வுக் கட்டுரைகளையும் பிரசுரித்துள்ளார்.

பணிப்பாளர் சபை

திரு. லலித் அபேசிறிவர்தன

சுயாதீன/ நிறைவேற்றுநர் அல்லாத பணிப்பாளர்
(01.02.2023 அன்று மீள நியமிக்கப்பட்டார்



திரு. லலித் அபேசிறிவர்தன, பிரதேச அபிவிருத்தி வங்கியின் ஒரு சுயாதீன.் நிறைவேற்றுநர் அல்லாத பணிப்பாளராக, பணிப்பாளர் சபைக்கு 03.01.2020 இல் நியமிக்கப்பட்டார். திரு. லலித் அபேசிறிவர்தன, 1996 ஆம் ஆண்டு முதல் ஒரு சட்டத்தரணியாகச் செயற்பட்டு வருகின்றார். இவர், கொழும்பு பல்கலைக்கழகத்தில் இருந்து சட்டமாணி பட்டத்தைப் பெற்றுள்ளார்.

தற்போது இவர் லீட் பிஸ்னஸ் டிவலப்மன்ட் அன்ட் மனேஜ்மன்ட் கம்பனி (பிரைவேட்) லிமிட்டெட், ஏர்பன் புட்ஸ் (பிரைவேட்) லிமிட்டெட், லீட் ஹாட்வெயர் அன்ட் கன்ஸ்ட்ரக்ஷன் (பிரைவேட்) லிமிட்டெட், வெராஸோ ஹோல்டிங்ஸ் (பிரைவேட்) லிமிட்டெட் மற்றும் ஸ்பெயார் பிஸ்னஸ் டிவலப்மன்ட் அன்ட் மனேஜ்மன்ட் கம்பனி (பிரைவேட்) லிமிட்டெட் ஆகிய நிறுவனங்களில் பணிப்பாளர் பதவிகளை வகித்து வருகிறார்.

திரு. G.A ஜயசாந்த

சுயாதீன/ நிறைவேறறுநர் அல்லாத பணிப்பாளர்
(11.09.2023 முதல் அமுலாகும் விதத்தில் இராஜினாமா செய்துள்ளார்)



வங்கித்தொழில் சேவையில் 24 ஆண்டுகளுக்கும் மேற்பட்ட அனுபவத்தைக் கொண்ட திரு. ஜயஷாந்த, அவரது தொழில் வாழ்க்கையின் ஆரம்பக் கட்டத்தில் கிளை வங்கிச் சேவையில் இருந்ததுடன், பின்னர் திறைசேரி, வணிகம் மற்றும் முதன்நிலை வணிகப் பிரிவு, சொத்து மற்றும் பொறுப்பு முகாமைத்துவப் பிரிவு, இடர்நேர்வு முகாமைத்துவம், நிறுவன அறவீடு, கரைகடந்த வங்கித்தொழில் மற்றும் கிளைத் தொழிற்பாடுகள் என்பவற்றில் விசேடத்துவமும் பெற்றார். 1994 இல் இலங்கை ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகத்திலிருந்து வியாபார நிருவாக (விசேட) பட்டத்தை முதல் வகுப்புடன் பெற்றுக் கொண்டுள்ளார். கொழும்பு பல்கலைக்கழகத்தில் நிதியியல் பொருளியலில் முதுகலைமாணி பட்டத்தினையும் பெற்றுள்ளதுடன், கொடுகடன் முகாமைத்துவத்தில் டிப்ளோமாவையும் பெற்றுள்ளார். இலங்கை வங்கியாளர்கள் நிறுவகத்தின் இணை உறுப்பினராகவும் இவர் இருந்து வருகிறார்.

திரு. ஜயசாந்த பல்வேறு முகாமைத்துவக் குழுக்களிலும், சபைத் துணைக்குழுக்களிலும் உறுப்பினராக/ அவதானிப்பாளராக பணியாற்றி கொள்கைக் கருமங்களில்/ உபாயத் தீர்மானங்களில் போதியளவு அனுபவத்தைப் பகிர்ந்து கொள்கின்றார். பிரதிப் பொது முகாமையாளராக/ பிரதம இடர் நேர்வு அலுவலராகக் கடமைகளைப் பொறுப்பேற்பதற்கு முன்னர், உதவிப் பொது முகாமையாளர் (நிறுவன அறவீடு), (இடர்நேர்வு முகாமைத்துவம்), (மேல் மற்றும் தென் மாகாணங்கள்), (கரைகடந்த வங்கித்தொழில்) பதவிகளை வகித்துள்ளதுடன், (பிரதிப் பொது முகாமையாளர்-சில்லறை வங்கிச் சேவைப் பிரிவு-II) பதவி வகித்துள்ளார். திரு. ஜயசாந்த, இலங்கை மேர்ச்சன்ட் வங்கி மற்றும் பினான்ஸ் பீஎல்சி, இலங்கை வங்கி அதன் அபிவிருத்தி மற்றும் முகாமைத்துவ (தனியார் நிறுவனம்), Ceybank சொத்து முகாமைத்துவ நிறுவனம் ஆகியவற்றில் சபையின் பணிப்பாளராகப் பணியாற்றி வருகின்றார்.

பணிப்பாளர் சபை

கலாநிதி நிர்மால் டி சில்வா

சுயாதீன/ நிறைவேறறுநர் அல்லாத பணிப்பாளர் (04.04.2022 முதல் அமுலாகும் விதத்தில் இராஜினாமா செய்துள்ளார்)



கலாநிதி நிர்மால் டி சில்வா, வணிக தொழில் முறையில் விருது பெற்ற ஒரு தொழில் முயலுநராவார்.

இவருக்கு சுமார் இரண்டு தசாப்த “C மட்ட” அனுபவம் உலகளாவிய ரீதியில் உள்ளது. இவர், பல்வேறு பல்தேசிய மற்றும் செல்வ வளம் பொருந்திய 500 கம்பனிகளுக்குத் தலைமைத்துவத்தை வழங்கியுள்ளார். கடந்த சில வருடங்களாக இவர், மெய்ச்சொத்து கைத்தொழில்துறை, மூலோபாய ஆலோசனை மற்றும் Start-ups என்பவற்றில் கவனம் செலுத்தி வருகிறார்.

கலாநிதி டி சில்வா, தற்போது Paramount Realty யின் இணை தோற்றுநர்/ பிராதன நிறைவேற்று அதிகாரியாகக் கடமையாற்றி வருகிறார். மேலும், TYNA கன்சல்டிங் கம்பனியை இவர் நிறுவினார். இக்கம்பனி மூலோபாயம், தலைமைத்துவம், தாக்க முதலீடு, மூலோபாய அதிகாரம், செயற்பாடு மற்றும் நிலைமாற்றத் தலையீடுகள் (விசேடமாக SME களுக்கு) மற்றும் சமூக தொழில் முனைவு ஆகியவற்றில் கவனம் செலுத்தி வருகின்ற ஒரு சிறு தரகு நிறுவனமாகும்.

இவர், விவசாயம், உணவு மற்றும் பானம், தொழில்நுட்பம், கைவினைப் பொருட்கள், கல்வி, கற்கை மற்றும் அபிவிருத்தி, வசதிகள் முகாமைத்துவம், தொழில்முறைச் சேவைகள், டிஜிட்டல் பொழுதுபோக்கு, நுகர்வுப் பொருட்கள் மற்றும் வாழ்க்கை முறைச் சேவைகள் ஆகிய கைத்தொழில் துறைகளைச் சார்ந்த பெருந்தொகையான கம்பனிகளில் சபை உறுப்பினராகவும் சேவையாற்றி வருகிறார்.

இவர், ஒரு சிறந்த மரியாதைக்குரிய சிந்தனைத் தலைவர் மாத்திரமன்றி, Start-up ன் ஆசானாக உருவாகிய பின், இவர் பற்றி அதிகம் பேசப்படுகிறது. மேலும், இவர், தாக்க முதலீட்டாளராகவும், ஒரு பொது மேடைப் பேச்சாளராகவும் இருக்கின்றார். அத்துடன், நாட்டின் Start-up மற்றும் சமூக நிறுவன சூழல் முறைமையை வடிவமைப்பதில் முக்கிய செல்வாக்குப் பொருந்தியவராவார்.

கலாநிதி டி சில்வா, ஒரு இணை பேராசிரியராகவும், வருகைதரு விரிவுரையாளராகவும், கலாநிதி மட்ட ஆய்வு மேற்பார்வையாளராகவும், பல உள்நாட்டு - வெளிநாட்டுப் பல்கலைக்கழகங்களில் சேவையாற்றி வருகிறார்.

கலாநிதி டி சில்வா கீழே குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகளை தன்னகத்தே கொண்டுள்ளார்.

- வணிக நிருவாகத்தில் (மனித வள முகாமைத்துவ விசேட) கலாநிதி பட்டம்
- வணிக நிருவாகத்தில் முதுமாணிப் பட்டம் (அவுஸ்திரேலியா)
- வணிக முகாமைத்துவத்தில் பட்டம் (அவுஸ்திரேலியா)
- சான்றுபடுத்தப்பட்ட முகாமைத்துவக் கணக்காளர் - (அவுஸ்திரேலியா)
- சந்தைப்படுத்தலில் பட்டப்பின் டிப்ளோமா (CIM - ஐக்கிய இராச்சியம்)
- முதன்மைத் திட்ட முகாமையாளர் (அமெரிக்கா)
- வணிக நிருவாக அமைப்பின் சக உறுப்பினர் (ஐக்கிய இராச்சியம்)
- அமெரிக்க திட்ட முகாமைத்துவ அமைப்பின் சக உறுப்பினர் (அமெரிக்கா)
- பட்டய தொழில்முறை முகாமைத்துவ நிறுவனத்தின் சக உறுப்பினர் (இலங்கை)
- இலங்கை சந்தைப்படுத்தல் நிறுவனத்தின் ஆயுட்கால உறுப்பினர் (SLIM).

பணிப்பாளர் சபை

திருமதி ஹிரந்தி கருணாரத்ன

சுயாதீன/ நிறைவேற்றுநர் அல்லாத பணிப்பாளர்
(13.09.2023 முதல் அமுலாகும் விதத்தில் இராஜினாமா செய்துள்ளார்)



இலங்கை உயர் நீதிமன்றத்தில் 1985 ஒக்டோபர் முதல் சட்டத்தரணியாக 36 ஆண்டுகளுக்கும் மேல் வலுவான உள்நாட்டு, வெளிநாட்டு சட்ட அனுபவத்தைக் கொண்டுள்ளவராவார். ஸாம்பியக் குடியரசில் அரச வழக்குத்தொடுநர் பணிப்பாளருக்கு இணைக்கப்பட்ட அரச சட்டவாதியாகப் பணியாற்றியதுடன், கென்யக் குடியரசில் சட்டமா அதிபர் கூடத்தில் (சிவில் திணைக்களம்) சிரேஷ்ட அரச சட்டத்தரணியாகவும் பணிபுரிந்துள்ளார். பான் ஏஷியா பாங்கிக் கொப்பரேஷன் பீஎல்சி வங்கியின் சட்டத்தரணிகள் குழாத்திலும் அவர் 2003 முதல் 2014 வரை பணியாற்றினார். (குருநாகல் பிராந்தியம்)

கொமர்ஷியல் வங்கி பீஎல்சி வங்கியின் சட்டத்தரணிகள் குழாத்திலும் அவர் பணியாற்றினார். (2003 முதல் 2014 வரை குருநாகல் பிராந்தியம், 2014 - 2020 கண்டி பிராந்தியம், 2020 தொடக்கம் கொழும்பு பிராந்தியம்).

ஆவணங்களை எழுதுதல், தீர்மானங்களை வரைதல் மற்றும் சட்ட அதிகாரிகள் மத்தியில் இணைப்புக்களை ஏற்படுத்தல் என்பவற்றில் சிறந்த திறமை பெற்றுள்ளார்.

பிரச்சினைகளைத் தீர்ப்பதில் சிறந்து விளங்குவதுடன், தர்க்க ரீதியாக விவாதிப்பதில் முன்னிலை வகிக்கின்றார். சிக்கல் மிகுந்த சட்ட ஆவணங்களை ஆராய்தல் மற்றும் பகுப்பாய்வு செய்தல், அனைத்து வகையான சட்ட ஆவணங்களையும் தயாரிக்கும் பணிகளைக் கையாளுதல் என்பன இவரால் செயலாற்றப்படும் அதேவேளை, ஆதனம் தொடர்பான கொடுக்கல் வாங்கல்களுடன் இணையப்பெற்ற பணிகளையும் நிறைவேற்றி வருகின்றார்.

கடன் பெறுதலுக்கு எதிராக பிணையாக வழங்கப்படும் ஆதனங்களின் உரித்துக்களைப் பரீட்சித்தல், வங்கியின் நலன் பற்றிய கருமங்களில் அபிப்ராயங்களை முன்வைத்தல் என்பவற்றில் முதன்மையாக உதவியளிக்கின்றார். தொழில்சார் பணி ஒழுக்க நெறிகளை பொருத்தமானவாறு பேணுதல், பணி பற்றிய வலுவான அர்ப்பணிப்பு உணர்வு என்பன பொறுப்பளிக்கப்பட்டுள்ள அதேவேளை, சேவை நாடிகளுடன் இடைத்தொடர்பினை ஏற்படுத்துகின்ற போது உயர் மட்ட தொழில்சார் பண்பு உறுதி செய்யப்படுகின்றது.

திரு. M.S.S.S. பெர்னாண்டோ

சுயாதீனமற்ற/ நிறைவேற்றுநர் அல்லாத பணிப்பாளர்
(29.07.2022 முதல் அமுலாகும் விதத்தில் இராஜினாமா செய்துள்ளார்)



திரு. M.S.S.S. பெர்னாண்டோ, இலங்கை நிருவாக சேவையில் விசேட தரத்தைச் சேர்ந்த அலுவலர் ஒருவராவார். இவர், இலங்கை நிருவாக சேவையில் 1991 இல் இணைந்து கொண்டார். அரசாங்க சேவையில் 25 ஆண்டுகளுக்கும் மேற்பட்ட அனுபவத்துடன் இவர், பல அமைச்சுக்களிலும், திணைக்களங்களிலும் பல்வேறு நிறைவேற்று மட்டப் பதவிகளை வகித்துள்ளார். இவரது பதவிக் காலத்தின் போது, இவர் பொதுத் திறைசேரியின் கீழ் பொதுத் தொழில்முயற்சி திணைக்களம் மற்றும் முகாமைத்துவ சேவைகள் திணைக்களம் ஆகியவற்றில் பணியாற்றியுள்ளதுடன், இவர் மனிதவளங்கள் பணிப்பாளர் நாயகமாக நிதியமைச்சிலும் கடமையாற்றியுள்ளார்.

திரு. சமன் பெர்னாண்டோ, களனி பல்கலைக்கழகத்தில் இருந்து வணிக மாணியில் அவரது முதல் பட்டத்தினைப் பெற்றுக்கொண்டார். இவர் இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தில் இருந்து சட்டமாணி பட்டத்தையும் பெற்றவராவார். 2003 இல் சட்டத்தரணியாக சத்தியப்பிரமாணம் செய்துகொண்டார். கொழும்பு பல்கலைக்கழகத்தில் இருந்து நிதியியல் பொருளியலில் முதுகலைமாணிப் பட்டத்தையும் பெற்ற இவர், இலங்கை தகவல் தொழில்நுட்ப நிறுவனத்திலிருந்து தகவல் முகாமைத்துவ பட்டப் பின்படிப்பு டிப்ளோமாவை பெற்றுள்ளார்.

பணிப்பாளர் சபை

திருமதி V.K .நாரங்கொட

சுயாதீனமற்ற/ நிறைவேற்றுநர் அல்லாத பணிப்பாளர்
(22.12.2022 முதல்
அமுலாகும் விதத்தில்
இராஜினாமா
செய்துள்ளார்)



திருமதி கிருஷானி நாரங்கொட, முகாமைத்துவப் பயிலுநராக 1987 இல் மக்கள் வங்கியில் இணைந்து கொண்டு வங்கியில் 35 ஆண்டுகளுக்கும் மேற்பட்ட சேவையினைக் கொண்டுள்ளார்.

இவர், வங்கி கிளைச் சேவை, வெளிநாட்டு வாடிக்கையாளர் சேவைகள், கரைகடந்த வங்கித்தொழில் மற்றும் நிறுவன வங்கிச் சேவை போன்ற துறைகளில் பல்வேறு முகாமைத்துவப் பதவிகளில் பணியாற்றியதுடன், தற்போது பிரதிப் பொது முகாமையாளராகப் பணியாற்றி வருகின்றார் என்பதுடன், வர்த்தகக் கொடுகடன், வணிக வங்கிச் சேவை, சிறிய மற்றும் நடுத்தர தொழில்முயற்சி, அபிவிருத்தி நிதி மற்றும் நுண்பாக நிதித் துறைகளிலும் பணியாற்றி வருகின்றார்.

இவர் ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகத்தில் இருந்து கௌரவப் பட்டத்தினையும் (இரண்டாம் வகுப்பு மேற்பிரிவுடன் வியாபார நிருவாக விஞ்ஞான மாணி) கொழும்பு பல்கலைக்கழகத்தின் பட்டதாரி கற்கை பீடத்திலிருந்து வியாபாரக் கற்கைகளில் முதுமாணிப் பட்டத்தையும் பெற்றவராரர். இலங்கை - வங்கியாளர்கள் நிறுவனத்தினதும் இலங்கை கொடுகடன் முகாமைத்துவ நிறுவனத்தினதும் இணை உறுப்பினருமான இவர், இலங்கை ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழத்தில் முகாமைத்துவப் பட்டப் பின்படிப்பு நிறுவகத்திலிருந்து வாடிக்கையாளர் தொடர்பு முகாமைத்துவத்தில் உயர் சான்றிதழையும் பெற்றுள்ளார்.

இவரது வங்கித்தொழில் வாழ்க்கையில் உள்நாட்டிலும், சர்வதேச ரீதியாகவும் பல்வேறு வங்கித் தொழில்/ முகாமைத்துவ நிகழ்ச்சித் திட்டங்களில் பங்கேற்றுள்ளார். பிரதேச அபிவிருத்தி வங்கிக்கு சபையின் பணிப்பாளராக இவர் நியமிக்கப்பட்டதுடன், இலங்கை வங்கியாளர்கள் நிறுவகத்தின் பதிவு செய்யப்பட்ட பரீட்சகராகவும் கடமையாற்றி வருகின்றார்.

திரு W.A .சரத் குமார

சுயாதீனமற்ற/ நிறைவேற்றுநர் அல்லாத பணிப்பாளர்
(27.09.2023 முதல்
அமுலாகும் விதத்தில்
இராஜினாமா செய்துள்ளார்)



இலங்கை கணக்காளர் சேவையில் 36 வருடங்களுக்கும் மேல் அனுபவமுள்ள அரச சேவையின் சிரேஷ்ட நிறைவேற்று அதிகாரியான திரு. W.A சரத் குமார, திறைசேரியின் பிரதிச் செயலாளராக 01.08.2022 அன்று தனது கடமைகளைப் பொறுப்பேற்றார். ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகத்தில் முகாமைத்துவம் மற்றும் மதிப்பீடு தொடர்பான கௌரவப் பட்டத்தினையும், இலங்கை அபிவிருத்தி நிர்வாக நிறுவனத்தில் (SLIDA) பொது முகாமைத்துவத்தில் பட்டப்பின் கல்வி முதுமாணிப் பட்டத்தை பெற்றுள்ளார். இலங்கைக் கணக்காளர் சேவையில் கடந்த ஐந்து வருடங்களாக மூப்புப் பட்டியலில் முதலிடம் வகிக்கும் இவர் தற்போது சேவையில் விசேட தரத்தைப் பெற்றுள்ளார்.

1986 இல் இலங்கை கணக்காளர் சேவையில் இணைந்து மூன்று தசாப்தங்களாக பல்வேறு பதவிகளில் பணியாற்றியுள்ளார். கம்பனிகள் பதிவாளர் திணைக்களத்தில் கணக்காளராகவும் துணைப் பதிவாளராகவும் (நிதி) பணியாற்றினார். 2005 இல் இலங்கைத் தூதரகங்களின் மேலாண்மை, நிர்வாகம் மற்றும் கண்காணிப்பு அம்சங்களைக் கையாளும் வகையில் வெளிவிவகார அமைச்சின் உள்ளக கணக்காய்வு விசாரணை மற்றும் வரவு செலவுக் கட்டுப்பாட்டு இயக்குநராணார். பின்னர் அவர் ரியாத் - சவுதி அரேபியாவின் தூதரகத்தில் 2008 முதல் 2012 வரை துணைத் தூதராகவும், பொறுப்புத் துறை அதிகாரியாகவும் பதவி வகித்தார். ஐந்து வருடங்கள் இராஜதந்திர சேவைகளுக்குப் பின்னர், 2013 இல் இடர் முகாமைத்துவ அமைச்சின் பிரதான கணக்காளராகப் பணிபுரிது 2014 இல் பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் பிரதான கணக்காளராக சேவைகளைப் பொறுப்பேற்றார். திறைசேரியின் துணைச் செயலாளர் பதவிக்கு விடுவிக்கப்படுவதற்கு முன்பாக பிரதமர் அலுவலகத்தில் பிரதான நிதி அதிகாரியாக 7 ஆண்டுகளுக்கும் மேலாகவும் கணக்கியல் சேவையில் முப்பது ஆண்டுகளுக்கும் மேலாகவும் பணியாற்றி வருகிறார். பொது நிதி முகாமைத்துவத் துறையில் நிர்வாகப் பதவிகளை வகித்து, பொது நிதி முகாமைத்துவம், பொது நிர்வாகம் மற்றும் கணக்கியல், வருடாந்த பாதீடு, நிதிப்பாய்ச்சல் முகாமைத்துவம் மற்றும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கியல் கொள்கைகளுக்கு இணங்க வருடாந்த நிதி அறிக்கைகளைத் தொகுத்தல் ஆகியவற்றில் பெரும் அனுபவத்தைப் பெற்றுள்ளார். தனது பணிக்காலத்தில், அவர் பல வெளிநாட்டு நிதியுதவி திட்டங்களில் நிதி நிபுணராகவும், பல்வேறு நிர்வாகக் குழுக்களில் பல்வேறு பதவிகளிலும், பல்வேறு அமைச்சுக்களில் அமைச்சரவையால் நியமிக்கப்பட்ட ஏராளமான கொள்வனவுக் குழுக்களில் (CAPC) உறுப்பினராகவும் இருந்துள்ளார்.

கூட்டுறவு முகாமைத்துவ அணி



திரு. PS எதிரிசூரிய

பொது முகாமையாளர்/ பிநிஅ

திரு. எதிரிசூரிய, 1992ஆம் ஆண்டு ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகத்தில் வணிக நிர்வாகத்தில் விசேட விஞ்ஞானமாணி பட்டத்தைப் பெற்றார். இலங்கை பட்டயக் கணக்காளர் நிறுவனத்தின் சக உறுப்பினருமாவார். மேலும், கொழும்பு பல்கலைக்கழகத்தில் இருந்து வணிக நிர்வாகத்தில் முதுமாணிப் பட்டம் பெற்றுள்ளார். கணக்காய்வு, கணக்கியல், வரி விதிப்பு, முகாமைத்துவ ஆலோசனை, வங்கி மற்றும் நிதி ஆகிய துறைகளில் 32 வருடங்களுக்கும் மேற்பட்ட அனுபவத்தை பெற்றுள்ள இவர், ஏர்னஸ்ட் அன்ட் யங் ~ கொழும்பு, தேசிய அபிவிருத்தி வங்கி மற்றும் செலான் வங்கி ஆகிய முன்னணி நிதி நிறுவனங்களில் கடமையாற்றியுள்ளார். பிரதேச அபிவிருத்தி வங்கியின் பிரதம நிதி அதிகாரியாக நியமிக்கப்பட முன், லங்காபுத்ர அபிவிருத்தி வங்கியில் பிரதம நிதி அதிகாரி, இணைக்க அதிகாரி மற்றும் பதில் பொது முகாமையாளர்/ பிநிஅ ஆகிய பதவிகளை வகித்துள்ளார்.

செப்டம்பர் 05, 2022 முதல், பிரதம நிதி அதிகாரி பதவிக்கு மேலதிகமாக, பிரதேச அபிவிருத்தி வங்கியின் பொது முகாமையாளர்/ பி.நி.அ கடமைகள் மற்றும் பொறுப்புகளை ஆற்றவும் அவர் நியமிக்கப்பட்டார்.



திரு. DMTS குமார

தலைவர் அறவீடுகள் மற்றும் பிரதிப் பொது முகாமையாளர் - (செயற்பாடுகள் மற்றும் வணிகஉதவி (பதில் கடமை)

திரு. குமார, வங்கித் துறையில் 31 வருடங்களுக்கும் மேற்பட்ட கால அனுபவத்தைக் கொண்டுள்ளார். இவர், 1991ஆம் ஆண்டு வங்கியில் (பொலன்னறுவை பிராந்திய கிராமிய அபிவிருத்தி வங்கி என முன்னர் குறிப்பிடப்பட்ட RRDB) இணைந்து கொண்டார். இவர், ஊவா மற்றும் வடமேல் மாகாணங்களில் வங்கி உதவியாளர், முகாமையாளர், சிரேஷ்ட முகாமையாளர், பிரதம முகாமையாளர், உதவிப் பொது முகாமையாளர் மற்றும் பிராந்தியப் பொது முகாமையாளர் ஆகிய பதவிகளை வகித்துள்ளார்.

இவர், ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகத்தில் இருந்து வர்த்தக நிர்வாகத் துறையில் BSc (விசேட) பட்டத்தையும், களனி பல்கலைக்கழகத்தில் இருந்து கலை முதுமாணிப் பட்டத்தையும் பெற்றுள்ளார்.

மேலும், இவர், இலங்கை வங்கியாளர் நிறுவனத்தின் இடைநிலைப் பரீட்சையைப் பூர்த்தி செய்துள்ளார்.



திரு. AHMG அபேரத்ன

பிரதிப் பொது முகாமையாளர் - கடன்கள், விசேட திட்டங்கள் மற்றும் கொள்கை அமுலாக்கல

திரு. AHMG அபேரத்ன, 1986ஆம் ஆண்டு களனி பல்கலைக்கழகத்தில் இருந்து வர்த்தகத்துறையில் விசேட பட்டம் பெற்றுள்ளார். இவர் 2016ஆம் ஆண்டு வயம்ப பல்கலைக்கழகத்தில் வர்த்தக நிர்வாகத் துறையில் முதுமாணிப் பட்டத்தைப் பூர்த்தி செய்துள்ளார். மேலும், இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தினால் நடத்தப்பட்ட நுண் நிதி பயிற்சி நெறியையும் பூர்த்தி செய்துள்ளார்.

1987ஆம் ஆண்டு இவர் பிரதேச அபிவிருத்தி வங்கியில் இணைந்து கொண்டு கிளை முகாமையாளர், பிரதம முகாமையாளர். உதவிப் பொது முகாமையாளர், சப்ரகமுவ மற்றும் வடமத்திய மாகாணங்களின் பிராந்தியப் பொது முகாமையாளராகவும் கடமையாற்றியுள்ளார்.

இவர், வங்கித்துறையில் 35 வருடங்களுக்கும் மேற்பட்ட அனுபவத்தைக் கொண்டுள்ளார்.

கூட்டுறவு முகாமைத்துவ அணி



திரு. DKS சேரசிங்க

பிரதம மனித வளங்கள் அலுவலர்

திரு. கிருஷாந்த சஞ்ஜீவ சேரசிங்க, 1999 ஆம் ஆண்டு முதல் 2021 ஜனவரி மாதம் பிரதேச அபிவிருத்தி வங்கியில் இணைந்து கொண்டது வரை மனித வளங்கள் துறையில் 21 வருடங்களுக்கும் மேற்பட்ட அனுபவத்தைப் பெற்றுள்ளார். இவர் ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகத்தில் இருந்து மனித வளங்கள் முகாமைத்துவத் துறையில் அறிவியல் இளங்கலைப் பட்டம் சிறப்புப் பட்டத்தையும், அதே பல்கலைக்கழகத்தில் இருந்து முகாமைத்துவத் துறையில் முதுமாணிப் பட்டத்தையும் பெற்றுள்ளார். இவர், ஜப்பானின் டோக்கியோவிலுள்ள *Total Quality Management* ஊடாக மனித வளங்கள் முகாமைத்துவப் பயிற்சியைப் பூர்த்தி செய்துள்ளார்.

திரு. கிருஷாந்த, கூட்டுறவு மற்றும் நடுத்தர முகாமைத்துவப் பதவிகளை பொது மற்றும் தனியார் துறை நிறுவனங்களில் வகித்துள்ளார்.

2014/2015 காலப்பகுதியில் தேசிய சேமிப்பு வங்கியின் மனித வளங்கள் திணைக்களத்தில் பிரதிப் பொது முகாமையாளராகக் கடமையாற்றியுள்ளார்.



திரு. EAD ஜனித் பிரியஷாந்த

பிரதம உள்ளகக் கணக்காய்வாளர்

திரு. பிரியஷாந்த, இலங்கை பட்டயக் கணக்காளர்கள் நிறுவனத்தின் சக உறுப்பினரும், இலங்கை வங்கியாளர்கள் நிறுவனத்தின் இணை உறுப்பினரும், அவுஸ்திரேலிய சான்றுபடுத்தப்பட்ட முகாமைத்துவக் கணக்காளர்கள் நிறுவனத்தின் சான்றுபடுத்தப்பட்ட உறுப்பினராக விளங்குவதுடன், களனி பல்கலைக்கழகத்தில் வர்த்தகமாணி விசேட பட்டத்தை இரண்டாம் வகுப்பு மேற்பிரிவுடன் பெற்றவராவார்.

மக்கள் வங்கியிலும், அரசாங்கத்துறை நிறுவனங்களிலும், வங்கித்தொழில் நிதி மற்றும் கணக்காய்வுத் துறைகளிலும் 30 ஆண்டுகளுக்கும் மேற்பட்ட அனுபவத்தைக் கொண்டுள்ளார்.

இவர், பிரதேச அபிவிருத்தி வங்கியில் 2022 ஜூன் மாதம் இணைந்து கொண்டார்.

சிரேஷ்ட உதவிப் பொது முகாமையாளர்கள்/ பிராந்தியப் பொது முகாமையாளர்கள்

சிரேஷ்ட உதவிப் பொது முகாமையாளர்கள்



01. திரு. GDS டி சில்வா

சிரேஷ்ட உதவிப் பொது முகாமையாளர் - கடன் நிர்வாகம்

வர்த்தக நிர்வாகம் ~ அறிவியல் இளங்கலைப் (சிறப்பு) பட்டம் ~ ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகம்

பிராந்தியப் பொது முகாமையாளர்கள்



01. திரு. RMR ரந்தெனிய

பிராந்தியப் பொது முகாமையாளர் - வடமேல் மாகாணம்

- கலைமாணிப் பட்டம் ~ பேராதனை பல்கலைக்கழகம்
- இலங்கை வங்கியாளர் கல்லூரியில் ~ வங்கித்துறை மற்றும் நிதிச் சான்றிதழ்



02. திரு. BGWA குமார

பிராந்தியப் பொது முகாமையாளர் - ஊவா மாகாணம்

பிராந்தியப் பொது முகாமையாளர் - கிழக்கு மாகாணம் (பதில் கடமை)

- பொது நிர்வாகம் அறிவியல் இளங்கலை பட்டம் (சிறப்பு) ~ ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகம்
- முதுகலைப் பட்டம் (கலை) ~ களனி பல்கலைக்கழகம்
- இணை உறுப்பினர் இலங்கை வங்கியாளர்கள் நிறுவனம் (AIB)



03. திரு. MMMS ஆனந்த

பிராந்தியப் பொது முகாமையாளர் - வடமத்திய மாகாணம்

- இணை உறுப்பினர் இலங்கை வங்கியாளர்கள் நிறுவனம் (AIB)



04. திரு. MA ஞானரத்ன

பிராந்தியப் பொது முகாமையாளர் - தென் மாகாணம்

- பொது நிர்வாகம் அறிவியல் இளங்கலைப் பட்டம் (சிறப்பு) ~ ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகம்



05. திரு. KCD தர்மபிரிய

பிராந்தியப் பொது முகாமையாளர் - மத்திய மாகாணம்

- கலைமாணி பட்டம் ~ பேராதனை பல்கலைக்கழகம்
- சிரேஷ்ட உறுப்பினர் ~ இலங்கை வங்கியாளர் நிறுவனம்



06. திரு. GMBC டி சில்வா

பிராந்தியப் பொது முகாமையாளர் - ஊவா மாகாணம்

- B.Com ~ ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகம்
- இணை உறுப்பினர் ~ இலங்கையின் வங்கியாளர் நிறுவனம்
- DBF ~ இலங்கை வங்கியாளர்கள் நிறுவனம்
- வணிக முகாமைத்துவ முதுகலைப் பட்டம் ~ வயம்ப பல்கலைக்கழகம்
- நுண் நிதியியலில் சான்றிதழ்



07. திரு. PH விஜேதிலக்க

பிராந்தியப் பொது முகாமையாளர் - சப்ரகமுவ மாகாணம்

- வணிக முகாமைத்துவ முதுகலைப் பட்டம் ~ வணிக முகாமைத்துவ தேசியப் பாடசாலை (NSBM)
- தோட்ட முகாமைத்துவமும் மதிப்பீடும் ~ அறிவியல் இளங்கலைப் பட்டம் ~ ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகம்
- இணை உறுப்பினர் ~ இலங்கை வங்கியாளர்கள் நிறுவனம் (AIB)



08. திரு. CLC முதுபண்டா

பிராந்தியப் பொது முகாமையாளர் - கிழக்கு மாகாணம்

- வணிக நிர்வாகம் ~ அறிவியல் இளங்கலைப் பட்டம் (சிறப்பு) ~ ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகம்
- இணை உறுப்பினர் ~ இலங்கை வங்கியாளர்கள் நிறுவனம் (AIB)

உதவிப் பொது முகாமையாளர்கள்/ பிரிவுத் தலைவர்கள்

பிரிவுத் தலைவர்கள்



01. திரு. GBMTK விஜேரத்ன

உதவிப் பொது முகாமையாளர் - இணக்கப்பாடுகள்

- கலைமாணி பட்டம் (விசேட) ~ பேராதனை பல்கலைக்கழகம்
- IABF இலங்கை வங்கியாளர்கள் நிறுவனம்



02. திருமதி. HMNM ஹேரத்

உதவிப் பொது முகாமையாளர் - இடர் முகாமைத்துவம்

- வணிக நிர்வாகம் அறிவியல் இளங்கலைப் (சிறப்பு) பட்டம் ~ ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகம்
- வணிக நிர்வாகம் முதுமாணி பட்டம் ~ வயம்ப பல்கலைக்கழகம்
- இணை உறுப்பினர் ~ இலங்கை பட்டயக் கணக்காளர்கள் நிறுவனம்
- சக உறுப்பினர் ~ இலங்கை கணக்காய்வு தொழிநுட்பவியலாளர்கள் சங்கம்
- இணை உறுப்பினர் ~ இலங்கையின் வங்கியாளர் நிறுவனம் (AIB)
- சக உறுப்பினர் ~ சான்றுபடுத்தப்பட்ட முகாமைத்துவ கணக்காய்வாளர்கள் நிறுவனம் (CMA)
- திறைசேரி மற்றும் இடர் முகாமைத்துவம் டிப்ளோமா ~ (IBSL)



03. திருமதி. RMT ராஜபக்ஷ

சபை செயலாளர்

- சட்ட இளங்கலைப் பட்டம் (LLB) ~ கொழும்பு பல்கலைக்கழகம்
- மனித வளம் ~ பட்டப்பின் கல்வி டிப்ளோமா ~ கொழும்பு பல்கலைக்கழகம்
- சட்டத்தரணி
- நொத்தாரிசு
- கம்பனிகள் செயலாளர்



04. திருமதி. ARR பியசேக்கர

உதவிப் பொது முகாமையாளர் - சட்டம்

- சட்டத்தரணி
- பதிவு செய்யப்பட்ட கம்பனிகள் செயலாளர்
- நொத்தாரிசு, சத்தியப்பிரமாண ஆணையாளர்
- சட்ட முதுகலை பட்டம் (LLM) ~ கொழும்பு பல்கலைக்கழகம்
- அறிவியல் முதுமாணி பட்டம் ~ மொறட்டுவை பல்கலைக்கழகம்
- தொழிலாளர் கற்கை பட்டப் பின் படிப்பு டிப்ளோமா ~ கொழும்பு பல்கலைக்கழகம்
- சட்ட இளங்கலை விசேட பட்டம் (LLB Special) ~ கொழும்பு பல்கலைக்கழகம்
- இணக்கப்பாடுகள் டிப்ளோமா ~ இலங்கை வங்கியாளர்கள் நிறுவனம்
- கூட்டுறவு வங்கியியல் டிப்ளோமா ~ இலங்கை வங்கியாளர்கள் நிறுவனம்
- பட்டய உறுப்பினர் (CMILT) ~ லொஜிஸ்டிக்ஸ் மற்றும் உருமாற்றத்திற்கான பட்டய நிறுவனம், இலங்கை
- ஆயுட்கால உறுப்பினர் ~ இலங்கை தொழில்முறை வங்கியாளர்கள் சங்கம் (APB)

உதவிப் பொது முகாமையாளர்கள்



01. திரு. DSPC ஹந்துன்ஹேவா

உதவிப் பொது முகாமையாளர் - செயற்பாடுகள் மற்றும் வங்கி துணைச் சேவைகள்

- நுண் நிதியியல் டிப்ளோமா ~ இலங்கை வங்கியாளர்கள் நிறுவனம்
- CBF இலங்கை வங்கியாளர்கள் நிறுவனம்



02. திரு. PST ரணதுங்க

உதவிப் பொது முகாமையாளர் - கடன்கள்

- கலைமாணி (விசேட) பட்டம் ~ கொழும்பு பல்கலைக்கழகம்
- முதுமாணி பட்டம் ~ ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகம்



03. திரு. KB விஜேரத்ன

உதவிப் பொது முகாமையாளர் - மத்திய மாகாணம்

- வர்த்தக முகாமைத்துவம் அறிவியல் இளங்கலைப் பட்டம் (விசேட) ~ ரஜரட்ட பல்கலைக்கழகம்
- இணை உறுப்பினர் ~ இலங்கை வங்கியாளர் நிறுவனம் (AIB)
- இடைநிலைத் தேர்வு ~ இலங்கையின் பட்டயக் கணக்காளர் நிறுவனம்



04. திரு. WPMK தசந்த

உதவிப் பொது முகாமையாளர் - பொறியியல்

- அறிவியல் இளங்கலை கௌரவ பட்டம் (Eng.) ~ மொறட்டுவ பல்கலைக்கழகம்
- நிர்மாணத்துறை முகாமைத்துவம் பட்டப் பின் டிப்ளோமா ~ இலங்கை திறந்த பல்கலைக்கழகம்
- வணிக முகாமைத்துவ முதுகலைப் பட்டம் ~ PIM (SJP) ~ ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகம்
- கூட்டுறவு அங்கத்தவர் மற்றும் பட்டய பொறியியலாளர் ~ பொறியியலாளர்கள் நிறுவனம் ~ இலங்கை
- பட்டய அங்கத்தவர் ~ *Chartered Institute of Logistic & Transport (UK))*



05. மேஜர் ஜெனரல் ஜகத் பக்ஷவீர

தலைமை பாதுகாப்பு அதிகாரி

- RSP, VSV, USP (இளைப்பாறிய)



06. திருமதி. WMIK அபேரத்ன

உதவிப் பொது முகாமையாளர் - பெறுகைகள்

- அறிவியல் இளங்கலைப் பட்டம் (இயற்பியல் அறிவியல்) பட்டம் ~ பேராதனைப் பல்கலைக்கழகம்
- பொதுப் பெறுகைகள் ஒப்பந்த நிர்வாகத்தில் உயர் தேசிய டிப்ளோமா ~ இலங்கை அபிவிருத்தி நிர்வாக நிறுவனம்



07. திரு. HMPAGU பண்டார

உதவிப் பொது முகாமையாளர் - ஊவா மாகாணம்

- இணை அங்கத்தவர் ~ இலங்கை வங்கியாளர் நிறுவனம் (AIB)
- பட்டப்பின் டிப்ளோமா (முகாமைத்துவம்) ~ ரஜரட்டை பல்கலைக்கழகம்



08. திரு. RMDSP மஹாநாம

உதவிப் பொது முகாமையாளர் - மேல் மாகாணம்

- வணிக நிர்வாகம் பட்டப்பின் டிப்ளோமா ~ பேராதனைப் பல்கலைக்கழகம்
- இணை அங்கத்தவர் ~ இலங்கை வங்கியாளர் நிறுவனம் (AIB)
- இணை அங்கத்தவர் ~ சந்தைப்படுத்தல் நிறுவனம்



09. கலாநிதி. ASKB ரத்நாயக்க

உதவிப் பொது முகாமையாளர் - தகவல் தொழிநுட்ப வணிக உருமாற்றம்

- அறிவியல் இளங்கலைப் பட்டம் ~ MIS அயர்லாந்தின் தேசிய பல்கலைக்கழகம்
- வர்த்தக நிருவாகத்தில் முதுமாணி ~ லீட்ஸ் மெட்ரோபொலிட்டன் பல்கலைக்கழகம்
- PHD ~ ஆல்டர்ஸ்கேட் கல்லூரி



10. திரு. MDG கருணாரத்ன

உதவிப் பொது முகாமையாளர் - தகவல் தொழிநுட்பம்

- அறிவியல் இளங்கலைப் பட்டம் ~ களனி பல்கலைக்கழகம்
- இணை அங்கத்தவர் ~ இலங்கை வங்கியாளர்கள் நிறுவனம் (AIB)
- வங்கி முகாமைத்துவம் பட்டப்பின் டிப்ளோமா ~ IBSL



11. திருமதி. SGG லகஷ்மி

உதவிப் பொது முகாமையாளர் - நிதி

- வணிக முகாமைத்துவம் அறிவியல் இளங்கலைப் (விசேட) பட்டம் ~ ஜீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகம்
- வங்கி முகாமைத்துவம் PGEXDip ~ IBSL
- இணை அங்கத்தவர் ~ இலங்கை வங்கியாளர்கள் நிறுவனம் (AIB)
- உரிம நிலைத் தேர்வு ~ பட்டயக் கணக்காளர் நிறுவனம், இலங்கை



12. திரு. KDHA டி சில்வா

உதவிப் பொது முகாமையாளர் - அறவீடு

- கணக்கியல் ~ உயர் தேசிய டிப்ளோமா
- DBF ~ வங்கியாளர்கள் நிறுவனம், இலங்கை
- வங்கி முகாமைத்துவம் PGEXDip ~ IBSL
- வணிக முகாமைத்துவ முதுகலைப் பட்டம் ~ *Asia e University* ~ மலேசியா
- வரைகலைத் திறன் (தேசிய சான்றிதழ்) ~ இலங்கை தொழிநுட்பக் கல்லூரி
- சக உறுப்பினர் ~ இலங்கை வங்கியாளர் நிறுவனம் (FIB)



13. திருமதி. PEDS பெரேரா

உதவிப் பொது முகாமையாளர் - மனித வள அபிவிருத்தி மற்றும் சேவைகள்

- இணை உறுப்பினர் ~ இலங்கை வங்கியாளர் நிறுவன (AIB)
- வங்கி முகாமைத்துவம் PGEXDip ~ IBSL



14. திரு. BWMANW குமாரசிறி

உதவிப் பொது முகாமையாளர் - விசாரணைகள்

- வணிக இளங்கலை (விசேட) பட்டம் ~ கொழும்பு பல்கலைக்கழகம்
- கடன் முகாமைத்துவம் டிப்ளோமா ~ கடன் நிர்வாக நிறுவனம்
- CGAP பயிற்றுவிப்பாளர் மற்றும் ஆலோசகர்



15. திரு. LAR பெர்ணான்டோ

உதவிப் பொது முகாமையாளர் - சந்தைப்படுத்தல்

- முதுகலை டிப்ளோமா ~ ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகம்
- மனித வள முகாமைத்துவம் முதுமாணிப் பட்டம் ~ கொழும்பு பல்கலைக்கழகம்
- வெகுஜன தொடர்பாடல் முதுமாணிப் பட்டம் ~ களனி பல்கலைக்கழகம்
- எழுத்தாற்றல் மற்றும் தொடர்பாடல் டிப்ளோமா பட்டம் ~ ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகம்
- இலங்கை வங்கியாளர்கள் நிறுவன இணை உறுப்பினர் (AIB)



16. திரு. WUS அபேசிங்க

உதவிப் பொது முகாமையாளர் - சபரகமுவ மாகாணம்

- பொது நிர்வாகம் ~ அறிவியல் இளங்கலைப் பட்டம் (விசேட) ~ ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகம்



17. திரு. EP ரஞ்சித் குமார

உதவிப் பொது முகாமையாளர் - உள்ளகக் கணக்காய்வு

- வணிகவியல் இளங்கலைப் பட்டம் (விசேட) ~ களனி பல்கலைக்கழகம்
- IABF ~ இலங்கை வங்கியாளர்கள் சங்கம்



முகாமைத்துவ கலந்துரையாடல் மற்றும் பகுப்பாய்வு

நிதி மீளாய்வு | 38
வாடிக்கையாளர் மற்றும் உறவு மீளாய்வு | 42
தகவல் தொழில்நுட்ப மீளாய்வு | 46
சந்தைப்படுத்தல் மீளாய்வு | 47
சமூக மற்றும் சுற்றாடல் மீளாய்வு | 52
பணியாட்கள் மீளாய்வு | 54
விசேட நிகழ்வுகள் | 56
ஏனைய நிகழ்வுகள் | 59
இடர் முகாமைத்துவம் | 63

நிதி மீளாய்வு

அபிவிருத்தி நிதி தொடர்பாக அர்ப்பணிப்புடன் செயற்படும் ஒரு நிதி நிறுவனம் என்ற வகையில், பிரதேச அபிவிருத்தி வங்கி, நாட்டில் சமூக மற்றும் பொருளாதார அபிவிருத்தி தொடர்பான விடயங்களை மேம்படுத்துவதில் தொடர்ந்து முக்கிய பங்காற்றி வருகிறது. இவ்வங்கி, தீவகத்தில் முக்கியமான அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டங்களில் முன்னணி வகிப்பதுடன், நிதியாளர் என்ற வகையில், பாரிய பங்களிப்பை வழங்கி வருகிறது. பிரதேச அபிவிருத்தி வங்கி, தற்போது, பிரதேச அபிவிருத்திக்கான முக்கிய நிறுவனமாகச் செயற்பட்டு வருவதுடன், பொருளாதாரத் துறைகளுக்கு சேவையாற்றியும் வருகிறது. அநேகமான நிதி நிறுவனங்கள், இத்தகைய விடயங்களில் ஈடுபட பெருமளவு ஆர்வம் காட்டுவதில்லை. வடக்கு, கிழக்கு உட்பட நாடு பூராகவும் பரந்துள்ள 6 மில்லியனுக்கும் மேற்பட்ட வாடிக்கையாளர் தளமே எமது பிரதான சொத்தாகும். நாட்டின் அபிவிருத்தியும், அதன் மக்கள் மீதுமே, வங்கி கவனம் செலுத்தி வருகிறது. எனவே. வங்கி, அவர்களை மேம்படுத்துவதன் மூலம் நாடு பூராகவும் இருக்கின்ற அதன் 272 கிளைகள் ஊடாக பணியாற்றி வருகிறது.

இலாபத்தன்மை

வங்கியின் வரிக்குப் பின்னரான இலாபம், கடந்த வருடத்துடன் ஒப்பிடுகையில், 340.54% இனால் அதிகரித்து உள்ளது. இவ்வகையில், 2021 இல் பதிவு செய்யப்பட்ட 1,926 மில்லியன் ரூபாய்கள் தொழிற்படு இலாபத்தைவிட அதிகரித்து, 1,998 மில்லியன் ரூபாய்களாகப் பதிவு செய்யப்பட்டு 3.70% அதிகரிப்பினைக் காட்டுகிறது. 2020 இல் 0.78% ஆக வரிக்கு முன்னராக இருந்த சொத்துக்கள் மீதான திரும்பல் 0.47% ஆகப் பதிவு செய்யப்பட்டது. மேலும், 31.12.2021 இல் வங்கியின் மொத்தச் சொத்துக்கள் 285 பில்லியன் ரூபாய்களாகும். கடந்த வருடத்துடன் ஒப்பிடுகையில், இது 16.07% வளர்ச்சியைக் காட்டுகிறது.

வரவு செலவுத் திட்டம் மீதான இலாபத்தன்மை

வகை	உண்மையான ரூ. 000	திட்டமிடப்பட்ட ரூ. 000	மாற்றம்
மொத்த வருமானம்	36,202,750	32,713,897	10.7%
தொழிற்படு இலாபங்கள்	1,998,116	5,649,666	-64.6%
வரிக்குப் பின்னரான இலாபம்	1,349,395	2,059,285	-34.5%

பிரதேச அபிவிருத்தி வங்கியின் காலாண்டு நிதிச் செயற்றிறன்

2022 ஆம் ஆண்டு பிரதேச அபிவிருத்தி வங்கியின் காலாண்டு நிதிச் செயற்றிறன் ஓரளவு முன்னேற்றம் கண்டுள்ளது.

வகை	2022 - ரூ. .000				31 - டிச 21
	31- டிச	30-செப்	30- ஜூன்	31 - மார்ச்	ரூ .000
தேறிய தொழிற்படு வருமானம்	**13,355,357**	**9,939,538**	**6,438,480**	**3,321,852**	11,030,507
வரிக்கு முன்னரான இலாபம்	**359,115**	**884,482**	**652,393**	**442,532**	1,926,781
வரிக்குப் பின்னரான இலாபம்/ (நட்டம்)	**1,349,394**	**241,378**	**208,151**	**212,039**	306,302
கடன்களும் பெறுவனவுகளும்	**198,008,145**	**197,167,550**	**190,010,530**	**183,039,517**	189,039,666
வாடிக்கையாளர் வைப்புகள்	**210,301,323**	**207,365,025**	**204,908,444**	**190,694,583**	187,752,465
மொத்த சொத்துக்கள்	**285,395,150**	**284,091,435**	**272,363,082**	**258,438,595**	245,889,512
பங்குதாரர் நிதியம்	**16,226,127**	**15,634,702**	**15,601,475**	**17,708,727**	15,393,322

வருமானம்

வங்கியின் மொத்த வருமானம் 24.49 பில்லியன் ரூபாவிலிருந்து 36.20 பில்லியன் ரூபாய்களாக 47.81% ஆக அதிகரித்துள்ளது. நாட்டில் காணப்பட்ட சவாலான பொருளாதார நிலையிலும் கூட வங்கி முன்னைய நிதியாண்டினை விட அதிகமான மொத்த வருமானத்தை பெற்றுள்ளது.


தேறிய கட்டணமும் தரகு வருமானமும்

2022ஆம் நிதியாண்டில், நிகர கட்டணம் மற்றும் தரகு வருமானம் 2021 ஆம் நிதியாண்டின் ரூபா 623 மில். உடன் ஒப்பிடுகையில் ரூபா 451 மில். ஆக 27.55% குறைந்துள்ளது.

மொத்த வருமானத்தின் கலவை

	2022 ரூ. 000	2021 ரூ. 000	மாற்றம்
வட்டி வருமானம்	35,273,433	23,545,299	49.81%
கட்டணமும் தரகு வருமானமும்	806,548	935,136	-13.75%
ஏனைய தொழிற்படு வருமானம்	122,768	12,332	895.52%
மொத்த வருமானம்	36,202,749	24,492,767	47.81%


தேறிய கட்டணமும் தரகு வருமானமும்



தேறிய வட்டி வருமானம்

2022 ஆம் நிதியாண்டில் நிகர வட்டி வருமானம் 25.38% அதிகரித்துள்ளது, இந்த அதிகரிப்பானது, ரூபா 10,888 மில். இலிருந்து ரூபா 13,652 மில். ஆகும்.

தேறிய வட்டி வருமானம்



வரி விதிப்பு


	2022 ரூ. 000	2021 ரூ. 000	மாற்றம்
நிதி சேவைகள் மீதான பெறுமதி சேர்க்கப்பட்ட வரி	**1,561,475**	1,151,277	35.6%
சமூகப் பாதுகாப்பு பங்களிப்பு வரி	**77,526**	-	-
வருமான வரி	**(990,279)**	469,201	-311.1%
மொத்த வரிச் செலவு	**648,722**	1,620,479	-60.0%

2022 ஆம் நிதியாண்டின் போது, வங்கி இ.ரூ 1,561 மில்லியன் தொகை நிதி மீதான வற் வரியாகச் செலவிட்டுள்ளது. அதேபோன்று, செலவிடப்பட்ட வருமான வரியின் தொகை 990 மில்லியன் ரூபாய்களாகும். இந்த வருடத்தில் மொத்தமாக 648 மில்லியன் ரூபாய் வட்டியாகச் செலவிடப்பட்டுள்ளது.

நிதி மீளாய்வு


சொத்துக்கள் மீதான திரும்பல்

2021 ஆம் ஆண்டில் 0.78% ஆகப் பதிவு செய்யப்பட்ட சொத்துக்கள் மீதான திரும்பல் இருந்த போதிலும், 2022 ஆம் ஆண்டில் வங்கி 0.47% சொத்துக்கள் மீதான திரும்பலைப் (தொழிற்படு இலாபங்கள்) பதிவு செய்துள்ளது,




மொத்தப் பங்குதாரர்களின் பங்குரிமை

2021ஆம் ஆண்டில் பதிவுசெய்யப்பட்ட 15,393 மில்லியன் ரூபாய்க்கு எதிராக 2022ஆம் ஆண்டு வங்கியின் மொத்தப் பங்குதாராகளின் பங்குரிமை 16,226 மில்லியன் ரூபாயை அடைந்தது.




பங்குரிமை மீதான திரும்பல்

2022 ஆம் நிதியாண்டில் வரிக்குப் பிந்திய இலாபம் ரூபா 1,043 மில்லியன் ரூபாய்களினால் அதிகரித்து உள்ளது. கடந்த வருடத்துடன் ஒப்பிடுகையில் பங்குரிமை மீதான திரும்பல் (ROE) 1.99% இல் இருந்து 8.54% ஆக அதிகரித்துள்ளது.



சொத்துக்களின் தரம்


கடந்த ஆண்டின் இறுதியில், வங்கியின் செயற்பாடற்ற கடன் விகிதம் 8.71% இல் இருந்து 31 டிசம்பர் 2022 இல் உள்ளவாறு 8.46% வரை சற்று குறைவடைந்துள்ளது,



மொத்த சொத்துக்கள்

கடந்த வருடத்துடன் ஒப்பிடுகையில், வங்கி மொத்த சொத்துக்களில் 16.07% வளர்ச்சியைப் பதிவு செய்தது. இதற்கமைய மொத்த சொத்து தளம் இ.ரூ 245 பில்லியனைத் தாண்டியதுடன், 2022 ஆம் நிதியாண்டின் இறுதியில் அது, 285 பில்லியனை அடைந்தது.

இலங்கை மத்திய வங்கியின் கடன் இடர் வகுப்பாக்கத்திற்கு அமைய மேற்கொள்ளப்பட்ட வங்கியின் செயற்பாடற்ற கடன்களின் பகுப்பாய்வு கிழே தரப்பட்டுள்ளன.




திரவத்தன்மை

	2022	2021
சட்ட ரீதியான திரவச் சொத்து விகிதம் (SLAR)	**27.83%**	26.18%


2022ஆம் ஆண்டு காலப்பகுதியில் நாட்டில் கடுமையான சூழ்நிலைகள் நிலவிய போதிலும், வங்கி அதன் திரவ மட்டங்களை ஒருசீராகப் பேணி ஒழுங்குபடுத்தல் தேவைப்பாடுகளைவிட அதிக மட்டத்தில் வைத்திருந்தது.

வாடிக்கையாளர் மற்றும் உறவு மீளாய்வு

கடன்களும் முற்பணங்களின் வளர்ச்சியும்




கடன் மற்றும் முற்பணங்களின் கடன் கலவை பகுப்பாய்வு - கைத்தொழில் வாரியாக



கடன் மற்றும் முற்பணங்களின் கடன் கலவை பகுப்பாய்வு - பொருள் வாரியாக

வகை	2022 மில். ரூ	2021 மில். ரூ
அடகு	**42,234**	20,174
பணியாளர் கடன்கள்	**5,501**	4,615
குத்தகை	**1,398**	969
குறுகியகால	**13,717**	9,989
நீண்டகால	**152,523**	153,292
மொத்தம்	**215.373**	189,040

கடன் மற்றும் முற்பணங்களின் கடன் கலவை பகுப்பாய்வு - பொருள் வாரியாக



கடன் மற்றும் முற்பணங்களின் கடன் கலவை பகுப்பாய்வு - கைத்தொழில் வாரியாக

வகை	2022 மில். ரூ	2021 மில். ரூ
விவசாயம் மற்றும் மீன்பிடி	**77,426**	51,315
உற்பத்தி	**30,675**	28,605
குத்தகை	**1,382**	969
போக்குவரத்து	**78**	78
கட்டட நிர்மாணம்/ வீடமைப்பு	**19,646**	24,484
வர்த்தகர்கள்	**30,800**	31,526
நுகர்வுகள்/ எதிர் வைப்பு/ பணியாட்கள்/ உல்லாசப் பிரயாணம்	**55,368**	52,062
மொத்தம்	**215,373**	189,040

அறவீடுகள்


2022ஆம் ஆண்டின் போது, 2022 ஆம் ஆண்டின் இறுதியில் சுமார் 8.46% ஆக இருந்த மொத்த கடன் கலவையில் வங்கியின் செயற்பாடற்ற கடன் கலவையை முகாமைத்துவம் செய்வதற்கு வங்கி விசேட கவனம் செலுத்தியது.

இத்தகைய விசேட முயற்சிகள் காரணமாக, பொருளாதார நெருக்கடிகளினால் எமது வாடிக்கையாளர்களுக்கு ஏற்பட்ட மன அழுத்தங்களையும், வர்த்தக இடர்பாடுகளையும் வங்கி சமாளிக்கக்கூடியதாக இருந்தது. இவ்வகையில், வங்கி அதன் கடன் கலவையில் ஓரளவு வளர்ச்சியை அடைந்துள்ள அதேவேளை, 2022 டிசம்பர் 31 ஆம் திகதி செயற்பாடற்ற கடனை 8.46% ஆக பேணியது.

செயற்படா வகை	2022 மில். ரூ	2021 மில். ரூ
விசேட குறிப்பு	**2,471**	1,230
தரமற்ற	**1,501**	3,367
ஐயத்திற்கு இடமான	**2,183**	2,223
நட்டமடைந்த	**11,662**	9,501
மொத்த செயற்பாடற்ற	**17,817**	16,322
NPL விகிதம் (%)	**8.46%**	8.71%

வைப்பு வளர்ச்சி


வங்கியின் வைப்புத் தளம் 210 பில்லியன் ரூபாய்களாக அதிகரித்தது. இது, கடந்த வருட வளர்ச்சியில் 12.01% வளர்ச்சியைப் பிரதிபலித்தது. இந்த வளர்ச்சியில் நிலையான வைப்புகள் பிரதான பங்களிப்பாளராக இருந்துள்ளதுடன், இது, 25% வளர்ச்சி கண்டு சேமிப்பு வைப்புகள், 9% ஆல் குறைந்துள்ளன.



வைப்புக்கள் கலவை

வைப்பு வகை	2022 மில். ரூ	2021 மில். ரூ
சேமிப்பு வைப்புகள்	**65,852**	72,159
நிலையான வைப்புகள்	**144,449**	115,593
மொத்தம்	**210,301**	187,752

வைப்புக்கள் கலவை பகுப்பாய்வு



கடன்களும் அறவீடுகளும்

கடனானது, மிக முக்கிய தொழிற்பாடாவதுடன், குறிக்கோள்களை நிறைவேற்றுவதில் வங்கியினால் பயன்படுத்தப்படும் சாதனமுமாகும். விவசாயம், சிறுகைத்தொழில், கடற்றொழில், விலங்கு வளர்ப்பு, வீடமைப்பு, சேவை போன்ற பொருளாதாரத்தின் துறைகளை கொண்ட முக்கிய விடயங்களைத் தூண்டுவதற்கு கடன்கள் பயன்படுத்தப்படுவதுடன், இதனூடாக, தேசிய வருமானத்தை நோக்கி இத்துறைகளால் ஆற்றப்படும் பங்களிப்புகள் மேம்படுத்தப்படுகின்றன. வங்கியின் குறிப்பிடத்தக்க அம்சங்களில் ஒன்று 1985 இல் பிரதேச கிராமிய அபிவிருத்தி வங்கிகள் உருவாகியதில் இருந்து தொடர்ந்தும் இடம்பெற்று வருகின்ற கிராமியப் பிரதேசங்களில் அதன் வலுவான பிரசன்னமாகும்.

ஆகவே, கடன் வழங்குதல் தொழிற்பாடுகள் உள்ளடங்கலாக, வங்கியின் அனைத்துச் செயற்பாடுகளிலும், வழங்கப்பட்ட குறிக்கோள்களை நிறைவேற்றுவதற்கு, வங்கி, உபாயம் ஒன்றை நிறைவேற்றியுள்ளது. இந்நோக்கில், கடன் வசதிகளின் நியமங்கள், மென் பிணை தேவைப்பாடுகள் மீதான, வசதியான சலுகைக் காலங்களுடன், சலுகை வட்டி வீதங்களை வழங்கி, வசதியாக வடிவமைக்கப்பட்ட மீள் கொடுப்பனவுத் திட்டங்கள் மூலம், தேவையான துறைகளுக்குப் பொருந்தும் விதத்தில் உருவாக்கப்பட்டுள்ளன. முகாமைத்துவம் மற்றும் சந்தைப்படுத்தல் என்பன மீதான அபிவிருத்தி, பயிற்சி, ஆலோசனை உதவி, கடனுடன் இணைந்த சேவைகள் என்பனவும், கடன் வழங்கல் இடர்நேர்வினைக் குறைப்பதற்கு உதவுவதுடன், இதனூடாக கடன் வழங்கலுக்கான பிணை உறுதியில் தங்கியிருப்பதை குறைக்கின்றது.

இதற்கு மேலதிகமாக, கடன் மற்றும் அறவீட்டுத் திணைக்களத்தின் கீழ், வங்கி, வங்கிக்காப்புறுதிப் (Bancassurance) பிரிவு என்ற பெயரில், உபாயரீதியான வியாபாரம் ஒன்றைத் தொழிற்படுத்துகின்றது. 2022 காலப்பகுதியில் வங்கி மூலம் வழங்கப்படும் கடன்கள் தொடர்பில், காப்புறுதிச் செயற்பாடுகளை வலுப்படுத்துவதன் மூலம் வங்கி தொடர்ந்தும் கட்டண வருமானத்தை ஈட்டியது.

இல	வரி காப்புறுதி நிறுவனம்	தொடக்கம் 01.01.2022 முதல் 31.12.2022 வரை	%
1	இலங்கை (ஆயுள்)	36,695.91	0.12%
2	இலங்கை (பொது)	1,199,994.89	3.80%
3	சனச (ஆயுள்)	1,036,998.60	3.28%
4	சனச (பொது)	548,757.55	1.74%
5	கூட்டுறவு	3,633,811.89	11.50%
6	செலின்கோ (ஆயுள்)	1,414,553.95	4.48%
7	செலின்கோ (பொது)	2,058,279.91	6.52%
8	அலியான்ஸ் (ஆயுள்)	933,062.48	2.95%
9	அலியான்ஸ் (பொது)	291,585.93	0.92%
10	சொப்ட்லொஜிக் (ஆயுள்)	13,795.564.69	43.68%
11	விவசாய	0.00	0.00%
12	பீப்பல்ஸ்	1,141,090.19	3.61%
13	LOLC (ஆயுள்)	3,367,549.60	10.66%
14	LOLC (பொது)	726,661.50	2.30%
15	ஜனசக்தி (ஆயுள்)	293,249.68	0.93%
16	பெயார்பெஸ்ட்	209,340.98	0.66%
17	ஆர்ப்பிகோ	896,223.50	2.84%
	மொத்தம்	31,586,637.39	100.00%

வாடிக்கையாளர் மற்றும் உறவு மீளாய்வு

மீள் நிதியிடல் மற்றும் வட்டி உதவு தொகை கடன் திட்டங்கள்

சிறிய மற்றும் நடுத்தர தொழில் முயற்சித் துறையினை மேம்படுத்துவதற்கு மிகவும் முக்கியமான மீள் நிதியிடல் திட்டங்களை தொழிற்படுத்துவதற்காக இலங்கை மத்திய வங்கி, நிதியமைச்சு, கமத்தொழில் அமைச்சு மற்றும் விசேடமாக ஆசிய அபிவிருத்தி வங்கி போன்ற பல நிறுவனங்களுடன் பல்வேறு வகையான மீள் நிதியிடல் திட்டங்கள் (கீழே குறிப்பிடப்பட்ட) இடம்பெற்றன.

சௌபாக்கிய	SMILE III RF	ஸ்வ சக்தி
SMELOC We fi	SEPI கட்டம் 11	மொறகஹகந்த
SMELoC RF	DAD	மஹவெலி சவிய
PAMP RF	க்ருஷி சக்தி	NCRCS
கப்ருக்க முதலீடு	RSPGLOC	STARR
கப்ருக்க ஜயஇசுர	SAPP	துருனு திரிய

ஆசிய அபிவிருத்தி வங்கியுடனான ஒத்துழைப்பு

SMELoC என்ற பெயரில் அமைந்த மேலதிக நிதியிடல் கட்டம் III மற்றும் பிரதேச அபிவிருத்தி வங்கிக் கருத்திட்டத்தினை வலுப்படுத்தல் என்ற ஆசிய அபிவிருத்தி வங்கியுடன் தொடர்ச்சியாக, வெற்றிகரமாக முன்னெடுக்கப்படும் இரு நிகழ்ச்சித் திட்டங்கள் காணப்படுகின்றன.

பிரதேச அபிவிருத்தி வங்கிக் கருத்திட்டத்தை வலுப்படுத்தலின் கீழ் ஆசிய அபிவிருத்தி வங்கி SMELoC மேலதிக நிதியிடல் கட்டம் III இன் வாயிலாக சிறிய மற்றும் நடுத்தர தொழில் முயற்சித்துறை கடன் வழங்கலை அதிகரிப்பதற்கு நிதியளித்தது. நோய்த் தொற்று மூலம் பாதிக்கப்பட்டிருந்த கருத்திட்டங்களுக்கும், சிறு தேயிலை உடமையாளர் அபிவிருத்திக் கருத்திட்டத்திற்கும், சிறிய மற்றும் நடுத்தர தொழில் முயற்சித்துறை அபிவிருத்திக் கருத்திட்டத்திற்கும் கொவிட்-19 அவசரகால பதிலிறுத்தல் வசதியாக மூன்று வகைளை இது இயக்குகின்றது.

சுற்றுச்சூழல் மற்றும் சமூக முகாமைத்துவக் கட்டமைப்பு (ESMS)

நிதித் திரையிடலுடன் மேலதிகமாக சுற்றுச்சூழல் மற்றும் சமூக இடர்களுக்கான திட்டங்களைத் திரையிடுவதில் அதன் உறுதிப்பாட்டை நிரூபிக்க, RDB அதன் SRDBP கடன் திட்டத்திற்கான சுற்றுச்சூழல் மற்றும் சமூக உரிய விடாமுயற்சி மதிப்பீடுகளைத் திரையிடுவதன் மூலம் சுற்றுச்சூழல் மற்றும் சமூக முகாமைத்துவக் கட்டமைப்பினை (ESMS) நவம்பர் 2019 இல் செயற்படுத்தத் தொடங்கியது. இந்த ESMS செயற்படுத்தலானது RDBயின் செயற்பாடுகள் மற்றும் அதன் தேசிய மற்றும் நிதி நிறுவனங்களின் சுற்றுச்சூழல் மற்றும் சமூக தரநிலைகள் பின்பற்றப்படுவதனை உறுதி செய்யும்.

உள்ளக வங்கித் திறனை மேம்படுத்துவதோடு, மேல் மாகாணத்தில் ஒரு முன்னோடி முயற்சியாக ESMS பயன்பாட்டை அமைத்த பிறகு, வங்கியின் மொத்த தயாரிப்புகளுக்கும் ESMS பயன்பாட்டை பயன்படுத்த RDB தயாராக உள்ளது.

விபரம்	மொத்தக் கடன் எண்ணிக்கை	மொத்தக் கடன் %	வழங்கப்பட்ட தொகை மில். ரூ	வழங்கப்பட்ட தொகையின் %
SRDBP திரண்ட வழங்கப்பட்ட தொகை	9,709	100%	8055.92	100%
முதல் தடவை பெறுநர் (முன்னர் பெற்றுக் கொள்ளாத)	232	2.38%	191.1	2.37%
பெண்கள் தலைமையிலான வணிகங்கள்	3,036	31.26%	1,334.30	16.56%
கொழும்பிற்கு வெளியில்	9,650	98.47%	7,256.80	90.08%
செயற்படு மூலதனக் கடன்கள்	66	0.68%	54.4	0.68%

வாடிக்கையாளர் மற்றும் உறவு மீளாய்வு

RDB லீசிங்

RDB லீசிங், 2022 இல் ஓரளவு வெற்றிகரமாகத் தொழிற்பட்டது. 2022.12.31 அன்றுள்ளவாறு ரூ. 1.3 பில்லியனை அடைவதில் கிளைகளின் குத்தகை சொத்துப்பட்டியலை மிகவும் வெற்றிகரமாக அதிகரிப்பதற்கான உபாயத்தினை நிறைவேற்றுவதற்கு அனைத்துக் கிளைகளும் தீவிரமாகக் கவனம் செலுத்தின.

அறவீடு

2022 ஆம் ஆண்டில், நாட்டில் காணப்பட்ட கடினமான சூழலில், செயற்படா கடன் (NPL) கலவையை நிர்வகிப்பதில் வங்கி சிறப்பு கவனம் செலுத்தியது. எமது வாடிக்கையாளர்கள் பலர் அனுபவித்த சில துரதிர்ஷ்டவசமான சூழ்நிலைகள் காரணமாக ஏற்பட்ட மன அழுத்தத்தை விடாமுயற்சியுடன் எதிர்கொண்டு, சிறப்பு முயற்சிகள் மேற்கொண்டதன் விளைவாக, டிசம்பர் 31, 2022 நிலவரப்படி செயற்படாக் கடன் விகிதத்தை 8.46% ஆக வங்கி பராமரிக்க முடிந்தது.

தகவல் தொழில்நுட்ப மீளாய்வு

தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்பத் துறையினைப் பொறுத்தவரை, 2022 ஆம் ஆண்டு எமது வங்கிக்கு ஒரு முக்கிய தருணத்தைக் ஏற்படுத்திய ஆண்டாகும். எமது தகவல் தொழிநுட்பச் சேவைகளின் வளர்ச்சியைத் தூண்டுவதற்கு மட்டுமல்லாமல், தொழில்நுட்ப முன்னேற்றங்கள் மூலம் வாடிக்கையாளர் சேவைகளை மேம்படுத்துவதற்கும் மூலோபாயத் தேர்வுகளைச் செய்ய எங்களுக்கு வழியேற்படுத்தப்பட்டது. டிஜிட்டல் வங்கி மற்றும் தொழில்நுட்ப உட்கட்டமைப்புத் துறையில் நாங்கள் மேற்கொண்ட மாற்றத்துடனான பயணத்தை ஆராய்வோமேயானால்,

டிஜிட்டல் வங்கியியல் முயற்சிகள்

இலங்கை மத்திய வங்கியின் டிஜிட்டல் வங்கிச் சாலை திட்டத்துடன் இணைந்து, “RDB QR“ கொடுப்பனவு முறை மற்றும் எந்தவொரு கையடக்கச் செயலி வழியாகவும் Just Pay கொடுப்பனவுகளை மேற்கொள்ளக்கூடிய வசதியை வெற்றிகரமாக அறிமுகப்படுத்தினோம். இவ்வசதிகள் எமது வாடிக்கையாளர்களுக்கான பரிவர்த்தனைகளை நெறிப்படுத்தியது மட்டுமல்லாமல், அதிநவீன தீர்வுகளைத் தழுவிக் கொள்வது தொடர்பான எமது உறுதிப்பாட்டையும் எடுத்துக்காட்டுகின்றன.

EMV சிப் கொண்டமைந்த ATM அட்டைகள்

2022 ஆம் ஆண்டில், நாங்கள் சுமார் 58,000 இற்கும் மேற்பட்ட புதிய EMV சிப் கொண்டமைந்த ATM அட்டைகளை நாம் விநியோகித்துள்ளோம். இது எமது மொத்தமாகச் செயற்பாட்டிலுள்ள ATM அட்டைகள் தளத்தை ஆண்டின் இறுதிக்குள் 348,548 ஆக உயர்த்தியுள்ளது. விரிவடைந்து வரும் எமது வாடிக்கையாளர் தளத்திற்கு பாதுகாப்பான மற்றும் திறமையான நிதிப் பரிவர்த்தனைகளை வழங்குவதற்கான எமது அர்ப்பணிப்பை இது அடிக்கோடிட்டுக் காட்டுகிறது.

மீள் அறவீடு முகாமைத்துவம்

நவம்பர் 2022 இல், மீள் அறவீடு முகாமைத்துவக் கட்டமைப்பினைப் பயன்படுத்தி, கடன் அறவீட்டு நடவடிக்கைகளில் குறிப்பாக கவனம் செலுத்தும் எமது முதலாவது அழைப்பு மையத்தைத் தொடங்க முடிந்தது.

இணக்கப்பாடுகள் மற்றும் பாதுகாப்பு

இணக்கப்பபாட்டுத் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்காக, நாங்கள் பணமோசடி எதிர்ப்பு (AML) மென்பொருளை அறிமுகப்படுத்தி, புதிய GOAML திட்டத்துடன் இணைந்து, பரிவர்த்தனை தொடர்பான தகவல் அறிக்கைகளுக்கான கட்டமைப்புக்களைச் செயற்படுத்தினோம். இந்த நடவடிக்கைகள் நிதிப் பாதுகாப்பின் மிக உயர்ந்த தரங்களை உறுதி செயவதுடன், எமது நிறுவனம் மற்றும் எமது மதிப்புமிக்க வாடிக்கையாளர்களைப் பாதுகாக்கின்றன.

தகவல் தொடர்பாடல் கட்டமைப்புகள் சைபர் பாதுகாப்பு

தொழில்நுட்ப முன்னேற்றங்களில் முன்னணியில் இருப்பதற்கான எமது அர்ப்பணிப்பு, புரட்சிகரமான மேம்பாடுகளுக்கு வழிவகுத்தது. எமது கிளைகளில் SD-WAN இன் வெற்றிகரமான நிறுவல் தகவல் தொடர்பாடலில் புரட்சியை ஏற்படுத்தியதுடன், கொள்ளவு திறனையும் அதிகரித்து மற்றும் செயற்றிறனை மேம்படுத்தியது. மேலும், ஒரு WEB அணுகலுக்கான Firewall ஐச் செயற்படுத்தியமையானது, எமது சைபர் பாதுகாப்பை மேம்படுத்தியதுடன், எமது அனைத்து பங்குதாரர்களுக்கும் பாதுகாப்பான மற்றும் நெகிழ்திறன் மிக்க டிஜிட்டல் சூழலை உறுதி செய்துள்ளது.

சர்வர் மெய்நிகராக்கம் (Server Virtualization)

2022 ஆம் ஆண்டில் சர்வர் மெய்நிகராக்கம் (VMware) அறிமுகப்படுத்தப்பட்டதன் மூலம், புதிய மென்பொருளைச் சோதித்து நிறுவுவதற்கான சர்வர்களை அமைப்பதற்கான நேரம், நிர்வாகச் செலவுகள் மற்றும் இடவசதி குறைக்கப்பட்டது. இந்த நடவடிக்கையானது செலவு குறைந்த அணுகுமுறையைக் குறிப்பது மட்டுமல்லாமல், எதிர்கால தொழில்நுட்பத் தேவைகளுக்கும் நம்மைத் தயார்படுத்துகிறது.

மின்னஞ்சல் சேவை விரிவாக்கம் மற்றும் கற்கை முகாமைத்துவக் கட்டமைப்பு

உள்ளகத் தொடர்புகளை மேம்படுத்துவதற்கான எமது அர்ப்பணிப்பானது, அனைத்து ஊழியர்களுக்கும் மின்னஞ்சல் வசதிகளை வழங்கும் எமது தற்போதைய மின்னஞ்சல் சேவைத்தளத்தினை மேம்படுத்துவதில் இருந்து தெளிவாக வெளிக்காட்டப்பட்டுள்ளது. மேலதிகமாக, நிறுவப்பட்ட கற்கை முகாமைத்துவக் கட்டமைப்பினைப் பயன்படுத்தி, 2022ஆம் ஆண்டு தொடர்பான தரப்படுத்தலுக்கான நிகழ்நிலைத் தேர்வுகளையும் நாம் நடத்தினோம், எமது செயன்முறைகளில் வெளிப்படைத்தன்மை மற்றும் செயற்றிறனை நாம் அதிகரித்தோம். நாங்கள் முன்னேறிச் செல்லும்போது, சிறந்து விளங்குவதற்கான எமது அசைக்க முடியாத அர்ப்பணிப்பானது உறுதியுடன் உள்ளது. எமது வாடிக்கையாளர்களின் தேவைகளை சிறப்பாகப் பூர்த்தி செய்யவும், நீங்கள் எம்மீது வைத்திருக்கும் நம்பிக்கையை நிலைநிறுத்தவும் வளர்ந்து வரும் தொழில்நுட்பங்களை நாங்கள் ஏற்றுக்கொள்கிறோம்.

2022 ஆம் ஆண்டு வெறும் தொழில்நுட்ப முன்னேற்றங்களின் ஆண்டாக மட்டும் இருக்கவில்லை என்பதுடன், புதுமை, பாதுகாப்பு மற்றும் சிறந்து விளங்குவதற்கான எமது அர்ப்பணிப்புக்கு இது ஒரு சான்றாக விளங்கும் ஆண்டாக அமைந்தது.

சந்தைப்படுத்தல் மீளாய்வு

பொருட்களும் சேவைகளும்

RDB கெகுளு - சிறுவர் சேமிப்புக் கணக்கு

RDB கெகுளு கணக்கு 14 வயதுக்குக் குறைந்த சிறுவர்களுக்காக வடிவமைக்கப்பட்ட ஒன்றாகும். RDB ஒவ்வொரு புதிய கணக்கிற்கும் ஒரு உண்டியலை வழங்குகிறது. அத்துடன், மேலும், பெருந்தொகையான பல்வேறு பரிசுகளும் வழங்கப்படுகின்றன. விசேடமாக வடிவமைக்கப்பட்ட காகிதாதிப் பொதிகள், பாடசாலைப் புத்தகப் பைகள், பரிசு வவுச்சர்கள் அத்துடன், சிறுவர்களிடையே சேமிக்கும் பழக்கத்தை உருவாக்கும் பொருட்டு RDB பாடசாலை சேமிப்பு மையங்களை நிறுவியுள்ளது. ஐந்தாம் ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சையில் குறிப்பிட்ட வருடத்தில் சிறந்த பெறுபேறுகளைப் பெறும் கணக்கினை வைத்திருக்கும் மாணவர்களுக்கு பரிசுகள் வழங்கப்படுகின்றன. மேலும், மேலே குறிப்பிடப்பட்ட பரீட்சைகளுக்காகத் தோற்றுகின்ற கணக்கு வைத்திருக்கும் மாணவர்களுக்கு கல்விக் கருத்தரங்குகளும் ஏற்பாடு செய்யப்படுகின்றன.

RDB 4டீன் பிளஸ்

RDB 14+ கணக்கானது, பதின்ம வயது சமூகம் மத்தியில் சேமிக்கும் பழகத்தை மனதில் பதியச் செய்வதற்கு 14 வயது மற்றும் அதற்கு மேற்பட்ட பதின்ம வயதினருக்காக விசேடமாக வடிவமைக்கப்பட்டுள்ளது. கணக்கின் மீதியை அதிகரித்துக் கொள்வதுடன் ஒப்பிடுகையில், மேலதிக போனஸ் வட்டியுடன் உயர்வான வட்டி வீதம் RDB 14+ கணக்கு மூலம் வழங்கப்படுகின்றது. ATM அட்டை ஒன்று வழங்கப்படுவதனால், 14 வயதுக்கு மேற்பட்ட பிள்ளைகள், அவர்களது நிதித் தேவைகளுக்கான பணத்தை மீட்டெடுப்பதற்கான வாய்ப்பினையும் பெற்றுக்கொள்கின்றனர். ATM அட்டையினைப் பயன்படுத்துவதன் மூலம் மேற்கொள்ளப்படும் ஒவ்வொரு பண மீளெடுப்பு நடவடிக்கை தொடர்பாகவும் பாதுகாவலரின் கையடக்கத் தொலைபேசிக்கு குறுந்தகவல் செய்தி அனுப்பப்படும். வீடு ஒன்றை, வாகனத்தை,

தளபாடங்களை, வியாபாரத்தை சொந்தமாக்கிக் கொள்வதற்கு, மின்சார சாதனங்களை, துணைப் பொருட்களைக் கொள்வனவு செய்வதற்கு, கல்வித் தேவைகள், வெளிநாட்டுப் பயணங்கள் போன்ற அவர்களது கனவை நனவாக்குவதற்கு இளம் சமூகத் தினர் கடன் வசதிகளையும் பெற்றுக்கொள்ளலாம்.

RDB லிய சவிய - மகளிர் சேமிப்புக் கணக்கு

இந்தக் கணக்கானது, இலங்கையிலுள்ள துணிச்சல் மிக்க பெண்களை நோக்கமாகக் கொண்டு உருவாக்கப்பட்டதாகும். வங்கியானது, நிதி வசதிகளை வழங்குவதற்கு மேலதிகமாக, சுயதொழில் மூலம் நாட்டின் பொருளாதாரத்திற்கு பங்களிப்புச் செய்கின்ற பெண்களுக்கு ஆலோசனை சார்ந்த சேவைகளையும் அளிக்கிறது. உயர் வட்டி வீதம், போனஸ் வட்டி மற்றும் போட்டி அடிப்படையிலான வட்டி வீதங்கள் மீதான முற்பணங்கள் என்பன இந்தக் கணக்கின் விசேட பண்புகளாகும். சர்வதேச மகளிர் தினத்தை அடிப்படையாகக் கொண்டு, ஒவ்வொரு வருடமும் மகளிர் முயற்சியாண்மையாளர்களுக்கு விசேட கருத்தரங்குகள், திறன் அபிவிருத்தி தொழிற் பயிற்சி நெறிகள் மற்றும் பல்வேறுபட்ட பிரதேச மற்றும் தேசிய மட்ட செயலமர்வுகளும் நடத்தப்படுகின்றன.

RDB லிய சவிய பிளஸ் - மகளிர் முதலீட்டு சேமிப்புக் கணக்கு

RDB லிய சவிய பிளஸ் முதலீட்டுக் கணக்கானது, 18 வயதுக்கு மேற்பட்ட பெண்களுக்காகவென விசேடமாக வடிவமைக்கப்பட்ட, சேமிப்புக்களைக் கட்டியெழுப்பும் திட்டமாகும். இக்கணக்கின் குறிக்கோள், பாதுகாப்பான, நடுத்தர கால முதலீட்டு வாய்ப்புடனும், விசேட கொடுகடன் திட்டங்களுடனும் பெண்களை வலுவூட்டுவதாகும். கவர்ச்சிகரமான அன்பளிப்புகளை வழங்குகின்ற ஐந்து ஆண்டு முதலீட்டுத் திட்டம் ஒன்றாக இது காணப்படுகின்றது. மேலும், நாடு பூராகவும் உள்ள "சிறந்த பெண் தொழில்முயற்சியாளர் போட்டி" நிகழ்வில் இக்கணக்கினை வைத்திருப்பவர்கள் கலந்து கொள்வதற்கும் தகைமை பெறுவர்.

RDB விக்டரி

RDB விக்டரி கணக்கானது, ஒரு விசேட சேமிப்புக் கணக்காகும். இக்கணக்கின் விசேட அம்சம் யாதெனில், பணத்தை மீளப் பெறும் போது, உயர் வட்டி வீதம் ஒன்றைப் பெற்றுக் கொள்ளக்கூடியதாக இருப்பதாகும். இந்தக் கணக்கின் ஊடாக ஒரு போனஸ் வட்டி, விசேட அனுகூலமாக வழங்கப்படுகிறது. மேலும், கணக்கு வைத்திருப்பவர்களினால் கணக்கு மீதியில்

உள்ள தொகையில் 10 மடங்கினை கடனாகப் பெறலாம்.

RDB New Life ஓய்வூதியத் திட்டம்

RDB New Life ஓய்வூதியத் திட்ட கணக்கானது உயர் வட்டி வீதம் ஒன்றைப் பெற்றுக் கொள்ளக்கூடியதாக அமைக்கப்பட்டுள்ள ஒரு கணக்காகும். இது ஒரு ஓய்வூதியத் திட்டமாக உருவாக்கப்பட்டுள்ளது. இலங்கை மத்திய வங்கியினால் மாதாந்தம் பிரசுரிக்கப்படும் 6 மாத சராசரி AWDR இன் அடிப்படையில் வட்டி விகிதம் வருடத்திற்கு இரு முறை புதுப்பிக்கப்படும். இக்கணக்கானது கணக்கு வைத்திருப்பவர் 55 அல்லது 60 வயதை அடையும் போது சிறந்த ஓய்வூதியப் பலனைப் பெற்றுக் கொடுக்கும். இத்தொகை கணக்கு வைத்திருப்பவர் இறக்கும் வரை செலுத்தப்படும். இக் கணக்கை 16 - 60 வயதுக்கு உட்பட்ட குழுவினர் ஆரம்பிக்கலாம். அத்துடன், கணக்கு வைத்திருப்பவரின் நிதிப் பாய்ச்சலுக்கு அமைவாக பணத்தை வைப்புச் செய்யலாம். கிரமமான கட்டுப்பணத்துடன் கூடிய முதலீடுகள் மூலம் கணக்கு வைத்திருப்பவரின் வாழ்காலத்தில் கணக்கைப் பெருக்கலாம். ஓய்வு பெற்ற பின்பு இந்தச் சேமிப்பின் முழுத் தொகையை அல்லது ஒரு பகுதியை கிரமமான ஓய்வூதிய வருமானத்தை உருவாக்க பயன்படுத்தப்படலாம். இந்தக் கணக்கின் மீதி மாதாந்தம் ஓய்வூதிய நலனாகப் பயன்படுத்தப்படும்.

RDB உத்தம சிரேஷ்ட பிரஜைகள் சேமிப்புக் கணக்கு

RDB வங்கி இந்த சிரேஷ்ட பிரசைகள் குழுவுக்கு சந்தையில் போட்டியான வட்டி வீதங்களை வழங்குகிறது. 55 வயதுக்கு மேற்பட்ட எந்தவொரு தனி நபரும் ரூபா 500 ஐ ஆரம்ப வைப்பாகக் கொண்டு இந்தச் சேமிப்புக் கணக்கை ஆரம்பிக்கலாம். மேலும், அவர்கள் தமது பயன்பாட்டுப் பட்டியல் கட்டணங்களை, சேவைக் கட்டணங்கள் இன்றி வழங்க சந்தர்ப்பம் அளிக்கப்பட்டுள்ளது. அவர்கள் இலவச மருத்துவப் பரிசோதனைகளைப் பெற்றுக்கொள்ள முடிவதுடன், ஓய்வூதியம் பெறுவோர் 'RDB தெட்டுசவி" கடன் வசதிகளைப் பெற உரித்துடையவர்கள்.

RDB முதலீட்டுக் கணக்கு

கடன் வசதிகளைப் பெற்றுக் கொள்கின்ற வங்கியின் வாடிக்கையாளர்களுக்காக அறிமுகப்படுத்தப்பட்ட பொது முதலீட்டுக் கணக்கு ஒன்றாகும். இந்தக் கணக்கின் கீழ் வைப்புகளுக்கு கவர்ச்சிகரமான வட்டியும், விசேட கடன் திட்டமும் இருப்பது குறிப்பிடத்தக்க அம்சங்களாகும்.

RDB ஜய நிதான வைப்புச் சான்றிதழ்கள்

RDB வங்கியினால் உருவாக்கப்பட்ட இந்தத் தயாரிப்பு, சகல பொருளாதார மட்டங்களிலும் உள்ள வாடிக்கையாளர்களைக் கவர்கிறது. இச் சான்றிதழ் முதிர்ச்சியின் போது ரூபா 5,000, ரூபா 10,000, ரூபா 25,000, ரூபா 100,000 ரூபா 500,000 ரூபா 1,000,000 முகப் பெறுமதியை வழங்குகிறது. இக்கணக்கு முதிர்வடையும் போது, பொருத்தமான வட்டியை வங்கி வழங்குவது இதன் சிறப்பம்சமாகும். RDB ஜய நிதான சான்றிதழ்களை தனிப்பட்ட வைப்புகளுக்காக மாத்திரம் தனியாக அல்லது கூட்டாக இணைந்து ஆரம்பிக்கலாம்.

RDB நிலையான வைப்புச் சான்றிதழ்கள்

RDB யின் நிலையான வைப்புகள், அதன் தனிப்பட்ட மற்றும் கூட்டுறவு வாடிக்கையாளர்களிடையே ஒரு பிரசித்தி பெற்ற முதலீடாக இனங்காணப்பட்டுள்ளது. சுனுடி யில் நிலையான வைப்புகள் 1, 2, 3 மற்றும் 6 மாதங்கள் மற்றும் 1 - 5 வருடங்கள் ஆகிய காலப்பகுதிகளுக்கு உண்டு. ஏனைய வங்கிகளுடன் ஒப்பிடுகையில், வங்கி, ஒரு கவர்ச்சிகரமான வட்டியை வழங்கி வருகிறது. ஒரு வருடம் மற்றும் அதற்கு மேற்பட்ட முதிர்வுக் காலப்பகுதிகளுடனான நிலையான வைப்புகளுக்கு விசேட வட்டி வீதங்கள் வழங்கப்படுகின்றன.

RDB MAX நிலையான வைப்பு

வங்கியின் வைப்புத் தளத்தை அதிகரிக்கும் நோக்குடன் புதிய நீண்டகால வைப்புக்களைக் கவர்வதற்கு போட்டிமிகு வட்டி வீதத்துடன் நத்தார் பண்டிகைக் காலத்தில் "RDB MAX" நிலையான வைப்பை பிரதேச அபிவிருத்தி வங்கி அறிமுகப்படுத்தியுள்ளது.

RDB தங்க நகை அடகுக் கடன்

'RDB ரண் சரண" தங்கத்திற்கு எதிராக அவசர பணத் தேவைகளை நிறைவேற்றிக் கொள்வதற்கு கொடுகடன் வசதிகளை பெறுவதற்காக வடிவமைக்கப்பட்டுள்ளது. RDB, குறைந்த வட்டி வீதத்தில் பவுண் ஒன்றுக்கு அதிகூடிய முற்பணப் பெறுமதியினை வழங்குகிறது. இவ்வசதிக்காக நெகிழ்வுமிக்க மீள் கொடுப்பனவு நியதிகளும் கிடைக்கப் பெறுகின்றன.

RDB தொரின் தொர வங்கிச் சேவை

இது, இலங்கையில் வாசல்படி வரையான வங்கிச் சேவையை அளிப்பதில் முன்னோடியாக உள்ள RDB வங்கியின் பிரதான சேவையாகும். இந்த முறைமை, கடமை உணர்ச்சியுடன் பணியாற்றும் ஒரு தொகையான சேவை வழங்குநர்களால் செயற்படுத்தப்பட்டு வருகிறது. இவர்கள் தினந்தோறும் வங்கிக் கிளையின் அதிகாரப் பிரதேசத்தினுள் உள்ள வியாபார ஸ்தலங்கள் மற்றும் வீடுகளுக்கு விஜயம் செய்வர். வீடு வீடாக நடைபெறும் இந்தச் சேவை, வைப்புகளை சேமிப்பது மாத்திரமன்றி, இலக்குகளுக்கு உட்பட்ட வாடிக்கையாளர்கள் அபிவிருத்தி நோக்கங்களுக்காக கடன்களைப் பெற்றுக் கொள்ளவும், கடன் கணக்கிற்கான சேவையைப் பெற்றுக் கொள்ளவும், தவணைக் கட்டணங்களைச் செலுத்தவும் கூடிய வாய்ப்பை அளிக்கின்றது. இதனைவிட இந்தச் சேவை ஊடாகப் பயன்பாட்டுக் கட்டணக் கொடுப்பனவுகளையும் மேற்கொள்ளலாம். இந்தப் பரிவர்த்தனைகள், இலத்திரனியல் கையடக்க சாதனங்களின் மூலம் நடைபெறுகிறது. அத்துடன், இந்தப் பரிவர்த்தனை, வங்கிக் கட்டமைப்பில் தானாகவே புதுப்பிக்கப்படும்.

RDB லீசிங்

'RDB லீசிங்" என்பது, நுண் வியாபார முயற்சிகள், சிறிய மற்றும் நடுத்தர வியாபார முயற்சிகள், தொழில்வல்லுநர்கள், பெறுமதி வாய்ந்த அதிக சொத்துக்களைக் கொண்டுள்ள தனியாட்கள், அரசாங்கம் மற்றும் தனியார்துறை பணியாட்கள் ஆகியோர் தமது வணிக மற்றும் தொழில்முறை நடவடிக்கைகளுக்காக, அவசியமான பதிவு செய்யப்பட்ட மற்றும் பதிவு செய்யப்படாத வாகனங்களைக் கொள்வனவு செய்வதற்காக உருவாக்கப்பட்ட ஒன்றாகும்.

களஞ்சியசாலை வசதிகள்

கிராமத்திலும் அண்மித்த பிரதேசங்களிலும் உள்ள விவசாயிகள், தானியங்களின் வகையினைச் சார்ந்து தமது அறுவடைகளைக் களஞ்சியப்படுத்துவதற்கு, மிகவும் குறைவான கட்டணத்தில் உபுல்தெனிய, முருங்கன், புத்தள, கிளிநொச்சி, மெதரிகிரிய, ஆகிய பிரதேசங்களில் 5 களஞ்சியசாலைகளை பிரதேச அபிவிருத்தி வங்கி முகாமை செய்து வருகிறது. இக்களஞ்சியசாலைகள் உலர்த்திகள், கொதிகலன்கள், உமி நீக்கும் இயந்திரங்கள் போன்ற நவீன உபகரணங்களுடன் வசதிபடுத்தப்பட்டுள்ளதுடன், அறுவடைகளின் தரத் தினைப் பரிசோதனை செய்வதற்கான ஆய்வுகூடம் ஒன்றினையும் கொண்டுள்ளன.

தானியங்களை சேமித்து வைப்பதற்கு பாதுகாப்பான இடத்தை வழங்குவதோடு மட்டுமல்லாமல், விவசாயிகள் தங்கள் அறுவடையை போட்டி விலையில் விற்கவும் வங்கி உதவுகிறது. குறைந்த வட்டி விகிதத்தில் கைமாற்றத்தக்க களஞ்சியசாலை பெறுகை முறையின் கீழ் சேமிக்கப்பட்ட விளைபொருட்களுக்கு எதிராக சுனுடீ நிதி உதவியை வழங்குகிறது.



RDB வங்கிக் காப்புறுதி

எம்மோடு வங்கி நடவடிக்கைகளில் ஈடுபடும் போது, எமது RDB வாடிக்கையாளர்கள் தனிப்பயனாக்கப்பட்ட காப்புறுதித் தயாரிப்புகளை அல்லது காப்புறுதி அனுகூலங்களை எமது RDB வங்கிக் காப்புறுதி அலகுகள் ஊடாக பலதரப்பட்ட காப்புறுதி நிறுவனங்களிடம் இருந்து பெற்றுக்கொள்ளலாம்.



RDB ATMகள் மற்றும் CDMகள்

LankaPay இலச்சினையினைக் கொண்ட எந்தவொரு பண மீளெடுப்பு இயந்திரங்கள் ஊடாகவும் RDB ATM அட்டையினைப் பயன்படுத்தி, தமது கணக்குகளில் இருந்து பணத்தை மீளெடுக்கலாம். பிரதேச அபிவிருத்தி வங்கியின் பெரும்பாலான வாடிக்கையாளர்கள், கிராமியப் பிரதேசங்களைச் சார்ந்தவர்களாகவும், ஓரளவு நகர் தொழில் முயற்சியாளர்களாகவும் இருப்பதனால், இப் பணமீளெடுப்பு இயந்திர வசதி மிகுந்த சௌகரியத்தையும், பாதுகாப்பையும் வழங்குமென எதிர்பார்க்கப்படுவதுடன், தற்போது வங்கி நாடு முழுவதும் 51 பண மீளெடுப்பு இயந்திரங்களை நிறுவியுள்ளது. இதற்கு மேலதிகமாக, 2018 இல் பண வைப்பு இயந்திர வலையமைப்பை (CDM) வங்கி அறிமுகப்படுத்தியது. எமது வாடிக்கையாளர்களின் வசதி கருதி, வேலைப்பழு கூடிய பல நகரங்களில் இவை அறிமுகப்படுத்தப்பட்டன. மேலும், முறையான வங்கிச் சேவைகள் இல்லாத பதவிபராக்கிரமபுர, வெலி-ஓயா ஆகிய இடங்களில் இரண்டு தன்னியக்க வங்கி நிலையங்களும் அமைக்கப்பட்டுள்ளன.

நடமாடும் வங்கிப் பிரிவு

நடமாடும் வங்கிப் பிரிவு, RDB வங்கியினால் வாடிக்கையாளர்களுக்கு தேவையான அடிப்படை நேரடிக் கொடுக்கல் வாங்கல்களை மேற்கொள்வதற்காக அறிமுகப்படுத்தப்பட்ட ஒன்றாகும்.

பண வைப்புகள், பணம் மீளப் பெறல்கள், புதிய கணக்குகளைத் திறத்தல், பயன்பாட்டுக் கட்டணங்களைச் செலுத்துதல், வெளிநாட்டு பணக் கொடுப்பனவுகளை மேற்கொள்ளுதல் ஆகியவற்றை எளிதாக்குகின்ற ஒரு உள்ளமைக்கப்பட்ட கரும பீடம் ஒன்றைக் கொண்டுள்ளது. இந்தப் பிரிவு அனர்த்த மீட்பு நடமாடும் பிரிவாகவும் செயற்படுகிறது.



SEILAMA.LK

எமது தொழில்முனைவோரின் தயாரிப்புகள் மற்றும் சேவைகளை நிகழ்நிலையினூடாக விளம்பரப்படுத்தும் நோக்கத்துடன் seilama.lk என்ற இணையதளம் ஆரம்பிக்கப்பட்டது. எங்கள் வணிக சமூகம் மற்றும் வாடிக்கையாளர்களுக்கு QR பரிவர்த்தனைகளை அறிமுகப்படுத்துவதற்கு இணையாக seilama.lk இன் திறனை அதிகரிப்பதன் மூலம் விளம்பர நடவடிக்கைகள் துரிதப்படுத்தப்பட்டுள்ளன.

ஒவ்வொரு மாவட்டத்தையும் உள்ளடக்கிய தொழில்முனைவோரின் தகவல்களை அடையாளம் காணுதல், சேகரித்தல் மற்றும் உள்ளிடுதல் ஆகியவை ளநடையஅய.டம இன் தொடக்கத்தில் செய்யப்பட்டன. எதிர்காலத்தில், தொழில்முனைவோர் மற்றும் கொள்வனவாளர்களுக்கு கொள்வனவு மற்றும் விற்பனை வாய்ப்புகளை வழங்கவும் RDB திட்டமிட்டுள்ளது.

சந்தைப்படுத்தல் மீளாய்வு

புதிய தயாரிப்புகளின் மேம்பாடு

RDB MAX

RDBMax 100 நாட்கள், RDBMax 6 மாதங்கள், RDBMax 10 மாதங்கள் என கவர்ச்சிகரமான வட்டி வீதங்களை RDBMax நிலையான வைப்புக்களுக்கு வங்கி அறிமுகப்படுத்தி உள்ளது.

RDB மிதுரு ப்ளஸ் கடனுதவித் திட்டம்

புறக்கோட்டை பிரதேசத்திலுள்ள வணிகர்களுக்காக பிரதேச அபிவிருத்தி வங்கியானது RDB Mithuru Plus கடனுதவித் திட்டத்தினை அறிமுகப்படுத்தியுள்ளது. இக் கடனுதவித் திட்டமானது புறக்கோட்டை சந்தையிலுள்ள வணிகர்களுக்கான நிதியுதவியை குறைந்த வட்டி விகிதங்களின் கீழ் வழங்குவதுடன், அவர்களின் தேவைக்கேற்ப நாளாந்தம், வாராந்தம் அல்லது மாதந்த அடிப்படையில் கடனை மீளச்செலுத்தி முடிக்கவும் இயலும்.

சமூக மற்றும் சுற்றாடல் மீளாய்வு

நிறுவன சமூகப் பொறுப்பு - CSR

மரக்கன்றுகள் விநியோகம்

நாட்டின் 74வது சுதந்திர தினத்தைக் கொண்டாடும் வகையில், அனைத்து பிரதேச அபிவிருத்தி வங்கி கிளைகளும் பிப்ரவரி 3, 2022ஆம் திகதியன்று தங்கள் மதிப்புமிக்க வாடிக்கையாளர்களுக்காக தத்தமது கிளை வளாகத்தில் மரக்கன்றுகளை விநியோகித்தன.



புத்தாண்டு வர்த்தக கண்காட்சிகள்

தொழில்முனைவேருக்கான சந்தையைக் கண்டறிந்து அவர்களின் தயாரிப்புகள் மற்றும் சேவைகளுக்கான விற்பனையினை அதிகரித்துக் கொள்வதில் உதவுவதற்காக, பிரதேச அபிவிருத்தி வங்கி ஒவ்வொரு மாகாணத்திலும் உள்ள முக்கிய நகரங்களில் வர்த்தக கண்காட்சிகளை நடத்தியது.

கல்லடி பழைய பாலம் - மட்டக்களப்பு



போகம்பரை கலாச்சார வளாகம் - கண்டி



எம்பிலிபிட்டிய புதிய விளையாட்டுத்திடல்



அம்பலாந்தோட்டை பிரதேச சபை விளையாட்டுத்திடல்



சமூக மற்றும் சுற்றாடல் மீளாய்வு

திரி அபிமானி நிகழ்ச்சித் திட்டம்

இலங்கையில் பெண் தொழில்முனைவோரின் முயற்சிகள் மற்றும் அர்ப்பணிப்புகளை மேம்படுத்துவதற்காக, திரி அபிமானி 2022 திட்டம் மார்ச் 8, 2022 அன்று தொடங்கப்பட்டது.


இந்நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ், வழிகாட்டுதல், ஆலோசனை சேவைகள் மற்றும் பயிற்சி மூலம் வணிக உலகிலும், தமது தனிப்பட்ட வாழ்க்கையிலும் அவர்களின் அபிலாஷைகளை அடைய பெண் தொழில்முனைவோரை பிரதேச அபிவிருத்தி வங்கி வழிநடத்துகிறது.

RDB "புஸ்தக சத்காரய" நிகழ்ச்சித்திட்டம்



பிரதேச அபிவிருத்தி வங்கி குடும்பம் மற்றும் அதன் மதிப்புமிக்க வாடிக்கையாளர்களின் உதவியுடன், பள்ளி மாணவர்களிடையே வாசிப்பு பழக்கத்தினை ஊக்குவித்திடுவதற்காக தொலைதூரப் பகுதிகளில் உள்ள பாடசாலைகளின் நூலகங்களுக்கு புத்தகங்களை நன்கொடையாக வழங்கும் "புஸ்தக சத்காரய"எனும் திட்டத்தை பிரதேச அபிவிருத்தி வங்கி அறிமுகப்படுத்தியது.

"வெனிலா பயிர்ச்செய்கையாளர்களுக்கான வழிகாட்டுதல்கள்" நூல் வெளியீடு



வெனிலா பயிர்ச்செய்கையில் ஈடுபட்டுள்ள விவசாயிகளின் அறிவை மேம்படுத்துவதற்காக "வெனிலா பயிர்ச்செய்கையாளர்களுக்கான வழிகாட்டுதல்கள" என்ற நூலை பிரதேச அபிவிருத்தி வங்கி வெளியிட்டது.

இந்த நூலை வெல்லவாய, நிகபொத்த பகுதியைச் சேர்ந்த திரு. ஜெயந்த டி சில்வா எழுதியுள்ளார்.

எரிபொருளுக்கான QR அனுமதிப்பத்திரம்



எரிபொருள் நிலையங்களில் இருந்து எரிபொருளைப் பெற்றுக் கொள்வதற்காகவென தெரிவு செய்யப்பட்ட சில கிளைகள் சமூகச் சேவை நிகழ்ச்சித் திட்டமாக இலவசமாக QR அனுமதிப்பத்திரத்தினை விநியோகிக்க நடவடிக்கை மேற்கொண்டன.

ஊழியர்கள் மீளாய்வு

கண்ணோட்டம்

தேசத்தின் அபிவிருத்தி வங்கியாகத் திகழ்தல் என்ற வங்கியின் தொலைநோக்குப் பார்வையுடன் இணைந்து செயல்படுவதன் மூலம், நிறுவனத்தின் சிறப்பிற்கு பங்களிக்கும் மிகவும் உந்துதல் பெற்ற விதிவிலக்கான ஆற்றல்மிக்க மற்றும் அதிகாரம் பெற்ற பணியாளர்களை உருவாக்குவதனை மனிதவளதட நோக்கமாகக் கொண்டுள்ளது.

சிறந்த மனிதவள கருவிகள், சரியான கொள்கைகள், நடைமுறைகள் மற்றும் செயல்முறைகள் மூலம் திறமையை கையகப்படுத்தல், மேம்படுத்தல் மற்றும் ஈடுபாட்டில் மூலோபாய ரீதியாக ஒருங்கிணைந்த அணுகுமுறையைப் பயன்படுத்துவதன் மூலம், சிறந்த மனித மூலதனத்தின் தேவையையும் ஊழியர்களின் நல்வாழ்வையும் பூர்த்தி செய்வதை உறுதி செய்வதில் மனிதவளத்துறை தொடர்ந்து உறுதிபூண்டுள்ளது. இது ஊழியர்கள் முக்கிய பங்கு வகிக்கவும், நிறுவன நோக்கங்களுக்கு மதிப்பு சேர்க்கவும், இறுதியில் அவர்களின் தொழில் விருப்பங்களை பூர்த்தி செய்யவும் ஊக்குவிக்கிறது.

2018 தொடக்கம் 2022 வரையான மனித வளம் தொடர்பான முக்கிய நிதி விபரங்கள்

	2018	2019	2020	2021	2022
மொத்த செயற்பாட்டு இலாபம் (மில். ரூ)	3,606	2,960	3,164	1,926	**1,998**
மொத்த வருமானம் (மில். ரூ)	26,071	27,508	24,210	24,492	**36,203**
கடன் கலவை (மில். ரூ)	137,770	144,694	164,771	189,039	**215,373**
வைப்பு கடன் கலவை (மில். ரூ)	141,560	149,600	169,264	187,752	**210,301**
மொத்த ஆட்களின் எண்ணிக்கை (FTE)	2,345	2,735	2,660	2,600	**2,531**
ஒரு FTE க்கான வருவாய் (மில். ரூ)	11.02	10.06	9.10	9.42	**14.30**
ஒரு FTE க்கான இலாபம் (மில். ரூ)	1.43	1.08	1.19	0.74	**0.79**
ஒரு FTE க்கான வைப்பு கலவை	58.82	52.90	61.94	72.21	**83.09**
ஒரு FTE க்கான கடன் கலவை	57.78	54.70	63.63	72.71	**85.09**

(FTE = முழு நேர ஊழியர்)

மனித சக்தி வலு

வங்கியின் மனித சக்தி, நிரந்தர மற்றும் ஒப்பந்த அடிப்படையில் பணியமர்த்தப்படும் ஆட்களை உள்ளடக்கியுள்ளது. வீடு வீடாகச் சென்று களப் பணியில் ஈடுபடும் உதவியாளர்கள் (இவர்கள் நிரந்தர ஒப்பந்த காலப்பகுதிக்கு மாற்றப்பட்டிருக்கிறார்கள்) மற்றும் கிராமியத் தலைவர் (நுண் நிதி முறைமையுடன் தொடர்புபட்டவர்கள்) நீங்கலாக, ஏனையோர் வங்கிக்கு மனித சக்தி சேவையை வழங்குகின்றனர். மேலும், பயிற்சி நெறியைத் தொடர தேவைப்படுத்தப்பட்டுள்ள பயிற்சியாளர்களுக்கு (6 - 12 மாதங்கள்) பல்கலைக்கழகங்கள், தொழில்நுட்பக் கல்லூரிகள், அங்கீகரிக்கப்பட்ட தொழிற்துறை நிறுவனங்கள், பல்கலைக்கழக உட்பிரவேசத்திற்கு தகுதி பெற்று, பாடசாலையில் இருந்து விலகியவர்கள் ஆகியோருக்கு பயிற்சியை வழங்குகிறது. இந்த வகையைச் சார்ந்தவர்கள் வங்கியின் செயற்றிறனுக்கு பெறுமதியான உள்ளீடுகளை வழங்குகின்றனர்.

கடந்த வருடத்துடன் ஒப்பிடப்பட்ட மனித சக்தி வலுவின் சாராம்சம்.

மனித சக்தி வகை	ஆட்கள் எண்ணிக்கை 2021	2022
நிரந்தர/ ஒப்பந்த அடிப்படையிலான ஊழியர்கள்	2,600	**2,531**
வாசலுக்கு வாசல் களப்பணி உதவியாளர்கள்	455	**445**
கிராமியத் தலைவர்கள்	171	**216**
மொத்தம்	3,226	**3,192**

முகாமைத்துவ மட்ட அடிப்படையிலான எண்ணிக்கைகளின் பங்கீடு கீழே தரப்பட்டுள்ளது.

முகாமைத்துவ மட்டம்	ஆட்கள் எண்ணிக்கை 2021	2022
கூட்டுறவு முகாமைத்துவம்	7	**8**
சிரேஷ்ட முகாமைத்துவம்	31	**30**
நிறைவேற்று முகாமைத்துவம்	154	**127**
நிறைவேற்றுநர்கள்	923	**1073**
எழுதுவினைஞர் மற்றும் இணைந்த சேவைகள்	1356	**1176**
ஏனைய தரங்கள்	129	**117**
மொத்தம்	2600	**2531**

ஊழியர்கள் மீளாய்வு

வங்கி ஆண்கள் மற்றும் பெண்களுக்குச் சமமான தொழில் வாய்ப்புகளை வழங்குகிறது. 2022 ஆம் ஆண்டிலும் பால் நிலை சமத்துவம் தொடர்ந்தும் பேணப்பட்டுள்ளது.

பாலினம்	2021		2022	
	எண்ணிக்கை	%	எண்ணிக்கை	%
ஆண்	1447	55.65	**1409**	**55.67**
பெண்	1153	44.35	**1122**	**44.33**
மொத்தம்	2600	100.00	**2531**	**100.00**

வங்கியிலுள்ள பணியாட்களின் வயது மற்றும் அனுபவம் தொடர்பான தோற்றப்பாடு கீழ் காட்டப்பட்டுள்ளது.

வயது விபரம்

வயது வகுப்பு	எண்ணிக்கை	%
21 வருடங்களுக்குக் குறைவு	0	0
21 - 30 வருடங்கள்	250	9.88
31 - 40 வருடங்கள்	960	37.93
41 - 50 வருடங்கள்	405	16.00
51 -55 வருடங்கள்	545	21.53
55 வருடங்களுக்கு மேல்	371	14.66
மொத்தம்	2531	100.00

அனுபவத் தோற்றப்பாடு

அனுபவ வகுப்பு	எண்ணிக்கை	%
30 வருடங்களுக்கு மேல்	526	20.78
20 - 29 வருடங்கள்	484	19.12
10 - 19 வருடங்கள்	935	36.94
5 - 9 வருடங்கள்	241	9.52
5 வருடங்களுக்கு குறைவு	345	13.63
மொத்தம்	2531	100.00

தொழில் முன்னேற்றம்

வங்கி, ஊழியர்களின் மனப்பாங்கை மாற்றுவதற்கும், அறிவை விருத்தி செய்யவும், வங்கிச் செயற்பாடுகளை நோக்கிய கற்கை அனுபவங்களைப் பெற்றுக்கொள்வதற்கும், சிறந்த வாடிக்கையாளர் சேவையை வழங்குவதற்கும் பிரதேச அபிவிருத்தி வங்கி தொடர்ந்து பயிற்சி நெறிகளை வழங்கி வருகிறது. 2022 இன் போது 1358 பங்குபற்றுநர்களுக்கு 19,712 மணித்தியாலங்களுக்கான 44 நிகழ்ச்சித் திட்டங்கள் நடத்தப்பட்டன. இந்த வருடத்தில் பயிற்சி நெறிகளுக்கான மொத்த முதலீடு 2.44 மில்லியன் ரூபாய்களாகும்.

செயற்றிறன் மதிப்பீடு

இந்த ஆண்டில், ஊழியர் திருப்தியை மேம்படுத்தவும், வங்கிக்குள் அதிக அர்ப்பணிப்பை கொண்ட பணியாளர்களை உருவாக்கவும், ஊழியர் செயற்றிறன் மதிப்பீட்டு முறையை வங்கி மாற்றியமைத்துள்ளது.

இது ஒரு தனிநபரின் முக்கிய செயற்றிறன் குறிகாட்டிகளை (KPIs) அடிப்படையாகக் கொண்டு ஒரு தனிப்பட்ட செயற்றிறனை அளவிடுவதற்காக வடிவமைக்கப்பட்டுள்ளது.

மனித வளச் சபை - உப குழுக்கள்

இலங்கை மத்திய வங்கியின் வழிகாட்டுதல் மற்றும் கூட்டுறவு ஆளுகை நடைமுறைகளுக்கு அமைய, சபை மனித வளங்கள் மற்றும் ஊதியக் குழு (BHRRC) மற்றும் BNC தெரிவுக் குழு ஆகிய இரண்டு குழுக்கள் உருவாக்கப்பட்டன.

இந்த ஆண்டுக்கான சபையின் மனித வளங்கள் மற்றும் ஊதியக் குழு (BHRRC) மற்றும் சபையின் நியமனக் குழு (BNC) என்பன தலைவரான திரு. எம்.மஹிந்த சாலிய அவர்களின் தலைமையில் இடம்பெற்றன. சபையின் செயலாளர், இக்குழுக்களின் செயலாளராகப் பணியாற்றுவார். 04 தெரிவுக் குழுக் கூட்டங்களும், 06 சபை மனித வளங்கள் மற்றும் ஊதியக் குழுக் கூட்டங்களும் 2022 ஆம் ஆண்டின் போது நடைபெற்றன.

விசேட நிகழ்வுகள்

கிளை இடமாற்றம்

எஹலியகொட கிளை



உயர் மட்ட வாடிக்கையாளர் சேவையை வழங்குவதற்காக எஹலியகொட கிளை மிகவும் வசதியான இடத்திற்கு மாற்றப்பட்டது, 2022.02.17ஆம் திகதியன்று தலைவரான திரு. மஹிந்த சாலிய, பொது முகாமையாளர்/ பிரதான நிறைவேற்று அதிகாரி திரு. AHMMB ஜெயசிங்க மற்றும் நிர்வாகத்தரப்பினருடன் இணைந்து சம்பிரதாயபூர்வமாக திறந்து வைத்தார்.

முந்தல் கிளை



நவீனமயப்படுத்தப்பட்ட வாடிக்கையாளர் சேவையை வழங்குவதற்காக முந்தல் கிளை மிகவும் வசதியான இடத்திற்கு மாற்றப்பட்டது, 2022.03.29ஆம் திகதியன்று தலைவரான திரு. மஹிந்த சாலிய, பொது முகாமையாளர்/ பிரதான நிறைவேற்று அதிகாரி திரு. AHMMB ஜெயசிங்க மற்றும் நிர்வாகத்தரப்பினருடன் இணைந்து சம்பிரதாயபூர்வமாக திறந்து வைத்தார்.

பதுளை கிளை



விரைவான வாடிக்கையாளர் சேவையை வழங்குவதற்காக பதுளை கிளை மிகவும் வசதியான இடத்திற்கு மாற்றப்பட்டது, 2022.03.28ஆம் திகதியன்று தலைவரான திரு. மஹிந்த சாலிய, திரு. BGW அதுல குமார, ஊவா மாகாணப் பொது முகாமையாளர் மற்றும் பணிக்குழாமினருடன் இணைந்து சம்பிரதாயபூர்வமாக திறந்து வைத்தார்.

கொடகவெல கிளை



உயர்தரத்திலான வாடிக்கையாளர் சேவையை வழங்குவதற்காக கொடகவெல கிளை மிகவும் வசதியான இடத்திற்கு மாற்றப்பட்டது, 2022.05.04ஆம் திகதியன்று சபரகமுவ மாகாணப் பொது முகாமையாளரான திரு. CS வேரகொட அவர்கள் பணிக்குழாமினருடன் இணைந்து சம்பிரதாயபூர்வமாக திறந்து வைத்தார்.

விசேட நிகழ்வுகள்

கல்கமுவ கிளை



துரிதமான வாடிக்கையாளர் சேவையை வழங்குவதற்காக கல்கமுவ கிளை மிகவும் வசதியான இடத்திற்கு மாற்றப்பட்டது, 2022.05.09ஆம் திகதியன்று வடமேல் மாகாணப் பொது முகாமையாளரான திருமதி. BRD புஷ்பாகுமாரி அவர்கள் பணிக்குழாமிருடன் இணைந்து சம்பிரதாயபூர்வமாக திறந்து வைத்தார்.

நாரம்மல கிளை



உயர்தர வாடிக்கையாளர் சேவையை வழங்குவதற்காக நாரம்மல கிளை மிகவும் வசதியான இடத்திற்கு மாற்றப்பட்டது, 2022.09.12ஆம் திகதியன்று வடமேல் மாகாணப் பொது முகாமையாளரான திருமதி. BRD புஷ்பாகுமாரி அவர்கள் பணிக்குழாமிருடன் இணைந்து சம்பிரதாயபூர்வமாக திறந்து வைத்தார்.

பம்புரன கிளை



உயர்தர வாடிக்கையாளர் சேவையை வழங்குவதற்காக பம்புரன கிளை மிகவும் வசதியான இடத்திற்கு மாற்றப்பட்டது, 2022.07.11ஆம் திகதியன்று தலைவரான திரு. மஹிந்த சாலிய, தென் மாகாணப் பொது முகாமையாளர் திரு. K. ஆரியதிலக்க மற்றும் பணிக்குழாமினருடன் இணைந்து சம்பிரதாயபூர்வமாக திறந்து வைத்தார்.

நிவித்திகலை கிளை



நவீனமயப்படுத்தப்பட்ட வாடிக்கையாளர் சேவையை வழங்குவதற்காக நிவித்திகலை கிளை மிகவும் வசதியான இடத்திற்கு மாற்றப்பட்டது, 2022.09.26ஆம் திகதியன்று பொது முகாமையாளர்/ பிரதான நிறைவேற்று அதிகாரி (பதில் கடமை) திரு. சுமேத எதிரிசூரிய, சபரகமுவ மாகாணப் பொது முகாமையாளரான திரு. CS வேரகொட அவர்கள் மற்றும் பணிக்குழாமினருடன் இணைந்து சம்பிரதாயபூர்வமாக திறந்து வைத்தார்.

விசேட நிகழ்வுகள்

வலஸ்முல்ல கிளை



துரிதமான வாடிக்கையாளர் சேவையை வழங்குவதற்காக வலஸ்முல்ல கிளை மிகவும் வசதியான இடத்திற்கு மாற்றப்பட்டது, 2022.10.25ஆம் திகதியன்று பொது முகாமையாளர்/ பிரதான நிறைவேற்று அதிகாரி (பதில் கடமை) திரு. சுமேத எதிரிசூரிய, தென் மாகாணப் பொது முகாமையாளர் திரு. K. ஆரியதிலக்க மற்றும் பணிக்குழாமினருடன் இணைந்து சம்பிரதாயபூர்வமாக திறந்து வைத்தார்.

தொடங்கொட கிளை



உயர்தர வாடிக்கையாளர் சேவையை வழங்குவதற்காக தொடங்கொட கிளை மிகவும் வசதியான இடத்திற்கு மாற்றப்பட்டது, 2022.11.28ஆம் திகதியன்று தலைவரான திரு. மஹிந்த சாலிய, பொது முகாமையாளர்/ பிரதான நிறைவேற்று அதிகாரி (பதில் கடமை) திரு. சுமேத எதிரிசூரிய, மற்றும் முகாமைத்துவ அதிகாரிகளுடன் இணைந்து சம்பிரதாயபூர்வமாக திறந்து வைத்தார்.

ஏனைய நிகழ்வுகள்

பொது முகாமையாளர்/ பிரதான நிறைவேற்று அதிகாரி நியமனம்

2022 பெப்ரவரி 01ஆம் திகதி முதல் அமுலுக்கு வரும் விதத்தில் பிரதேச அபிவிருத்தி வங்கியின் பொது முகாமையாளர்/ பிரதான நிறைவேற்று அதிகாரியாக திரு. AHMMB ஜயசிங்க அவர்கள் நியமிக்கப்பட்டார்.



தேசிய கைத்தொழிற்துறைக் கண்காட்சி 2022

பன்முகப்படுத்தப்பட்ட பொருளாதார நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ள தொழில் முனைவோர் மற்றும் நிறுவனங்களுக்கு உதவி செய்வதனை நோக்கமாகக் கொண்டு, 2022 பிப்ரவரி 3ஆம் திகதி முதல் 6ஆம் திகதி வரை கொழும்பு BMICH வளாகத்தில் இலங்கை கைத்தொழில் அபிவிருத்திச் சபையினால் ஏற்பாடு செய்யப்பட்ட தேசிய கைத்தொழிற்துறைக் கண்காட்சி 2022 இல் பிரதேச அபிவிருத்தி வங்கி பங்கேற்றது.



சர்வதேச மகளிர் தின நிகழ்ச்சி

சர்வதேச மகளிர் தின நிகழ்ச்சி, அனைத்து பிரதேச அபிவிருத்தி வங்கிக் கிளைகளிலும், அவற்றின் மகளிர் வாடிக்கையாளர்களுடன் இணைந்து கொண்டாடப்பட்டன. அதற்கமைய, பெண் தொழில் முயற்சியாளர்களை மையப்படுத்தி, நிதியியல் வசதிகளை வழங்குதல் மற்றும் பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்கள் உள்ளடங்கலாக பெண் தொழில் முயற்சியாளர்களை வலுவூட்டுவதற்கான பல்வேறு நிகழ்ச்சிகளும் இடம்பெற்றன.



முக்கிய நிகழ்வு, முகாமைத்துவம், அலுவலர்கள் மற்றும் வாடிக்கையாளர்களின் பங்குபற்றுதலுடன் 2022 மார்ச் 8 அன்று ராஜகிரியாவில் அமைந்துள்ள வங்கியியல் கற்கை நெறிகளுக்கான மத்திய நிலையத்தில் நடைபெற்றது.

"திரி அபிமானී" பெண் தொழில் முயற்சியாளர் போட்டி, 2022 இனைத் தொடங்கி வைத்தமைக்கு இணையாக குறித்த நிகழ்வில் பின்வரும் விசேட நிகழ்வுகளும் இடம்பெற்றன.

- "திரி அபிமானி 2021" நிகழ்ச்சியில் தேசியமட்ட மற்றும் மாகாண மட்ட வெற்றியாளர்களுக்கு வெகுமதிகள் வழங்கப்பட்டன.

- தொழில் முயற்சியாண்மை பற்றிய விழிப்புணர்வு நிகழ்ச்சித் திட்டம்
- பெண் தொழில் முயற்சியாளர்கள் மத்தியில் கடன் வசதிகளைப் பகிர்ந்தளித்தல்



LankPay தொழில்நுட்ப கண்டுபிடிப்பு விருதுகள் 2022 (தங்கம்)



ஆண்டின் சிறந்த LankPay அட்டை செயற்படுத்துநருக்கான தங்க விருதினை பிரதேச அபிவிருத்தி வங்கி Lanka Pay தொழில்நுட்ப கண்டுபிடிப்பு விருதுகள் 2022 இன் போது பெற்றுக் கொண்டது.

குறித்த விழாவானது 2022 மார்ச் 29ஆம் திகதி கொழும்பு ஷங்ரில்லா ஹோட்டலில் இடம்பெற்றதுடன், அதனை LankPay (Pvt) Ltd ஏற்பாடு செய்திருந்தது.

வியவசாய 2022 - வணிக மற்றும் கல்விக் கண்காட்சி



சமகால தொழில்முனைவோர் கலாச்சாரத்தை வளர்க்கும் நோக்கில், 2022 ஏப்ரல் 1ஆம் திகதி முதல் 03ஆம் திகதி வரை கொழும்பில் உள்ள BMICH வளாகத்தில் சிறு தொழில் முயற்சி அபிவிருத்திப் பிரிவினால் ஏற்பாடு செய்யப்பட்ட வியவசாய 2022 ~ வணிக மற்றும் கல்வி கண்காட்சியில் பிரதேச அபிவிருத்தி வங்கி பங்கேற்றது.

மணிக்கொரு தடவை பரிசுப் பொதி நிகழ்ச்சி



சகல பிரதேச அபிவிருத்தி வங்கி கிளைகளும் முன்னைய ஆண்டுகளைப் போலவே மணிக்கொரு தடவை பரிசுப் பொதி நிகழ்ச்சித் திட்டத்தினை நடாத்தி தமிழ் சிங்களப் புத்தாண்டு நிகழ்ச்சிகளுக்கு இணையாக 2022 ஏப்ரல் 18ஆம் திகதியன்று வெற்றியாளர்களுக்கு அன்றாட அத்தியாவசியப் பொருட்களைக் கொண்ட பரிசுப் பொதியை விநியோகித்தன.

அன்னதான நிகழ்வு - மஹமெவ்னாவ அனுராதபுரம்



முன்னைய ஆண்டுகளைப் போலவே, 2022 ஜூன் 18ஆம் திகதியன்று அனுராதபுரம், மஹாமெவ்னாவவில் பிரித் பாராயணத்தின் இறுதி நாளன்று அன்னதானம் வழங்கும் நிகழ்வை பிரதேச அபிவிருத்தி வங்கி ஏற்பாடு செய்தது.

ஏனைய நிகழ்வுகள்

சர்வதேச சிறுவர் தின நிகழ்வுகள்

பிரதேச அபிவிருத்தி வங்கியின் அனைத்து கிளைகளும் சர்வதேச சிறுவர் தினத்தினைக் கொண்டாடும் விதமாகவும் சிறுவர்களிடையே சேமிப்புப் பழக்கத்தினை ஊக்குவிக்கும் முகமாகவும் விசேட நிகழ்ச்சிகளை ஏற்பாடு செய்திருந்தன.





"சித்தம் பெஞ்சா" சித்திரப் போட்டிக்கான பரிசளிப்பு

தேசிய மட்டத்தில் நடாத்தப்பட்ட "சித்தம் பெஞ்சர" 2021 சித்திரப் போட்டியில் வெற்றியீட்டிய போட்டியாளர்களுக்கான பரிசில்கள் சர்வதேச சிறுவர் தின நிகழ்வுகளுக்கு இணையாக வழங்கிவைக்கப்பட்டன.





CIB உடன் இணைந்து "பாட்ட சித்தம்" சிறுவர் சித்திரப் போட்டி 2022

2022 சர்வதே சிறுவர் தினத்தைக் கொண்டாடும் விதமாக பிரதேச அபிவிருத்தி வங்கியானது CIB வலையமைப்புடன் கைகோர்த்து அவர்களது கிளைகளில் பாட்ட சித்தம் சித்திரப் போட்டியை சிறுவர்கள் மற்றும் அவர்களது பெற்றோரின் பங்குபற்றுதலுடன் நடாத்தியது.





இலங்கை புத்தாக்குநர் ஆணைக்குழுவுடன் புரிந்துணர்வு உடன்படிக்கையில் கைச்சாத்து

புதிய கண்டுபிடிப்பாளர்களுக்கான நிதியுதவிகளை வழங்கி அவர்கள் தேசிய மற்றும் சர்வதேச சந்தைக்கான அணுகலைப் பெற்றுக் கொள்வதற்காகவும் அவர்களுடைய கண்டுபிடிப்புக்களை மேம்படுத்திக் கொள்வதற்கும் உதவும் பொருட்டு பிரதேச அபிவிருத்தி வங்கியானது இலங்கை புத்தாக்குநர் ஆணைக்குழுவுடன் புரிந்துணர்வு உடன்படிக்கையில் கைச்சாத்திட்டுள்ளது.



இடர் முகாமைத்துவம்

சவால்கள் நிறைந்த மற்றொரு வருடம்

ஏப்ரல் 2019 இல் இடம்பெற்ற உயிர்த்த ஞாயிறு தாக்குதல் மற்றும் மார்ச் 2020 இல் பல அலைகளில் பரவிய கொவிட் 19 தொற்றுநோயின் நீண்டகால விளைவுகளால் இலங்கையின் பொருளாதாரம் தொடர்ந்தும் பாதிக்கப்பட்டது. கொவிட் தொற்று நோயில் இருந்து மீட்சிக்குப் பின் நாட்டின் பொருளாதாரம் ஓரளவு மீட்சிப் பாதையில் சென்றாலும் கூட இறக்குமதிப் பொருட்களுக்குச் செலுத்த வெளிநாட்டு இருப்புக்கள் தீர்ந்து போனதாலும், நாட்டின் வெளிநாட்டுக் கடனைத் திருப்பிச் செலுத்தத் தவறியதாலும் 2022ஆம் ஆண்டில் பொருளாதாரம் கடுமையான பின்னடைவையும் அதிகரித்த நிச்சயமற்ற தன்மையையும் சந்தித்தது. இலங்கை தொடர்ந்தும் அதன் கடன் வழங்குநர்களுடன் கடன்கள் தொடர்பான பேச்சுவார்த்தைகளில் ஈடுபட்டுள்ளது. 2022 ஆம் ஆண்டில், இலங்கை அதன் மிக மோசமான பொருளாதார மற்றும் அரசியல் நெருக்கடியை எதிர்கொண்டது. அரசியல் ஸ்திரமின்மை, அதிகரித்து வரும் பணவீக்கம், அடிப்படைப் பொருட்களின் பற்றாக்குறை காரணமாக, நாடு பொருளாதார நெருக்கடியால் கடுமையாகப் பாதிக்கப்பட்டது. நாட்டின் நிலையற்ற அரசியல் சூழல் மற்றும் நிதி, உள்நாட்டு மற்றும் நிதித் துறைகளில் அதிகரித்த ஏற்றத்தாழ்வுகள் காரணமாக இலங்கையின் பொருளாதாரக் கண்ணோட்டத்தில் குறிப்பிடத்தக்க நிச்சயமற்ற தன்மை நிலவியது. வரலாற்றில் வேறு எந்த நேரத்தையும் போலல்லாமல், இந்த நெருக்கடி சமூகத்தின் ஒட்டுமொத்த மக்களையும் பாதித்ததுடன் வறிய மக்களை மேலும் கீழே இழுத்துவிட்டது. இந்தப் பொருளாதார, நிதி மற்றும் அரசியல் நெருக்கடி நாட்டின் நிதித் துறையில் எதிர்மறையான தாக்கத்தை ஏற்படுத்தியது.

நமது பொருளாதாரத்தின் முதுகெழும்பாகத் திகழ்வது வங்கித் துறையாகும். இடர் முகாமைத்துவக் கண்ணோட்டத்தில் நோக்கும் போது வங்கியானது பணப்புழக்க அபாயத்துடன் தொடர்புடைய ஆபத்து, வட்டி விகித அபாயம், அந்நியச் செலாவணி பற்றாக்குறையால் ஏற்படும் அந்நியச் செலாவணி அபாயம் உள்ளிட்ட சவால்களை எதிர்கொண்டுள்ளது. நாட்டின் நிதித் துறைக்கு ஏற்படும் ஆபத்தைக் குறைப்பதற்காக, மத்திய வங்கியானது அதன் கொள்கை விகிதங்களை அதிகரித்து மேலதிக வழிகாட்டுதல்கள், ஒழுங்குமுறைகளை அமுல்படுத்தியது. நிலையற்ற செயற்பாட்டு சூழல் காரணமாக, வங்கியானது இடர் முகாமைத்துவம் தொடர்பில் முன்னெச்சரிக்கை அணுகுமுறைகளை செயல்படுத்தியுள்ளது.

வங்கியின் அன்றாட நடவடிக்கைகளில் ஏற்படும் பொருளாதார நெருக்கடிகளின் தாக்கத்தை குறைக்கவும், குறைந்தபட்ச இடையூறுகளுடன் வாடிக்கையாளருக்கு தொடர்ந்து சேவை செய்யவும், அதன் செயற்பாடுகளின் தரம், சொத்துக்களின் தரம், நம்பகத்தன்மையைப் பராமரிக்கவும் வங்கி சரியான நேரத்தில் நடவடிக்கைகளை எடுத்துள்ளது.

சபையின் ஒருங்கிணைந்த இடர்நேர்வுக் குழு மற்றும் ஆபத்தை நிர்வகிக்க தனது குழுக்களுடன் நெருக்கமாகப் பணியாற்றும் அனுபவம் வாய்ந்த உதவி பொது முகாமையாளரின் (இடர் முகாமைத்துவம்) ஆகியோரின் உதவியுடன், குறிப்பிடத்தக்க செயற்பாட்டு மற்றும் நிதி முடிவுகளுக்கான ஆபத்து மற்றும் வெகுமதியை சமநிலைப்படுத்த நவீன மற்றும் திறமையான இடர் முகாமைத்துவ நடைமுறைகள் மற்றும் நடவடிக்கைகளை நாம் உருவாக்கியுள்ளோம். பயனுள்ள இடர் முகாமைத்துவச் செயன்முறையானது, வங்கி தனக்கு ஏற்படும் எதிர்பாராத ஆபத்தை நிர்வகிக்கவும், குறைக்கவும் சிறந்த முடிவுகளை எடுக்கவும், அதன் மூலோபாய மற்றும் செயற்பாட்டு நோக்கங்களை மேம்படுத்துவதன் மூலம் நிலையான வளர்ச்சியை அடையவும் உதவுகிறது. தற்போதைய பொருளாதார நெருக்கடிகள், அரசாங்க வரிக் கொள்கைகள் மற்றும் மத்திய வங்கி வழிகாட்டுதல்கள் தொடர்பாக முக்கிய கவனமும் செலுத்தப்படுகின்றது.

இடர் முகாமைத்துவப் பிரிவு என்ற விதத்தில், ஆபத்து குறித்து பல்வேறு வழிகளில் அடையாளம் காணவும், இடர்நேர்வுகளைக் குறைப்பதற்கான பரிந்துரைகளை மதிப்பிடவும், பிரகாசமான எதிர்காலத்திற்கான திட்டத்தைத் தீட்டவும் எமக்கு இயலுகை கிட்டியுள்ளது.

வங்கியின் இடர் முகாமைத்துவக் கட்டமைப்பு


வங்கியின் அபாயங்களைக் கண்காணித்து நிர்வகிப்பதற்கான ஒருங்கிணைந்த இடர் முகாமைத்துவ நுட்பங்களை உருவாக்குவதற்கும், வங்கி முகங்கொடுக்கும் பல்வேறு அபாயங்களைச் சமாளிக்கப் போதுமான மூலதனம் பராமரிக்கப்படுவதை உறுதி செய்வதற்கும் வங்கி புதுப்பிக்கப்பட்ட இடர் முகாமைத்துவக் கட்டமைப்பை நிறுவியுள்ளது.

- ஏற்றுக்கொள்ளப்பட்ட இடர்கள், வங்கியின் இடர் தேவைப்பாடு மற்றும் இடர் முகாமைத்துவத் தோற்றப்பாட்டிற்குள் இருப்பதை உறுதிப்படுத்தல்.
- நிறுவனம் மற்றும் இடர் முகாமைத்துவக் கட்டமைப்பின் அமுல்படுத்துகையை சுயாதீனமாகக் கண்காணிப்புச் செய்வதன் ஊடாக உயர் இடர் மட்டங்களின் விழிப்புணர்வை எளிதாக்குதல்.
- முகாமைத்துவத்திற்காக தேவையான நிறுவனக் கட்டமைப்பைத் தாபித்தலும், உயர் மட்டத்திலான வினைத்திறனான இடர் தீர்மானங்களை உந்துகின்ற இடர்களுக்கு அடிப்படையான பெறுமதிகள், நம்பிக்கைகள், மனப்பாங்குகள் என்பவற்றை மேற்பார்வை செய்தல்.
- இடர் தேவைப்பாடு மற்றும் இடர் சகிப்பு மட்டங்கள் தொடர்பில் விரும்பத்தக்க இடர் தோற்றப்பாட்டை வரையறை செய்தல்.
- இடர்களை ஏற்றுக்கொள்ளல், கைமாற்றுதல்,


இடர் முகாமைத்துவம்

குறைத்தல் மற்றும் தணித்தல் ஆகிய தீர்மானங்கள் தொடர்பில் தொழிற்பாட்டுப் பொறுப்புடைமையைத் தாபித்தலும், அவ்வாறு தாபிப்பதற்கான சிறந்த வழிவகைகளைப் பரிந்துரை செய்தலும்.

- தொடர்ந்து செல்லும் அடிப்படையில் அங்கீகரிக்கப்பட்ட இடர் தேவைப்பாட்டிற்கு எதிராக இடர் தோற்றப்பாட்டை மதிப்பீடு செய்தல்.
- உன்னிப்பான கண்காணிப்பு, உள்ளகக் கட்டுப்பாடுகளைப் பின்தொடர்தல், எஞ்சிய இடர்களின் அழுத்தப்பரீட்சை என்பவற்றுக்கு அவதானம் வழங்கி, அனுமானிக்கப்பட்ட இடர் வெளிப்பாடுகளில் இருந்து தோன்றக்கூடிய சாத்தியமான நட்டங்களை அளவிடுதல்.
- ஒப்பந்தக் கடப்பாடுகளை மதிப்பதற்கும், எதிர்பாராத நட்டங்களைச் சந்திப்பதற்கும், வங்கி, போதுமான அளவு திரவத்தன்மை மற்றும் மூலதனத்தைக் கொண்டிருக்கின்றது என்பதை உறுதிப்படுத்துவதற்கு, காலாந்தர அடிப்படையில் அழுத்தப் பரீட்சையை நடத்துதல்.
- குறிப்பிட்ட கடன் முன்மொழிவுகளின் ஒட்டுமொத்த ஆபத்து சூழ்நிலையை மதிப்பீடு செய்தல், அடையாளம் காணுதல் மற்றும் பரிந்துரை செய்தல்.




இடர் முகாமைத்துவத்திற்கான அணுகுமுறை



இடர் ஆளுகை

வங்கியானது இடர் முகாமைத்துவ நடைமுறைகள் உயர் தரமான ஆளுகையைப் பிரதிபலிக்கின்றன என்பதை உறுதிப்படுத்த உறுதிபூண்டுள்ளது. இடர் முகாமைத்துவக் கொள்கைகள், செயன்முறைகள், குழுக்கள் மற்றும் ஒதுக்கப்பட்ட அதிகார நிலைகள் மூலம், பிரதேச அபிவிருத்தி வங்கியின் இடர் ஆளுகை கட்டமைப்பானது பணிப்பாளர் சபை முதல் கிளை மட்டத்திற்கும் செல்கின்றது. வங்கியின் மொத்த ஆபத்தைக் கட்டுப்படுத்தும் பொறுப்பும் இறுதியில் பிரதேச அபிவிருத்தி வங்கி பணிப்பாளர் சபைக்கே உள்ளது. சபை ஒருங்கிணைக்கப்பட்ட இடர் முகாமைத்துவக் குழு (BIRMC), சபை மனிதவளங்கள் மற்றும் ஊதியக் குழு (BHRRC), சபை தகவல் தொழில்நுட்பக் குழு மற்றும் சபை கணக்காய்வுக் குழு (BAC) ஆகியவை வங்கியின் ஒட்டுமொத்த இடர் முகாமைத்துவத்தினை மேற்பார்வையிட சபைக்கு ஆதரவளிப்பதுடன், வங்கியின் வணிக வரிசையில் உள்ள சுயாதீனமான நபரான தலைமை இடர் அதிகாரி (CRO) அனைத்து வணிக நிலைகளின் அன்றாட செயற்பாடுகள் குறித்தும் சபைக்கு தொடர்ந்து அறிக்கைகளை வழங்குகிறார்.

பிரதான இடர்நேர்வு அதிகாரி (CRO) என்பவர் வங்கியின் ஒட்டுமொத்த இடர் முகாமைத்துவம் மற்றும் இடர் முகாமைத்துவ நுட்பங்கள் குறித்து பணிப்பாளர்கள் சபை (BOD) மற்றும் IRMCக்கு உதவும் பொறுப்பைக் கொண்ட ஒரு சுயாதீன நபராவார். வட்டி விகிதம் மற்றும் சந்தை இடர்நேர்வு, கடன் இடர்நேர்வு, செயற்பாட்டு இடர்நேர்வு, சைபர் பாதுகாப்பு இடர்நேர்வு, வெளிநாட்டு நாணய இடர்நேர்வு மற்றும் திரவத்தன்மை இடர்நேர்வு ஆகியவை பிரதான இடர்நேர்வு அதிகாரி (CRO) தலைமையிலான இடர் முகாமைத்துவப் பிரிவின் (RMD) தனித்துவமான ஆறு இடர்முகாமைத்துவச் செயற்பாடுகளாகும்.



சபை மட்டத்திலான இடர் முகாமைத்துவக் குழுக்கள்

- **சபை ஒருங்கிணைக்கப்பட்ட இடர் முகாமைத்துவக் குழுவானது (BIRMC)** நிறைவேற்றுத் தரமற்ற பணிப்பாளர் ஒருவரினால் தலைமை தாங்கப்படுவதுடன், வங்கியின் இடர்முகாமைத்துவக் கட்டமைப்பின் முடிவுகளை எடுப்பதில் உதவியளிக்கப்படுகின்றது. வங்கியின் ஒட்டுமொத்த இடர்நேர்வு சுயவிவரத்தில் பரிந்துரைகளை வழங்கிய குழு, வங்கியின் இடர் முகாமைத்துவக் கொள்கைகள், நடைமுறைகள் மற்றும் உள் மூலதன போதுமான தன்மை மதிப்பீட்டு செயன்முறை (ICAAP) ஆகியவற்றை பரிந்துரைக்கின்றது. கொள்கை நடைமுறைகள் மற்றும் உள் மூலதன போதுமான தன்மை மதிப்பீட்டு செயன்முறை (ICAAP) போன்றவை பிரதான இடர்நேர்வு அதிகாரி (CRO) மற்றும் அவரது பிரிவினால் தயாரிக்கப்பட்டு, மதிப்பாய்வு செய்யப்பட்டு ஒருங்கிணைக்கப்பட்ட இடர் முகாமைத்துவக் குழுவிற்கு (IRMC) வழங்கப்படுகின்றன.
- **சபை கணக்காய்வுக் குழுவானது (BAC)** பிரதேச அபிவிருத்தி வங்கியின் பணிப்பாளர் சபையின் சார்பாக, சபை கணக்காய்வுக் குழு (BAC), வங்கியின் உள்ளகக் கட்டுப்பாடு மற்றும் ஒழுங்குமுறைகள் தொடர்பான இணக்கப்பாட்டை ஆராய்கிறது. வங்கியின் உள்ளக கணக்காய்வின் செயற்றிறன், துல்லியம் மற்றும் சுதந்திரத்தையும் இந்தக் குழு மதிப்பிடுகிறது.
- **சபை மனிதவளங்கள் மற்றும் ஊதியக் குழு (BHRRC)** வங்கியின் பணிப்பாளர்கள், பிரதான நிறைவேற்று அதிகாரி (CEO) மற்றும் முக்கிய முகாமைத்துவ அதிகாரிகள் தொடர்பான ஊதியக் கொள்கையை (சம்பளம், கொடுப்பனவுகள் மற்றும் பிற நிதி கொடுப்பனவுகள்) இந்தக் குழு தீர்மானிக்கும். மேலும், பணிப்பாளர்கள், பிரதான நிறைவேற்று அதிகாரி (CEO) மற்றும் முக்கிய முகாமைத்துவ அதிகாரிகளுக்கான இலக்குகளையும் இக் குழு நிர்ணயிக்கும். நிர்ணயிக்கப்பட்ட இலக்குகள் மற்றும் இலக்குகள் தொடர்பான செயற்றிறனை அவ்வப்போது மதிப்பீடு செய்வதுடன் செயற்றிறன் அடிப்படையிலான ஊக்கத்தொகைகள், ஊதியம், சலுகைகள் மற்றும் பிற கொடுப்பனவுகளை திருத்தியமைக்க வேண்டிய அடிப்படையையும் இக்குழு தீர்மானிக்கும். பிரதான நிறைவேற்று அதிகாரி (CEO) தொடர்பான விஷயங்கள் விவாதிக்கப்படும்போது தவிர, குழுவின் அனைத்து கூட்டங்களிலும் பிரதான நிறைவேற்று அதிகாரி (CEO) கலந்து கொள்வார்.
- **சபை நியமனக் குழுவானது (BNC)** புதிய பணிப்பாளர்கள், பிரதான நிறைவேற்று அதிகாரி மற்றும் பிற முக்கிய முகாமைத்துவப் பணியாளர்களைத் தேர்ந்தெடுத்து நியமிப்பதற்கான ஒரு செயன்முறையைச் செயற்படுத்துவதோடு, தற்போதைய பணிப்பாளர்களின் செயற்றிறன் மற்றும் சபையின் ஒட்டுமொத்த கடமைகளில் அவர்களது பங்களிப்பின் அடிப்படையில் அவர்களை மீண்டும் தேர்ந்தெடுப்பதை குழு மதிப்பீடு செய்து பரிந்துரைக்கும் அல்லது பரிந்துரைக்காது விடும்.
- **சபை தகவல் தொழில்நுட்ப வழிகாட்டிக் குழு** வங்கியின் தகவல்கள் மற்றும் தகவல் கட்டமைப்புகளுக்கான முக்கியமான ஆளுகைக் கட்டமைப்பு தகவல் தொழிநுட்ப வழிகாட்டிக் குழுவாகும். 2013ஆம் ஆண்டில், வங்கியானது பிரதான தகவல் அதிகாரியின் (CIO) தலைமையில் சகல தொழில்நுட்ப ஊழியர்கள் மற்றும் பிரதான இடர்நேர்வு உத்தியோகத்தரைக் கொண்டமைந்த ஒரு தகவல் தொழிநுட்பக் குழுவை அமைத்தது. வங்கியினுள் உள்ள தகவல் தொடர்பாடல் தொடர்பான அனைத்து சிக்கல்களையும் ஆராய்ந்து, பணிப்பாளர் சபைக்கு பரிந்துரைகளையும் தீர்வுகளையும் பெற்றுக் கொடுப்பதற்காக இக்குழுவானது அவ்வவ் போது ஒன்றுகூடுகிறது. வங்கி எதிர்கொள்ளும் தொழில்நுட்பம் சார்ந்த மற்றும் சைபர் இடர்நேர்வுகளைக் குறைக்க பின்வரும் முக்கிய முயற்சிகள் கவனத்திற் கொள்ளப்பட்டுள்ளன.

  சைபர் பாதுகாப்பு தொடர்பான ஊடுருவல்கள் மற்றும் பாதிப்பு குறித்த மதிப்பீடுகள் தொடர்பான பணிகளை மேற்கொள்வதற்காக தகவல் பாதுகாப்பு முகாத்துவ அதிகாரி எனும் பதவி நிறுவப்பட்டது.

  வலையமைப்பிற்கான பாதுகாப்பை வலுப்படுத்துதல்.

  மேம்படுத்தப்பட்ட கணினி பாதுகாப்பு, கிடைக்கும் தன்மை, கட்டுப்பாடு மற்றும் கணினி செயலிழப்பு நேரத்தை கண்காணித்தல்.

முகாமைத்துவ மட்டத்திலான இடர் முகாமைத்துவக் குழுக்கள்

- **நிறைவேற்று கடன் குழு (ECC)** நிறைவேற்று கடன் குழுவானது (ECC) கடன் இடர்நேர்வுகள், கடன் செயற்பாடுகளின் போது இடம்பெறும் கடன் மற்றும் செயற்பாட்டு இடர்நேர்வுகளை முகாமைத்துவம் செய்யும் பொறுப்பு கொண்ட முகாமைத்துவ மட்டக் குழுவாகும். நிறைவேற்று கடன் குழுவானது (ECC) அவ்வப்போது வங்கியின் கடன் கொள்கைகளை மதிப்பாய்வு செய்கிறது/செயற்படுத்துகிறது. இக்குழுவானது, வழங்கப்பட்டுள்ள அதிகார வரம்புகளுக்குள் கடன்களை அங்கீகரிப்பதிலும், பணிப்பாளர் சபையின் ஒப்புதலுக்காக கடன் வசதிகளை பரிந்துரைப்பதிலும் ஈடுபட்டுள்ளது.

- **சொத்துகள் மற்றும் பொறுப்புகள் குழு (ALCO)** சொத்துகள் மற்றும் பொறுப்புகள் குழுவானது (ALCO) வங்கியின் சந்தை இடர்நேர்வு, திரவத்தன்மை இடர்நேர்வு என்பவற்றை முகாமைத்துவம் செய்யும் பொறுப்பைக் கொண்ட முகாமைத்துவ மட்டக் குழுவாகும். முன்னரே தீர்மானிக்கப்பட்ட ஏற்றுக்கொள்ளக்கூடிய இடர்நேர்வு/ வெகுமதி விகிதத்தை அடைய சொத்துக்கள் மற்றும் பொறுப்புகளின் அளவு, கலவை, முதிர்வு, வீத உணர்திறன், தரம் மற்றும் திரவத் தன்மை ஆகியவற்றை நிர்வகிப்பதே இதன் நோக்கமாகும். சொத்துகள் மற்றும் பொறுப்புகள் குழுவின் (ALCO) செயற்பாடுகளில், குறுகிய கால இலாபங்கள், நீண்ட கால வருவாய்கள் மற்றும் வங்கியின் நீண்டகால கடன்தொகையை உறுதிப்படுத்தும் நோக்கத்துடன், மூலதன அமைப்பு, தயாரிப்பு விலை நிர்ணயம், நிதி மற்றும் முதலீடுகளைக் கருத்திற் கொண்டு இருப்புநிலை மற்றும் இருப்புக்கு வெளியேயான நிலைகளை நிர்வகிப்பது தொடர்பான கொள்கை முடிவுகள் என்பன உள்ளடங்கும்.

- **தொழிற்பாட்டு இடர்முகாமைத்துவ உப குழு (ORMC)** தொழிற்பாட்டு இடர்முகாமைத்துவ உப குழுவானது (ORMC), வங்கியின் செயற்பாட்டு இடர்நேர்வு முகாமைத்துவத்தினை நிர்வகிப்பதுடன், செயற்பாட்டு இடர் முகாமைத்துவ நுட்பங்களையும் செயற்படுத்துகிறது. அத்துடன், உள்ளக கட்டுப்பாடுகளின் ஒருமைப்பாட்டைப் பராமரிக்கவும், பரிவர்த்தனை செயலாக்கத்தில் பிழைகளைக் குறைக்கவும், மோசடிகளைத் தடுக்கவும் நடவடிக்கை எடுக்கிறது, இதனால் வங்கிக்கு செயல்பாட்டு இழப்புகள் குறைக்கப்படுகின்றது.

- **தகவல் பாதுகாப்புக் குழு (ISC)** தகவல் பாதுகாப்புக் குழு (ISC) என்பது வங்கியின் தகவல் பாதுகாப்பு கொள்கை செயற்படுத்தப்படுவதனை மேற்பார்வை செய்வதற்காக நிறுவப்பட்ட ஒரு முகாமைத்துவ நிலைக் குழுவாகும். வங்கி முழுவதும் அனைத்து தகவல் கட்டமைப்புகளும் முக்கியமான தகவல்களும் பாதுகாப்பாக இருப்பதையும், தனியுரிமை மற்றும் வாடிக்கையாளர் நம்பிக்கைக்கு இணங்குவதையும் தகவல் பாதுகாப்புக் குழு (ISC) கண்காணிக்கிறது.

- **முகாமைத்துவக் குழு (MC)** மேலாண்மைக் குழுவானது (MC) வங்கியின் சகல நிறைவேற்றுத் தர பணியாளர்களையும் பிரதிநிதித்துவம் செய்கின்ற பொது முகாமையாளர்/ பிரதான நிறைவேற்று அதிகாரியின் தலைமையில் அமைக்கப்பட்டுள்ள குழுவாகும். இக் குழுவானது அவ்வப்போது மற்றும் தேவைப்படும் சமயங்களிலெல்லாம் செயற்படுகிறது. இடர்நேர்வு மற்றும் நிச்சயமற்ற தன்மைகளைக் குறைக்க வங்கியின் சகல செயற்பாட்டு நிலையிலிருந்தும் அறிக்கைகளை இக்குழு அவ்வப்போது மதிப்பாய்வு செய்கிறது.

இடர் முகாமைத்துவ திணைக்களம் (RMD) இடர் முகாமைத்துவ திணைக்களமானது (RMD) பிரதான இடர்நேர்வு அதிகாரியின் தலைமையில் செயற்படுகிறது. இது கடன் இடர்நேர்வு, செயற்பாட்டு இடர்நேர்வு மற்றும் சந்தை மற்றும் வட்டி விகிதங்களின் இடர்நேர்வு என மூன்று தனித்தனி இடர் முகாமைத்துவச் செயற்பாடுகளைக் கொண்டுள்ளது. இடர் முகாமைத்துவ திணைக்களமானது அவ்வப்போது இடர் விருப்பத் தேவை, இடர் சுயவிவரம், உத்திகள், இடர் முகாமைத்துவம் மற்றும் உள்ளக கட்டுப்பாட்டுக் கட்டமைப்பு, இடர்நேர்வுக் கொள்கைகள், வரம்புகள் மற்றும் ஒதுக்கப்பட்ட அதிகாரம் குறித்து சபைக்கு பரிந்துரைகளை வழங்குகிறது.

பல அடிப்படையான இடர்நேர்வு வகைகள் மற்றும் தொடர்புடைய இடர்நேர்வு தொடர்பான பகுதிகள் வங்கியின் இடர்நேர்வு தொடர்பான பகுதியுடன் நேரடியாக இணைக்கப்பட்டுள்ளன. செயற்பாடுகளை பராமரிப்பதற்கும் வணிக விரிவாக்கத்தை ஊக்குவிப்பதற்கும் வங்கியின் திறனில் அவை தாக்கத்தை ஏற்படுத்தக்கூடும் என்பதால், இவை அடையாளம் காணப்பட்டு வங்கியின் மீதான அவற்றின் தாக்கம் தீர்மானிக்கப்பட்டுள்ளதுடன். வங்கியின் இடர்நேர்வுத்துறை மற்றும் தொடர்புடைய நிர்வாகக் குழுக்கள் இந்த அபாயங்கள் குறித்த வங்கியின் நிலைப்பாட்டை உன்னிப்பாகக் கண்காணித்து வருகின்றன.

முக்கிய இடர்நேர்வுக் காரணிகள் மற்றும் பிரதேச அபிவிருத்தி வங்கியின் நிர்வாக கட்டமைப்பு பற்றிய கண்ணோட்டம்

கடன் இடர்

பிரதேச அபிவிருத்தி வங்கியானது அரச அபிவிருத்தி வங்கிகளிடையே முன்னணியில் உள்ள வங்கியாகும். வர்த்தகத்தில் கடன்கள் முக்கிய பங்காற்றுகின்றன. பிரதேச அபிவிருத்தி வங்கியின் மொத்த கடன் வெளிப்பாடு, அதன் மொத்த சொத்துக்களில் 73.6% ஆகும். கடனை விரிவுபடுத்துதல் வங்கியின் பிரதான வர்த்தகமாக இருப்பதனால், வங்கியினால் முகாமைத்துவம் செய்யப்படும் முக்கியமான இடர்களில் கடன் இடரும் ஒன்றாகும்.

ஆகவே, வங்கி, கடன் இடர் முகாமைத்துவ செயன்றமுறை மீது கணிசமான அளவு முக்கியத்துவத்தை வழங்குகிறது.

கொவிட் - 19 தொற்றுநோய் மற்றும் பொருளாதார நெருக்கடிக்குப் பின்னைய காலத்தின் போது கடன்கள் மற்றும் முன்பணங்கள் குறைந்த வேகத்தில் அதிகரித்துள்ளதுடன், டிசம்பர் 31, 2021 உடன் ஒப்பிடும்போது, 2022 டிசம்பர் 31 ஆம் தேதிக்கு ரூ.210,563 ஆயிரமாக அதிகரித்துள்ளது.

பிரதேச அபிவிருத்தி வங்கியுடைய கடன் இடர் முகாமைத்துவக் கொள்கையானது, கடன் இடர் முகாமைத்துவத்தின் முக்கிய வழிகாட்டியாகும். மேலும், இவ்வழிகாட்டி, சபையினால் அங்கீகரிக்கப்பட்டு, வருடாந்தம் மீளாய்வு செய்யப்படும். இந்த வழிகாட்டி, கடன் இடர் தொடர்பான அனைத்துக் கொள்கைகள், நடைமுறைகள், இடர்களை இனங்காண்பதற்கான முறைகள், முகாமைத்துவம் செய்தல் மற்றும் தணிப்பதற்கான வழிவகைகள் ஆகிய அனைத்தையும் உள்ளடக்கியுள்ளது. இடர் முகாமைத்துவத் திணைக்களத்துடன் இணைக்கப்பட்டுள்ள கடன் இடர் நிர்வாகப் பிரிவானது, பாதுகாப்பு இடர்நேர்வு, நிதிச் சந்தையின் போக்குகள், செயற்படாக் கடன் இடர்நேர்வு மற்றும் கடன் கண்காணிப்பு ஆகியவற்றைக் கண்டறிந்து கண்காணிக்கும் பொறுப்பைக் கொண்டுள்ளது. இடர் முகாமைத்துவத் திணைக்களத்தின் கீழுள்ள கடன் இடர் நிர்வாகப் பிரிவானது கடன் கலவை குறித்த மதிப்பாய்வை அவ்வப்போது சபைக்குச் சமர்ப்பிக்கும் பொறுப்பைக் கொண்டுள்ளது. கடன் கலவையானது கிளை முகாமையாளர்.·. கடன் உத்தியோகத்தர்கள் மற்றும் தனிப்பட்ட கடன் வசதிகள் கிளை மட்டத்தில் நாளாந்த வாடிக்கையாளர் பகுப்பாய்வு மற்றும் மீள அறவிடல் செயற்பாடுகளினூடாக காண்காணிக்கப்படுகின்றது.

இடர் முகாமைத்துவப் பிரிவு வங்கியின் கடன் கலவையைப் பகுப்பாய்வு செய்து, முக்கிய இடர் குறிகாட்டியின் (KRI) கீழ் பணிப்பாளர் சபைக்கு மாதாந்தம் அறிக்கையிடும். இங்கு சபை அதனுடைய சுயாதீன அவதானிப்புகளையும் வழங்கும். முக்கிய இடர் குறிகாட்டி அறிக்கை மொத்த கடன் கடன் கலவை பகுப்பாய்வு, NPA பகுப்பாய்வு, கடன் ஏற்பாடுகளுக்கான பகுப்பாய்வு போன்றவை உள்ளடங்கும். மாதாந்த அடிப்படையில் இடர் முகாமைத்துவப் பிரிவு கண்காணிப்பு அட்டவணையில் உள்ள வாடிக்கையாளர்களை உன்னிப்பாகக் கவனித்து, அதனைப் பற்றி பணிப்பாளர் சபைக்கு அறிக்கையிடும்.

கடன் நிர்வாகப் பிரிவு

கடன் பாதுகாப்பு தொடர்பாக அடையாளம் காணப்பட்ட இடர்நேர்வுகள் காரணமாக, 2022ஆம் ஆண்டில் சிரேஷ்ட உதவிப் பொது முகாமையாளரின் தலைமையில் இயங்கும் இடர் முகாமைத்துவத் துறையிலிருந்து புறம்பான சுயாதீன கடன் நிர்வாகப் பிரிவை வங்கி நிறுவியுள்ளது.

கடன் நிர்வாகப் பிரிவு விரிவுபடுத்தப்பட்டு, கூடுதல் அனுபவம் மற்றும் தகுதி வாய்ந்த ஊழியர்களைக் கொண்டு, கடன் நிர்வாகச் செயன்முறையைச் சீராகச் செயற்படுத்துவதற்கு, கடன் அபாயத்தைக் குறைப்பதற்கு பலப்படுத்தப்பட்டுள்ளது.

கடன் மீளாய்வு பொறிமுறை (LRM)

2017 முதல், தரமான கடன் இலாகாவை பராமரிப்பதற்காக பிரதேச அபிவிருத்தி வங்கியானது ஒரு விரிவான கடன் மீளாய்வு பொறிமுறையை (LRM) நிறுவியுள்ளது.

தரமான மற்றும் அளவான கடன் நிர்வாகத்தை மேம்படுத்த பிரதேச அபிவிருத்தி வங்கியின் கடன் மீளாய்வு கொள்கையானது கடன் மீளாய்வு பொறிமுறைக்கு ஒரு பொதுவான கட்டமைப்பை நிறுவியுள்ளது. வங்கியின் கடன் கலவையில் 40% இற்கும் அதிகமான கடன்களை மீளாய்வில் உள்ளடக்கியிருக்க வேண்டும். ஒருங்கிணைக்கப்பட்ட இடர் முகாமைத்துவக் குழுவின் (IRMC) பரிந்துரையுடன் பணிப்பாளர் சபையினால் வரம்பானது முடிவு செய்யப்பட வேண்டும்.·. அங்கீகரிக்கப்பட வேண்டும்.

இடர்நேர்வு வீதம்

வங்கி 2016 ஆகஸ்ட் மாதம் தொடக்கம் குறிப்பிட்ட வடிவமைப்பைக் கொண்ட வாடிக்கையாளருக்கான வீதத்தை அறிமுகப்படுத்தியுள்ளது. வாடிக்கையாளர்கள் AAA, AA, A மற்றும் BBB என்ற அடிப்படையில் வகுக்கப்பட்டுள்ளனர். சுற்றறிக்கையில் வழங்கப்பட்டுள்ள வழிகாட்டிகளுக்கு அமைய, BBB மட்டத்தின் கீழ் உள்ள வாடிக்கையாளர்கள் வங்கியிடம் இருந்து கடன் வசதிகளைப் பெறத் தகுதியற்றவராவர். முன்மொழியப்பட்ட கடன் உருவாக்கக் கட்டமைப்பைச் (LOS) செயற்படுத்தும் நடவடிக்கைகளில் இடர்நேர்வுப் பிரிவானது நேரடியாக ஈடுபட்டுள்ளதுடன் மேலே குறிப்பிடப்பட்ட

கடன் உருவாக்கக் கட்டமைப்பினுள் (LOS) இடர் மதிப்பீடு உள்ளடக்கப்பட்டுள்ளது.

இடர் அடிப்படையிலான விலையிடல்

இடர்முகாமைத்துவப் பிரிவானது இடர்நேர்வை அடிப்படையாகக் கொண்ட விலையிடல் முறைமையினை 2016ஆம் ஆண்டு முதல் வங்கியின் கடன் வசதிகளுக்காக அறிமுகப்படுத்தியுள்ளது. வங்கி வாடிக்கையாளரின் இடர் வீதத்தை அடிப்படையாகக் கொண்டு, கடன் வசதியினுடைய விலையைச் சீராக்கியுள்ளது. விலையிடல் முறைமை, வங்கியின் நிதிகளின் கீழ் கருத்திற் கொள்ளப்படும் கடன் வசதிகளுக்கு மாத்திரம் பொருத்தமாகும். மீள் நிதியிடல் திட்டங்களின் கீழ் வழங்கப்படும் ஏனைய கடன்கள், இடர் அடிப்படையிலான விலையிடலில் இருந்து விதிவிலக்குப் பெற்றுள்ளன.

இடர்நேர்வு வீதம்

வங்கி 2016 ஆகஸ்ட் மாதம் தொடக்கம் குறிப்பிட்ட வடிவமைப்பைக் கொண்ட வாடிக்கையாளருக்கான வீதத்தை அறிமுகப்படுத்தியுள்ளது. வாடிக்கையாளர்கள் AAA, AA, A மற்றும் BBB என்ற அடிப்படையில் வகுக்கப்பட்டுள்ளனர். சுற்றறிக்கையில் வழங்கப்பட்டுள்ள வழிகாட்டிகளுக்கு அமைய, டீடீடீ மட்டத்தின் கீழ் உள்ள வாடிக்கையாளர்கள் வங்கியிடம் இருந்து கடன் வசதிகளைப் பெறத் தகுதியற்றவராவர்.

கடன் இழப்பு ஏற்பாடுகள் (சேதநட்டங்களுக்கான ஏற்பாடுகளும் இலங்கை மத்திய வங்கியின் ஏற்பாடும்)

இலங்கை கணக்கியல் தராதரங்களோடு இணங்கி நடப்பதற்காக, வங்கி கீழே தரப்பட்டுள்ள இரண்டு முறைகளை அடிப்படையாகக் கொண்டு, கடன் இழப்புகளுக்கான சேத நட்டங்களைக் கணிப்பீடு செய்துள்ளது.

- தனிப்பட்ட சேதநட்டம்
- கூட்டு சேதநட்டம்

இலங்கை மத்திய வங்கியின் (CBSL) வழிகாட்டிகளுக்கு அமைய , வங்கி இரண்டு வகையான ஏற்பாட்டு முறைகளைப் பின்பற்றுகிறது. அவையாவன:

- பொதுவான ஏற்பாடு (இலங்கை மத்திய வங்கியின் (CBSL) வழிகாட்டிகளுக்கு அமைய)
- விசேட ஏற்பாடு (இலங்கை மத்திய வங்கியின் (CBSL) வழிகாட்டிகளுக்கு அமைய)

வங்கியின் ஏற்பாட்டுக் காப்பு வீதம் மற்றும் திறந்த கடன் வெளிப்பாடு என்பன இடர் முகாமைத்துவ திணைக்களத்தினால் காலாந்தர அடிப்படையில் கணிப்பிடப்பட்டு பகுப்பாய்வு செய்யப்படுகிறது. இடர் முகாமைத்துவ திணைக்களம், இவ்வீதங்களை அதன் அவதானிப்புகளுடன் இணைத்து மாதாந்தம் பணிப்பாளர் சபைக்கு சமர்ப்பிக்கும்.

SLFR 9 இனை அமுல்படுத்தல்

வங்கியானது 2018 ஜனவரி மாதத்திலிருந்து உரிமம் பெற்ற வங்கியில் கடன் வசதிகளை வகைப்படுத்துதல், அங்கீகரித்தல், அளவிடுதல் தொடர்பான வங்கிச் சட்டம் 13 மற்றும் 14 வழிகாட்டுதல்களை, ளுடுகுசுளு 9 விளைவுக்கு இணங்க, ஜனவரி 2018 முதல் அமுல்படுத்தியுள்ளது. இந்த ஏற்பாட்டு முறைமையானது, செலுத்தத் தவறுகையின் போதான வெளிப்பாடு (EAD), செலுத்தத் தவறுவதற்கான வாய்ப்பு (PD), இழப்பு வழங்கப்பட்ட ஏற்பாடு என்பவற்றை மட்டம் 1, மட்டம் 2 மற்றும் மட்டம் 3 கடன்கள் என்பவற்றுக்குப் பயன்படுத்தி, முன்னோக்கிய அடிப்படையில் உறப்பட்ட கடன் நட்டங்களின் மீது அமைந்துள்ளது.

துறைசார்ந்த அடிப்படையிலான வரையறைகளும் செறிவு இடரைப் பேணுதலும்

வங்கி, அதன் இடர் முகாமைத்துவக் கொள்கை ஊடாக, அங்கீகரிக்கப்பட்ட ஒவ்வொரு துறைகளுக்குமான கடன் வரையறைகளை ஸ்தாபித்துள்ளது. பிரதேச அபிவிருத்தி வங்கியின் இடர் முகாமைத்துவப் பிரிவு காலாந்தர அடிப்படையில் பொருளாதார மற்றும் கைத்தொழில் தராதரங்களுக்கு அமைய இவ்வரையறைகளை அங்கீகரிக்கும். வர்த்தக அலகுகள் தமது தனிப்பட்ட கடன் கலவையை இந்தத் துறைசார்ந்த வரையறைகளுக்கு அமைவாகப் பேணி வருகின்றன.

திரவத்தன்மை இடர்நேர்வு முகாமைத்துவம்

வங்கியானது வரையறுக்கப்பட்ட திரவத்தன்மை எல்லைகளுக்குள் செயற்படுவதனையும், வங்கியின் திரவத்தன்மை கொள்கைகளுக்கும், இலங்கை மத்திய வங்கியின் ஒழுங்குமுறைத் தேவைப்பாடுகளுக்கும் நடவடிக்கைகளுடன் இணங்குவதையும் வங்கியின் திரவத்தன்மை இடர் முகாமைத்துவக் கட்டமைப்பானது உறுதிப்படுத்த வேண்டும். பணம் அல்லது பிற நிதிச் சொத்துக்களை வழங்குவதன் மூலம் தீர்க்கப்படும் அதன் நிதி கடமைகளை நிறைவேற்றுவதில் ஒரு வங்கி சிரமத்தை எதிர்கொள்ளும் ஆபத்தாகும். திரவ சொத்து விகிதத்தில் (LAR) 20% மற்றும் திரவத்தன்மை பாதுகாப்பு விகிதத்தில் (LCR;) 90% க்கும் அதிகமான ஒழுங்குமுறை தேவையை விட வலுவான திரவத்தனமை நிலையை பராமரிப்பதே வங்கியின் கொள்கையாகும். இந்த நோக்கத்தை அடைய, வங்கியானது தாடர்ச்சியான அடிப்படையில் திரவ

சொத்துக்கள் மற்றும் கடன்களை மதிப்பீடு செய்து கண்காணிக்கிறது. இந்த ஆண்டில் வங்கி வலுவான திரவத்தன்மை நிலையை பராமரித்தது, இது கவனமான மூலதன முகாமைத்துவம், தற்போதைய பொருளாதார நெருக்கடிகளுக்கு பதிலளிக்கும் வகையில் கட்டுப்பாட்டாளரால் ஏற்றுக்கொள்ளப்பட்ட இடவசதி நடவடிக்கைகள் மற்றும் சில்லறை மற்றும் நிறுவன வாடிக்கையாளர்களிடமிருந்து வலுவான வைப்பு வளர்ச்சி ஆகியவற்றால் ஆதரிக்கப்பட்டது.

வங்கியின் திரவத்தன்மை இடர்நேர்வானது ஒழுங்குமுறைத் தேவைகள் மற்றும் இருப்பு அணுகுமுறை மற்றும் பாய்ச்சல் அணுகுமுறையின் கீழான தேவைகள் ஆகிய இரண்டின் கீழும் முக்கிய திரவத்தன்மைக் குறிகாட்டிகளைக் கண்காணிப்பதன் மூலமும் நிர்வகிக்கப்படுகிறது. ஒவ்வொரு கட்டத்திலும் விரும்பிய அளவிலான திரவத்தன்மை பராமரிக்கப்படுவதையும் வங்கியின் ஆபத்து விருப்பத்திற்கு ஏற்ப இருப்பதையும் உறுதி செய்வதற்காக, சொத்துக்கள் மற்றும் பொறுப்புகள் இரண்டிலும் ஏற்படும் மாற்றங்கள் நிதித் தேவைகளுடன் ஒப்பிடப்படுகின்றன. உயர்தர திரவ சொத்துக்கள் மற்றும் பல்வேறு நிதி ஆதாரங்களில் போதுமான இடையகங்களைப் பராமரிப்பதன் மூலம் திரவத்தன்மை இடர்நேர்வானது குறைக்கப்படுகிறது.

வங்கியின் திரவத்தன்மையினை நிர்வகிக்கும் முக்கிய பொறுப்பு சொத்துக்கள் மற்றும் பொறுப்புகள் முகாமைத்துவக் குழுவிடம் (ALCO) உள்ளது. ALCO என்பது வங்கியின் கூட்டுறவு மற்றும் நிர்வாக நிலை ஊழியர்களைக் கொண்ட ஒரு நிர்வாக நிலைக் குழுவாகும். இந்தக் குழு குறைந்தபட்சம் மாதத்திற்கு ஒரு முறை அல்லது அதற்கு மேலாக தேவை அடிப்படையில் கூடுகிறது. திரவத் தன்மையினை நிர்வகிக்கவும் கண்காணிக்கவும் பிரதேச அபிவிருத்தி வங்கியின் இடர் முகாமைத்துவப் பிரிவினால் பின்வரும் கண்காணிப்பு நுட்பங்கள், அணுகுமுறைகள் பயன்படுத்தப்படுகின்றன.

- இருப்பு அணுகுமுறை
- பாய்ச்சல் அணுகுமுறை
- திரவத் தன்மை மீதான அழுத்தப் பரீட்சை

சகல பெறுமதிகளும் (ரூ. 000') இல்	31.12.2022 இல் உள்ளவாறான மீதி	அதிர்வுகள் சிறிய	மிதமான	பெரிய
அதிர்வின் அளவு	-	10%	15%	20%
திரவ சொத்துக்கள்	55,790,668	55,790,668	55,790,668	55,790,668
மொத்த பொறுப்புகள்	200,505,077	200,505,077	200,505,077	200,505,077
மொத்த பொறுப்புகளின் மதிப்பு வீழ்ச்சி	-	20,050,508	30,075,762	40,101,015
அதிர்வின் பின் திருத்தப்பட்ட மொத்த பொறுப்புகள்	-	180,454,569	170,429,315	160,404,061
அதிர்வின் பின் திருத்தப்பட்ட திரவச் சொத்துக்கள்	-	35,740,160	25,714,907	15, 689,653
திரவ சொத்து விகிதம்	27.83%	19 81%	15.09%	9.78%
திரவச் சொத்து தேவை	40,101,015	-	-	-
தற்போதுள்ள திரவச் சொத்துக்கள்	55,790,668	35,740,160	25,714,907	15,689, 653
மேலதிக திரவச் சொத்து/ மேலதிகத் தேவை	15,689,653	(4,360,855)	(14,386,109)	(24,411,36)

இடர் முகாமைத்துவத் திணைக்களம், வங்கியின் திரவநிலை மீது மூன்று சூழ்நிலைகளில் அழுத்தப் பரீட்சை ஒன்றை நடத்துகிறது. அவை பல்வேறுபட்ட தீவிர சூழ்நிலைகளுடன் தொடர்புடையன.

ஒவ்வொரு மாதமும் இத்திணைக்களம், அழுத்தப் பரீட்சையின் பெறுபேறுகளை அளவிடுவதுடன், வங்கியின் பணப்புழக்கம் மீது எதிர்பாராத சூழ்நிலைகளினால் ஏற்படக்கூடிய சாத்தியமான தாக்கங்களையும் அளவிடும். அழுத்தப் பரீட்சையின் பெறுபேறுகளுக்கு அமைவாக, வங்கியின் இடர் முகாமைத்துவ திணைக்களம் ALCO ஊடாக அச்சூழ்நிலைகளுக்கு முகம் கொடுக்க தேவையான நடவடிக்கைகளையும் நிதியிடல் ஏற்பாடுகளையும் பற்றி பணிப்பாளர் சபைக்கு அறிவிக்கும்.

தொழிற்பாட்டு இடர் முகாமைத்துவம்

பொருளாதார நெருக்கடிகள் மற்றும் பொருளாதாரக் கட்டுப்பாட்டு நோக்கத்திற்கான அரசாங்கக் கொள்கைகள் காரணமாக, கடந்த நிதியாண்டில் வங்கியின் செயற்பாட்டில் நேரடிப் பாதிப்பு ஏற்பட்டது. இன்று வங்கியானது நாடு முழுவதும் 276 கிளைகளைக் கொண்டுள்ளது, இதில் 2,531 க்கும் மேற்பட்ட ஊழியர்கள் உள்ளதுடன், ஆதரவு சேவைகளுக்கான தரமான தொழில்நுட்ப தீர்வுகள் (மையக வங்கிக் கட்டமைப்பு, ATM மற்றும் CDM மற்றும் மனிதவளக் கட்டமைப்பு) உள்ளன. புதிய கடன் உருவாக்கக் கட்டமைப்பிற்கான (LOS) திறன்களை மதிப்பீடு செய்தல் மற்றும் புதிய செயற்பாட்டு பயனுள்ள மேம்பாட்டு முடிவுகளுக்கான படிகள். பிரதேச அபிவிருத்தி வங்கி 2013 ஆம் ஆண்டில் ஒரு விரிவான இடர் தொழிற்பாட்டு முகாமைத்துவக் கொள்கையை உருவாக்கி, பணிப்பாளர் சபையின் அங்கீகாரத்தைப் பெற்றுள்ளது. இது, வங்கியின் தொழிற்பாட்டு இடர் முகாமைத்துவத்திற்கு முக்கியமான வழிகாட்டியாக அமைவதுடன், காலாந்தர அடிப்படையில் மீளாய்வு செய்யப்படும். வங்கி அதனுடைய தொழிற்பாட்டு இடரை கொள்கைகள், இடர் மதிப்பீடு, காப்புறுதிக் காப்புடன் கூடிய இடர் தணிப்பு, வர்த்தக நடவடிக்கைகளை வெளியாட்களுக்கு வழங்குவதற்கான நடைமுறை, தொழில்நுட்ப இடரைப் பராமரித்தல், ஒரு விரிவான வர்த்தக தொடர்ச்சித் திட்டம் மற்றும் அனர்த்த மீட்புத் திட்டம், வங்கி பூராகவும் இடர் தொடர்பான விழிப்புணர்வை ஏற்படுத்தல், அழுத்தப்பரீட்சை, கண்காணிப்பு மற்றும் அறிக்கையிடல் என்பன ஊடாக முகாமைத்துவம் செய்கிறது. வங்கியின் அன்றாட நடவடிக்கைகளின் போது ஏற்படும் செயற்பாட்டு இடர் நிகழ்வுகளைக் கண்காணித்து, அவற்றைச் சரிசெய்வதற்கு பிரதேச அபிவிருத்தி வங்கி நன்கு நிறுவப்பட்ட உள்ளகக் கட்டுப்பாட்டு செயன்முறையைக் கொண்டுள்ளது. 2012 முதல், வங்கியின் பிரதான இடர்நேர்வு அதிகாரியின் மேற்பார்வையின் கீழ், செயற்பாட்டு இடர் துணைக்குழுவை பிரதேச அபிவிருத்தி வங்கி நிறுவியுள்ளது. மேலும், செயற்பாட்டு இழப்பு குறித்த காலமுறை அறிக்கையை ஒருங்கிணைந்த இடர் முகாமைத்துவச் சபைக்கும் (BIRMC) சபைக்கும் காலாண்டு மற்றும் மாதாந்திர அடிப்படையில் சமர்ப்பிக்கிறது.

வணிக தொடர்ச்சித் திட்டம் (BCP) மற்றும் பேரிடர் மீட்பு (DR) கொள்கை

எதிர்பாராத சூழ்நிலையில் ஏற்படும் செயற்பாட்டு இடர்நேர்வு நிகழ்வுகளைத் தடுக்க, வங்கியானது விரிவான மற்றும் புதுப்பிக்கப்பட்ட வணிகத் தொடர்ச்சித் திட்டம் (BCP) மற்றும் பேரிடர் மீட்புத் திட்டத்தனை (DR) நிறுவியுள்ளது. இந்த இரண்டு கொள்கைகளும் வணிகத் தொடர்ச்சித் திட்ட ஒழுங்குமுறை மற்றும் பேரிடர் மீட்புத் திட்ட ஒழுங்குமுறை மூலம் அவ்வப்போது புதுப்பிக்கப்படுகின்றன.

வட்டி வீத இடர்

வட்டி விகிதங்களில் ஏற்படும் மாற்றங்கள் வங்கியின் வருவாய் மற்றும் வங்கி சொத்துக்கள், பொறுப்புகள் மற்றும் இருப்புநிலைக் குறிப்பிற்கு வெளியே உள்ள பொருட்களின் அடிப்படை பொருளாதார மதிப்பில் குறிப்பிடத்தக்க தாக்கத்தை ஏற்படுத்தக்கூடும். அரசாங்க நிதிக் கொள்கைகளில் ஏற்பட்ட மாற்றங்களால் வட்டி விகித இடர்நேர்வானது ஏற்பட்டது. தற்போதைய மதிப்பில் ஏற்படும் மாற்றங்கள் மற்றும் வங்கி புத்தக நிலைகளின் எதிர்கால பணப்புழக்கங்களின் பொருந்தாத தன்மை மூலம் பாதகமான வட்டி விகித இயக்கங்கள் வங்கியின் மூலதனம் மற்றும் வருவாயையும் பாதிக்கலாம். 2022 ஆம் ஆண்டு முழுவதும் கொள்கை விகிதங்கள் ஓரளவு உயர்ந்தன, இதனால் வட்டி விகிதங்கள் அதிகரித்தன. சபையினால் அங்கீகரிக்கப்பட்ட வட்டி விகித இடர் முகாமைத்துவக் கொள்கையின்படி, வங்கியின் இடைவெளி மற்றும் கால பகுப்பாய்வின் அடிப்படையில் வட்டி விகிதங்களை தீர்மானித்தல் ALCO பொறுப்பாகும். வட்டி விகித ஏற்ற இறக்கங்கள் குறித்த இடர் மேலாண்மைத் துறை இடர் மதிப்பீட்டை மேற்கொள்ளும். இருப்பினும், தற்போது ALCO சந்தை நிலைமைகள் மற்றும் கடன் வைப்பு விகிதத்தின் அடிப்படையில் கடன் மற்றும் வைப்புத்தொகை இரண்டிற்கும் வட்டி விகிதங்களை தீர்மானிக்கிறது.

தொழிநுட்ப ஆளுகைக் கட்டமைப்பு

தகவல் தொழில்நுட்ப வழிகாட்டல் குழு

தகவல் தொழிநுட்ப வழிகாட்டல் குழு என்பது வங்கியின் தகவல் மற்றும் தகவல் அமைப்புகளின் முக்கிய நிர்வாக அமைப்பாகும்.

வங்கி 2013ஆம் ஆண்டில் வங்கியின் பிரதான தகவல் அதிகாரியின் தலைமையில் ஒரு தகவல் தொழில்நுட்ப வழிகாட்டல் குழுவை நிறுவியுள்ளது, இது அனைத்து தொழில்நுட்ப நபர்களையும் பிரதான இடர்நேர்வு அதிகாரியையும் பிரதிநிதித்துவப்படுத்துகிறது. இக் குழு அவ்வப்போது வங்கியில் உள்ள

அனைத்து தகவல் தொழில்நுட்பம் தொடர்பான சிக்கல்களையும் விவாதித்து பணிப்பாளர் சபைக்கு பரிந்துரைகள் மற்றும் தீர்வுகளை வழங்குகிறது. பின்வரும் இடர் குறைப்பு, கண்காணிப்பு மற்றும் அறிக்கையிடல் நுட்பங்கள் தகவல் தொழில்நுட்பத்தில் வலுவான இடர் மேலாண்மையை பராமரிக்க வங்கியால் பயன்படுத்தப்படுகின்றன.

தகவல் தொழிநுட்பக் கொள்கை

இற்றைப்படுத்தப்பட்ட மற்றும் தெளிவாக வரையறுக்கப்பட்ட தகவல் தொழில்நுட்பக் கொள்கைகள், ஒழுங்குமுறைப்படுத்தல் ஆணையத்தின் விதிமுறைகளுக்கு இணங்க தகவல் தொழிநுட்பத் துறையால் பராமரிக்கப்படுகின்றன, மேலும் இந்தக் கொள்கைகளைப் பராமரிப்பதில் பிரதான தகவல் அதிகாரி பொறுப்பான நபராவார்.

வழக்கமான தகவல் தொழில்நுட்ப பாதிப்பு மதிப்பீடுகள்

தகவல் தொழிநுட்ப செயற்பாடுகள் தொடர்பான பாதுகாப்பு இடர்நேர்வைக் குறைப்பதற்கான முறைகளில் ஒன்று, சுயாதீன தரப்பினரால் செய்யப்படும் VAPT சோதனையாகும்.

தகவல் தொழிநுட்பக் கணக்காய்வுகள்

தகவல் தொழிநுட்பக் கணக்காய்வுள் சுயாதீன தரப்பினரால் மேற்கொள்ளப்படும்.

தகவல் பாதுகாப்பு முகாமைத்துவக் கட்டமைப்பு (ISMS)

2015 ஆம் ஆண்டு முதல் வங்கியின் தகவல் பாதுகாப்பு முகாமைத்துவக் கட்டமைப்பின் (ISMS) செயற்பாடுகள் வங்கியின் பிரதான இடர்நேர்வு அதிகாரியின் மேற்பார்வையின் கீழ் செயற்பட்டு வருகிறது. வங்கியின் தரவுகள் மற்றும் தகவல்களின் செயற்பாட்டு இடர்நேர்வைக் கண்காணித்து குறைக்கவும், வங்கியில் கிடைக்கும் தகவல் மற்றும் தரவுகளின் தரத்தை மேம்படுத்துவதற்காகவும் இது செயற்படுத்தப்படுகின்றது. வங்கி தகவல் பாதுகாப்பு அதிகாரி (ISO) வங்கியின் தகவல் பாதுகாப்புக்கும், தகவல் மீதான உள்ளக கட்டுப்பாட்டு நடவடிக்கையைப் பராமரிக்கவும் தகவல் பாதுகாப்பு மற்றும் ஏற்றுக்கொள்ளக்கூடிய பயன்பாட்டுக் கொள்கைகளைப் பராமரித்து அங்கீகரிக்கவும் பொறுப்பான நபராவார்.

தகவல் பாதுகாப்புக் குழு

உரிமம் பெற்ற வங்கிகளுக்கான தொழில்நுட்ப இடர் மேலாண்மை மற்றும் மீள்தன்மை 2021 குறித்த ஒழுங்குமுறை கட்டமைப்பை கடைபிடிப்பதற்காக, வங்கி 2022 முதல் ஒரு தகவல் பாதுகாப்புக் குழுவைக் நிறுவியுளளது.

இணக்கப்பாட்டு இடர் முகாமைத்துவம்

வங்கியின் முகாமைத்துவம், வங்கி அதனுடைய நியதிச்சட்டம் மற்றும் ஒழுங்குபடுத்தல் அதிகார சபைகளினால் விதிக்கப்படுகின்ற விதிகள் ஒழுங்குவிதிகள், ஏனைய சட்ட மற்றும் அரசாங்க நிறுவனங்களின் தேவைப்பாடுகள் என்பனவற்றைப் பின்பற்றாமல் இருப்பதைத் தவிர்ப்பதற்கும், அத்தகைய கடப்பாடுகளை மீறுவதனால் ஏற்படும் வங்கியின் பொறுப்புகளையும் தவிர்ப்பதற்கு இணக்கப்பாட்டு பொறிமுறையை உறுதிப்படுத்துகிறது. வங்கியின் இணக்கப்பாட்டு உத்தியோகத்தர், உள்ளகக் கட்டுப்பாடுகள் மற்றும் ஒழுங்குபடுத்தல் தேவைகள் என்பன உரிய வகையில் பின்பற்றப்படுவதை உறுதிப்படுத்தும் முக்கிய இலக்குகளைக் கொண்டுள்ளார். வங்கியின் இணக்கப்பாட்டுச் செயற்பாடானது, உதவிப் பொது முகாமையாளரினால் (இணக்கப்பாடுகள்) குறித்துரைக்கப்பட்டவாறு ஒருங்கிணைக்கப்பட்ட இடர் முகாமைத்துவக் குழுவின் (BIRMC)கீழ் கொண்டுவரப்படும். இவ்விலக்கினை அடைவதற்கு இப்பிரிவு இணக்கப்பாட்டுத் தேவைப்பாடுகளைக் கண்காணிக்கும், மதிப்பிடும் பொறுப்பையும் மீளாய்வுக்காக ஒருங்கிணைக்கப்பட்ட இடர் முகாமைத்துவக் குழுவிற்கு (BIRMC) காலாண்டு அறிக்கைகளையும் சமர்ப்பிக்கும் பொறுப்பைக் கொண்டுள்ளது. இணக்கப்பாட்டு உத்தியோகத்தர் ஒழுங்குபடுத்துநருக்கு வங்கியின் தேவையான சட்ட அறிக்கைகள், உரிய நேரத்தில் சமர்ப்பிக்கப்படுவதை மேற்பார்வை செய்கிறார்.

இணக்கப்பாட்டு இடர்நேர்வை நிவர்த்தி செய்வதற்கான பயனுள்ள நிர்வாக கட்டமைப்புடன், இடர் மதிப்பீட்டிற்கான நவீன மற்றும் புதுமையான உத்திகளை வங்கி ஏற்றுக்கொள்கிறது. நிதி ஸ்திரத்தன்மையையும் அவர்கள் தங்கள் வணிகத்தை நடத்தும் விதத்தையும் பராமரிக்க வங்கி பாதுகாப்பை உறுதி செய்கிறது.

- அங்கீகரிக்கப்பட்ட தரப்பினரால் வழங்கப்பட்ட பொருந்தக்கூடிய கொள்கைகள் மற்றும் நடைமுறைகளை அடையாளம் கண்டு சரியான நேரத்தில் மதிப்பாய்வு செய்வதை உறுதி செய்தல்.
- வங்கியின் கிளைகள், பிரிவுகள் மற்றும் தயாரிப்புகளில் இணக்கப்பாட்டை மதிப்பீடு செய்தல்.
- பயிற்சி அமர்வுகள் மூலம் விழிப்புணர்வை ஏற்படுத்துதல்.

மூலதன இடர்நேர்வு முகாமைத்துவம்

மூலதன போதுமான விகிதம் (CAR) ஒரு வங்கியின் மூலதனத்தை அதன் இடர்நேர்வு எடையிடப்பட்ட சொத்துக்களுடன் ஒப்பிடுகிறது. மூலதனம் இடர் எடையிடப்பட்ட சொத்து விகிதம் வங்கியின் நிதி ஸ்திரத்தன்மை மற்றும்

செயல்திறனை ஊக்குவிக்கிறது. எனவே மூலதன போதுமான விகிதம் (CAR) என்பது ஒரு வங்கியின் உறுதித்தன்மை மற்றும் ஸ்திரத்தன்மையைக் காட்டும் முக்கிய நிதி குறிகாட்டிகளில் ஒன்றாகும். இது வங்கியால் மேற்கொள்ளப்படும் பல்வேறு பொருளாதார நடவடிக்கைகளின் போது எதிர்பாராத இழப்பு சூழ்நிலையில் வங்கிகள் தப்பிப்பிழைக்கும் திறனை அளவிடுகிறது. பாசல் குழு வங்கியின் மூலதனத்தின் பல அளவீடுகளின் தொகுப்பை செயல்படுத்தியுள்ளது.

அதன்படி, டிசம்பர் 2010 இல் வெளியிடப்பட்ட BASLE III ஒப்பந்தம், Basel II ஒப்பந்தத்திற்கு மாற்றாக மாற்றப்பட்டது, மேலும் இது ஜூலை 1, 2017 அன்று இலங்கையில் நடைமுறைக்கு வந்துள்ளது. மூலதனத் தேவை குறித்த மத்திய வங்கியின் 2016 ஆம் ஆண்டின் 01 ஆம் இலக்க வழிகாட்டுதலின் அடிப்படையில் உரிமம் பெற்ற வணிக வங்கிகள் மற்றும் உரிமம் பெற்ற சிறப்பு வங்கிகளுக்கு BASLE III இன் கீழ், ஒழுங்குமுறை தேவைக்கு இணங்க ஒரு முன்முயற்சியுடன் கூடிய மூலதன முகாமைத்துவத்தினைக் கொண்டிருக்க பிரதேச அபிவிருத்தி வங்கி அவ்வப்போது அதன் மூலதன பெருக்கத் திட்டத்தைத் திருத்தியமைத்துள்ளது. 2017 ஆம் ஆண்டின் இரண்டாம் காலாண்டின் இறுதி வரை, வங்கி பாசல் II ஒப்பந்தங்களுக்கு இணங்க, குறைந்தபட்ச மூலதன போதுமான தேவையை 10% ஆக பராமரித்து வருகிறது. இருப்பினும், ஜூன் 2017 முதல் பாசல் III அறிமுகம் செய்யப்பட்டதன் மூலம், பிரதேச அபிவிருத்தி வங்கி மூலதன போதுமான தன்மையை பூர்த்தி செய்ய அதன் மூலதனத்தை குறைந்தபட்ச விகிதம் 12.5% ஆக அதிகரிக்க வேண்டும்.

அந்நியச் செலாவாணி இடர்நேர்வு

2022 ஆம் ஆண்டில் அந்நியச் செலாவணி சந்தையில் எதிர்பாராத மற்றும் கணிக்கப்பட்ட ஏற்ற இறக்கங்களிலிருந்து வருவாய் மற்றும் மூலதன ஆதாயத்தில் அந்நியச் செலாவணி விகிதம் தாக்கத்தை ஏற்படுத்துகிறது. மதிப்பாய்வு செய்யப்பட்ட ஆண்டில், வெளிப்புற மூலங்களிலிருந்து அந்நியச் செலாவணி திரவத் தன்மையினை மேம்படுத்த இலங்கை மத்திய வங்கியானது பல நடவடிக்கைகளைச் செயல்படுத்தியது. மேலும், இருப்புக்களை கட்டியெழுப்புவதற்காக இலங்கை மத்திய வங்கியானது உள்நாட்டு அந்நியச் செலாவணி சந்தையில் இருந்து அந்நியச் செலாவணியை தொடர்ந்து கொள்முதல் செய்தது.

சட்ட இடர்நேர்வு

செயல்பாட்டு அபாயத்தின் முக்கிய பகுதியாக சட்ட இடர்நேர்வு உள்ளது. வங்கியின் அன்றாட செயல்பாடுகளில் விழிப்புணர்வு இல்லாமை அல்லது தவறான புரிதல் மற்றும் தவறான நடத்தை காரணமாக சட்ட இடர்நேர்வு ஏற்படலாம். தவறான ஆவணங்கள் மற்றும் வரைவுத் திட்டத்தில் உள்ள குறைபாடுகள் காரணமாக ஒப்பந்தங்களைச் செயல்படுத்தத் தவறியதால் ஏற்படும் இழப்புகள் இதில் அடங்கும், இதன் விளைவாக அபராதங்கள் மற்றும் தண்டனை சேதங்கள் அல்லது வங்கிக்கு எதிராக இழப்பீடுகள் கோரப்படலாம், இதன் விளைவாக பொறுப்புக்கூறல் அல்லது இழப்பு ஏற்படலாம். சட்டப் பிரிவு வணிகப் பிரிவுகளுக்கு வழிகாட்டுதலை வழங்குகிறது மற்றும் வங்கியின் சட்ட இடர்நேர்வு மூலோபாய நிர்வாகத்தில் ஈடுபடுகிறது. சட்டப் பிரிவு பிற வணிகப் பிரிவுகளுடன் இணைந்து சாத்தியமான சட்ட இடர்நேர்வுகள் மற்றும் சிக்கல்களைக் கண்டறிந்து, வங்கியின் நலனைப் பாதுகாக்க போதுமான மற்றும் பொருத்தமான தடுப்பு நடவடிக்கைகள் எடுக்கப்படுவதை உறுதி செய்வதில் முன்கூட்டியே ஈடுபடுகிறது.

தற்போதைய பொருளாதார நெருக்கடி சூழ்நிலையில், வாடிக்கையாளர்கள் தீர்வு விதிமுறைகளை மதிக்கத் தவறியதாலும், வங்கி ரிட் மனுக்களை செயற்படுத்தத் தவறியதாலும், ஆண்டு முழுவதும் நீதிமன்ற வழக்குகள் ஒத்திவைக்கப்பட்டதாலும் வங்கியின் சட்ட இடர் நேர்வுகள் அதிகரித்தது.

ஆவணப்படுத்தலும் விநியோகமும்

- வங்கியின் ஒவ்வொரு செயற்பாட்டிற்கும் பூர்த்தி செய்யப்பட்ட, சரியான ஆவண வடிவத்தைப் பயன்படுத்துவது மிகவும் முக்கியமாகும். இவற்றில், சரியான கடன் பாதுகாப்பு ஆவணங்கள், கடன் விண்ணப்பப் படிவங்கள், KYC ஆவணங்கள், அடமானம்/ உத்தரவாதப் பத்திரங்கள், பிற சட்ட ஆவணங்கள் மற்றும் காப்பீட்டுக் கொள்கைகள் மற்றும் பிற ஆவணங்களின் பயன்பாடு மிகவும் முக்கியமானதாகும்.
- இற்றைப்படுத்தப்பட்ட வடிவங்கள் மற்றும் மாற்றங்கள் குறித்து கடன் நிர்வாகத் துறை மற்றும் சட்டத் துறை கடன் அதிகாரிகள், கிளை மேலாளர் மற்றும் பிற தொடர்புடைய தரப்பினருக்குத் தெரிவிக்கப்படும். மேலும் மேலே குறிப்பிடப்பட்டுள்ள மாற்றங்கள் நெருக்கமாகக் கண்காணிக்கப்பட்டு ஆலோசனைகளும் வழங்கப்படும்.
- கடன் வழங்கல்கள் இரட்டைக் கட்டுப்பாடுகளுக்கு உட்பட்டவை. இந்தச் செயன்முறை, வாடிக்கையாளரின் தேவைக்கேற்ப நிதி கிடைப்பதை உறுதி செய்கிறது. உள்ளக கட்டுப்பாடுகளுக்குள் இது அமைக்கப்பட்டுள்ளது.

வங்கியின் இடர் முகாமைத்துவத்தில் பொருளாதார நெருக்கடியின் தாக்கம்

இலங்கை தற்போது ஒரு பொருளாதார நெருக்கடியைச் சந்தித்து வருகிறது. மேலும் தொடர்ச்சியான நிதி மற்றும் நடப்புக் கணக்கு பற்றாக்குறை, அதிகரித்து வரும் கடன் மற்றும் மோசமான நிர்வாகம் ஆகியவற்றின் விளைவாக வறுமை அதிகரித்துள்ளது. கொவிட் 19 தொற்றுநோய் மற்றும் பொருளாதாரத்திற்குப் பிந்தைய நெருக்கடிகள் ஆகிய இரண்டின்

இரண்டாம் நிலை விளைவுகள் நாட்டின் பொருளாதாரத்திலும் மக்களின் வாழ்வாதாரத்திலும் தாக்கத்தினை ஏற்படுத்தியுள்ளன. அத்தியாவசியப் பொருட்களின் விலைகள் உயர்வடைந்து வருவதால், ஏழை மக்கள் அத்தியாவசியப் பொருட்களை வாங்கவும், அவர்களின் அடிப்படைத் தேவைகளைப் பூர்த்தி செய்யவும் முடியாமல் தவிக்கின்றனர். இது நாட்டின் வறுமை நிலையை அதிகரிக்க வழிவகுத்துள்ளது.

நிதித்துறை என்பது எந்தவொரு பொருளாதாரத்திற்கும் முதுகெலும்பாகவும் கண்ணுக்குத் தெரியாத சக்தியாகவும் விளங்குகின்றது. எனவே எந்தவொரு பொருளாதார நெருக்கடி/ மந்தநிலையும் நாட்டின் வங்கிச் செயற்பாட்டில் நேரடியான உடனடி பாதிப்பினை ஏற்படுத்துகின்றது.


இந்த சூழ்நிலையில், ஒரு நடுத்தர அளவிலான அபிவிருத்தி வங்கியாக வெடித்துக் கிளம்பிய பொருளாதார நெருக்கடிகள் காரணமாக, நாங்கள் மிகவும் கடினமான செயற்பாட்டு நிலைமைகளை எதிர்கொள்ள வேண்டி ஏற்பட்டது. எதிர்பாராத முடக்கச் சூழ்நிலை மற்றும் அந்நியசெலாவணி இருப்பு பற்றாக்குறை காரணமாக இலங்கையில் உள்ள ஒவ்வொரு தொழிற்துறையும் பெரும் சேதத்தை எதிர்கொண்டுள்ளது. எனவே இந்த பொருளாதார அழுத்த சூழ்நிலை காரணமாக எமது வங்கியின் வாடிக்கையாளர் தளமும் நிதி சிக்கல்களை எதிர்கொண்டுள்ளது.

அந்நிய செலாவாணி பற்றாக்குறை காரணமாக சில பொருட்களின் இறக்குமதி தடை செய்யப்பட்டுள்ளது. இதன் விளைவாக உணவு, எரிபொருட்கள், உர வகைகள், மருந்துப் பொருட்கள் மற்றும் சுகாதாரப் பொருட்களின் பற்றாக்குறை ஏற்பட்டுள்ளது. நாடு முழுவதும் உள்ள மக்கள் எரிபொருள் பற்றாக்குறையால் ஏற்படும் நீண்ட மின்வெட்டுகளால் பாதிக்கப்பட்டுள்ளனர். இது நாட்டின் அனைத்து தொழில்களையும் மற்றும் பல்வேறு துறைகளையும் பாதித்துள்ளது. இந்த நிலைமை மீளச் செலுத்தாது விடும் இடர்நேர்வின் போக்கு அதிகரிப்பதற்கும் வங்கியின் கடன் பிரிவின் தரம் மோசமடைவதற்கும் வழிவகுத்துள்ளது.


குறிகாட்டிகள்	12/31/2021	12/31/2022
NPL விகிதம்	8.71%	8.46%

டிசம்பர் 2022 மற்றும் ஒப்பீட்டு ஆண்டின் சிறப்பம்சங்கள்


தயாரிப்புகள் மூலம் வெளிப்பாடு (2021.12.31)




தயாரிப்புகள் மூலம் வெளிப்பாடு (2022.12.31)




பிரதேச அபிவிருத்தி வங்கியின் தேவையான மற்றும் உண்மையான திரவத்தன்மை பாதுகாப்பு விகிதம்




மொத்தச் சொத்துக்களுக்கு எதிராக மொத்த முற்பணங்கள்



நிலையான வைப்புகளுக்கு எதிராக சாதாரண சேமிப்புகள்




மொத்த செயற்படா முற்பணங்களுக்கு எதிராக மொத்த முற்பணங்கள்




	2021 டிசம்	2022 மார்ச்	2022 ஜூன்	2022 செப்	2022 டிசம்
Tier 1 மூலதனம்	8.72%	8.44%	7.93%	7.38%	7.85%
தேவையான Tire 1 மட்டம்	8.50%	8.50%	8.50%	8.50%	8.50%
மொத்த மூலதனம்	14.27%	15.49%	15.73%	13.23%	15.72%
தேவையான மொத்த மூலதன மட்டம்	12.5%	12.5%	12.5%	12.5%	12.5%

மூலதனப் போதுமான அளவு விகிதம்



வைப்புத்தொகைகளுக்கான மொத்த முன்பணங்கள் (மீள்நிதி இல்லாமல்)





கூட்டுறவு ஆளுகை

கூட்டுறவு ஆளுகை மீதான கணக்காய்வாளர் நாயகத்தின் அறிக்கை | 78
கூட்டுறவு ஆளுகை | 80
சபை மற்றும் சபைக் கூட்டங்களுக்கான சமூகமளிப்பு | 110
பணிப்பாளம் சபையின் வருடாந்த அறிக்கை | 112
சபை மனித வளங்கள் மற்றும் ஊதியங்கள் குழு (BHRRC), சபை தெரிவுக் குழு (BNC) அறிக்கை | 118
சபை கணக்காய்வுக் குழு (BAC) அறிக்கை | 120
ஒருங்கிணைந்த இடர் முகாமைத்துவக் குழு அறிக்கை | 122
பிரதம நிர்வாக அதிகாரி மற்றும் பிரதம நிதி அதிகாரி ஆகியோரின் பொறுப்புக் கூற்று அறிக்கை | 126
உள்ளகக் கட்டுப்பாடு தொடர்பான கூற்றின் மீதான கணக்காய்வாளர் நாயகத்தின் அறிக்கை | 128
நிதி அறிக்கையிடல் மீதான நிதிக் கூற்றுக்கள் தொடர்பான பணிப்பாளர்களின் கூற்று | 130
நிதி அறிக்கையிடலுக்கான பணிப்பாளர்களின் பொறுப்பு | 132

கூட்டுறவு ஆளுகை மீதான கணக்காய்வாளர் நாயகத்தின் அறிக்கை



தலைவர்
பிரதேச அபிவிருத்தி வங்கி

இலங்கை மத்திய வங்கியினால் - 2022 டிசம்பர் 31 இல் வழங்கப்பட்ட கூட்டுறவு ஆளுகை வழிகாட்டியின் தேவைப்பாட்டிற்கு அமைய, பிரதேச அபிவிருத்தி வங்கி இணங்கி நடந்தமை மீதான கணக்காய்வாளர் நாயகத்தின் நிகழ்வு ரீதியான கண்டறிதல்கள் பற்றிய அறிக்கை.

இலங்கை மத்திய வங்கியினால் வழங்கப்பட்ட கூட்டுறவு ஆளுகைத் தேவைப்பாட்டுடன் இணங்கி நடந்தமை தொடர்பாக, பணிப்பாளர் சபையினால் தயாரிக்கப்பட்டு, சமர்ப்பிக்கப்பட்ட அறிக்கை தொடர்பில், நான் இவ்வறிக்கையின் இணைப்பு 1இல் குறிப்பிடப்பட்ட நடைமுறைகளை நிறைவேற்றியுள்ளேன். நடைமுறை ரீதியான ஈடுபாடுகள் தொடர்பாக ஏற்றுக்கொள்ளப்பட்ட, பொருத்தமான, தொடர்புபட்ட சேவைகள் 4400 மீதான இலங்கை நியமங்களில் (SLSRS 4400) குறிப்பிடப்பட்டுள்ள எண்ணக்கருக்களுக்கு அமைவாக, என்னுடைய பொறுப்பு ஏற்றுக்கொள்ளப்பட்டது.


கூட்டுறவு ஆளுகை வழிகாட்டி தேவைப்பாட்டுடன் இணங்கி நடப்பதில் தங்களுக்கு உதவி அளிக்கவே இந்த நடைமுறைகள் நிறைவேற்றப்பட்டன. என்னுடைய கண்டறிதல்களை இவ்வறிக்கைக்கான இணைப்பு ஒன்றில் நான் இணைத்துள்ளேன்.

மேலே குறிப்பிடப்பட்ட நடைமுறைகள், இலங்கையின் மீளாய்வு ஈடுபாடுகள் தொடர்பான நியமங்கள் அல்லது இலங்கை கணக்காய்வு நியமங்கள் என்பவற்றுக்கு அமைவாக, இவை ஒரு கணக்காய்வாகவோ, மீளாய்வாகவோ கருதப்படாத காரணத்தினால், இலங்கை மத்திய வங்கியினால் வழங்கப்பட்ட கூட்டுறவு ஆளுகை வழிகாட்டி மீதான இணக்கம் தொடர்பில் நான் எவ்வித உறுதிப்பாட்டையும் வெளிப்படுத்த மாட்டேன். இலங்கை மீளாய்வு ஈடுபாடுகள் தொடர்பான நியமங்கள் அல்லது இலங்கை கணக்காய்வு நியமங்கள் என்பவற்றுக்கு அமைவாக, மேலதிக நடைமுறைகளை அல்லது கணக்காய்வு ஒன்றை அல்லது மீளாய்வு ஒன்றை நான் நிறைவேற்றி இருந்தேனா என்பது தொடர்பில் ஏனைய விடயங்கள் என்னுடைய கவனத்திற்கு வந்திருப்பின் அவற்றை நான் தங்களுக்கு அறிக்கையிட்டிருப்பேன்.

என்னால் தயாரிக்கப்பட்ட இந்த அறிக்கை, முதலாவது பந்தியில் குறிப்பிடப்பட்ட காரணத்திற்காகவும், தங்களுடைய தகவலுக்காகவுமே அன்றி, இந்த அறிக்கை வேறு எந்த நோக்கத்திற்காகவும் பயன்படுத்தப்பட முடியாது அல்லது ஏனைய திறத்தவர்களுக்குப் பகிரப்படவும் முடியாது.

No. 306/72, Polduwa Road, Battaramulla, Sri Lanka.
+94 11 2 88 70 28 - 34
+94 11 2 88 72 23
ag@auditorgeneral.gov.lk
www.naosl.gov.lk

இந்த அறிக்கை மேலே குறிப்பிடப்பட்ட விடயங்களுடன் மாத்திரமே தொடர்புபடுகிறது. அத்துடன், அவை பிரதேச அபிவிருத்தி வங்கியை முழுமையாக எடுத்து நோக்குகின்ற போது, வங்கியின் வேறு ஏதேனும் நிதிக் கூற்றுக்கள் பற்றி இவை கருத்துக்களை வெளியிடாது.



WPC விக்ரமரத்ன
கணக்காய்வாளர் நாயகம்

கூட்டுறவு ஆளுகை

நிகழ்வு ரீதியான கண்டறிதல்கள் மீதான அறிக்கைக்கான இணைப்பு

பிரிவு	கொள்கை	2022ஆம் ஆண்டில் இணக்க நிலை
3(1)	சபையின் பொறுப்புக்கள்	
3(1)(i)	சபை வங்கியின் பாதுகாப்பையும், ஸ்திரத்தன்மையையும் வலுப்படுத்தி உள்ளது என்பதை உறுதிப்படுத்துவதற்காக நடத்தப்பட்ட ஏற்றுக்கொள்ளப்பட்ட நடைமுறைகள்.	
	a) சபையின் அங்கீகாரம், வங்கியின் மூலோபாய இலக்குகள் மற்றும் கூட்டுறவுப் பெறுமதிகள்	2022-2024 வரை தயாரிக்கப்பட்ட கூட்டுறவு அறிக்கை, சபையினால் அங்கீகரிக்கப்பட்டுள்ளது. இதனைவிட, வருடாந்தம் அமுல்படுத்தப்படுகின்ற ஆண்டு வரவு செலவுத் திட்டத்திற்குள் வங்கியின் மூலோபாய இலக்குகள் பொதிந்துள்ளன. வங்கியின் மூலோபாய இலக்குகள் மற்றும் கூட்டுறவுப் பெறுமதிகளுடன் இவை இணங்கிச் செல்கின்றன.
	வங்கியானது தனது மூலோபாய இலக்குகளையும், கூட்டுறவுப் பெறுமதிகளையும் வங்கி முழுவதும் அறிவித்துள்ளதா?	வங்கியின் மூலோபாய நோக்கங்கள் மற்றும் கூட்டுறவுப் பெறுமதிகள் சகல முக்கிய முகாமைத்துவ ஆட்களுக்கும் ஏற்கனவே தெரிவிக்கப்பட்டுள்ளன. மேலும், தலைமை அலுவலக மட்டத்திலும், மாகாண மட்டத்திலும் விழிப்புணர்வுக் கூட்டங்கள் மூலம் ஏனைய ஊழியர்களுக்கும் தெரிவிக்கப்படும்.
	b) வங்கியின் ஒட்டுமொத்த வணிக மூலோபாயத்திற்கான சபையின் அங்கீகாரம்.	சபையினால் அங்கீகரிக்கப்பட்ட கூட்டுறவுத் திட்டம் (2022-2024) வங்கியின் ஒட்டுமொத்த வணிக மூலோபாயத்தையும் உள்ளடக்குகிறது.
	ஒட்டுமொத்த வணிக மூலோபாயம், முழுமையான இடர் கொள்கை, இடர் முகாமைத்துவ நடைமுறைகள் மற்றும் பொறிமுறைகள் என்பவற்றை உள்ளடக்குவதோடு, அவை ஆவணப்படுத்தப்பட்டு உள்ளன.	ஒட்டுமொத்த இடர் கொள்கை மற்றும் இடர் முகாமைத்துவ நடைமுறைகள் என்பன பணிப்பாளர் சபையினால் தயாரிக்கப்பட்டு, ஒருங்கிணைக்கப்பட்ட இடர் முகாமைத்துவக் குழுவின் பரிந்துரைகளுடன் அங்கீகரிக்கப்பட்டுள்ளன. இது, காலாந்தர அடிப்படையில் மீளாய்வு செய்யப்படும்.
	c) இனங்காணப்பட்ட இடர்களைக் கையாழுவதற்கு உள்ள பொருத்தமான முறைகள் விவேகமானதாக இருப்பதுடன், அவை, முறையாக அமுல்படுத்தப்படுகின்றன.	இணங்கி நடக்கப்பட்டுள்ளது. சபையினால் அங்கீகரிக்கப்பட்ட, ஒருங்கிணைக்கப்பட்ட இடர் முகாமைத்துவக் கொள்கைகளும், நடைமுறைகளும் தொடர்ச்சியான மற்றும் விவேகமான மதிப்பீட்டுச் செயன் முறைகளை உள்ளடக்குகின்றன. மேலும், இது, BIRMC யினால் மீளாய்வு செய்யப்படுகிறது. பின்வரும் அறிக்கைகள் இது குறித்து மேலும் விவரங்களை வழங்குகின்றன: • இடர் முகாமைத்துவ அறிக்கை • ஒருங்கிணைந்த இடர் முகாமைத்துவக் குழு அறிக்கை

பிரிவு	கொள்கை	2022ஆம் ஆண்டில் இணக்க நிலை
	d) சபை, தொடர்பாடல் கொள்கை ஒன்றை அங்கீகரித்துள்ளது. இக்கொள்கை வைப்பாளர்கள், கடன் தருநர்கள், பங்குதாரர்கள், கடன் பெறுநர்கள் ஆகிய அனைவருக்கும் அமுல்படுத்தப்படுகிறது.	சபையினால் அங்கீகரிக்கப்பட்ட தொடர்பாடல் கொள்கை ஒன்று அமுலில் உள்ளது. இக்கொள்கை வைப்பாளர்கள், கடன் தருநர்கள், பங்குதரர்கள் மற்றும் கடன் பெறுநர்கள் ஆகிய அனைவரையும் உள்ளடக்குகிறது. எனினும், கொள்கை ஆவணத்தில் குறிப்பிட்டவாறு தொடர்பாடல் கொள்கை மீளாய்வு செய்யப்படல் வேண்டும்.
	e) சபை, வங்கியின் உள்ளகக் கட்டுப்பாடுகள் மற்றும் முகாமைத்துவத் தகவல் முறைமை என்பவற்றின் போதுமான தன்மையையும், ஒருமைப்பாட்டையும் மீளாய்வு செய்துள்ளது.	இணங்கி நடக்கப்பட்டுள்ளது முக்கியமான அனைத்து முகாமைத்துவ ஆட்கள் விசேடமாக, பிரதிப் பொது முகாமையாளர்/ செயற்பாடு உட்பட அனைவரும் வங்கியின் உள்ளகக் கட்டுப்பாட்டு முறையை தாபிப்பதற்கும், புதுப்பிப்பதற்கும் பொறுப்புடையவர்கள். மேலும், உள்ளகக் கட்டுப்பாட்டு முறை மற்றும் முகாமைத்துவத் தகவல் முறை ஆகிய இரண்டினதும் போதுமான தன்மையை உள்ளகக் கணக்காய்வுத் திணைக்களம் மீளாய்வு செய்கிறது. இருப்பினும், இந்த செயல்முறை மேலும் வலுப்படுத்தப்பட வேண்டும். அத்துடன், சபையின் கணக்காய்வுக் குழுவினால் மீளாய்வு செய்யப்பட்ட அறிக்கைகள் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன.
	f) இலங்கை கணக்கியல் நியமங்களில் வரையறை செய்யப்பட்டவாறு (i) கொள்கையில் குறிப்படத்தக்களவு செல்வாக்கு உடையவர்கள் (ii) நேரடி செயற்பாடுகளில் ஈடுபடுவர்கள் (iii) வணிக நடவடிக்கைகள், செயற்பாடுகள் மற்றும் இடர் முகாமைத்துவம் ஆகியவற்றின் மீது கட்டுப்பாடு செலுத்துபவர்கள் ஆகிய நிலையில் இருப்பவர்களை இனங்கண்டு, முக்கியமான முகாமைத்துவ ஆட்களுக்கு பொறுப்புக்களை வழங்கியுள்ளது.	இணங்கி நடக்கப்பட்டுள்ளது சபை, முக்கியமான முகாமைத்துவ ஆட்களை இனங்கண்டு அவர்களுக்கு பொறுப்புகளை வழங்கியுள்ளது.
	g) சபை, பணிப்பாளர் சபைக்கும், முக்கிய முகாமைத்துவ ஆட்களுக்கும் உரிய அதிகாரத் துறைகளையும், முக்கிய பொறுப்புக்களையும் வரையறை செய்துள்ளது.	இணங்கி நடக்கப்பட்டுள்ளது பணிப்பாளர்கள் குழு மற்றும் பொது முகாமையாளர்/ தலைமை நிர்வாக அதிகாரிக்கான அதிகாரப் பகுதிகள் மற்றும் முக்கிய பொறுப்புகளை சபையின் சாசனம் வரையறை செய்துள்ளது. சபையினால் அங்கீகரிக்கப்பட்ட சபை சாசனம் நடைமுறையில் உள்ளது. முக்கிய முகாமைத்துவ ஆட்களின் அதிகாரத் துறைகளும், முக்கிய பொறுப்புக்களும், பொருத்தமான தொழில் விபரங்களில் ஆவணப்படுத்தப்பட்டுள்ளன.

பிரிவு	கொள்கை	2022ஆம் ஆண்டில் இணக்க நிலை
	h) சபையின் கொள்கைக்கு இணங்க, சபை, முக்கிய முகாமைத்துவ ஆட்கள் ஊடாக பொருத்தமான மேற்பார்வை நடவடிக்கைகளை நிறைவேற்றியுள்ளது.	இணங்கி நடக்கப்பட்டுள்ளது சபையின் உப குழுக்கள் மற்றும் சபையின் ஊடாக பொருத்தமான மேற்பார்வைப் பணிகள் மேற்கொள்ளப்படுகிறது. தேவை ஏற்படும் போது, மேலதிக விளக்கங்களுக்காக நிர்வாகக் குழு உறுப்பினர்கள் சபைக் கூட்டங்களுக்கு அழைக்கப்படுகிறார்கள்.
	i) சபை பின்வரும் விடயங்கள் உள்ளடங்கலாக, சபை பணிப்பாளர்களின் வினைத்திறனை, காலாந்தர அடிப்படையில் மதிப்பீடு செய்யும். (i) பணிப்பாளர்கள் மற்றும் முக்கிய முகாமைத்துவ ஆட்களின் தெரிவு, நியமனம் மற்றும் தேர்தல், (ii) அக்கறைகளுக்கு இடையிலான முரண்பாடுகளைக் கையாளுதல். மற்றும், (iii) பலவீனங்களைத் தீர்மானித்தலும், தேவையான இடங்களில் மாற்றங்களை அமுல்படுத்துதலும்.	இணங்கி நடக்கப்பட்டுள்ளது சபை தனது வினைத்திறனை சபைக் கூட்டத்தில் மதிப்பிட்டுள்ளது.
	j) சபை முக்கிய முகாமைத்துவ ஆட்களுக்கு ஒரு பின்னுறு (Succession) திட்டத்தை வைத்துள்ளது.	இணங்கி நடக்கப்பட்டுள்ளது இற்றைப்படுத்தப்பட்ட பின்னுறு (Succession) திட்டம் செயற்பாட்டிலுள்ளதுடன் அது சபையின் நியமனக் குழுவினால் 29.09.2022ஆம் திகதியன்று அங்கீகரிக்கப்பட்டுள்ளது.
	k) கொள்கைகளை மீளாய்வு செய்யவும், தொடர்பாடல் கோவைகளை ஸ்தாபிக்கவும், கூட்டுறவு மூலோபாயங்களை நோக்கி முன்னேற்றத்தைக் கண்காணிக்கவும், சபை முக்கிய முகாமைத்துவ ஆட்களுடன் கிரமமான கூட்டங்களைத் திட்டமிட்டுள்ளது.	இணங்கி நடக்கப்பட்டுள்ளது கூட்டுறவுக் குறிக்கோள்களைக் கலந்தாராயவும், அவற்றின் முன்னேற்றத்தை மீளாய்வு செய்யவும், கூட்டங்களை நடத்துவதுடன், மேலதிகத் தகவல்களுக்காகவும், அறிவுரை வழங்குவதற்காகவும், முக்கிய முகாமைத்துவ ஆட்களை அழைக்கின்றது.
	l) ஒழுங்குபடுத்தல் சூழலைப் புரிந்து கொள்வதற்கான செயன்முறைகள் அமுலில் உள்ளன. அவை தொடர்பான நடவடிக்கைகளையும் சபை எடுத்துள்ளது. வங்கி ஒழுங்குபடுத்துநர்களுடன் ஒரு தொடர்பைப் பேணி வருகிறது.	இணங்கி நடக்கப்பட்டுள்ளது ஒழுங்குபடுத்தல் சூழலைப் புரிந்து கொள்ளவும், ஒழுங்குபடுத்துநர்களுடன் உறவுகளைப் பேணவும் சபை நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது. அது தொடர்பான செயன்முறைகளும் உள்ளன.
	m) வெளியகக் கணக்காய்வாளர்களை வாடகைக்கு அமர்த்தவும், மேற்பார்வை செய்யவும் சபை ஒரு செயன் முறையைக் கொண்டுள்ளது.	பொருத்தமற்றது பி.அ.வ சட்டத்தின் பிரிவு 33 இன் கீழ், கணக்காய்வாளர் நாயகம், வங்கியின் வெளியகக் கணக்காய்வாளர் ஆவார்.

பிரிவு	கொள்கை	2022ஆம் ஆண்டில் இணக்க நிலை
3(1)(ii)	தலைவரையும், பிரதம நிறைவேற்று அதிகாரியையும் சபை நியமித்துள்ளது. தலைவர் மற்றும் பிரதம நிறைவேற்று அதிகாரியின் பணிகளும், பொறுப்புகளும் இந்த வழிகாட்டிகளில், வழிகாட்டி 3(5) க்கு அமைவாக உள்ளன.	இணங்கி நடக்கப்பட்டுள்ளது சபை வங்கியின் பொது முகாமையாளர்/ பிரதம நிர்வாக அதிகாரியை நியமிக்கும். இதற்கமைவாக 01.02.2022 முதல் பி.அ.வ சட்டத்தின்படி நிரந்தர பொது முகாமையாளர்/ பிரதம நிர்வாக அதிகாரியை சபை நியமித்துள்ளது. தவிர்க்க முடியாத காரணங்களினால் பிரதான நிதி அதிகாரியே பொது முகாமையாளர்/ பிரதம நிர்வாக அதிகாரியாக நியமிக்கப்பட்டுள்ளார் - பதில் கடமையாற்றுதல் 05.09.2022முதல் அமுலாகும் விதத்தில். 2022ஆம் ஆண்டினுள் பல்வேறு தடவைகள் இந்நியமனம் கீழ் குறிப்பிடப்பட்டவாறு புதுப்பிக்கப்பட்டுள்ளது. 01. 05.09.2022 இலிருந்து 27.09.2022 02. 27.09.2022 இலிருந்து 31.11.2022 03. 30.11.2022 இலிருந்து 01.12.2022 04. 01.12.2022 இலிருந்து 28.02.2023 பி.அ.வ சட்டத்தின்படி பிரகாரம், தலைவர் கௌரவ பி.அ.வக்குப் பொறுப்பான அமைச்சரினால் 26.02.2022 முதலான காலப்பகுதிக்காக நியமிக்கப்பட்டுள்ளார். தலைவர், நிர்வாகம் சாராத பணிப்பாளராக இருப்பதோடு, பிரதம நிறைவேற்று அதிகாரி, வங்கியின் செயற்பாடுகள் மற்றும் வணிகம் தொடர்பான அன்றாட முகாமைத்துவத்திற்கு நிர்வாக ரீதியில் பொறுப்பானவராக இருப்பார். எனினும், பி.அ.வ சட்டத்தின் பிரிவு 3 க்கு அமைய, 2018 நவம்பர் 30 ஆம் திகதி நடைபெற்ற சபைக் கடன் குழுக் கூட்டத்தின் தீர்மானத்திற்கு அமைய, தலைவர் வங்கி சார்பாக உடன்படிக்கைகள், முறிகள், உறுதிகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆகியவற்றில் கையொப்பமிடுவார்.
3(l)(iii)	சபை கிரமமாகச் சந்தித்து, மாதாந்த இடைவெளிகளில், ஒரு வருடத்தில் குறைந்தபட்சம் 12 தடவைகள் சபைக் கூட்டங்களை நடத்தியுள்ளது.	இணங்கி நடக்கப்பட்டுள்ளது பொதுவாக, சபைக் கூட்டங்கள் மாதம் இருமுறை நடைபெறும். இதனைவிட, தேவை ஏற்படும் போது, விசேட கூட்டங்களும் இடம்பெறும். 2022 இல் 21 கூட்டங்கள் நடைபெற்றுள்ளன.
3(l)(iv)	கிரமமான சபைக் கூட்டங்களுக்கான நிகழ்ச்சி நிரலில், பணிப்பாளர்கள் அனைவரும், விடயதானங்களையும், உத்தேச திட்டங்களையும் உள்ளடக்குவதற்கான ஒரு நடைமுறையை சபை கொண்டுள்ளது. இந்த விடயங்களும், உத்தேச திட்டங்களும், வணிக முன்னேற்றம், வங்கி இடர்களின் முகாமைத்துவம் என்பவற்றோடு தொடர்புடையன.	இணங்கி நடக்கப்பட்டுள்ளது வழமையான சபைக் கூட்டங்கள் திட்டமிடப்பட்டு, ஒவ்வொரு ஆண்டின் ஆரம்பத்திலும் சபைக்குத் தெரிவிக்கப்பட்டு, வழமையான சபைக் கூட்டங்களுக்கான நிகழ்ச்சி நிரலுக்கு விடயங்களையும் முன்மொழிவுகளையும் சமர்ப்பிக்க முடியும்.

பிரிவு	கொள்கை	2022ஆம் ஆண்டில் இணக்க நிலை
3(1)(v)	அனைத்துப் பணிப்பாளர்களுக்கும், கூட்டங்களுக்குச் சமூகமளிக்கும் வாய்ப்புகளை வழங்குவதற்காக, சபை, ஒரு கிரமமான சபைக் கூட்டத்திற்கு குறைந்தபட்சம் 07 நாட்களுக்கு முன்னர் அறிவித்தல் வழங்கும். ஏனைய அனைத்து சபைக் கூட்டங்களுக்கும் அறிவித்தல் வழங்கப்பட்டுள்ளன.	இணங்கி நடக்கப்பட்டுள்ளது கூட்டங்களுக்கான அறிவிப்பு ஆண்டின் ஆரம்பத்தில் வருடாந்த நாட்காட்டி மூலம் வழங்கப்படுகிறது. சபை மற்றும் துணைக்குழுக் கூட்டங்களுக்கான நிகழ்ச்சி நிரல் மற்றும் குழு ஆவணங்கள், வரக்கூடிய அவசர பத்திரங்கள் தவிர, கூட்டங்களுக்கு ஏழு நாட்களுக்கு முன், பாதுகாப்பான மின்-தீர்வு (Board Pac இல் பதிவேற்றம்) மூலம் பணிப்பாளர்களுக்கு அனுப்பி வைக்கப்படும். எந்தவொரு சிறப்புக் கூட்டத்திற்கும் முன்னர், நியாயமான அறிவித்தல் வழங்கப்பட்டு, சிறப்புக் கூட்டத்தைத் திட்டமிடுவதற்கு முன் சகல பணிப்பாளர்களின் ஒப்புதல்கள் பெறப்படும்.
3(1)(vi)	12 மாத காலப்பகுதியில் அடுத்தடுத்து நடைபெற்ற கூட்டங்களில் மூன்றில் இரண்டு பங்கிற்கு வருகைதராத அல்லது அடுத்தடுத்த மூன்று கூட்டங்களுக்கு வருகை தராத பணிப்பாளர்கள் மீது சபை உரிய நடவடிக்கை எடுத்துள்ளது. எனினும், பணிப்பாளர் சபைக் கூட்டங்களில் மாற்றுப் பணிப்பாளரினால் சமூகம்தராத பணிப்பாளரின் இடம் நிரப்பப்படுமாயின், அது சமூகமளித்துள்ளதாகக் கருதப்படும்.	நிறைவேற்று அதிகாரமற்ற சுயாதீன பணிப்பாளரான திருமதி. ஹிரந்தி கருணாரத்ன, தொடர்ச்சியாக மூன்று கூட்டங்களில் பங்கெடுக்காமையினால் வங்கி அவருக்கு இவ்விடயம் தொடர்பில் எச்சரிக்கை கடிதம் ஒன்றை அனுப்பிவைத்துள்ளது.
3(1)(vii)	வங்கி ஒரு கம்பனி செயலாளரை நியமித்துள்ளது. அவர், 1988 ஆம் ஆண்டின் 30 ஆம் இலக்க வங்கிச் சட்டத்தின் பிரிவு 43 இன் பிரிவுகளைத் திருப்திப்படுத்துகிறார். அவர், பணிப்பாளர் சபை மற்றும் பங்குதாரர்களின் கூட்டங்களுக்கு செயலாளராகவும், நியதிச் சட்டங்கள் மற்றும் ஏனைய ஒழுங்கு விதிகளின் கீழ் குறித்துரைக்கப்பட்ட ஏனைய பணிகளையும் மேற்கொள்வார்.	இணங்கி நடக்கப்பட்டுள்ளது 1988 ஆம் ஆண்டின் 30 ஆம் இலக்க வங்கிச் சட்டத்தின் பிரிவு 43 க்கு அமைய, செயலாளர் ஒருவர் நியமிக்கப்பட்டுள்ளார். மேலும், பிரதேச அபிவிருத்தி வங்கி சட்டத்தின் பிரிவு 19 இன் பிரகாரம் செயலாளர் ஒரு முழு நேர அலுவலராவார்.
3(1)(viii)	கம்பனி செயலாளரின் அறிவுரைகளையும், சேவைகளையும் பணிப்பாளர்களும் அணுகுவதற்குரிய செயன்முறை ஒன்று உள்ளது.	இணங்கி நடக்கப்பட்டுள்ளது பணிப்பாளர்கள் அனைவரும் சபையின் செயலாளரின் அறிவுரைகளையும், சேவைகளையும் பெற முடியும்.
3(1)(ix)	கம்பனியின் செயலாளர், சபைக் கூட்டக் குறிப்புகளைப் பேணி வருவார். அத்தகைய சபைக் கூட்டக் குறிப்புகளை, பணிப்பாளர்கள் பரிசோதிக்க செயன்முறையொன்று உள்ளது.	இணங்கி நடக்கப்பட்டுள்ளது சபையின் செயலாளர், கூட்டக் குறிப்புகளைப் பேணிப் பாதுகாக்கிறார். மேலும், அத்தகைய குறிப்புகள் எந்தவொரு பணிப்பாளரின் மேற்பார்வைக்கும் உட்பட்டது.

பிரிவு	கொள்கை	2022ஆம் ஆண்டில் இணக்க நிலை
3(1)(x)	சபைக் கூட்டக் குறிப்பு பின்வரும் விடயங்களை உள்ளடக்கும் அல்லது குறிக்கும் - (a) பயன்படுத்தப்பட்ட தரவுகள் மற்றும் தகவல்களின் சாராம்சம் (b) சபை கருத்திற் கொண்ட விடயங்கள (c) நிகழ்வு கண்டறிதல் தொடர்பான கண்டறிதல்களும், விவாதத்திற்கு உட்பட்ட விடயங்களும் அல்லது மாறான கருத்துக்களும். இவை. சபை தனது கடமைகளை உரிய கவனத்துடனும், விவேகமாகவும் பூர்த்தி செய்தனவா என்பதை விளக்கும். (d) சபை மூலோபாயங்கங்கள் மற்றும் கொள்கைகளுடன் இணங்கி நடந்த விடயங்களும் பொருத்தமான சட்டங்கள் மற்றும் ஒழுங்கு விதிகளுடைய பின்பற்றுதல்களும். (e) வங்கி எதிர்கொண்ட இடர்கள் பற்றிய புரிந்துணர்வும், கையாளப்பட்ட இடர் முகாமைத்துவ வழிமுறைகளும் பற்றிய கண்ணோட்டமும். (f) சபையின் முடிவுகளும் தீர்மானங்களும்.	இணங்கி நடக்கப்பட்டுள்ளது சபைக் கூட்டக் குறிப்புகள் பின்வரும் தேவைப்பாடுகளை உள்ளடக்கும். i. குறிப்பான விடயதானங்கள் மீது எடுக்கப்பட்ட வணிக முடிவுகள். ii. விசேட விடயதானங்கள் மீது மேற்கொள்ளப்பட்ட தீர்மானங்கள் iii. முகாமைத்துவத்திற்கு கொண்டு செல்லப்பட்ட அறிவுறுத்தல்களும், விடயங்களும் iv. விடயதானங்கள் மீதான கொள்கை முடிவுகளும், செயற்திறன்கள் பற்றிய மீளாய்வும் v. சபை உப குழு அறிக்கைகள் மீதான பரிந்துரைகள் vi. இடர் முகாமைத்துவ வழிமுறைகள் பற்றிய கண்ணோட்டம். vii. சபை மூலோபாயங்கள் மற்றும் கொள்கைகளுடனான இணக்கம்
3(1)(xi)	பணிப்பாளர்களின் நியாயமான வேண்டுகோள்களுக்கு அமைய, வங்கியின் செலவில் பொருத்தமான சூழ்நிலைகளில் சுயாதீனமான தொழில்முறைசார் அறிவுரைகளைப் பெற்றுக் கொள்வதற்கான நடைமுறைகள், பணிப்பாளர் சபையினால் ஏற்றுக் கொள்ளப்பட்டு உள்ளன.	இணங்கி நடக்கப்பட்டுள்ளது சுயாதீனமான தொழில்முறைசார் அறிவுரைகளைப் பெற்றுக் கொள்ள, சபை அங்கீகரித்த நடைமுறைகள் உள்ளன.
3(1)(xii)	அக்கறைகளுக்கு இடையிலான முரண்பாடுகளைத் தவிர்க்கவும், அத்தகைய சூழ்நிலைகள் இருக்கும் போது அவற்றை எதிர்கொள்ளக் கூடிய விடயங்களைத் தீர்மானிக்கவும், அறிக்கையிடவும், தீர்வளிக்கக் கூடிய ஒரு நடைமுறை உள்ளது. பணிப்பாளர் ஒருவரின் நெருங்கிய உறவினர் அல்லது அப்பணிப்பாளருக்கு ஒரு குறிப்பிட்ட விடயத்தில் கணிசமான அளவு அக்கறை இருக்குமாயின், அத்தகைய விடயம் தொடர்பில் சபை எடுக்கும் தீர்மானத்தில் வாக்களிப்பதில் இருந்து பணிப்பாளர் விலக வேண்டும். அவர் பணிப்பாளர் சபைக் கூட்டத்தில் பொருத்தமான நிகழ்ச்சி நிரல் விடயத்திற்கான நிறைவெண்ணில் உள்ளடக்கப்படுவார்.	இணங்கி நடக்கப்பட்டுள்ளது சபையின் பணிப்பாளர் ஒருவருக்கு, தணிப்பட்ட ரீதியில் அக்கறை இருக்கக்கூடிய விடயம் தொடர்பில் தீர்மானம் மேற்கொள்ளப்படும் போது, அவர் அந்தத் தீர்மானம் தொடர்பில் வாக்களிப்பதில் இருந்து விலக வேண்டும். அக்கறை உள்ள பணிப்பாளர், சபைக் கூட்டத்தில் குறிப்பிட்ட நிகழ்ச்சி நிரல் விடயத்திற்கான நிறைவெண்ணில் பணிப்பாளர் உள்ளடக்கப்பட மாட்டார். எனினும், இவ்வாண்டில் இதுபோன்ற நிகழ்வுகள் எதுவும் இடம்பெறவில்லை.

பிரிவு	கொள்கை	2022ஆம் ஆண்டில் இணக்க நிலை
3(1)(xiii)	வங்கியின் திசை மற்றும் கட்டுப்பாடு, அதன் அதிகாரத்தின் கீழ் உறுதியாக உள்ளது என்பதை இனங்காண்பதற்கு என்று விசேடமாக ஒதுக்கப்பட்ட ஒரு விதிமுறையான விடய அட்டவணை ஒன்று உள்ளது.	இணங்கி நடக்கப்பட்டுள்ளது சபைக்கென ஒதுக்கப்பட்ட அதிகாரங்கள் சபையின் சாசனத்தில் இணைக்கப்பட்டுள்ளன.
3(1)(xiv)	வங்கி அதன் கடப்பாடுகளைப் பூர்த்தி செய்ய இயலாத விடத்து அல்லது அத்தகைய ஒரு சந்தர்ப்பம் இருக்குமெனத் தோன்றுமிடத்து அல்லது வங்கி ஒரு முடிவுக்கு வரக்கூடிய சந்தர்ப்பம் உள்ள விடத்து அல்லது வைப்பாளர்கள் அல்லது ஏனைய கடன் தருநர்கள் காரணமாக, கொடுப்பனவுகளை நிறுத்தி வைக்க தீர்மானிக்கின்ற போது, வங்கி தொடர்பான தீர்மானம் ஒன்றை அல்லது நடவடிக்கை எடுக்க முன்பு சபை வங்கியின் பணிப்பாளருக்கு (மேற்பார்வைக்குப் பொறுப்பான) அறிவிக்கும்.	அத்தகைய ஒரு சூழ்நிலை எழாதவிடத்தும், வங்கி ஒரு நிலைக்குத் தள்ளப்படும் சூழ்நிலை காணப்படுமிடத்தும் அல்லது வைப்பாளர்கள் மற்றும் ஏனைய கடன் தருநர்களால் கொடுப்பனவுகள் இடை நிறுத்தப்படுகின்ற போதும், அவை பற்றி ஏதேனும் தீர்மானம் அல்லது நடவடிக்கை எடுக்க முன்பு வங்கி மேற்பார்வைக்குப் பொறுப்பான பணிப்பாளருக்கு அறிவிக்க வேண்டிய தேவை பற்றி சபை அறிந்துள்ளது.
3(1)(xv)	நிதியச் சபையினால் தேவைப்படுத்தப்பட்டவாறு தேவையான மட்டங்களில் வங்கி முதலீடுகளைக் கொண்டுள்ளது.	நாணய சபையினால் தீர்மானிக்கப்பட்டவாறு வங்கி அதன் மூலதன போதுமான விகிதத்தைப் பேணியுள்ளது. எவ்வாறாயினும் ஒருசில சந்தர்பங்களின் கீழ் வுசைந 1 மூலதனமானது தேவைப்படும் மட்டத்தினை விட கீழாக பேணப்பட்டுள்ளது.
3(l)(xvi)	இந்த வழிகாட்டல்களின் மூன்றாவது வழிகாட்டிக்கு இணங்கி நடக்கின்ற வகையில், சபை வங்கியின் வருடாந்த அறிக்கையில் இந்த இணக்கப்பாடு பற்றிக் குறிப்பிட்டு, ஒரு வருடாந்தக் கூட்டுறவு ஆளுகை அறிக்கையைப் பிரசுரிக்கும்.	இணங்கி நடக்கப்பட்டுள்ளது இலங்கை மத்திய வங்கியினால் வெளியிடப்பட்ட கூட்டுறவு ஆளுகை வழிகாட்டி தேவைப்பாட்டுடன் இணங்கி நடக்கப்பட்டமை பற்றி, கூட்டுறவு ஆளுகை அறிக்கை, வருடாந்த அறிக்கையில் குறிப்பிட்டுள்ளது.
3(1)(xvii)	ஒவ்வொரு பணிப்பாளரினாலும் வருடாந்தம் முன்னெடுக்கப்பட வேண்டிய சுய மதிப்பீட்டுத் திட்டம் ஒன்றை சபை ஏற்றுக் கொண்டுள்ளது. அத்தகைய மதிப்பீடுகளின் பதிவுகளை சபை பேணி வருகிறது.	இணங்கி நடக்கப்பட்டுள்ளது பணிப்பாளர் சபையிடம் இவ்வருடத்தினுள் இராஜினாமா செய்த இரு பணிப்பாளர்களின் சுய மதிப்பீட்டு படிவங்கள் தவிர்ந்ததாக உரிய சுய மதிப்பீட்டுப் படிவங்கள் உள்ளன.
3(2)	**சபை உள்ளடக்கம்**	
3(2)(i)	சபை, 7 பேருக்குக் குறையாத, 11 பேரை விஞ்ஞாத பணிப்பாளர்களை கொண்டுள்ளது.	இணங்கி நடக்கப்பட்டுள்ளது 2022.12.31 ஆம் திகதியின் அடிப்படையில், 09 பணிப்பாளர்களை உள்ளடக்கிய வழிகாட்டுதல் படி ஆண்டு முழுவதும் 7 பேருக்கு குறையாமலும் 11 பேருக்கு கூடாமலும் சபையைக் கொண்டுள்ளது.
3(2)(ii)	(a) பிரதம நிறைவேற்று அதிகாரி என்ற பதவியை வகிக்கின்ற பணிப்பாளரைத் தவிர, ஏனைய பணிப்பாளர்களின் மொத்த சேவைக்காலம் 9 வருடங்களை விஞ்ஞாது.	இணங்கி நடக்கப்பட்டுள்ளது வழிகாட்டியில் குறிப்பிடப்பட்டவாறு, எந்தவொரு பணிப்பாளரும் 9 வருடங்களை விஞ்சவில்லை.

பிரிவு	கொள்கை	2022ஆம் ஆண்டில் இணக்க நிலை
3(2)(ii)	(b) எவரேனும் பணிப்பாளர் ஒருவர் 9 வருடங்களை விஞ்சியிருக்கின்ற விடத்து, நிலைமாற்ற ஏற்பாடுகள் பிரயோகிக்கப்பட்டுள்ளன என்பதைக் கவனிக்க.	பொருத்தமற்றது அத்தகைய சூழ்நிலை எழவில்லை.
3(2)(iii)	பிரதம நிறைவேற்று அதிகாரி உட்பட நிறைவேற்றுப் பணிப்பாளர்களின் எண்ணிக்கை பணிப்பாளர் சபையின் எண்ணிக்கையில் மூன்றில் ஒன்றை விஞ்சவில்லை.	இணங்கி நடக்கப்பட்டுள்ளது சபையில் எந்தவொரு நிறைவேற்றுப் பணிப்பாளரும் இல்லை.
3(2)(iv)	குறைந்தபட்சம் மூன்று சுயாதீன நிர்வாகம் சாராத பணிப்பாளர்கள் அல்லது சபை மொத்த எண்ணிக்கையில் மூன்றில் ஒன்று இவற்றில் எது அதிகமானதோ, அவ்வகையில் குறைந்த பட்சம் மூன்று சுயாதீனப் பணிப்பாளர்கள் இருத்தல் வேண்டும். நிர்வாகம் சாராத பணிப்பாளர்கள் இருப்பின், அவர்கள் சுயாதீனமானவர்களாகக் கருதப்பட முடியுமா என்பதைக் கவனிக்க. (a) வங்கியின் பங்குகளில் 01 வீதத்திற்கு மேற்பட்ட நேரடியான அல்லது மறைமுகமான பங்குகளை வைத்திருத்தல். (b) தற்போது பணிப்பாளராக நியமிக்கப்படுவதற்கு இரண்டு வருட காலப்பகுதிகளில் வழிகாட்டி 3(7) இல் விபரிக்கப்பட்டவாறு, வங்கியுடனான வணிக நடவடிக்கைகளில் வங்கியின் ஒழுங்குபடுத்தல் மூலதனத்தில் 10% ஐ விட அதிகமாக இருந்தது அல்லது இருக்கின்றது. (c) பணிப்பாளராக நியமனம் பெறுவதற்கு இரண்டு வருட காலப்பகுதியில் வங்கியினால் பணிக்கு அமர்த்தப்பட்டுள்ளார். (d) நெருங்கிய உறவினர் ஒருவராக, அவர் ஒரு பணிப்பாளராக, பிரதம நிறைவேற்று அதிகாரியாக, முக்கிய முகாமைத்துவ ஆட்களின் ஒரு உறுப்பினராக வங்கியின் முக்கிய பங்குதாரராக அல்லது ஏனைய வங்கிகளின் முக்கிய பங்குதாரராக (இப்பிரிவின் நோக்கத்திற்காக “நெருங்கிய உறவினர் என்பது” வாழ்க்கைத் துணை அல்லது நிதி ரீதியாகத் தங்கியிருக்கும் பிள்ளையைக் குறிக்கும்). (e) வங்கியின் விசேட பங்குதாரரை பிரதிநிதித்துவப்படுத்தல்.	இணங்கி நடக்கப்பட்டுள்ளது ஆய்வுக்குரிய ஆண்டில் குறைந்தபட்சம் ஆறு சுயாதீன.். நிர்வாகம் சாராத பணிப்பாளர்கள் குழுவைப் பிரதிநிதித்துவப்படுத்தியுள்ளனர். 2008 ஆம் ஆண்டின் 41 ஆம் இலக்க பிரதேச அபிவிருத்தி வங்கி சட்டத்தின்படி ஒவ்வொரு பங்குதாரர் வங்கிகளிலும் இருந்து மூன்று சுயாதீனமற்ற பணிப்பாளர்கள் நியமிக்கப்பட்டுள்ளதுடன். ஒரு சுயாதீனமான பணிப்பாளர் பொதுத் திறைசேரிக்கு நியமிக்கப்பட்டுள்ளார்.

பிரிவு	கொள்கை	2022ஆம் ஆண்டில் இணக்க நிலை
3(2)(iv)	(f) கம்பனியின் ஒரு பணியாளர் அல்லது பணிப்பாளர் அல்லது ஒரு முக்கியமான பங்குதாரர் அல்லது வணிக நிறுவனம் இவற்றில் ஏதேனும் ஒன்று, (i) வழிகாட்டி 3(7) இல் வரையறை செய்யப்பட்டவாறு, தற்போது வங்கியுடன் பரிவர்த்தனை ஒன்றில் ஈடுபட்டு வங்கியின் ஒழுங்குபடுத்தல் மூலதனம் 10% ஐ விட அதிகரித்திருத்தல். அல்லது, (ii) இவற்றில் ஏதேனும் ஒன்றில் வங்கியின் ஏனைய பணிப்பாளர்களில் எவரேனும் ஒருவர் பணி புரியுமிடத்து அல்லது பணிப்பாளராக இருக்குமிடத்து அல்லது முக்கிய பங்குதாரராக இருத்தல். அல்லது, (iii) வழிகாட்டி 3(7) இல் குறிப்பிடப்பட்டவாறு, வங்கியின் ஏனைய பணிப்பாளர்களில் எவரேனும் ஒருவர் பரிவர்த்தனை ஒன்றில் ஈடுபட்டு அது, வங்கியின் ஒழுங்குபடுத்தல் மூலதனத்தில் 10% அதிகரித்திருத்தல்.	இணங்கி நடக்கப்பட்டுள்ளது
3(2)(v)	சுயாதீனப் பணிப்பாளர் ஒருவரைப் பிரதிநிதித்துவப்படுத்த ஒரு மாற்றுப் பணிப்பாளர் நியமிக்கப்படும் சந்தர்ப்பத்தில் அவ்வாறு நியமிக்கப்பட்ட நபர் சுயாதீனப் பணிப்பாளருக்குரிய தகுதிகளைப் பூர்த்தி செய்கின்றாரா என்பதைப் பரீட்சித்தல்.	பொருத்தமற்றது 2008 ஆம் ஆண்டின் 41 ஆம் இலக்க பிரதேச அபிவிருத்தி வங்கி சட்டத்தின் பிரகாரம் மாற்றுப் பணிப்பாளரை நியமிப்பதற்கான ஏற்பாடுகள் இல்லை.
3(2)(vi)	சுயாதீனப் பணிப்பாளர்களை நியமனம் செய்யும் செயன்முறையை வங்கி கொண்டுள்ளது.	பொருத்தமற்றது பிரதேச அபிவிருத்தி வங்கி சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம், சுயாதீன பணிப்பாளர்கள் கௌரவ அமைச்சரினால் நியமிக்கப்படுவார்.
3(2)(vii)	வங்கியின் குறித்துரைக்கப்பட்ட நிறைவெண் 50% க்கு மேற்பட்ட பணிப்பாளர்களை உள்ளடக்கும். நிறைவெண்ணில் 50% க்கு மேற்பட்டவர்கள் நிர்வாகம் சாராத பணிப்பாளர்களை உள்ளடக்க வேண்டும்.	இணங்கி நடக்கப்பட்டுள்ளது பிரதேச அபிவிருத்தி வங்கி சட்டத்தின் 16வது பிரிவின்படி, பணிப்பாளர்களின் எண்ணிக்கை 07 ஆக இருப்பின், நிறைவெண் 05 ஆகவும், பணிப்பாளர்களின் எண்ணிக்கை 7 ஐ விட அதிகமாக இருப்பின் நிறைவெண் 06 ஆகவும் அமையும்.

பிரிவு	கொள்கை	2022ஆம் ஆண்டில் இணக்க நிலை
3(2)(viii)	வங்கியின் வருடாந்த கூட்டுறவு ஆளுகை அறிக்கையில், சபையின் உள்ளடக்கத்தை பணிப்பாளர்கள், தலைவரின் பெயர் உள்ளடங்கலாக, நிர்வாகப் பணிப்பாளர்கள், நிர்வாகம் சாராத பணிப்பாளர்கள் மற்றும் சுயாதீன நிர்வாகம் சாராத பணிப்பாளர்கள் என்ற வகுதிக்குள் உள்ளடக்கும்.	இணங்கி நடக்கப்பட்டுள்ளது சபை உள்ளடக்கம் மற்றும் பணிப்பாளர்களின் தகவல் என்பன வருடாந்த அறிக்கையில் வெளிப்படுத்தப்பட்டுள்ளன.
3(2)(ix)	சபைக்கு புதிய பணிப்பாளர்களை நியமிப்பது தொடர்பான நடைமுறை.	பொருத்தமற்றது பி.அ.வ சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம், பணிப்பாளர்கள், கௌரவ அமைச்சரினால் நியமிக்கப்படுவர்.
3(2) (x)	பணிப்பாளர்களின் நியமனத்தின் பின்னர் நடைபெறும் முதலாவது பொதுக் கூட்டத்தில் பங்குதாரர்களினால் தேர்ந்தெடுக்கப்படுவதற்கு அமைய சமயாசமய வெற்றிடம் ஒன்று நிரப்பப்படும்.	பொருத்தமற்றது பணிப்பாளர்களின் நியமனங்களும், நீக்கங்களும் பி.அ.வங்கியின் சட்ட ஏற்பாடுகளின் பிரகாரம் கௌரவ அமைச்சரினால் மேற்கொள்ளப்படும்.
3(2)(xi)	பணிப்பாளர் ஒருவர் இராஜினாமா செய்யுமிடத்து, அல்லது அவர் பதவியிலிருந்து நீக்கப்படுமிடத்து சபை, a) பணிப்பாளரின் ராஜினாமா அல்லது நீக்கம் பற்றியும் அத்தகைய நீக்கம் அல்லது இராஜினாமாவுக்கான காரணங்கள், ஆயின், அதற்கு மட்டும் மட்டுப்படுத்தாது, வங்கியின் பணிப்பாளருக்கு உள்ள பொருத்தமான உடன்பாடின்மை பற்றிய தகவல்களையும் அறிவிக்கும். அத்துடன், b) பங்குதாரர்களின் கவனத்திற்கு ஏதேனும் விடயங்கள் கொண்டுவரப்பட வேண்டுமா என்பதை உறுதிப்படுத்தி கூற்று ஒன்றை வெளியிடும்.	இணங்கி நடக்கப்பட்டுள்ளது பணிப்பாளர்களின் நியமனங்களும், நீக்கங்களும் பி.அ.வங்கியின் சட்ட ஏற்பாடுகளின் பிரகாரம் அமைச்சரினால் மேற்கொள்ளப்படும். பணிப்பாளர் ஒருவர் ராஜினாமா செய்வது பற்றி கடிதம் மூலம் வங்கிக்கு அறிவிக்க வேண்டும். அக்கடிதத்தின் அடிப்படையில் பணிப்பாளரின் இராஜினாமா பற்றி வங்கியானது அமைச்சுக்கு அறிவிக்கும்.
3(2)(xii)	வங்கியின் பணிப்பாளர் ஒருவர் அல்லது ஊழியர் ஒருவர் இன்னுமொரு வங்கியின் பணிப்பாளராக நியமிக்கப்பட்டுள்ளாரா, தெரிவு செய்யப்பட்டுள்ளாரா அல்லது தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளாரா என்பதை இனங்காண நடைமுறை ஒன்று உள்ளதா என்பதைப் பரீட்சித்தல்.	இணங்கி நடக்கப்பட்டுள்ளது திறைசேரி செயலாளரின் ஆலோசனையின் பிரகாரம், கௌரவ அமைச்சரினால் பணிப்பாளர்களின் நியமனம் மேற்கொள்ளப்படுவதனால், இத்தகைய சூழ்நிலை எழுவதற்கு வாய்ப்பு இல்லை. அத்துடன், இலங்கை மத்திய வங்கி, பணிப்பாளர்கள் மற்றும் முக்கிய முகாமைத்துவ ஆட்களிடம் இருந்து பெறப்பட்ட பிரகடனங்களின் அடிப்படையில் தகுதி மற்றும் தனி உரிமை என்பவற்றை மதிப்பீடு செய்யும்.

பிரிவு	கொள்கை	2022ஆம் ஆண்டில் இணக்க நிலை
3(3)	**பணிப்பாளர்களின் தகுதி மற்றும் தனியுரிமை ஆகியவற்றிற்கான அளவுகோல்கள்**	
3(3)(i)	பணிப்பாளராகச் சேவையாற்றும் நபருடைய வயது 70ஐக் கடந்திருத்தல் ஆகாது.	இணங்கி நடக்கப்பட்டுள்ளது 70 வயதிற்கு மேற்பட்ட எந்தவொரு பணிப்பாளரும் சபையில் இல்லை.
	a) நிலைமாற்ற ஏற்பாடுகள் பின்பற்றப்பட வேண்டும்.	பொருத்தமற்றது
3(3)(ii)	வங்கியின் துணைக் கம்பனிகள் அல்லது இணைக் கம்பனிகள் உட்பட நபர் ஒருவர் 20 கம்பனிகள்/ நிறுவனங்கள்/ ஸ்தாபனங்கள் என்பவற்றில் பணிப்பாளர் பதவியை வகித்திருந்தால்.	இணங்கி நடக்கப்பட்டுள்ளது பணிப்பாளர்களின் பிரகடனங்களின்படி, எந்தவொரு பணிப்பாளரும் 20 கம்பனிகளில் பணிப்பாளர் பதவியை வகிக்கவில்லை.
3 (3)(iii)	உரிமம் பெற்ற வங்கி ஒன்றில் பணிப்பாளர் அல்லது பிரதான நிறைவேற்று அதிகாரியாகக் கடமையாற்றிய ஒருவர் அவரது விடுபாட்டுத் திகதியில் இருந்து 6 மாத தணிப்புக் காலப்பகுதி முடிவடைய முன்பு இலங்கையில் செயற்படுகின்ற இன்னுமொரு உரிமம் பெற்ற வங்கியில் பணிப்பாளராக அல்லது பிரதான நிறைவேற்று அதிகாரியாக நியமிக்கப்படலாகாது.	பொருத்தமற்றது அவ்வாறான நிலைமை ஏற்படவில்லை
3(4)	**சபையினால் கையளிக்கப்பட்ட முகாமைத்துவப் பணிகள்**	
3(4)(i)	கையளிப்பு ஏற்பாடுகள், சபையினால் அங்கீகரிக்கப்பட்டுள்ளன.	இணங்கி நடக்கப்பட்டுள்ளது சபை வங்கியின் விவகாரங்களோடு தொடர்புபட்ட விடயங்களை சபை உப குழுக்கள், பிரதான நிறைவேற்று அதிகாரி மற்றும் ஏனைய முக்கிய முகாமைத்துவ ஆட்களிடம் கையளித்துள்ளது.
3(4)(ii)	அத்தகைய விடயங்கள் கையளிக்கப்பட்டிருந்த போதிலும், 3(1)(i) இல் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்கள் தொடர்பான பொறுப்பினை சபை ஏற்றுக் கொண்டுள்ளது.	இணங்கி நடக்கப்பட்டுள்ளது அத்தகைய விடயங்கள் கையளிக்கப்பட்ட போதிலும், 3(1)(i) இல் குறிப்பிட்டப்பட்ட பொறுப்புக்களை சபை பொறுப்பேற்றுள்ளது.
3(4)(iii)	வங்கியின் தேவைகளுக்கு கையளிக்கப்பட்ட விடயங்கள் பொருத்தமாக உள்ளன என்பதை உறுதிப்படுத்துவதற்கு கையளிப்பு நடைமுறையைக் காலாந்தர அடிப்படையில் சபை மீளாய்வு செய்யும்.	இணங்கி நடக்கப்பட்டுள்ளது சபை கையளிக்கப்பட்ட செயன்முறையை காலாந்தர அடிப்படையில் மீளாய்வு செய்து அங்கீகரிக்கும். அதிகார மட்டத்திற்கு அமைய, அங்கீகார வரையறைகள் தீர்மானிக்கப்படுகின்றன.

பிரிவு	கொள்கை	2022ஆம் ஆண்டில் இணக்க நிலை
3(5)	**தலைவர் மற்றும் பிரதான நிறைவேற்று அதிகாரி**	
3(5)(i)	தலைவர் மற்றும் பிரதான நிறைவேற்று அதிகாரி ஆகியோரின் வகிபங்கு வெவ்வேறாக இருப்பதோடு, அது, ஒரே நபரினால் செயற்படுத்தப்படுவதில்லை.	இணங்கி நடக்கப்பட்டுள்ளது தலைவர் மற்றும் பிரதான நிறைவேற்று அதிகாரி ஆகிய பதவிகள் தனித்தனியாக உள்ளன. அவை இரண்டும், இரண்டு தனிப்பட்ட நபர்களால் நிறைவேற்றப்படுகின்றன. தலைவர் ஒரு நிர்வாகம் சாராத பணிப்பாளராக இருப்பார். அத்துடன், பிரதான நிறைவேற்று அதிகாரி, வங்கியின் வணிகம் மற்றும் செயற்பாடு தொடர்பான அன்றாட முகாமைத்துவத்திற்கு நிர்வாகப் பொறுப்பு வகிப்பார். எனினும், பிரதேச அபிவிருத்தி வங்கி சட்டத்தின் பிரிவு 3க்கு அமைவாக, 2018 ஆம் ஆண்டு நவம்பர் 30 ஆம் திகதி நடைபெற்ற சபைக் கடன் குழுவின் கூட்டத் தீர்மானத்திற்கு அமைய, தலைவர் வங்கி சார்பாக உடன்படிக்கைகள், முறிகள், உறுதிகள் மற்றும் ஏனைய சாதனங்களில் கையொப்பமிடுவார்.
3(5)(ii)	தலைவர் ஒரு நிர்வாகம் சாராத பணிப்பாளராவார். தலைவர், சுயாதீனப் பணிப்பாளர் ஒருவராக இல்லாத சந்தர்ப்பத்தில், பொருத்தமாக ஆவணப்படுத்தப்பட்ட விதிக் குறிப்புகளுக்கு அமைய, சபை ஒரு சுயாதீனப் பணிப்பாளரை சிரேஷ்ட பணிப்பாளராகக் குறித்துரைக்கும். சிரேஷ்ட பணிப்பாளரின் பதவி, வங்கியின் வருடாந்த அறிக்கையில் வெளியிடப்பட்டுள்ளது.	இணங்கி நடக்கப்பட்டுள்ளது தலைவர் சுயாதீன நிர்வாகம் சாராத பணிப்பாளர் ஆவார். அத்துடன், வங்கி சிரேஷ்ட பணிப்பாளராக எவரையும் நியமிக்கவில்லை.
3(5)(iii)	தலைவர், பிரதான நிறைவேற்று அதிகாரி மற்றும் சபை உறுப்பினர்களுக்கு இடையே ஏதேனும் உறவுமுறை (நிதி, வர்த்தகம், குடும்ப அல்லது ஏதேனும் முக்கிய/ பொருத்தமான உறவு முறைகள்) இருப்பின் அத்துடன், சபை உறுப்பினர்களுக்கு இடையே உள்ள உறவு முறையின் இயல்பு உட்பட இந்த உறவு முறைகள் பற்றி இனங்காணவும், வெளிப்படுத்தவும் சபை அதன் கூட்டுறவு ஆளுகை அறிக்கையில் ஒரு செயன்முறையைக் கொண்டுள்ளது	இணங்கி நடக்கப்பட்டுள்ளது வருடாந்தப் பிரகடனங்கள், அத்தகைய உறவு முறைகளை இனங்காண உதவுகின்றன.

பிரிவு	கொள்கை	2022ஆம் ஆண்டில் இணக்க நிலை
3(5)(iv)	பின்வரும் சந்தர்ப்பங்களில் சபை ஒரு சுயமதிப்பீட்டுச் செயன் முறையைக் கொண்டிருக்கும். தலைவர்: (a) சபைக்குத் தலைமைத்துவம் வழங்கும் போது, (b) சபை வினைத்திறனாகச் செயற்படுவதுடன், அதன் பொறுப்புகளை நிறைவேற்றுகிறது என்பதை உறுதிப்படுத்தல். மற்றும், (c) அனைத்து முக்கிய மற்றும் பொருத்தமான விடயங்கள் சபையினால் உரிய நேரத்தில் கலந்துரையாடப்படுதலை உறுதிப்படுத்தல்.	இணங்கி நடக்கப்பட்டுள்ளது பணிப்பாளர் சபையின் சுயமதிப்பீட்டுப் படிவங்கள் உள்ளன.
3(5)(v)	தலைவரால் அங்கீகரிக்கப்பட்ட ஒரு விதிமுறையான நிகழ்ச்சி நிரல் கம்பனி செயலாளரினால் வழங்கப்படும்.	இணங்கி நடக்கப்பட்டுள்ளது தலைவர் மற்றும் பிரதான நிறைவேற்று அதிகாரி ஆகியோரின் ஆலோசனையின் பிரகாரம், ஒவ்வொரு சபைக் கூட்டத்திற்கும் உரிய நிகழ்ச்சி நிரல் சபையின் செயலாளரினால் தயாரிக்கப்பட்டு பகிரப்படும்.
3(5)(vi)	சபைக் கூட்டத்தில் எழுப்பப்படும் விடயங்கள் பற்றி அனைத்து பணிப்பாளர்களுக்கும் உரிய முறையில் விவரிக்கப்பட்டுள்ளது என்பது, உரிய நேரத்தில் மேற்கொள்ளப்படும் சமர்ப்பணங்கள் மூலம் உறுதிப்படுத்தப்படும்.	இணங்கி நடக்கப்பட்டுள்ளது அவசரத் தேவைகள் தவிர, ஏனைய சந்தர்ப்பங்களில் சபையில் கலந்தாராயப்பட உத்தேசிக்கப்பட்ட விடயங்கள் பற்றிய விபரங்கள் கூட்டம் நடைபெற 07 தினங்களுக்கு முன்னதாக கூட்ட அறிவித்தலுடன் பகிரப்படும்.
3(5)(vii)	சபையின் விடயங்களில் ஒரு முழுமையான மற்றும் துடிப்பான பங்களிப்பை மேற்கொள்ள, அனைத்துப் பணிப்பாளர்களுக்கும் ஊக்குவிப்பதற்கான ஒரு சுய மதிப்பீட்டு செயன்முறை உள்ளது. அத்துடன், வங்கியின் சிறந்த அக்கறையின் நிமித்தம் செயற்படும் பொருட்டு தலைவர் முன்னிலை வகிப்பார்.	இணங்கி நடக்கப்பட்டுள்ளது சபை அதன் வினைத்திறனை சுயமதிப்பீட்டு செயன்முறை மூலம் மதிப்பீடு செய்துள்ளது.
3(5)(viii)	சபை வைத்திருக்கின்ற சுயமதிப்பீட்டுச் செயன்முறை நிர்வாகம் சாராத பணிப்பாளர்களின் பங்களிப்பை மதிப்பீடு செய்யும்	இணங்கி நடக்கப்பட்டுள்ளது சபை அதன் வினைத்திறனை சுயமதிப்பீட்டு செயன்முறை மூலம் மதிப்பீடு செய்துள்ளது.
3(5)(ix)	தலைவர் முக்கிய முகாமைத்துவ ஆட்களை மேற்பார்வை செய்யும் நேரடியான நடவடிக்கைகளில் ஈடுபடுவார் அல்லது வேறு ஏதேனும் நிர்வாகக் கடமைகளில் ஈடுபடுவார்	இணங்கி நடக்கப்பட்டுள்ளது தலைவர் நிர்வாகம் சாராத ஒரு பணிப்பாளராக இருக்கின்றார். அவர் முக்கிய முகாமைத்துவ ஆட்களை மேற்பார்வை செய்வதில் நேரடியாக ஈடுபடமாட்டார். எனினும், பிரதேச அபிவிருத்தி வங்கி சட்டத்தின் பிரிவு 03க்கு அமைவாக, 2018 ஆம் ஆண்டு நவம்பர் 30 ஆம் திகதி நடைபெற்ற சபையின் கடன் குழுக் கூட்டத்தின் தீர்மானத்திற்கு அமைய, தலைவர் வங்கி சார்பாக உடன்படிக்கைகள், முறிகள், உறுதிகள் மற்றும் ஏனைய சாதனங்களில் கையொப்பமிடுவார்.

பிரிவு	கொள்கை	2022ஆம் ஆண்டில் இணக்க நிலை
3(5)(x)	பங்குதாரர்களுடன் வினைத்திறனான தொடர்பாடலைப் பேணுவதற்கு ஒரு செயன்முறை இருப்பதோடு, பங்குதாரர்களின் கருத்துக்கள் சபைக்குத் தெரிவிக்கப்படும்.	இணங்கி நடக்கப்பட்டுள்ளது 2008 ஆம் ஆண்டின் 41 ஆம் இலக்க பிரதேச அபிவிருத்தி வங்கிச் சட்டத்தின்படி, வங்கிகளையும், பொதுத் திறைசேரியையும் பிரதிநிதித்துவப்படுத்தும் வகையில், நான்கு உத்தியோகப் பற்றற்ற உறுப்பினர்களும், மூன்று பங்குதாரர்களும் நியமிக்கப்பட்டுள்ளனர்.
3(5)(xi)	வங்கியின் செயற்பாடுகள் மற்றும் வணிகம் தொடர்பாக அன்றாட முகாமைத்துவத்திற்கு பிரதான நிறைவேற்று அதிகாரி ஒரு உயர் நிர்வாகப் பொறுப்பு அதிகாரியாக செயற்படுகிறார்.	இணங்கி நடக்கப்பட்டுள்ளது பிரதான நிறைவேற்று அதிகாரி, வங்கியின் செயற்பாட்டின் நாளாந்த முகாமைத்துவத்திற்குப் பொறுப்பாக இருக்கும் ஒரு நிர்வாக அதிகாரி ஆவார்.
3(6)	**சபையினால் நியமிக்கப்பட்ட குழுக்கள்**	
3(6)(i)	இந்த வழிகாட்டிகளுள் 3(6)(ii), 3(6)(iii), 3(6)(iv) மற்றும் 3(6)(v) ஆகியவற்றில் குறித்துரைக்கப்பட்டவாறு, வங்கி குறைந்த பட்சம் நான்கு சபைக் குழுக்களை ஸ்தாபித்துள்ளது. ஒவ்வொரு சபைக் குழுவின் அறிக்கையும், நேரடியாக சபைக்கு முகவரி இடப்பட்டுள்ளன. ஒவ்வொரு குழுவின் கடமைகள், வகிபங்குகள் மற்றும் செயற்திறன் பற்றி சபை தனது வருடாந்த அறிக்கையில் தெரிவிக்கும்.	இணங்கி நடக்கப்பட்டுள்ளது வழிகாட்டிகள் 3(6)(ii), 3(6)(iii), 3(6) (iv) மற்றும் 3(6)(v) என்பவற்றில் குறித்துரைக்கப்பட்டவாறு வங்கி கீழே குறிப்பிடப்பட்ட குழுக்களை ஸ்தாபித்துள்ளது. அவை சபைக்கு நேரடியாக அறிக்கையிடும். சபை கணக்காய்வுக் குழு சபை மனிதவள மற்றும் சம்பளக் குழு சபைத் தெரிவுக் குழு ஒருங்கிணைக்கப்பட்ட இடர் முகாமைத்துவக் குழு ஒவ்வொரு சபையினுடைய கடமைகள், வகிபங்குகள் மற்றும் செயற்திறன் என்பன பற்றிய அறிக்கை, வருடாந்த அறிக்கையில் உள்ளடக்கப்பட்டுள்ளது. மேலும், வருடாந்த அறிக்கை ஆண்டுப் பொதுக் கூட்டத்தில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.
3(6)(ii)	கணக்காய்வுக் குழு (a) கணக்காய்வுக் குழுவின் தலைவர் தகுதிகளையும், அனுபவத்தையும் கொண்ட ஒரு சுயாதீன நிர்வாகம் சாராத பணிப்பாளர்.	இணங்கி நடக்கப்பட்டது வழிகாட்டல்களுக்கமைவாக கணக்காய்வுக் குழுவின் தலைவராக ஒரு நிர்வாகம் சாராத பணிப்பாளர் 29.08.2022 முதல்இருந்தார். எனினும் 28.02.2022 முதல் 29.07.2022 வரை ஒரு சுயாதீன நிறைவேற்றுப் பணிப்பாளர் தலைமை பதவியில் இருந்தார்.
	(b) குழுவின் அனைத்து உறுப்பினர்களும் நிர்வாகம் சாராத பணிப்பாளர்கள் ஆவர்.	இணங்கி நடக்கப்பட்டுள்ளது குழுவின் அனைத்து உறுப்பினர்களும் நிர்வாகம் சாராத பணிப்பாளர்கள்

பிரிவு	கொள்கை	2022ஆம் ஆண்டில் இணக்க நிலை
	(c) குழு பின்வரும் விடயங்கள் பற்றிய பரிந்துரைகளை மேற்கொண்டுள்ளது. (i) பொருத்தமான நியதிச் சட்டங்களுடன் இணங்கி நடக்கும் வகையில் கணக்காய்வுச் சேவைகளை வழங்குவதற்காக வெளியகக் கணக்காய்வாளரை நியமித்தல். (ii) மத்திய வங்கியினால் காலத்திற்குக் காலம் வழங்கப்படும் கணக்காய்வாளர்களுக்கு உரிய வழிகாட்டிகளை அமுல்படுத்தல். (iii)பொருத்தமான கணக்கியல் நியமங்களைப் பிரயோகித்தல், மற்றும் (iv)கணக்காய்வாளரின் சேவைக் காலமும், கணக்காய்வுக் கட்டணம் மற்றும் கணக்காய்வாளரின் ஏதேனும் இராஜினாமா அல்லது பணி நீக்கம்: எவ்வாறாயினும், கணக்காய்வு பங்காளருடைய ஈடுபாடு, ஐந்து வருடங்களை விஞ்சாதிருத்தல் வேண்டும். அத்துடன், கடந்த கால சேவைக்காலம் பூர்த்தியான திகதியில் இருந்து மூன்று வருடங்கள் பூர்த்தியாவதற்கு முன் குறிப்பிட்ட கணக்காய்வுப் பங்காளரின் சேவையைப் பெற முடியாது.	பொருத்தமற்றது 2008 ஆம் ஆண்டின் 41 ஆம் இலக்க பிரதேச அபிவிருத்தி வங்கி சட்டத்தின் பிரிவு 33 இன்படி கணக்காய்வாளர் நாயகம் வங்கியின் வெளியகக் கணக்காய்வாளர் ஆவார். அரசாங்க கணக்காய்வாளர், அழைப்பின் பேரில் சபை கணக்காய்வுக் குழுவைப் பிரதிநிதித்துவப்படுத்துவார். மற்றும் காலத்திற்குக் காலம் வழங்கப்படும் அரசாங்க மற்றும் மத்திய வங்கி வழிகாட்டிகள் மற்றும் பொருத்தமான கணக்கியல் நியமங்கள் என்பன கூட்டங்களில் கலந்தாராயப்படும்.
	(d) குழு வெளியகக் கணக்காய்வாளரிடம் இருந்து அவர்களுடைய சுயாதீனத் தன்மை பற்றியும், SLAuS இற்கு அமைய கணக்காய்வு நடத்தப்பட்டது என்பதை உறுதிப்படுத்தியும் பிரதிநிதித்துவங்களைப் பெற்றுக் கொண்டது.	பொருத்தமற்றது 2008 ஆம் ஆண்டின் 41 ஆம் இலக்க பிரதேச அபிவிருத்தி வங்கி சட்டத்தின் பிரிவு 33 இன்படி கணக்காய்வாளர் நாயகம் வங்கியின் வெளியகக் கணக்காய்வாளர் ஆவார்.
	(e) குழு பொருத்தமான ஒழுங்கு விதிகளுக்கு அமைய, ஒரு வெளியகக் கணக்காய்வாளரை கணக்காய்வு சாராத சேவைகளைப் பெற்றுக்கொள்ள ஈடுபடுத்துவதற்கான கொள்கை ஒன்றை அமுல்படுத்தியது.	பொருத்தமற்றது கணக்காய்வாளர் நாயகம் வங்கியின் கணக்காய்வாளராக இருப்பதனால், அத்தகைய சூழ்நிலை எழவில்லை.
	(f) குழு கணக்காய்வு ஆரம்பிக்க முன்னர் SLAuS க்கு அமைவாக வெளியகக் கணக்காய்வாளர்களுடன் கணக்காய்வின் இயல்பு மற்றும் எல்லை பற்றி ஆராய்ந்து பூர்த்தியாக்கியது.	பொருத்தமற்றது 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் 13(3) மற்றும் (4) என்பவற்றுக்கு அமைய கணக்காய்வின் எல்லையையும், அளவையும் தீர்மானிப்பதற்கான தற்றுணிபு அதிகாரத்தை கணக்காய்வாளர் நாயகத்திற்கு வழங்குகிறது.

பிரிவு	கொள்கை	2022ஆம் ஆண்டில் இணக்க நிலை
	(g) வங்கியின் நிதிக் கூற்றுக்கள், வருடாந்த அறிக்கை கணக்குகள் மற்றும் வெளிப்படுத்தல்களுக்காக தயாரிக்கப்பட்ட காலாண்டு அறிக்கைகள் என்பவற்றின் நேர்மைத் தன்மையைக் கண்காணிப்பதற்காக குழு வங்கியின் நிதித் தகவல்களை மீளாய்வு செய்ய செயன்முறை ஒன்றைக் கொண்டுள்ளது. அத்துடன், கீழே குறிப்பிடப்பட்ட விடயங்களை பிரதான நிதி அதிகாரியிடமிருந்து பெறவும் ஒரு செயன்முறை உள்ளது. (i) பாரிய தீர்வுத் துறைகள் (ii) கணக்கியல் கொள்கைகள் மற்றும் நடைமுறைகளில் ஏதேனும் மாற்றங்கள் (iii)நிறுவனத் தொடர்ச்சி ஊகம். மற்றும், (iv)பொருத்தமான கணக்கியல் நியமங்கள் மற்றும் ஏனைய சட்டத் தேவைப்பாடுகளுடன் இணங்கி நடத்தல். மற்றும், (v) கணக்காய்வில் இருந்து வருடாந்த நிதிக் கூற்றுக்கள் தொடர்பாக எழுகின்ற குறிப்பிடத்தக்க சீர்படுத்தல்கள்.	இணங்கி நடக்கப்பட்டுள்ளது பாரிய தீர்வுத் துறைகள், கணக்கியல் கொள்கைகளில் ஏற்படும் மாற்றங்கள், பொருத்தமான கணக்கியல் நியமங்கள் மற்றும் ஏனைய சட்டத் தேவைகளைக் கருத்திற் கொண்டு, சபை கணக்காய்வுக் குழு காலாண்டு அடிப்படையிலும், வருடாந்த அடிப்படையிலும் வங்கி நிதிக் கூற்றுக்களை மீளாய்வு செய்யும். மேலும், கணக்காய்வு செய்யப்பட்ட நிதிகள் அவற்றின் வெளிப்பாடுகளுடன் சபைக்கு சமாப்பிக்கப்பட்டுள்ளன.
	(h) கணக்காய்வு சம்பந்தமாக நிர்வாக முகாமைத்துவம் பிரசன்னமாகாத போது, ஏதேனும் பிரச்சினை தொடர்பில் வெளியகக் கணக்காய்வாளர்களை குழு சந்தித்துள்ளது.	இணங்கி நடக்கப்பட்டுள்ளது குழு நிர்வாக முகாமைத்துவத்தின் சம்மதமின்றி வெளியக கணக்காய்வாளர்களுடன் கூட்டங்களை நடத்தியுள்ளது.
	(i) குழு வெளியகக் கணக்காய்வாளரின் முகாமைத்துவக் கடிதத்தையும், முகாமைத்துவத்தினால் அதற்கு அளிக்கப்பட்ட பதிலையும் மீளாய்வு செய்துள்ளது.	இணங்கி நடக்கப்பட்டுள்ளது குழு 2021ஆம் ஆண்டுக்கான முகாமைத்துவக் கடிதத்தை மீளாய்வு செய்து, அதற்குரிய பதிலை அனுப்பி வைத்துள்ளது.
	(j) குழு வங்கியின் உள்ளகக் கணக்காய்வுப் பணி தொடர்பாக பின்வரும் படிமுறைகளைப் பின்பற்ற வேண்டும்.	
	(i) உள்ளகக் கணக்காய்வுத் திணைக்களத்தின் எல்லை, பணிகள் மற்றும் வளங்களின் போதுமான தன்மையை மீளாய்வு செய்வதுடன், குறிப்பிட்ட திணைக்களம் தனது கடமையைச் செய்வதற்குத் தேவையான அதிகாரத்தைக் கொண்டுள்ளது என திருப்திப்படுகிறது.	இணங்கி நடக்கப்பட்டுள்ளது

பிரிவு	கொள்கை	2022ஆம் ஆண்டில் இணக்க நிலை
	(ii) உள்ளகக் கணக்காய்வு நிகழ்சித் திட்டத்தையும், உள்ளகக் கணக்காய்வு செயன்முறையின் பெறுபேறுகளையும் மீளாய்வு செய்வதுடன், தேவையான போது உள்ளகக் கணக்காய்வுத் திணைக்களத்தின் பரிந்துரைகள் மீது பொருத்தமான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன என்பதை உறுதிப்படுத்துதல்.	இணங்கி நடக்கப்பட்டுள்ளது உள்ளகக் கணக்காய்வு நிகழ்ச்சித் திட்டத்தின் மதிப்பாய்வு மற்றும் உள்ளக கணக்காய்வுச் செயன்முறையின் முடிவுகள், தொடர்பான பரிந்துரைகள் என்பன சபை கணக்காய்வுக் குழுவினால் செய்யப்பட்டது. உதாரணம் : 31.05.2022ஆம் திகதிக்குரிய கணக்காய்வு நிகழ்ச்சித்திட்டம் 20.06.2022ஆம் திகதி இடம்பெற்ற சபை கணக்காய்வுக் குழுவினால் மீளாய்வு செய்யப்பட்டது.
	(iii) உள்ளகக் கணக்காய்வுத் திணைக்களத்தின் தலைவர் மற்றும் சிரேஷ்ட பணி உறுப்பினர்களின் செயற்திறன் பற்றிய ஏதேனும் மதிப்பீட்டை மீளாய்வு செய்தல்.	இணங்கி நடக்கப்பட்டுள்ளது 2022ஆம் ஆண்டிற்கான CIA பணிகளின் மதிப்பீடு 27.06.2022ஆம் திகதி CIA நியமிக்கப்பட்ட பின்னர் 15.08.2023ஆம் திகதி இடம்பெற்ற சபையின் கணக்காய்வுக் குழுவினால் மீளாய்வு செய்யப்பட்டது.
	(iv) தலைவர், சிரேஷ்ட பணியாளர்கள் மற்றும் உள்ளகக் கணக்காய்வுப் பணிக்காக வெளியில் இருந்து அமர்த்தப்பட்ட சேவை வழங்குநர்கள் ஆகியோரின் நியமனம் அல்லது பணி முடிவுறுத்தல் பற்றி பரிந்துரை மேற்கொள்ளல்.	இணங்கி நடக்கப்பட்டுள்ளது சபை கணக்காய்வுக் குழு பரிந்துரை செய்த போதிலும், நியமனம் முழு சபையினாலும் அங்கீகரிக்கப்பட்டது.
	(v) குழு பிரதான கணக்காய்வாளர் மற்றும் வெளியே இருந்து அமர்த்தப்பட்ட சேவை வழங்குநர் உள்ளடங்கலாக, உள்ளகக் கணக்காய்வுத் திணைக்களத்தின் சிரேஷ்ட பணியாளர்களின் ராஜினாமாக்களை மதிப்பீடு செய்துள்ளது. அவ்வாறு இராஜினாமாச் செய்வதற்கான காரணங்களைச் சமர்ப்பிப்பதற்கு சிரேஷ்ட பணியாளர்களுக்கும், வெளிச் சேவை வழங்குநர்களுக்கும் ஒரு சந்தர்ப்பம் அளிக்கப்பட்டுள்ளது.	இணங்கி நடக்கப்பட்டுள்ளது குழு உள்ளகக் கணக்காய்வுத் திணைக்களத் தலைவரின் செயற்றிறனை மதிப்பீடு செய்துள்ளது.
	(vi) உள்ளகக் கணக்காய்வுப் பணி, அது மேற்கொள்ளும் கணக்காய்வு நடவடிக்கைகளில் இருந்து சுயாதீனமானது.	இணங்கி நடக்கப்பட்டுள்ளது உள்ளகக் கணக்காய்வுப் பணி, அது மேற்கொள்ளும் கணக்காய்வு நடவடிக்கைகளில் இருந்து சுயாதீனமானது. அத்துடன், முக்கிய அவதானிப்புகள் சபையின் கணக்காய்வுக் குழுவிற்கு அறிக்கையிடப்படும்.
	(k) உள்ளக விசாரணைகளின் பிரதான கண்டறிதல்கள் மற்றும் அவற்றுக்கான முகாமைத்துவத்தின் பதில்கள் என்பவற்றைக் கருத்திற் கொண்டுள்ளதா என்பதை குழு தீர்மானிக்கும்.	இணங்கி நடக்கப்பட்டுள்ளது பாரிய உள்ளகக் கணக்காய்வுக் கண்டறிதல்களும், முகாமைத்துவப் பதில்களும், கணக்காய்வுக் குழுவினால் ஆராயப்பட்டு, தேவையான பரிந்துரைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

பிரிவு	கொள்கை	2022ஆம் ஆண்டில் இணக்க நிலை
	(*l*) நிர்வாகப் பணிப்பாளர்களின் சமூகம் இன்றி வெளியகக் கணக்காய்வாளர்களுடன் குறைந்த பட்சம் இரண்டு கூட்டங்களை சபை நடத்தியுள்ளதா.	இணங்கி நடக்கப்பட்டுள்ளது நிர்வாகப் பணிப்பாளர்களின் பங்குபற்றுதலின்றி, சபை குறைந்த பட்சம் இரண்டு கூட்டங்களை நடத்தியுள்ளது.
	(m) குழுவின் குறிப்பு விதிகள் பின்வருவனவற்றை உறுதிப்படுத்துகின்றன. (i) அதன் குறிப்பு விதிகளுக்குள் வரும் ஏதேனும் விடயத்தை விசாரிப்பதற்கு வெளிப்படையான அதிகாரம், (ii) அவ்வாறு மேற்கொள்வதற்குத் தேவையான வளங்கள், (iii) தகவலை முழுமையாக அணுகுதல். மற்றும், (iv) வெளியகத் தொழில்முறை வல்லுநர்களிடமிருந்து ஆலோசனை பெற அதிகாரமும், தேவையான போது பொருத்தமான அனுபவங்களைக் கொண்ட வெளியாட்களை வரவழைத்தலும்.	இணங்கி நடக்கப்பட்டுள்ளது கணக்காய்வுக் குழுவின் குறிப்பு விதி இவ்வனைத்து துறைகளையும் உள்ளடக்குகின்றது.
	(n) குழு குறைந்தபட்சம் நான்கு தடவைகள் சந்தித்துள்ளது. கூட்டக் குறிப்புகள் பேணப்பட்டுள்ளன.	இணங்கி நடக்கப்பட்டுள்ளது 2022 இல் 05 குழுக் கூட்டங்கள் நடைபெற்றுள்ளன. கூட்டக் குறிப்புகள் பேணப்பட்டுள்ளன.
	(o) சபை வருடாந்த அறிக்கையில் பின்வருவனவற்றை வெளிப்படுத்தியுள்ளது. (i) கணக்காய்வுக் குழு நடவடிக்கைகளின் விபரங்கள், (ii) வருடத்தின் போது நடைபெற்ற கணக்காய்வுக் குழுக் கூட்டங்களின் எண்ணிக்கை, (iii) அத்தகைய கூட்டங்களில் பங்குபற்றிய ஒவ்வொரு தனிப்பட்ட பணிப்பாளரதும் விபரங்கள்.	இணங்கி நடக்கப்பட்டுள்ளது நடவடிக்கைகளின் விபரங்கள், கூட்டங்களின் எண்ணிக்கை, சமூகமளித்தவர்களின் விபரங்கள் என்பன வருடாந்த அறிக்கையில் வெளிப்படுத்தப்பட்டுள்ளன.
	(p) குழுவின் செயலாளர் அல்லது உள்ளகக் கணக்காய்வுப் பணியின் தலைவர் குழுவின் செயலாளராகப் பணியாற்றுவார்.	இணங்கி நடக்கப்பட்டுள்ளது கணக்காய்வுக் குழுவின் செயலாளராக சபையின் செயலாளர் செயற்பட்டார்.

பிரிவு	கொள்கை	2022ஆம் ஆண்டில் இணக்க நிலை
	(q) இடித்துரைப்பான் கொள்கை (Whistle blowing) பின்வரும் விடயங்களின் செயன்முறையைக் கையாள்கிறது. i) நிதி அறிக்கையிடல், உள்ளகக் கட்டுப்பாடு அல்லது ஏனைய விடயங்களின் முறையற்ற தன்மைகள். ii) அத்தகைய விடயங்களை நியாயமாகவும், சுயாதீனமாகவும் விசாரணை செய்வதற்கு முறையான ஏற்பாடுகளை குழு உறுதிப்படுத்துகிறது என்பது தொடர்பாக. அத்துடன், iii) பொருத்தமான பின்தொடர் நடவடிக்கை.	இணங்கி நடக்கப்பட்டுள்ளது சபை அங்கீகரித்த இடித்துரைப்பான் கொள்கை (Whistle blowing) ஒன்று உள்ளது.
3(6)(iii)	**மனித வளங்கள் மற்றும் சம்பளக் குழு தொடர்பில் பின்வரும் விதிகள் பிரயோகிக்கப்படுகின்றனவா.**	
	a) குழு குறிப்பு விதிகளையும், கூட்டக் குறிப்புகளையும் மீளாய்வு செய்வதன் மூலம், பணிப்பாளர்கள், பிரதான நிறைவேற்று அதிகாரி மற்றும் முக்கிய முகாமைத்துவ ஆட்கள் ஆகியோரின் ஊதியங்களைத் (சம்பளங்கள், கொடுப்பனவுகள் மற்றும் நிதிக் கொடுப்பனவுகள்) தீர்மானிப்பதற்கான கொள்கை ஒன்றை அமுல்படுத்தியுள்ளது.	இணங்கி நடக்கப்பட்டுள்ளது பணிப்பாளர்களின் ஊதியங்கள், பொது நிறுவன சுற்றறிக்கைகளினால் ஆளப்படுகின்றன. முகாமைத்துவ ஆட்களுடன் தொடர்புபட்ட ஊதியங்கள், கொடுப்பனவுகள் மற்றும் ஏனைய நிதிக் கொடுப்பனவுகளைத் தீர்மானிக்க குழு, ஊதியக் கொள்கை ஒன்றை அங்கீகரித்துள்ளது. இற்றைப்படுத்தப்பட்ட ஊதியக் கொள்கையானது அங்கீகரிக்கப்படுவதற்காகச் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.
	b) பணிப்பாளர்கள், பிரதான நிறைவேற்று அதிகாரி மற்றும் முக்கிய முகாமைத்துவ ஆட்களின் இலக்குகளும், குறிக்கோள்களும் ஆவணப்படுத்தப்பட்டுள்ளன.	பணிப்பாளர்கள் நிறைவேற்று அல்லாத பணிப்பாளர்களாவர். மற்றும் அவர்கள் சபை சாசனத்திற்கிணங்கவே செயற்படுகின்றனர். எனினும், பணிப்பாளர் சபைக்கான இலக்குகளை விதித்தல் மற்றும் குறிக்கோள்கள் BHHRC இற்கு சமர்ப்பிக்கப்படவுள்ளது. இணங்கி நடக்கப்பட்டுள்ளது முக்கிய முகாமைத்துவப் பணிப்பாளர்களுக்கான (KMP) இலக்குகளும், குறிக்கோள்களும் வருடாந்த வரவு செலவு மற்றும் துறை சார்ந்த செயல் திட்டங்களின்படி ஆவணப்படுத்தப்பட்டுள்ளன.
	c) செயற்திறன் அடிப்படையிலான ஊக்குவிப்புக்கள் தொடர்பான கொடுப்பனவுகள், ஊதியங்கள் மற்றும் அனுகூலங்களை திருத்துவதற்கான அடிப்படையைத் தீர்மானிப்பதற்கு, குழு பிரதான நிறைவேற்று அதிகாரி, முக்கிய முகாமைத்துவ ஆட்களுக்கு குறித்துரைக்கப்பட்ட இலக்குகள் மற்றும் குறிக்கோள்களுக்கு எதிராக காலாந்தர அடிப்படையில் செயற்திறன் மதிப்பீடுகள் கருத்திற் கொண்டுள்ளது.	இணங்கி நடக்கப்பட்டுள்ளது CRO, CO மற்றும் CIA தவிர்ந்த முக்கிய முகாமைத்துவப் பணியாளர்களின் செயற்திறன்களை, சபை மனித வளங்கள் மற்றும் ஊதியக் குழு மதிப்பீடு செய்து வருகிறது. சுயாதீனப் பணிகளில் ஈடுபடுகின்ற CRO, CO மற்றும் CIA ஆகியோரின் செயற்திறன் மதிப்பீடு பொருத்தமான சபைக் குழுக்களால் மீளாய்வு செய்யப்படுகின்றன.

பிரிவு	கொள்கை	2022ஆம் ஆண்டில் இணக்க நிலை
	d) குறிப்பு விதிகள் பிரதான நிறைவேற்று அதிகாரி, அவர் தொடர்பான விடயங்கள், கூட்டங்களில் ஆராயப்படுகின்ற போது சமூகமளித்திருக்கவில்லை என்பதை கூட்டக் குறிப்புகளை மீளாய்வு செய்வதன் மூலம் அறிந்து கொள்ளலாம்.	இணங்கி நடக்கப்பட்டுள்ளது பிரதான நிறைவேற்று அதிகாரி தொடர்பான விடயங்கள் ஆராயப்படும் போது, பிரதான நிறைவேற்று அதிகாரி கூட்டத்திற்கு சமூகமளித்திருக்கவில்லை
3(6)(iv)	**தெரிவுக் குழு தொடர்பில் பின்வரும் விதிகள் பிரயோகிக்கப்படுமா**	
	a) புதிய பணிப்பாளர்களை, பிரதான நிறைவேற்று அதிகாரி மற்றும் முக்கிய முகாமைத்துவ ஆட்களைத் தெரிவு செய்ய/ நியமிக்க ஒரு நடைமுறையை குழு அமுல்படுத்தியுள்ளது.	இணங்கி நடக்கப்பட்டுள்ளது பணிப்பாளர்களின் நியமனம் பிரதேச அபிவிருத்தி வங்கியின் சட்ட ஏற்பாடுகளின் பிரகாரம் கௌரவ அமைச்சரினால் மேற்கொள்ளப்படுகிறது. முக்கிய முகாமைத்துவ ஆட்களைத் தெரிவு செய்ய/ நியமிக்க பதவி உயர்வு வழங்க, அளவு கோல்களை குழு தீர்மானிக்கிறது.
	b) குழு தற்போதைய பணிப்பாளர்களை மீளத் தேர்ந்தெடுக்க பரிந்துரை (பரிந்துரை செய்யவில்லை) செய்துள்ளது.	பொருத்தமற்றது கௌரவ அமைச்சர் திறைசேரி செயலாளரின் ஆலோசனையின் பிரகாரம் பணிப்பாளர் சபையை நியமிப்பார்.
	c) பிரதான நிறைவேற்று அதிகாரி மற்றும் முக்கிய முகாமைத்துவ ஆட்கள் ஆகியோருக்கு நியமனம் வழங்க அல்லது பதவி உயர்வு வழங்க, தொழில் விபரங்களை மீளாய்வு செய்வதன் மூலம் தகுதிகள், அனுபவம் மற்றும் தகுதி பெறுவதற்கான பண்புகள் போன்ற அளவு கோல்களை குழு உருவாக்கியுள்ளது.	இணங்கி நடக்கப்பட்டுள்ளது பிரதான நிறைவேற்று அதிகாரி, பிரதிப் பொது முகாமையாளர்கள், பிராந்தியப் பொது முகாமையாளர்கள் ஆகிய பதவிகளுக்குத் தெரிவு செய்வதற்கு தேவையான தகுதிகள் மற்றும் அனுபவம் என்பன 2008 ஆம் ஆண்டின் 41 ஆம் இலக்க பிரதேச அபிவிருத்தி வங்கி சட்டம் குறித்துரைக்கிறது. முகாமைத்துவ ஆட்களின் தகுதி/ தெரிவு அளவுகோல்கள் மற்றும் தகுதிகள் என்பன தெரிவுக்குழு/ சபையினால் தீர்மானிக்கப்படலாம்.
	d) நியதிச் சட்டங்களிலும், வழிகாட்டி 3(3) என்பவற்றிலும் தரப்பட்ட தகுதிகளின் அடிப்படையில் பணிப்பாளர்கள், பிரதான நிறைவேற்று அதிகாரி மற்றும் முக்கிய முகாமைத்துவ ஆட்கள் ஆகியோர் தத்தமது பதவிகளை வகிக்க தகுதியான மற்றும் முறையான நபர்களாக இருக்கின்றனர் என்பதை உறுதிப்படுத்தி, அவர்களிடம் இருந்து தனிப்பட்ட கையொப்பமிடப்பட்ட பிரகடனங்களை குழு பெற்றுக் கொண்டுள்ளது.	இணங்கி நடக்கப்பட்டுள்ளது பணிப்பாளர்கள், பிரதான நிறைவேற்று அதிகாரி மற்றும் முக்கிய முகாமைத்துவ ஆட்களின் தகுதி மற்றும் தனியுரிமை மீதான பிரகடனங்கள் பெறப்பட்டு வங்கி மேற்பார்வைத் திணைக்களத்தினால் அங்கீகரிக்கப் பட்டுள்ளன. அத்துடன், தொழில்நிலை/ தகைமைகள் என்பனவற்றில் மாற்றங்கள் ஏற்படும் போது இப்பிரகடனங்கள் புதுப்பிக்கப்படுகின்றன.

பிரிவு	கொள்கை	2022ஆம் ஆண்டில் இணக்க நிலை
	e) குழு ஓய்வு பெறும் பணிப்பாளர்களுக்கும், முக்கிய முகாமைத்துவ ஆட்களுக்கும் ஒரு விதிமுறையான பின்னுறு திட்டத்தைக் கருத்திற் கொண்டுள்ளது.	இணங்கி நடக்கப்பட்டுள்ளது சபை அங்கீகரித்த இற்றைப்படுத்தப்பட்ட KMP க்கான பின்னுறு நடைமுறையில் உள்ளது. பின்னுறு திட்டம் பிரதேச அபிவிருத்தி வங்கி சட்டத்தின் அடிப்படையில் பின்னுறு திட்ட ஏற்பாடுகளின் கீழ் மாண்புமிகு அமைச்சரினால் பணிப்பாளர்கள் தெரிவு இடம்பெறுகின்றன. 29.09.2022ஆம் திகதி இடம்பெற்ற சபைத் தெரிவுக் குழுக் கூட்டத்தின் போது KMP மீதான பின்னுறு திட்டமானது மீளாய்வு செய்யப்பட்டது.
	f) குழு ஒரு சுயாதீனப் பணிப்பாளரால் தலைமை வகிக்கப்படல் வேண்டும். அத்துடன், பெரும்பான்மையான சுயாதீனப் பணிப்பாளர்களோடு உருவாக்கப்படுதல் விரும்பத்தக்கது. பிரதான நிறைவேற்று அதிகாரி அழைப்பின் பேரில் கூட்டங்களுக்கு சமூகமளிக்கலாம்.	இணங்கி நடக்கப்பட்டுள்ளது சுயாதீனப் பணிப்பாளர் ஒருவர் கூட்டங்களுக்கு தலைமை வகித்துள்ளார். குறிப்பு விதிகளின்படி பிரதான நிறைவேற்று அதிகாரி அழைப்பின் பேரில் கூட்டங்களுக்கு சமூகமளித்தல் வேண்டும். எனினும், பிரதான நிறைவேற்று அதிகாரி, அனைத்துக் கூட்டங்களிலும் சமூகமளித்துள்ளார்.
3(6)(v)	**ஒருங்கிணைக்கப்பட்ட இடர் முகாமைத்துவக் குழு (IRMC) தொடர்பில் பின்வரும் விதிகள் பிரயோகிக்கப்படுகின்றனவா**	
	a) பரந்த இடர் வகுதிகளான கடன், சந்தை, திரவத்தன்மை, செயற்பாடு மற்றும் மூலோபாய இடர்கள் ஆகியவற்றை மேற்பார்வை செய்வதற்கு இந்தக் குழு குறைந்தபட்சம் நிர்வாகம் சாராத மூன்று பணிப்பாளர்களையும், பிரதான நிறைவேற்று அதிகாரி மற்றும் முக்கிய முகாமைத்துவ ஆட்களையும் கொண்டிருத்தல் வேண்டும். அத்துடன், குழு தனக்குரிய அதிகாரக் கட்டமைப்பு மற்றும் வழங்கப்பட்ட பொறுப்பு என்பவற்றின் எல்லைக்குள் இருந்து செயற்பட வேண்டும்.	இணங்கி நடக்கப்பட்டுள்ளது குழு நிர்வாகம் சாராத நான்கு பணிப்பாளர்களையும், பிரதான நிறைவேற்று அதிகாரி, பதில் பொது முகாமையாளர் - இடர் முகாமைத்துவம் ஆகிய அதிகாரிகளையும் கொண்டுள்ளது. இணக்க அதிகாரி அழைப்பின் பேரில் நடைபெற்ற கூட்டங்களுக்கு சமூகமளித்துள்ளார்.
	b) கடன், சந்தை, திரவத்தன்மை, செயற்பாடு மற்றும் மூலோபாய இடர்கள் ஆகிய அனைத்து இடர்களையும் முறையான இடர் குறிகாட்டிகள் மற்றும் முகாமைத்துவத் தகவல் என்பனவற்றின் ஊடாக மாதாந்த அடிப்படையில் மதிப்பிடுவதற்கான ஒரு செயன்முறையை குழு கொண்டுள்ளது. துணைக் கம்பனிகள் மற்றும் இணைக் கம்பனிகள் தொடர்பில் இடர் முகாமைத்துவம் வங்கி அடிப்படையிலும், குழும அடிப்படையிலும் மேற்கொள்ளப்பட வேண்டும்.	இணங்கி நடக்கப்பட்டுள்ளது குழு இடர்களை மதிப்பீடு செய்துள்ளது. அத்துடன், பிரதான இடர் அதிகாரியினால் மாதாந்த அடிப்படையில் முக்கிய இடர் குறிகாட்டிகள் தொடர்பான அறிக்கை தயாரிக்கப்பட்டு சபைக்குச் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. மேலும், IRMC யின் பரிந்துரைகள் சபை மீளாய்வுக்காக சமர்ப்பிக்கப்பட்டுள்ளன. எனினும், வங்கியின் இடர் தோற்றப்பாட்டைப் பிரதிபலிக்கும் வகையில் சில இடர்கள் மேம்படுத்தப்பட்டுள்ளன.

பிரிவு	கொள்கை	2022ஆம் ஆண்டில் இணக்க நிலை
	c) கடன் குழு மற்றும் சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் குழுக்கள் போன்ற அனைத்து முகாமைத்துவ மட்டக் குழுக்களுக்காக குறிப்பான, அளவு மற்றும் பண்புசார் இடர் எல்லைகளை மீளாய்வு செய்வதோடு ஏதேனும் இடர் குறிகாட்டிகளை காலாந்தர அடிப்படையில் அறிக்கையிட்டுள்ளது.	இணங்கி நடக்கப்பட்டுள்ளது குழு மற்றும் மேற்கூறப்பட்ட தொழிற்படு குழு ஆகியவற்றின் குறிப்பிட்ட அளவு மற்றும் தரமான இடர் ஆகியவை BIRMC யினால் மீளாய்வு செய்யப்பட்டன.
	d) குழு, குறித்துரைக்கப்பட்ட அளவு மற்றும் பண்புசார் இடர் எல்லைகளுக்கு அப்பால் சென்று, அனைத்து இடர் குறிகாட்டிகளையும் மீளாய்வு செய்து கவனத்திற் கொண்டுள்ளது.	இணங்கி நடக்கப்பட்டுள்ளது முக்கிய இடர் குறிகாட்டிகள் மீதான அறிக்கைகள் குழுவினால் மீளாய்வு செய்யப்பட்டுள்ளன.
	e) காலாண்டு அடிப்படையில் குறைந்தபட்சம் எத்தனை தடவைகள் குழு சந்தித்துள்ளது.	இணங்கி நடக்கப்பட்டுள்ளது 2022ஆம் ஆண்டில் குழு நான்கு தடவைகள் சந்தித்துள்ளது.
	f) குழு, குறிப்பான இடர்களை இனங்காணத் தவறிய பொறுப்பான அதிகாரிகள் தொடர்பாக, விதிமுறையான ஆவணப்படுத்தப்பட்ட ஒழுக்க நடவடிக்கை நடைமுறையை மீளாய்வு செய்து ஏற்றுக் கொண்டுள்ளது.	இணங்கி நடக்கப்பட்டுள்ளது விதிமுறையான ஒழுக்கக் கோவை ஒன்று உள்ளது. குழு இடர் விடயங்கள் தொடர்பாக குழு ஆவணங்கள் ஊடாக தீர்மானங்களை மேற்கொண்டுள்ளது. எனினும், 2022 ஆம் ஆண்டில் இனங்காணப்பட்ட எந்தவொரு நிகழ்வும் இடம்பெறவில்லை.
	g) சபையின் கருத்துக்களையும், ஒத்திசைவுகளையும் மற்றும்/ அல்லது விசேட வழிகாட்டிகளையும் பெற்றுக் கொள்வதற்காக, கூட்டம் நடைபெற்றதில் இருந்து ஒரு வாரத்திற்குள், இடர் மதிப்பீட்டு அறிக்கையை குழு சபைக்கு சமர்ப்பிக்கும்.	இணங்கி நடக்கப்பட்டுள்ளது வங்கியின் முக்கிய இடர் குறிகாட்டிகள் தொடர்பான அறிக்கை, பிரதான இடர் அதிகாரியினால் மாதாந்த அடிப்படையில் தயாரிக்கப்பட்டு, அண்மையில் நடைபெறும் சபைக் கூட்டத்திற்கு சமர்ப்பிக்கப்படும். மேலும். IRMC கூட்டக் குறிப்புகள் அண்மையில் நடைபெறவுள்ள சபைக்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளன.
	h) சகல வணிக நடவடிக்கைகள் தொடர்பாகவும் உள்ள சட்டங்கள், ஒழுங்கு விதிகள், ஒழுங்குபடுத்தல் வழிகாட்டிகள், உள்ளகக் கட்டுப்பாடுகள் மற்றும் அங்கீகரிக்கப்பட்ட கொள்கைகள் என்பவற்றுடன் வங்கி இணங்கி நடக்கின்றது என்பதை மதிப்பிட ஒரு இணக்கப்பணி ஸ்தாபிக்கபட்டு உள்ளது, பணியை மேற்கொள்ள கடமை உணர்ச்சியுடைய இணக்க அதிகாரி ஒருவர் முக்கிய முகாமைத்துவ ஆட்களில் இருந்து தெரிவு செய்யப்பட வேண்டும். இவர், குழுவுக்கு காலாந்தர அடிப்படையில் அறிக்கையிட வேண்டும்.	இணங்கி நடக்கப்பட்டுள்ளது வங்கியின் இணக்க அதிகாரியினால் தலைமை வகிக்கப்பட்டு, இணக்க இடர் மதிப்பீட்டு அறிக்கை முக்கிய முகாமைத்துவ ஆட்களான இணக்க அதிகாரியினால் காலாந்தர அடிப்படையில் BIRMCக்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

பிரிவு	கொள்கை	2022ஆம் ஆண்டில் இணக்க நிலை
3(7)	**தொடர்புடைய திறத்தவருடனான பரிவர்த்தனைகள்**	
3(7)(i)	ஏதேனும் நபருடன், குறிப்பாக கீழே குறிப்பிடப்பட்டுள்ள வகையைச் சார்ந்தவர்களுடன் வங்கி நடத்துகின்ற ஏதேனும் பரிவர்த்தனையில் இருந்து ஏதேனும் அக்கறைகளுக்கு இடையிலான முரண்பாடு ஒன்று தோன்றுவதைத் தவிர்ப்பதற்கு சபையினால் ஸ்தாபிக்கப்பட்ட மற்றும் ஆவணப்படுத்தப்பட்ட செயன்முறை ஒன்று இருத்தல் வேண்டும். கீழே தரப்பட்ட வகையைச் சார்ந்தவர்கள் இந்த வழிகாட்டியின் நோக்கங்களுக்காக "தொடர்புபட்ட திறத்தவர்கள்" எனக் கருதப்படுவார்கள்.	சபையினால் அங்கீகரிக்கப்பட்ட 2022ஆம் ஆண்டு இற்றைப்படுத்தப்பட்ட தொடர்புடைய தரப்பினர் கொடுக்கல் வாங்கல்கள் உள்ளது
	a. வங்கியின் ஏதேனும் துணைக் கம்பனிகள் b. வங்கியின் ஏயதேனும் இணைக் கம்பனிகள் c. வங்கியின் எவரேனும் பணிப்பாளர் ஒருவர் d. வங்கியின் எவரேனும் முக்கிய முகாமைத்துவ நபர் e. வங்கி பணிப்பாளர்கள் அல்லது முக்கிய முகாமைத்துவ ஆட்களின் எவரேனும் நெருங்கிய உறவினர் f. வங்கியில் முக்கியமான அக்கறையை உரித்தாகக் கொண்ட ஒரு பங்குதாரர் g. வங்கியின் பணிப்பாளர்கள் அல்லது வங்கியின் பணிப்பாளர்களின் நெருங்கிய உறவினர் ஒருவர் அல்லது முக்கியமான பங்குதாரர்களில் எவரேனும் ஒருவர் கணிசமான அளவு அக்கறை உடையவராக இருக்கின்றார் என்று கருதப்படும் போது.	தொடர்புடைய தரப்பினர்களுக்கு உரித்தான கொடுக்கல் வாங்கல்கள், அவர்களது பிரகடனங்களின் அடிப்படையில் தேசிய அடையாள அட்டையைப் பயன்படுத்தி முறைமை ஊடாகப் பெற்றுக்கொள்ளப்படக் கூடியன.

பிரிவு	கொள்கை	2022ஆம் ஆண்டில் இணக்க நிலை
3(7)(ii)	இங்கு குறிப்பிடப்பட்ட வழிகாட்டிகளில் உள்வாங்கப்பட்ட தொடர்புபட்ட திறத்தவர்களுடனான பரிவர்த்தனைகள் என இனங்காணப்பட்ட கீழே தரப்பட்டுள்ள வகையிலான பரிவர்த்தனைகளை இனங்காண, அறிக்கையிடவும் செயன்முறை ஒன்று உள்ளது. a) உள்வாங்கக்கூடிய அதி உச்சத் தொகை என்பதை நாணய சபை வழிகாட்டிகள் வரைவிலக்கணம் படுத்தப்பட்டவாறு வழங்கப்பட்ட ஏதேனும் வகையிலான உள்வாங்கல். b) வைப்புகள், ஏனைய கடன் பெறுகைகள், முதலீடுகள் போன்ற வடிவங்களில் உருவாக்கப்பட்ட வங்கியின் ஏதேனும் பொறுப்புகள். c) நிதி அல்லது நிதி சாராத இயல்பைக் கொண்ட வங்கிக்கு வழங்கப்பட்ட அல்லது வங்கியிடமிருந்து பெறப்பட்ட ஏதேனும் சேவைகளின் எற்பாடு. d) சாத்தியமான தனி உரிமை, அத்தகைய மூன்றாம் திறத்தவர்களுக்கு பயனளிக்கக்கூடிய, நம்பகமான அல்லது வேறு வகையிலான உணர்திறன் தகவல்கள் என்பவற்றை பகிர்வதனை முன்னெடுக்கும் வங்கி மற்றும் எவரேனும் மூன்றாம் திறத்தவர்களுக்கு இடையில் அறிக்கையிடும் வரிசைகளையும் தகவல் பாய்ச்சல்களையும் உருவாக்குதலும் பேணுதலும்.	இணங்கி நடக்கப்பட்டுள்ளது தொடர்புடைய திறத்தவர்களுடனான பரிவர்த்தனை தொடர்பான கொள்கை 2022 இல் இற்றைப்படுத்தப்பட்டு சபையினால் அங்கீகரிக்கப்பட்டு நடைமுறையில் உள்ளது. தொடர்புபட்ட திறத்தவர்களுடனான பரிவர்த்தனைகளை வழங்கப்பட்ட பிரகடனங்கள் மூலம் இனங்காண முடியும்.
3(7)(iii)	வழிகாட்டி 3(7)(i) இல் வரையறை செய்யப்பட்டவாறு அத்தகைய திறத்தவர்களுக்கு அதே வியாபாரத்தைக் கொண்டு நடத்துகின்ற வங்கியின் ஏனைய கூறுகளுக்கு வழங்கப்பட்டதை விட “மிகவும் சாதகமான நடத்துகையை” வழங்குகின்ற வகையில், வங்கி, தொடர்புடைய திறத்தவர்களுடன் பரிவர்தனைகளில் ஈடுபடவில்லை என்பதை உறுதிப்படுத்துவதற்கு செயன்முறை ஒன்று உள்ளதா.	இணங்கி நடக்கப்பட்டுள்ளது பணிப்பாளர்கள், அவர்களின் நெருங்கிய உறவினர்களுக்கு வழங்கப்பட்ட உள்வாங்குகை, சபையில் இருக்கக்கூடிய பணிப்பாளர்களின் மொத்த எண்ணிக்கையில் மூன்றில் இரண்டுக்குக் குறையாத பணிப்பாளர்களினால் கூட்டம் ஒன்றில் அனுமதிக்கப்பட்டுள்ளது. இணக்கப் பிரிவினால் கண்காணிக்கப்படும் தொடர்புடைய கட்சிப் பரிவர்த்தனைகளைக் கண்காணிப்பதற்கான செயன்முறையை வங்கி செயற்படுத்தியுள்ளது. மேலும், இணக்க அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள இணக்க நிலை 2022.01.01 முதல் காலாண்டுக்குள் BIRMC க்கு சமர்ப்பிக்கப்படுகிறது. 2022 ஆம் ஆண்டில் தொடர்புடைய எந்தவொரு தரப்பினருக்கும் வங்கி மிகவும் சாதகமான செயன்முறையை வழங்கவில்லை.

a) சபையின் தீர்மானத்திற்கமைய, வங்கியின் ஒழுங்குபடுத்தல் மூலதனத்தில் ஒரு விவேகமான விகிதாசாரத்தை விஞ்சிய தொடர்புபட்ட திறத்தவர்களுக்கு "மொத்த தேறிய உள்வாங்குகையை வழங்குதல்" இந்த உப வழிகாட்டியின் நோக்கங்களுக்காக,

I. "உள்வாங்குகை" என்பது, 2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க வங்கி வழிகாட்டிகள் சட்டம் என்பதில் வரையறை செய்யப்பட்டவாறு அதி உச்ச உள்வாங்கும் தொகை எனப் பொருள்படும்.

II. "மொத்த தேறிய உள்வாங்குகை, மொத்த உள் வாங்குகையில் இருந்து வங்கியில் அத்தகைய தொடர்புடைய திறத்தவர்களால் மேற்கொள்ளப்பட்ட நிதிப் பிணையங்கள், முதலீடுகளை அளித்து கணக்கிடப்படும்.

III. ஐந்து வருடங்கள் அல்லது அதற்கு மேற்பட்ட முதிர்வுக் காலத்தைக் கொண்ட பங்கு மூலதனமும் கடன் கருவிகளும்.

b) தொடர்புபடாத ஒப்பிடக்கூடிய எதிர் திறத்தவருடன் ஒரு ஒப்பிடக்கூடிய பரிவர்த்தனைக்கு வங்கியின் சிறந்த கடன் வீதத்தை விட ஒரு குறைந்த வட்டி வீதத்தை அறவிடுதல் அல்லது வங்கியின் வைப்பு வீதத்தைவிட அதிக வீதத்தைச் செலுத்துதல்.

c) தொடர்புபடாத திறத்தவர்களுடன் பொறுப்பேற்றுக் கொண்ட சாதாரண வர்த்தக நடவடிக்கையின் போது வழங்கப்பட்ட நியதிகளுக்கு அப்பால் சென்று சாதகமான நியதிகள், வணிக நட்டங்களை உள்வாங்குதல் மற்றும் அல்லது கட்டணங்கள்.˙. தரகுகள் விடுவிப்பு போன்ற சாதகமான நடத்துகையை வழங்குதல்.

d) மதிப்பீட்டு நடைமுறை இன்றி, தொடர்புடைய திறத்தவரிடம் இருந்து சேவைகளைப் பெறுதல் அல்லது திறத்தவருக்கு வழங்குதல்.

e) நெறிமுறையான கடமைகள் மற்றும் பணிகளை நிறைவேற்ற தேவைப்படுத்தப்பட்ட சந்தர்ப்பம் தவிர, ஏனைய சந்தர்ப்பங்களில் தொடர்புடைய திறத்தவர்களுடன் சாத்தியமான தனியுரிமை, நம்பகமான அல்லது வேறு வகையில் உணர்திறன் கொண்ட தகவல்களைப் பகிர்வதற்கு வழியை ஏற்படுத்தும் அறிக்கையிடும் வரிசைகளையும் தகவல் பாய்ச்சல்களையும் பேணுதல்.

பிரிவு	கொள்கை	2022ஆம் ஆண்டில் இணக்க நிலை
3(7)(iv)	வங்கி அதன் பணிப்பாளர்கள் மற்றும் முகாமைத்துவ ஆட்கள் எவரேனும் ஒருவருக்கு உள்வாங்குகையை வழங்குவதற்கான செயன்முறை ஒன்றைக் கொண்டுள்ளது. அத்துடன், அத்தகைய உள்வாங்குகை, அத்தகைய உள்வாங்குகையைப் பெறும் பணிப்பாளர் தவிர, ஏனைய சபை பணிப்பாளர்களில் மூன்றில் இரண்டிற்குக் குறையாதவர்களால் சபைக் கூட்டத்தில் அந்த உள்வாங்குகைக்குச் சாதகமாக வாக்களிக்கப்பட்டு அனுமதிக்கப்படுகிறது. இந்த உள்வாங்குகை, காலத்திற்குக் காலம் நாணய சபையினால் தீர்மானிக்கப்படும் அத்தகைய உத்தரவாதத்தினால் பாதுகாக்கப்படுகிறது.	இணங்கி நடக்கப்பட்டுள்ளது கொள்கை இந்தத் தேவைப்பாட்டை உள்வாங்குகிறது. அத்துடன், பணிப்பாளர் தொடர்பான அத்தகைய சம்பவங்கள் இவ்வருடத்தின் போது அறிக்கையிடப்படவில்லை. முக்கிய முகாமைத்துவ ஆட்களுக்கு வழங்கப்படும் தங்குமிடம், பணியாளர் கடன்கள் தொடர்பாக வெளியிடப்பட்ட சுற்றறிக்கை வழிகாட்டுதல்களின் அடிப்படையில் வங்கியின் தொடர்புடைய அதிகார மட்டங்களால் அனுமதிக்கப்படுகிறது.
3(7)(v)	a) வங்கியினால் நபர் ஒருவருக்கு அல்லது அந்த நபரின் நெருங்கிய உறவினருக்கு அல்லது ஏதேனும் காரணத்திற்காக அத்தகைய நபருக்கு, கணிசமான அளவு அக்கறை உள்ள போது, அந்த நபர் வழங்குகையை உடனடுத்து, வங்கிக்கு பணிப்பாளராக நியமிக்கின்ற விடத்து, பணிப்பாளராக நியமிக்கப்பட்ட திகதியில் இருந்து ஒரு வருட காலத்திற்குள் நாணய சபையின் நோக்கத்திற்காக அங்கீகரிக்கப்பட்ட தேவையான பாதுகாப்பை பணிப்பாளரிடம் இருந்து பெறுவதற்கு வங்கி எடுக்க வேண்டிய நடவடிக்கைகள் பற்றிய ஒரு செயன்முறை உள்ளது.	இணங்கி நடக்கப்பட்டுள்ளது தொடர்புடைய திறத்தவர்களுடனான பரிவர்த்தனை தொடர்பில் சபை அங்கீகரிக்கப்பட்ட கொள்கை இந்த தேவைப்பாட்டை உள்வாங்குகிறது. 2022ஆம் ஆண்டில் அவ்வாறானதொரு நிலை ஏற்படவில்லை.
	b) மேலே தரப்பட்ட வழிகாட்டி 3(7)(v) (a) இல் குறிப்பிட்டவாறு, குறிப்பிட்ட காலப்பகுதிக்குள் அத்தகைய பாதுகாப்பு வழங்கப்படாத விடத்து, வழங்குகை பணிப்பாளருக்கு வழங்கப்பட்ட தினத்தில் குறித்துரைக்கப்பட்ட அக் காலப்பகுதிக்குள் அல்லது பணிப்பாளர் நியமனம் பெற்று 18 மாதங்கள் பூர்த்தியடைகின்ற போது, இதில் எது முடிகிறதோ அத்தினத்தில் வங்கி ஏதேனும் வழங்குகை தொடர்பாக நிலுவையாக உள்ள தொகையை வட்டியுடன் அறவிட நடவடிக்கை எடுத்துள்ளதா.	அத்தகைய சூழ்நிலை ஒன்று எழவில்லை. எனினும், மேலே தரப்பட்ட கொள்கை இந்தத் தேவைப்பாட்டை உள்வாங்குகிறது.

பிரிவு	கொள்கை	2022ஆம் ஆண்டில் இணக்க நிலை
	c) மேலே தரப்பட்ட உப வழிகாட்டிகளில் உள்ள தேவைப்பாடுகளுடன் எவரேனும் பணிப்பாளர் இணங்கி நடக்காத விடத்து, அதனை இனங்காண ஒரு செயன்முறை உள்ளது. அத்தகைய பணிப்பாளர் தனது பதவியில் இருந்து நீக்கப்பட்டதாகக் கருதப்படுவதுடன், வங்கி அத்தகைய நிகழ்வுகளை பொது மக்களுக்கு அறிவிக்க வேண்டும்.	அத்தகைய சூழ்நிலை ஒன்று எழவில்லை. எனினும், மேலே தரப்பட்ட கொள்கை இந்தத் தேவைப்பாட்டை உள்வாங்குகிறது.
	d) எவரேனும் உறுப்பினர் உள்வாங்குகை வழங்கப்படும் போது, வங்கியின் ஊழியராக இருக்குமிடத்து, வாசகம் 3(7)(v)(c) இல் உள்ள செயன்முறை அவருக்குப் பொருந்தாது. குறிப்பிட்ட திட்டம் ஒன்றின் கீழ் வழங்கப்பட்ட உள்வாங்குகை, அத்தகைய வங்கியின் அனைத்துப் பணியாளர்களுக்கும் பொருந்தும்.	அத்தகைய சூழ்நிலை ஒன்று எழவில்லை. எனினும், மேலே தரப்பட்ட கொள்கை இந்தத் தேவைப்பாட்டை உள்வாங்குகிறது.
3(7)(vi)	வங்கியின் பணியாட்களுக்கு பிரயோகமாகின்ற திட்டம் ஒன்றின் அடிப்படைக்கு அப்பால், வங்கி, ஏதேனும் உள்வாங்குகையை அல்லது அதிக சாதகமான நடத்துகையை கட்டண விடுபாடு மற்றும் அல்லது தரகு விடுபாடு தொடர்பாக குறிப்பிட்ட விடயத்தில் கணிசமான அக்கறையுடைய எவரேனும் பணியாள் அல்லது அத்தகைய பணியாளின் நெருங்கிய உறவினருக்கு வழங்குகின்ற போது, அதனை இனங்காண ஒரு செயன்முறை உள்ளது. மேலும், வழிகாட்டி 3(7)(v) இல் குறிப்பிட்டவாறு உள்வாங்குகை ஒன்று வழங்கப்பட்டிருந்து. அது, நாணய சபையினால் அங்கீகரிக்கப்பட்ட பிணையம் ஒன்றினால் பாதுகாக்கப்பட்டிருக்கும் போது இதே செயன்முறை பிரயோகிக்கப்படும்.	இணங்கி நடக்கப்பட்டுள்ளது பணிப்பாளர்கள், அவர்களின் நெருங்கிய உறவினர்களுக்கு வழங்கப்பட்ட உள்வாங்குகை, சபையில் இருக்கக்கூடிய பணிப்பாளர்களின் மொத்த எண்ணிக்கையில் மூன்றில் இரண்டுக்குக் குறையாத பணிப்பாளர்களினால் கூட்டம் ஒன்றில் அனுமதிக்கப்பட்டுள்ளது. முக்கிய முகாமைத்துவ ஆட்களுக்கு வழங்கப்படும் உள்வாங்குகை, பணியாளர் கடன்கள் தொடர்பாக வெளியிடப்பட்ட சுற்றறிக்கை வழிகாட்டுதல்களின் அடிப்படையில் வங்கியின் தொடர்புடைய அதிகார மட்டங்களால் அனுமதிக்கப்படுகிறது.

பிரிவு	கொள்கை	2022ஆம் ஆண்டில் இணக்க நிலை
3(7)(vii)	வழிகாட்டி 3(7)(v) மற்றும் 3(7)(vi) இன் கீழ் வழங்கப்பட்ட ஏதேனும் உள்வாங்குகைக்கு நாணய சபையிடமிருந்து முன் அனுமதி பெறுவதற்கான செயன்முறை ஒன்று உள்ளது. அத்தகைய உள் வாங்குகையில் இருந்து ஏதேனும் ஒரு பகுதியையோ அல்லது ஏதேனும் அக்கறையையோ நாணய சபையின் முன் அனுமதி இன்றி குறைத்தல் ஆகாது. அத்துடன், அத்தகைய அங்கீகாரம் இன்றி மேற்கொள்ளப்படும் மாற்றங்கள் வெற்றானது ஆவதுடன், அது, எந்த விளைவுப் பயனையும் தராது.	அத்தகையதொரு சூழ்நிலை எழவில்லை. 2022 ஆம் ஆண்டிற்கான இற்றைப்படுத்தப்பட்ட கொள்கை இந்தத் தேவையை உள்ளடக்கியது.
3(8)	**வெளிப்படுத்தல்கள்**	
3(8)(i)	சபை பின்வருவனவற்றை வெளிப்படுத்தியுள்ளது. a) வருடாந்தம் கணக்காய்வு செய்யப்பட்ட நிதிக் கூற்றுக்கள் மேற்பார்வை மற்றும் ஒங்குபடுத்தல் அதிகார சபைகளினால் மற்றும் பொருத்தமான கணக்கியல் நியமங்களினால் குறித்துரைக்கப்பட்ட வடிவமைப்புக்களில் தயாரிக்கப்பட்டு பிரசுரிக்கப்பட்டுள்ளன. அத்தகைய கூற்றுகள் பத்திரிகைகளில் தமிழ், சிங்களம், ஆங்கிலம் ஆகிய மொழிகளில் சுருக்கமான வடிவில் பிரசுரிக்கப்பட்டுள்ளன. b) காலாண்டு நிதிக் கூற்றுகள் தயாரிக்கப்பட்டு பத்திரிகைகளில் தமிழ், சிங்களம், ஆங்கிலம் ஆகிய மொழிகளில் சுருக்கமான வடிவில் பிரசுரிக்கப்பட்டுள்ளன.	இணங்கி நடக்கப்பட்டுள்ளது வருடாந்தம் கணக்காய்வு செய்யப்பட்ட நிதிக் கூற்றுக்கள் மேற்பார்வை மற்றும் ஒழுங்குபடுத்தல் அதிகார சபைகள் மற்றும் பொருத்தமான கணக்கியல் நியமங்களினால் குறித்துரைக்கப்பட்ட வடிவமைப்புக்களில் தயாரிக்கப்பட்டு பிரசுரிக்கப்பட்டுள்ளன. அத்தகைய கூற்றுக்கள் பத்திரிகைகளில் தமிழ், சிங்களம், ஆங்கிலம் ஆகிய மொழிகளில் சுருக்கமான வடிவில் பிரசுரிக்கப்பட்டுள்ளன.
3(8)(ii)	**சபை, வருடாந்த அறிக்கையில் பின்வரும் குறைந்தபட்ச வெளிப்படுத்தல்களை மேற்கொண்டுள்ளது என்பதைப் பரீட்சித்தல்.**	
	a) பொருத்தமான கணக்கியல் நியமங்கள் மற்றும் ஒழுங்குபடுத்தல்கள் தேவைப்பாடுகளுக்கு அமைய, வருடாந்தம் கணக்காய்வு செய்யப்பட்ட நிதிக் கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளன என்பது பற்றிய கூற்று. இக்கூற்றில் விசேட வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்படல் வேண்டும்.	இணங்கி நடக்கப்பட்டுள்ளது நிதிக் கூற்றுக்களுக்கான குறிப்புகள் 1988 ஆம் ஆண்டின் 30 ஆம் இலக்க வங்கிச் சட்டத்தின் தேவைப்பாடுகளுக்கு அமைய இலங்கை கணக்கியல் நியமங்களுக்கு ஏற்ற வகையில் தயாரிக்கப்பட்டுள்ளது என்பதை 2.2 இலக்க நிதிக் கூற்று வெளிப்படுத்துகிறது.

பிரிவு	கொள்கை	2022ஆம் ஆண்டில் இணக்க நிலை
	b) நிதி அறிக்கையின் உண்மைத் தன்மை தொடர்பாக நியாயமான உறுதிப்பாட்டை வழங்குவதற்கு நிதி அறிக்கையிடல் முறைமை வடிவமைக்கப்பட்டுள்ளது என்பதை உறுதிப்படுத்துகின்ற வங்கியின் உள்ளகக் கட்டுப்பாட்டுப் பொறிமுறை தொடர்பான சபை அறிக்கை உறுதிப்படுத்துவதுடன், வெளியக நோக்கங்களுக்காக தயாரிக்கப்படும் நிதிக் கூற்றுக்கள் பொருத்தமான கணக்கியல் எண்ணக்கருக்கள் மற்றும் ஒழுங்குபடுத்தல் தேவைப்பாடுகளுக்கு அமைவாக உள்ளது.	இணங்கி நடக்கப்பட்டுள்ளது நிதி அறிக்கையிடல் தொடர்பான உள்ளகக் கட்டுப்பாட்டு முறை தொடர்பான அறிக்கை, உள்ளகக் கட்டுப்பாடு மீதான "பணிப்பாளர்களின் கூற்றில்" தரப்பட்டுள்ளன.
	c) வழிகாட்டி 3(8)(ii)(b) இல் குறிப்பிடப்பட்ட உள்ளகக் கட்டுப்பாட்டு முறையின் வினைத்திறன் பற்றிய வெளிவாரி கணக்காய்வாளரின் அறிக்கையை சபை பெற்றுக் கொண்டுள்ளது.	இணங்கி நடக்கப்பட்டுள்ளது வங்கி, கணக்காய்வாளர் நாயகத்திடம் இருந்து நிதி அறிக்கையிடல் தொடர்பான உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறன் பற்றிய சான்றிதழ் ஒன்றைப் பெற்றுள்ளது.
	d) பணிப்பாளர்களின் பெயர்கள், தகைமைகள், வயது, அனுபவம், தகுதி மற்றும் தனி உரிமை பற்றிய ஒழுங்கு விதிகளின் தேவைப்பாடுகளைப் பூர்த்தி செய்தல், வங்கியுடனான பரிவர்த்தனைகள் மற்றும் வங்கியினால் செலுத்தப்பட்ட மொத்தக் கட்டணங்கள்/ ஊதியங்கள் என்பவற்றை உள்ளடக்கிய பணிப்பாளர்களின் விபரங்கள்.	இணங்கி நடக்கப்பட்டுள்ளது பெயர்கள், தகைமைகள், பணிப்பாளர் சபையின் அனுபவம் என்பவற்றை உள்ளடக்கிய விபரங்கள் பணிப்பாளர் சபை என்பதன் கீழ் வெளிப்படுத்தப்பட்டுள்ளன. மேலும் பணிப்பாளர் சபைக்குச் செலுத்தப்பட்ட கட்டணங்கள்/ ஊதியங்கள் நிதிக் கூற்றுக்களுக்கான குறிப்பு 14 இல் வெளிப்படுத்தப்பட்டுள்ளன.
	e) 3(7)(iii) இல் வரையறை செய்யப்பட்டவாறு, மொத்த தேறிய உள்வாங்குகை, தொடர்புபட்ட திறத்தவர்களின் ஒவ்வொரு வகுதியினருக்கும் வழங்கப்பட்டுள்ளது. இவ்வாறு வழங்கப்பட்ட உள்வாங்குகை, வங்கியின் ஒழுங்குபடுத்தல் மூலதனத்தில் விகிதாசாரம் ஒன்றாக வெளிப்படுதப்படல் வேண்டும்.	முக்கிய முகாமைத்துவ ஆட்கள் மற்றும் நெருங்கிய குடும்ப உறுப்பினர்களின் மொத்த வெளிப்பாடு, நிதிநிலை அறிக்கைகளில் குறிப்பு 38 இன் கீழ் வெளிப்படுத்தப்பட்டுள்ளது.

பிரிவு	கொள்கை	2022ஆம் ஆண்டில் இணக்க நிலை
	f) வங்கியினால் அதன் முக்கிய முகாமைத்துவ ஆட்களுக்குச் செலுத்தப்பட்ட ஊதியங்களின் மொத்தப் பெறுமதிகளும், முக்கிய முகாமைத்துவ ஆட்களுடன் மேற்கொள்ளப்பட்ட பரிவர்த்தனைகளின் மொத்தப் பெறுமதிகளும், வழங்கப்பட்ட ஊதியங்கள், உள்வாங்குகை மற்றும் வைப்புகள் அல்லது வங்கியில் மேற்கொள்ளப்பட்ட முதலீடுகள் என்ற பரந்த பிரிவுகளுக்குள் குறித்துரைக்கப்பட்டுள்ளன.	இணங்கி நடக்கப்பட்டுள்ளது முக்கிய முகாமைத்துவ ஆட்களுக்குச் செலுத்தப்பட்ட மொத்த ஊதியத்தின் மொத்தப் பெறுமதியும் அவர்களுடனான பரிவர்த்தனைகளின் மொத்தப் பெறுமதியும் நிதிக் கூற்றுக்களுக்கான குறிப்பு 38.1 இல் வெளிப்படுத்தப்பட்டுள்ளன.
	g) சபை கூட்டுறவு ஆளுகை வழிகாட்டிகளுடன் இணங்கி நடந்தமை தொடர்பாக, வெளிவாரி கணக்காய்வாளர்களின் அறிக்கையைப் பெற்றுக்கொண்டுள்ளது.	இணங்கி நடக்கப்பட்டுள்ளது கூட்டுறவு ஆளுகை வழிகாட்டிகளுடன் இணங்கி நடந்தமை தொடர்பான வெளிவாரி கணக்காய்வாளர்களின் அறிக்கை வருடாந்த அறிக்கையில் உள்ளடக்கப்பட்டுள்ளது.
	h) விவேகமான தேவைப்பாடுகள், ஒழுங்கு விதிகள், சட்டங்கள் மற்றும் உள்ளகக் கட்டுப்பாடுகள் மற்றும் ஏதேனும் முக்கியமான தேவைப்பாட்டுடன் இணங்கி நடக்காமையை சீர்படுத்துவதற்காக எடுக்கப்பட்டுள்ள வழிவகைகள் ஆகியவற்றின் விபரங்களை குறிப்பிட்ட ஒரு அறிக்கை.	இணங்கி நடக்கப்பட்டுள்ளது விவேகமான தேவைப்பாடுகள், ஒழுங்கு விதிகள், சட்டங்கள் மற்றும் உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான விபரங்கள் பணிப்பாளரின் அறிக்கைகளில் உள்ளடக்கப்பட்டுள்ளன.
	i) ஒழுங்குபடுத்தல் மற்றும் மேற்பார்வை விடயங்களில் வங்கியின் இடர் முகாமைத்துவம் விட்ட குறைபாடுகள் அல்லது அத்தகைய வழிகாட்டுதல்களுடன் இணங்கி நடக்காமை பற்றி வங்கி மேற்பார்வை தொடர்பான பணிப்பாளரால் குறித்துக் காட்டப்பட்டிருப்பின், அவை பொது மக்களுக்கு வெளிப்படுத்தப்பட வேண்டும். அந்த வெளிப்படுத்தலில் அத்தகைய விடயங்களை எதிர்கொள்ள வங்கி எடுத்த நடவடிக்கைகளையும் குறிப்பிட வேண்டும்.	பொருத்தமற்றது அத்தகைய வழிகாட்டி ஒன்று பெறப்படவில்லை.

சபை மற்றும் சபைக் கூட்டங்களுக்கான சமூகமளிப்பு

பெயர்கள்	திரு. M மஹிந்த சாலிய தலைவர்	கலாநிதி நிர்மால் டி சில்வா சபை பணிப்பாளர்	திரு. W.M கருணாரத்ன சபை பணிப்பாளர்	பேராசிரியர் H.M.W.A. ஹேரத் சபை பணிப்பாளர்	திரு. K. ரவீந்திரன் சபை பணிப்பாளர்	திரு. G.A ஜயசாந்த சபை பணிப்பாளர்	திருமதி ஹிரந்தி கருணாரத்ன சபை பணிப்பாளர்	திரு. M.S.S.S. பெர்னாண்டோ சபை பணிப்பாளர்	திரு. லலித் அபேசிறிவர்தன சபை பணிப்பாளர்	திருமதி V.K .நாரங்கொட சபை பணிப்பாளர்	திரு W.A .ரத் குமார சபை பணிப்பாளர்
திகதிகள்											
06.01.2022	P	P	P	P	P	P	P	P	P	N/A	N/A
20.01.2022	P	P	P	P	P	P	P	E	P	N/A	N/A
10.02.2022	P	E	E	P	P	E	E	P	P	P	N/A
25.02.2022	P	P	P	P	P	P	E	P	E	P	N/A
10.03.2022	P	P	P	P	E	E	P	E	P	P	N/A
01.04.2022	P	P	P	P	P	P	P	P	P	P	N/A
05.05.2022	P	R	P	P	P	P	P	P	P	P	N/A
26.05.2022	P	R	P	P	P Join via zoom	P	P	P	P	P	N/A
10.06.2022	P	R	P	P	P	P	P	P	P	P	N/A
27.06.2022	P	R	P	P	P Join via zoom	E	P	P	P	P	N/A
14.07.2022	P	R	P	P	E	E	E	P	P Join via zoom	P	N/A
29.07.2022	P	R	P	P	P Join via zoom	P Join via zoom	E	P	P	P	N/A
18.08.2022	P	R	P	P	P	P	E	R	P	P	N/A
01.09.2022	P	R	P	P	P	P	P	R	P	P	N/A
05.09.2022	P	R	E	P	P	P	E	R	P	P	N/A
06.10.2022	P	R	P	P	P	E	E	R	P	P	N/A
26.10.2022	P	R	P	P	P	P	P	R	P	P	N/A
10.11.2022	P	R	P	P	P Join via zoom	E	P	R	P	P	N/A
24.11.2022	P	R	E	P	P	P	P	R	P	P	N/A
08.12.2022	P	R	E	P	P	P	P	R	P	P	N/A
22.12.2022	P	R	P	P	E	P	P	R	P	P	P

சபை மற்றும் சபைக் கூட்டங்களுக்கான சமூகமளிப்பு

சபை மனித வள மற்றும் ஊதியங்கள் குழு

திகதிகள்	10.02.2022	19.05.2022	07.07.2022	29.09.2022	21.11.2022	22.12.2022
பெயர்கள்						
திரு. M மஹிந்த சாலிய தலைவர்	P	P	P	P	P	P
கலாநிதி நிர்மால் டி சில்வா சபை பணிப்பாளர்	E	R	R	R	R	R
திரு. லலித் அபேசிறிவர்தன சபை பணிப்பாளர்	P	P	P	P	P	P
பேராசிரியர் H.M.W.A. ஹேரத் சபை பணிப்பாளர்	P	P	P	P	P	P

சபை கணக்காய்வுக் குழு

திகதிகள்	28.02.2022	20.06.2022	29.08.2022	31.10.2022	21.11.2022
பெயர்கள்					
திரு. M.S.S.S பெர்ணான்டோ சபை பணிப்பாளர்/ குழு தலைவர்	P	P join via zoom	R	R	R
திரு. W.M கருணாரத்ன சபை பணிப்பாளர்/ குழு தலைவர்	P	P	P	P	P
திரு. லலித் அபேசிறிவர்தன சபை பணிப்பாளர்	P	P	P	P	P
திரு. G.A ஜயசாந்த சபை பணிப்பாளர்	P	P	P	P	P
திருமதி V.K நாராங்கொட சபை பணிப்பாளர்	N/A	P	P	P	P

சபைத் தெரிவுக் குழு

திகதிகள்	10.02.2022	26.05.2022	29.09.2022	21.11.2022
பெயர்கள்				
திரு. M மஹிந்த சாலிய தலைவர்	P	P	P	P
கலாநிதி நிர்மால் டி சில்வா சபை பணிப்பாளர்	E	R	R	R
திரு. லலித் அபேசிறிவர்தன சபை பணிப்பாளர்	P	P	P	P
பேராசிரியர் H.M.W.A. ஹேரத் சபை பணிப்பாளர்	P	P	P	P
திருமதி ஹிரந்தி கருணாரத்ன சபை பணிப்பாளர்	E	P	P	P

ஒருங்கிணைக்கப்பட்ட இடர் முகாமைத்துவக் குழு

திகதிகள்	25.02.2022	18.05.2022	27.07.2022	14.10.2022
பெயர்கள்				
திரு. K ரவீந்திரன் சபை பணிப்பாளர்/ குழுத் தலைவர்	P	P	P join via zoom	P
பேராசிரியர் H.M.W.A. ஹேரத் சபை பணிப்பாளர்	P	P join via zoom	P join via zoom	P
கலாநிதி நிர்மால் டி சில்வா சபை பணிப்பாளர்	P	R	R	R
திரு. G.A ஜயசாந்த சபை பணிப்பாளர்	P	P	P join via zoom	P

பணிப்பாளர் சபையின் வருடாந்த அறிக்கை

பொதுவானவை

பிரதேச அபிவிருத்தி வங்கியின் (RDB) பணிப்பாளர்கள், வங்கியின் விவகாரங்கள் தொடர்பான வருடாந்த அறிக்கையை 2022 டிசம்பர் 31 இல் பூர்த்தியடைந்த வங்கியின் 13வது வருடத்திற்கான கணக்காய்வு செய்யப்பட்ட நிதிக் கூற்றுக்களுடன் தமது வருடாந்த அறிக்கையைச் சமர்ப்பிப்பதில் மகிழ்ச்சியடைகின்றனர். இவ்வறிக்கை 2008 ஆம் ஆண்டின் 41ஆம் இலக்க பிரதேச அபிவிருத்தி வங்கி சட்டம், 1988 ஆம் ஆண்டின் 30 ஆம் இலக்க வங்கிச் சட்டம் மற்றும் கூட்டுறவு ஆளுகை தொடர்பான வழிகாட்டிகள் ஆகியவற்றில் உள்ள தேவைப்பாடுகளைப் பூர்த்தி செய்துள்ளமையையும் இவ்வறிக்கை மேலும் உறுதிப்படுத்துகிறது. வங்கி 1997 ஆம் ஆண்டு 17 கிராமிய அபிவிருத்தி வங்கிகள் ஒன்றிணைக்கப்பட்டு ரஜரட்ட, ருஹுண, வயம்ப, ஊவா, கந்துரட்ட மற்றும் சப்ரகமுவ அபிவிருத்தி வங்கிகள் என 6 வங்கிகளாக உருவெடுத்தன. இந்த 6 மாகாண அபிவிருத்தி வங்கிகளும் 2010 மே மாதம் ஒன்றிணைக்கப்பட்டு ஒரு தேசிய மட்ட அபிவிருத்தி வங்கியாக உருப்பெற்று, பிரதேச அபிவிருத்தி வங்கி (பிராந்திய அபிவிருத்தி வங்கி அல்லது PSB) எனப் பெயரிடப்பட்டது. பிரதேச அபிவிருத்தி வங்கி 2008 ஆம் ஆண்டின் 41 ஆம் இலக்க பிரதேச அபிவிருத்தி வங்கி சட்டத்தின் கீழ் ஸ்தாபிக்கப்பட்டது. பிரதேச அபிவிருத்தி வங்கி அரசினால் உரிமை கொள்ளப்பட்ட தேசியமட்ட வங்கியாக இருப்பதோடு, இது கிராமிய மக்களுக்கு அணுகக்கூடிய மற்றும் குறைந்த செலவுடன் பெறக்கூடிய நிதிச் சேவைகளை வழங்குவதன் மூலம், அவர்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதையும், கிராமியப் பொருளாதாரத்தை உயர்த்துவதையும் குறிக்கோளாகக் கொண்டுள்ளது.

முதன்மை நடவடிக்கைகள்

விவசாயம், கைத்தொழில், வியாபாரம், வர்த்தகம், கால்நடை, மீன்பிடி நடவடிக்கைகள் மற்றும் நுண் நிதி நிறுவனங்கள் மற்றும் சிறிய மற்றும் நடுத்தர முயற்சியாளர்களுக்கு நிதியுதவி வழங்குவதன் மூலம் இலங்கையர்களை மேம்படுத்துதல் ஆகிய ஒட்டுமொத்த பொருளாதார அபிவிருத்தியையும் ஏற்படுத்திக் கொடுத்தல் என்பன வங்கியின் முதன்மை நடவடிக்கைகளாக அமைகின்றன.

நோக்கு மற்றும் பணி நோக்கு

வங்கியின் நோக்கு மற்றும் பணி நோக்கு என்பன, வருடாந்த அறிக்கையின் முகப்புப் பக்கத்தில் தரப்பட்டுள்ளது. வங்கி தனது நோக்கு, பணி நோக்குக் கூற்றுக்களில் குறிப்பிட்ட இலக்குகளை அடைகின்ற அதேவேளை, அதன் நடவடிக்கைகளில் உயர் நெறிமுறைத் தன்மையையும் பேணுகிறது.

நிறுவனத் தொடர்ச்சி

வங்கி, எதிர்காலத்தில் தனது செயற்பாடுகளை தொடர்ந்து நடத்த போதுமான வளங்களைக் கொண்டுள்ளது என பணிப்பாளர் சபை திருப்தியடைகிறது. எனவே, நிதிக் கூற்றுக்களைத் தயாரிப்பதில் நாம் தொடர்ந்து நிறுவனத் தொடர்ச்சி அடிப்படையைக் கையாண்டு வருகின்றோம்.

நிதிக் கூற்றுக்கள்

இலங்கை பட்டயக் கணக்காளர் நிறுவனத்தினால் குறித்துரைக்கப்பட்ட, இலங்கை கணக்கியல் நியமங்களுடனும் (SLFRS/LKAS) 1988ஆம் ஆண்டின் 30ஆம் இலக்க வங்கிச் சட்டத்தின் தேவைப்பாடுகளுடன் ஒத்திசைந்து, வங்கியின் நிதிக் கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டு உள்ளன. 2022 டிசம்பர் 31 இல் முடிவடைந்த வங்கியின் 13வது வருடத்திற்கான நிதிக் கூற்றுக்கள், பிரதான நிதி அதிகாரி, பிரதான நிர்வாக அதிகாரி மற்றும் வங்கியின் இரண்டு பணிப்பாளர்களால் முறையாக கையொப்பமிடப்பட்டு, 142வது பக்கத்தில் தரப்பட்டுள்ளதுடன், பணிப்பாளர் சபையின் வருடாந்த அறிக்கையின் முக்கிய பாகமாகவும் அது அமைகிறது.

நிதி அறிக்கையிடல் தொடர்பாக பணிப்பாளர்களின் பொறுப்புகள்

வங்கியின் விவகாரங்கள் பற்றி உண்மையான மற்றும் நியாயமான பார்வையைப் பிரதிபலிக்கின்ற நிதிக் கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு பணிப்பாளர்கள் பொறுப்புடையவர்களாவர். இந்த நிதிக் கூற்றுக்கள், இலங்கை கணக்கியல் நியமங்களுக்கு அமைவாகவும், 1988ஆம் ஆண்டின் 30 ஆம் இலக்க வங்கிச் சட்டம் மற்றும் அதன் திருத்தங்கள் என்பவற்றின் தேவைப்பாடுகளுக்கு அமைவாகவும் தயாரிக்கப்பட்டுள்ளது என்ற கருத்தைத் தெரிவிக்கின்றன.

இந்த வருடாந்த அறிக்கையின் 132வது பக்கத்தில் தோன்றுகின்ற பணிப்பாளர்களின் பொறுப்புக் கூற்று, நிதிக் கூற்றுக்கள் தொடர்பான பணிப்பாளர்களின் பொறுப்புகளை விபரமாக விளக்குகிறது. அத்துடன், இது, பணிப்பாளர் சபையின் வருடாந்த அறிக்கையின் முக்கிய பாகமாகவும் அமைகிறது.

கணக்காய்வாளரின் அறிக்கை

கணக்காய்வாளர், வங்கியின் கணக்காய்வை 2022 இல் மேற்கொண்டார். கணக்காய்வு வருடம் முழுவதும் நடைபெற்றது. அவர்களுடைய அறிக்கையில் இனங்காணப்பட்ட விடயங்கள் துரித நடவடிக்கைக்காக முகாமைத்துவத்திற்கு கிரமமாக சமர்ப்பிக்கப்பட்டது. நிதி அறிக்கையிடல், நிதிக் கூற்றுக்கள், தேவையான தரவு மற்றும் தகவல்களுடன் அவற்றின் உண்மைத் தன்மையை உறுதிப்படுத்திய பின்னர், கணக்காய்வாளர் நாயகத்தின் பரிசீலனைக்காக வழங்கப்பட்டது. இந்த நிதிக் கூற்றுக்கள் தொடர்பான

பணிப்பாளர் சபையின் வருடாந்த அறிக்கை

கணக்காய்வாளர் நாயகத்தின் கருத்து 118 வது பக்கத்தில் தரப்பட்டுள்ளது. ஒழுங்குபடுத்தல் மேற்பார்வை அமைப்பு என்ற வகையில், இலங்கை மத்திய வங்கி அதனால் வழங்கப்பட்ட வழிகாட்டிகளோடு ஒத்திசைந்து வங்கியின் விடயங்கள் அமைந்தன என்பதை உறுதிப்படுத்துவதற்கு வங்கி நடவடிக்கைகளையும், பதிவுகளையும் காலாந்தர பரீட்சைக்கு உட்படுத்தியது. மேலும், மத்திய வங்கி, பிரதேச அபிவிருத்தி வங்கி தேவையான மட்டத்தில் தேவைப்படுத்தப்பட்ட நிதிக் குறிகாட்டிகளைப் பேணி வந்துள்ளதா என்பதைத் தீர்மானிக்கும். இதன் மூலம் அனைத்துப் பங்குதாரர்களினதும், குறிப்பாக வைப்பாளர்களின் அக்கறைகள் பாதுகாக்கப்படும்.

முக்கிய கணக்கியல் கொள்கைகள்

நிதிக் கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, பயன்படுத்தப்பட்ட முக்கிய கணக்கியல் கொள்கைகள் 150 - 170 வரையான பக்கங்களில் தரப்பட்டுள்ளன.

பணிப்பாளர்களின் ஊதியங்கள்

இவ்வருடத்தின் போது பணிப்பாளர்களுக்குச் செலுத்தப்பட்ட சம்பளங்கள் பற்றிய விபரங்கள் நிதிக்கூற்றுக்களுக்கான குறிப்பு 14 இல் தரப்பட்டுள்ளன.

எதிர்கால அபிவிருத்திகள்

வங்கியின் எதிர்கால அபிவிருத்தி பற்றிய ஒரு பார்வை தலைவரின் கூற்று (பக்கங்கள் 10 - 14) பொது முகாமையாளர்/ பி.நி.அ யின் மீளாய்வு (பக்கங்கள் 15 - 19) மற்றும் முகாமைத்துவக் கலந்துரையாடல் மற்றும் பகுப்பாய்வு (பக்கங்கள் 38 - 76) என்பவற்றில் தரப்பட்டுள்ளன.

வணிக செயற்திறன் பற்றிய மீளாய்வு

இந்த நிதியாண்டின் போது வங்கி செயற்திறன் பற்றிய மீளாய்வு தலைவரின் கூற்று (பக்கங்கள் 10 - 14), பொது முகாமையாளர்/ பி.நி.அ யின் மீளாய்வு (பக்கங்கள் 15 - 19) மற்றும் முகாமைத்துவக் கலந்துரையாடல் மற்றும் பகுப்பாய்வு (பக்கங்கள் 38 - 76) என்பவற்றில் தரப்பட்டுள்ளன. இந்த அறிக்கைகள் வருடாந்த அறிக்கையின் முக்கிய பாகமாக அமைகின்றன.

நிதிப் பெறுபேறுகள்

வங்கியின் நிதி மற்றும் தொழிற்பாட்டுச் செயற்திறன் என்பன பொது முகாமையாளர்/ பி.நி.அ யின் மீளாய்வில் (பக்கங்கள் 15 - 19) மற்றும் நிதிச் சிறப்பம்சங்கள் (பக்கங்கள் 8 - 9) என்பனவற்றில் தரப்பட்டுள்ளன.

குறிப்பிடப்பட்ட மூலதனம்

31.12.2022 இல் உள்ளவாறு மொத்த பங்குதாரர் நிதி 16.2 பில்லியன் ரூபாய்களாகும். வருட இறுதியில் பங்குதாரர்களினால் பங்களிப்பு செய்யப்பட்ட குறிப்பிடப்பட்ட மூலதனம் 8.22 பில்லியன் ரூபாய்களாகும். அவற்றின் பங்குதாரர்களின் பங்கு வைத்திருத்தல் விகிதம் கீழே தரப்பட்டுள்ளன.

	ரூபா	%
01. பொதுத் திறைசேரி	501,941,973	91
02. இலங்கை வங்கி	16,448,448	3
03. மக்கள் வங்கி	16,448,448	3
04. தேசிய சேமிப்பு வங்கி	16,452,126	3
மொத்தம்	551,290,995	100

வருமானம்

2022ஆம் ஆண்டில் வங்கி பெற்ற மொத்த வருமானம் 36.20 பில்லியன் ரூபாய்களாகும். வருமானம் பற்றிய விபரங்கள் 172வது பக்கத்தில் தரப்பட்டுள்ளன.

வரி விதிப்பு

வங்கி 2022ஆம் ஆண்டில் வரிகள் மற்றும் தீர்வைகள் என்ற அடிப்படையில் 2,940 மில்லியன் ரூபாயைப் பங்களிப்புச் செய்துள்ளது. இத்தொகை 1,301 மில்லியன் ரூபாய் வருமான வரி மற்றும் 1,561 மில்லின் ரூபாய் நிதிச் சேவை பெறுமதி சேர்க்கப்பட்ட வரி மற்றும் 78 மில்லியன் ரூபாய் சமூகப் பாதுகாப்பு பங்களிப்பு வரி ஆகியவற்றை உள்ளடக்குகிறது. வங்கிச் செயற்பாடுகள் மீது பிரயோகிக்கப்படும் வருமான வரி வீதம் 30% ஆகும். வங்கி பொறுப்பு முறைமையின் கீழ் அனைத்து அறியப்பட்ட தற்காலிக வேறுபாடுகள் மீது ஒத்தி வைக்கப்பட்ட வரியை வழங்குவது வங்கியின் கொள்கையாகும்.

ஆதனம், பொறி மற்றும் உபகரணம்

இந்த வருடத்தின் போது ஆதனம், பொறி மற்றும் உபகரணங்கள் மற்றும் குத்தகை ஆதனம் மற்றும் அருவச் சொத்துக்கள் என்பவற்றைக் கையகப்படுத்துவதற்கு ஏற்பட்ட வங்கியின் மொத்த மூலதனச் செலவு 210 மில்லியன் ரூபாயாகும். (2021 இல் 326 மில்லியன் ரூபாய்) இவை பற்றிய விபரங்கள் வருடாந்த அறிக்கையின் 182 - 188வது பக்கங்களில் உள்ள நிதிக் கூற்றுக்களுக்கான குறிப்புகள் 24 மற்றும் 25 இல் தரப்பட்டுள்ளன.

ஐந்தொகை திகதியின் பின்னர் நடைபெற்ற நிகழ்வுகள்

ஐந்தொகைத் திகதியின் பின்னர் முக்கியமான நிகழ்வுகள் எதுவும் இடம்பெறவில்லை. அதனால் நிதிக் கூற்றுக்களில் சீர்படுத்தல்களோ அல்லது வெளிப்படுத்தல்களோ தேவைப்படவில்லை.

பணிப்பாளர் சபையின் வருடாந்த அறிக்கை

நிலுவையாக உள்ள வழக்குகள்

வங்கியின் பணிப்பாளர்கள் மற்றும் வங்கியின் சட்டத்தரணிகளின் கருத்தின்படி, நிதிக் கூற்றுக்களுக்கான கூற்று 41 இல் வெளிப்படுத்தப்பட்ட வங்கிக்கு எதிரான வழக்குகள், வங்கியின் நிதி நிலைமையில் அல்லது எதிர்கால செயற்பாடுகளில் முக்கியமான தாக்கத்தை ஏற்படுத்தாது.

மூலதனமும் ஒதுக்குகளும்

தக்க வைக்கப்பட்ட சம்பளங்கள் உள்ளடங்கலாக வங்கியின் மூலதனமும், ஒதுக்குகளும் பின்வருவனவற்றை உள்ளடக்குகின்றன.

	2022 ரூபா	2021 ரூபா
குறிப்பிடப்பட்ட மூலதனம்	**8,221,864,565**	8,047,229,930
நியதிச்சட்ட ஒதுக்க நிதி	**845,247,866**	777,778,133
விசேட ஒதுக்க நிதி	**699,638,194**	632,168,461
பொது ஒதுக்க நிதி	**3,569,591,213**	3,299,712,282
தக்க வைக்கப்பட்ட சம்பாத்தியங்கள்	**2,889,785,537**	2,636,433,520
மொத்தம்	**16,226,127,375**	15,393,322,327

பங்கிலாபங்கள்

2022ஆம் ஆண்டுக்கான ஓரளவான தொழிற்பாட்டுப் பெறுபேறுகள் மற்றும் மூலதனப் பற்றாக்குறை என்பனவற்றின் அடிப்படையில், 2022ஆம் ஆண்டில் பெறப்பட்ட இலாபங்களில் இருந்து பங்குலாபப் பங்கீட்டை பணிப்பாளர் சபை அங்கீகரிக்கவில்லை.

பணிப்பாளர்கள் சபை

பணிப்பாளர்கள் சபையானது, தலைவர் உள்ளடங்கலாக 11 உறுப்பினர்களைக் கொண்டுள்ளது. திறைசேரியின் செயலாளர் தலைவரையும், ஏனைய பணிப்பாளர்களையும் நியமிப்பார். பொதுத் திறைசேரி, இலங்கை வங்கி, மக்கள் வங்கி மற்றும் தேசிய சேமிப்பு வங்கி ஆகியவற்றைப் பிரதிநிதித்துவப்படுத்தக்கூடிய நான்கு பணிப்பாளர்கள் பங்குதாரர்களால் நியமிக்கப்படுவர்.

பணிப்பாளர் சபையில் அங்கம் வகிப்பவர்களின் பெயர்கள் கீழே தரப்பட்டுள்ளன. அவர்களின் விபரங்கள் 22 - 27வது பக்கங்களில் தரப்பட்டுள்ளன.

திரு. M. மஹிந்த சாலிய (தலைவர்)

திரு. K. ரவீந்திரன் (சுயாதீனமற்ற/ நிறைவேற்றுநர் அல்லாத பணிப்பாளர்)

திரு. W.M. கருணாரத்ன (சுயாதீன/ நிறைவேற்றுநர் அல்லாத பணிப்பாளர்)

பேராசிரியர் H.M.W. ஆரியரத்ன ஹேரத் (சுயாதீன/ நிறைவேற்றுநர் அல்லாத பணிப்பாளர்)

கலாநிதி நிர்மால் டி சில்வா (சுயாதீன/ நிறைவேற்றுநர் அல்லாத பணிப்பாளர்)

திரு. லலித் அபேசிரிவர்தன (சுயாதீன/ நிறைவேற்றுநர் அல்லாத பணிப்பாளர்)

திரு. G.A ஜயஷாந்த (சுயாதீனமற்ற/ நிறைவேற்றுநர் அல்லாத பணிப்பாளர்)

திருமதி ஹிரந்தி கருணாரத்ன (சுயாதீன/ நிறைவேற்றுநர் அல்லாத பணிப்பாளர்)

திரு. M.S.S.S. பெர்னாண்டோ (சுயாதீனமற்ற/ நிறைவேற்றுநர் அல்லாத பணிப்பாளர்)

திருமதி. கிருஷானி நாரங்கொட (சுயாதீனமற்ற/ நிறைவேற்றுநர் அல்லாத பணிப்பாளர்)

திரு. W.A சரத் குமார (சுயாதீனமற்ற/ நிறைவேற்றுநர் அல்லாத பணிப்பாளர்)

பணிப்பாளர்களின் இராஜினாமா

கலாநிதி நிர்மால் டி சில்வா (சுயாதீன/ நிறைவேற்றுநர் அல்லாத பணிப்பாளர், 04.04.2022இல் இருந்து இராஜினாமா)

திரு. M.S.S.S. பெர்னாண்டோ (சுயாதீனமற்ற/ நிறைவேற்றுநர் அல்லாத பணிப்பாளர், 29.07.2022இல் இருந்து இராஜினாமா)

திருமதி. கிருஷானி நாரங்கொட (சுயாதீனமற்ற/ நிறைவேற்றுநர் அல்லாத பணிப்பாளர், 22.12.2022இல் இருந்து இராஜினாமா)

பணிப்பாளர்	நியமனத் திகதி
திரு. W.A. சரத் குமார	26.08.2022
திருமதி கிருஷானி நாரங்கொட	10.01.2022

புதிய பணிப்பாளர்களின் நியமனம்

சபை உப குழுக்கள்

பணிப்பாளர் சபை ஒட்டுமொத்த பொறுப்பையும், வகை கூறலையும் பொறுப்பேற்றுக் கொள்ளும் அதேவேளை, இலங்கை மத்திய வங்கி மற்றும் ஏனைய நியதிச் சட்ட இணக்கத் தேவைப்பாடுகளுடன் கூட்டுறவு ஆளுகை தொடர்பான தரங்களைப் பின்பற்றுவதை உறுதிப்படுத்த பின்வரும் சபை உப குழுக்களை நியமித்துள்ளது. சபையின் செயலாளர் அனைத்து சபை உப குழுக்களின் செயலாளராகக் கடமையாற்றுவார்.

சபையின் கணக்காய்வுக் குழு

1. திரு. M.S.S.S. பெர்னாண்டோ (குழுவின் தலைவர்) (28.02.2022 இல் நியமிக்கப்பட்டார்)
2. திரு. W.M. கருணாரத்ன
3. திரு. லலித் அபேசிறிவர்தன
4. திரு. G.A. ஜயசாந்த
5. திருமதி. கிருஷானி நாரங்கொட (20.06.2022இல் நியமிக்கப்பட்டார்)
6. தேசிய கணக்காய்வு அலுவலகத்தின் ஒரு கணக்காய்வு கண்காணிப்பாளர்
7. திரு. C.L.C. முதுபண்டா, உதவிப் பொது முகாமையாளர் - உள்ளகக் கணக்காய்வு
8. திரு. J. பிரியசாந்த, தலைவர் - உள்ளகக் கணக்காய்வு (29.08.2022 இலிருந்து)

கணக்காய்வுக் குழுவின் அறிக்கை 102வது பக்கத்தில் தரப்பட்டுள்ளது. அத்துடன், இது பணிப்பாளரின் அறிக்கையின் ஒரு பகுதியாகவும் அமைகிறது.

ஒருங்கிணைந்த இடர் முகாமைத்துவக் குழு

1. திரு. K. ரவீந்திரன் (குழுவின் தலைவர்)
2. பேராசிரியர் H.M.W. ஆரியரத்ன ஹேரத்
3. கலாநிதி நிர்மால் டி சில்வா (04.04.2022இல் இருந்து அமுலாகும் விதத்தில் இராஜினாமா)
4. திரு. G.A. ஜயஷாந்த
5. திரு. A.H.M.M.B. ஜயசிங்க - பொது முகாமையாளர்/ பிரதான நிறைவேற்று அதிகாரி (25.02.2022 இலிருந்து)
6. திரு. சுமேத எதிரிசூரிய - பொது முகாமையாளர்/ பிரதான நிறைவேற்று அதிகாரி (பதில் கடமையாற்றல்) (05.09.2022 இலிருந்து)
7. திருமதி. H.M.N.M. ஹேரத் - உதவிப் பொது முகாமையாளர் - இடர்நேர்வு முகாமைத்துவம்
8. திருமதி. T.K. விஜேரத்ன - உதவிப் பொது முகாமையாளர் - இணக்கப்பாடுகள்

ஒருங்கிணைக்கப்பட்ட இடர் முகாமைத்துவக் குழுவின் அறிக்கை 122வது பக்கத்தில் தரப்பட்டு உள்ளது. இது, பணிப்பாளர்களின் அறிக்கையின் ஒரு பகுதியாகும்.

சபையின் மனித வளங்கள் மற்றும் ஊதியங்கள் குழு

1. திரு. M. மஹிந்த சாலிய (குழுவின் தலைவர்)
2. கலாநிதி நிர்மால் டி சில்வா (04.04.2022இல் இருந்து அமுலாகும் விதத்தில் இராஜினாமா)
3. திரு. லலித் அபேசிரிவர்தன
4. பேராசிரியர் H.M.W. ஆரியரத்ன ஹேரத்
5. திருமதி. ஹிரந்தி கருணாரத்ன (21.11.2022இல் நியமனம்)
6. திரு. A.H.M.M.B. ஜயசிங்க - பொது முகாமையாளர்/ பிரதான நிறைவேற்று அதிகாரி (10.02.2022 இலிருந்து)
7. திரு. சுமேத எதிரிசூரிய - பொது முகாமையாளர்/ பிரதான நிறைவேற்று அதிகாரி (பதில் கடமையாற்றல்) (05.09.2022 இலிருந்து)
8. திரு. D.K.S. சேரசிங்க (பிரதான மனிதவள அதிகாரி)

சபைத் தெரிவுக் குழு

1. திரு. M. மஹிந்த சாலிய (குழுவின் தலைவர்)
2. கலாநிதி நிர்மால் டி சில்வா
3. திரு. லலித் அபேசிறிவர்தன
4. பேராசிரியர் H.M.W. ஆரியரத்ன ஹேரத்
5 திருமதி ஹிரந்தி கருணாரத்ன
6 திரு. A.H.M.M.B. ஜயசிங்க - பொது முகாமையாளர்/ பிரதான நிறைவேற்று அதிகாரி (10.02.2022 இலிருந்து)
7 திரு. சுமேத எதிரிசூரிய - பொது முகாமையாளர்/ பிரதான நிறைவேற்று அதிகாரி (பதில் கடமையாற்றல்) (05.09.2022 இலிருந்து)
8 திரு. D.K.S. சேரசிங்க (பிரதான மனிதவள அதிகாரி)

பணிப்பாளர்களின் கூட்டங்கள்

பணிப்பாளர் சபைக் கூட்டங்களின் எண்ணிக்கை - சபைக் கூட்டங்கள், சபைக் கணக்காய்வுக் குழுக் கூட்டங்கள், ஒருங்கிணைக்கப்பட்ட இடர் முகாமைத்துவக் குழுக் கூட்டங்கள், சபை மனித வளங்கள் மற்றும் ஊதியங்கள் குழுக் கூட்டங்கள், சபையின் தெரிவுக் குழுக் கூட்டங்கள், சபை கடன் குழுக் கூட்டங்கள், சபை தகவல் தொழில்நுட்பக் கூட்டங்கள் என்பனவற்றை உள்ளடக்குவதுடன், இந்தக் கூட்டங்களில் சமூகமளித்த பணிப்பாளர்களின் விபரங்கள் வருடாந்த அறிக்கையின் 110, 111வது பக்கத்தில் கூட்டுறவு ஆளுகையின் கீழ் தரப்பட்டுள்ளது.

ஒப்பந்தங்களில் பணிப்பாளர்களின் அக்கறை

மீளாய்வுக்கு உட்பட்ட இவ்வருடத்தில், பணிப்பாளர்களுக்கு ஒப்பந்தங்கள் அல்லது உத்தேசிக்கப்பட்ட ஒப்பந்தங்களில் எவ்விதமான நேரடியான மற்றும் மறைமுகமாக அக்கறைகள் எதுவும் கிடையாது.

தொடர்புடைய திறத்தவர்களுடனான பரிவர்த்தனைகள்

இலங்கை கணக்கியல் நியமங்களில் (LKAS 24) விதிகளில் தொடர்புடைய திறத்தவர்களுடனான பரிவர்த்தனைகள் என வகுப்பாக்கம் செய்யப்பட்ட பரிவர்த்தனைகள் ஏதேனும் இருப்பின் அவை பற்றி பணிப்பாளர்கள் வெளிப்பாடுகளை மேற்கொண்டுள்ளனர். தொடர்புடைய திறத்தவருடனான வெளிப்பாடுகள் நிதிக் கூற்றுக்களைத் தயாரிக்கும் போது முன்னெடுக்கப்பட்டன. அவ்வாறு வெளிப்படுத்தப்பட்ட பரிவர்த்தனைகள் நிதிக் கூற்றுக்களுக்கான குறிப்பு 38 இல் தரப்பட்டுள்ளன.

பொது முகாமையாளர்/ பிரதான நிறைவேற்று அதிகாரி

பொது முகாமையாளர் பிரதான நிறைவேற்று அதிகாரியாக இருப்பதோடு, அவர் பணிப்பாளர் சபையினால் நியமிக்கப்படுவார். பொது முகாமையாளருக்கு சபைக் கூட்டங்களில் சமூகமளிக்கவும் பங்குபற்றவும் உரிமையுள்ளது.

மனித வளங்கள்

உயர் தரத்திலான சேவை ஊடாக நிலையாதாரப் பெறுமதியை உருவாக்க கடமை உணர்ச்சியுடன் செயற்படும் அர்ப்பணிப்பு மற்றும் உயர் ஊக்குவிப்புடன் கூடிய பணியாட்களை,

விருத்தியாண்மை செய்வதிலும் பேணுவதிலும் வங்கி தொடர்ந்து நடவடிக்கை எடுத்து வருகிறது.

செயற்பாட்டுச் சிறப்பு

வினைத்திறனை அதிகரிக்கவும், செயற்பாட்டுச் செலவைக் குறைக்கவும், வங்கி கொள்கைகளை இயக்கவும், தரத்தைச் செயற்படுத்தவும் மற்றும் தற்போது இருக்கக்கூடிய தொழில்நுட்பத் தளங்களை உச்ச அளவில் பயன்படுத்தவும், தொடர்ந்தும் முன்னெடுக்கும் முயற்சிகளைக் கொண்டுள்ளது.

சுற்றாடல் பாதுகாப்பு

வங்கியின் நிலையாதார அபிவிருத்திக்கும், வளர்ச்சிக்கும் முக்கியமான அங்கமாக அமைகின்ற சுற்றாடல் பாதுகாப்பை முன்னெடுப்பதற்கு வங்கி முயற்சிகளை மேற்கொண்டு வருகிறது. வங்கி, சுற்றாடலுக்குத் தீங்கு விளைவிக்கும் அல்லது பாதகமான எந்தவொரு செயற்பாட்டிலும் ஈடுபடவில்லை.

நியதிச் சட்டக் கொடுப்பனவுகள்

பணிப்பாளர்கள் தமது சிறந்த அறிவுக்கும், நம்பிக்கைக்கும் எட்டிய வகையில், அரசாங்கம் மற்றும் பணியாட்களுடன் தொடர்புடைய அனைத்துச் செலுத்த வேண்டிய நியதிச் சட்டக் கொடுப்பனவுகளும் செலுத்தப்பட்டு விட்டது என திருப்தியுறுகின்றனர்.

இடர் முகாமைத்துவம் உள்ளகக் கட்டுப்பாடுகள் மற்றும் முகாமைத்துவத் தகவல் முறை

பணிப்பாளர் சபை, இடர் முகாமைத்துவம் தொடர்பான ஒட்டு மொத்த பொறுப்பையும் ஏற்றுக் கொள்கிறது. இந்த நோக்கத்திற்காக, பணிப்பாளர் சபை, உள்ளகக் கட்டுப்பாடுகள் மற்றும் முகாமைத்துவத் தகவல் முறைமைகள் தொடர்பான வினைத்திறனான மற்றும் விரிவான முறையொன்றை உருவாக்கி அமுல்படுத்துகிறது. வங்கி எதிர்கொள்ளக்கூடிய இடர்களைத் தணிப்பதற்கு, உள்ளகக் கட்டுப்பாடுகள் மீள் வடிவமைக்கப்பட்டிருப்பதுடன், இவை முக்கியமான பிறள்கூற்றுக்கள் அல்லது நட்டங்களுக்கு எதிராக நியாயமான உறுதிப்பாட்டை வழங்குகின்றன. வங்கியினால் எதிர்கொள்ளப்படுகின்ற இடர்களை மதிப்பிடவும், கையாளவும், இனங்காணவும், தொடர்ந்து செல்லும் செயன்முறை ஒன்று உள்ளது. இடர்களைத் தணிக்க வங்கியினால் மேற்கொள்ளப்பட்ட குறிப்பான நடவடிக்கைகள் இவ் அறிக்கையின் 63 - 76 வரையான பக்கங்களில் தரப்பட்டுள்ளன.

உள்ளகக் கட்டுப்பாடு தொடர்பான பணிப்பாளர்களின் கூற்று

நிதி அறிக்கையிடலின் உண்மைத் தன்மை பற்றி நியாயமான உறுதிப்பாட்டை வழங்குவதற்கு ஏற்ற வகையில் நிதி அறிக்கையிடல் முறை வடிவமைக்கப்பட்டுள்ளது என்பதை சபை உறுதிப்படுத்துகிறது. வெளியக நோக்கங்களுக்காகத் தயாரிக்கப்பட்ட நிதிக் கூற்றுக்கள், பொருத்தமான கணக்கியல் எண்ணக்கருக்கள் மற்றும் ஒழுங்குபடுத்தல் தேவைப்பாடுகளுக்கு அமைவாக தயாரிக்கப்பட்டுள்ளன. மேலே குறிப்பிடப்பட்ட இவ்வறிக்கை பணிப்பாளர்களின் வருடாந்த அறிக்கையின் முக்கிய பகுதியாக அமைவதோடு, அது, 130வது பக்கத்தில் தரப்பட்டுள்ளது. வருடாந்த அறிக்கையில் 128வது பக்கத்தில் தரப்பட்டுள்ள உள்ளகக் கட்டுப்பாடு தொடர்பான பணிப்பாளர்களின் கூற்று தொடர்பான கணக்காய்வாளரிடம் இருந்து பெற்ற அறிக்கை மூலம் சபை உறுதிப்பாட்டைப் பெற்றுள்ளது.

கூட்டுறவு ஆளுகை

வங்கியை முகாமைத்துவம் செய்வதில் பணிப்பாளர்கள் சிறந்த கூட்டுறவு ஆளுகை நடைமுறைகளையும், நடவடிக்கைகளையும் பின்பற்றுவதற்கு முக்கியத்துவம் கொடுத்துள்ளனர். இதற்கமைய, இடர்முகாமைத்துவ வழிமுறைகளை மேம்படுத்தவும், பொறுப்புக் கூறுதல் மற்றும் வெளிப்படைத் தன்மை என்பவற்றை முன்னேற்றவும், காலத்திற்குக் காலம் முறைமைகளும் கட்டமைப்புகளும்

அறிமுகப்படுத்தப்பட்டு/ முன்னேற்றப்பட்டு உள்ளன. கூட்டுறவு ஆளுகை தொடர்பான பிரத்தியேகமான அறிக்கை 80 - 109வரையான பக்கங்களில் தரப்பட்டுள்ளன. இது தொடர்பான நிகழ்வு ரீதியான கண்டறிதல்கள் பற்றிய அறிக்கையை கணக்காய்வாளர் நாயகத்திடம் இருந்து சபை பெற்றுள்ளது.

சட்டங்கள், ஒழுங்கு விதிகள் மற்றும் விவேகமான தேவைப்பாடுகளுடன் இணங்கி நடத்தல்

வங்கி, அனைத்து சந்தர்ப்பங்களிலும், பிரதேச அபிவிருத்தி வங்கிச் சட்டம் மற்றும் ஏனைய அனைத்து பொருத்தமான சட்டங்கள், ஒழுங்கு விதிகள் மற்றும் விவேகமான தேவைப்பாடுகளுடன் இணங்கி நடந்தமையை உறுதிப்படுத்துகிறது.

கணக்காய்வாளர்கள்

2022 டிசம்பர் 31 இல் முடிவடைந்த நிதியாண்டிற்கான வங்கியின் நிதிக் கூற்றுக்கள் பற்றிய கணக்காய்வு, கணக்காய்வாளர் நாயகத்தினால் நடத்தப்பட்டுள்ளது.

சபையின் உத்தரவுப்படி



துலான ராஜபக்ச
சபையின் செயலாளர்

சபை மனித வளங்கள் மற்றும் ஊதியங்கள் குழு (BHRRC), சபை தெரிவுக் குழு (BNC) அறிக்கை

அறிமுகம்

உரிமம் அளிக்கப்பட்ட விசேட வங்கிகளுக்கு வழங்கப்பட்ட வழிகாட்டி 3(6) இல் குறித்துரைக்கப்பட்டவாறு, இலங்கை மத்திய வங்கியின் வழிகாட்டுதல்கள் மற்றும் கூட்டுறவு ஆளுகை தொடர்பான நடைமுறைகள் என்பவற்றுக்கு அமைய, பணிப்பாளர் சபைக்கு நேரடியாக அறிக்கையிட சபை உப குழுக்குகளை ஸ்தாபிக்குமாறு பிரதேச அபிவிருத்தி வங்கி தேவைப்படுத்தப்படுகிறது. மனித வளங்கள் மற்றும் ஊதியங்கள் குழு (BHRRC) மற்றும் சபைத் தெரிவுக் குழு (BNC) எனப் பெயரிடப்பட்ட இரண்டு பிரத்தியேகக் குழுக்கள், சபைப் பணிப்பாளர்களின் உள்ளடக்கத்துடன் உருவாக்கப்பட்டன. இலங்கை மத்திய வங்கியின் வழிகாட்டுதல்களுக்கு அமைய, வரையறை செய்யப்பட்ட எல்லைகளுக்குள் இவ்விரண்டு குழுக்களுக்கும் பொறுப்புகள் வழங்கப்பட்டுள்ளன. 2017 மார்ச் 27 ஆம் திகதியில் இருந்து அமுலுக்கு வரும் வகையில் BHRRC மற்றும் BNC என்பன இரண்டு பிரத்தியேகக் குழுக்களாகச் செயற்பட்டு வருகின்றன.

மனித வளங்கள் மற்றும் ஊதியங்கள் குழுவின் (BHRRC) எல்லை பின்வருவனவற்றை உள்ளடக்குகிறது

- வங்கியின் பணிப்பாளர்கள், பிரதான நிறைவேற்று அதிகாரி மற்றும் முக்கிய முகாமைத்துவ ஆளணியினர்களின் (KMP) ஊதியக் கொள்கைகளைத் தீர்மானித்தல்.
- பணிப்பாளர்கள் மற்றும் பிரதான நிறைவேற்று அதிகாரியின் மற்றும் முக்கிய முகாமைத்துவ ஆளணியினரின் செயற்திறன் பற்றிய குறிக்கோள்கள், இலக்குகள் என்பவற்றைத் தீர்மானித்தலும், மதிப்பீடு செய்தலும். அத்துடன், குறித்துரைக்கப்பட்ட இலக்குகள், எல்லைகள் என்பவற்றுக்கு எதிராக பிரதான நிறைவேற்று அதிகாரி மற்றும் முக்கிய முகாமைத்துவ ஆளணியினர்களின் செயற்திறனை காலாந்தர அடிப்படையில் மதிப்பீடு செய்தல்.
- வங்கியின் வணிக மற்றும் செயற்பாட்டு மூலோபாயங்களுடன் தொடர்புடைய மனிதவள நுட்பங்களையும், கொள்கைகளையும் உருவாக்குவதற்கு வழிகாட்டிகளையும், அறிவுரைகளையும் வழங்குதல்.
- மனித வளக் கொள்கைகள் குழுவினால் சமர்ப்பிக்கப்பட்ட சம்பவங்கள், முன்மொழிவுகள் தொடர்பான பரிந்துரைகளை சபைக்குச் சமர்ப்பித்தல்.

சபை தெரிவுக்குழுவின் எல்லை பின்வருவனவற்றை உள்ளடக்குகின்றது

- பிரதான நிறைவேற்று அதிகாரி மற்றும் முக்கிய முகாமைத்துவ ஆளணியின் நியமனத்திற்கும், பதவி உயர்வுக்கும் தேவைப்படுகின்ற முக்கிய பண்புகள், தகுதிகள் மற்றும் அனுபவங்களை வரையறை செய்தல்.
- சபை உப குழுக்கள் பிரதான நிறைவேற்று அதிகாரி மற்றும் முக்கிய முகாமைத்துவ ஆளணி ஆகிய இடங்களுக்கு புதிய உறுப்பினர்களைத் தெரிவு செய்ய அல்லது நியமிப்பதற்கான நடைமுறையை அமுல்படுத்துதல் அல்லது அவர்களின் மீள் நியமனத்தை மீளக் கவனத்திற் கொள்ளுதல் மற்றும் வங்கியின் ஒட்டுமொத்த இலக்குகளை நோக்கி அவர்களால் மேற்கொள்ளப்பட்ட செயற்திறன் மற்றும் பங்களிப்பு மீது பிரதான நிறைவேற்று அதிகாரி மற்றும் முக்கிய முகாமைத்துவ ஆளணியின் பதவிக் காலத்தை நீடித்தல்.
- வழிகாட்டி 3(3) இலும், நியதிச் சட்டத்திலும் குறித்துரைக்கப்பட்ட அளவுகோல்களின் அடிப்படையில் பணிப்பாளர்கள் பதவி வகிக்க தகுதியுடைய முறையான ஆட்கள் என்பதை உறுதிப்படுத்தல்.
- காலத்திற்குக் காலம் மேலதிக/ புதிய நிபுணத்துவ ஆட்களைக் கருத்திற் கொள்ளலும், தேவையான போது சிபாரிசு செய்தலும் அத்துடன், ஓய்வு பெறும் பணிப்பாளர்கள் மற்றும் முக்கிய முகாமைத்துவ ஆட்கள் தொடர்பாக பின்னுறு ஏற்பாடுகளை மேற்கொள்ளுதல்.

இவ்விரு குழுக்களும் சபையின் அங்கீகாரத்திற்காக தமது பரிந்துரைகளை மேற்கொள்ளும்.

உள்ளடக்கமும் கூட்டங்களும்

சபையின் மனித வளங்கள் மற்றும் ஊதியக் குழு மற்றும் சபையின் தெரிவுக் குழுக் கூட்டங்கள் தலைவரான திரு. M. மஹிந்த சாலிய தலைமையில் இடம்பெற்றன.

2022 டிசம்பர் 31இல் முடிவடைந்த காலப்பகுதியில் ஆறு (06) சபை மனித வளங்கள் மற்றும் ஊதியக் குழுக் கூட்டங்களும், நான்கு (04) சபைத் தெரிவுக் குழுக் கூட்டங்களும் நடைபெற்றன. மனித வள திணைக்களத்திற்குப் பொறுப்பான தலைவர், பொது முகாமையாளர்/ பிரதான நிறைவேற்று அதிகாரி ஊடாக பின்னணி மற்றும் ஏனைய தொடர்புடைய தகவல் மற்றும் பகுப்பாய்வு தொடர்பான அனைத்து ஆவணங்களையும் குழு உறுப்பினர்கள் முறையான தீர்மானம் ஒன்றை எடுக்க அனுப்பி வைத்தல் வேண்டும்.

சபையின் செயலாளர் இக்குறிப்பிட்ட குழுக்களுக்கு செயலாளராக கடமையாற்றுவார். தேவை ஏற்படும் போது, பிரிவுத் தலைவர்கள் தமக்குரிய பணிகள் தொடர்பான கருத்துக்களைத் தெரிவிக்க அழைக்கப்படுவர்.

BHRRC யின் அனைத்துக் கூட்டங்களுக்கும் பொது முகாமையாளர்.˙. பிரதான நிறைவேற்று அதிகாரி சமூகமளிக்க வேண்டும். சபை தெரிவுக் குழுவுக்கு பொது முகாமையாளர்/ பிரதான நிறைவேற்று அதிகாரி ஆகியோர் அழைப்பின் பேரில் சமூகமளிக்க வேண்டும்.

இந்த ஒவ்வொரு குழுவின் கூட்டத்திற்கும் உரிய நிறைவெண் இரண்டு (சுயாதீன/ நிறைவேற்றுநர் அல்லாத பணிப்பாளர்களாவர். இந்தக் குழு குறைந்தபட்சம் காலாண்டு அடிப்படையில் சந்திக்க வேண்டும். இவ்வாண்டின் போது மாற்றப்பட்ட குழு உறுப்பினர்கள் மற்றும் அவர்களின் சமூகமளித்த விபரங்கள் கீழே தரப்பட்டுள்ளன.

சபையின் மனித வளங்கள் மற்றும் ஊதியங்கள் குழு உறுப்பினர்கள்

பெயர்	சமூகம்/ சமூகமளிக்கத் தகுதி
திரு. M. மஹிந்த சாலிய - தலைவர் (2020 பெப். 26 இல் நியமனம்)	06/06
கலாநிதி நிர்மால் டி சில்வா - பணிப்பாளர் (2020 ஏப்ரல் 01 இல் இராஜினாமா)	01/01
திரு. லலித் அபேசிரிவர்தன - பணிப்பாளர் (2020 பெப். 26 இல் நியமனம்)	06/06
பேராசிரியர் H.M.W. ஆரியரத்ன ஹேரத் - பணிப்பாளர் (2020 பெப். 26 இல் நியமனம்)	06/06
திருமதி. ஹிரந்தி கருணாரத்ன - பணிப்பாளர் (2022 நவம். 21 இல் நியமனம்)	02/02
திரு. P.S. எதிரிசூரிய - பொது முகாமையாளர்/ பிரதான நிறைவேற்று அதிகாரி (பதில் கடமை)	
திருமதி R.M.T. ராஜபக்ஷ (சபையின் செயலாளர்)	


சபையின் தெரிவுக் குழு உறுப்பினர்கள்:

பெயர்	சமூகம்/ சமூகமளிக்கத் தகுதி
திரு. M. மஹிந்த சாலிய - தலைவர் (2020 பெப். 26 இல் நியமனம்)	04/04
கலாநிதி நிர்மால் டி சில்வா - பணிப்பாளர் (2020 ஏப்ரல் 01 இல் இராஜினாமா)	00/01
திரு. லலித் அபேசிரிவர்தன - பணிப்பாளர் (2020 பெப். 26 இல் நியமனம்)	04/04
பேராசிரியர் H.M.W. ஆரியரத்ன ஹேரத் பணிப்பாளர் (2020 பெப்ரவரி 26 இல் நியமனம்)	04/04
திருமதி. ஹிரந்தி கருணாரத்ன - பணிப்பாளர் (2022 நவம்பர் 21 இல் நியமனம்)	03/04
திரு. P.S. எதிரிசூரிய - பொது முகாமையாளர்/ பிரதான நிறைவேற்று அதிகாரி (பதில் கடமை)	
திருமதி R.M.T. ராஜபக்ஷ (சபையின் செயலாளர்)	

நடவடிக்கைகளின் சாராம்சம்

2021 ஆகஸ்ட் மாதத்தில் திரு. K.E.D சுமணசிறி - சபையின் பணிப்பாளர் அவர்களின் இராஜினாவைக் கருத்திற் கொண்டு, திருமதி ஹிரந்தி கருணாரத்ன - சபையின் பணிப்பாளர் டீர்சுஊ இன் உறுப்பினராக நியமிக்க தீர்மானிக்கப்பட்டது.

இக்குழுக்களின் செயலாளர் BHRRC மற்றும் BNC கூட்டக் குறிப்புகளைப் பரிந்துரைகளுடன் சபை அங்கீகாரத்திற்காக சமர்ப்பிப்பார். மீளாய்வுக்கு உட்பட்ட காலப்பகுதியில் சபை BHRRC மற்றும் BNC ஆகியவற்றின் பரிந்துரைகளை அங்கீகரித்தது



திரு. D.L. டி Z அபேசிறிவர்தன
பணிப்பாளர்
சபை மனிதவளங்கள் மற்றும் ஊதியக் குழு
சபையின் தெரிவுக் குழு

சபை கணக்காய்வுக் குழு (BAC) அறிக்கை

வங்கியின் சபை கணக்காய்வுக் குழு (BAC), இலங்கையின் உரிமம் அளிக்கப்பட்ட விசேட வங்கிகளுக்கான கூட்டுறவு ஆளுகை மீதான 2007 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க வங்கி சட்ட வழிகாட்டி ஏற்பாடுகளின்படி ஸ்தாபிக்கப்பட்டது. வங்கியின் சபை கணக்காய்வுக் குழுவின் நடவடிக்கைகள் குறிப்பிட்ட குழுவின் செயற்பாட்டிற்காக பணிப்பாளர் சபையினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட சாசனத்திற்கு அமைவானதாக இருக்கும். கையளிப்பு அதிகாரம், எல்லை மற்றும் சபை கணக்காய்வுக் குழுவின் பொறுப்புகள் போன்ற நோக்கங்களுக்காக சபை, சபை கணக்காய்வுக் குழுவின் சாசனத்தை காலாந்தர அடிப்படையில் மீளாய்வு செய்து, அதிகாரத்தை வழங்கும். உள்ளகக் கணக்காய்வு சாசனத்திற்கு அமைய, உள்ளகக் கணக்காய்வுப் பணிகளுடன் எல்லையையும், கடமைகளையும் சபை கணக்காய்வுக் குழு தீர்மானிக்கும்.

குழு, பின்வரும் நிறைவேற்றுநர் அல்லாத பணிப்பாளர்களை உள்ளடக்கும்

1. திரு. W.M. கருணாரத்ன (29.08.2022 இலிருந்து குழுவின் தலைவர்)
2. திரு. லலித் அபேசிரிவர்தன
3. திரு. G.A. ஜயஷாந்த
4. திருமதி. கிருஷானி நாரங்கொட (20.06.2022 இல் நியமனம்)

பொது முகாமையாளர்/ பி.நி.அ, பிரதான நிதி அதிகாரி, தலைவர் (உள்ளகக் கணக்காய்வு), உதவிப் பொது முகாமையாளர் (இடர் முகாமைத்துவம்), உதவிப் பொது முகாமையாளர் (இணக்கப்பாடுகள்) மற்றும் தேசிய கணக்காய்வு அலுவலகத்தில் இருந்து ஒரு பிரதிநிதி (வங்கியின் வெளியகக் கணக்காய்வாளர்) ஆகியோர் சபை கணக்காய்வுக் குழுவின் ழைப்பின் பேரில் கூட்டங்களுக்கு சமுகமளிப்பர். சபை செயலாளர், சபை கணக்காய்வுக் குழுவின் செயலாளராகச் செயற்படுவார்.

அதன் பொறுப்புக்களை நிறைவேற்றுவதற்கும், அதன் மேற்பார்வைப் பொறுப்புக்களை நிறைவேற்றுவதற்கும் சபை கணக்காய்வுக் குழுவிற்கு பணிப்பாளர் சபையினால் அதிகாரம் அளிக்கபட்டுள்ளது.

- வெளிப்படுத்தலுக்காகத் தயாரிக்கப்படுகின்ற வங்கியின் நிதிக் கூற்றுக்கள், வருடாந்த அறிக்கை கணக்குகள் மற்றும் காலாண்டு அறிக்கைகள் என்பவற்றின் நேர்மைத் திறனைக் கண்காணிப்பதற்காக வங்கியின் நிதித் தகவலை மீளாய்வு செய்தல்.
- உள்ளகக் கட்டுப்பாடு மற்றும் வணிக இடர்நேர்வு முகாமைத்துவம் குறித்து ஆராய்தல்.
- உள்ளக மற்றும் புற கணக்காய்வு நடவடிக்கைகளை மீளாய்வு செய்தல்
- இலங்கை மத்திய வங்கியின் வழிகாட்டல்களுக்கமைவாக சட்டங்கள் மற்றும் விதிமுறைகளுடன் இணங்குதல் தொடர்பாக மீளாய்வு செய்தல்.

2022 டிசம்பர் 31ஆம் திகதியுடன் முடிவடைந்த நிதியாண்டில் ஐந்து (05) கூட்டங்கள் இடம்பெற்றுள்ளன.
நிதியாண்டில் குழுவினால் நிறைவேற்றப்பட்ட நடவடிக்கைகள்

- 2021 ஆம் ஆண்டுக்கான வங்கியின் காலாண்டு நிதிச் செயற்பாட்டை மீளாய்வு செய்துள்ளதோடு, அதனை சபைக்குச் சமர்ப்பிக்க பரிந்துரை செய்தது.
- இலங்கை மத்திய வங்கியின் நியதிச்சட்ட ஆராய்வுகளின் போது தோன்றிய விடயங்கள் தொடர்பாக மீளாய்வு செய்யப்பட்டதுடன், சீராக்கல் தொடர்பான முன்னேற்றத்தினை கண்காணித்தது.
- உள்ளகக் கணக்காய்வுத் திணைக்களத்தின் செயற்பாடுகள் மற்றும் உள்ளகக் கணக்காய்வு அறிக்கைகள் தொடர்பாக அவ்வவ் போது மீளாய்வு செய்யப்பட்டது.
- 2022 டிசம்பர் 31ஆம் திகதியுடன் முடிவடைந்த நிதியாண்டுக்காக பாராளுமன்றத்தில் கணக்காய்வாளர் நாயகத்தினால் சமர்ப்பிக்கப்பட்ட வங்கியின் நிதி அறிக்கைகளுக்கான அறிக்கையினை மீளாய்வு செய்தது.
- தேசிய கணக்காய்வு காரியாலயத்தினால் சமர்ப்பிக்கப்பட்ட அறிக்கைகள் மீளாய்வு செய்யப்பட்டு கலந்துரையாடப்பட்டதுடன், தேவையான நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டன.
- உள்ளக கணக்காய்வுத் திணைக்களத்தினால் வெளியிடப்பட்ட கட்டமைப்பு தொடர்பான பிரச்சினைகள் மற்றும் சில பெரும்பாக மட்ட அறிக்கைகள் தொடர்பாக மீளாய்வு செய்யப்பட்டது.

உள்ளக கணக்காய்வு அறிக்கைகள், அதில் காணப்பட்ட குறைபாடுகள், சம்பந்தப்பட்ட பிரதிப் பொது முகாமையாளர்கள்/ பிரிவுத் தலைவர்கள் வழங்கிய பதில்கள் மற்றும் காணப்பட்ட குறைபாடுகளை சரிசெய்ய எடுக்கப்பட்ட திருத்த நடவடிக்கைகளை வங்கியின் சபை கணக்காய்வுக்

குழு பரிசீலித்தது. வங்கியின் சபை கணக்காய்வுக் குழு கூட்டக் குறிப்புக்கள் அனுமதிக்காக சபைக்கு சமர்ப்பிக்கப்படுகின்றன.

2022 ஆம் ஆண்டில் சபை கணக்காய்வுக் குழு நியதிச்சட்ட ஆய்வு அறிக்கைகள் சுட்டிக்காட்டிய விடயங்களில் நிர்வாகத்தினால் எடுக்கப்பட்ட திருத்தங்கள் தொடர்பான நடவடிக்கைகளை சபை கணக்காய்வுக் குழு தொடர்ந்தது.

இலங்கை கணக்கியல் தரநிலைகளுக்கமைவாக கணக்காய்வு அறிக்கைகளைத் தயாரித்து சமர்ப்பிதற்காக தேவையான அனைத்து தகவல்களையும் ஆவணங்களையும் கணக்காய்வாளர் நாயகத்திற்கு வழங்கப்படுதவதனை சபை கணக்காய்வுக் குழு உறுதிசெய்தது.

போதுமான கட்டுப்பாடுகள் மற்றும் நடவடிக்கைகள் நடைமுறையில் உள்ளன என்றும், சபை கணக்காய்வுக் குழுவின் சாசனம் அனைத்து முக்கிய அம்சங்களுடனும் இணங்கியுள்ளது என்றும் சபை கணக்காய்வுக் குழு கருதுகிறது.



W.M. கருணாரத்ன
தலைவர்
சபை கணக்காய்வுக் குழு

சபையின் ஒருங்கிணைக்கப்பட்ட இடர் முகாமைத்துவக் குழுவின் அறிக்கை

குழுவின் உள்ளடக்கம்

இவ்வருட மீளாய்வின் போது, ஒருங்கிணைக்கப்பட்ட இடர் முகாமைத்துவக் குழு (BIRMC) பின்வரும் நான்கு நிறைவேற்றுநர்கள் அல்லாத பணிப்பாளர்களைக் கொண்டிருந்தது. அவர்களின் சுய விபரம் 22 தொடக்கம் 27வது பக்கங்களில் தரப்பட்டுள்ளன. பணிப்பாளர்கள் நிறைவேற்றுநர்களா அல்லது நிறைவேற்றுநர்கள் அல்லாதவர்களா என்பதை ஒவ்வொரு பெயரின் கீழும் குறிப்பிடப்பட்டுள்ளது.

1. திரு. K. ரவீந்திரன் - பணிப்பாளர் (குழுவின் தலைவர்/ நி.அ.ப)
2. பேராசிரியர் H.M.W.A ஹேரத் (நி.அ.ப)
3. கலாநிதி நிர்மால் டி சில்வா (நி.அ.ப)
4. திரு. G.A. ஜயஷாந்த (நி.அ.ப)

பிரதான நிறைவேற்று அதிகாரி, பிரதான இடர் அதிகாரி மற்றும் இணக்க அதிகாரி ஆகியோர் 2022ஆம் ஆண்டு காலப்பகுதியில் கிரமமாக கூட்டங்களுக்குச் சமூகமளித்திருந்தனர்.

குழுவின் செயலாளர்

சபையின் செயலாளர் குழுவின் செயலாளராகத் தொழிற்படுகிறார். ஒருங்கிணைக்கப்பட்ட இடர் முகாமைத்துவக் குழு காலாண்டு அடிப்படையில் கூடும். எனினும், தேவையின் அடிப்படையில் மேலதிகக் கூட்டங்கள் நடைபெற்றுள்ளன. குறிப்பிட்ட கூட்டத்திற்குரிய குறைந்தபட்ச நடப்பு எண் இரண்டு சுயாதீனப் பணிப்பாளர்கள் மற்றும் பிரதான நிறைவேற்று அதிகாரி, பிரதான இடர் அதிகாரி ஆகியோர் ஒருங்கிணைக்கப்பட்ட இடர் முகாமைத்துவக் குழுவின் சாசனத்திற்கமைய தேவைப்படுவர். மீளாய்வுக்கு உட்பட்ட காலப்பகுதியில் காலாண்டு அடிப்படையில் நான்கு ஒருங்கிணைக்கப்பட்ட இடர் முகாமைத்துவக்குழுக் கூட்டங்கள் நடத்தப்பட்டு உள்ளதுடன், பணிப்பாளர் சபைக்கு குழுவின் கூட்ட விபரங்கள் கிரமமாக அறிக்கையிடப்பட்டன.

குழு உறுப்பினர்களின் வருகை குறித்து பின்வரும் அட்டவணையில் வழங்கப்பட்டுள்ளது.

கூட்டங்கள்

பெயர்	சமூகம்
திரு. K. ரவீந்திரன் (பணிப்பாளர்)	04/04
பேராசிரியர் H.M.W.A ஹேரத் (பணிப்பாளர்)	04/04
கலாநிதி நிர்மால் டி சில்வா (பணிப்பாளர்)	01/04
திரு. G.A ஜயஷாந்த (பணிப்பாளர்)	04/04

குழுவின் சாசனம்

ஒருங்கிணைக்கப்பட்ட இடர் முகாமைத்துவக் குழு பணிப்பாளர் சபையினால் நிர்வகிக்கப்பட்டு உள்ளதுடன், இத்தேவைப்பாடு மத்திய வங்கியின் நாணய சபையினால் வழங்கப்பட்ட "இலங்கையில் உரிமம் அளிக்கப்பட்ட வர்த்தக வங்கிகளுக்கான கூட்டுறவு ஆளுகை" என்பது தொடர்பான, 2007ஆம் ஆண்டின் 11ஆம் இலக்க வழிகாட்டி 3(6) க்கு அமைவாக இருக்கின்றது. இவ்வழிகாட்டி, 1988 ஆம் ஆண்டின் 30 ஆம் இலக்க வங்கிச் சட்ட ஏற்பாடுகளுக்கு அமைய, நாணய சபைக்கு வழங்கப்பட்ட அதிகாரத்தின் கீழ் வருகிறது.

ஒருங்கிணைக்கப்பட்ட இடர் முகாமைத்துவக் குழுவானது வங்கியின் இடர் முகாமைத்துவக் கட்டமைப்பு மற்றும் தொழிற்பாடுகள் மற்றும் பாரிய இடர் வெளிப்பாடு தொடர்பான மீளாய்வு, அவற்றைக் கட்டுப்படுத்தவும், கண்காணிக்கவும் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கை உள்ளடங்கலாக வங்கியின் இடர் முகாமைத்துவத்தை மேற்பார்வை செய்யும் பொறுப்பைக் கொண்டுள்ளது. பணிப்பாளர் சபையினால் உருவாக்கப்பட்ட குழுவின் குறிப்பு விதி, வகிபாகம் மற்றும் பொறுப்புகள் என்பன கீழே தரப்பட்டுள்ள விடயங்களை உள்ளடக்கியுள்ளன.

1. இடர் முகாமைத்துவ உபாய நுட்பத்தை உறுதிப்படுத்தல், முகாமைத்துவக் கட்டமைப்பு முறைமை என்பன ஒருங்கிணைக்கப்பட்ட இடர் முகாமைத்துவக் கட்டமைப்புக்கு அமைவாக வங்கி முழுவதும் நடைமுறைப்படுத்துவதை உறுதிப்படுத்தல்.
2. கடன், சந்தை, பணப்புழக்கம், தொழிற்பாட்டு மற்றும் இணக்க இடர்கள் தொடர்பான இடர் இனங்காணுதல், அளவிடுதல், கண்காணித்தல், குறைத்தல் என்பவற்றின் போதுமான தன்மையும், வினைத்திறனும்.
3. உருவாக்கப்பட்ட, கையளிக்கப்பட்ட அதிகார சபைகளுக்கு அமைவாக, இடர் தீர்மானங்கள் மேற்கொள்ளப்பட்ட உறுதிப்படுத்தலும், வங்கியின் கொள்கைகள் மற்றும் ஒழுங்குபடுத்தல் மற்றும் மேற்பார்வைத் தேவைப்பாடுகளின் அடிப்படையில் குழுவினால் உருவாக்கப்பட்ட இடர் சகிப்புக்கு அப்பால் செயற்படும் இடர்களைச் சீர்திருத்தவும், குறைக்கவும் நடவடிக்கை எடுக்கப்படுவதை உறுதிப்படுத்தல்.

4. வங்கியின் இடர் முகாமைத்துவ முறைமையைக் கண்காணித்தலும், வினைத்திறனை அணுகுதலும். மேலும், இடர் முகாமைத்துவப் பணியின் வலுவான தன்மையைக் கண்காணித்தலும்.
5. இடர் தேவைப்பாடு மற்றும் வங்கியின் சகிப்பு மட்டங்களை வகுத்தல்.
6. பாசல் III அமுல்படுத்தல், ஒழுங்குபடுத்தல் வழிகாட்டிகளின் செயற்பாடுகளை மீளாய்வு செய்தல்.
7. வங்கியின் இடர் முகாமைத்துவக் கொள்கைகளை மீளாய்வு செய்தலும் புதுப்பித்தலும்.
8. வங்கியின் இடர் முகாமைத்துவப் பிரிவின் எல்லையைத் தீர்மானித்தலும், RMD கட்டமைப்பின் வினைத்திறனான அமுல்படுத்துகையை உறுதிப்படுத்தலுக்கு RMD க்கு வழிகாட்டுதலும்.

முக்கிய கவனம்

வங்கியின் இடர்நேர்வுகள் தொடர்பாக பணிப்பாளர் சபைக்கு உதவுதல் தொடர்பாக இக்குழுவின் முக்கிய கவனம் செலுத்தப்படுகின்றது. இவ்விடயம் தொடர்பாக குழு வங்கியின் இடர்தேவைப்பாடு குறித்து கவனம் செலுத்தியுள்ளதுடன், வங்கியின் கடன்கள், திரவத்தன்மை, செயற்பாடுகள், சந்தை மற்றும் மூலோபாய இடர்நேர்வுகள் குறித்தும் கவனம் செலுத்தப்பட்டுள்ளது.

2022 இல் மேற்கொள்ளப்பட்ட செயற்பாடுகள்

ஒருங்கிணைக்கப்பட்ட இடர் முகாமைத்துவக் குழுவிற்கு வழங்கப்பட்டுள்ள மேற்குறிப்பிட்ட கடமைகளையும், பொறுப்புக்களையும் நிறைவேற்றுகையில் குழு மூலோபாய தொழிற்பாட்டுக் கடன், சந்தை, சைபர் மற்றும் ஏனைய உருவாகி வருகின்ற இடர் வகைகளை இவ்வாண்டின் போது மீளாய்வு செய்தது. குறிப்பிட்ட குழுவினால் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள் கீழே தரப்பட்டுள்ளன.

1. தற்போது நடைமுறையிலுள்ள இடருடன் தொடர்புடைய கொள்கைகளை மீளாய்வு செய்து புதுப்பித்ததுடன், வங்கியின் இடர் தோற்றப்பட்டிற்கு அமைவாக, கொள்கைகளும் கையேடுகளும் பரிந்துரைக்கப்பட்டன.

2022 ஆம் ஆண்டு காலப்பகுதியில் மீளாய்வு செய்யப்பட்ட புதுப்பிக்கப்பட்ட இடர் முகாமைத்துவக் கொள்கைகள்	
அழுத்தப் பரீட்சைக் கொள்கை	வங்கியின் அழுத்தப் பரீட்சைக் கட்டமைப்பை வகுத்தல்
வட்டி வீத இடர் தொடர்பான முகாமைத்துவக் கொள்கை	வட்டி வீத இடரை இனங்காண, மதிப்பீடு செய்ய, முகாமைத்துவம் செய்ய மற்றும் குறைக்க கட்டமைப்பு உருவாக்கப்பட்டது.
திரவத்தன்மை இடர் முகாமைத்துவக் கொள்கை	திரவத்தன்மை இடரை இனங்கான, மதிப்பீடு செய்ய, முகாமைத்துவம் செய்ய மற்றும் குறைப்பதற்கான கட்டமைப்பு
அந்நியச் செலாவனி இடர் முகாமைத்துவக் கொள்கை	அந்நியச் செலாவனி இடர் முகாமைத்துவக் கொள்கையை இனங்காண, மதிப்பீடு செய்ய, முகாமைத்துவம் செய்ய மற்றும் குறைப்பதற்கான கட்டமைப்பு.
செயற்பாட்டு இடர் முகாமைத்துவக் கொள்கை	செயற்பாட்டு இடர் முகாமைத்துவக் கொள்கையை இனங்காண, மதிப்பீடு செய்ய, முகாமைத்துவம் செய்ய மற்றும் குறைப்பதற்கான கட்டமைப்பு.
கடன் இடர் முகாமைத்துவ கொள்கை	கடன் இடர் முகாமைத்துவக் கொள்கையை இனங்காண, மதிப்பீடு செய்ய, முகாமைத்துவம் செய்ய மற்றும் குறைப்பதற்கான கட்டமைப்பு.
வங்கியின் ஏனைய பணிகள் தொடர்பான கொள்கைகள் 2022 ஆம் ஆண்டில் மீளாய்வு செய்யப்பட்டு புதுப்பிக்கப்பட்டுள்ளன.	
தொடர்புடைய திறத்தவர்களுக்கான கொடுக்கல் வாங்கல் கொள்கை	தொடர்புடைய திறத்தவர்களுடனான கொடுக்கல் வாங்கல்களுடன் சம்பந்தப்பட்ட வழிகாட்டியும் நடைமுறைகளும்
இணக்கப்பாட்டுக் கொள்கை	வங்கியின் இணக்கப்பாட்டு இடர்நேர்வுகளை முகாமைத்துவம் செய்வதற்கான கட்டமைப்பு
தகவல் பாதுகாப்புக் கொள்கை	வங்கி மற்றும் அதனுடைய வலையமைப்புக்குள் உள்ள தகவல்களைப் பாதுகாப்பதுடன் தொடர்புடைய விதிகளையும், வழிகாட்டுதலையும் உருவாக்குதல்.
பயன்படுத்தலுக்கான இணக்கக் கொள்கை	பிரதேச அபிவிருத்தி வங்கியின் தகவல் தொழிநுட்பத் திணைக்களத்தினால் வழங்கப்பட்டுள்ள கணினி உபகரணங்கள் மற்றும் தகவல் வளங்களைப் பயன்படுத்துவது தொடர்பான இணக்கம் தொடர்பான வழிகாட்டல்கள்.
பணம் தூயதாக்குதல் தடைக் கொள்கை (AML)	வங்கியின் பண தூய்தாக்கல் தடைக் கொள்கையை உறுதிப்படுத்துவதற்கான வழிகாட்டிகளும் நடைமுறைகளும்

குழுவின் சாசனம் 2022 ஆம் ஆண்டில் மீளாய்வு செய்யப்பட்டு புதுப்பிக்கப்பட்டுள்ளது.	
சபை ஒருங்கிணைக்கப்பட்ட இடர்நேர்வு முகாமைத்துவக் குழு சாசனம்	இடர்நேர்வு தொடர்பாக மேற்பார்வை செய்தல் மற்றும் வங்கியின் இடர்நேர்வு முகாமைத்துவக் கட்டமைப்பினை அங்கீகரித்தல் தொடர்பான BIRMC விதிகள் மீளாய்வு செய்யப்பட்டன.
நிறைவேற்று செயற்பாட்டு இடர்நேர்வு முகாமைத்துவ உப குழு	கடன்கள் அல்லது வங்கியின் சந்தை இடர்நேர்வுகளினால் உருவாகின்ற புற விளைவுகள் மற்றும் எதிர்பாராத உள்ளக நடவடிக்கைகள், மக்கள், கட்டமைப்புகள் காரணமாக ஏற்படுகின்ற பாதிப்புகள், இழப்புகள் தொடர்பாக மீளாய்வு செய்யப்பட்டது,

2. இடர் வெளிப்பாடுகளை வினைத்திறனுடன் கட்டுப்படுத்தவும், வங்கியினால் எண்ணப்பட்ட இடர் முகாமைத்துவ இலக்குகளை அடைவதற்கும் போதுமான வகையில் முக்கிய இடர் குறிகாட்டிகளின் போதுமான தன்மையை உறுதிப்படுத்துவதன் ஊடாக, முக்கிய இடர் குறிகாட்டிகள் இற்றைப்படுத்தப்பட்டு கிரமமாக மீளாய்வு செய்யப்பட்டது. உண்மையான மாதாந்த பெறுபேறுகள் வரையறைகளுக்கு எதிராக மதிப்பீடு செய்யப்பட்டதுடன், அத்தகைய விசேட இடர்களைக் குறைப்பதற்கு உரிய உடனடி திருத்த நடவடிக்கைகள் பரிந்துரைக்கப்பட்டன.
3. 2022ஆம் ஆண்டில் நாடு எதிர்கொண்ட பொருளாதார சவால்களுக்கு மத்தியில் பொருளாதார நெருக்கடியின் அழுத்தம், நாட்டிற்குள் நிலவும் நிதி நெருக்கடி சூழ்நிலை காரணமாக நிதித்துறையின் கடன் தரம் மோசமடைதல், பொருளாதாரம் பணவீக்க அழுத்தத்தையும் அந்நிய செலாவணி விகிதத்தை நிர்வகிப்பதில் அழுத்தத்தையும் சந்தித்துள்ளது. இந்த ஆண்டில், மத்திய வங்கி அவ்வப்போது பணவியல் கொள்கையை கட்டமைத்துள்ளது, மேலும் ஆண்டு முழுவதும் பொருளாதார நெருக்கடியின் காரணமாக வங்கி பல்வேறு சவால்களை எதிர்கொண்டுள்ளது. கடன் தரம் மோசமடைவதைத் தடுக்க வங்கி கட்டுப்பாட்டு நடவடிக்கைகளை நிறுவியுள்ளது.
4. இடர் தேவைப்பாட்டுக் கட்டமைப்பு மற்றும் இடர் சகிப்பு மட்டம் மற்றும் வங்கியின் ஒட்டுமொத்த இடர் முகாமைத்துவ காலாண்டு அறிக்கை என்பன மீளாய்வு செய்யப்பட்டன.
5. வங்கியின் உள்ளக முதலீட்டு போதுமான மதிப்பீட்டு நடைமுறை மீளாய்வு செய்யப்பட்டது.
6. ஏற்கனவே தீர்மானிக்கப்பட்ட வினாக்கொத்துக்கள் மூலம் குழு உறுப்பினர்களின் கருத்துக்களை பகுப்பாய்வு செய்வதன் மூலம், அனைத்து நிர்வாகக் குழுக்களின் போதுமான தன்மை மற்றும் செயல்திறன் குறித்த அறிக்கையிடல் தேவையை வலியுறுத்தப்பட்டது.
7. அங்கீகரிக்கப்பட்ட எல்லைகளுக்கு அப்பால் சென்ற வங்கியின் கடன் கலவையின் துறைசார் மட்டங்கள் கண்காணிக்கப்பட்டு மீளாய்வு செய்யப்பட்டதுடன் சீராக்கங்களுக்கான பரிந்துரைகளும் மேற்கொள்ளப்பட்டன.
8. முதிர்வு இடைவெளி, அந்நிய செலாவணி இடர்நேர்வு, வட்டி விகித இடர்நேர்வு ஆகியவற்றின் மீதான இடர்நேர்வை காலாண்டுக்கு ஒருமுறை மதிப்பிட்டு, மேற்கூறிய பகுதிகளில் அழுத்த சோதனையை மேற்கொண்டது.
9. முகாமைத்துவ மட்டக் குழுக்களின் (தொழிற்பாட்டு இடர் முகாமைத்துவ உப குழு, முகாமைத்துவக் குழு, சொத்து மற்றும் பொறுப்பு முகாமைத்துவக் குழு, தொழிற்பாட்டு வளவுகள் குழு) அனைத்துக் கூட்டக் குறிப்புகளும் மீளாய்வு செய்யப்பட்டன.
10. ஒழுங்குமுறை தேவைகளுடன் இணக்கத்தின் அளவை மதிப்பிடுவதற்கு இணக்கப்பாடுகள் அதிகாரியினால் சமர்ப்பிக்கப்பட்ட விரிவான இணக்க அறிக்கைகளை மதிப்பாய்வு செய்யப்பட்டன.
11. பணம் தூயதாக்குதல் தடை (AML) அமைப்பை செயல்படுத்தும் செயல்முறை மதிப்பாய்வு செய்யப்பட்டது.
12. சட்டப்பூர்வ பரிசோதனையை கண்காணித்து மதிப்பாய்வு செய்தது. சட்டநியதி பரிசோதனை கண்காணிக்கப்பட்டு மதிப்பாய்வு செய்யப்பட்டதுடன், சிக்கல்களைச் சரிசெய்ய அனைத்து சாத்தியமான பரிந்துரைகளும் அறிக்கையிடப்பட்டன.
13. சைபர் இடர்நேர்வு அறிக்கைகள், வட்டி விகித இடர்நேர்வு, அந்நிய செலாவாணி விகித இடர்நேர்வு, செயற்பாட்டு இடர்நேர்வு, இணக்கப்பாடுகள் இடர்நேர்வு போன்ற அனைத்து வகையான இடர்நேர்வு குறிகாட்டிகளும் கண்காணிக்கப்பட்டு மதிப்பாய்வு செய்யப்பட்டது.
14. வங்கியின் பேரிடர் மீட்பு பயிற்சியை கண்காணிக்கப்பட்டு, பேரிடர் மீட்பு பயிற்சியின் வெற்றிக்கான அனைத்து சாத்தியமான பரிந்துரைகளும் செய்யப்பட்டன.
15. 2021ஆம் ஆண்டின் வங்கிச் சட்டத்தின் 16 ஆம் இலக்க வழிகாட்டுதல் மூலமாக முன்மொழியப்பட்ட தகவல் பாதுகாப்புக் குழு நிறுவப்பட்டது.
16. 2022ஆம் ஆண்டிற்கான தற்போதுள்ள VAPT தற்போதைய நிலை குறித்த அறிக்கையை மதிப்பாய்வு செய்து ஒருங்கிணைக்கப்பட்ட இடர் முகாமைத்துவக்குழுவின் ஆய்வுக்கு சமர்ப்பிக்கப்பட்டது.
17. திணைக்களத்தின் அறிவு மேம்பாட்டிற்காக வங்கியின் இடர் மேலாண்மைத்

திணைக்களத்துடன் நெருக்கமாக இணைந்து பணிகள் முன்னெடுக்கப்பட்டன.

18. வங்கியின் செயற்பாட்டு இடர்நேர்வை மதிப்பிடுவதற்கும் குறைப்பதற்கும் நிர்வாக நிலை செயற்பாட்டு இடர் மேலாண்மை துணைக் குழு (ORMC) செயற்பாடு நெருக்கமாகக் கண்காணிக்கப்பட்டது.
19. இடர் மேலாண்மை மற்றும் இணக்கத் துறைகளின் செயல் திட்டம் கண்காணிக்கப்பட்டு மதிப்பாய்வு செய்யப்பட்டது.

அறிக்கையிடல்

ஒருங்கிணைக்கப்பட்ட இடர் முகாமைத்துவக் குழுவின் கூட்ட நடைமுறைகள், கூட்டக் குறிப்புகளை சபைக்கு வழங்குவதன் ஊடாக அறிக்கையிடப்படும். வங்கியின் இடர் தோற்றப்பாட்டு அறிக்கை மற்றும் ஏனைய விசேட விடயங்கள் ஒருங்கிணைக்கப்பட்ட இடர் முகாமைத்துவக் குழுவின் பரிந்துரையின் மீது பணிப்பாளர் சபையினால் அங்கீகாரம் பெறுவதற்காக பிரத்தியேகமாக சமர்ப்பிக்கப்படும். குறிப்பிட்ட வருடத்தின் போது ஒருங்கிணைக்கப்பட்ட இடர் முகாமைத்துவக் குழுவினால் வழங்கப்பட்ட பரிந்துரைகள் பணிப்பாளர் சபையினால் அங்கீகரிக்கப்பட்டது.

2022ஆம் ஆண்டு காலப்பகுதியில் ஒருங்கிணைக்கப்பட்ட இடர் முகாமைத்துவக் குழு இடர் வரையறைக்குள் வங்கி அதனுடைய ஒட்டுமொத்த உபாய நுட்பத்தை நிறைவேற்றுவதற்கு உதவியளித்ததுடன், அவை பயனுள்ள இடர் முகாமைத்துவக் கட்டமைப்பு மூலம் வலுவூட்டப்பட்டு, பணிப்பாளர் சபைக்கு கிரமமாக அறிவிக்கப்பட்டது.

முடிவுரை

ஒருங்கிணைக்கப்பட்ட இடர் முகாமைத்துவக் கொள்கையின் உறுப்பினர்கள் 2022இல் இக்குழுவின் வினைத்திறனையும் பயன்பாட்டையும் கூட்டாக இணைந்து மதிப்பீடு செய்துள்ளனர்.

வங்கியினால் எதிர்கொள்ளப்படுகின்ற பல்வேறுபட்ட இடர் துறைகளை குழு தொடர்ச்சியாக மீளாய்வு செய்வதுடன், கீழே தரப்பட்ட விடயங்கள் மூலமாக வலுவான இடர் ஆளுகையை மேம்படுத்தப்பட்டது.

1. இடர் தேவைப்பாட்டைத் தீர்மானிப்பதற்காக அதனை உள்ளடக்கிய நன்கு விருத்தி செய்யப்பட்ட இடர் முகாமைத்துவக் கொள்கை.
2. அழுத்தப் பரீட்சைகள் அல்லது சூழ்நிலை பகுப்பாய்வுகள், சக வங்கி பகுப்பாய்வு மற்றும் தரவுப் பகுப்பாய்வு என்பவற்றினுடைய பெறுபேறுகளை வினைத்திறனாக அறியப்படுத்துதல். இடர் அறிக்கைகள் பணிப்பாளர் சபைக்கு துல்லியமாக அறிவிக்கப்பட்டதை உறுதிப்படுத்தல்.
3. இடர்களைக் கையாளுதல், இணக்கத்தை உறுதிப்படுத்துதல் என்பவற்றின் முக்கியத்துவத்தையும், இடர் கலாசாரத்தின் முக்கிய கூறுகளை உருவாக்குதல் பற்றி விழிப்புணர்வூட்ட பணியாளர்கள் மத்தியில் நடவடிக்கை எடுத்தல்.

குழுவின் பார்வையின்படி, வங்கி இடர் முகாமைத்துவத்தின் சவால்களைச் சந்திப்பதற்கு சரியான பாதையில் செல்வதுடன் வங்கியின் பங்குதாரர்களின் அக்கறைகளைப் பாதுகாப்பதுடன் இணங்கி நடக்கிறது.

சபை ஒருங்கிணைக்கப்பட்ட இடர் முகாமைத்துவக் குழு சார்பாக.



S.N.B.M.W. நாராயண
தலைவர்
ஒருங்கிணைக்கப்பட்ட இடர் முகாமைத்துவக் குழு

பிரதான நிறைவேற்று அதிகாரி மற்றும் பிரதான நிதி அதிகாரி ஆகியோரின் பொறுப்புக் கூற்று

2022 டிசம்பர் 31 இல் உள்ளவாறு பிரதேச அபிவிருத்தி வங்கியின் நிதிக் கூற்றுக்கள் பின்வரும் ஒழுங்குபடுத்தல் தேவைப்பாடுகளுடன் இணங்கி தயாரிக்கப்பட்டு சமர்ப்பிக்கப்பட்டுள்ளன:

1. இலங்கை பட்டயக் கணக்கியல் நிறுவனத்தினால் வழங்கப்பட்ட இலங்கை கணக்கியல் நியமங்கள் (SLFRS/ LKAS)
2. 1995 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க இலங்கை கணக்கியல் மற்றும் கணக்காய்வு நியமங்கள் சட்டம்.
3. 1988 ஆம் ஆண்டின் 30 ஆம் இலக்க வங்கிச் சட்டமும் அதற்கான திருத்தங்களும்
4. கூட்டுறவு ஆளுகை தொடர்பான இலங்கை மத்திய வங்கியினால் வழங்கப்பட்ட 2007 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க வங்கிச் சட்ட வழிகாட்டி உள்ளடங்கலாக, எனினும், அதற்கு மாத்திரம் மட்டுப்படாத மத்திய வங்கியினால் உரிமம் அளிக்கப்பட்ட விசேட வங்கிகளுக்கு வழங்கப்பட்ட வழிகாட்டிகள், சுற்றறிக்கைகள் மற்றும் ஒழுங்கு விதிகள்.
5. 2008 ஆம் ஆண்டின் 41 ஆம் இலக்க பிரதேச அபிவிருத்தி வங்கிச் சட்டம்.

இலங்கை மத்திய வங்கியினால் வழங்கப்பட்ட உரிமம் அளிக்கப்பட்ட விசேட வங்கிகளுக்கான வருடாந்த நிதிக் கூற்றுக்களைத் தயாரிப்பதற்காக குறித்துரைக்கப்பட்ட வடிவமைப்புக்களுடன் இணங்கி, நிதிக் கூற்றுக்களும் வெளிப்படுத்தல்களும் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன.

வங்கியின் கணக்கியல் கொள்கைகள், காலத்திற்குக் காலம், இலங்கை பட்டயக் கணக்காளர் நிறுவனத்தினால் வழங்கப்படும் இலங்கை கணக்கியல் நியமங்களுக்கு அமைவாக உள்ளன. இந்தக் கணக்கியல் கொள்கைகளை வங்கி ஒரு சீராகப் பின்பற்றியுள்ளது. தற்போதைய வருடத்தின் சமர்ப்பணத்துடன் இணங்கி நடக்கத் தேவையான இடங்களில் ஒப்பீட்டுத் தகவல்கள் மீளக் குறிப்பிட்டுள்ளன. அனைத்து முக்கியமான விடயங்களும், நிதிக் கூற்றுக்களின் குறிப்புகளில் வெளிப்படுத்தப்பட்டு விளக்கப்பட்டுள்ளன. எமது அறிவுக்கு எட்டிய வகையில், இவ்வருடத்திற்கான வருமானக் கூற்று, காசுப் பாய்ச்சல்கள் மற்றும் நிதி நிலைமை என்பன தொடர்பான உண்மையான மற்றும் நியாயமான பார்வையைத் தரக்கூடிய நிதிக் கூற்றுக்கள் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன. மேலும், வங்கியின் செயற்பாடுகளை எதிர்வுகூறக்கூடிய, எதிர்காலத்தில் தொடர்ந்து நடத்தப் போதுமான வளங்கள் உள்ளன என்பதையும், இதற்கமைய நிதிக் கூற்றுக்களைத் தயாரிப்பதில் நிறுவனத் தொடர்ச்சி அடிப்படை கையாளப்பட்டுள்ளது.

நிறுவனத்தின் பணிப்பாளர் சபையும், முகாமைத்துவமும், நிதிக் கூற்றுக்களின் நேர்மைத் தன்மைக்கும், புறநிலைத் தன்மைக்கும் பொறுப்பை ஏற்றுக்கொள்கின்றன. நிதிக் கூற்றுக்கள், உண்மையான மற்றும் நியாயமான பார்வையைப் பிரதிபலிக்கின்றன. பரிவர்த்தனைகளின் வடிவம் மற்றும் சாராம்சம் மற்றும் வங்கியின் விவகாரங்கள் என்பன நியாயமான வகையில் சமர்ப்பிக்கப்பட்டன என்ற அடிப்படையில் நிதிக் கூற்றுக்கள் தொடர்பான மதிப்பீடுகளும், தீர்ப்புகளும் நியாயமான மற்றும் விவேகமான அடிப்படையில் மேற்கொள்ளப்பட்டன.

இதனை உறுதிப்படுத்த, சொத்துக்களைப் பாதுகாப்பதற்கும், மோசடிகளைத் தடுப்பதற்கும், கண்டுபிடிப்பதற்கும் ஏனைய ஒழுங்கீனங்களைக் கண்டுபிடிப்பதற்கும் முக்கிய வங்கி முறைமையைப் பயன்படுத்தி, வங்கி உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமைகளை அமுல்படுத்துவதில் முறையான மற்றும் போதுமான கவனத்தை மேற்கொண்டுள்ளது. இக்கட்டுப்பாட்டு முறைமைகள் தொடர்ந்து மீளாய்வு செய்யப்பட்டு, மதிப்பீடு செய்யப்பட்டு புதுப்பிக்கப்படுகின்றன.

வங்கியின் ஸ்தாபிக்கப்பட்ட கொள்கைகள் மற்றும் நடைமுறைகள், ஒருசீராகப் பின்பற்றப்பட்டன என்பதைப் பற்றிய நியாயமான உறுதிப்பாட்டை வழங்குவதற்கு, வங்கியின் உள்ளகக் கணக்காய்வாளர், காலாந்தர கணக்காய்வுகளை மேற்கொண்டு வருகிறார். எனினும், இருக்கக்கூடிய உள்ளாந்த வரையறைகள் எந்தவொரு உள்ளகக் கட்டுப்பாடு மற்றும் கணக்கியல் தொடர்பான முறைமைகளை அளவிடுவதில் அங்கீகரிக்கப்பட வேண்டும்.

வங்கியின் நிதிக் கூற்றுக்கள், கணக்காய்வாளர் நாயக திணைக்களத்தினால் கணக்காய்வு செய்யப்பட்டது. கணக்காய்வாளர் நாயகத்தினால் வழங்கப்பட்ட அறிக்கை 136 - 139 வரையான பக்கங்களில் தரப்பட்டுள்ளன.

SLFRS/LKAS உட்பட இலங்கை கணக்கியல் நியமங்கள் மற்றும் நிதி அறிக்கையிடல் மற்றும் வெளிப்படுத்தல் என்பவற்றுடன் தொடர்புபட்ட ஏனைய ஏற்பாடுகள் பின்பற்றப்பட்டன என்பதற்கும், அனைத்துப் பரிவர்த்தனைகளும் சரியாகவும், முழுமையாகவும் கணக்குப் புத்தகங்களில் பதியப்பட்டன என்பதற்கும், நியாயமான உறுதிப்பாட்டை வழங்குவதற்கு நிதி அறிக்கையிடல் மீதான உள்ளகக் கட்டுப்பாட்டின் வினைத்திறன் உட்பட உள்ளகக் கட்டுப்பாட்டு முறைகளின் போதுமான தன்மையையும், வினைத் திறனையும் சபை கணக்காய்வுக் குழு மீளாய்வு செய்கிறது. முழுமையான சுயாதீனத்தை உறுதிப்படுத்த சபை கணக்காய்வுக் குழுவின் அறிக்கை 120 - 121 வது பக்கங்களில் தரப்பட்டுள்ளன. வெளியகக் கணக்காய்வாளர்களும், உள்ளகக் கணக்காய்வாளர்களும் ஏதேனும் விடயம் தொடர்பாக ஆராய, கணக்காய்வுக் குழுக் கூட்டத்திற்குப் பிரவேசிக்க, முழுமையான மற்றும் தடையற்ற அணுகல் உள்ளன.

எமது அறிவுக்கு உட்பட்ட வகையில் பின்வருவனவற்றை நாம் உறுதிப்படுத்துகின்றோம்.

வங்கி, பொருத்தமான அனைத்துச் சட்டங்கள், விதிகள், ஒழுங்கு விதிகள் மற்றும் வழிகாட்டிகளுடன் இணங்கி நடந்துள்ளது.

முக்கியமான முரண்பாடுகள் எதுவும் இல்லை.

வருடாந்த அறிக்கையின் நிதிக் கூற்றுப் பிரிவில் 41 குறிப்பில் குறிப்பிடப்பட்டது தவிர, வங்கிக்கு எதிராக வேறு ஏதேனும் முக்கிய வழக்குகள் கிடையாது.

அறிக்கையிடப்பட்ட திகதியில் உள்ளவாறு, வங்கியினால் செலுத்தப்பட வேண்டிய அனைத்து வரிகள், தீர்வைகள் மற்றும் அனைத்து நியதிச் சட்டக் கொடுப்பனவுகளும் மற்றும் வங்கியின் பணியாட்கள் தொடர்பாக அல்லது அவர்கள் சார்பில் செலுத்த வேண்டிய அனைத்துப் பங்களிப்புகள், தீர்வைகள், வட்டிகள் என்பனவும் செலுத்தப்பட்டுள்ளன.

P.S. எதிரிசூரிய
பொது முகாமையாளர்/
பி.நி.அ
(பதில் கடமை)

P.S. எதிரிசூரிய
பிரதான நிதியதிகாரி

2023 ஆகஸ்ட் 29

உள்ளகக் கட்டுப்பாடு தொடர்பான கூற்றின் மீதான கணக்காய்வாளர் நாயகத்தின் அறிக்கை

ජාතික විගණන කාර්යාලය
தேசிய கணக்காய்வு அலுவலகம்
NATIONAL AUDIT OFFICE

මගේ අංකය
எனது இல.
My No. BAN/E/RDB/IC/2022

ඔබේ අංකය
உமது இல.
Your No.

දිනය
திகதி
Date 09 July 2024

தலைவர்,
பிரதேச அபிவிருத்தி வங்கி.

பிரதேச அபிவிருத்தி வங்கியின் நிதி அறிக்கையிடல் மீதான உள்ளகக் கட்டுப்பாடு பற்றிய பணிப்பாளர்கள் கூற்றின் பணிப்பாளர் சபைக்கான கணக்காய்வாளர் நாயகத்தின் உறுதிமொழி

அறிமுகம்

2022 டிசம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டுக்கான வருடாந்த அறிக்கையில் உள்ளடக்கப்பட்டுள்ள பிரதேச அபிவிருத்தி வங்கியின் நிதி அறிக்கையிடல் ("கூற்று") தொடர்பான உள்ளகக் கட்டுப்பாடு மீதான பணிப்பாளர்கள் கூற்றின் மீது உறுதி மொழி வழங்குவதற்கான அறிக்கை.

முகாமைத்துவத்தின் பொறுப்பு

இலங்கை பட்டயக்கணக்காளர் நிறுவனத்தினால் வங்கிச் சட்டத்தின் பிரிவு 3(8)(ii)(b) யின் வழிகாட்டி இல. 12/2007 உடன் இணங்கி நடந்தமை மீதான "உள்ளகக் கட்டுப்பாடு" மீதான கூற்று தொடர்பாக "பணிப்பாளர்கள் மீது வங்கி பணிப்பாளர்களுக்குரிய வழிகாட்டி" க்கு அமைவாக, இக்கூற்றினைத் தயாரித்து சமர்ப்பிப்பதற்கான பொறுப்பு முகாமைத்துவத்திற்கு உள்ளது.

எனது பொறுப்பும் SLSAE 3050 (திருத்தப்பட்ட) உடன் இணங்கி நடத்தலும்

ஆவணங்களைத் தயார்படுத்தல் மூலமாகவும் அல்லது பணிப்பாளர்களினால் ஆதரவளிக்கப்பட்ட இந்தக் கூற்று பிரதேச அபிவிருத்தி வங்கியின் உள்ளகக் கட்டுப்பாட்டின் வடிவமைப்பு மற்றும் வினைத்திறனை மீளாய்வு செய்வதில் பணிப்பாளர்கள் கைக்கொண்ட செயன்முறையை முறையாகப் பிரதிபலிக்கின்றதா என்பதை மதிப்பிடுவது எனது பொறுப்பாகும்.
உறுதிமொழி ஈடுபாடுகள் (SLSAE) 3050 (திருத்தப்பட்ட) தொடர்பான இலங்கை தரத்திற்கு அமைவாக, நான் இந்த மதிப்பீட்டை நடத்தியுள்ளேன். உள்ளகக் கட்டுப்பாடு மீதான பணிப்பாளர்களின் கூற்று மீதான வங்கிகளுக்கான உறுதிமொழி அறிக்கை இலங்கை பட்டயக் கணக்காளர் நிறுவனத்தினால் வழங்கப்பட்டது. இந்த நியமங்களின்படி, உள்ளகக் கட்டுப்பாடு மீதான கூற்றினை அனைத்து முக்கியமான விடயங்களையும் கருத்திற் கொண்டு முகாமைத்துவம் தயாரித்துள்ளதா என்பது பற்றி வரையறுக்கப்பட்ட உறுதிமொழியைப் பெற்றுக்கொள்ள நான் திட்டமிட்டு நடபடி முறைகளை நிறைவேற்றினேன்.

இந்த நடவடிக்கையின் நோக்கத்திற்காக எந்தவொரு அறிக்கையையும் புதுப்பிக்கவோ அல்லது மீள வழங்கவோ நான் பொறுப்புடையவன் அல்ல. அத்தோடு, இந்தச் செயற்பாட்டின் போது, நிதித் தகவல் தொடர்பான ஒரு கணக்காய்வையோ அல்லது மீளாய்வையோ நான் நடத்தவில்லை.

நான் நிறைவேற்றிய பணியின் சாராம்சம்

ஆவணங்களைத் தயார்படுத்தல் மூலமாகவும் அல்லது பணிப்பாளர்களினால் ஆதரவளிக்கப்பட்ட இந்தக் கூற்று வங்கியின் நிதி அறிக்கையிடல் மீதான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையை மீளாய்வு செய்வதில் பணிப்பாளர்கள் கைக்கொண்ட செயன்முறையை முறையாகப் பிரதிபலிக்கின்றதா என்பதை மதிப்பிடுவது எனது பொறுப்பாகும்.

என்னால் நிறைவேற்றப்பட்ட நடைமுறைகள், வங்கி ஆட்களின் விசாரணைகளுக்கு முதன்மையாக மட்டுப்படுத்தப்பட்டது. அத்துடன், மாதிரி அடிப்படையில் உள்ள ஆவணப்படுத்துகை பணிப்பாளர் சபையினால் கைக்கொண்ட செயன்முறைக்கு ஆதரவளித்தது.

No. 306/72, Polduwa Road, Battaramulla, Sri Lanka.
+94 11 2 88 70 28 - 34 +94 11 2 88 72 23 ag@auditorgeneral.gov.lk www.naosl.gov.lk


உள்ளகக் கட்டுப்பாடு தொடர்பான கூற்றின் மீதான கணக்காய்வாளர் நாயகத்தின் அறிக்கை

SLSAE 3050 (திருத்தப்பட்ட) குறிப்பிட்ட கூற்று அனைத்து இடர்களையும் கட்டுப்பாடுகளையும் உள்ளடக்குகின்றதா அல்லது வங்கியின் இடர் மற்றும் கட்டுப்பாட்டு நடைமுறைகளின் வினைத்திறன் பற்றிய கருத்தொன்றாக அமைகிறதா என்பதைக் கருத்திற் கொள்ளுமாறு என்னைத் தேவைப்படுத்தவில்லை. மேலும், SLSAE 3050 (திருத்தப்பட்ட) வருடாந்த அறிக்கையில் வெளிப்படுத்தப்பட்ட ஏதேனும் முக்கியமான பிரச்சினைகளில் முக்கியமான உள்ளகக் கட்டுப்பாட்டு அணுகுமுறைகளுடன் தொடர்பு கொள்வதை இச்செயன்முறைகள் விவரிக்கின்றனவா. மேலும், உண்மையில் அத்தகைய பிரச்சினைகளுக்கு நிவாரணம் ஒன்றை வழங்க வேண்டுமா போன்ற விடயங்களை கருத்திற் கொள்ளுமாறு என்னைத் தேவைப்படுத்தவில்லை.

தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் எனது தீர்ப்பைப் பொறுத்ததாகும். இக்கூற்றைத் தயாரிப்பதற்கு எடுத்துக் கொள்ளப்பட்ட நிகழ்வு அல்லது பரிவர்த்தனை என்பவற்றின் அடிப்படையிலேயே வங்கியின் தன்மை பற்றி எனது புரிந்துணர்வு அமைந்திருந்தது. எனது முடிவை வழங்குவதற்கு, எனக்குக் கிடைக்கப்பெற்ற சான்றுகள் போதுமானதாகவும், பொருத்தமானதாகவும் இருந்தது என நான் நம்புகிறேன்.

முடிவு

நிறைவேற்றிய நடைமுறைகளுக்கு அமைய, வருடாந்த அறிக்கையில் உள்ளடக்கப்பட்டுள்ள கூற்று, வங்கியின் நிதி அறிக்கையிடல் மீதான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையின் வடிவமைப்பு மற்றும் வினைத்திறனை மீளாய்வு செய்வதற்கு பணிப்பாளர் சபை கையாண்ட செயன்முறைகளோ முரண்படுகிறது எனக் கூறுவதற்கு எந்த விடயமும் எனது கவனத்திற்கு வரவில்லை என நான் நம்புகிறேன்.



W.P.C. விக்கிரமரத்ன
கணக்காய்வாளர் நாயகம்

நிதி அறிக்கையிடல் மீதான நிதிக் கூற்றுகள் தொடர்பான பணிப்பாளர்களின் கூற்று

தேவைப்பாடு

இந்த அறிக்கை 2007 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க வங்கிச் சட்ட வழிகாட்டியின் 3 (8)(ii)(b) பிரிவுக்கு அமைவாக, இலங்கை பட்டயக் கணக்காளர் நிறுவனத்தினால் (ICASL) வழங்கப்பட்டுள்ள ஒழுங்கு விதிகளுக்கு அமைவாக தயாரிக்கப்பட்டுள்ளது.

பொறுப்பு

பணிப்பாளர் சபை, பிரதேச அபிவிருத்தி வங்கியின் உள்ளகக் கட்டுப்பாட்டிற்கும், வங்கியின் வினைத்திறனுக்கும், போதுமான தன்மைக்கும் பொறுப்புடையதாகும். எனினும், வங்கியின் கொள்கைகள் மற்றும் வியாபாரக் குறிக்கோள்களை அடைவதற்கு இடர் தோல்வியை அப்புறப்படுத்துவதைத் தவிர்த்து, அத்தகைய ஒரு முறைமை வங்கியின் முக்கிய இடர் துறைகளை ஏற்றுக்கொள்ளக்கூடிய இடர் தோற்றப்பாட்டிற்குள் கையாளும் வகையில் வடிவமைக்கப்பட்டுள்ளது. இதற்கமைய, உள்ளகக் கட்டுப்பாட்டு முறை, முக்கியமான முகாமைத்துவப் பிறழ்கூற்று மற்றும் நிதித் தகவல் மற்றும் நிதி நட்டங்கள் அல்லது மோசடிக்கு எதிரான பதிவுகள் என்பவற்றுக்கு எதிராக நியாயமான உறுதிப்பாட்டை மாத்திரமே தர முடியும். ஆனால், முழுமையான உறுதிப்பாட்டை வழங்க முடியாது.

சபை மீளாய்வுச் செயன்முறை

வங்கியின் உள்ளகக் கட்டுப்பாட்டுச் செயன்முறை, சபையினால் காலாந்தர அடிப்படையில் மீளாய்வு செய்யப்படுவதோடு, இலங்கை பட்டயக் கணக்காளர் நிறுவனத்தினால் வழங்கப்பட்ட உள்ளகக் கட்டுப்பாடு மீதான பணிப்பாளர்களின் கூற்று சம்பந்தமான வழிகாட்டிகளோடு இணங்கி மேற்கொள்ளப்பட்டுள்ளது. சபை, குறிப்பிட்ட வழிகாட்டியில் தரப்பட்டுள்ள உள்ளகக் கட்டுப்பாட்டு மதிப்பீட்டிற்காக கணக்கியல் கொள்கைகளைக் கருத்திற் கொண்டு, சபை, உள்ளகக் கட்டுப்பாட்டை மதிப்பீடு செய்துள்ளது. வெளியக நோக்கங்களுக்காக நிதிக் கூற்றுக்களைத் தயாரிக்கும் போது மற்றும் நிதி அறிக்கையிடல் தொடர்பான உண்மைத் தன்மை ஆகியன தொடர்பில் நியாயமான உறுதிப்பாட்டை வழங்குவதற்கு வங்கி உள்ளகக் கட்டுப்பாட்டு முறையை மேம்படுத்த நடவடிக்கை எடுத்துள்ளது என வங்கி கருதுகிறது.

இடர் தொடர்பான சபையின் கொள்கைகள் மற்றும் நடைமுறைகளை அமுல்படுத்துவதில் முகாமைத்துவம் உதவுவதோடு, மேலும், சபை எதிர்கொள்ளும் இடர்களை இனங்காணுவதிலும், மதிப்பீடு செய்வதிலும், வடிவமைப்பதிலும் செயற்பாடு போன்ற நடவடிக்கைகளில் முகாமைத்துவம் அனுசரணை வழங்குவதோடு, இத்தகைய இடர்களைக் கட்டுப்படுத்துவதற்கும், தணிப்பதற்கும் பொருத்தமான உள்ளகக் கட்டுப்பாடுகளைக் கண்காணிப்பதிலும் முகாமைத்துவம் சபைக்கு உதவி அளிக்கிறது.

செயன்முறையின் முக்கிய அம்சங்கள்

நிதி அறிக்கையிடல் தொடர்பாக உள்ள, உள்ளகக் கட்டுப்பாட்டு முறையின் போதுமான தன்மை மற்றும் நேர்மைத் திறனை மீளாய்வு செய்வதற்கு ஸ்தாபிக்கப்பட்ட முக்கிய செயன்முறைகள் பின்வருவனவற்றை உள்ளடக்குகின்றன.

- வங்கியின் நாளாந்த செயற்பாடுகளின் வினைத்திறனை உறுதிப்படுத்துவதற்கு, சபைக்கு உதவியளிக்கும் பொருட்டு, கணக்காய்வு, கடன், ஒருங்கிணைக்கப்பட்ட இடர் முகாமைத்துவம் என்பவற்றுக்கு சபை உப குழுக்கள் ஸ்தாபிக்கப்பட்டுள்ளன. அத்துடன், வங்கியின் செயற்பாடுகள், கூட்டாண்மை இலக்குகள், மூலோபாயங்கள் மற்றும் வருடாந்த வரவு செலவுத் திட்டம் மற்றும் கொள்கைகள், வணிக வழிகாட்டிகள் என்பவற்றுக்கு அமைவாக உள்ளது.
- வங்கியின் அனைத்துப் பரிவர்த்தனைகளிலும், நிதி மற்றும் ஏனைய கட்டுப்பாடுகள் தொடர்பான ஒரு செயற்பாட்டுக் கையேட்டை சபை அங்கீகரித்துள்ளது. இந்தக் கையேட்டில் குறித்துரைக்கப்பட்ட நடைமுறைகள் அனைத்துப் பணியாட்களுக்கும் அறிவிக்கப்பட்டுள்ளன.
- உள்ளகக் கணக்காய்வுப் பிரிவு, கொள்கைகள் மற்றும் நடைமுறைகள் என்பவற்றின் இணக்கத்தைப் பரீட்சிக்கும். அத்துடன், உள்ளகக் கட்டுப்பாட்டு முறைகளின் வினைத்திறன் தொடர்ந்து செல்லும் அடிப்படையில் மாதிரிகளையும், சுழற்சி முறையிலான நடைமுறைகளையும் பயன்படுத்துவதுடன், ஏதேனும், முரணான செயற்பாடு தொடர்பான முக்கியமான கண்டறிதல்கள் சுட்டிக் காட்டப்படும். கணக்காய்வுகள், அனைத்துப் பிரிவுகளிலும், கிளைகளிலும் நடத்தப்படும். இது, எத்தனை தடவைகள் நடைபெற வேண்டும் என்பது, மதிப்பிடப்பட்ட இடரின் அளவு, சுயாதீனமான மற்றும் புறநிலைத் தன்மையுடைய அறிக்கையை வழங்குவதில் தங்கியிருக்கும். வருடாந்தக் கணக்காய்வுத் திட்டம், கணக்காய்வுக் குழுவினால் மீளாய்வு செய்யப்பட்டு அங்கீகரிக்கப்படும். உள்ளகக் கணக்காய்வின் கண்டறிதல்கள் காலாந்தரக் கூட்டங்களின் போது மீளாய்வுக்காக கணக்காய்வுக் குழுவுக்குச் சமர்ப்பிக்கப்படும்.

- வங்கியின் கணக்காய்வுக் குழு, உள்ளகக் கணக்காய்வுப் பிரிவு, ஒழுங்குபடுத்தல்கள் அதிகார சபைகள் மற்றும் முகாமைத்துவத்தினால் இனங்காணப்படும் உள்ளகக் கட்டுப்பாட்டுப் பிரச்சினைகளை மீளாய்வு செய்வதோடு, இடர் முகாமைத்துவம் மற்றும் உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமைகளின் போதுமான தன்மையையும், வினைத்திறனையும் மதிப்பீடு செய்யும். மேலும், இக்குழு கணக்காய்வுகளின் எல்லை, உள்ளகக் கணக்காய்வின் தரம் என்பவற்றுக்கு விசேட கவனம் செலுத்தி, உள்ளகக் கணக்காய்வுப் பணிகளையும் மீளாய்வு செய்யும். கணக்காய்வுக் குழுக் கூட்டக் குறிப்புகள் காலாந்தர அடிப்படையில் வங்கியின் பணிப்பாளர் சபையில் முன்வைக்கப்படும்.
- வங்கி, SLFRS-9 புதிய இலங்கை கணக்கியல் நியமங்கள், 2018ஆம் ஆண்டின் நிதிக்கருவிகள் மற்றும் SLFRS-16, 2019ஆம் ஆண்டின் குத்தகைகள் என்பவற்றை ஏற்றுள்ளது. மேலே குறிப்பிடப்பட்ட கணக்கியல் நியமங்களை ஏற்றுக்கொள்வதற்கு ஆரம்பத்தில் பயன்படுத்தப்பட்ட செயன்முறைகளும், நடைமுறைகளும் வெளியகக் கணக்காய்வாளர்கள், ஒழுங்குபடுத்துநர்கள் மற்றும் சபைக் கணக்காய்வுக் குழு ஆகியவற்றின் பின்னூட்டல்களின் அடிப்படையில் மேலும் வலுப்படுத்தப்பட வேண்டும். வங்கி, கடன்கள் மற்றும் முற்பணங்கள் தொடர்பான வலுக்குறைப்பு நிதிக் கூற்று வெளிப்படுத்தல்கள் மற்றும் இடர் முகாமைத்துவம் ஆகியவற்றின் மீதான செயன்முறையை மேலும் வலுப்படுத்துவதற்கு தொடர்ந்து செயற்படும்.

உறுதிப்படுத்தல்கள்

மேலே தரப்பட்ட செயன்முறைகளின் அடிப்படையில் வங்கியின் நிதி அறிக்கையிடல் முறை, நிதி அறிக்கையிடல் தொடர்பான நம்பகத்தன்மையை நியாயமான வகையில் உறுதிப்படுத்தும் வகையில் வடிவமைக்கப்பட்டுள்ளது என்பதையும், வெளியக நோக்கங்களுக்காக நிதிக் கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, இலங்கை கணக்கியல் நியமங்கள் மற்றும் இலங்கை மத்திய வங்கியின் ஒழுங்குபடுத்தல் தேவைப்பாடுகளுடன் இணங்கி தயாரிக்கப்பட்டுள்ளன என்பதையும் சபை உறுதிப்படுத்துகிறது.

வெளியகக் கணக்காய்வாளர்களினால் மீளாய்வு செய்யப்பட்ட கூற்று

2022 டிசம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டுக்கான மேலே தரப்பட்ட உள்ளகக் கட்டுப்பாடு தொடர்பான மேலே குறிப்பிடப்பட்ட பணிப்பாளர்களின் கூற்றினை வெளியகக் கணக்காய்வாளர்கள் மீளாய்வு செய்தனர். அத்துடன், அவர்கள் இக்குறிப்பிட்ட கூற்று அவர்களுடைய புரிந்துணர்வுக்கு எட்டிய வகையில், சபையினால் கைக்கொள்ளப்பட்ட வங்கியின் உள்ளகக் கட்டுப்பாட்டு முறை தொடர்பான வடிவமைப்பு மற்றும் வினைத்திறனுக்கு முரணாக அமைந்திருந்தது என தாங்கள் நம்புவதற்கு உரிய ஏதேனும் காரணங்கள் தமது கவனத்திற்கு கொண்டுவரப்பட்டனவா என்பதை சபைக்கு அறிவித்தலாகும்.



தலைவர் - கணக்காய்வுக் குழு



பணிப்பாளர்



பணிப்பாளர்

2023 செப்டம்பர் 08

நிதி அறிக்கையிடலுக்கான பணிப்பாளர்களின் பொறுப்பு

இந்தக் கூற்று வங்கியின் நிதி அறிக்கையிடல் கட்டமைப்புடன் தொடர்புடைய பணிப்பாளர்களின் பொறுப்புகளை எடுத்துக் கூறுகிறது. நிதிக் கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்புகள் 136வது பக்கத்தில் உள்ள கணக்காய்வாளர்களின் அறிக்கையில் குறித்துரைக்கப்பட்டுள்ளன.

நிதிக் கூற்றுக்கள்

வங்கியின் பணிப்பாளர்கள், வங்கியின் அனைத்துப் பரிவர்த்தனைகள் தொடர்பான முறையான கணக்குப் புத்தகங்கள் பேணப்படுவதை உறுதிப்படுத்துகின்ற பொறுப்பும், ஒவ்வொரு வருட இறுதியிலும் வங்கியின் விடயங்கள் தொடர்பாக உண்மையான மற்றும் நியாயமான பார்வையைத் தருகின்ற நிதிக் கூற்றுகள் பொருத்தமான நியதிச் சட்ட/ ஒழுங்குபடுத்தல் தேவைப்பாடுகளுடன் இணங்கி மற்றும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கியல் கொள்கைகள் மற்றும் இலங்கை கணக்கியல் நியமங்கள் (SLFRS/LKAS) என்பவற்றுக்கு அமைவாக தயாரிக்கப்பட்டுள்ளன என்பதையும் உறுதிப்படுத்தும் பொறுப்பு உண்டு. நிதிக் கூற்றுக்கள், வருமானக் கூற்று, விரிவான வருமானக் கூற்று, நிதி நிலைமைக் கூற்று, ஒப்புரவில் ஏற்படும் மாற்றங்கள் பற்றிய கூற்று, நிதிப் பாய்ச்சல் கூற்று, முக்கிய கணக்கியல் கொள்கைகள் மற்றும் அதனுடன் தொடர்புடைய குறிப்புகள் ஆகியவற்றை இது உள்ளடக்குகிறது.

2022 டிசம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டுக்கான நிதிக் கூற்றுக்களைத் தயாரிப்பதில், மிகவும் பொருத்தமான கணக்கியல் கொள்கைகள் பயன்படுத்தப்பட்டு, ஒருசீராகப் பிரயோகிக்கப்பட்டு, வருடாந்த அறிக்கையில் போதுமான அளவில் வெளிப்படுத்தப்பட்டுள்ளன. நிதிக் கூற்றுக்களைத் தயாரிக்கும் செயன்முறையில், பரிவர்த்தனையின் வடிவம் மற்றும் சாராம்சம் என்பவற்றின் முறையான பிரதிபலிப்பை உறுதிப்படுத்தும் பொறுப்பு, தேவையான இடங்களில் நியாயமான மற்றும் விவேகமான தீர்ப்புகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

2022 டிசம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டுக்கான நிதிக் கூற்றுக்கள், 2008 ஆம் ஆண்டின் 41ஆம் இலக்க பிரதேச அபிவிருத்தி வங்கி சட்டம், 1988ஆம் ஆண்டின் 30ஆம் இலக்க வங்கிச் சட்டம் மற்றும் அவற்றின் திருத்தங்கள், இலங்கை கணக்கியல் நியமங்கள் மற்றும் ஏனைய நியதிச்சட்ட/ ஒழுங்குபடுத்தல் தேவைப்பாடுகளுக்கு அமைவாகத் தயாரிக்கப்பட்டுள்ளன. இந்த நிதிக் கூற்றுக்கள் 2022 டிசம்பர் 31 இல் உள்ளவாறு வங்கி நடவடிக்கைகளின் உண்மையானதும், நியாயமானதுமான பார்வையைப் பிரதிபலிக்கிறது.

நிறுவனத்தின் தொடர்ந்து செல்லும் கோட்பாடு

பணிப்பாளர்கள், வங்கி, எதிர்வுகூறக்கூடிய எதிர்காலத்தில் வணிக நடவடிக்கையை நடத்தத் தேவையான போதுமான வளங்களைக் கொண்டுள்ளது என்ற கருத்தைத் தெரிவிக்கின்றனர். இதற்கமைய, நிதிக் கூற்றுக்களைத் தயாரிப்பதில் நிறுவனம் தொடர்ந்து செல்லும் கோட்பாடு பின்பற்றப்பட்டது.

உள்ளகக் கட்டுப்பாடு, இடர் முகாமைத்துவம் மற்றும் இணக்கம்

பணிப்பாளர்கள், உள்ளக நிதிக் கட்டுப்பாடுகள் மற்றும் இடர் முகாமைத்துவம் தொடர்பான முறைமைகளுக்குப் பொறுப்பாக இருப்பர். வங்கியின் சொத்துக்களைப் பாதுகாப்பதற்கு மற்றும் மோசடி மற்றும் பிறழ் முகாமைத்துவம் என்பவற்றைத் தவிர்ப்பதற்கு ஒரு வலுவான, கட்டுப்பாட்டுடன் கூடிய சூழலைப் பேணுவதற்கு குறிப்பிடத்தக்க கவனத்தைச் செலுத்துகின்றனர். உள்ளக இடர்களை முழுமையாக நீக்க முடியாது என்பதைக் கூறுகின்ற அதேவேளை, வங்கி, பல்வேறு முறைகள் மற்றும் ஏனைய கட்டுப்பாடுகள் மூலம் அந்த இடர்களைத் தணிப்பதற்கான சாத்தியமான நடவடிக்கைகளை எடுத்துள்ளது. வங்கியின் நிதி அறிக்கைகள் முறைமை அதன் உண்மைத் தன்மையை நியாயமான வகையில் உறுதிப்படுத்தக் கூடியவாறு வடிவமைக்கப்பட்டுள்ளது என்பதை உறுதிப்படுத்தும் உள்ளகக் கட்டுப்பாட்டுப் பொறிமுறையைத் தருகின்ற பணிப்பாளர்களின் அறிக்கை ஒன்று இவ்வருடாந்த அறிக்கையின் 130, 131வது பக்கத்தில் தரப்பட்டுள்ளது.

பணிப்பாளர்களும், முகாமைத்துவமும், இடர் முகாமைத்துவக் கொள்கைகளையும், வழிகாட்டிகளையும் அமுல்படுத்துகின்றன. முக்கியமான இடர்களைக் கண்காணிப்பதற்கும், கையாள்வதற்கும் சபை உப - குழுக்கள் ஸ்தாபிக்கப்பட்டுள்ளன. மேலும், இடர்கள் பற்றிய அறிக்கைகளைக் கலந்துரையாடலுக்காக காலாந்தர அடிப்படையில் ஒருங்கிணைக்கப்பட்ட இடர் முகாமைத்துவக் குழுவுக்கு சமர்ப்பிப்பதற்கான ஏற்பாடுகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

பொருத்தமான சட்டங்கள், ஒழுங்கு விதிகள், விதிகள், வழிகாட்டிகள் என்பவற்றுடன் இணங்கி நடப்பதை இணக்கப் பிரிவு கண்காணிக்கிறது. மேலும், இதுபற்றி ஒருங்கிணைக்கப்பட்ட இடர் முகாமைத்துவக் குழுவுக்கும், பணிப்பாளர் சபைக்கும் காலாந்தர அடிப்படையில் அறிக்கையிடப்படுகிறது.

கணக்காய்வும், ஒருங்கிணைக்கப்பட்ட இடர் முகாமைத்துக் குழுவும் தொடர்ந்து செல்லும் அடிப்படையில் உள்ளகக் கட்டுப்பாடுகள் மற்றும் இடர் முகாமைத்துவ நடைமுறைகளின் வினைத்திறனை வலுப்படுத்துவதற்கு ஒரு விசேட வகிபங்கினை வகிக்கின்றது. கணக்காய்வுக் குழு மற்றும் ஒருங்கிணைக்கப்பட்ட இடர் முகாமைத்துவக் குழு ஆகியவற்றின் அறிக்கைகள் வருடாந்த அறிக்கையில் முறையே 99 முதல் 104வது பக்கங்களில் தரப்பட்டுள்ளன.

நிதிக் கூற்றுக்கள் உட்பட அனைத்து வங்கிப் பதிவுகளும், பணிப்பாளர் சபையினால் கணக்காய்வாளர் நாயகத்தின் பார்வைக்கு வைக்கப்பட்டதோடு, கணக்காய்வாளர் நாயகம் பொருத்தமானது எனக் கருதுகின்ற அனைத்து மேற்பார்வைகளையும் மேற்கொள்வதற்கு சந்தர்ப்பம் வழங்கப்பட்டது.

இணக்கம்

பணிப்பாளர்கள் தமது சிறந்த அறிவுக்கும், நம்பிக்கைக்கும் எட்டிய வகையில் வங்கியினால் செலுத்த வேண்டிய அனைத்து வரிகளும், அரசாங்கத்திற்கு நிலுவையாக உள்ள ஏனைய அனைத்து நியதிச் சட்டக் கொடுப்பனவுகளும் மற்றும் ஏனைய பொருத்தமான ஒழுங்குபடுத்தல் மற்றும் நியதிச்சட்ட அதிகார சபைகளுக்குச் செலுத்த வேண்டிய நிலுவையான கொடுப்பனவுகளும் முடிவடைந்த நிதியாண்டில் செலுத்தப்பட்டு விட்டன என்பதில் திருப்தியுறுகின்றனர். இக்கூற்றில் குறித்துரைக்கப்பட்டவாறு, பணிப்பாளர்கள் தமது கடமைகளை நிறைவேற்றியுள்ளனர் என்ற கருத்தைக் கொண்டுள்ளனர்.

சபையின் உத்தரவுக்கு அமைய,



திலினி ராஜபக்ச

சபையின் செயலாளர்



நிதியறிக்கை

கணக்காய்வாளர் நாயகத்தின் அறிக்கை | 136
வருமானக் கூற்று | 140
விரிவான வருமானக் கூற்று | 141
நிதி நிலைமைக் கூற்று | 142
பங்குரிமையில் ஏற்பட்ட மாற்றங்கள் பற்றிய கூற்று | 143
காசுப் பாய்ச்சல் கூற்று | 144
நிதிக் கூற்றுக்களுக்கான குறிப்புகள் | 146

உள்ளகக் கட்டுப்பாடு தொடர்பான கூற்றின் மீதான கணக்காய்வாளர் நாயகத்தின் அறிக்கை

ජාතික විගණන කාර්යාලය
தேசிய கணக்காய்வு அலுவலகம்
NATIONAL AUDIT OFFICE

මගේ අංකය
எனது இல.
My No. BAN/E/RDB/IC/2022

ඔබේ අංකය
உமது இல.
Your No.

දිනය
திகதி
Date 09 July 2024

தலைவர்
பிரதேச அபிவிருத்தி வங்கி

2018ஆம் ஆண்டின் 19ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் பிரிவு 12க்கு அமைவாக, 2022 டிசம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டுக்கான பிரதேச அபிவிருத்தி வங்கியின் நிதிக் கூற்றுக்கள் மற்றும் ஏனைய சட்ட மற்றும் ஒழுங்குபடுத்தல் தேவைப்பாடுகள் மீதான கணக்காய்வாளர் நாயகத்தின் அறிக்கை

1. நிதிக் கூற்றுக்கள்

1.1 கருத்து

2022 டிசம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டுக்கான பிரதேச அபிவிருத்தி வங்கியின் ("வங்கி") நிதிக் கூற்றுக்களின் கணக்காய்வு, 2022 டிசம்பர் 31 இல் உள்ளவாறு நிதி நிலைமைக் கூற்று, இலாபம் அல்லது நட்டக் கூற்று, விரிவான வருமானக் கூற்று, பங்குரிமை மாற்றம் பற்றிய கூற்று, அப்போது முடிவடைந்த ஆண்டுக்கான காசுப் பாய்ச்சல் கூற்று, முக்கியமான கணக்கியல் கொள்கைகளின் சாராம்சம் உள்ளடங்கலாக நிதிக் கூற்றுக்களுக்கான குறிப்புகள் என்பவற்றை உள்ளடக்குகிறது. இலங்கை சனநாயக சோஷலிஸக் குடியரசின், அரசியலமைப்பு உறுப்புரை 154(1) ஐ 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் ஏற்பாடுகளோடு சேர்த்து வாசிக்கின்ற போது தருகின்ற விளைவுப் பயன்களின் அடிப்படையில், எனது வழிகாட்டுதலின் பேரில் நடைபெற்றது. அரசியலமைப்பின் உறுப்புரை 154(6)க்கு அமைய பாராளுமன்றத்திற்கான எனது அறிக்கை, உரிய நேரத்தில் கலந்துரையாடலுக்காக முன்வைக்கப்படும்.

எனது கருத்தின்படி, இங்கு உள்ளடக்கப்பட்டுள்ள நிதிக் கூற்றுக்கள், 2022 டிசம்பர் 31இல் உள்ளவாறு, வங்கியின் நிதி நிலைமை பற்றியும், வங்கியின் நிதிச் செயற்திறன் மற்றும் அப்போது முடிவடைந்த ஆண்டுக்கான வங்கியின் நிதிப் பாய்ச்சல்கள் பற்றியும், இலங்கை கணக்கியல் நியமங்களுக்கு அமைவாக, உண்மையான மற்றும் நியாயமான பார்வையைத் தருகிறது.

1.2 எனது கருத்துக்களுக்கான அடிப்படை

நான், எனது கணக்காய்வை இலங்கை கணக்கியல் நியமங்களுக்கு (SLAuSs) அமைவாக நிறைவேற்றியுள்ளேன். இந்த நியமங்களின் கீழ் எனக்கு இருக்கக்கூடிய பொறுப்புக்கள் பற்றி எனது அறிக்கையின் நிதிக் கூற்றுக்களைக் கணக்காய்வு செய்தல் தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்புகள் என்ற பகுதியில் மேலதிகமாக விபரிக்கப்பட்டுள்ளது. எனக்குக் கிடைக்கப் பெற்ற கணக்காய்வுச் சான்றுகள், எனது கருத்தை வழங்குவதற்குப் போதுமான மற்றும் பொருத்தமான அடிப்படையைத் தருகிறது என நான் கருதுகிறேன்.

1.3 வங்கியின் 2021 ஆம் ஆண்டு அறிக்கையில் உள்ளடக்கப்பட்டுள்ள ஏனைய தகவல்கள்

2022ஆம் ஆண்டு வங்கியின் வருடாந்த அறிக்கையில் ஏனைய தகவல்கள் உள்ளடக்கப்படுகின்றன. எனினும், அவற்றில் நிதிக் கூற்றுக்களும் அது தொடர்பான எனது கணக்காய்வு அறிக்கையும் உள்ளடக்கப்படவில்லை. இவை, இந்தக் கணக்காய்வு அறிக்கைத் திகதியின் பின்னர், எனக்கு வழங்கப்படும் என நான் எதிர்பார்க்கின்றேன். முகாமைத்துவம் ஏனைய விடயங்கள் தொடர்பான பொறுப்பை மேற்கொள்ளும்.

No. 306/72, Polduwa Road, Battaramulla, Sri Lanka.
+94 11 2 88 70 28 - 34 | +94 11 2 88 72 23 | ag@auditorgeneral.gov.lk | www.naosl.gov.lk

உள்ளகக் கட்டுப்பாடு தொடர்பான கூற்றின் மீதான கணக்காய்வாளர் நாயகத்தின் அறிக்கை

நிதிக் கூற்றுக்கள் தொடர்பான எனது கருத்து, ஏனைய தகவல்களை உள்ளடக்காததுடன், அவை தொடர்பாக நான் எந்த வடிவத்திலும் உறுதியுரையை வழங்கவில்லை.

நிதிக் கூற்றுக்கள் தொடர்பான எனது கணக்காய்வு தொடர்பில் மேலே தரப்பட்ட விடயங்கள் தொடர்பாக இனங்காணப்பட்ட ஏனைய தகவல்கள் எனக்கு வழங்கப்படுமிடத்து, அதனை வாசிப்பதற்கு நான் பொறுப்புடையவனாக இருப்பதோடு, அவ்வாறு மேற்கொள்கையில், ஏனைய தகவல்கள் நிதிக் கூற்றுக்களுடன் பொருளளவில் முரண்படுகின்றதா என்பதை அல்லது கணக்காய்வில் நான் பெற்றுக்கொண்ட எனது அறிவு அல்லது பொருளளவில் பிழையாக எடுத்துக் கூறப்பட்டுள்ளதா என்பதை அவதானித்தேன்.

2022ஆம் ஆண்டு வருடாந்த அறிக்கையை நான் வாசிக்கையில், அவற்றில் பொருளளவான பிறழ் கூற்றுக்கள் இருக்கின்றன என நான் முடிவு செய்தால், அவ்விடயத்தைத் திருத்தத்திற்காக ஆளுகைக்குப் பொறுப்பானவர்களுக்கு அறிவிக்கக் கடமைப்பட்டுள்ளேன். மேலும், பொருளளவான திருத்தப்படாத பிறழ் கூற்றுக்கள் இருப்பின், அரசியலமைப்பில் உறுப்புரை 154(6) இன் ஏற்பாடுகளுக்கு அமைவாக பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்படும் எனது அறிக்கையில் அவை உள்ளடக்கப்படும்.

1.4 நிதிக் கூற்றுக்களுக்கான முகாமைத்துவம் மற்றும் ஆளுகைக்குப் பொறுப்பானவர்களின் பொறுப்புகள்

இலங்கை கணக்கியல் நியமங்களின் பிரகாரம், உண்மையான மற்றும் நியாயமான பார்வையைத் தருகின்ற நிதிக் கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு முகாமைத்துவம் பொறுப்பாகும். அத்துடன், முகாமைத்துவம் என்ற ரீதியில், அத்தகைய உள்ளகக் கட்டுப்பாட்டில் தயாரிக்கப்பட்ட நிதிக் கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகை காரணமாக, முக்கியமான பிறழ் கூற்றில் இருந்து விலக்களிக்கப்பட்டுள்ளது என்பதை உறுதிப்படுத்துவது முகாமைத்துவத்தின் கடப்பாடாகும்.

நிதிக் கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, முகாமைத்துவம் நிறுவனம் தொடர்ந்து செல்லும் கோட்பாட்டை மதிப்பிடுவதற்குப் பொறுப்பாக உள்ளது. அதனை வெளிப்படுத்துவதுடன், பொருந்தக்கூடிய வகையில் முகாமைத்துவம் வங்கியைக் கலைப்பதற்கோ அல்லது செயற்பாடுகளை முடிவுறுத்தவோ அல்லது அவ்வாறு மேற்கொள்வதைத் தவிர வேறு யதார்த்தமான மாற்று வழி ஒன்று இல்லாத வரையில், முகாமைத்துவம் கணக்குகளை மேற்கொள்வதில் நிறுவனம் தொடர்ந்து செல்லும் கோட்பாட்டைப் பயன்படுத்த வேண்டும்.

ஆளுகைக்குப் பொறுப்பானவர்கள் வங்கி நிதி அறிக்கையிடல் செயன்முறையில் மேற்பார்வை செய்தல் வேண்டும்.

2018ஆம் ஆண்டின் 19ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் பிரிவு 16(1) இன் பிரகாரம், வங்கியினால் வருடாந்த மற்றும் காலாண்டு நிதிக் கூற்றுக்களைத் தயாரிப்பதற்காக, அதன் வருமானம், செலவு, சொத்துக்கள் மற்றும் பொறுப்புகள் பற்றி முறையான கணக்குப் புத்தகங்களையும் பதிவுகளையும் பேணுதல் வேண்டும்.

1.5 நிதிக் கூற்றுக்களுக்கான கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்புகள்

நிதிக் கூற்றுக்கள், முழுமையான அடிப்படையில் மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்பட்ட முக்கியமான பிறழ் கூற்றில் இருந்து விலக்களிக்கப்பட்டுள்ளது என்பது பற்றிய நியாயமான உறுதிப்பாடு ஒன்றைப் பெற்றுக்கொள்ளுதலும், எனது கருத்தை உள்ளடக்கிய கணக்காய்வு அறிக்கை ஒன்றை வழங்குதலுமே என்னுடைய குறிக்கோளாகும். நியாயமான உறுதிப்பாடு என்பது, உயர்மட்ட உறுதிப்பாடாக அமைந்த போதிலும், இலங்கை கணக்கியல் நியமங்களுக்கு அமைவாக நடத்தப்பட்ட கணக்காய்வு, எப்போதும் இருக்கக்கூடிய ஒரு முக்கியமான பிறழ்கூற்றைக் கண்டுபிடிக்கும் என்ற உத்தரவாதத்தை வழங்க முடியாது. பிறழ்கூற்றுகள், மோசடி மற்றும் தவறுகளில் இருந்து எழலாம். அத்துடன், இப்பிறழ் கூற்றுக்கள் தனியாகவோ அல்லது மொத்தமாகவோ இந்த நிதிக் கூற்றுக்களின் அடிப்படையில் தங்கியிருந்து எடுக்கப்பட்ட தீர்மானங்களைப் பயன்பாட்டாளர்களின் பொருளாதாரத் தீர்மானங்களில் நியாயமான செல்வாக்கைச் செலுத்துமெனக் கருதப்படின், அது முக்கியமான பிறழ் கூற்றாகக் கருதப்படும்.

இலங்கை கணக்கியல் நியமங்களுக்கு அமைவாகக் காணப்படுகின்ற கணக்காய்வின் ஒரு

பகுதி என்ற அடிப்படையில் கணக்காய்வுச் செயன்முறை முழுவதும் நான் தொழில்முறை ரீதியான தீர்ப்பினைப் பிரயோகித்துள்ளதோடு, தொழில்முறை ரீதியாக சந்தேகங்களையும் பேணியுள்ளேன்.

- நான் மேலும், நான் மோசடி அல்லது தவறு காரணமாக, நிதிக் கூற்றுக்களில் ஏற்பட்ட முக்கியமான பிறழ் கூற்றுக்களின் இடர்களை இனங்கண்டு, மதிப்பீடு செய்ததோடு, அத்தகைய இடர்களுக்குப் பதில் அளிக்கக்கூடிய நடைமுறைகளை வடிவமைத்துச் செயன்முறைப்படுத்தியுள்ளேன். மேலும், எனது கருத்திற்கான அடிப்படையை வழங்குவதற்குரிய போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொண்டேன். தவறில் இருந்து எழுகின்ற பிறழ்கூற்றினை விட மோசடியில் இருந்து எழுகின்ற முக்கியமான பிறழ் கூற்றைக் கண்டுபிடிப்பது மேலதிக சுமையை ஏற்படுத்துகிறது. ஏனெனில், மோசடி, கூட்டுச் சதி, போலியான ஆவணங்களைத் தயாரித்தல், மன எண்ணத்துடனான செய்யாமைகள், பிறழ் கூற்றுக்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டை மீறுகின்ற செயல்களாக அமையலாம்.
- குறிப்பிட்ட சூழ்நிலைகளில், பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக பொருத்தமான உள்ளகக் கட்டுப்பாடு பற்றிய ஒரு விளக்கத்தைப் பெற்றுக்கொள்ளுதல், ஆயின், இவ்விளக்கம் வங்கியினுடைய உள்ளகக் கட்டுப்பாட்டின் வினைத்திறன் பற்றிய கருத்து ஒன்றை வெளிப்படுத்தும் நோக்கத்திற்காக அல்ல.
- பயன்படுத்தப்பட்ட கணக்கியல் கொள்கைகளின் பொருத்தமான தன்மையை மதிப்பீடு செய்தலும், முகாமைத்துவத்தினால் மேற்கொள்ளப்பட்ட கணக்கியல் மதிப்பீடுகளின் நியாயத் தன்மையையும் தொடர்புபட்ட வெளிப்படுத்தல்களையும் மதிப்பீடு செய்துள்ளேன்.
- கணக்கியலுக்கு அடிப்படையாக முகாமைத்துவம் பயன்படுத்திய நிறுவனம் தொடர்ந்து செல்லும் கோட்பாட்டின் பொருத்தமான தன்மை பற்றி முடிவு கூறுதல். அத்துடன், பெறப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளின் அடிப்படையில் நிறுவனத் தொடர்ச்சிக் கொள்கை அடிப்படையில் வங்கி தொடர்ந்து செயற்பாடுகளை தொடர்ந்தும் நடத்தும் தகைமை மீது முக்கியமான சந்தேகங்களை எழுப்பக்கூடிய சம்பவங்கள் அல்லது நிலைமைகள் தொடர்பில் ஒரு முக்கியமான நிச்சயமற்ற தன்மை உள்ளதா என்பது பற்றித் தீர்மானித்தல். ஒரு முக்கியமான நிச்சயமற்ற தன்மை நிலவுகிறது என நான் தீர்மானித்தால், நிதிக் கூற்றுக்களில் உள்ள தொடர்புபடுத்தப்பட்ட வெளிப்படுத்தல்கள் மீது என்னுடைய கணக்காய்வு அறிக்கையில் கவனம் செலுத்துமாறு அல்லது அத்தகைய வெளிப்படுத்தல்கள் போதுமானவையாக இல்லாத போது, எனது கருத்தினை திருத்த வேண்டுமென நான் வேண்டப்படுகிறேன். எனது தீர்மானங்கள், எனது கணக்காய்வு அறிக்கையில் குறிப்பிடப்பட்ட திகதி வரை பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வு சான்றுகளை அடிப்படையாகக் கொண்டது. எனினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது சூழ்நிலைகள் வங்கி தொடர்ந்து செயற்பட இயலாமல் செயற்பாடுகளை இடைநிறுத்த வேண்டிய சூழ்நிலைகளை ஏற்படுத்தலாம்.
- வெளிப்படுத்தல்கள் உள்ளடங்கலாக, நிதிக் கூற்றுக்களின் முழுமையான சமர்ப்பணம், கட்டமைப்பு, உள்ளடக்கம் என்பவற்றையும் நிதிக் கூற்றுக்களுக்கு அடிப்படையாக அமைந்த பரிவர்த்தனைகளும், நிகழ்வுகளும் நியாயமான சமர்ப்பணத்தை அடையக்கூடிய வகையில் இருக்கின்றதா என்பதை மதிப்பிடுதல்.

ஏனைய விடயங்களுடன் ஆளுகைக்குப் பொறுப்பாக இருக்கின்ற ஆட்களுக்கு என்னுடைய கணக்காய்வின் போது, உள்ளகக் கட்டுப்பாட்டில் இருக்கக்கூடிய ஏதேனும் குறிப்பிடத்தக்க குறைபாடுகள் உள்ளடங்கலாக முக்கியமான கணக்காய்வுக் கண்டறிதல்களை அனுப்பி வைக்கின்றேன்.

2. ஏனைய சட்ட மற்றும் ஒழுங்குபடுத்தல் தேவைப்பாடுகள் மீதான அறிக்கை

2.1 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டம் பின்வரும் தேவைப்பாடுகளுக்கான குறிப்பான ஏற்பாடுகளை உள்ளடக்குகிறது.

2.1.1 கணக்காய்வுக்குத் தேவைப்படுகின்ற அனைத்துத் தகவல்களையும், விளக்கங்களையும் நான் பெற்றுக்கொண்டேன். என்னுடைய அறிவுக்கு எட்டிய வரை, 2018ஆம் ஆண்டு 19ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் பிரிவு 12(a) க்கு அமைய வங்கியினால் முறையான கணக்குப்

பதிவுகள் பேணப்பட்டுள்ளன என்பது எனது பரீட்சையில் இருந்து தெரிய வருகிறது.

2.1.2 2018ஆம் ஆண்டு 19ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் பிரிவு 6(1)(d)(iii) யின் தேவைப்பாடுகளுக்கு அமைய கடந்த வருடத்தில் தயாரிக்கப்பட்ட நிதிக் கூற்றுக்களுடன் இவ்வருட நிதிக் கூற்றுக்கள் சீராக உள்ளன.

2.1.3 2018ஆம் ஆண்டு 19ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் பிரிவு 6(1)(d)(iv) யின் தேவைப்பாடுகளுக்கு அமைய சமர்ப்பிக்கப்பட்ட நிதிக் கூற்றுக்கள் கடந்த வருடத்தில் என்னால் மேற்கொள்ளப்பட்ட அனைத்துப் பரிந்துரைகளையும் உள்ளடக்குகின்றது.


2.2 நிறைவேற்றப்பட்ட நடைமுறைகள் மற்றும் பெறப்பட்ட சான்றுகளின் அடிப்படையில், முக்கியமான விடயங்களுக்கு மாத்திரம் மட்டுப்பட்டுள்ளதுடன், பின்வரும் விடயங்கள் தொடர்பில் எனது கவனத்திற்கு எவ்விடயமும் வரவில்லை.

2.2.1 2018ஆம் ஆண்டு 19ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் பிரிவு 12(d) யின் தேவைப்பாடுகளுக்கு அமைய வங்கியின் சாதாரண வியாபார நடவடிக்கைகளுக்கு அப்பால், வங்கியினால் ஈடுபடுத்தப்பட்ட எந்தவொரு ஒப்பந்தத்திலும், நிறுவனத்தின் ஆளுகை அமைப்பில் உள்ள எந்தவொரு நபருக்கும், ஏதேனும் நேரடியான அல்லது மறைமுகமான அக்கறை உண்டு எனக் கூறுவதற்கு,

2.2.2 2018ஆம் ஆண்டு 19ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் பிரிவு 12(f) யின் தேவைப்பாடுகளுக்கு அமைவாக, வங்கி ஏதேனும் பொருத்தமான எழுதப்பட்ட சட்டம் மற்றும் வங்கியை ஆளுகின்ற அமைப்பினால் வழங்கப்பட்ட பொதுவான மற்றும் சிறப்பான வழிகாட்டிகளைப் பின்பற்றவில்லை என்பதற்கு,

2.2.3 2018ஆம் ஆண்டு 19ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் பிரிவு 12(g) யின் தேவைப்பாடுகளுக்கு அமையவாக, வங்கி அதன் அதிகாரங்கள், பணிகள் மற்றும் கடமைகளை நிறைவேற்றவில்லை எனக் கூறுவதற்கு,

2.2.4 2018ஆம் ஆண்டு 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் பிரிவு 12(h) யின் தேவைப்பாடுகளுக்கு அமைய, பொருத்தமான சட்டங்களுக்கு அமைவாகவும், குறிப்பிட்ட கால எல்லைகளுக்குள் வங்கியின் வளங்கள் கொள்முதல் செய்யப்படவில்லை மற்றும் பொருளாதார ரீதியாக, வினைத்திறனாக பயனுள்ள வகையில் பயன்படுத்தப்படவில்லை எனக் கூறுவதற்கு.



W.P.C. விக்கிரமரத்ன
கணக்காய்வாளர் நாயகம்

வருமானக் கூற்று

டிசம்பர் 31 இல் முடிவடைந்த வருடத்திற்கான	குறிப்பு	2022 ரூபா	2021 ரூபா
மொத்த வருமானம்	7	**36,202,749,629**	24,492,768,957
வட்டி வருமானம்		**35,273,433,857**	23,545,299,165
வட்டி செலவு		**(19,639,529,550)**	(9,893,373,234)
நிகர வட்டி வருமானம்	8	**15,633,904,307**	13,651,925,931
கட்டணம் மற்றும் தரகு வருமானம்		**806,547,782**	935,136,855
கட்டணம் மற்றும் தரகுச் செலவு		**(355,184,923)**	(312,112,052)
நிகர கட்டணம் மற்றும் தரகு வருமானம்	9	**451,362,859**	623,024,803
நிகர வியாபார இலாபம்/ (நட்டம்)	10	**102,296,546**	(24,214,945)
ஏனைய தொழிற்படு வருமானம் (நிகர)		**20,471,444**	36,547,883
மொத்த தொழிற்படு வருமானம்		**16,208,035,156**	14,287,283,672
வலுக்குறைப்புக் கட்டணங்கள்	12	**(2,852,677,176)**	(3,256,775,862)
நிகர தொழிற்படு வருமானம்		**13,355,357980**	11,030,507,810
கழி - தொழிற்படு செலவுகள்			
ஆளணிச் செலவுகள்	13	**(8,739,537,602)**	(7,292,269,883)
தேய்மானம் மற்றும் பதிவழிப்புச் செலவுகள்		**(532,733,987)**	(520,988,009)
ஏனைய செலவுகள்	14	**(2,084,970,281)**	(1,290,468,186)
வரிக்கு முந்திய தொழிற்படு இலாபம்		**1,998,116,109**	1,926,781,733
கழி: நிதிச் சேவைகள் மீதான பெறுமதிசேர் வரி		**(1,561,474,848)**	(1,151,277,133)
சமூகப் பாதுகாப்பு பங்களிப்பு வரி		**(77,525,933)**	-
வருமான வரி செலவுகளுக்கு முந்திய இலாபம்		**359,115,328**	775,504,600
வருமான வரிச் செலவுகள்	15	**990,279,323**	(469,201,889)
வருடத்திற்கான இலாபம்		**1,349,394,652**	306,302,711
ஒரு பங்கிற்குரிய சம்பாத்தியம்			
ஒரு பங்கிற்கான அடிப்படை சம்பாத்தியம்	16.1	**2.45**	0.56
ஒரு பங்கிற்கான நீர்த்த வருமானம	16.2	**2.45**	0.56

அடைப்புக்குறிக்குள் உள்ள இலக்கங்கள் கழிவுகளைக் குறிப்பிடுகின்றன. இந்த நிதிக் கூற்றுக்கள், இவ்வருடாந்த அறிக்கையின் 146 தொடக்கம் 229 வரையான குறித்துரைக்கப்பட்டுள்ள நிதிக் கூற்றுக்களின் ஒரு பகுதியாகும்.

விரிவான வருமானக் கூற்று

டிசம்பர் 31 இல் முடிவடைந்த வருடத்திற்கான	குறிப்பு	2022 ரூபா	2021 ரூபா
இவ்வருடத்திற்கான இலாபம்		**1,349,394,652**	306,302,711
ஏனைய விரிவான வருமானம் (செலவுகள்)			
இலாபம் அல்லது நட்டம் என மறுவகுப்பாக்கம் செய்யப்பட முடியாத ஏனைய விரிவான வருமானம்			
ஓய்வு பெறும் அனுகூலக் கடப்பாட்டின் மீதான காப்பீட்டு நட்டம்	34.3	**156,249,438**	(35,917,534)
மேலே கூறப்பட்டவற்றுக்கு ஏற்படும் ஒத்தி வைக்கப்பட்ட வரி விளைவு		**(46,874,831)**	8,620,208
இவ்வருடத்திற்கான மொத்த ஏனைய விரிவான வருமானம், வரிகளின் தேறிய தொகை		**109,374,607**	(27,297,325)
வருடத்திற்கான மொத்த விரிவான வருமானம்		**1,458,769,259**	279,005,386

அடைப்புக்குறிக்குள் உள்ள இலக்கங்கள் கழிவுகளைக் குறிப்பிடுகின்றன.

இந்த நிதிக் கூற்றுக்கள், இவ்வருடாந்த அறிக்கையின் 146 தொடக்கம் 229 வரையான குறித்துரைக்கப்பட்டுள்ள நிதிக் கூற்றுக்களின் ஒரு பகுதியாகும்.

நிதி நிலைமைக் கூற்று

டிசம்பர் 31 இல் முடிவடைந்த வருடத்திற்கான	குறிப்பு	2022 ரூபா	2021 ரூபா
சொத்துக்கள்			
காசு மற்றும் காசுக்கு சமமானவை	18	**2,889,883,677**	1,486,878,989
வங்கிகளிலுள்ள வைப்புகள்	19	**6,133,705,351**	6,596,072,932
இலாபம் அல்லது நட்டம் ஊடாக நியாயப் பெறுமதியில் பங்குரிமைக் கருவிகள்	20	**120.280**	188,140
பதிவழிப்புச் செலவில் நிதி முதலீடுகள் - ஏனைய			
வாடிக்கையாளர்களிடமிருந்து கடன்கள் மற்றும் பெறுகைகள்	21	**198,008,145,155**	175,229,666,656
பதிவழிப்புச் செலவில் நிதி முதலீடுகள் - கடன் மற்றும் ஏனைய கருவிகள்	22	**65,079,635,908**	54,856,210,318
விரிவான வருமானம் ஊடாக நியாயப் பெறுமதியில் பங்குரிமைக் கருவிகள்	23	**2,289,919**	2,289,919
ஆதனம் மற்றும் இயந்திரங்களும் உபகரணங்களும்	24	**926,615,241**	928,568,438
அருவச் சொத்துக்கள்	25	**68,867,744**	113,688,780
சொத்துக்களைப் பயன்படுத்தும் உரிமை	26.1	**718,096,698**	505,092,023
ஒத்திவைக்கப்பட்ட வரிச் சொத்துக்கள்	27	**3,525,174,919**	1,263,795,071
ஏனைய சொத்துக்கள்	28	**8,042,615,550**	4,907,060,297
மொத்த சொத்துக்கள்		**285,395,150,443**	245,889,511,562
பொறுப்புக்கள்			
வங்கிகளுக்குச் செலுத்தப்பட வேண்டியவை	29	**47,470,707,056**	29,500,936,543
ஏனைய வாடிக்கையாளர்களுக்கு நிலுவையாக உள்ளவை	30	**210,301,323,465**	187,752,465,256
வழங்கப்பட்ட கடன் பத்திரங்களும் ஏனைய பெறப்பட்ட நிதிகளும்	31	**-**	2,000,000,000
நடப்பு வரிப் பொறுப்புகள்	32	**1,011,924,146**	503,021,886
ஏனைய பொறுப்புக்கள்	33	**7,293,487,262**	7,693,300,812
ஓய்வுப் பெறுகை நலன் கடப்பாடு	34	**3,091,581,136**	3,046,464,739
மொத்தப் பொறுப்புகள்		**269,169,023,068**	230,496,189,235
பங்குரிமை			
குறிப்பிடப்பட்ட மூலதனம்	35	**8,221,864,565**	8,047,229,930
நியதிச்சட்ட ஒதுக்க நிதி	36	**845,247,866**	777,778,133
தக்கவைப்புச் சம்பாத்தியங்கள்		**2,889,785,536**	2,636,433,521
ஏனைய ஒதுக்கங்கள்	37	**4,269,229,407**	3,931,880,744
மொத்தப் பங்குதாரர்களின் பங்குரிமை		**16,226,127,375**	15,393,322,328
மொத்த பங்குரிமை மற்றும் பொறுப்புகள்		**285,395,150,443**	245,889,511,563
இடைநிலைப் பொறுப்புகளும் கடமைகளும்	40	**380,380,046**	225,888,152

இந்த நிதிக் கூற்றுக்கள், இவ்வருடாந்த அறிக்கையின் 146 தொடக்கம் 229 வரையான குறித்துரைக்கப்பட்டுள்ள நிதிக் கூற்றுக்களின் ஒரு பகுதியாகும்.

1988ஆம் ஆண்டின் 30ஆம் இலக்க வங்கிச் சட்டம் மற்றும் 2008ஆம் ஆண்டின் 41 ஆம் இலக்க பிரதேச அபிவிருத்தி வங்கிச் சட்டம் என்பவற்றின் தேவைப்பாடுகளுக்கு இணங்கி, நிதிக் கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளன என்பதை நான் சான்றுபடுத்துகிறேன்.



பீ.எஸ். எதிரிசூரிய
பிரதம நிதி அதிகாரி



பீ.எஸ். எதிரிசூரிய
பொது முகாமையாளர்/ பிநிஅ

பணிப்பாளர் சபையினால் சமர்ப்பிக்கப்பட்டு, பணிப்பாளர் சபை சார்பாக பணிப்பாளர்களினால் கையொப்பமிடப்பட்ட இந்த நிதிக் கூற்றுக்களுக்கு பணிப்பாளர் சபையே பொறுப்பாகும்.



தலைவர்/பணிப்பாளர்



பணிப்பாளர்

2023 ஜூன் 16

2022 டிசம்பர் 31 இல் முடிவடைந்த வருடத்திற்கான	குறிப்பிடப்பட்ட மூலதனம் குறிப்பு 35 ரூபா	நியதிச் சட்ட ஒதுக்க நிதி குறிப்பு 36 ரூபா	விசேட ஒதுக்க நிதி குறிப்பு 37 ரூபா	பொது ஒதுக்க நிதி குறிப்பு 37 ரூபா	தக்க வைக்கப்பட்ட சம்பாத்தியங்கள் ரூபா	ரூபா
2021 ஜனவரி 01 இல் உள்ளவாறு	8,047 229,930	762,462,998	616,853,326	3,238,451,740	2,449,318,948	15,114,316,941
வருடத்திற்கான மொத்த விரிவான வருமானம்						
வருடத்திற்கான இலாபம்	-	-	-	-	306,302,711	306,302,711
ஏனைய விரிவான வருமானம், நிகர வரி	-	-	-	-	(27,297,325)	(27,297,325)
வருடத்திற்கான மொத்த விரிவான வருமானம்	-	-	-	-	279,005,386	279,005,386
பங்குரிமையில் நேரடியாக அங்கீகரிக்கப்பட்ட பங்குரிமை உள்ளவர்களுடனான பரிவர்த்தனைகள்						
நியதிச்சட்ட ஒதுக்க நிதியத்திற்கு மாற்றம்	-	15,315,136	-	-	(15,315,136)	-
விசேட ஒதுக்க நிதியத்திற்கு மாற்றம்	-	-	15,315,136	-	(15,315,136)	-
பொது ஒதுக்க நிதியத்திற்கு மாற்றம்	-	-	-	61,260,542	(61,260,542)	-
பங்குரிமையில் நேரடியாக அங்கீகரிக்கப்பட்ட, பங்குரிமை உள்ளவர்களுடனான பரிவர்த்தனைகள்	-	15,315,136	15,315,136	61,260,542	(91,890,813)	-
2021 டிசம்பர் 31 இல் உள்ளவாறு மீதி	8,047,229,930	777,778,133	632,168,462	3,299,712,282	2,636,433,521	15,393,322,327
2022 ஜனவரி 01 இல் உள்ளவாறு மீதி	**8,047,229,930**	**777,778,134**	**632,168,462**	**3,299,712,282**	**2,636,433,521**	**15,393,322,328**
2022ஆம் ஆண்டின் 14ஆம் இலக்க மிகைக்கட்டண சட்டத்தின் கீழான மிகைக்கட்டண சீராக்கல்கள் (குறிப்பு 15.5)	**-**	**-**	**-**	**-**	**(800,598,848)**	**(800,598,848)**
2022 ஜனவரி 01 இல் உள்ளவாறு சீராக்கப்பட்ட மிகுதி	**8,047,229,930**	**777,778,134**	**632,168,462**	**3,299,712,282**	**1,835,834,673**	**14,592,723,480**
வருடத்திற்கான மொத்த விரிவான வருமானம்						
வருடத்திற்கான இலாபம்	**-**	**-**	**-**	**-**	**1,349,394,652**	**1,349,394,652**
ஏனைய விரிவான வருமானம், நிகர வரி	**-**	**-**	**-**	**-**	**109,374,607**	**109,374,607**
வருடத்திற்கான மொத்த விரிவான வருமானம்	**-**	**-**	**-**	**-**	**1,458,769,259**	**1,458,769,259**
பங்குரிமையில் நேரடியாக அங்கீகரிக்கப்பட்ட, பங்குரிமை உள்ளவர்களுடனான பரிவர்த்தனைகள்						
விநியோகிக்கப்பட்ட குறிப்பிடப்பட்ட மூலதனம்	**174,634,635**	**-**	**-**	**-**	**-**	**174,634,635**
நியதிச்சட்ட ஒதுக்க நிதியத்திற்கு மாற்றம்	**-**	**67,469,733**	**-**	**-**	**(67,469,733)**	**-**
விசேட ஒதுக்க நிதியத்திற்கு மாற்றம்	-	-	**67,469,733**	**-**	**(67,469,733)**	**-**
பொது ஒதுக்க நிதியத்திற்கு மாற்றம்	-	-	-	**269,878,930**	**(269,878,930)**	
பங்குரிமையில் நேரடியாக அங்கீகரிக்கப்பட்ட, பங்குரிமை உள்ளவர்களுடனான பரிவர்த்தனைகள்	**174,634,635**	**67,469,733**	**67,469,733**	**269,878,930**	**(404,818,396)**	**174,634,635**
2022 டிசம்பர் 31 இல் மீதி	**8,221,864,565**	**845,247,866**	**699,638,194**	**3,569,591,213**	**2,889,785,536**	**16,226,127,375**

இந்த நிதிக் கூற்றுக்கள், இவ்வருடாந்த அறிக்கையின் 146 தொடக்கம் 229 வரையான குறித்துரைக்கப்பட்டுள்ள நிதிக் கூற்றுக்களின் ஒரு பகுதியாகும்.

நிதிப் பாய்ச்சல் கூற்று

டிசம்பர் 31 இல் முடிவடைந்த வருடத்திற்கான	குறிப்பு	2022 ரூபா	2021 ரூபா
தொழிற்படு நடவடிக்கைகளில் இருந்து நிதிப் பாய்ச்சல்கள்			
வரிக்கு முன்னரான இலாபம்		**359,115,328**	775,504,601
பின்வருவனவற்றுக்கான சீராக்கங்கள் :			
வரிக்கு முந்திய இலாபத்தில் உள்ளக்கப்பட்ட காசு சாராத விடயங்கள்			
சொத்துக்கள் மீதான தேய்மானம், பொறித்தொகுதி மற்றும் சாதனங்கள்.˙.			
சுழுரு மீதான பணப்பெறுமதி நீக்கம்	24	**487,812,469**	490,215,777
கட்புலனாகாச் சொத்துக்கள் கடனாக மாற்றம்	25	**46,808,061**	30,772,231
குத்தகைக்கான வட்டி செலவுகள்	26.2	**49,991,183**	229,798,098
கடன் பத்திரங்கள் மீதான வட்டி செலவு		**76,176,663**	311,500,000
பங்குலாப வருமானம்	10	**(4,384,680)**	(10,209,840)
ஊழியர் கடன் சீராக்கம்			-
சேதநட்டக் கட்டணங்கள்	12	**2,852,677,176**	3,256,775,862
நியாயப் பெறுமதியில் இலாபம் அல்லது நட்டம் மூலம் உரிமை மூலதனக்			
கருவிகளில் மாற்றம்	10	**67,860**	(42,980)
பரிமாற்றங்கள் மூலம் இலாபம்.˙. (நட்டம்)	10	**(97,979,726)**	34,467,765
ஓய்வூதிய நன்மைக் கடப்பாடுகள் மீதான கட்டணம்	34.1	**567,113,577**	379,779,626
ஏனைய நிதியங்களின் பெயர்ச்சி			-
ஆதனம் மற்றும் இயந்திர உபகரணங்களின் விற்பனை மூலம் இலாபம்.˙.			
(நட்டம்)	11	**93,147**	(18,134,116)
டீடு கடன்களின் மீட்பு (பதிவழிப்பு)	11	**(411,274)**	(441,823)
தொழிற்படு சொத்துக்களில் ஏற்பட்ட மாற்றங்கள்			
ஏனைய வாடிக்கையாளர்களிடமிருந்து கடன்கள் மற்றும் பெறுகைகளில் நிகர			
மாற்றம்		**(25,603,792,299)**	(21,794,891,917)
ஏனைய சொத்துக்களின் நிகர மாற்றம்		**(3,150,740,674)**	(2,167,393,709)
கடனைத் திருப்பிச் செலுத்தும் செலவு - கடன் மற்றும் ஏனைய கருவிகளில்			
நிதி முதலீடுகளில் நிகர மாற்றம்		**(6,566,581,516)**	(1,033,112,853)
தொழிற்படு பொறுப்புக்களில் ஏற்பட்ட மாற்றங்கள்			
வங்கிகளுக்குச் செலுத்த வேண்டியவற்றில் நிகர மாற்றம்		**1,875,544,521**	3,081,261,163
ஏனைய வாடிக்கையாளர்களுக்குச் செலுத்த வேண்டியவற்றில்			
நிகர மாற்றம்		**22,548,858,212**	14,869,832,978
ஏனைய பொறுப்புகளுக்குச் செலுத்த வேண்டியவற்றில் நிகர மாற்றம்		**(651,469,639)**	1,456,574,150
செலுத்திய பணிக்கொடை	34.1	**(66,254,402)**	(134,929,431)
நிதி சேவைகள் மீதான வரிகள்			
செலுத்திய வரி	32	**(1,609,671,944)**	(695,837,450)
தொழிற்படு நடவடிக்கைகளில் இருந்து/ (பயன்படுத்தப்பட்ட)			
ஈட்டப்பட்ட நிகர காசு		**(8,887,027,959)**	(938,511,867)
முதலீட்டு நடவடிக்கைகளில் இருந்து நிதிப் பாய்ச்சல்			
ஆதனம் மற்றும் இயந்திரங்களும் உபகரணங்களும் கொள்வனவு	24	**(207,875,911)**	(202,693,190)
அருவச் சொத்துக்களின் கொள்வனவு	25	**(1,987,025)**	(123,380,926)
தொகுதிக்கடன்களில் (முதலீடு).˙. மீளப்பெறல்	22.1	**-**	392,280,000
நிலையான வைப்புக்களில் முதலீடு (3 மாதங்களுக்கு மேற்பட்ட)	22.2	**(17,403,319,430)**	(3,220,344,943)
ஆதனம் மற்றும் இயந்திர, உபகரணங்கள் விற்பனையில் இருந்து பெறப்பட்ட			
வருவாய்		**(779,590)**	17,453,993
பெற்ற பங்குலாப வருமானம்	10	**(4,384,680)**	10,209,840
முதலீட்டு நடவடிக்கைகளில் இருந்து (பயன்படுத்தப்பட்ட)/ பெற்ற நிகர காசு		**(17,609,577,277)**	(3,126,475,226)

நிதிப் பாய்ச்சல் கூற்று

டிசம்பர் 31 இல் முடிவடைந்த வருடத்திற்கான	குறிப்பு	2022 ரூபா	2021 ரூபா
நிதி நடவடிக்கைகளில் இருந்து நிதிப் பாய்ச்சல்			
தொழிற்படு குத்தகை மீதான முதன்மைக் கொடுப்பனவு	26.2	**(327,195,209)**	(326,522,434)
தவணைக் கடன்களில் இருந்து பெறப்பட்ட நிகர வருவாய்கள்	29	**15,494,249,151**	4,807,413,840
தொகுதிக்கடன்களின் மீட்பு	31.1	**(2,000,000,000)**	-
தொகுதிக்கடன் மீது செலுத்தப்பட்ட வட்டி	31.1	**(76,176,663)**	(311,500,000)
நிதி நடவடிக்கைகளில் இருந்து பெறப்பட்ட நிகர காசு		**13,090,877,279**	4,169,391,406
காசு மற்றும் காசுக்கு சமமானவைகளில் ஏற்பட்ட நிகர அதிகரிப்பு/. (குறைவு)		**(13,405,727,957)**	104,404,312
வருட ஆரம்பத்தின் போது இருந்த காசு அல்லது காசுக்கு சமமானவை		**43,570,748,513**	43,466,344,201
வருட இறுதியின் போது இருந்த காசு மற்றும் காசுக்கு சமமானவை		**30,165,020,556**	43,570,748,513
காசு மற்றும் காசுக்கு சமமானவைகள் இணக்கம்			
காசு மற்றும் காசுக்கு சமமானவை	18	**2,889,883,677**	1,486,878,989
வங்கிகளில் உள்ள சாதகமான மீதிகள்			
வங்கிகளில் உள்ள வைப்புக்கள்	19	**6,133,705,351**	6,596,072,932
3 மாதங்களுக்கு குறைந்த நிலையான வைப்புக்கள்	22.2	**21,726,025,221**	35,579,154,747
வங்கிகளுடனான சாதகமற்ற மீதிகள்		**(584,593,693)**	(91,358,155)
		30,165,020,556	43,570,748,513

அடைப்புக்குறிக்குள் உள்ள இலக்கங்கள் கழிவுகளைக் குறிப்பிடுகின்றன.

இந்த நிதிக் கூற்றுக்கள், இவ்வருடாந்த அறிக்கையின் 146 தொடக்கம் 229 வரையான குறித்துரைக்கப்பட்டுள்ள நிதிக் கூற்றுக்களின் ஒரு பகுதியாகும்.

நிதிக் கூற்றுக்களுக்கான குறிப்புகள்

1. பொதுத் தகவல்கள்

1.1 அறிக்கையிடும் தன்மை

1985ஆம் ஆண்டில் 15ஆம் இலக்க பிரதேச கிராமிய அபிவிருத்தி வங்கிகள் சட்டத்தின் கீழ், "பிரதேச கிராமிய அபிவிருத்தி வங்கிகள்" என்ற வகையின் கீழ், மாவட்ட மட்டத்திலான வங்கிகள் உருவாக்கப்பட்டதில் இருந்து ஆரம்பிக்கிறது. பின்னர், 1997ஆம் ஆண்டின் 06ஆம் இலக்க பிரதேச அபிவிருத்தி வங்கி சட்டத்தின் கீழ் 17 பிரதேச கிராமிய அபிவிருத்தி வங்கிகள், 06 மாகாண வங்கிகளாக ஒன்றிணைக்கப்பட்டன. (ரஜரட்டை, ருஹுண, வயம்ப, ஊவா, கந்துரட்ட மற்றும் சப்ரகமுவ அபிவிருத்தி வங்கி) 2008ஆம் ஆண்டின் 41ஆம் இலக்க பிரதேச அபிவிருத்தி வங்கி சட்டம் அறிமுகப்படுத்தப்பட்டதைத் தொடர்ந்து மேற்குறிப்பிட்ட 06 வங்கிகளும், 2010 மே மாதத்தில் பிரதேச அபிவிருத்தி வங்கி (பிராதேசிய சங்வர்தன வங்கி) என தேசிய நிறுவனமாக ஒன்றிணைக்கப்பட்டது. வங்கியின் பதிவு செய்யப்பட்ட அலுவலகம் இல. 933, கண்டி வீதி, வெதமுல்ல, களனி என்ற முகவரியில் அமைந்துள்ளது.

2022 டிசம்பர் 31இல் உள்ளவாறு வங்கியின் நிரந்தர, பயிற்சி பெறும் மற்றும் ஒப்பந்த அடிப்படையிலான ஊழியர்களின் எண்ணிக்கை 3,980 அகும். (2021 டிசம்பர் 31 இல் உள்ளவாறு 3,226 ஆகும்).

1.2 முதன்மை நடவடிக்கைகளும் செயற்பாடுகளின் தன்மையும்

நுண் நிதி நிறுவனங்கள் மற்றும் சிறிய மற்றும் நடுத்தர முயற்சியாளர்களுக்கு நிதியுதவியை வழங்குவதன் மூலம் விவசாயம், கைத்தொழில் துறை, வியாபாரம், வர்த்தகம், கால்நடை, மீன்பிடி மற்றும் மகளிர் மேம்பாடு என்பவற்றை விருத்தி செய்வதன் மூலம் நாட்டின் ஒட்டுமொத்த பொருளாதார அபிவிருத்திக்குப் பங்களிப்புச் செய்வதாகும்.

1.3 நிதிக் கூற்றுக்களுக்கான பணிப்பாளர்களின் பொறுப்பு

2008ஆம் ஆண்டின் 41ஆம் இலக்க பிரதேச அபிவிருத்தி வங்கி சட்டம் மற்றும் அதன் திருத்தங்கள், 1988ஆம் ஆண்டின் 30ஆம் இலக்க வங்கிச் சட்டம் மற்றும் அதன் திருத்தங்கள் மற்றும் கணக்கியல் நியமங்களுக்கு அமைவாக, நிதிக் கூற்றுக்கள் தயாரிக்கப்படுவதற்கும், சமர்ப்பிக்கப்படுவதற்கும் பணிப்பாளர் சபையே பொறுப்புடையதாகும்.

1.4 நிதிக் கூற்றுக்களை பணிப்பாளர் சபை அங்கீகரித்தல்

2022 டிசம்பர் 31இல் முடிவடைந்த ஆண்டுக்கான வங்கியின் நிதிக் கூற்றுக்கள், வெளியிடுவதற்காக பணிப்பாளர் சபையினால் 2023 ஜூன் 16ஆம் திகதி அங்கீகரிக்கப்பட்டது.

2. தயாரிப்புக்கான அடிப்படை

2.1 அளவீட்டுக்கான அடிப்படை

நிதிக் கூற்றுக்கள் பின்வரும் முக்கியமான விடயங்கள் தவிர, வரலாற்றுக் கிரய அடிப்படை மீது தயாரிக்கப்பட்டுள்ளன.

- வரையறை செய்யப்பட்ட அனுகூலக் கடப்பாட்டுக்கான பொறுப்பு, காப்பீட்டுக் கணிப்பீட்டு அடிப்படையில் மதிப்பிடப்பட்டு, வரையறை செய்யப்பட்ட அனுகூலக் கடப்பாட்டின் தற்போதைய பெறுமதியில் அங்கீகரிக்கப்பட்டுள்ளது.

- இலாபம் அல்லது நட்டம் (FVTPL) மூலம் நியாயப் பெறுமதி மற்றும் ஏனைய விரிவான வருமானம் (FVOCI) மூலம் நியாயப் பெறுமதியில் வைத்திருக்கும் வழித்தோன்றல் நிதிக் கருவிகள் மற்றும் வழித்தோன்றல் அல்லாத நிதிக் கருவிகள் நியாயப் பெறுமதியில் அளவிடப்படுகின்றன.

2.2 இணக்கக் கூற்று

2022 டிசம்பர் 31இல் முடிவடைந்த ஆண்டுக்கான நிதிக் கூற்றுக்கள் இலங்கை பட்டயக் கணக்காளர் நிறுவகத்தின் கணக்கியல் நியமங்களுக்கு அமைவாகவும் (SLFRSs/ LKASs) 1988ஆம் ஆண்டின் 30ஆம் இலக்க வங்கிச் சட்டம் மற்றும் அதன் திருத்தங்கள் ஆகியவற்றின் ஏற்பாடுகளுக்கு அமையவும், 2008 ஆம் ஆண்டின் 41 ஆம் இலக்க பிரதேச அபிவிருத்தி வங்கி சட்டம் மற்றும் அதன் திருத்தங்களுக்கு அமைவாகவும் தயாரிக்கப்பட்டுள்ளது. நிதிக் கூற்றுக்களின் சமர்ப்பணமும், 2008ஆம் ஆண்டின் 41ஆம் இலக்க பிரதேச அபிவிருத்தி வங்கி சட்டம் மற்றும் அதன் திருத்தங்களுக்கு அமைவாக மேற்கொள்ளப்பட்டது.

2.3 தொழிற்பாட்டு மற்றும் வெளிப்படுத்தல் நாணயம்

பிரதேச அபிவிருத்தி வங்கி செயற்படுகின்ற முதன்மை பொருளாதார சூழலில் இருக்கின்ற நாணயமாகிய இலங்கை ரூபாவிலேயே வங்கியின் நிதி அறிக்கைகள் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன. இலங்கை ரூபாவில் சமர்ப்பிக்கப்பட்ட நிதித் தகவல்கள் வேறு விதமாகக் குறிப்பிட்டால் அன்றி, அருகிலுள்ள ரூபாவுக்கு முழுமையாக்கப்பட்டுள்ளது.

2.4 பொருளளவான தன்மையும் ஒருங்கிணைப்பும்

LKAS 01 - "நிதிக் கூற்றுக்களைச் சமர்ப்பித்தல்" தொடர்பான விதியுடன் இணங்கி, ஒரே மாதிரியான விடயங்களைக் கொண்ட ஒவ்வொரு முக்கியமான வகுப்பும் நிதிக்

கூற்றுக்களில் வெவ்வேறாகச் சமர்ப்பிக்கப்பட்டு உள்ளது. ஒரே தன்மையற்ற விடயங்கள் அல்லது பணிகளும் அவை முக்கியமானதாகக் கருதப்படுகின்ற வேளை வெவ்வேறாகச் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன.

2.5 ஈடுகட்டுதல்

நிதிச் சொத்துக்களும், நிதிப் பொறுப்புக்களும் ஈடுகட்டப்படுவதுடன், தேறிய தொகை அங்கீகரிக்கப்பட்ட தொகைகளை ஈடுகட்டுவதற்கு தற்போது அமுலாக்கக்கூடிய சட்டபூர்வ உரிமை ஒன்று உள்ள போது மற்றும் அதனை நிகர அடிப்படையில் தீர்த்துக் கட்டுவதற்கு ஒரு மன எண்ணம் உள்ள போது அல்லது சொத்து மதிப்புப் பெறுகின்ற போது மற்றும் பொறுப்பையும் ஒரே நேரத்தில் தீர்த்துக்கட்டும் போது மாத்திரமே நிதிநிலைமைக் கூற்றில் பதிவு செய்யப்படும். ஏதேனும் கணக்கியல் தரநிலை அல்லது விளக்கத்தினால் தேவைப்படும் அல்லது அனுமதிக்கப்படா விட்டால், கணக்கியல் கொள்கைகளில் குறிப்பாக வெளிப்படுத்தப்படும் வரை வருமானம் மற்றும் செலவுகள் வருமான அறிக்கையில் ஈடுசெய்யப்பட மாட்டாது.

2.6 ஒப்பீட்டுத் தகவல்கள்

நடப்பு ஆண்டின் எடுத்துரைப்புடன் இணங்குவதற்கும், ஆண்டு மற்றும் காலாண்டு நிதியியல் கூற்றுக்களை வெளியிடுதல் மற்றும் சிறப்பான எடுத்துரைப்பினை வழங்கும் பொருட்டும், உரிமம் பெற்ற வங்கிகள் மூலம் வேறு வெளிப்படுத்தல்கள் மீது இலங்கை மத்திய வங்கியினால் வழங்கப்பட்ட 2019ஆம் ஆண்டின் 02ஆம் இலக்க சுற்றறிக்கைக்கு இணங்கியிருப்பதற்கும், அவசியமான போதெல்லாம் ஒப்பீட்டுத் தகவல்கள் மீள வகைப்படுத்தப்பட்டுள்ளன.

2.7 நிதிக் கூற்றுக்களைச் சமர்ப்பித்தல்

நிதிநிலைமைக் கூற்றில் சமர்ப்பிக்கப்பட்ட வங்கியின் விடயங்கள், அதன் இயல்பை அடிப்படையாகக் கொண்டு வகுப்பாக்கம் செய்யப்பட்டுள்ளதோடு, ஒப்பீட்டளவிலான திரவத்தன்மை மற்றும் முதிர்வு வடிவம் ஆகியவற்றைப் பிரதிபலிக்கக்கூடிய வகையில் பட்டியலிடப்பட்டுள்ளது. நிதிக் கூற்றுக்களைப் பாதிக்கும் பணவீக்கக் காரணிகளுக்காக சீராக்கங்கள் எதுவும் மேற்கொள்ளப்படவில்லை. அறிக்கையிடப்பட்ட திகதியின் பின்னர் 12 மாதங்களுக்குள் (நடப்பு) மீளப் பெற வேண்டிய அல்லது தீர்க்கப்பட வேண்டிய மற்றும் அறிக்கையிடப்பட்ட திகதியின் பின்னர் 12 மாதங்களுக்கு மேற்பட்ட (நடைமுறை அல்லாத) மீட்பு அல்லது தீர்வளித்தல் பற்றிய பகுப்பாய்வு குறிப்பு 43 இல் தரப்பட்டுள்ளது.

2.8 மாற்று வழி பரிகாரக் கூற்று (SoAT)

மேலும், வருமான வரிகள் மீது குறிப்பு 15 இன் கீழ் வெளிப்படுத்தப்பட்டவாறு, இலங்கை பட்டயக் கணக்காளர்கள் நிறுவனத்தினால் வழங்கப்பட்ட மாற்று வழி பரிகாரக் கூற்று மூலம் பரிந்துரைக்கப்பட்டவாறு 2022ஆம் ஆண்டின் 14ஆம் இலக்க மிகைக் கட்டண வரி சட்டத்தில் இருந்து தோன்றுகின்ற வரிப் பொறுப்புக் கணக்கில் கொள்ளப்பட்டுள்ளது.

3. மதிப்பீடுகள் மற்றும் தீர்ப்புகளின் பயன்பாடு

இலங்கை கணக்கியல் நியமங்களுக்கு அமைவாக, வங்கியினால் தயாரிக்கப்படுகின்ற நிதிக் கூற்றுக்கள் அறிக்கையிடப்பட்ட வருவாய், செலவுகள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புகள் மற்றும் அதனோடு தொடர்புடைய வெளிப்படுத்தல்கள் மற்றும் இடைநேர் விளைவான பொறுப்புகள் தொடர்பான வெளிப்படுத்தல்கள் தொடர்பாக அறிக்கையிடப்பட்ட தொகையைப் பாதிக்கக்கூடிய தீர்ப்புகள், மதிப்பீடுகள் மற்றும் அனுமானங்கள் ஆகியவற்றை மேற்கொள்ளுமாறு முகாமைத்துவத்தை தேவைப்படுத்துகிறது. இத்தகைய அனுமானங்கள் மற்றும் மதிப்பீடுகளின் நிச்சயமற்ற தன்மை எதிர்காலங்களில் பாதிக்கக்கூடிய சொத்து அல்லது பொறுப்புகளின் கொண்டு செல்லும் தொகையில் ஒரு முக்கியமான சீர்படுத்தலைத் தேவைப்படுத்தும் முடிவுகளை ஏற்படுத்தலாம்.

வங்கியின் கணக்கியல் கொள்கைகளைப் பிரயோகிக்கும் செயன்முறையில் முகாமைத்துவம் எதிர்காலத்தைக் கருத்திற் கொண்டு பின்வரும் தீர்ப்புகளையும், அனுமானங்களையும் மேற்கொண்டுள்ளது. மேலும், அடுத்துவரும் நிதியாண்டிற்குள் கொண்டு செல்லும் சொத்துக்கள், பொறுப்புகளின் தொகைகளில் முக்கியமான சீர்படுத்தலை ஏற்படுத்தும் குறிப்பான இடர் ஒன்றை ஏற்படுத்தக்கூடிய அறிக்கையிடும் திகதியில் உள்ள நிச்சயமற்ற தன்மையைத் தோற்றுவிக்கும் ஏனைய முக்கிய மூலங்களின் மதிப்பீட்டையும் முகாமைத்துவம் கருத்திற் கொண்டுள்ளது.
எதிர்கால அபிவிருத்தி பற்றி தற்போதுள்ள சூழ்நிலைகளும் அனுமானங்களும் வங்கியின் கட்டுப்பாட்டுக்கு அப்பாலுள்ள காரணிகளினால் மாறலாம். அத்துடன், அவை, ஏற்படுகின்ற சந்தர்ப்பங்களில் அனுமானங்கள் பிரதிபலிக்கப்படலாம்.

கணிசமான முகாமைத்துவத்தின் தீர்வு மற்றும் அல்லது அனுமானங்களுடன் நிதிக் கூற்றுக்களில் அங்கீகரிக்கப்படும் தொகை மீது அதிகமான தாக்கத்தை ஏற்படுத்தும் விடயங்கள் அது தலையிட்டுள்ள தீர்ப்புகள்/ மதிப்பீடுகள் தொடர்பில் கீழே தொகுக்கப்பட்டுள்ளன.

நிதிக் கூற்றுக்களுக்கான குறிப்புகள்

(i) தீர்வுகள்

(a) நிதியியல் சொதுத்துக்களை வகைப்படுத்தல்

சொத்துக்கள் வைக்கப்பட்டுள்ள தொழில் மாதிரியினை மதிப்பீடு செய்யும் போதும், நிதியியல் சொத்துக்களின் ஒப்பந்த நியதிகள், தனியே முதன்மைக் கொடுப்பனவுகளா அத்துடன் செலுத்த வேண்டிய முதன்மைத் தொகை மீதான வட்டியா (SPPI) என்பதனை மதிப்பீடு செய்யும் போதும் வங்கி தீர்வுகளைப் பயன்படுத்தியது.

(b) கடன் இடர் மதிப்பீடு

அனைத்து வகையான நிதிச் சொத்துக்கள் தொடர்பாகவும், SLFRS 9 இன் கீழ் வலுக் குறைப்புக்கான நட்டங்களின் மதிப்பீடு தீர்ப்பினைத் தேவைப்படுத்துகிறது. குறிப்பாக, வலுக்குறைப்பு நட்டங்களைத் தீர்மானிக்கும் போது, தொகையின் மதிப்பீடு மற்றும் எதிர்கால நிதிப் பாய்ச்சல்களின் காலம், பெறுமதிகளின் தொகுப்பு என்பனவும், கடன் இடரில் ஏற்பட்ட குறிப்பிடத்தக்க அளவின் அதிகரிப்பு பற்றிய மதிப்பீடும் தேவைப்படுத்தப்படுகின்றது. இந்த மதிப்பீடுகள் பல எண்ணிக்கையான காரணிகள் மற்றும் மாற்றங்களினால் இயக்கப்படும். இந்த மாற்றங்கள் அல்லது காரணிகள் பல்வேறுபட்ட மட்டங்களிலான கொடுப்பனவுகளைத் தோற்றுவிக்கும்.

வங்கியின் ECL கணக்கீடுகள் மாறக்கூடிய உள்ளீடுகள் மற்றும் அவற்றின் ஒன்றில் ஒன்று தங்கியிருக்கும் தன்மை ஆகியவற்றின் தெரிவு தொடர்பாக இருக்கக்கூடிய பல எண்ணிக்கையான அடிப்படையான அனுமானங்களுடனான சிக்கலான மாதிரிகளின் வெளிப்பாடுகளாகும். ECL மாதிரிகளின் கூறுகள் கணக்கியல் தீர்ப்புகளிலும், மதிப்பீடுகளிலும் கருத்திற் கொள்ளப்படும். அவை பின்வருவனவற்றை உள்ளடக்கும்.

- கடன் இடரில் குறிப்பிடத்தக்களவு அதிகரிப்பு இருக்குமாயின், வங்கியின் மதிப்பீட்டு அளவுகோலாக அமைவதுடன், நிதிச் சொத்துக்களுக்கான கொடுப்பனவுகள் LTECL அடிப்படையிலும், தர அடிப்படையிலான மதிப்பீட்டின் அடிப்படையிலும் அளவிடப்படும்.
- நிதிச் சொத்துக்களின் நுஊடு கூட்ட அடிப்படையில் மதிப்பிடப்படும் போது நிதிச் சொத்துக்கள் வெவ்வேறாக்கப்படும்.
- பல்வேறுபட்ட சூத்திரங்கள் மற்றும் உள்ளீடுகளின் தெரிவு உள்ளடங்கலாக நுஊடு மாதிரிகளின் அபிவிருத்தி, பெரும்பாக பொருளாதார சூழ்நிலைகள் மற்றும் தொழிலின்மை மட்டங்கள், பிணையப் பெறுமதிகள் மற்றும் PD க்கள், EAD க்கள் மற்றும் LGD க்கள் மீதான தாக்கம் போன்ற பொருளாதார உள்ளீடுகளுக்கு இடையில் உள்ள தொடர்பைத் தீர்மானித்தல்.
- முன்னோக்கிய பெரும்பாகப் பொருளாதார சூழ்நிலைகளையும், அவற்றின் நிகழ்தகவு அளவுகளையும் ECL மாதிரிகளுக்குள் பொருளாதார உள்ளீடுகளைப் பெற்றுக் கொள்வதற்காக தெரிவு செய்தல்.

(c) பொதுவான கட்டுப்பாட்டின் கீழ் வியாபார ஒன்றிணைப்புகள்

பொதுவான கட்டுப்பாட்டின் கீழ், நிறுவனங்களுக்கு இடையிலான வியாபார ஒன்றிணைப்புகள், நலன்களை ஒன்றுசேர்த்தல் முறையினைப் பயன்படுத்துவதற்காகக் கணக்கிடப்பட்டுள்ளன. அதற்கமைய, ஒன்றிணைக்கப்படுகின்ற நிறுவனங்களின் சொத்துக்களும், பொறுப்புக்களும், அவற்றின் கொண்டு செல்லும் தொகையில் பிரதிபலிக்கப்பட்டுள்ளன. ஒன்றிணைப்பின் விளைவாக, நன்மதிப்பு எதுவும் இனங்காணப்படவில்லை. ஏதேனும் செலுத்தப்பட்ட/ மாற்றப்பட்ட அத்துடன் வேண்டப்பட்ட பங்குரிமை மூலதனம், கைமாற்றுக்கு இடையிலான ஏதேனும் வேறுபாடு பங்குரிமை மூலத்திற்குள் எடுத்துக்காட்டப்பட்டுள்ளது.

வியாபார ஒன்றிணைப்பு தற்காலிக/மதிப்பிடப்பட்ட தொகைகளைப் பயன்படுத்த மேற்கொள்ளப்பட்டதுடன், நியாயமான காலப்பகுதியின் போது அமைந்திருந்தன. 2019 ஏப்ரல் 01 அன்றுள்ளவாறு, ஒன்றிணைக்கப்பட்ட சொத்துக்களையும், பொறுப்புக்களையும் மீள மதிப்பிடுவதற்கும், அதற்கேற்றவாறு ஒன்றிணைப்பு ஒதுக்கினைச் சீர்செய்வதற்கும் பிரதேச அபிவிருத்தி வங்கி வேண்டப்பட்டுள்ளது.

(ii) ஊகங்கள் மற்றும் மதிப்பீட்டு நிச்சயமின்மை

நிறுவனத்தின் தொடர்ந்து செல்லும் தன்மை வங்கியின் முகாமைத்துவம், வங்கி நிறுவனத்தின் தொடர்ந்து செல்லும் தன்மை என்ற அடிப்படையில் தொடர்ந்து செல்வதற்கான தகைமை பற்றி ஒரு மதிப்பீட்டை மேற்கொண்டுள்ளது. எதிர்வுகூறக்கூடிய எதிர்காலத்தில் வணிகத்தை கொண்டு நடத்தத் தேவையான வளங்களை வங்கி கொண்டுள்ளது என முகாமைத்துவம் திருப்தியடைகிறது. மேலும், வங்கியின் நிறுவனத் தொடர்ந்து செல்லும் தன்மை என்ற தகைமையில் முக்கியமான சந்தேகத்தை ஏற்படுத்தக்கூடிய எந்தவொரு பொருளளவான

நிச்சயத் தன்மை பற்றியும் முகாமைத்துவம் அறியாது. ஆகவே, நிதிக் கூற்றுக்கள் தொடர்ந்தும் நிறுவனத் தொடர்ச்சி அடிப்படையிலேயே தயாரிக்கப்பட்டுள்ளன.

நிதியியல் சாதனங்களின் சீர்மதிப்பீட்டுப் பெறுமதி

நிதியியல் சொத்துக்களினதும், நிதியியல் பொறுப்புக்களினதும் சீர்மதிப்புப் பெறுமதி, நிதியியல் நிலைக்கூற்றில் பதிவு செய்யப்படும் போது, செயற்பாடுமிக்க சந்தைகளில் இருந்து பெற்றுக்கொள்ள முடியாதிருப்பின், கணித மாதிரிகளைப் பயன்படுத்துதல் உள்ளடங்கலாக, பல்வேறு மதிப்பீட்டு நுட்பங்களைப் பயன்படுத்தி அவை தீர்மானிக்கப்படுகின்றன. இம்மாதிரிகளுக்கான உள்ளீடுகள் சாத்தியமான போது அவதானிக்கத்தக்க சந்தைகளில் இருந்து பெற்றுக்கொள்ளப்படுகின்றன. எனினும், அத்தகைய தரவுகள் கிடைக்கப் பெறாதிருப்பின், அவதானிக்க முடியாத உள்ளீடுகளின் பயன்பாட்டின் தாக்கத்தைக் குறைக்கின்ற சீர்மதிப்புப் பெறுமதிகளை உருவாக்குவதில் தீர்வு மட்டம் பிரயோகிக்கப்படுகின்றது.

வரி விதிப்பு

வங்கி வருமான வரிக்கு உட்பட்டதுடன், தீர்ப்பானது, நடப்பு ஒத்தி வைக்கப்பட்ட மற்றும் இந்த நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது பிரயோகத்தில் இருந்த வரிச் சட்டங்களின் பொருள்கோடல் தொடர்பாக இருந்த நிச்சயமற்ற தன்மைகளினால் ஏற்பட்ட ஏனைய வரிகள் என்பவற்றுக்கான மொத்த ஏற்பாட்டை தீர்மானிக்குமாறு தேவைப்படுத்துகிறது.

பரந்துபட்ட வகையிலான வியாபார உறவுகள் மற்றும் நீண்டகாலத் தன்மை, தற்போதுள்ள சிக்கலான ஒப்பந்தம் சார் உடன்படிக்கைகள், உண்மையான பெறுபேறுகள் மற்றும் மேற்கொள்ளப்பட்ட அனுமானங்களுக்கு இடையிலான வேறுபாடுகள் என்பன வருமான வரி மற்றும் செலவுகள மற்றும் ஒத்தி வைக்கப்பட்ட வரி என்பவற்றில் சீராக்கங்களை ஏற்படுத்தியதுடன், அவை இந்நிதிக் கூற்றுக்களின் குறிப்பு, 15, 27, மற்றும் 32 களில் பதிவு செய்யப்பட்டுள்ளன.

வரையறை செய்யப்பட்ட அனுகூலத் திட்டங்களின் அளவீடு

வரையறை செய்யப்பட்ட அனுகூலத் திட்டங்கள் மற்றும் அவற்றின் தற்போதைய பெறுமதி என்பன காப்பீட்டுக் கணிப்புப் பெறுமதியை அடிப்படையாகக் கொண்டு தீர்மானிக்கப்படுகின்றன. காப்பீட்டுக் கணிப்பு மதிப்பீட்டு முறை, கழிவு விகிதங்கள், சொத்துக்கள் மீதான எதிர்பார்க்கப்பட்ட திரும்பல் விகிதங்கள், எதிர்கால சம்பள அதிகரிப்புகள், இறப்பு விகிதங்கள் மற்றும் எதிர்கால ஓய்வூதிய அதிகரிப்பு ஆகியன தொடர்பில், அனுமானங்கள் மேற்கொள்வதை உள்ளடக்கும். இத்தகைய மதிப்பீடுகள் குறிப்பிடத்தக்களவு நிச்சயமற்ற தன்மையைக் கொண்டவை. அனைத்து அனுமானங்களும் ஒவ்வொரு அறிக்கையிடும் திகதியிலும் மீளாய்வு செய்யப்படும்.

பொருத்தமான கழிவு விகிதத்தைத் தீர்மானிப்பதற்கு, முகாமைத்துவம் வரையறை செய்யப்பட்ட அனுகூலக் கடப்பாட்டின் எதிர்பார்க்கப்பட்ட காலப்பகுதியுடன் தொடர்புடைய மேலதிக சேர்க்கப்பட்ட முதிர்வுகளுடன் இலங்கை அரசாங்க முறிகளுக்குரிய வட்டி விகிதங்களைக் கருத்திற் கொள்ளும்.

இறப்பு விகிதம், பொது மக்களுக்காக இருக்கக்கூடிய இறப்பு விகித அட்டவணைகளின் அடிப்படையில் அமைந்தவை. எதிர்கால சம்பள அதிகரிப்புகளும், ஓய்வூதிய அதிகரிப்புகளும் எதிர்பார்க்கப்பட்ட எதிர்கால பணவீக்க விகிதங்கள் மற்றும் வங்கியின் எதிர்பார்க்கப்பட்ட எதிர்கால சம்பள அதிகரிப்பு விகிதம் என்பவற்றை அடிப்படையாகக் கொண்டவை.

ஆதனம், ஆலை மற்றும் உபகரணங்களின் பயன்பாட்டுக் காலம்

வங்கி ஒவ்வொரு அறிக்கையிடும் திகதியிலும், சொத்துக்களின் எஞ்சிய பெறுமதிகள், பாவனைக் காலம் மற்றும் தேய்மான முறைகள் என்பனவற்றை மீளாய்வு செய்யும். இத்தகைய பெறுமதிகள், விகிதங்கள் மற்றும் முறைகளை மதிப்பீடு செய்வதில் முகாமைத்துவத்தின் தீர்ப்பு பிரயோகிக்கப்படும். எனவே, இவை நிச்சயமற்ற தன்மைக்கு உட்பட்டவை.

கடமைகளும் நிச்சயமின்மைகளும்

அனைத்து அறியக்கூடிய பொறுப்புகளுக்குமான தொகைகளைத் தீர்மானிக்கும் போது, அனைத்து காணக்கூடிய இடர்களும் கணக்கிடப்படும்.

நிச்சயமற்ற பொறுப்புகள், ஏதேனும் நிச்சயமற்ற எதிர்கால சம்பவங்கள் ஏற்படும் போது, அவற்றின் இருப்பு உறுதிப்படுத்துவதோடு, சாத்தியமான கடப்பாடுகள் எழும் அல்லது தற்போது இருக்கக்கூடிய கடப்பாடுகள் பொருளாதார அனுகூலம், சாத்தியமாக இல்லாத போது அல்லது உண்மையில் மதிப்பிட முடியாத போது கடப்பாடுகள் எழும். நிச்சயமற்ற பொறுப்புகள் நிதி நிலைமைக் கூற்றில் அங்கீகரிக்கப்பட மாட்டாது. ஆயின், அவை தொலைவில் இருந்தால் தவிர வெளிப்படுத்தப்பட மாட்டாது.

நிதிக் கூற்றுக்களுக்கான குறிப்புகள்

4. கணக்கீட்டுக் கொள்கைகளில் மாற்றம்

மாற்று வழியாக ஏறத்தாழ இடர்நேர்வற்ற வீதங்களைக் கொண்டு (வங்கிகளுக்கிடையில் முன்வைக்கப்பட்ட வீத சீரமைப்பு எனக் குறிப்பீடு செய்யப்படும்) சில வங்கிகளுக்கிடையில் முன்வைக்கப்பட்ட வீதங்களைப் பதிலீடு செய்து, முக்கிய வட்டி வீத அளவுகோலின் அடிப்படைச் சீரமைப்பு ஒன்று உலகளவில் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது. சந்தை முழுவதுமான இம்முயற்சிகளின் பாகம் ஒன்றாக மறுசீரமைக்கப்பட்டு வருகின்ற அதன் நிதியியல் சாதனங்கள் மீது, சில வங்கிகளுக்கிடையில் முன்வைக்கப்பட்ட வீதங்களுக்கு வங்கி ஆட்பட்டுள்ளது.

வட்டிவீத அளவுகோல் சீரமைப்பு கட்டம் 1 மற்றும் கட்டம் 2 காரணமாக இலங்கை பட்டயக் கணக்காளர்கள் நிறுவனம், இலங்கை நிதி அறிக்கைகள் நியமம் 9, இலங்கை கணக்கீட்டு நியமம் 39, இலங்கை நிதி அறிக்கைகள் நியமம் 7 என்பவற்றுக்கு திருத்தங்களை வழங்கியது. இது, வங்கிகளுக்கிடையில் முன்வைக்கப்பட்ட வீத சீரமைப்பு கட்டம் 1 மற்றும் கட்டம் 2 திருத்தங்களினதும், செயற்படும் திகதி இலங்கையின் பின்னணியில் 2021 ஜனவரி 01 அன்று மற்றும் அதன் பின்னர் தொடங்குகின்ற வருடாந்த அறிக்கையிடும் காலப்பகுதிகளுக்கானதுடன், கட்டம் 2 திருத்தங்களின் கீழான தேவைப்படுத்தல்கள் பின்நோக்கிப் பிரயோகிக்கப்படல் வேண்டும்.

வங்கிகளுக்கிடையில் முன்வைக்கப்பட்ட வீத சீரமைப்பின் விளைவாக, வங்கி ஆட்படுகின்ற முக்கிய இடர்நேர்வு தொழிற்பாடு சார்ந்தவையாகும். உதாரணமாக, வாடிக்கையாளர்களுடன் இருதரப்புப் பேச்சுவார்த்தை ஊடாக கடன் ஒப்பந்தங்களை மீளப் பேசித்தீர்த்தல், சீரமைப்பு மற்றும் ஒழுங்குமுறைப்படுத்தல், இடர்நேர்வுகள் தொடர்பில் ஒப்பந்த நியதிகளை இற்றைப்படுத்தல் மற்றும் தொழிற்பாட்டுக் கட்டுப்பாடுகளைத் திருத்துதல்.

நிதியியல் இடர்நேர்வானது, பெரும்பான்மையாக வட்டி வீத இடர்நேர்வுக்கு மட்டுப்படுத்தப்பட்டுள்ளது. அதன் நிதியியல் சாதனங்கள் மீது இச்சீரமைப்பில் இருந்து தோன்றுகின்ற தாக்கத்தினை மதிப்பீடு செய்வதற்கான செயன்முறையினை வங்கி ஆரம்பித்துள்ளது, இச்செயன்முறையானது, கடன்கள் மற்றும் முற்பணங்கள், கடன் கடமைப் பொறுப்புகள், பொறுப்புகள், மற்றும் வங்கிகளுக்கிடையில் முன்வைக்கப்பட்ட வீத காசுப் பாய்ச்சல் தொடர்புப் பெறுதிகள் என்பன ரீதியில் அத்தகைய ஒப்பந்தங்கள் வங்கிகளுக்கிடையில் முன்வைக்கப்பட்ட சீரமைப்பின் விளைவாக திருத்தப்பட வேண்டுமா, இணை தரப்பினர்களுடன் வங்கிகளுக்கிடையில் முன்வைக்கப்பட்ட சீரமைப்பு பற்றிய தொடர்பூட்டலை எவ்வாறு முகாமை செய்வது மற்றும் ஏற்கனவே காணப்படும் கொடுகடன் கொள்கைகளுக்கு தேவைப்பட்ட மாற்றங்கள் பற்றிய மதிப்பீடுகளை ஈடுபடுத்தும்.

2022 டிசம்பர் 31 அன்றுள்ளவாறு வங்கி ஆட்பட்டுள்ள சில முக்கிய நாணயங்களுக்கான வங்கிகளுக்கிடையில் முன்வைக்கப்பட்ட சீரமைப்புகள் (IBOR), சீரமைப்புச் செயன்முறையில் காணப்படுகின்றன.

5. குறிப்பிடத்தக்க கணக்கியல் கொள்கைகள்

கீழே குறித்துரைக்கப்பட்ட கணக்கியல் கொள்கைகள், அனைத்துக் காலப்பகுதிகளுக்கும் வங்கியினால் சமர்ப்பிக்கப்பட்ட நிதிக் கூற்றுக்களில் ஒருசீராகப் பயன்படுத்தப்பட்டுள்ளன. குறிப்பு 4 இல் விவரிக்கப்பட்டுள்ள கணக்கியல் கொள்கைகளில் மாற்றங்களைத் தவிர கணக்கியல் கொள்கைகள் வங்கியினால் தொடர்ந்து பயன்படுத்தப்படுகின்றன.

5.1 நிதிச் சொத்துக்களும் பொறுப்புக்களும்

5.1.1 ஆரம்ப அங்கீகரிப்பு மற்றும் அளவீடு

வாடிக்கையாளருக்குரிய கடன்கள் மற்றும் முற்பணங்கள் நீங்கலாக, நிதிச் சொத்துக்கள், பொறுப்புகள், வாடிக்கையாளருக்கு நிலுவையாக உள்ள மீதிகள் என்பன ஆரம்பத்தில் வியாபாரத் திகதியன்று அங்கீகரிக்கப்படும். அதாவது, வங்கி, குறித்த கருவியினுடைய ஒப்பந்தம்சார் ஏற்பாடுகளுக்கு வங்கி ஒரு திறத்தவராக வருகின்ற திகதி. இது, கிரமமான வழியிலான வியாபாரங்கள், சந்தையின் ஒழுங்கு விதி அல்லது ஒப்பந்தம் ஒன்றின் கீழ் பொதுவாக ஸ்தாபிக்கப்பட்ட கால எல்லைக்குள் சொத்துக்களின் விநியோகத்தை தேவைப்படுத்துகின்ற நிதிச் சொத்துக்களின் கொள்வனவு அல்லது விற்பனைகள் என்பனவற்றை உள்ளடக்கும். வாடிக்கையாளருக்கான கடன்களும் முற்பணங்களும் வாடிக்கையாளரின் கணக்குகளுக்கு நிதி மாற்றப்படும் போது அங்கீகரிக்கப்படும். வாடிக்கையாளருக்கு நிலுவையாக உள்ள மீதிகள் நிதி, வங்கிக்கு மாற்றப்படும் போது வங்கியினால் அங்கீகரிக்கப்படும்.

5.1.2 நிதிக்கருவிகளின் வகைப்பாடுகள்

ஆரம்ப அங்கீகரிப்பின் நிதிக் கருவிகளின் வகுப்பாக்கம் அவற்றின் ஒப்பந்தம்சார் நியதிகள் மற்றும் அந்தக் கருவிகளைக் கையாளுகின்ற வணிக மாதிரியில் தங்கியுள்ளது. FVTPL இல் பதிவு செய்யப்படும் நிதிச் சொத்துக்கள், நிதிப்

பொறுப்புகள் தவிர நிதிக் கருவிகள் ஆரம்பத்தில் அவற்றின் நியாயப் பெறுமதியில் அளவிடப்படும். பரிவர்த்தனை செலவுகள் இதனோடு சேர்க்கப்படும் அல்லது குறைக்கப்படும். வியாபார வரவுகள் பரிவர்த்தனை விலையில் அளவிடப்படும். ஆரம்ப அங்கீகரிப்பின் போது நிதிக் கருவிகளின் நியாயப் பெறுமதி பரிவர்த்தனை விலையில் இருந்து வேறுபடும் போது வங்கி முதல் நாள் இலாபம் அல்லது நட்டம் என கீழே
விபரிக்கப்பட்டவாறு கணக்கிடும்.

முதல் நாள் இலாபம் அல்லது நட்டம்

கருவி ஒன்றினுடைய பரிவர்த்தனை விலை ஆரம்பத்தில் நியாயப் பெறுமதியில் இருந்து வேறுபடுகின்ற போது மற்றும் நியாயப் பெறுமதி சந்தைப் பரிவர்த்தனைகளில் அவதானிக்கக்கூடிய உள்ளீடுகளை மாத்திரம் பயன்படுத்திய ஒரு மதிப்பீட்டு நுட்பத்தை அடிப்படையாகக் கொண்டிருக்குமாயின் வங்கி பரிவர்த்தனை விலைக்கும் நியாய விலைக்கும் இடையிலான வேறுபாட்டை தேறிய வியாபார வருமானத்தில் அங்கீகரிக்கும். சில உள்ளீடுகள் அவதானிக்கக் கூடியதாக இல்லாதிருந்து, அத்தகைய மாதிரிகளின் அடிப்படையில் நியாயப் பெறுமதி அமைகின்ற சந்தர்ப்பங்களில் பரிவர்த்தனை விலைக்கும் நியாயப் பெறுமதிக்கும் இடையிலான வேறுபாடு ஒத்தி வைக்கப்படுவதுடன், உள்ளீடுகள் அவதானிக்கக் கூடியதாக வருகின்ற போது அல்லது நிதிக் கருவி அங்கீகாரமற்றதாகின்ற போது மாத்திரமே வருமானக் கூற்று நட்டத்தில் அங்கீகரிக்கப்படும்.

5.1.2.1 நிதிச் சொத்துக்கள்

வங்கி சொத்துக்களையும் சொத்துக்களுடைய ஒப்பந்தம்சார் நியதிகளைக் கையாள்வதற்கு வணிக மாதிரி அடிப்படையில் அதனுடைய நிதிச் சொத்துக்கள் அனைத்தையும் வகுப்பாக்கம் செய்கிறது. அவற்றை பின்வரும் வழிகளில் அளவிடுகிறது.

- பதிவழிப்புச் செலவு (குறிப்பு 5.1.2.1.1)
- குறிப்பு 5.1.2.1.3 குறிப்பிட்டவாறு நிதிச் சொத்துக்கள் ஏனைய விரிவான வருமானம் ஊடாக நியாயப் பெறுமதியில் அளவிடப்படும்.
- குறிப்பு 5.1.2.1.2 குறிப்பிட்டவாறு இலாபம் அல்லது நட்டம் ஊடாக நிதிச் சொத்துக்கள் நியாயப் பெறுமதியில் (FVTPL) வகுப்பாக்கமானது, நிதிச் சொத்துக்களையும், நிதிச் சொத்துக்களின் நிதிப் பாய்ச்சல் தொடர்பான ஒப்பந்தம்சார் விதிகளையும் கையாளுகின்ற வணிக மாதிரியில் தங்கியுள்ளது.

இலாபம் ஊடாக நியாயப் பெறுமதியில் குறித்துரைக்கப்பட்ட பொறுப்புக்கள் இருந்தாலன்றி, வங்கி அதன் நிதிப் பொறுப்புக்களை பதிவழிப்புச் செலவில் வகுப்பாக்கம் செய்யும்.

5.1.2.1.1 வாடிக்கையாளர்களுக்கான கடன்களும் முற்பணங்களும், பதிவழிப்புச்செலவில் நிதிச் சொத்துக்கள்

பின்வரும் இரண்டு நிபந்தனைகளையும் பூர்த்தி செய்தால் மாத்திரமே, வங்கிகளிலிருந்து வரவேண்டிய நிலுவைகள் வாடிக்கையாளருக்கான கடன்கள் மற்றும் முற்பணங்கள் மற்றும் ஏனைய நிதி முதலீடுகளை பதிவழிப்புச் செலவில் வங்கி அளவிடும்.

- ஒப்பந்தம்சார் நிதிப் பாய்ச்சல்களைச் சேகரிக்கும் நோக்கத்திற்காக நிதிச் சொத்துக்களை வைத்திருக்கும் போது குறிப்பிட்ட நிதிச் சொத்து வணிக மாதிரிக்குள் வைத்திருக்கப்பட்டால்,
- நிலுவையாக உள்ள செலுத்த வேண்டிய முதன்மைத் தொகை மீது, முழுமையாகச் செலுத்தப்பட வேண்டிய முதல் மற்றும் வட்டியின் நிதிப் பாய்ச்சல்கள், நிதிச் சொத்தின் ஒப்பந்தம்சார் நியதிகள் வலுப்பெறுகின்ற போது.

இந்நிபந்தனைகளின் விபரங்கள் கீழே தரப்பட்டுள்ளன -

வணிக மாதிரி மதிப்பீடு

வங்கி அதன் வணிக மாதிரியை, தனது வணிகக் குறிக்கோளினை அடைவதற்கு நிதிச் சொத்துக்களின் குழுமங்களை எவ்வாறு வங்கி கையாளுகின்றது என்பதை சிறந்த அளவில் வெளிப்படுத்தக்கூடிய மட்டத்தில் தீர்மானிக்கும்.

வங்கி அதன் வியாபார மாதிரியை, ஒவ்வொரு கருவியின் அடிப்படையிலும் மதிப்பிடாது. ஆயின், மொத்த தரவறிக்கைகளை உயர்மட்ட அளவில் அளவிடுகிறது. இந்த அளவீடு பின்வரும் அவதானிக்கத்தகு காரணிகளை அடிப்படையாகக் கொண்டன.

- வியாபார மாதிரி மற்றும் அவ் வியாபார மாதிரிக்குள் வைத்திருக்கப்படும் நிதிச் சொத்துக்கள் என்பவற்றின் செயற்திறன் எவ்வாறு மதிப்பிடப்படுகிறது மற்றும் நிறுவனத்தின் முக்கிய முகாமைத்துவ ஆட்களுக்கு எவ்வாறு அறிக்கையிடப்படுகிறது.
- வணிக மாதிரி உடைய செயற்திறனைப் பாதிக்கக்கூடிய இடர்களும் (மற்றும் அவ் வியாபார மாதிரிக்குள் வைத்திருக்கப்படும் நிதிச் சொத்துக்களும்) அத்துடன், குறிப்பாக

எவ்வகையில் இவ் இடர்கள் கையாளப்படுகின்றன.

- வணிக முகாமையாளர்களுக்கு எவ்வாறு நட்டஈடு செலுத்தப்படுகிறது. (உதாரணமாக. நட்டஈடு முகாமைத்துவம் செய்யப்படும் சொத்துக்களின் நியாயப் பெறுமதியின் அடிப்படையில் வழங்கப்படுகிறதா அல்லது சேகரிக்கப்பட்ட ஒப்பந்தம்சார் நிதிப் பாய்ச்சல்களின் அடிப்படையிலா)
- வங்கியின் மதிப்பீட்டில் விற்பனைகளின் எதிர்பார்க்கப்பட்ட அதிர்வெண் பெறுமதி மற்றும் கால நேரம் என்பனவும் முக்கியமான அணுகுமுறைகளாகும்.

வணிக மாதிரி மதிப்பீடு "மோசமான சம்பவம் அல்லது அழுத்தமான சம்பவம" போன்ற சூழ்நிலைகளைக் கருத்திற் கொள்ளாது, நியாயமாக எதிர்பார்க்கப்படும் சூழ்நிலைகளை அடிப்படையாகக் கொண்டது. ஆரம்ப அங்கீகாரத்தின் பின்னர், வங்கியின் ஆரம்ப எதிர்பார்ப்புக்களை விட வேறுவிதமாக நிதிப் பாய்ச்சல்கள் மதிப்புப் பெறுகின்ற போது, வங்கி வணிக மாதிரிக்குள் வைத்திருக்கப்படும் எஞ்சிய நிதிச் சொத்துக்களின் வகுப்பாக்கத்தை மாற்றாது, ஆயின், அத்தகைய தகவலை புதிதாக உருவாகின்ற அல்லது முன்னோக்கிச் செல்கின்ற, புதிதாகக் கொள்வனவு செய்யப்பட்ட நிதிச் சொத்துக்களோடு கூட்டிணைக்கும்.

ஒப்பந்தப் பணப்புழக்கங்கள் அசல் மற்றும் வட்டிக்கு மட்டுமே செலுத்தப்படுகிறதா என்பதை மதிப்பீடு செய்தல்

வங்கியின் வகுப்பாக்க செயன்முறையில் இரண்டாவது கட்டமாக வங்கி, நிதிச் சொத்துக்களின் ஒப்பந்தம்சார் நியதிகளை அவை SPPI பரீட்சையைப் பூர்த்தி செய்கின்றனவா என்பதை இனங்காண மதிப்பீடு செய்யும்.

இப்பரீட்சையின் நோக்கத்திற்காக, ஆரம்ப அங்கீகரிப்பின் போது, நிதிச் சொத்து ஒன்றின் நியாயப் பெறுமதிக்காக முதன்மை என வரையறை செய்யப்பட்டவை, நிதிச் சொத்து ஒன்றின் வாழ்காலத்தின் போது மாற்றமடையலாம். (உதாரணமாக, முதன்மைத் தொகைக்கு மீள் கொடுப்பனவுகள் உள்ள போது அல்லது கட்டுப்பணம்/ கழிவின் பதிவழிப்பு உள்ளபோது).

கடன் ஏற்பாடு ஒன்றுக்குள் உள்ள வட்டி ஒன்றின் மிக முக்கியமான கூறுகள், பணம் மற்றும் கடன் இடரின் கால நேரப் பெறுமதிக்கான பிரதிபயனாகும். SPPI மதிப்பீட்டை மேற்கொள்வதற்கு, வங்கி தீர்ப்பு மற்றும் குறிப்பிட்ட நிதிச் சொத்து எந்த நாணயத்தில் மதிப்பிடப்பட்டுள்ளதோ, அதைப் போன்ற பொருத்தமான காரணிகள் மற்றும் வட்டி தீர்மானிக்கப்பட்ட காலப்பகுதி போன்ற விடயங்களைக் கருத்திற் கொள்ளும்.

இதற்கு முரணாக, ஒரு அடிப்படைக் கடன் ஏற்பாடு ஒன்றுடன் தொடர்புபடாத ஒப்பந்தம்சார் நிதிப் பாய்ச்சல்களில் ஏற்ற இறக்கங்களை அல்லது குறிப்பிட்ட இடர்களின் வெளிப்பாட்டைக் குறைப்பதைவிட வேறு விதமாக அறிமுகப்படுத்தப்படும் ஒப்பந்தம்சார் நியதிகள், நிலுவையாக உள்ள தொகை மீது முழுமையாகச் செலுத்தப்படும் முதல் மற்றும் வட்டி என்பவற்றின் ஒப்பந்தம்சார் நிதிப்பாய்ச்சலுக்கு வலுத் தராதது. அத்தகைய சூழ்நிலைகளில் நிதிச் சொத்து ஒன்று FVTPL இல் அளவிடப்பட வேண்டும்.

5.1.2.1.2 இலாபம் அல்லது நட்டம் ஊடாக நிதிச் சொத்துக்களின் நியாயப் பெறுமதி

இலாபம் அல்லது நட்டம் ஊடாக நிதிச் சொத்துக்களின் நியாயப் பெறுமதி பின்வருவனவற்றை சமரசம் செய்யும் :

- நிதி முதலீடுகள் - வியாபாரத்திற்காக,
- முதல் மற்றும் இலாபக் கொடுப்பனவுகளை முழுமையாகப் பிரதிபலிக்காத ஒப்பந்தம்சார் நியதிகளுடனான கருவிகள்

இலாபம் அல்லது நட்டம் ஊடாக, நியாயப் பெறுமதியில் வைத்திருக்கப்படும் நிதிக் கருவிகள், ஆரம்பத்தில் இலாபம் அல்லது நட்டக் கூற்றில் உறப்பட்ட அங்கீகரிக்கப்பட்ட பரிவர்த்தனைச் செலவுகளுடன் நியாயப் பெறுமதியில் அங்கீகரிக்கப்படும். இதனையடுத்து, இவை, நியாயப் பெறுமதியில் அளவிடப்பட்டு, அவை ஏற்படுகின்ற ஒவ்வொரு சந்தர்ப்பத்திற்கு ஏற்றவாறு ஏதேனும் இலாபங்கள் அல்லது நட்டங்கள் இலாப அல்லது நட்டக் கூற்றில் அங்கீகரிக்கப்படும்.

நிதிச் சொத்து ஒன்று, நியாயப் பெறுமதியில் அளவிடப்படுகின்ற போது, கடன் இடர்களுக்குக் காரணமாக அமைகின்ற நியாயப் பெறுமதியின் நகர்வைப் பிரதிநிதித்துவப்படுத்தக்கூடிய எதிர் திறத்தவருடைய கடன் தகுதியைப் பிரதிபலிக்கக்கூடிய வகையில் ஒரு கடன் மதிப்பீட்டு சீர்படுத்தல் உள்ளடக்கப்படும்.

நிதி முதலீடுகள் - வியாபாரத்திற்காக

ஒரு நிதி முதலீடானது, மிக அண்மைய தவணையில் விற்பனை அல்லது மீள் கொள்வனவை முதன்மை நோக்கமாகக் கொண்டு கையகப்படுத்தி அல்லது உறப்பட்டிருந்தால், அந்த நிதிச் சொத்துக்கள் இலாபம் அல்லது நட்டத்தின் ஊடாக அங்கீகரிக்கப்பட்ட நிதிச் சொத்துக்களாக வகுப்பாக்கம் செய்யப்படும் அல்லது ஒன்றாகக் கையாளப்படுகின்ற நிதிக் கருவிகளின் போட்போலியோவின் ஒரு பகுதியாக

அமைவதோடு, அதற்கு ஒரு குறுங்கால இலாபம் பெறும் என்பதற்கான சான்று ஒன்று இருத்தல் வேண்டும், அல்லது, இது, சமாளிக்கக்கூடிய தொடர்பு ஒன்றாகத் தகுதி பெறாத வழித்தோன்றலாக அமையும்.

பங்குரிமைப் பிணையங்களிலான முதலீடு, இலாபம் அல்லது நட்டம் ஊடாக அங்கீகரிக்கப்பட்ட நிதிச் சொத்துக்களாக வகுப்பாக்கம் செய்யப்படுவதோடு, நியாயப் பெறுமதியில் அங்கீகரிக்கப்படும். குறிப்பு 20ஐப் பார்க்க.

இலாபம் அல்லது நட்டம் ஊடாக நியாயப் பெறுமதியில் மதிப்பிடப்பட்ட குறித்துரைக்கப்பட்ட நிதிக் கருவிகள்

ஆரம்ப அங்கீகாரத்தினைத் தொடர்ந்து, நிதிக் கருவிகள் இலாபம் அல்லது நட்டம் ஊடாக நியாயப் பெறுமதியில் அளவிடப்பட்டதாகக் குறித்துரைக்கப்படலாம். அவ்வாறு மேற்கொள்வது, அளவீட்டை நீக்குவதாக அல்லது குறிப்பிடத்தக்களவு குறைப்பதாக அல்லது நிதிச் சொத்துக்களை அல்லது பொறுப்புக்களை வித்தியாசமான அடிப்படையின் மீது அளவிடுகின்ற போது, வேறு வகையில் எழுகின்ற அங்கீகாரம் அல்லது முரண்பாடுகள் (அதாவது, ஒரு கணக்கியல் பொருத்தப்பாடு இன்மையை நீக்குதல்) இருக்குமிடத்து, நிதிச் சொத்து ஒன்று, இலாபம் அல்லது நட்டம் ஊடாக நியாயப் பெறுமதியில் மாத்திரம் குறித்துரைக்கப்படும். வங்கி, இந்த வகைக்குள் எந்த நிதிக் கருவிகளையும் குறித்துரைக்காது.

5.1.2.1.3 ஏனைய விரிவான வருமானம் ஊடாக நியாயப் பெறுமதியில் அளவிடப்பட்ட நிதிச் சொத்துக்கள்

வியாபாரம் அல்லாத நிதிச் சொத்துக்களாகக் கருதப்படும் பங்குரிமைக் கருவிகளிலான முதலீடு, இலாபம் அல்லது நட்டம் ஊடாக அங்கீகரிக்கப்பட மாட்டாது அல்லது "வணிகக் கலவை" என்ற SLFRS 03 இன் கீழ் வணிகக் கலவையாக வங்கி, ஒரு எதிர்பாராத பிரதிபயனாக அங்கீகரிக்காது.
இத்தகைய கருவிகள் நீண்டகாலத் தன்மை உடைய முதலீடு காரணமாக, முகாமைத்துவத்தினால் மீளப் பெற முடியாத தெரிவு ஒன்று மேற்கொள்ளப்பட்டிருக்குமிடத்து, இவை, ஏனைய விரிவான வருமானம் ஊடாக நியாயப் பெறுமதியில் அளவிடப்படும். ஏனைய விரிவான வருமானம் ஊடாக நியாயப் பெறுமதியை மீட்க முடியாத தெரிவு ஒன்றைத் தழுவுகின்ற
கடன் கலவைகளை முகாமைத்துவம் கருத்திற் கொள்ளாத போது அத்தகைய முதலீடுகள் இலாபம் மற்றும் நட்டம் ஊடாக நியாயப் பெறுமதியில் அளவிடப்படும்.

ஏனைய விரிவான வருமானக் கணக்கில் வெளிப்படுத்தப்பட்ட தொகைகள், இலாபம் அல்லது நட்டத்திற்கு உடனடியாக மாற்றப்படாது. அத்தகைய முதலீடுகள் மீதான பங்குலாபங்கள் இலாபம் அல்லது நட்டத்தில் அங்கீகரிக்கப்படும். இவ்வகையான பங்குரிமைக் கருவிகளுக்கான இலாபங்கள் அல்லது நட்டங்கள் ஒருபோதும் இலாபத்திற்கு மீள சுழற்சி செய்யப்பட மாட்டாது. வங்கி, குறிப்பிட்ட கருவியின் உடைய செலவின் ஒரு பகுதியை அத்தகைய வருவாய்களில் இருந்து மீளப் பெறும் அனுகூலங்களைப் பெறுகின்ற சந்தர்ப்பம் தவிர, கொடுப்பனவுக்கான உரிமை ஒன்று ஸ்தாபிக்கப்படுகின்ற போது, பங்கிலாபங்கள், தேறிய வியாபார இலாபங்கள்/நட்டங்களாக வருமானக் கூற்றில் அங்கீகரிக்கப்படும். வங்கி, அனுகூலங்களைக் கருவியொன்றின் செலவில் ஒரு பகுதியாகப் பெறகின்ற போது, அத்தகைய பெறுவனவுகள் OCI இல் பதியப்படும். FVOCI இல் உள்ள பங்குரிமைக் கருவிகள் வலுக்குறைப்பு மதிப்பீடு ஒன்றுக்கு உட்பட்டது அல்ல.

5.1.2.2 நிதிப் பொறுப்புகள்

நிதிப் பொறுப்புகளின் ஆரம்ப அல்லது உடனடுத்த அளவீடு கீழே விபரிக்கப்பட்டவாறு அவற்றின் வகுப்பாக்கத்தில் தங்கியுள்ளது.

வங்கி அதன் தோற்றத்தில் வங்கியின் நிதிப் பொறுப்புகளின் வகுப்பாக்கத்தைத் தீர்மானிக்கும். இதற்கமைய நிதிப் பொறுப்புக்கள் பின்வருமாறு வகைப்படுத்தப்பட்டுள்ளன

- இலாபம் அல்லது நட்டம் ஊடாக நியாயப் பெறுமதியில் நிதிப் பொறுப்புகள் (FVTPL) (குறிப்பு 5.1.2.2.1)

1. வியாபாரத்திற்காக வைத்திருக்கப்படும் நிதிப் பொறுப்புகள்
2. இலாபம் அல்லது நட்டம் ஊடாக நியாயப் பெறுமதியில் குறித்துரைக்கப்பட்ட நிதிப் பொறுப்புகள்

- பதிவழிப்புச் செலவில் நிதிப் பொறுப்புகள் (குறிப்பு 5.1.2.2.2)

நிதிப் பொறுப்புகளின் உடனடுத்த அளவீடு அவற்றின் வகுப்பாக்கத்தில் தங்கியுள்ளது.

5.1.2.2.1 இலாபம் அல்லது நட்டம் ஊடாக நியாயப் பெறுமதியில் நிதிப் பொறுப்புகள் (FVTPL)

FVTPL இல் உள்ள நிதிப் பொறுப்புகள் வியாபாரத்திற்காக வைத்திருக்கப்படும் நிதிப் பொறுப்புகளையும், இலாபம் அல்லது நட்டம் ஊடாக நியாயப் பெறுமதியில் ஆரம்ப அங்கீகாரத்தின் ஊடாகக் குறித்துரைக்கப்பட்ட பொறுப்புகளையும் உள்ளடக்கும். ஆரம்ப அங்கீகாரத்தை அடுத்து, நிதிப் பொறுப்புகள், FVTPL இல் நியாயப் பெறுமதியாகவும், அவற்றில் ஏற்படும் மாற்றங்கள் இலாப அல்லது நட்டத்தில் அங்கீகரிக்கப்படும்.

நிதிக் கூற்றுக்களுக்கான குறிப்புகள்

நிதிப் பொறுப்புகள், அண்மைய தவணையில் மீள் கொள்வனவு அல்லது விற்பனை செய்யும் நோக்கத்திற்காக கையகப்படுத்தப்பட்டுள்ள போது அல்லது குறுங்கால இலாபத்திற்காக அல்லது அவற்றின் நிலையை எடுப்பதற்காக போட்போலியோவில் ஒரு பகுதியாக வைத்திருக்கப்படுகின்ற போது, வியாபாரத்திற்காக வைத்திருக்கப்படும் நிதிப் பொறுப்புகள் என வகைப்படுத்தப்படும். இந்த வகை, நிதிக்கருவிகளின் அங்கீகாரம் மற்றும் அளவீடுகள் மீதான LKAS 39 - இலங்கை கணக்கியல் நியமங்களில் Hedging தொடர்புகள் என வரையறை செய்யப்பட்ட Hedging கருவிகள் எனக் குறித்துரைக்கப்படாத வங்கியினால் ஈடுபடுத்தப்பட்ட வழித்தோன்றல் நிதிக் கருவிகளில் உள்ளடங்கும்.

வேறாக்கப்பட்ட உட்புகுத்தப்பட்ட வழித்தோன்றல்கள் வினைத்திறனான Hedging கருவிகள் எனக் குறித்துரைக்கப்படாத வரை வியாபாரத்திற்காக வைத்திருக்கப்படும் நிதிக் கருவிகள் என வகுப்பாக்கம் செய்யப்படும். வியாபாரத்திற்காக வைத்திருக்கப்படும் இலாபங்கள் அல்லது நட்டங்கள் வருமானக் கூற்றில் அங்கீகரிக்கப்படும்.

இவ்வகையைச் சார்ந்த எந்தவொரு நிதிப் பொறுப்பையும் வங்கி கொண்டிருக்கவில்லை.

5.1.2.2.2 பதிவழிப்புச் செலவில் நிதிப் பொறுப்புகள்

இலாபம் அல்லது நட்டம் ஊடாக நியாய விலையில் குறித்துரைக்கப்படாத, வங்கியினால் வழங்கப்பட்ட நிதிக் கருவிகள், பொருத்தமான வகையில் "வாடிக்கையாளர்கள் மற்றும் ஏனைய கடன்கள் காரணமாக" என்பதன் கீழ் பதிவழிப்புச் செலவில் பொறுப்பாக வகைப்படுத்தப்படும். இங்கு ஒப்பந்த ஏற்பாட்டின் சாராம்சம், வங்கி நிதிச் சொத்தை வைத்திருப்பவருக்கு பணத்தை அல்லது நிதிச் சொத்து ஒன்றினைத் தருகின்ற கடப்பாடு ஒன்றினை ஏற்படுத்தும் அல்லது அத்தகைய கடப்பாட்டை ஒரு நிலையான பணத்தொகையைப் பரிமாற்றம் செய்வதன் மூலம் அல்லது பயனுள்ள வட்டி வீதம் (EIR) முறைமையைப் பயன்படுத்தி பதிவழிப்புச் செலவில் ஒரு நிலையான சொந்தப் பங்குரிமைப் பங்குகளுக்காக இன்னுமொரு நிதிச் சொத்தை வழங்குவதைத் தவிர்ந்த ஏனைய வகையில் கடப்பாடுகளைப் பூர்த்தி செய்தல் ஆகும்.

ஆரம்ப அங்கீகாரத்தின் பின், இத்தகைய நிதிப் பொறுப்புகள் EIR முறையைப் பயன்படுத்தி பதிவழிப்புச் செலவில் அளவிடப்படும். பதிவழிப்புச் செலவைக் கணக்கிடும் போது, பயனுள்ள வட்டி வீதத்தின் (EIR) ஒரு முக்கியமான பகுதியாக அமைகின்ற செலவுகள் மற்றும் அத்தகைய வழங்குகையின் ஏதேனும் கழிவு அல்லது கட்டுப்பணம் என்பன கருத்திற் கொள்ளப்படும். EIR பதிவழிப்பு வருமானக் கூற்றில் "வட்டிச் செலவுகள்" என்பதற்குள் உள்ளடக்கப்படும். பொறுப்புகள் அங்கீகாரமற்றதாக்கப்படும் போது EIR பதிவழிப்புச் செயன்முறை ஊடாக இலாபங்களும், நட்டங்களும் வருமானக் கூற்றில் பதியப்படும்.

இவ்வகை வங்கிகளுக்கு நிலுவையாக உள்ள தொகைகள் ஏனைய வாடிக்கையாளர்களுக்கு நிலுவையாக உள்ளவை மற்றும் வழங்கப்பட்ட கடன், பெறப்பட்ட கடன் நிதி என்பவற்றை உள்ளடக்கும்.

5.1.2.3 நிதிச் சொத்துக்களையும் பொறுப்புக்களையும் மீள் வகுப்பாக்கம் செய்தல்

வங்கி ஆரம்ப அங்கீகாரத்தை அடுத்து, நிதிச் சொத்துக்களைக் கையகப்படுத்துகின்ற போது, நீக்குகின்ற போது அல்லது ஒரு வியாபாரப் பகுதியை முடிவுறுத்துகின்ற போது ஆகிய சந்தர்ப்பங்கள் தவிர ஏனைய சந்தர்ப்பங்களில் அதன் நிதிச் சொத்துக்களை மறுவகுப்பாக்கம் செய்யாது. நிதிப் பொறுப்புகள் ஒருபோதும் மறுவகுப்பாக்கம் செய்யப்படுவதில்லை. வங்கி 2022ஆம் ஆண்டில் அதன் எந்தவொரு நிதிச் சொத்தையோ அல்லது பொறுப்பையோ மறுவகுப்பாக்கம் செய்யவில்லை.

5.1.2.4 நிதிச் சொத்துக்களையும் நிதிப் பொறுப்புக்களையும் அங்கீகாரமற்றதாக்குதல்

நியதிகள் மற்றும் நிபந்தனைகளில் ஏற்பட்ட கணிசமான மாற்றம் காரணமாக அங்கீகாரமற்றதாக்குதல்.

வலுக்குறைப்பு நட்டம் ஒன்று ஏற்கனவே பதியப்படாத அளவுக்கு இலாபம் அல்லது நட்டம் ஒன்றை அங்கீகாரமற்றதாக்கும் போது ஏற்படுகின்ற வேறுபாட்டின் அங்கீகாரத்துடன் வாடிக்கையாளர் ஒருவருக்கான கடனின் நியதிகளும், நிபந்தனைகளும் மீள் பேச்சுவார்த்தைக்கு உட்பட்டு, கணிசமான அளவில் ஒரு புதிய கடனாக வருகின்ற போது, வங்கி, நிதிச் சொத்து ஒன்றினை அங்கீகாரமற்றதாகும். புதிதாக அங்கீகரிக்கப்பட்ட கடன்கள், புதிய கடன், POCI ஆக கருதப்படாத வரை ECL அளவீட்டு நோக்கங்களுக்காக கட்டம் 01 ஆக வகைப்படுத்தப்படும்.

வாடிக்கையாளர் ஒருவருக்கான கடனை அங்கீகரிப்பதா, இல்லையா என்பதைத் தீர்மானிப்பதில் வங்கி, ஏனைய காரணிகளுடன் பின்வரும் விடயங்களையும் கருத்திற் கொள்ளும்.

- கடனின் நாணயத்தில் மாற்றம்
- புதிய பங்குரிமை அம்சம் ஒன்றை அறிமுகப்படுத்தல்
- எதிர்திறத்தவரில் மாற்றம்
- கருவிக்கு மேற்கொள்ளப்படும் திருத்தமானது SPPI அளவு கோலை ஒருபோதும் பூர்த்தி செய்யாது.

கணிசமான அளவில் வேறுபடுகின்ற நிதிப் பாய்ச்சல்களில் இந்தத் திருத்தமானது, வேறுபாட்டை ஏற்படுத்தாத போது, இத்திருத்தமானது, அங்கீகாரமற்றுள்ளதை உருவாக்காது. ஆம்ப EIR இல் கழிவு செய்யப்பட்ட நிதிப் பாய்ச்சல்களில் ஏற்படும் மாற்றங்களை அடிப்படையாகக் கொண்டு, வங்கி, ஏற்கனவே வலுக்குறைப்பு நட்டம் ஒன்று பதிவு செய்யப்படாத அளவுக்கு திருத்தத்தை இலாபம் அல்லது நட்டமாகப் பதியும்.

கணிசமான திருத்தத்திற்கு அப்பாற்பட்ட ஏனைய விடயங்களை அங்கீகாரமற்றதாக்குதல்

நிதிச் சொத்துக்கள்

நிதிச் சொத்து ஒன்றில் இருந்து பெறவேண்டிய நிதிப் பாய்ச்சலுக்கான உரிமை காலாவதியாகும் போது நிதிச் சொத்து (அல்லது பொருத்தமான இடங்களில் நிதிச் சொத்தின் ஒரு பகுதி அல்லது ஒத்த நிதிச் சொத்துக் குழுவின் ஒரு பகுதி) அங்கீகாரமற்றதாக்கப்படும். வங்கி நிதிச் சொத்து ஒன்றைப் பரிமாற்றியுள்ள போதும் அந்தப் பரிமாற்றம் அங்கீகாரமற்றதாக்குதலுக்கு தகுதி பெறுகின்ற போது வங்கி நிதிச் சொத்து ஒன்றை அங்கீகாரமற்றதாக்கும்.

வங்கி நிதிச்சொத்து ஒன்றை பின்வரும் இரண்டு சந்தர்ப்பங்களில் ஏதாவது ஒரு சந்தர்ப்பத்தில் பரிமாற்றியுள்ளது.

- நிதிச் சொத்து ஒன்றில் இருந்து நிதிப் பாய்ச்சல்களைப் பெறவேண்டிய அதன் ஒப்பந்தம்சார் உரிமைகளை மாற்றியுள்ளது.

அல்லது

- நிதிப் பாய்ச்சலுக்கான உரிமையை வங்கி தக்க வைத்துக் கொண்டுள்ளது. ஆயின், மூன்றாம் திறத்தவர் ஒருவருக்கு "கடந்து செல்லல்" என்ற ஏற்பாட்டின் கீழ் பொருளளவான தாமதம் இன்றி பெறப்பட்ட நிதிப் பாய்ச்சலை முழுமையாகச் செலுத்த வேண்டிய கடப்பாடு உள்ளது என்பதை அனுமானிக்கின்றது.

கடந்து செல்லல் ஏற்பாடுகள் என்பது, நிதிச் சொத்து ஒன்றின் "ஆரம்பச் சொத்து" நிதிப் பாய்ச்சலைப் பெறும் ஒப்பந்த உரிமைகளை வங்கி தக்க வைத்துக்கொள்ளும் பரிவர்த்தனைகள் ஆகும். ஆயின், பின்வரும் அனைத்து நிபந்தனைகளும் பூர்த்தி செய்யப்படும் சந்தர்ப்பங்களில் அத்தகைய நிதிப் பாய்ச்சல்களை ஒன்று அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட (இறுதிப் பெறுநர்கள்) நிறுவனங்களுக்குச் செலுத்த வேண்டிய ஒப்பந்தம்சார் கடப்பாடு உள்ளது என்பதை அனுமானிக்கிறது.

- வங்கி, ஆரம்பச் சொத்துக்களில் இருந்து அதற்குச் சமமான தொகைகளை, வழங்கப்பட்ட தொகைகளை முழுமையாக மீட்டெடுக்கும் உரிமையுடன் குறுங்கால முற்பணங்களைத் தவிர்த்து சந்தை விலைகளில் உள்ள திரண்ட வட்டிகளைச் சேர்த்து சேகரிக்காத வரை இறுதிப் பெறுநர்களுக்கு தொகைகளைச் செலுத்த வேண்டிய கடப்பாடு வங்கிக்கு இல்லை.
- வங்கி ஆரம்பச் சொத்தினை இறுதிப் பெறுநர்களுக்கு பிணையமாக வழங்குவதைத் தவிர விற்கவோ அல்லது அடகு வைக்கவோ முடியாது.
- வங்கி பொருளளவான தாமதமின்றி இறுதிப் பெறுநர்கள் சார்பாகச் சேகரிக்கும் எந்தவொரு நிதிப் பாய்ச்சலையும் அனுப்பி வைத்தல் வேண்டும்.

சேகரிக்கும் திகதிக்கும், இறுதிப் பெறுநர்களுக்கு அனுப்பி வைக்கப்படும் திகதிக்கும் இடைப்பட்ட காலப்பகுதிகளில் சம்பாதிக்கப்பட்ட வட்டி உள்ளடங்கலாக, காசு மற்றும் காசுக்குச் சமமானவைகளுக்கான முதலீடுகள் தவிர வங்கி அத்தகைய நிதிப் பாய்ச்சல்களை மீள் முதலீடு செய்ய உரித்துடையது அல்ல.

ஒரு பரிமாற்றமானது, பின்வரும் இரண்டில் ஒரு சந்தர்ப்பத்தில் மாத்திரம் அங்கீகாரம் அற்றதாக்குதலுக்குத் தகுதி பெறும் :

- சொத்தினுடைய அனைத்து இடர்களையும், வெகுமதிகளையும் வங்கி கணிசமான அளவில் மாற்றுதல்.

அல்லது,

- வங்கி சொத்தின் அனைத்து இடர்களையும், வெகுமதிகளையும் மாற்றாது அல்லது தக்க வைக்காமல் இருத்தல். ஆயின், சொத்தினுடைய கட்டுப்பாட்டை மாற்றியிருத்தல்.

கைமாற்றிப் பெறுபவர் குறிப்பிட்ட சொத்தை முழுமையாக தொடர்புபடாத மூன்றாம் திறத்தவர் ஒருவருக்கு விற்பனை செய்வதற்கான நடைமுறை ரீதியான தகைமை

உள்ள போதும், அந்த தகைமையை ஒரு பக்கமாக பிரயோகிப்பதற்கு இயலுமாக இருக்கும் போதும் குறிப்பிட்ட கைமாற்றத்தின் மீது எவ்வித மேலதிக மட்டுப்பாடுகளையும் விதிக்காமல் விற்பனை செய்யப்படக்கூடிய சாத்தியம் உள்ள போது மாத்திரமே வங்கி கட்டுப்பாட்டு மாற்றம் பற்றிக் கருத்திற் கொள்ளும்.

வங்கி சொத்து ஒன்றின் அனைத்து இடர்களையும், வெகுமதிகளையும் கணிசமான அளவில் மாற்றாமல் அல்லது தக்க வைக்காமல் அத்துடன், சொத்தின் கட்டுப்பாட்டைத் தொடர்ந்து வைத்திருக்கும் போது, வங்கியின் தொடர்ச்சியான தலையீட்டின் அளவு வரை மாத்திரமே சொத்து தொடர்ந்து அங்கீகரிக்கப்படும். இத்தகைய சூழ்நிலையில் வங்கி அதனுடன் தொடர்புபட்ட பொறுப்பையும் அங்கீகரிக்கும். கைமாற்றப்பட்ட சொத்து மற்றும் அதனுடன் தொடர்புபட்ட பொறுப்பு என்பன, வங்கி தக்க வைத்துள்ள உரிமைகள் மற்றும் கடப்பாடுகள் என்பவற்றைப் பிரதிபலிக்கக்கூடிய அடிப்படையில் அளவிடப்படும். கைமாற்றப்பட்ட சொத்தின் மீதான உத்தரவாத அடிப்படையிலான வங்கியின் தொடர்ச்சியான தலையீடு, சொத்தின் ஆரம்ப எடுத்துச் செல்லும் தொகையைவிடக் குறைந்த தொகையில் அளவிடப்படும். அத்துடன், பிரதிபயனின் அதிகூடிய தொகையை மீளச் செலுத்துமாறு வங்கி தேவைப்படுத்த படலாம். கைமாற்றப்பட்ட சொத்தின் தொடர்ச்சியான தலையீடு ஒரு எழுதப்பட்ட அல்லது கொள்வனவு செய்யப்பட்ட தெரிவு (அல்லது இரண்டும்) அடிப்படையில் இருக்கும் போது, மீள் கொள்வனவு மீது வங்கி செலுத்த தேவைப்படுத்தப்படும் தொகையில் சொத்தின் தொடர்ச்சியான தலையீடு அளவிடப்படும். சொத்தின் மீது ஒரு எழுதப்பட்ட தெரிவு அடிப்படையிலான சந்தர்ப்பத்தில் அது நியாயப் பெறுமதியில் அளவிடப்படுவதுடன், நிறுவனத்தின் தொடர்ச்சியான தலையீட்டின் அளவு கைமாற்றப்பட்ட சொத்தின் நியாயப் பெறுமதியை விடக் குறைந்த பெறுமதிக்கும் தெரிவு பிரயோக விலைக்கும் மட்டுப்படுத்தப்படும்.

நிதிப் பொறுப்புகள்

நிதிப் பொறுப்பு ஒன்றின் கடப்பாடு பூர்த்தி செய்யப்படுகின்ற போது, இரத்துச் செய்யப்படும் போது அல்லது காலாவதியாகின்ற போது அந்நிதிப் பொறுப்பு அங்கீகாரம் அற்றதாக்கப்படும். தற்போதுள்ள நிதிப் பொறுப்பு ஒன்று அதே கடன் தருநரிடம் இருந்து கணிசமான அளவில் மாறுபட்ட நியதிகளுடன் இன்னுமொரு பொறுப்பினால் பதிலீடு செய்யப்படும் போது அல்லது தற்போதுள்ள பொறுப்பின் நியதிகள் கணிசமான அளவு திருத்தப்படும் போது அத்தகைய பரிமாற்றம் அல்லது திருத்தம் ஆரம்ப பொறுப்பினுடைய ஒரு அங்கீகாரமற்றதாக்குதலாகக் கருதப்படுவதுடன், ஒரு புதிய பொறுப்பாக அங்கீகரிக்கப்படும். ஆரம்ப நிதிப் பொறுப்பினுடைய கொண்டு செல்லும் பெறுமதிக்கும், செலுத்தப்பட்ட பிரதிபயனுக்கும் இடையிலுள்ள வேறுபாடு வருமானக் கூற்றில் அங்கீகரிக்கப்படும்.

5.1.2.5 சேத நட்டம்

ECL இன் அங்கீகாரம்

வங்கி FVPL இல் வைத்திருக்கின்ற அனைத்துக் கடன்கள் மற்றும் ஏனைய கடன் நிதிச் சொத்துக்கள் என்பவற்றை இந்தப் பகுதியில் "நிதிக் கருவிகள்" எனக் குறிப்பிடப்பட்டுள்ள கடன் கடப்பாடுகள் மற்றும் நிதி உத்தரவாத ஒப்பந்தங்கள் என்பவற்றுடன் வருகின்ற அனைத்து விடயங்களுக்கும் எதிர்பார்க்கப்பட்ட கடன் நட்டங்களுக்கான கொடுப்பனவைப் பதிவு செய்து வருகின்றது. பங்குரிமைக் கருவிகள் SLFRS 9 இன் கீழ் வலுக்குறைப்புக்கு உட்பட்டவை அல்ல.

12 மாதகால ECL, LTECL களின் ஒரு பகுதியாக அமைவதோடு, அவை அறிக்கையிடும் திகதியின் பின்னர் 12 மாதங்களுக்குள் ஒரு சாத்தியமான நிதிக் கருவி ஒன்றின் மீது தவறுகை நிகழ்வுகளில் இருந்து எழுகின்ற ECL களைப் பிரதிபலிக்கும்.

LTECL மற்றும் 12 மாதங்கள் ECL என்பன நிதிக் கருவிகளின் அடிப்படையாக அமைகின்ற போட்போட்போலியோவின் இயல்பின் அடிப்படையில் தனித்தனியாகவோ அல்லது கூட்டாகவோ கணக்கிடப்படும். வங்கியினுடைய நிதிச் சொத்துக்களை குழுமப்படுத்தி, கூட்டான அடிப்படையில் எவ்வாறு அளவிடுவது என்பது பற்றி கீழே விளக்கமளிக்கப்பட்டுள்ளது. நிதிக்கருவி ஒன்றின் எஞ்சிய வாழ்காலத்தில் இடர் தவறுகை மீது ஏற்படுகின்ற மாற்றத்தைக் கருத்திற் கொள்வதன் மூலம், நிதிக் கருவி ஒன்றின் கடன் இடர் அதன் ஆரம்ப அங்கீகரிப்பில் இருந்து கணிசமான அளவு அதிகரித்துள்ளதா என்பதை மதிப்பிடுவதற்கு ஒவ்வொரு அறிக்கையிடும் காலப்பகுதியின் இறுதியிலும் மதிப்பீடு ஒன்றை மேற்கொள்வதற்கான கொள்கை ஒன்றை வங்கி ஸ்தாபித்துள்ளது.

மேலே குறிப்பிட்ட செயன்முறையின் கீழ் வங்கி அதன் கடன்களை கீழே விபரிக்கப்பட்டவாறு கட்டம்-1, கட்டம்-2, கட்டம்-3, POCI என குழுமப்படுத்தியுள்ளது.

கட்டம் 1 : கடன்கள் முதல் முறையாக அங்கீகரிக்கப்படும் போது, வங்கி, அதற்கான கொடுப்பனவை 12 மாத ECL அடிப்படையில் அங்கீகரிக்கும். கட்டம் 1 க்குள் வருகின்ற கடன்கள், கடன் இடர் மேம்பட்டுள்ள வசதிகளும், கட்டம் 2 இலிருந்து மறு வகுப்பாக்கம் செய்யப்பட்ட கடன்களையும் உள்ளடக்கும்.

கட்டம் 2 : அதன் தோற்றத்தில் இருந்து கடன் ஒன்று அதன் கடன் இடரில் குறிப்பிடத்தக்க அதிகரிப்புக் காட்டினால், வங்கி LTECL க்காகக் கொடுப்பனவைப் பதிவு செய்யும். கட்டம் 2 வருகின்ற கடன்கள், கடன் இடர் மேம்பட்டுள்ள வசதிகளும் கட்டம் 3 இல் இருந்து மறுவகுப்பாக்கம் செய்யப்பட்ட கடன்களையும் உள்ளடக்கும்.

கட்டம் 3 : கடன் வலுக் குறைக்கப்பட்ட கடன்கள், வங்கி, LTECL க்காக கொடுப்பனவைப் பதிவு செய்யும்.

POCI : கொள்வனவு செய்யப்பட்ட அல்லது கடன் வலுக்குறைப்பில் இருந்து தோன்றிய சொத்துக்கள் ஆரம்ப அங்கீகாரத்தின் மீது கடனுக்காக வலுக்குறைப்பு செய்யப்பட்ட நிதிச் சொத்துக்கள் ஆகும். POCI சொத்துக்கள் அதன் ஆரம்ப அங்கீகாரத்தின் போது நியாயப் பெறுமதியில் பதிவு செய்யப்படுவதுடன், அதனை அடுத்து அதனுடைய வட்டி வருமானம் EIRக்கு சீராக்கப்பட்ட கடன் அடிப்படை மீது அங்கீகரிக்கப்படும். எதிர்பார்க்கப்பட்ட கடன் நட்டங்களில் உடனடுத்த மாற்றம் ஒன்று ஏற்படும் அளவுக்கு மாத்திரமே ECL கள் அங்கீகரிக்கப்படும் அல்லது விடுவிக்கப்படும். அறிக்கையிடும் திகதியில் வங்கி எந்தவொரு POCI சொத்துக்களையும் கொண்டிருக்கவில்லை.

நிதிச் சொத்துக்கள் ஒன்றினுடைய முழுமையான நிலுவைத் தொகையையோ அல்லது அதன் ஒரு பகுதியையோ மீட்பதற்கு வங்கிக்கு நியாயமான எதிர்பார்ப்புகள் இல்லாத நிதிச் சொத்துக்களுக்காக அந்த நிதிச் சொத்தின் மொத்த கொண்டு செல்லும் தொகை குறைக்கப்படும். இது, நிதிச் சொத்து ஒன்றினை (பகுதியளவில்) அங்கீகாரமற்றதாக்குதலாகக் கருதப்படும்.

ECL களை கணக்கிடுதல்

EIR க்குக் கிட்டிய வகையில் தள்ளுபடி செய்யப்பட்ட எதிர்பார்க்கப்பட்ட நிதிப் பற்றாற்குறைகளை அளவிடுவதற்கு, வங்கி ஒரு நான்கு நிகழ்தகவு எடையுள்ள சூழ்நிலைகளின் அடிப்படையில் கணக்கிடும். ஒரு நிதிப் பற்றாக்குறை என்பது நிறுவனம் ஒன்றுக்கு ஒப்பந்தம் ஒன்றுக்கு அமைவாக வரவேண்டிய நிதிப் பாய்ச்சலுக்கும் நிறுவனம் ஒன்று பெற எதிர்பார்க்கும் நிதிப் பாய்ச்சலுக்கும் இடையில் உள்ள வேறுபாடு ஆகும்.

நுஊடு கணக்கீடுகளின் பொறிமுறைகள் கீழே தரப்பட்டுள்ளன. அவற்றின் முக்கியமான கூறுகள் பின்வருமாறு:

PD : தவறுகைகளின் நிகழ்தகவு என்பது, ஒரு தரப்பட்ட கால எல்லைக்குள் தவறுகை ஒன்று ஏற்படுவதற்கான சாத்தியத்தன்மையின் ஒரு மதிப்பீடாகும். குறிப்பிட்ட வசதி ஒன்று ஏற்கனவே அங்கீகரிக்கப்படாமல் இன்னும் கடன் கலவையில் இருக்குமாயின், ஒரு தவறுகையானது, மதிப்பீடு செய்யப்பட்ட காலப்பகுதியில் ஒரு குறிப்பிட்ட நேரத்தில் மாத்திரம் ஏற்படலாம்.

EAD : தவறுகையின் வெளிப்பாடு என்பது, அறிக்கையிடும் திகதியின் பின்னர் வெளிப்படுத்தலில் எதிர்பார்க்கப்படும் மாற்றங்களைக் கருத்திற் கொள்வதோடு, முதல் மற்றும் வட்டியை மீளச் செலுத்துதல் உள்ளடங்கலாக, ஒரு எதிர்கால தவறுகை திகதியில் ஏற்படும் வெளிப்பாட்டின் ஒரு மதிப்பீடு ஆகும். இது, ஒப்பந்தம் மூலமாகவோ அல்லது வேறு வகையிலோ திட்டமிடப்பட்டு செலுத்த உத்தரவாதமளிக்கப்பட்ட வசதிகளில் எதிர்பார்க்கப்பட்ட இறக்கங்கள் மற்றும் தவறவிடப்பட்ட செலுத்துகையில் இருந்து பெறுகின்ற சிறந்த வட்டியையும் உள்ளடக்கும்.

LGD : இழப்பு தரப்பட்ட தவறுகை என்பது, தவறுகை ஒன்று குறிப்பிட்ட நேரத்தில் நடைபெறுகின்ற போது, அதிலிருந்து ஏற்படுகின்ற நட்டத்தை மதிப்பிடுதல் ஆகும். இது, ஏதேனும் பிணையம் ஒன்றின் மதிப்பு பெறுதலில் இருந்து பெறப்படும் தொகை உள்ளடங்கலாக நிலுவையான ஒப்பந்தம்சார் நிதிப் பாய்ச்சலுக்கும், கடன் வழங்குநர் பெற எதிர்பார்க்கும் தொகைக்கும் இடையிலான வேறுபாடு ஆகும். இது வழமையாக EAD உடைய விகிதாசாரமாக வெளிப்படுத்தப்படுகிறது.

ECLகளை மதிப்பிடும் போது வங்கி மூன்று சூழ்நிலைகளைக் கருத்திற் கொள்ளும். அவையாவன, அடிப்படை சம்பவம், சிறந்த சம்பவம் மற்றும் மோசமான சம்பவம் என்பனவாகும்.
இந்த ஒவ்வொரு சூழ்நிலையின் பல்வேறுபட்ட PDக்கள் EADக்கள் மற்றும் LGDக்கள் என்பவற்றுடன் தொடர்புபட்டன. பொருத்தமான இடங்களில் பலதரப்பட்ட சூழ்நிலைகளின் மதிப்பீடு தவறவிடப்பட்ட கடன்கள் எவ்வாறு மீளப் பெறுவதற்கு எதிர்பார்க்கப்படுகிறது என்பதையும் கூட்டிணைத்துக் கொள்ளும். மேலும், இது, கடன்களை எவ்வாறு செலுத்தித் தீர்க்கலாம்
என்பதையும், பிணையத்தை, மதிப்பை அல்லது சொத்து ஒன்றை விற்பனை செய்வதன் மூலம் பெற வேண்டிய தொகை என்பவற்றையும் உள்ளடக்கும்.
நிதிச் சொத்துக்கான கொண்டு செல்லும் பெறுமதிக்கு ஒரு சீராக்கமாக, கணக்குக் காட்டப்பட்ட இலாபங்கள் அல்லது நட்டங்களில் இருந்து ஏற்படுகின்ற திருத்தங்களில் இருந்து வேறாக வலுக்குறைப்பு நட்டங்கள் மற்றும் விடுபாடுகள் கணக்கில் காட்டப்பட்டு பிரத்தியேகமாக வெளிப்படுத்தப்படும்.

நிதிக் கூற்றுக்களுக்கான குறிப்புகள்

ECL முறையின் பொறிமுறைகள் கீழே சாராம்சமாகத் தரப்பட்டுள்ளன:

கட்டம் 1 : 12 மாதகால ECL, LTECL களின் ஒரு பகுதியாகும். அவை, அறிக்கையிடும் திகதியின் பின்னர் 12 மாதங்களுக்குள் சாத்தியமான நிதிக் கருவி ஒன்றின் மீது தவறுகை நிகழ்வுகளில் இருந்து எழுகின்ற ECL களைப் பிரதிபலிக்கும். வங்கி 12mECLக்கான கொடுப்பனவை அறிக்கையிடும் திகதியைத் தொடர்ந்து 12 மாதகாலப் பகுதிக்குள் நடைபெறும் ஒரு தவறுகையின் எதிர்பார்ப்பு மீது தங்கி நின்று கணக்கிடும். இந்த எதிர்பார்க்கப்பட்ட 12 மாத தவறுகை நிகழ்தகவுகள், ஒரு எதிர்வுகூறப்படும் EAD க்குப் பிரயோகப்படுவதுடன், எதிர்பார்க்கப்பட்டு LGD ஆல் பெருக்கப்பட்டு ஆரம்ப EIR உடைய ஒரு அண்ணளவான தொகையினால் தள்ளுபடி செய்யப்படும். இந்தக் கணக்கீடானது, மேலே விளக்கப்பட்ட மூன்று சூழ்நிலைகளில் ஒவ்வொரு சூழ்நிலைக்கும் மேற்கொள்ளப்படும்.

கட்டம் 2 : கடன ஒன்று அதன் தோற்றத்தில் இருந்து கடன் இடரில் ஒரு குறிப்பிடத்தக்க அதிகரிப்பைக் காட்டுகின்ற போது, வங்கி LTECL க்காக கொடுப்பனவு ஒன்றைப் பதிவிடும். இதன் பொறிமுறைகளும் மேலே கூறப்பட்ட பொறிமுறைகளை ஒத்தவைகளாகும். இது, பலதரப்பட்ட சூழ்நிலைகளின் பயன்பாட்டையும் உள்ளடக்கும். ஆயின், PDக்கள் மற்றும் LGDக்கள் கருவியின் ஆயுள்காலத்தின் மீது மதிப்பிடப்படும். எதிர்பார்க்கப்பட்ட நிதிப் பற்றாக்குறைகள் ஆரம்ப EIR உடைய ஒரு அண்ணளவிற்குத் தள்ளுபடி செய்யப்படும்.

கட்டம் 3 : கடன் வலுக்குறைப்பாகக் கருதப்பட்ட கடன்களுக்காக, வங்கி ஆயுள் காலம் முழுவதும் எதிர்பார்க்கப்பட்ட கடன் இழப்புகளை அங்கீகரிக்கும். இதற்குரிய முறைமை கட்டம் 2 இனுடைய சொத்துக்களுக்கான முறைமையை ஒத்தது. இது PD 100% அமைக்கப்பட்டுள்ளது.

POCI : POCI சொத்துக்கள் என்பது, ஆரம்ப அங்கீகாரத்தின் மீது கடன் வலுக்குறைப்பு செய்யப்பட்ட நிதிச் சொத்துக்களாகும். வங்கி, ஆரம்ப அங்கீகாரத்தில் இருந்து ஆயுள் கால ECLகளில் திரண்ட மாற்றங்களை மாத்திரமே அங்கீகரிக்கும். இது, EIRக்கு சீராக்கப்பட்ட கடனில் இருந்து தள்ளுபடி செய்யப்பட்டு, நான்கு சூழ்நிலைகளின் நிகழ்தகவு எடை அடிப்படையில் மேற்கொள்ளப்படும். அறிக்கையிடும் திகதியில் வங்கி எந்தவித POCI சொத்துக்களையும் கொண்டிருக்கவில்லை.

நிதி உத்தரவாத ஒப்பந்தங்கள்: கடன் மற்றும் மீட்கப்படாத கடப்பாட்டை உள்ளடக்கிய கடன் அட்டைகள் மற்றும் சுழற்சி வசதிகள் என்பவற்றுக்கு நுஊடு கள் கணக்கிடப்படுவதுடன், கடன்களுடன் சேர்த்து சமர்ப்பிக்கப்படும். கடன் கடப்பாடுகளுக்கு ECLகள் ஏற்பாட்டுக்குள்ளேயே அங்கீகரிக்கப்படும்.

தனித்தனியாக முக்கியம் பெறும் கடன்களுக்கான ECL கணக்கீடுகள்

வங்கி அதற்குத் தனித்தனியாக முக்கியத்துவம் பெறும் நிதிச் சொத்துக்களுக்காக, தனித்தனியாக ECL களை முதலில் கணக்கிடும். இத்தகைய சொத்துக்கள் வலுக்குறைப்புச் செய்யப்படவில்லை எனத் தீர்மானிக்கும் சந்தர்ப்பங்களில் (கட்டம் 3 இல் இல்லாத) வங்கி, குறிப்பிட்ட சொத்தை ஒத்த கடன் இடர் பண்புகளைக் கொண்ட நிதிச் சொத்துக்களின் குழுமம் ஒன்றில் உள்ளடக்குவதுடன், வலுக்குறைப்புக்காக அவற்றைக் கூட்டாக மதிப்பீடு செய்யும். எனினும், வலுக்குறைப்புக்காக தனித்தனியாக மதிப்பிடப்பட்ட சொத்துக்களுக்கு, வலுக்குறைப்பு நட்டம் இருப்பின் அல்லது தொடர்ந்து அங்கீகரிக்கப்பட்டு வரின் அவை, வலுக்குறைப்புக்கான கூட்டு மதிப்பீட்டில் உள்ளடக்கப்பட மாட்டாது.

சொத்து ஒன்று வலுக்குறைப்புச் செய்யப்பட்டு, நிதிச் சொத்து ஒன்றின் ஆரம்பப் பயனுள்ள வட்டி விகிதத்தில் இருந்து எதிர்பார்க்கப்பட்ட எதிர்கால நிதிப் பாய்ச்சலைத் தள்ளுபடி செய்வதன் மூலம், நட்டமடைகின்ற தொகை மதிப்பிடப்பட்டால், அதிலிருந்து பெறப்படுகின்ற தற்போதைய பெறுமதி நிதிச் சொத்தினுடைய கொண்டு செல்லும் தற்போதைய பெறுமதியுடன் ஒப்பிடப்படும். தனித்தனியாக முக்கியத்துவம் வாய்ந்த கணக்குகள் மீதான வலுக்குறைப்பு சூழ்நிலைகள் தேவைப்படும் சந்தர்ப்பங்களில் அடிக்கடி மீளாய்வு செய்யப்படும். இது, சாதாரணமாக, ஏதேனும் வைத்திருக்கப்படும் பிணையத்தில் அமுல்படுத்துகையின் மீள் மதிப்பீடு, நேரம், உண்மையான மற்றும் எதிர்பார்க்கப்படும் வரவுகளின் தொகை என்பவற்றை உள்ளடக்கியது. தனித்தனியாக மதிப்பீடு செய்யப்பட்ட வலுக்குறைப்புகள், ஸ்தாபிக்கப்பட்ட நட்ட மதிப்பீட்டில் குறைவு ஏற்படுவதற்கான நியாயமான மற்றும் புறநிலைத்தன்மையுடைய சான்று ஒன்று உள்ளபோது மட்டுமே வெளியிடப்படும். வலுக்குறைப்பு செய்யப்பட்ட சொத்துக்கள் மீதான வட்டி தள்ளுபடி விலக்கப்படுவதன் மூலம் தொடர்ந்து அங்கீகரிக்கப்பட்டு வருகிறது.

தனித்தனியாக முக்கியத்துவம் பெறும் நிதிச் சொத்துக்களுக்கு ECL கள் தீர்மானிக்கப்படும் போது, பின்வரும் காரணிகள் கருத்திற் கொள்ளப்படும்:

- ஏதேனும் மீட்கப்படாத வெளிப்பாடுகளை உள்ளடக்கிய வாடிக்கையாளருக்கான மொத்த வெளிப்பாடு.
- வாடிக்கையாளரின் வணிக மாதிரியின் சாத்தியத்தன்மை மற்றும் நிதிச் சிரமங்களுக்கு அப்பால் வியாபாரத்தைக் கொண்டு நடத்தக்கூடிய அவர்களின் தகைமை மற்றும் சேவைக் கடன் கடப்பாடுகளுக்கு போதுமான நிதிப் பாய்ச்சல்களை ஈட்டுதல்.
- எதிர்பார்க்கப்படும் வரவுகள் மற்றும் மீட்புகளின் தொகையும் காலமும்
- ஏனைய கடன் வழங்குநர்களின் முன்னால் வருகின்ற கடமைகளின் தர வரிசை அல்லது ஒரே நேரத்தில் வங்கியுடன் இணையாக, ஏனைய கடன் வழங்குநர்களின் வங்கிக்கு தொடர்ந்து ஆதரவளிப்பதற்காக சந்தர்ப்பம்.
- மொத்தத் தொகையைத் தீர்மானிப்பதில் ஏற்படும் சிக்கல் மற்றும் அனைத்து கடன் கோரிக்கைகளையும் தர வரிசைப்படுத்துதல் மற்றும் எந்தளவிற்கு சட்ட மற்றும் காப்புறுதி நிச்சயமற்ற தன்மைகள் தெளிவாக உள்ளன.
- பாதுகாப்பின் மதிப்புப் பெறக்கூடிய பெறுமதி (அல்லது ஏனைய கடன் தணிப்புகள்) மற்றும் வெற்றிகரமான மீள் உடமை கொள்வதற்கான சாத்தியம்.
- நிலுவையாக உள்ள தொகைகளை மீட்டெடுப்பதில் தொடர்புபட்ட ஏதேனும் செலவுகளைக் கழித்தல்.
- உள்நாட்டு நாணயத்தில் குறித்துரைக்கப்படா விட்டால், கடன் பெறப்பட்ட நாணயத்தில் கொடுப்பனவுகளைப் பெற்றுக்கொள்வதற்கும் செலுத்துவதற்குமான கடன் பெறுநரின் திறமை மற்றும்
- கம்பனி கலைப்பு அல்லது நொடிப்பு நிலையில் கிடைக்கும் பங்கிலாபம்.

OCI ஊடாக நியாயப் பெறுமதியில் அளவிடப்பட்ட கடன் கருவிகள்

FVOCIஇல் கடன் கருவிகளுக்காக அளவிடப்பட்ட ECL கள் இந்நிதிச் சொத்துக்களின் கொண்டு செல்லும் பெறுமதியை நிதி நிலைமைக் கூற்றில் குறைக்காது, அதன் நியாயப் பெறுமதியிலேயே தொடர்ந்து இருக்கும். இதற்குப் பதிலாக குறிப்பிட்ட சொத்துக்கள், அதன் பதிவழிப்புச் செலவில் அளவிடப்பட்டால், அதிலிருந்து பெறப்படும் கொடுப்பனவுக்கு ஒரு சமமான தொகை OCI இல் ஒரு திரண்ட வலுக்குறைப்புத் தொகையாக வருமானக் கூற்றில் அதனுடன் தொடர்புபட்ட ஒரு கட்டணமாகப் பதியப்படும். OCI இல் அங்கீகரிக்கப்பட்ட திரட்டப்பட்ட நட்டம் சொத்துக்களை அங்கீகாரமற்றதாக்குதல் மூலம் பெறப்படும் இலாபம் அல்லது நட்டத்திற்கு மீள் சுழற்சி செய்யப்படும்.

கொள்வனவு செய்யப்பட்ட அல்லது கடன் வலுக்குறைப்புத் தோன்றிய நிதிச் சொத்துக்கள் (POCI)

POCI நிதிச் சொத்துக்களுக்கு வங்கி நட்டக் கொடுப்பனவுக்கான ஆரம்ப அங்கீகாரத்தில் இருந்து LTECL இல் திரண்ட மாற்றங்களை மாத்திரமே அங்கீகரிக்கும்.

முன்னோக்கிப் பார்க்கும் தகவல்

வங்கி அதன் நுஊடு மாதிரிகளில் பின்வரும் காரணிகள் போன்ற பொருளாதார உள்ளீடுகளுடன் தொடர்புடைய பலதரப்பட்ட முன்னோக்கிப் பார்க்கும் தகவல்களில் தங்கியுள்ளது.

- GDP வளர்ச்சி
- பணவீக்க விகிதம்
- வட்டி விகிதங்கள்
- நாணயமாற்று விகிதம் US$/ரூபா
- தொழிலின்மை விகிதங்கள்

ECL களைக் கணக்கிடுவதற்குப் பயன்படுத்தப்பட்ட உள்ளீடுகளும், மாதிரிகளும் நிதிக் கூற்றுக்களின் திகதியன்று உள்ள சந்தையின் அனைத்துப் பண்புகளையும் எப்போதும் உள்ளடக்காது. இதனைப் பிரதிபலிக்க அத்தகைய வேறுபாடுகள் முக்கியமாக இருக்கும் போது தற்காலிகச் சீராக்கங்களை மேற்கொள்வதற்கு தர அடிப்படையிலான சீராக்கங்கள் சில தறுவாய்களில் மேற்கொள்ளப்படுகின்றன. எனவே, வங்கி பின்வரும் தர அடிப்படையிலான காரணிகளையும் கருத்திற் கொள்கின்றன.

- சராசரி LTV
- அரசாங்கக் கொள்கைகள்
- கைத்தொழில் வணிக அந்தஸ்து
- ஒழுங்குபடுத்தல் தாக்கம்

5.1.3 பிணைய மதிப்பீடு

நிதிச் சொத்துக்கள் மீதான கடன் இடர்களைத் தணிப்பதற்கு, வங்கி சாத்தியமான இடங்களில் பிணையங்களைப் பயன்படுத்துகிறது. பிணையங்கள் காசு, கடன் பத்திரங்கள், கடன் கடிதங்கள்/ உத்தரவாதங்கள், மெய்சொத்து வரவுகள், இருப்புப் பட்டியல்கள், ஏனைய நிதி அல்லாத சொத்துக்கள் மற்றும் கடன் மேம்படுத்தல்கள் போன்ற பல்வேறு வடிவங்களில் இருந்து வருகிறது.

நிதிக் கூற்றுக்களுக்கான குறிப்புகள்

பிணையத்திற்கான வங்கியின் கணக்கியல் கொள்கை LKAS 39 இன் கீழ் இருந்த அதனை ஒத்த SLFRS 9 இன் கீழ் உள்ள கடன் ஏற்பாடுகள் ஊடாக ஒதுக்கப்படுகிறது.

5.1.3.1 மீள் உடைமை கொள்ளப்பட்ட பிணையம்

மீள் உடமை கொள்ளப்பட்ட சொத்து ஒன்றினை வங்கி அதன் உள்ளக செயற்பாடுகளுக்காக சிறந்த வகையில் பயன்படுத்த முடியுமா அல்லது அச்சொத்து விற்பனை செய்யப்பட வேண்டுமா என்பது பற்றித் தீர்மானிக்கும் கொள்கையை வங்கி கொண்டுள்ளது. உள்ளக செயற்பாடுகளுக்காக பயன்படுத்தப்பட வேண்டும் எனத் தீர்மானிக்கப்பட்ட சொத்துக்கள், அவற்றின் மீள் உடைமை கொள்ளப்பட்ட பெறுமதியை விடக் குறைவாக அல்லது ஆரம்பப் பாதுகாக்கப்பட்ட சொத்தினுடைய கொண்டு செல்லும் பெறுமதியை விடக் குறைந்த பெறுமதியில் அச்சொத்துக்களின் பொருத்தமான சொத்து வகுதிக்குள் மாற்றப்படும். விற்பனை செய்யப்படுவது சிறந்த தெரிவு எனத் தீர்மானிக்கப்படும் சொத்துக்கள் அவற்றின் நியாயப் பெறுமதியில் (நிதிச் சொத்துக்களாக இருந்தால்) விற்பனைக்காக வைத்திருக்கப்படும் சொத்துக்கள் என்ற வகைக்குள் மாற்றப்படுவதுடன், வங்கியின் கொள்கைக்கு அமைவாக மீள் உடைமை கொள்ளப்படும் திகதியில் நிதி அல்லாத சொத்துக்களை விற்பனை செய்வதற்கான செலவு நியாயப் பெறுமதியில் இருந்து குறைக்கப்படும்.

வங்கி அதன் சாதாரண வியாபார நடவடிக்கைகளில் பௌதீக அடிப்படையில் ஆதனங்களையோ அல்லது ஏனைய சொத்துக்களையோ அதன் சில்லறை கடன் கலவைக்குள் மீள் உடைமை கொள்ளாது. ஆயின், நிலுவைக் கடன்களைச் செலுத்தித் தீர்ப்பதற்காக பொதுவாக ஏல விற்பனைகளில் நிதிகளை மீளப் பெறுவதற்காக வெளியக முகவர்களை ஈடுபடுத்தும். எந்தவொரு மிகை நிதியும் வாடிக்கையாளர்களுக்கு அல்லது கடப்பாட்டாளர்களுக்கு திருப்பிச் செலுத்தப்படும்.

இந்த நடைமுறை காரணமாக, சட்ட மீள் உடைமை கொள்ளல் செயன்முறையின் கீழ் உள்ள குடியிருப்புச் சொத்துக்கள் ஐந்தொகையில் பதிவு செய்யப்பட மாட்டாது.

5.1.4 தள்ளுபடி செய்தல்

வங்கி, மீட்பு நடவடிக்கையை நிறுத்துகின்ற போது, நிதிச் சொத்துக்கள் பகுதியளவாகவோ அல்லது முழுமையாகவோ தள்ளுபடி செய்யப்படும். தள்ளுபடி செய்யப்பட வேண்டிய தொகை, திரண்ட நட்டக் கொடுப்பனவை விட அதிகமாக இருக்கும் போது, அவற்றுக்கிடையிலான வேறுபாடு மொத்த எடுத்துச் செல்லும் தொகைக்கு எதிராக அப்போது பிரயோகமாகும் கொடுப்பனவுக்கு ஒரு சேர்க்கையாக முதலில் கருதப்படும். அதனை அடுத்து வரும் ஏதேனும் மீட்புகள் கடன் நட்டச் செலவில் வரவு வைக்கப்படும்.

5.1.5 சகிப்புக் கடன்கள் மற்றும் திருத்தப்பட்ட கடன்கள்

வங்கி, சில வேளைகளில் கடன் பெறுநரின் நிதிச் சிரமங்களுக்குப் பதிலளிக்கும் முகமாக, பிணையங்களை உடைமை கொள்ளாது அல்லது வேறு வகையில் பிணையங்களைச் சேகரிப்பதை அமுல்படுத்தாது, கடன்களின் ஆரம்ப நியதிகளில் சில சலுகைகளை வழங்கும் அல்லது திருத்தங்களை மேற்கொள்ளும். வங்கி, கடன் பெறுநரின் தற்போதைய அல்லது எதிர்பார்க்கப்படும் நிதிச் சிரமங்களின் விளைவாக, அத்தகைய சலுகைகளை அல்லது திருத்தங்களை ஒரு "சகிப்புக் கடனாகக்" கருதுவதுடன், கடன் பெறுநர் நிதி வலிமை உடையவராக இருப்பின், அவ்வாறு மேற்கொள்வதற்கு இணங்கியிருக்காது. கடன் இடர் திணைக்களத்தினால் குறிப்பான கவனம் எடுக்கும் சந்தர்ப்பங்கள் அல்லது கடப்பாட்டில் தவறுகை ஏற்படுகின்ற போது, அவை நிதி சிரமங்களின் குறிகாட்டிகளாக அமையும். "சகிப்பு" என்பது, கடன் ஏற்பாடுகளை நீடித்தல் மற்றும் புதிய கடன் நிபந்தனைகளுக்கு உட்படுதல் என்பவற்றை உள்ளடக்கும். புதிய நியதிகள் மீள் பேச்சுவார்த்தைக்கு உட்பட்ட பின்னர், நிபந்தனைகளைத் திருத்துவதற்கு முன்னர் இருந்த நிலையில் ஆரம்ப EIR ஐப் பயன்படுத்தி ஏதேனும் வலுக்குறைப்பு அளவிடப்படும். வங்கி எதிர்காலக் கொடுப்பனவுகள் தொடர்ந்து கிடைக்க வேண்டும் என்பதை உறுதிப்படுத்துவதற்காக, சகிப்புக் கடன்களை தொடர்ந்து கண்காணித்து வருகின்றது. கட்டம் 2 மற்றும் கட்டம் 3 என்பவற்றுக்கு இடையிலான அங்கீகாரமற்றவைகளுக்கான தீர்மானங்கள் மற்றும் வகுப்பாக்கம் என்பன ஒவ்வொரு சந்தர்ப்பத்தின் அடிப்படையிலும் தீர்மானிக்ககப்படும். இந்த நடைமுறைகள் கடனுடன் தொடர்புடைய நட்டம் ஒன்றாகக் கண்டறியப்படின், அத்தொகை சேகரிக்கப்படும் வரை அல்லது தள்ளுபடி செய்யப்படும் வரை கட்டம் 3 இல் உள்ள ஒரு வலுக்குறைப்பாக வெளிப்படுத்தப்பட்டு முகாமைத்துவம் செய்யப்படும்.

கடன் ஒன்று மீள் பேச்சுவார்த்தைக்கு உட்படும் போது அல்லது திருத்தப்படும் போது, ஆயின், அங்கீகாரமற்றதாக்கப்படாத போது வங்கி, குறிப்பு 21.3 இல் குறிப்பிடப்பட்டவாறு, கடன் இடரில் குறிப்பிடத்தக்க அதிகரிப்பு ஒன்று ஏற்பட்டுள்ளதா என்பதை மீள் மதிப்பீடு செய்யும். மேலும், வங்கி, குறிப்பிட்ட சொத்து கட்டம் 3 ஆக வகைப்படுத்த வேண்டுமா என்பதையும் தீர்மானிக்கும்.

5.1.6 முன்கூட்டிய சொத்துக்கள்

முன்கூட்டிய சொத்துக்கள், கடன்களை முழுமையாக அல்லது பகுதியளவில் திருப்திப்படுத்துவதற்காக, கையகப்படுத்தப்பட்ட சொத்துக்களைப் பிரதிபலிக்கும், முன்கூட்டிய சொத்துக்களில் நிலவுகின்ற சந்தைப் பெறுமதிக்கும், தொடர்புபட்ட நிலுவைக் கடனுக்கும் இடையிலான பற்றாக்குறை, கடனைத் திருப்திப்படுத்துவதற்காக குறிப்பிடப்பட்ட சொத்தைக் கையகப்படுத்தும் வருடத்தின் போது வருமானக் கூற்றில் கடன் நட்டங்களுக்கான ஒரு ஏற்பாடாக அகீகரிக்கப்படும்.

5.1.7 நிதிக்கருவிகளை ஈடுகட்டுதல்

நிதிச் சொத்துக்களும், நிதிப் பொறுப்புக்களும் ஈடுகட்டப்படுவதுடன், தேறிய தொகை அங்கீகரிக்கப்பட்ட தொகைகளை ஈடுகட்டுவதற்கு தற்போது அமுலாக்கக்கூடிய சட்ட உரிமை ஒன்று உள்ள போது மற்றும் அதனை நிகர அடிப்படையில் தீர்த்துக் கட்டுவதற்கு ஒரு மன எண்ணம் உள்ள போது அல்லது சொத்து மதிப்புப் பெறுகின்ற போது மற்றும் பொறுப்பையும் ஒரே நேரத்தில் தீர்த்துக்கட்டும் போது மாத்திரமே நிதிநிலைமைக் கூற்றில் பதிவு செய்யப்படும். இத்தகைய சூழ்நிலை, முதன்மை நிகர அளவு உடன்படிக்கைகளில் பொதுவாக எழுவதில்லை. எனவே, தொடர்புபட்ட சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் என்பன நிதிநிலைக் கூற்றில் மொத்தமாகப் பதியப்படும்.

5.2 ஆதனம் மற்றும் இயந்திரங்களும் உபகரணங்களும்

ஆதனம் மற்றும் இயந்திரங்களும் உபகரணங்களும் (PPE) என்பன குறிப்பிட்ட சொத்துக்களுடன் தொடர்புடைய எதிர்கால பொருளாதார நன்மைகள் வங்கிக்கு வருவதற்கான சாத்தியம் உள்ள போதும், குறிப்பிட்ட சொத்தின் செலவை உண்மையாக அளவிடப்படக்கூடியாக இருக்கும் போது அங்கீகரிக்கப்படும்.

ஆதனம் மற்றும் இயந்திரங்களும் உபகரணங்களும் (PPE) யின் கீழ் வரும் விடயங்கள், அன்றாட சேவைச் செலவுகளை நீக்கி, திரண்ட தேய்மானம் மற்றும் திரண்ட வலுக்குறைப்பு என்பனவற்றின் பெறுமதியைக் கழித்து, அதன் விலையில் குறிப்பிடப்படும். எதிர்பார்க்கப்பட்ட பயன்பாட்டுக் காலத்தில் ஏற்படும் மாற்றங்கள், பொருத்தமான வகையில் தேய்மான காலம் அல்லது முறையை மாற்றுவதன் மூலம் கணக்கிடப்படும். அத்துடன், அம்மாற்றங்கள் கணக்கீட்டு மதிப்பீடுகளில் மாற்றங்களாகக் கருதப்படும். தேய்மானமானது, குறிப்பிட்ட சொத்துக்கள் பயன்பாட்டுக்காக எப்போது தயாராக இருக்கின்றதோ, அக்காலப் பகுதியில் இருந்த அச்சொத்துக்களின் பயன்பாட்டுக் காலத்தின் அடிப்படையில் தேய்மானம் நேர்கோட்டு முறையின் மீது வருமானக் கூற்றில் அங்கீகரிக்கப்படும். காணி தேய்மானத்திற்கு உட்பட்டதல்ல. மதிப்பிடப்பட்ட பயன்பாட்டுக் காலங்கள் பின்வருமாறு:

கட்டடம் வருடத்திற்கு	5%
கணனி உபகரணங்கள் வருடத்திற்கு	20%
அலுவலக உபகரணங்கள் வருடத்திற்கு	20%
மோட்டார் வாகனங்கள் வருடத்திற்கு	20%
பொருத்திகள் வருடத்திற்கு	15%
இரும்புப் பெட்டகங்கள் வருடத்திற்கு	10%
பிரிவிடல் மற்றும் பொருத்துக்கள் வருடத்திற்கு	20%

குறிப்பிட்ட செலவின் எதிர்கால பொருளாதார நலன்கள் வங்கிக்கு கிடைக்கும் சாத்தியம் இருக்கும் போது மாத்திரமே உடனடுத்த செலவு மூலதனமாக்கப்படும்.

PPE யின் கீழ் ஒரு விடயத்தின் கொண்டு செல்லும் பெறுமதி அவ்விடயம் நீக்கப்படும் போது அல்லது அந்தச் சொத்தின் பயன்பாட்டில் இருந்து எதிர்கால பொருளாதார நன்மைகள் கிடைக்காத போது அங்கீகாரமற்றதாக்கப்படும். சொத்து ஒன்றின் அங்கீகாரமற்றதாக்குதலில் இருந்து கிடைக்கப்பெறும் ஏதேனும் ஆதாயம் அல்லது நட்டம் (குறிப்பிட்ட சொத்தை நீக்குவதில் இருந்து கிடைக்கப் பெறும் தேறிய வருவாய்களுக்கும், குறிப்பிட்ட சொத்தின் கொண்டு செல்லும் பெறுமதிக்கும் இடையிலுள்ள வேறுபாடு கணக்கிடப்படும்) குறிப்பிட்ட சொத்து அங்கீகாரமற்றதாக ஆக்கப்படுகின்ற வருடத்தில் வருமானக் கூற்றில் ஏனைய தொழிற்பாட்டு வருமானம்/ செலவு என்பதன் கீழ் அங்கீகரிக்கப்படும்.

நடைபெற்றுக் கொண்டிருக்கின்ற மூலதனம் தொடர்பான தொழிற்பாடு செலவில் குறிப்பிடப்படும். இது, கட்டடங்களை நிர்மாணிப்பதற்காக நேரடியாக ஏற்படும் ஒரு மூலதன தன்மையைக் கொண்ட செலவுகளாகும்.

5.3 குத்தகைகள்

இந்தக் கொள்கை 2019 ஜனவரி 01 அன்று அல்லது அதன் பின்னர் போடப்பட்ட (அல்லது மாற்றப்பட்ட) ஒப்பந்தங்களுக்குப் பயன்படுத்தப்படும். ஒப்பந்தம் ஒன்றின் தொடக்கத்தில் வங்கியானது, ஒப்பந்தம் ஒன்று குத்தகையா அல்லது குத்தகை ஒன்றை உள்ளடக்குகின்றதா என்பதனை மதிப்பீடு செய்கின்றது. ஒப்பந்தமானது விலையீடு பரிமாற்றத்தில் ஒரு காலப்பகுதிக்கு இனங்காணப்பட்ட சொத்து ஒன்றின் பயன்பாட்டைக் கட்டுப்படுத்துவதற்கான உரிமையை ஒப்பந்தம் கொண்டிருக்குமாயின், ஒப்பந்தம் ஒன்று குத்தகையாகும் அல்லது

நிதிக் கூற்றுக்களுக்கான குறிப்புகள்

குத்தகையை உள்ளடக்கும். இனங்காணப்பட்ட சொத்து ஒன்றின் பயன்பாட்டினைக் கட்டுப்படுத்துவதற்கான உரிமையினை ஒப்பந்தம் கொண்டுள்ளதா என்பதனை உறுதிப்படுத்துவதற்கு வங்கி SLFRS 16 இல் குத்தகை பற்றிய வரைவிலக்கணத்தைப் பயன்படுத்துகின்றது.

5.3.1 குத்தகை பெறுநராக வங்கி செயற்படுதல்

குத்தகைக் கூறு ஒன்றை உள்ளடக்குகின்ற ஒப்பந்தம் ஒன்றின் தொடக்கத்தில் அல்லது திருத்தத்தின் மீது வங்கியானது, அதன் தொடர்புடைய தனியான விலையின் அடிப்படையில் ஒவ்வொரு குத்தகைக் கூறுக்கும் ஒப்பந்தத்தில் விலையீட்டினை வங்கி ஒதுக்கீடு செய்கின்றது. எனினும், கிளைகளின் மற்றும் அலுவலக வளாகங்களின் குத்தகைகளுக்காக வங்கி குத்தகையற்ற கூறுகளை வேறுபடுத்தாமல் இருப்பதைத் தெரிவு செய்துள்ளதுடன், தனி ஒரு குத்தகைக்கூறாக குத்தகைக் கூறுகளையும் குத்தகை அல்லாத கூறுகளையும் கணக்கிடுகின்றது.

குத்தகைச் சொத்துக்களைப் பயன்படுத்துவதற்கான உரிமையினையும், குத்தகைப் பொறுப்பினையும் வங்கி குத்தகை தொடக்கத் திகதியில் இனங்காண்கின்றது. குத்தகைச் சொத்துக்களைப் பயன்படுத்துவதற்கான உரிமையானது, ஆரம்பத்தில் செலவில் அளவிடப்படுகின்றது. இது, ஏதேனும் உறப்பட்ட ஆரம்ப நேரடிச் செலவுகளுடன் சேர்த்து தொடக்கத் திகதியில் அல்லது அதற்கு முன்னர் மேற்கொள்ளப்பட்ட ஏதேனும் குத்தகைக் கொடுப்பனவுகளுக்காக சீர் செய்யப்பட்ட குத்தகைப் பொறுப்பின் ஆரம்பத் தொகை மற்றும் கிளைகளுக்கு அல்லது அலுவலக வளாகங்களுக்கு மேற்கொள்ளப்பட்ட ஏதேனும் மேம்படுத்தல்களை கழட்டுவதற்கு அல்லது அகற்றுவதற்கான செலவுகளின் மதிப்பீடு என்பவற்றை உள்ளடக்குகின்றது.

குத்தகைச் சொத்துக்களைப் பயன்படுத்துவதற்கான உரிமை, தொடக்கத் திகதியில் இருந்து முடிவுத் திகதி வரை நேர்கோட்டு முறையினைப் பயன்படுத்தி அதனைத் தொடர்ந்து பெறுமானத் தேய்வு செய்யப்படுகின்றது. குத்தகைக் காலத்தின் இறுதித் திகதி வரை, அதற்கு மேலதிகமாக குத்தகைச் சொத்துக்களைப் பயன்படுத்துவதற்கான உரிமையானது, சேத இழப்பு நட்டங்கள் ஏதேனும் இருப்பின் காலமுறையாகக் குறைக்கப்படுவதுடன், குத்தகைப் பொறுப்பின் சில மீள் மதிப்பீடுகளுக்காக சீர் செய்யப்படுகின்றது.

குத்தகைப் பொறுப்பு தொடக்கத் திகதியிலிருந்து கொடுப்பனவு செய்யப்படாத குத்தகைக் கொடுப்பனவுகளின் தற்போதைய பெறுமதிகளில், குத்தகையில் வட்டி வீத உள்ளார்ந்தத்தை அவ்வீதம் உடனடியாகத் தீர்மானிக்கப்பட முடியாத விடத்து, வங்கியின் அதிகரிக்கும் கடன் பெறுதல் வீதத்தைப் பயன்படுத்தி கழிவு செய்யப்பட்டு ஆரம்பத்தில் அளவிடப்படுகின்றன. பொதுவாக, வங்கி, கழிவு வீதமாக அதன் அதிகரிக்கும் கடன் பெறுதல் வீதத்தைப் பயன்படுத்துகின்றது.

குத்தகையின் நியதிகளையும், குத்தகைக்கு விடப்பட்ட சொத்துக்களின் வகையையும் பிரதிபலிப்பதற்கு பல்வேறு வெளிவாரி மூலங்களில் இருந்து அதன் கடன் பெறுதலைப் பகுப்பாய்வு செய்வதன் மூலம், வங்கி அதன் கடன் பெறுதல் வீதத்தைத் தீர்மானிப்பதுடன், சில சீராக்கங்களையும் மேற்கொள்கின்றது.

குத்தகைப் பொறுப்பின் அளவீட்டில் உள்ளடக்கப்படும் குத்தகைக் கொடுப்பனவுகள் பின்வருவனவற்றை உள்ளமைத்திருக்கும்.

- உண்மையான நிலையான குத்தகைக் கொடுப்பனவுகள் உள்ளடங்கலாக நிலையான கொடுப்பனவுகள்
- சுட்டி ஒன்றில் அல்லது வீதம் ஒன்றில் தங்கியிருக்கின்ற, தொடக்கத் திகதியன்றுள்ளவாறு சுட்டியை அல்லது வீதத்தைப் பயன்படுத்தி ஆரம்பத்தில் அளவிடப்பட்ட மாறுபடுகின்ற குத்தகைக் கொடுப்பனவுகள்
- எஞ்சிய பெறுமதி உத்தரவாதத்தின் கீழ் கொடுப்பனவு செய்யப்படுவதற்கு எதிர்பார்க்கப்படும் தொகைகள்
- பிரயோகிப்பதற்கு வங்கி நியாயமாக, நிச்சயமாக உள்ள கொள்வனவுத் தெரிவு ஒன்றின் கீழ் பிரயோக விலை, நீடித்தல் தெரிவு ஒன்றினைப் பிரயோகிப்பதற்கு வங்கி நியாயமான அளவு நிச்சயமாக இருப்பின் தெரிவுடன் கூடிய மீள் புதுப்பித்தல் காலப்பகுதியில் குத்தகைக் கொடுப்பனவுகள் மற்றும் வங்கி முன்கூட்டியே முடிவுறுத்தாமல் இருப்பதற்கு நியாயமான அளவு நிச்சயமாக இல்லாதவிடத்து, குத்தகையினை முன்கூட்டியே முடிவுறுத்துகின்றமைக்கான தண்டங்கள்.

குத்தகைப் பொறுப்பானது, விளைவு வட்டிவீத முறையினைப் பயன்படுத்தி, கடன்தீர் செலவில் அளவிடப்படுகின்றன. சுட்டெண் அல்லது வீதத்தில் மாற்றம் ஒன்றில் இருந்து தோன்றுகின்ற எதிர்கால குத்தகைக் கொடுப்பனவுகளில் மாற்றம் ஒன்று காணப்படும் போது, எஞ்சிய பெறுமதி உத்தரவாதத்தின் கீழ் கொடுப்பனவு செய்யப்படுவதற்கு

எதிர்பார்க்கப்படுகின்ற தொகை பற்றிய வங்கியின் மதிப்பீட்டில் மாற்றம் காணப்படுமாயின், கொள்வனவு ஒன்றை, நீடிப்பை அல்லது முடிவுறுத்தல் தெரிவை வங்கி பிரயோகிக்குமா என்பது பற்றிய அதன் மதிப்பீட்டினை வங்கி மாற்றுமாயின் அல்லது உண்மையான நிலையான குத்தகைக் கொடுப்பனவில் திருத்தம் காணப்படுமாயின் இது அளவிடப்படுகின்றது.

இவ்விதத்தில் குத்தகைப் பொறுப்பு அளவிடப்படும் போது, குத்தகைச் சொத்தினைப் பயன்படுத்துவதற்கான உரிமையின் கொண்டு செல்லும் தொகைக்கு நேரொத்த சீராக்கம் மேற்கொள்ளப்படுகின்றது அல்லது குத்தகைச் சொத்தைப் பயன்படுத்துவதற்கான உரிமையின் கொண்டு செல்லும் தொகை பூச்சியமாகக் குறைக்கப்படுமாயின், இலாபத்தில் அல்லது நட்டத்தில் பதிவு செய்யப்படுகின்றது.

குத்தகைச் சொத்தைப் பயன்படுத்துவதற்கான உரிமையினையும், நிதியியல் நிலைமைக் கூற்றில் ஏனைய பொறுப்புகளின் கீழ் குத்தகைப் பொறுப்புக்களையும் வங்கி வெவ்வேறாக எடுத்துரைக்கின்றது.

5.3.1.1 குறுகியகால குத்தகைகளும் குறைந்த பெறுமதி சொத்துக்களின் குத்தகைகளும்

குறைந்த பெறுமதி சொத்துக்களின் குத்தகைகளுக்கும், குறுகியகால குத்தகைகளுக்கும், குத்தகைச் சொத்துக்களைப் பயன்படுத்துவதற்கான உரிமையினையும், குத்தகைப் பொறுப்புக்களையும் இனங்காணாமல் இருப்பதை வங்கி தெரிவு செய்துள்ளது. இக்குத்தகைகளுடன் இணைந்த குத்தகைக் கொடுப்பனவுகளை, குத்தகைக் காலத்தின் மீது நேர்கோட்டு அடிப்படையில் செலவு ஒன்றாக வங்கி இனங்காண்கின்றது.

5.3.2 குத்தகை வழங்குநராக வங்கி செயற்படுதல்

குத்தகைக் கூறு ஒன்றை உள்ளடக்குகின்ற ஒப்பந்தம் ஒன்றின் தொடக்கத்தில் அல்லது திருத்தியமைத்தலின் மீது வங்கியானது, அவற்றின் தொடர்புடைய தனியான விற்பனை விலைகளின் அடிப்படையில் ஒவ்வொரு குத்தகைக் கூறுக்குமான ஒப்பந்தத்தில் விலையீட்டினை ஒதுக்கீடு செய்கின்றது.

குத்தகை வழங்குநர் ஒருவராக வங்கி செயற்படும் போது, குத்தகையானது, நிதிக் குத்தகை ஒன்றா அல்லது தொழிற்பாட்டுக் குத்தகை ஒன்றா என்பதனை குத்தகையின் தொடக்கத்தில் அது தீர்மானிக்கின்றது.

ஒவ்வொரு குத்தகையினையும் வகைப்படுத்துவதற்கு குத்தகையானது, கணிசமாக அனைத்து இடர் நேர்வுகளையும் அத்துடன், இடைநேர் விளைவான கைமாறுகளையும் ஏதுவாகின்ற சொத்தின் சொத்தான்மைக்கு மாற்றுகின்றதா என்பது பற்றிய ஒட்டுமொத்த மதிப்பீட்டினை வங்கி மேற்கொள்கின்றது. இது இவ்வகையானதாக இருப்பின், அதுவொரு நிதிக் குத்தகையாகும். இன்றேல், அதுவொரு தொழிற்பாட்டுக் குத்தகையாகும். இம்மதிப்பீட்டின் பாகம் ஒன்றாக வங்கியானது, சொத்தின் பொருளாதார ஆயுளின் முக்கிய பகுதிக்காக குத்தகை காணப்படுகின்றதா என்பது போன்ற சில குறிகாட்டிகளைக் கருத்திற் கொள்கின்றது.

குத்தகையில் உள்ள தேறிய முதலீட்டிற்காக வங்கி SLFRS 9 இல் இனங்காணாமை மற்றும் சேத நட்டத் தேவைப்பாடுகளைப் பிரயோகின்றது. குத்தகையில் மொத்த முதலீட்டினைக் கணிக்குகையில் பயன்படுத்தப்படும் மதிப்பிடப்பட்ட உத்தரவாதமளிக்கப்படாத எஞ்சிய பெறுமதிகளை வங்கி மேலும் கிரமமாக மீளாய்வு செய்கின்றது.

5.4 அருவச் சொத்துக்கள்

வங்கியின் ஏனைய அருவச் சொத்துக்கள் கணனி மென்பொருளின் பெறுமதியை உள்ளடக்கும்.

ஒரு அருவச் சொத்தின் செலவுகள், உண்மையாக அளவிடக்கூடியதாக இருக்கின்ற சந்தர்ப்பத்திலும், அந்தச் சொத்துடன் இணைக்கப்பட்டுள்ள எதிர்கால பொருளாதார நன்மைகள் வங்கியை நோக்கி வரும் என்ற சாத்தியப்பாடு உள்ள போது மாத்திரமே அருவச் சொத்து ஒன்று அங்கீகரிக்கப்படும்.

தனியாகக் கையகப்படுத்துகின்ற அருவச் சொத்துக்கள், ஆரம்ப அங்கீகாரத்தின் மீது அதன் விலையில் அளவிடப்படும். ஆரம்ப அங்கீகாரத்தைத் தொடர்ந்து, அருவச் சொத்துக்கள், அதன் விலையில் தொடர்ந்து கொண்டு செல்லப்படுவதோடு, ஏதேனும், திரண்ட பதிவழிப்பு மற்றும் ஏதேனும் திரண்ட வலுக்குறைப்பு நட்டங்கள் இருப்பின் அவை கழிக்கப்படும்.

அருவச் சொத்துக்களின் பயன்பாட்டு வாழ் காலம் வரையறுக்கப்பட்டு அல்லது வரையறுக்கப்படாத காலப்பகுதிக்கு மதிப்பிடப்படும். வரையறுக்கப்பட்ட காலப் பகுதியைக் கொண்ட அருவச் சொத்துக்கள், அதன் பயன்பாட்டுப் பொருளாதார காலத்தின் மீது பதிவழிப்புச் செய்யப்படும். வரையறுக்கப்பட்ட பயன்பாட்டுக் காலத்தைக் கொண்ட அருவச் சொத்து ஒன்றுக்கான பதிவழிப்புக் காலப்பகுதியும், பதிவழிப்பு முறையும், குறைந்தபட்சம் ஒவ்வொரு நிதியாண்டு இறுதியிலும் மீளாய்வு செய்யப்படும். சொத்தினுடைய எதிர்பார்க்கப்பட்ட பயன்பாட்டுக் காலத்தில்

நிதிக் கூற்றுக்களுக்கான குறிப்புகள்

ஏற்படுகின்ற மாற்றங்கள் அல்லது அச்சொத்துக்களுடன் இணைந்துள்ள எதிர்கால பொருளாதார நலன்களின் எதிர்பார்க்கப்படும் நுகர்வு முறை என்பன பொருத்தமான வகையில் பதிவழிப்புக் காலப்பகுதி அல்லது முறையை மாற்றுவதன் மூலம் கணக்கிடப்படுகிறது. அத்துடன், அவை, கணக்கியல் மதிப்பீடுகளில் மாற்றங்களாகக் கருதப்படுகின்றன. வரையறை செய்யப்பட்ட பயன்பாட்டுக் காலத்தைக் கொண்ட அருவச் சொத்துக்கள் மீதான பதிவழிப்புச் செலவு வருமானக் கூற்றில் பிரத்தியேகமான ஒரு விடயமாகப் பதிவிடப்படும்.

பின்வரும் அடிப்படையில் அருவச் சொத்துக்களுடைய மதிப்பிடப்பட்ட பயன்பாட்டுக் காலத்தின் மீது உள்ள அவற்றின் எஞ்சிய பெறுமதிகளுக்கு அச் சொத்துக்களின் விலையைக் குறிப்பதற்காக பதிவழிப்பு நேர்கோட்டு முறையைப் பயன்படுத்திக் கணக்கிடப்படுகிறது.

- கணனி மென்பொருள் 3 வருடங்கள்

5.5 நிதி அல்லாத சொத்துக்களின் வலுக்குறைப்பு

வங்கி ஒவ்வொரு அறிக்கையிடும் திகதியிலும், குறிப்பிட்ட சொத்து ஒன்று வலுக்குன்றுமா என்பதற்கான அறிகுறி உள்ளதா என்பதை மதிப்பீடு செய்யும். ஏதேனும் அறிகுறி தென்பட்டால் அல்லது குறிப்பிட்ட சொத்து ஒன்றுக்கு வருடாந்த வலுக்குறைப்புப் பரீட்சை தேவைப்படுத்தப்பட்டால் வங்கி சொத்தின் மீளப் பெறக்கூடிய தொகையை மதிப்பீடு செய்யும்.

சொத்து ஒன்றின் அல்லது காசு ஈட்டுகின்ற பிரிவு ஒன்றின் (CGU) அறவிடத்தக்க தொகையானது, பயன்பாட்டிலுள்ள அதன் பெறுமதியின் அத்துடன், விற்பனை செய்வதற்கான செலவுகளைக் கழித்து அதன் சீர் மதிப்புப் பெறுமதியின் உயர்வானதாகும். பயன்பாட்டிலுள்ள பெறுமதியினை மதிப்பிடுகையில், மதிப்பிடப்பட்ட எதிர்கால காசுப் பாய்ச்சல்கள், பணத்தின் காலப் பெறுமதியின் அத்துடன், சொத்துக்கு அல்லது காசு ஈட்டுகின்ற பிரிவுக்கு குறிப்பான இடர்நேர்வுகளின் தற்போதைய சந்தை மதிப்பீடுகளைப் பிரதிபலிக்கின்ற வரிக்கு முந்திய கழிவு வீதத்தினைப் பயன்படுத்தி அவற்றின் தற்போதைய பெறுமதிக்கு கழிவு செய்யப்படுகின்றன.

சேத நட்டத்தைப் பரீட்சிக்கும் நோக்கத்திற்காக, தனிப்பட்ட ரீதியாகப் பரீட்சிக்கப்பட முடியாத சொத்துக்கள் வேறுபடுத்துகின்ற பிரிவு உச்ச மட்ட பரீட்சிப்புக்கு உட்பட்டு வேறு சொத்துக்களின் அல்லது காசு ஈட்டுகின்ற பிரிவின் காசுப் பாய்ச்சல்களின் பெருமளவு சுயாதீனமாகக் காணப்படுகின்ற தொடர்ச்சியான பயன்பாட்டில் இருந்து காசுப் பாய்ச்சல்களை ஈட்டுகின்ற ஆகச் சிறிய சொத்துக்களின் குழு ஒன்றாகக் குழுவாக்கப்படுகின்றன.

சொத்து ஒன்றினுடைய மீட்புத் தொகை, கொண்டு செல்லும் தொகையை விட உயர்வாக இருப்பின், வலுக்குறைப்பு நட்டம் ஒன்று அங்கீகரிக்கப்படும். வலுக்குறைப்பு நட்டங்கள் இலாபம் அல்லது நட்டக் கூற்றில் அங்கீகரிக்கப்படும்.

5.6 நிதி உத்தரவாதங்கள்

கடன் கருவி ஒன்றின் நியதிகளுக்கு அமைய, கொடுப்பனவு ஒன்று நிலுவையாக இருந்து, குறிப்பிட்ட கடன் பெறுநர் அதனைச் செலுத்தத் தவறுகின்ற போது, அந்தக் கொடுப்பனவை மீளப் பெறுவதற்கு வங்கியினால் ஏற்படுத்தப்படுகின்ற செலவின் காரணமாக, ஏற்படும் நட்டத்தைச் சீர்செய்ய, வங்கியினால் மேற்கொள்ளப்படும் குறிப்பான கொடுப்பனவுகளைத் தேவைப்படுத்துகின்ற ஒப்பந்தங்கள் “நிதி உத்தரவாதங்கள்” எனப்படும். “கடன் கடப்பாடுகள்” என்பது, முன்னரே குறிப்பிடப்பட்ட நியதிகள் மற்றும் நிபந்தனைகளின் கீழ் உள்ள கடன்களை வழங்குவதற்கான உறுதியான கடப்பாடாகும்.

நிதி உத்தரவாதங்கள் அல்லது நிதிக் கடப்பாடுகளில் இருந்து சந்தை வட்டியை விடக் குறைந்த வட்டியில் கடன் ஒன்றை வழங்குவதன் மூலம் எழுகின்ற பொறுப்புகள் ஆரம்பத்தில் நியாயப் பெறுமதியில் அளவிடப்படுவதுடன், ஆரம்ப நியாயப் பெறுமதி குறிப்பிட்ட உத்தரவாதம் அல்லது கடப்பாட்டின் ஆயுள் காலத்தின் மீது பதிவழிப்புச் செய்யப்படும். அதனை அடுத்து, குறிப்பிட்ட கடப்பாடானது, பதிவழிப்புத் தொகையை விட உயர் தொகையில் கொண்டு செல்லப்படுவதுடன், குறிப்பிட்ட கடப்பாட்டைச் செலுத்தித் தீர்ப்பதற்கு உள்ள ஏதேனும் எதிர்பார்க்கப்படும் கொடுப்பனவின் தற்போதைய பெறுமதி குறிப்பிட்ட ஒப்பந்தத்தின் கீழ் கொடுப்பனவு ஒன்று வருகின்ற போது சாத்தியமாக அமையும். சந்தை விலையை விட குறைந்த வட்டி விகிதத்தில் கடனை வழங்குகின்ற நிதி உத்தரவாதங்கள் மற்றும் கடப்பாடுகள் ஏனைய பொறுப்புகள் என்பதற்குள் உள்ளடக்கப்படும்.

5.7 ஓய்வூதிய நலக் கடப்பாடுகள்

5.7.1 வரையறுக்கப்பட்ட அனுகூல ஓய்வூதியத் திட்டம் - பணிக்கொடை

இலங்கை கணக்கியல் நியமம் ஒன்றான LKAS 19 - பணியாளர் நலன்கள் என்பதன் கீழ் வரையறுக்கப்பட்டுள்ள ஒரு வரையறை செய்யப்பட்ட பங்களிப்புத் திட்டம் என்பதற்கு அப்பால் பணியாளரின் பணிக்குப் பின்னரான ஒரு வரையறை செய்யப்பட்ட அனுகூலத் திட்டமாகும்.

5.7.2 பணிக்கொடை

1983ஆம் ஆண்டின் 12ஆம் இலக்க பணிக்கொடை சட்டத்திற்கு இணங்க இதற்கான ஏற்பாடுகள் கணக்குகளில் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இந்த நிதியத்தின் கீழ் இருக்கக்கூடிய முழுமையான பொறுப்பை உதிப்படுத்துவதற்கு, ஒவ்வொரு வருட இறுதியிலும் ஒரு காப்பீட்டுக் கணிப்பு மதிப்பீடு மேற்கொள்ளப்படுகிறது. 2022 டிசம்பர் 31 ஆம் திகதியில் உள்ளவாறு குறிப்பிட்ட மதிப்பீடானது, திட்டமிடப்பட்ட அலகுக் கடன் முறையைப் பயன்படுத்தி, ஒரு தகுதிவாய்ந்த காப்பீட்டுக் கணிப்பு நிறுவனமான Actuarial and Management Consultants (Pvt) Ltd என்ற நிறுவனத்தினால் மேற்கொள்ளப்பட்டது.

காப்பீட்டுக் கணிப்பு ஆதாயங்களையும் நட்டங்களையும் அங்கீகரித்தல்: வங்கி இக்குறிப்பிட்ட திட்டம் தொடர்பாக வங்கியின் கடப்பாட்டை கணக்கிடுவதிலிருந்து எழுகின்ற மொத்த காப்பீட்டுக் கணிப்பு ஆதாயங்களையும், நட்டங்களையும், ஏனைய விரிவான வருமானக் கணக்கில் இக்காப்பீட்டுக் கணிப்பு நடைபெறும் காலப்பகுதியில் அங்கீகரிக்கும்.

நிதி ஏற்பாடுகள்: பணிக்கொடைப் பொறுப்புக்கு நிறுவனத்திற்கு வெளியே இருந்து எவ்வித நிதியும் கிடைப்பதில்லை.

5.7.3 வரையறுக்கப்பட்ட பங்களிப்பு ஓய்வூதியத் திட்டம்

“வரையறுக்கப்பட்ட பங்களிப்புத் திட்டம் என்பது, பணியாளர் ஒருவரின் பணிக்குப் பின்னரான ஒரு திட்டமாக இருப்பதுடன், இத்திட்டத்தின் கீழ் நிறுவனம் ஒரு நிலையான பங்களிப்புகளை இன்னுமொரு பிரத்தியேகமான நிறுவனத்திற்கு (நிதியம் ஒன்று) செலுத்தும். இலங்கை கணக்கியல் நியமமான LKAS 19 - “பணியாளர் நலன்கள்” என வரையறை செய்யப்பட்டதன் அடிப்படையில், நடப்பு மற்றும் கடந்த காலப்பகுதிகளில் பணியாளர்கள் ஆற்றிய சேவைகள் தொடர்பாக, அனைத்துப் பணியாளர் நலன்களையும் செலுத்துவதற்கு குறிப்பிட்ட நிதியம் போதுமான சொத்துக்களைக் கொண்டிருக்காத போது, இத்திட்டத்தின்படி குறிப்பிட்ட நிறுவனம், மேலதிகப் பங்களிப்புகளைச் செலுத்துவதற்கு எவ்விதமான சட்ட அல்லது ஆக்கபூர்வமான கடப்பாடுகளையும் கொண்டிருக்காது.

வரையறுக்கப்பட்ட பங்களிப்புத் திட்டத்திற்குச் செலுத்த வேண்டிய பங்களிப்பானது, பணியாட்களினால் வங்கிக்கு அறிவிக்கப்பட்ட சேவைகளின் விகிதாசாரத்திற்கு ஏற்ப அமைவதுடன், இத்தொகை எப்போது செலுத்தப்படுகின்றதோ அச்சந்தர்ப்பத்தில் “தனிப்பட்ட செலவுகள்” என்பதன் கீழ் பதியப்படும். செலுத்தப்படாத பங்களிப்புகள், பொறுப்பு ஒன்றாகப் பதியப்படும். “தனிப்பட்ட செலவுகள்” என்பதன் கீழ் ஒரு செலவாக பதியப்படும்.

1. ஊழியர் சேமலாப நிதியம்

வங்கி மற்றும் பணியாட்கள் ஊழியர் சேமலாப நிதியத்திற்கு முறையே 15% மற்றும் 10% ஐ பங்களிப்புச் செய்வர்.

2. ஊழியர் நம்பிக்கை நிதியம்

வங்கி, ஊழியர் நம்பிக்கை நிதியத்திற்கு 3% பங்களிப்பை செய்யும்.

5.8 ஏற்பாடுகள்

கடந்த கால நிகழ்வு ஒன்றின் விளைவாக, வங்கிக்கு தற்போது கடப்பாடு (சட்ட அல்லது ஆக்கபூர்வமான) ஒன்று எழுகின்ற போது மற்றும் குறிப்பிட்ட கடப்பாட்டைச் செலுத்தித் தீர்ப்பதற்கு, பொருளாதார நலன்களை அடிப்படையாகக் கொண்ட வளங்களின் வெளிப்பாய்ச்சல் ஒன்று சாத்தியமாக உள்ள போது மற்றும் குறிப்பிட்ட கடப்பாட்டின் தொகை மீது உண்மையான மதிப்பீடு ஒன்றை மேற்கொள்ளக்கூடிய சந்தர்ப்பத்தில் வங்கி ஏற்பாடுகளை அங்கீகரிக்கும். குறிப்பிட்ட ஏதேனும் ஏற்பாடு தொடர்பாக ஏற்படும் செலவு வருமானக் கூற்றில் ஏதேனும் திரும்பப் பெறுதல் தொகையில் “தேறிய தொகையாகப்” பதியப்படும்.

5.9 வருமானம் மற்றும் செலவுகளை அங்கீகரித்தல்

5.9.1 வட்டி வருமானமும் செலவுகளும்

வட்டி வருமானமும், செலவும் விளைவு வட்டி வீத முறையினைப் பயன்படுத்தி, இலாபத்தில் அல்லது நட்டத்தில் இனங்காணப்படுகின்றன. விளைவு வட்டி வீதம் என்பது, நிதியச் சொத்தின் அல்லது பொறுப்பின் கொண்டு செல்லும் தொகைக்கு நிதியியல் சொத்தின் அல்லது பொறுப்பின் எதிர்பார்க்கப்பட்ட ஆயுளின் ஊடாக (அல்லது பொருத்தமான விடத்து குறுகிய காலப்பகுதி) மதிப்பிடப்பட்ட எதிர்கால காசுக் கொடுப்பனவுகளை அல்லது கிடைப்பனவுகளைச் சரியாகக் கழிவீடு செய்கின்ற வீதமாகும். விளைவு வட்டி வீதத்தினைக் கணிக்கும் போது, நிதியியல் சாதனத்தின் அனைத்து ஒப்பந்த நியதிகளையும் கருத்திற் கொள்கின்ற ஆயினும், எதிர்காலக் கொடுகடன் இழப்புகள் இன்றி, எதிர்கால காசுப் பாய்ச்சல்களை வங்கி மதிப்பீடு செய்கின்றது.

விளைவு வட்டி வீதத்தின் கணிப்பானது, விளைவு வட்டி வீதத்தின் முக்கிய பாகமாகக் காணப்படுகின்ற அனைத்துக் கொடுக்கல் வாங்கல் செலவுகளையும், கட்டணங்களையும் உள்ளடக்குகின்றது. கொடுக்கல் வாங்கல் செலவுகளானவை, நிதியியல் சொத்து ஒன்றின்

நிதிக் கூற்றுக்களுக்கான குறிப்புகள்

அல்லது பொறுப்பு ஒன்றின் கையகப்படுத்தலுக்கு அல்லது வழங்கலுக்கு நேரடியாகச் சாட்டத்தக்க அதிகரிக்கின்ற செலவுகளை உள்ளடக்குகின்றது.

வருமானக் கூற்றில் எடுத்துரைக்கப்பட்டுள்ள வட்டி வருமானமும், செலவும், விளைவு வட்டி வீதத்தின் அடிப்படையில் கணிக்கப்படுகின்ற கடன்தீர் செலவில் அளவிடப்படும் நிதியியல் சொத்துக்கள் மற்றும் நிதியியல் பொறுப்புக்கள் மீதான வட்டியினை உள்ளடக்குகின்றன.

இடர் நேர்வு முகாமைத்துவ நோக்கங்களுக்காக வைத்திருக்கப்படுகின்ற ஏனைய பெறுதிகள் மீதான சீர்மதிப்புப் பெறுமதி மாற்றங்கள் அத்துடன், இலாபம் அல்லது நட்டம் ஊடாக சீர்மதிப்புப் பெறுமதியில் கொண்டு செல்லப்படும் அனைத்து ஏனைய நிதியியல் சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் என்பன, வருமானக் கூற்றில் இலாபம் அல்லது நட்டம் ஊடாக சீர்மதிப்புப் பெறுமதியில் ஏனைய நிதியியல் சாதனங்களில் இருந்தான தேறிய வருமானத்தில் எடுத்துரைக்கப்பட்டுள்ளன.

விளைவு வட்டி வீத அடிப்படையில் கணிக்கப்பட்ட ஏனைய அனைத்தையும் உள்ளடக்கிய வருமானம் ஊடான சீர்மதிப்புப் பெறுமதி முதலீட்டுப் பிணையங்கள் மீதான வட்டி வருமானத்தில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

5.9.2 கட்டணங்கள் மற்றும் தரகு வருமானம்

வங்கி, அதன் வாடிக்கையாளர்களுக்கு வழங்குகின்ற பலதரப்பட்ட சேவைகள் மூலமாக, கட்டணம் மற்றும் தரகு வருமானத்தைப் பெறுகிறது. கட்டண வருமானம், கீழே தரப்பட்ட வகுதிகளுக்குள் வகுப்பாக்கம் செய்யப்படலாம்.

குறிப்பிட்ட ஒரு காலப்பகுதியில் வழங்கப்பட்ட சேவைகளுக்காக பெறப்பட்ட கட்டண வருமானம்

குறிப்பிட்ட ஒரு காலப்பகுதிக்கு வழங்கப்படும் சேவைகளுக்கான ஏற்பாட்டின் மூலம் பெறப்படுகின்ற கட்டணங்கள், அக்காலப்பகுதியில் திரட்டப்படுகின்றன. இந்தக் கட்டணங்கள், தரகு வருமானம், கடன் சேவைக் கட்டணங்கள், மேற்பார்வைக் கட்டணங்கள் மற்றும் வாடிக்கையாளரிடம் இருந்து மீளப் பெறும் காகிதாதிக் கட்டணங்கள் என்பவற்றை உள்ளடக்கும்.

குறைவதற்கு சாத்தியமாக உள்ள கடன்களுக்கான கடன் கடப்பாட்டுக் கட்டணங்கள் மற்றும் ஏனைய கடனுடன் தொடர்புடைய கட்டணங்கள் என்பன ஒத்தி வைக்கப்படுவதுடன், (ஏதேனும் அதிகரிக்கும் செலவுகள் இருப்பின் அதனுடன் சேர்த்து) கடன் மீதான EIRக்கு ஒரு சீராக்கமாக அங்கீகரிக்கப்படும். கடன் ஒன்று குறைவதற்கு சாத்தியம் இல்லாத போது, கடன் கடப்பாட்டுக் கட்டணங்கள் நேர்கோட்டு அடிப்படையின் மீது கடப்பாட்டுக் காலப்பகுதிக்கு அங்கீகரிக்கப்படும்.

5.9.3 வர்த்தகத்திலிருந்தான நிகர இலாபங்கள்/ (நட்டங்கள்)

இந்த வருமானம் வர்த்தகம் / FVTPL சொத்துக்கள் தொடர்பான குறைவான நட்டங்களையும், அனைத்தும் உணர்ந்த மற்றும் உணரப்படாத நியாயப் பெறுமதி மாற்றங்களையும் உள்ளடக்கியது.

5.9.4 ஆதனம் மற்றும் இயந்திர உபகரணங்களின் விற்பனை மூலம் இலாபம்/ நட்டங்கள்

ஆதனம், இயந்திரங்கள் மற்றும் உபகரணங்கள் விற்பனையிலிருந்து ஏதேனும் இலாபம் அல்லது நட்டங்கள் விற்பனை நிகழும் காலத்தில் அங்கீகரிக்கப்பட்டு ஏனைய நிகர செயற்படு வருமானமாக வகைப்படுத்தப்படும்.

5.10 வரி விதிப்பு

LKAS 12 - "வருமான வரிகள்" என்ற இலக்கை இலங்கை கணக்கியல் நியமங்களுக்கு அமைவாக வரி செலவு என்பது, தற்போதைய மற்றும் ஒத்தி வைக்கப்பட்ட வரி தொடர்பாக குறிப்பிட்ட காலப்பகுதிக்கு இலாபம் மற்றும் நட்டத்தைத் தீர்மானிப்பதில் உள்ளடக்கப்படும் மொத்தத் தொகையாகும். வருமான வரி செலவானது, அச்செலவு எந்தளவு தூரத்திற்கு "பங்குரிமை" அல்லது "ஏனைய விரிவான வருமானம்" ஆகியவற்றில் அங்கீகரிக்கப்பட்ட விடயங்கள் நேரடியாகத் தொடர்புபடுகிறதோ அச் சந்தர்ப்பம் தவிர ஏனைய சந்தர்ப்பங்களில் வருமானக் கூற்றில் அங்கீகரிக்கப்படும். பங்குரிமை அல்லது ஏனைய விரிவான வருமானத்தோடு தொடர்புபடுகின்ற போது, வருமான வரி ஒப்புரவு அல்லது ஏனைய விரிவான வருமானத்தில் (OCI) உள்ளடக்கப்படும்.

5.10.1 நடப்பு வரி

நடப்பு மற்றும் கடந்த வருடங்களுக்கான நடைமுறை வரி சொத்துக்கள் மற்றும் பொறுப்புகள், வரி விதிப்பு அதிகார சபைகளிடம் இருந்து பெற எதிர்பார்க்கப்படும் அல்லது அவ்வதிகார சபைகளுக்குச் செலுத்த வேண்டிய தொகைகளில் அளவிடப்படுகின்றது. அறிக்கையிடும் திகதியில் இயற்றப்பட்ட அல்லது கணிசமான அளவு இயற்றப்பட்ட சட்டங்கள், வரி வீதங்களையும், வரி சட்டங்களையும் தீர்மானிப்பதற்குப் பயன்படுத்தப்படும்.

இதற்கமைய நிதிக் கூற்றுக்களுக்கான குறிப்பு 15 இல் குறித்துரைக்கப்பட்ட விகிதங்களில் 2017ஆம் ஆண்டின் 24ஆம் இலக்க உள்நாட்டு இறைவரி சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு அமைய,

வரி விதிப்புக்கான ஏற்பாடு, வரி விதிப்பு நோக்கங்களுக்காக குறிப்பிட்ட வருடத்தில் சீராக்கப்பட்ட இலாபத்தை அடிப்படையாக கொண்டது.

5.10.2 ஒத்திவைக்கப்பட்ட வரி

அறிக்கையிடும் திகதியில் சொத்துக்கள் மற்றும் பொறுப்புகளுக்கான வரி தளங்கள் மற்றும் நிதி அறிக்கையிடும் நோக்கங்களுக்காகக் கொண்டு செல்லும் அவற்றின் தொகை என்பவற்றுக்கு இடையில் உள்ள தற்காலிக வேறுபாடுகள் மீது, ஒத்தி வைக்கப்பட்ட வரி அங்கீகரிக்கப்படும். ஒத்திவைக்கப்பட்ட வரி பொறுப்புகள் பின்வரும் சந்தர்ப்பங்கள் தவிர அனைத்து வரி விதிக்கக்கூடிய தற்காலிக வேறுபாடுகளுக்கும் அங்கீகரிக்கப்படும்.

- வியாபாரக் கலவை அல்லாத நன்மதிப்பு அல்லது ஒரு சொத்து அல்லது பொறுப்பு தொடர்பான பரிவர்த்தனையின் ஆரம்ப அங்கீகாரத்தில் இருந்து ஒத்தி வைக்கப்பட்ட வரி பொறுப்பு எழுகின்ற போதும், அத்துடன், குறிப்பிட்ட பரிவர்த்தனை நடைபெறும் போதும் கணக்கியல் இலாபத்தையோ, வரி விதிக்கக்கூடிய இலாபம் அல்லது நட்டத்தையோ அது பாதிக்காத போது,
- துணைக் கம்பனிகளில் உள்ள முதலீடுகளுடன் தொடர்புடைய வரி விதிக்கக்கூடிய தற்காலிக வேறுபாடுகள் தொடர்பில், அத்தகைய தற்காலிக வேறுபாடுகளின் சுழற்சி நேரம் கட்டுப்படுத்தப்படக்கூடியதாக உள்ள போதும், அத்துடன், தற்காலிக வேறுபாடுகள் எதிர்வுகூறக்கூடிய எதிர்காலத்தில் வேறுபடாது என்ற சாத்தியம் உள்ள போதும்.

பின்வரும் சந்தர்ப்பங்கள் தவிர, விலக்கி வைக்கக்கூடிய தற்காலிக வேறுபாடுகள் முன்னோக்கி எடுத்துச் செல்லும் பயன்படுத்தப்படாத வரிக் கடன்கள் மற்றும் பயன்படுத்தப்படாத வரி நட்டங்கள் என்பவற்றுக்கு எதிராக எந்தளவு தூரத்திற்கு வரி விதிக்கக்கூடிய இலாபம் உள்ளதோ அந்தளவிற்கு அனைத்து விலக்கி வைக்கக்கூடிய தற்காலிக வேறுபாடுகள் முன்னோக்கி எடுத்துச் செல்லும் பயன்படுத்தப்படாத வரி கடன்கள் மற்றும் பயன்படுத்தப்படாத வரி நட்டங்களுக்கு ஒத்தி வைக்கப்பட்ட வரி சொத்துக்கள் அங்கீகரிக்கப்படும்.

- வியாபாரக் கலவை அல்லாத ஒரு சொத்து அல்லது பொறுப்பு தொடர்பான பரிவர்த்தனையின் ஆரம்ப அங்கீகாரத்தில் இருந்து ஒத்தி வைக்கப்பட்ட வரி பொறுப்பு எழுகின்ற போதும், அத்துடன், குறிப்பிட்ட பரிவர்த்தனை நடைபெறும் போது கணக்கியல் இலாபத்தையோ, வரி விதிக்கக்கூடிய இலாபம் அல்லது நட்டத்தையோ அது பாதிக்காத போது,
- துணைக் கம்பனிகளில் உள்ள முதலீடுகளுடன் தொடர்புடைய வரி விதிக்கக்கூடிய தற்காலிக வேறுபாடுகள் தொடர்பில் அத்தகைய தற்காலிக வேறுபாடுகளின் சுழற்சி நேரம் கட்டுப்படுத்தப்படக்கூடியதாக உள்ள போதும், அத்துடன், தற்காலிக வேறுபாடுகள் எதிர்வுகூறக்கூடிய எதிர்காலத்தில் வேறுபாடு என்ற சாத்தியம் உள்ள போதும். அத்துடன், வரி விதிப்பு இலாபம் எதற்காக தற்காலிக வேறுபாடுகள் பயன்படுத்த முடியுமோ அதற்கு எதிராக இருக்கும்.

ஒத்தி வைக்கப்பட்ட வரி சொத்துக்களின் கொண்டு செல்லும் தொகை அறிக்கையிடும் ஒவ்வொரு திகதியிலும் மீளாய்வு செய்யப்படுவதுடன், குறிப்பிட்ட ஒத்தி வைக்கப்பட்ட வரிச் சொத்து அனைத்தும் அல்லது ஒரு பகுதி போதுமான வரி விதிப்பு இலாபத்தைப் பெற இனிமேலும் சாத்தியமில்லை என்ற அளவுக்கு குறைக்கப்படும். அங்கீகரிக்கப்படாத ஒத்தி வைக்கப்பட்ட வரி சொத்துக்கள் ஒவ்வொரு அறிக்கையிடும் திகதியிலும், மறுமதிப்பு செய்யப்படுவதுடன், ஒத்தி வைக்கப்பட்ட வரிச் சொத்தை மீட்பதற்கு எதிர்கால வரி விதிப்பு இலாபம் எந்தளவுக்கு சாத்தியமோ அந்த அளவுக்கு அங்கீகரிக்கப்படும்.

அறிக்கையிடும் திகதியில் இயற்றப்பட்ட அல்லது கணிசமான அளவு இயற்றப்பட்ட வரி விகிதங்கள் (மற்றும் வரி சட்டங்கள்) என்பவற்றின் அடிப்படையில் ஒத்தி வைக்கப்பட்ட வரி சொத்துக்களும், பொறுப்புக்களும் குறிப்பிட்ட சொத்து மதிப்பு பெறுகின்ற வருடத்தில் அல்லது பொறுப்பு செலுத்தி தீர்க்கப்படுகின்ற வருடத்தில் பிரயோகிக்க எதிர்பார்க்கப்படும் வரி விகிதங்களில் அறவிடப்படும்.

பங்குரிமையில் நேரடியாக அங்கீகரிக்கப்பட்ட விடயங்களுடன் தொடர்புடைய நடப்பு வரி மற்றும் ஒத்தி வைக்கப்பட்ட வரி என்பனவும் ஒப்புரவில் அங்கீகரிக்கப்படுமே தவிர வருமானக் கூற்றில் அல்ல.

நடப்பு வரி பொறுப்புகளுக்கு எதிராக நடப்பு வரி சொத்துக்களைத் தீர்த்துக் கட்டுவதற்கு சட்ட ரீதியாக அமுலாக்கக்கூடிய உரிமை ஒன்று உள்ள போது மற்றும் ஒத்தி வைக்கப்பட்ட வரி அதே வரி செலுத்தக்கூடிய நிறுவனத்திற்கும் வரி விதிப்பு அதிகார

சபைக்கும் தொடர்புபடுகின்ற போது, சொத்துக்களும், ஒத்தி வைக்கப்பட்ட வரி பொறுப்புகளும் ஈடுகட்டப்படும்.

	சிறந்த நிகழ்வு	3.5%	4.1%	4.6%	5.2%	-5.6%
	மோசமான நிகழ்வு	-9.1%	-8.0%	-6.8%	-5.4%	-8.0%
பணவீக்க விகிதங்கள் %						
	அடிப்படை நிகழ்வு	54.2%	54.2%	54.2%	54.2%	54.2%
	சிறந்த நிகழ்வு	35.4%	30.7%	26.5%	22.9%	18.4%
	மோசமான நிகழ்வு	60.9%	60.9%	60.9%	60.9%	60.9%
வட்டி விகிதங்கள் %						
	அடிப்படை நிகழ்வு	14.5%	14.5%	14.5%	14.5%	14.5%
	சிறந்த நிகழ்வு	13.3%	13.0%	12.6%	12.3%	11.8%
	மோசமான நிகழ்வு	15.3%	16.0%	16.7%	17.4%	17.9%
நாணயமாற்று விகிதங்கள் (USD $ இலிருந்து ரூபா)						
	அடிப்படை நிகழ்வு	421.73	491.73	550.00	550.00	550.00
	சிறந்த நிகழ்வு	362.87	363.82	364.78	365.74	366.70
	மோசமான நிகழ்வு	550.00	550.00	550.00	550.00	550.00
தொழிலின்மை விகிதங்கள் %						
	அடிப்படை நிகழ்வு	5.0%	5.0%	5.0%	5.0%	5.0%
	சிறந்த நிகழ்வு	4.9%	4.9%	4.9%	4.9%	4.8%
	மோசமான நிகழ்வு	5.0%	5.1%	5.1%	5.1%	5.2%

எதிர்பார்க்கப்பட்ட கொடுகடன் இழப்பினை அளவிடுதல்

எதிர்பார்க்கப்பட்ட கொடுகடன் இழப்பு அளவீட்டினுள் முக்கிய உள்ளீடுகள் பின்வரும் மாறிலிகளின் காலக் கட்டமைப்பாகும்.

- தவணை தவறுதல் நிகழும் தன்மை (PD)
- இழப்பு தரப்பட்ட தவணை தவறுதல் (LGD)
- தவணை தவறுவதிலுள்ள கடனளவு (EAD)

தவணை தவறுவதிலுள்ள கடனளவானது, சேதஇழப்புக் கணிப்பீட்டிற்கு உட்பட்டு, அதன் கடனளவுகளை அதிகரிப்பதற்கான சேவைநாடியின் இயலுமையினை மதிப்பிடுகின்ற அதேவேளை, தவணை தவறுவதை அணுகி, சாத்தியமான முன்கூட்டிய மீள் கொடுப்பனவுகளையும் அணுகுகின்ற நிதியியல் சாதனங்களின் மொத்த கொண்டு செல்லும் தொகையினை எடுத்துக்காட்டுகின்றது.

கட்டம் 1 கடன்களுக்கான தவணை தவறுவதிலுள்ள கடனளவுகளைக் கணிப்பதற்கு வங்கி 12 மாத எதிர்பார்க்கப்பட்ட கொடுகடன் இழப்பின் கணித்தலுக்காக 12 மாதங்களுக்குள் சாத்தியமான தவணை தவறுதல் நிகழ்வுகளை மதிப்பிடுகின்றது. எனினும், ஐந்தொகையில் இருந்து 12 மாதங்களுக்குள் தவணை தவறுமென கட்டம் 1 கடன் எதிர்பார்க்கப்படுமாயின், அத்துடன் தொடர்ந்து வருகின்ற தவணைதவறுதலைத் தடுப்பதற்கு எதிர்பார்க்கப்படுமாயின், அப்போது, அனைத்து இணைந்த தவணைதவறுதல் நிகழ்வுகளும் கருத்திற் கொள்ளப்படுகின்றன. கட்டம் 2 மற்றும் கட்டம் 3 என்பவற்றுக்கு தவணை தவறுவதிலுள்ள கடனளவு சாதனங்களில் ஆயுள்காலம் மீதான நிகழ்வுகளுக்காக கருத்திற் கொள்ளப்படுகின்றன.

காலத்தின் பல்வேறு நிலைகள், தொடர்புடைய பலவகையான சூழ்நிலைகள் என்பவற்றில் சாத்தியமான கடன் அளவுகளின் பெறுபேறுகளின் வீச்சினை மாதிரி அமைப்பதன் மூலம், வங்கி தவணை தவறுவதிலுள்ள கடனளவைத் தீர்மானிக்கின்றது. SLFRS 9 தவணை தவறுதல் நிகழும் தன்மை வங்கியின் மாதிரிகளின் பெறுபேற்றின் அடிப்படையில் ஒவ்வொரு பொருளாதார சூழ்நிலைக்கும் குறித்தொதுக்கப்படுகின்றன.

வங்கி, எதிர்கால காசுப் பாய்ச்சல்களின் மதிப்பீட்டுடன் தொடர்புடையதாகக் காணப்படுகின்ற முக்கிய பண்புகளை அடிப்படையாகக் கொண்டு, அதன் சில்லறை கடன் வழங்கல் உற்பத்திகளை சிறிய வகைகளாகப் பிரிக்கின்றது. பிரயோகிக்கப்படும் தரவுகள் வரலாற்று ரீதியாக சேகரிக்கப்பட்ட இழப்பு தரவுகளை அடிப்படையாகக் கொண்டமைந்துள்ளதுடன், பரந்த கொடுக்கல் வாங்கல் பண்புகளின் தொகுதியினையும் (உதாரணம் உற்பத்தி வகை, பரந்த பிணை உறுதி வகைகள்) அதேபோன்று கடன்பெறுநரின் பண்புகளையும் ஈடுபடுத்துகின்றது.

திறைசேரி, வர்த்தகம் மற்றும் வங்கிகளுக்கிடையிலான உறவுகள்

வங்கியின் திறைசேரி, வர்த்தக மற்றும் வங்கிகளுக்கிடையலான உறவுகள் அத்துடன், இணை தரப்பினர்கள் என்பது, நிதியியல் சேவை நிறுவனங்கள், வங்கிகள், முதனிலை வணிகர்கள், பரிமாற்று மற்றும் தீர்ப்பனவு நிறுவனங்கள் ஆகியவற்றை உள்ளடக்குகின்றன. இவ்வுறவுகளுக்காக வங்கியின் திறைசேரி பிரிவானது, நிதியியல் தகவல்கள் போன்ற பகிரங்கமாகக் கிடைக்கப்பெறும் தகவல்களைப் பகுப்பாய்வு செய்கின்றது.

கடன்களின் துறைசார் வகைப்படுத்தல் அறிக்கையிடும் நோக்கத்திற்காக வங்கியின் கடன் வகைப்படுத்தல்

இது இலங்கை மத்திய வங்கியின் துறைசார் வகைப்படுத்தலுக்கு அமைவாகக் கூட்டிணைக்கப்பட்டுள்ளது.

மொத்த துறைசார் வகைப்படுத்தலில் சொத்துப்பட்டியலின் அளவுக்கு அமைவாக முக்கிய பிரதான துறைகளாக இவ்வறிக்கை வகைப்படுத்தியுள்ளது.

வங்கியின் இறுதி ஏடுகளின் பிரகாரம், இவ்வகைப்படுத்தலின் கீழ் உயர்வானதுறை 2022 இல் வீடமைப்புக் கடனாகக் காணப்பட்டதுடன், அதனைத் தொடர்ந்து மீள் நிதியிடல், வணிகம், விவசாயம, அடகு, கைத்தொழில் மற்றும் ஏனைய கடன்கள், வைப்புகளுக்கு எதிரான கடன்கள், அலுவலர் கடன்கள், குத்தகை, சிறிய மற்றும் நடுத்தர தொழில் முயற்சி, லியஇசுர கடன்கள் என்பனவும் காணப்படுகின்றன.

துறைவாரியான நிதிச் சொத்துப் பட்டியல்	ரூபா
வீடமைப்பு தவணைக் கடன்	49,820,375,132
மீள் நிதியாக்கல்	37,587,477,683
வர்த்தகத் தவணைக் கடன்	24,913,536,960
விவசாய தவணைக் கடன்	19,942,668,431
அடகு	42,234,452,674
கைத்தொழில் தவணைக் கடன்	16,451,115,535
ஏனைய தவணைக் கடன்	7,035,425,261
வைப்புகளுக்கு எதிரான கடன்	10,333,536,605
ஊழியர் கடன்	5,501,110,905
குத்தகை	1,397,522,296
SME	121,313,411
லிய இசுர	33,966,988

கூட்டுறவுக் கடன்கள் (சேவைகள், உற்பத்தி மற்றும் கைத்தொழில் கடன்கள்)

இக் கூட்டுறவுக் கடன்களை வழங்குவதற்கு, கடன் பெறுநர்கள் வங்கியின் விசேட கடன் ஊழியர்களினால் மதிப்பிடப்படுவர். கடன் இடர் மதிப்பீடானது, வாடிக்கையாளரின் நடத்தை மற்றும் கடந்த கால நிலுவை அந்தஸ்தின் கடன் தரம் மீது அமைந்துள்ளது. மேலும், வாடிக்கையாளர் ஒருவரின் இடரை மதிப்பிடுவதில் பின்வரும் காரணிகளையும் வங்கி கவனத்திற் கொள்கிறது:

- வரலாற்று நிதித் தகவலுடன் எதிர்வுகூறல்கள் மற்றும் வாடிக்கையாளரினால் தயாரிக்கப்பட்ட வரவு செலவுத் திட்டங்கள், இந்த நிதித் தகவல் மதிப்பு பெற்ற மற்றும் எதிர்பார்க்கப்படும் பெறுபேறுகள் நொடிப்பில்லாத் தன்மை விகிதங்கள், திரவ விகிதங்கள் மற்றும் வாடிக்கையாளரின் நிதிச் செயற்திறனை அளவிட பொருத்தமான ஏனைய விகிதங்களை உள்ளடக்கும். இந்தக் குறிகாட்டிகள், வாடிக்கையாளர்களிடமிருந்து பெறுவதனால் மிகக் கவனமாக அளவிடப்படுகின்றன.
- வெளிப்புறத் திறத்தவர்களிடம் இருந்து வாடிக்கையாளர்கள் பற்றி பெற்றுக் கொள்ளக்கூடிய ஏதேனும் பகிரங்கமாக இருக்கக் கூடிய தகவல். இது, கடன் கொடுகடன் தகவல் பணியகத்தினால் வழங்கப்படும் தகவல்களை உள்ளடக்கும். இது, மதிப்பிடல் முகவர் நிறுவனங்களினால் வழங்கப்பட்ட வெளியக மதிப்பிடல் தகல்களையும், சுயாதீன மதிப்பீட்டு அறிக்கைகளையும், ஊடக வெளியீடுகளையும், கட்டுரைகளையும் உள்ளடக்கும். இவை, வாடிக்கையாளர்கள்.'. கைத்தொழில் துறை பற்றி பொருத்தமான தகவல்களையும் மற்றும் கடன் பகுப்பாய்வுக்குப் பொருத்தமான தகவல்களையும் தீர்மானம் மேற்கொள்ளும் செயன்முறைக்கு அவசியமான தகவல்களையும் உள்ளடக்கும்.
- நிறுவனத்தின் செயற்திறனுக்குப் பொருத்தமாக இருக்கக்கூடிய வாடிக்கையாளரின் முகாமைத்துவத்தின் தரம் மற்றும் தகைமைகள் பற்றிய புறநில அடிப்படையில் ஆதரவளிக்ககூடிய ஏனைய ஏதேனும் தகவல்கள்.

நுகர்வோர் கடன்களும் சில்லறைக் கடன்களும்

நுகர்வோர் கடன்கள், வீடமைப்புக் கடன்கள், நுகர்வோர் கடன்கள் மற்றும் தனிப்பட்ட கடன்களை உள்ளடக்குகிறது. சில்லறை ஈடுகள் மற்றும் சிக்கல் குறைந்த சிறிய வியாபாரங்கள் சிலவும் நாட்களைக் கடந்த நிலுவையினால் (கொடுகடன் தகவல் பணியக அறிக்கைகள்) பிரதானமாக மதிப்பிடப்படுகிறது. இந்த மாதிரிகளுக்குள் உள்ளடக்கப்படும் ஏனைய முக்கிய உள்ளீடுகள் பின்வருமாறு:

- நுகர்வோர் கடன் தயாரிப்புகள் : இதனுடன் சம்பந்தப்பட்ட ஏற்றத்தாழ்வுகளைம், வரையறைகளையும் பயன்படுத்துதல், பொருளாதார நிலைமை, மீள் செலுத்தும் தகைமை தொடர்பான பதிவுகளின் அடிப்படையில் தனிப்பட்ட வருமானம்.'. கடன் மட்டங்களில் ஏற்பட்ட மாற்றங்கள், மீள் கொடுப்பனவு மூலங்கள், தனிப்பட்ட கடன்கள் மற்றும் எதிர்பார்க்கப்பட்ட வட்டி, மீள் விலையிடல்.
- சில்லறை ஈடுகள்: புனூ வளர்ச்சி, தொழிலின்மை வீதங்கள், நடைமுறைக் கணக்குப் பதிவுகளின் அடிப்படையில் தனிப்பட்ட வருமானம்.'. சம்பள மட்டங்களில் ஏற்பட்ட மாற்றங்கள், தனிப்பட்ட கடன்கள் மற்றும் எதிர்பார்க்கப்பட்ட வட்டி, மீள் விலையிடல்.

கூட்டு அடிப்படையில் அளவிடப்படும் நிதி சொத்துக்களைத் தொகுத்தல்

தனிப்பட்ட அடிப்படையில் வங்கி நுஊடு கணக்கிடும் சொத்து வகுப்புகள், ரூபா 5 மில்லியன் என்ற தனித்தனியாகக் குறிப்பிடத்தக்க வரம்புக்கு மேல் உள்ள அனைத்து வாடிக்கையாளர்களையும் மொத்த வெளிப்பாடு உள்ளடக்கியது. வங்கி ECL ஐ கூட்டு அடிப்படையில் கணக்கிடும் சொத்து வகுப்புகள் பின்வருமாறு:

- ரூபா 5 மில்லியனின் தனிப்பட்ட குறிப்பிடத்தக்க வரம்புக்குக் கீழே உள்ள வாடிக்கையாளர்கள்.

இந்த வெளிப்பாடுகளை வங்கி கீழே விவரிக்கப்பட்டுள்ளவாறு சிறிய ஒரே மாதிரியான நிதிச் சொத்துப் பட்டியல்களாகத் தொகுக்கிறது:

- தயாரிப்பு வகை
- வட்டி விகிதம்

44.2.2 பிணையமாக வைக்கப்பட்ட சொத்துக்களும் ஏனைய கடன் மேம்படுத்தல்களும்

சொத்து மீதான அடைமான வட்டிகள், சொத்துக்கள், சரக்குகள் மற்றும் உத்தரவாதங்கள் மீதான ஏனைய பதிவு செய்யப்பட்ட பத்திரங்கள் போன்ற வடிவங்களில் கடன்கள் மற்றும் முன்பணங்களுக்கு எதிராக வங்கி பிணையத்தைக் கொண்டுள்ளது. நியாயப் பெறுமதி மதிப்பீடுகள் கடன் பெறும் போது மதிப்பிடப்பட்ட பிணையப் பெறுமதியின் அடிப்படையில் அமைந்து, தொடர்ந்து புதுப்பிக்கப்படும். தேவையான பிணையத்தின் அளவு மற்றும் வகை என்பன எதிர் தரப்பு கடன் இடரின் மதிப்பீட்டைப் பொறுத்தது. முகாமைத்துவம் பிணையத்தின் சந்தைப் பெறுமதியைக் கண்காணிப்பதோடு, அடிப்படை உடன்படிக்கைக்கு அமைவாக மேலதிக பிணையத்தைத் தேவைப்படுத்தும்.

கடந்தகால நிலுவை தொடர்பான வரைவிலக்கணம்

ஒப்பந்தத்தில் குறிப்பிடப்பட்ட செலுத்த வேண்டிய திகதியில் இருந்து 31 நாட்கள் அல்லது அதற்கு மேற்பட்ட காலப்பகுதிகளில் ஏதேனும் தொகைகள் சேகரிக்கப்படா விட்டால் அவை, "கடந்த கால நிலுவை" எனக் கருதப்படும்.

வாடிக்கையாளர்களுக்கான கடன்கள் மற்றும் முன்பணங்களுக்கு எதிராக வைத்திருக்கப்படும் பிணையங்களின் நியாயப் பெறுமதி மற்றும் ஏனைய பாதுகாப்பு மேம்பாடுகளின் நியாயப் பெறுமதி என்பனவற்றின் கடன் பெறும் போது மேற்கொள்ளப்பட்ட மதிப்பீடு கீழே கொடுக்கப்பட்டுள்ளதுடன், கடன் நிலுவைத் தொகையின் பெறுமதிக்கு பிணையப் பெறுமதியும் கட்டுப்படுத்தப்பட்டுள்ளது.

டிசம்பர் 31 இல் உள்ளவாறு	2022 ரூபா	2021 ரூபா
பிணை உறுதி வகை		
காணி மற்றும் கட்டடங்கள்	**27,770,254,509**	28,440,620,295
இயந்திரசாதனங்கள்	**1,281,765,425**	1,002,307,447
மோட்டார் வாகனங்கள்	**2,518,646,804**	2,003,005,196
தங்க நகைகள்	**42,217,210,774**	20,172,426,918
நிலையான வைப்புகள்	**10,333,536,604**	6,669,463,537
ஆளணி உத்தரவாதங்கள்	**117,387,564,475**	117,077,766,283
வங்கி உத்தரவாதங்கள்	**756,422**	993,213
ஏனையவை	**13,862,766,869**	13,673,083,531
	215,372,501,881	189,039,666,420

டிசம்பர் 31 இல் உள்ளவாறு	2022 கடன் இடருக்கான அதிகபட்ச வெளிப்பாடு ரூபா	2022 பிணைய வெளிப்பாட்டின் தேறிய தொகை ரூபா	2021 கடன் இடருக்கான அதிகபட்ச வெளிப்பாடு ரூபா	2021 பிணைய வெளிப்பாட்டின் தேறிய தொகை ரூபா
காசு மற்றும் காசுக்கு சமமானவை	**2,889,883,677**	**2,889,883,677**	1,486,878,989	1,486,878,989
வங்கியில் உள்ள இருப்புகள்	**6,133,705,351**	**6,133,705,351**	6,596,072,932	6,596,072,932
இலாபம் அல்லது நட்டம் ஊடாக நியாயப் பெறுமதியில் பங்குரிமைக் கருவிகள்	**120,280**	**120,280**	188,140	188,140
பதிவழிப்புச் செலவில் நிதிச் சொத்துக்கள் - ஏனைய வாடிக்கையாளரிடம் இருந்து வரவேண்டிய கடன்களும் வரவுகளும்	**215,372,501,881**	**131,251,087,765**	189,039,666,420	130,751,843,027
பதிவழிப்புச் செலவில் நிதி முதலீடுகள் - கடன் மற்றும் ஏனைய கருவிகள்	**65,079,635,908**	**65,079,635,908**	54,856,210,318	54,856,186,484
இலாபம் அல்லது நட்டம் ஊடாக நியாப் பெறுமதியில் பங்குரிமைக் கருவிகள்	**2,289,919**	**2,289,919**	2,289,919	2,289,919
ஏனைய சொத்துக்கள்	**6,018,325,952**	**6,018,325,952**	3,721,641,936	3,617,507,110

முன்கூட்டிய சொத்துக்கள்	முன்கூட்டிய பிணையத்தின் கட்டாய விற்பனைப் பெறுமதி 2022 ரூபா	2021 ரூபா
ஜனவரி 01 இல் உள்ளவாறு மீதி	**165,450,000**	165,450,000
வருடத்திற்கான சேர்க்கைகள்	**-**	-
வருடத்திற்கான அகற்றுதல்கள்	**-**	-
பெறுமதி மாற்றங்கள்	**-**	-
டிசம்பர் 31 இல் உள்ளவாறு மீதி	**165,450,000**	165,450,000

பிணையத்தை சரியான நேரத்தில் ஒழுங்கான முறையில் செயல்படுத்துவதே வங்கியின் கொள்கையாகும்.

கடன் - பெறுமதி விகிதம் (LTV)

வதிவிட ஈட்டுக் கடன் கீழே தரப்பட்டுள்ள அட்டவணைகள், சில்லறை வாடிக்கையாளர்களுக்கு வழங்கப்பட்ட ஈட்டுக் கடன்கள் மற்றும் முற்பணங்கள் என்பனவற்றில் இருந்து எழுகின்ற கடன் வெளிப்பாடுகளை கடன் மதிப்பீட்டு விகித அடிப்படையில் எடுத்துக்காட்டுகிறது. LTV கடன் செல்லும் தொகையினுடைய விகிதம் என்றவாறான அல்லது பிணையத்தின் பெறுமதிக்கு கடன் கடப்பாடுகளுக்காக செலுத்த வேண்டுமென கடப்பாட்டுக்கு உட்பட்ட தொகை அடிப்படையில் LTV கணிப்பிடப்படுகிறது. மொத்தத் தொகைகள் ஏதேனும் வலுக்குறைப்பு கொடுப்பனவை நீக்குகின்றன. பிணையத்தின் மதிப்பீடு குறிப்பிட்ட பிணையத்தைப் பெற்றுக்கொள்ளல் மற்றும் விற்பனை செய்தல் என்பவற்றில் மேற்கொள்ளப்படும் சீராக்கங்களையும் நீக்குகிறது. வதிவிட ஈட்டுக் கடன்களுக்கான பிணையத்தின் பெறுமதி, வீட்டு விலை குறிக்காட்டிகளில் ஏற்பட்ட மாற்றங்களை அடிப்படையாகக் கொண்டு அதன் தோற்றத்தில் உள்ள பிணையத்தின் பெறுமதியை அடிப்படையாகக் கொண்டது.

டிசம்பர் 31 இல் முடிவடைந்த வருடத்திற்கான	2022 ரூபா	2021 ரூபா
LTV விகிதம்		
50% க்குக் குறைந்த	-	-
51-70%	**27,770,254,509**	28,440,620,295
71-90%	**-**	-
91-100%	**-**	-
100% க்கு மேற்பட்ட	**-**	-
மொத்தம்	**27,770,254,509**	28,440,620,295

44.2.3 கடன் இடர் செறிவு

தொழிற்துறை மற்றும் புவியியல் அமைவிடம் மூலம் கடன் இடரின் செறிவுகளை வங்கி கண்காணிக்கிறது.

கடன் இடர் செறிவு

கடன்கள் மற்றும் முற்பணங்கள், கடன் கடப்பாடுகள், நிதி உத்தரவாதங்கள் மற்றும் முதலீட்டுப் பிணையங்கள் என்பவற்றுக்கான கடன் இடர் செறிவு பற்றிய பகுப்பாய்வு ஒன்று கீழே தரப்பட்டுள்ளது.

	வாடிக்கையாளருக்கான கடன்களும் முற்பணங்களும்		முதலீட்டுக் கடன் பிணையங்கள்		கடன் கடப்பாடுகளும் நிதி உத்தரவாதங்களும்	
	2022 ரூபா	2021 ரூபா	2022 ரூபா	2021 ரூபா	2022 ரூபா	2021 ரூபா
கொண்டு செல்லும் தொகை	**215,372,501,881**	189,039,666,420	**65,082,462,630**	54,857,971,211	**387,262,902**	229,196,158
கடப்பாடு அளிக்கப்பட்ட/ உத்தரவாதம் அளிக்கப்பட்ட தொகை துறைவாரியான செறிவு கூட்டாண்மை :						
ஏனைய	-	-	-	-	**387,262,902**	229,196,158
அரசாங்கம்	-	-	**11,487,849,406**	4,813,547,891	-	-
வங்கிகள்	-	-	**53,594,613,224**	50,044,423,320	-	-
சில்லறை :						
தனிப்பட்ட உத்தரவாதம்	**117,387,564,475**	117,077,766,283	-	-	-	-
அடமானம்	**84,122,170,538**	58,287,823,393	-	-	-	-
பாதுகாப்பற்ற கடன்கள்	**13,862,766,869**	13,674,076,744	-	-	-	-
	215,372,501,881	189,039,666,420	**65,082,462,630**	54,857,971,211	**387,262,902**	229,196,158

44.3 திரவத்தன்மை இடர்

திரவத்தன்மை இடர் என்பது, பணம் அல்லது ஏனைய நிதிச் சொத்து ஒன்றை வழங்குவதன் மூலம் தீர்வளிக்கப்பட்ட அதனுடைய நிதிப் பொறுப்புகளுடன் தொடர்புடைய கடப்பாடுகளைப் பூர்த்தி செய்வதில் வங்கி எதிர்கொள்ளும் சிரமங்களாகும். எனவே, சாதாரண மற்றும் அழுத்தமான சூழ்நிலைகளில் இவை பூர்த்தி செய்ய வேண்டியதாக இருப்பின், வங்கி அதன் கொடுப்பனவுக் கடப்பாடுகளைப் பூர்த்தி செய்ய முடியாமல் போகும்.

திரவத்தன்மை இடர் முகாமைத்துவம்

வங்கி, திரவத்தன்மை இடரைக் கையாளுவதற்கு, மூலோபாயத்தை உருவாக்குவதுடன், அந்தக் கொள்கை அமுலாக்கத்தை மேற்பார்வை செய்யும் பொறுப்பை ALCO விற்குக் கையளிக்கிறது. ALCO வங்கியின் திரவக் கொள்கைகளையும், நடைமுறைகளையும் அங்கீகரிக்கிறது. மத்திய திறைசேரி, வங்கியின் திரவ நிலைமையை அன்றாடம் முகாமைத்துவம் செய்வதோடு, நாளாந்த அறிக்கைகளை மீளாய்வு செய்கிறது. விதிவிலக்குகள் மற்றும் எடுக்கப்பட்ட குறை தீர்ப்பு நடவடிக்கைகள் உள்ளடங்கலாக, ஒரு சுருக்கமான அறிக்கை கிரமமாக யுடுஊழு வுக்குச் சமர்ப்பிக்கப்படுகிறது. வங்கியின் திரவத்தன்மையைக் கையாளுகின்ற அணுகுமுறை, எதிர்பாராத நட்டங்களையோ அல்லது வங்கியின் நன்மதிப்புக்குப் பாதிப்பையோ ஏற்படுத்தாத வகையில், சாதாரண மற்றும் அழுத்தமான சூழ்நிலைகளில் அதன் கடப்பாடுகள் நிலுவையாக உள்ள போது, அவற்றைப் பூர்த்தி செய்வதற்கு எப்போதும் போதுமான திரவத்தன்மை உள்ளது என்பதை இயலுமான வரை உறுதிப்படுத்தக்கூடிய வகையில் உள்ளது. வங்கியின் திரவ மூலோபாயத்தின் முக்கியமான கூறுகள் பின்வருமாறு:

- வாடிக்கையாளரின் வைப்புகள் (சில்லறை மற்றும் கூட்டுறவு) மற்றும் மொத்த சந்தை வைப்புகள் மற்றும் இடைநேர் விளைவான வசதிகள் ஆகியவற்றை உள்ளடக்கிய பன்முகப்படுத்தப்பட்ட நிதித் தளம் ஒன்றைப் பேணுதல்.
- நாணயம் மற்றும் முதிர்வு என்பவற்றினால் பன்முகப்படுத்தப்பட்ட உயர் திரவத்தன்மைச் சொத்துக்களின் நிதிச் சொத்துப் பட்டியல் ஒன்றை வைத்திருத்தல்.
- திரவத்தன்மை விகிதங்கள், முதிர்வு பொருத்தப்பாடின்மைகள், வங்கியின் நிதிப் பொறுப்புகள், நிதிச் சொத்துக்களின் நடத்தைப் பண்புகள் என்பவற்றைக் கண்காணித்தலும், அத்துடன், வங்கியின் சொத்துக்கள் எந்தளவு பிரச்சினைக்குரியது என்பதைக் கண்காணித்தலும். இச்சொத்துக்கள், நிதியைப் பெற்றுக்கொள்வதற்கு சாத்தியமான பிணையத்தை உருவாக்காது.
- வங்கியின் திரவத்தன்மை நிலைமை பற்றிய அழுத்தப் பரீட்சையை நடத்துதல்.

மேற்கூறப்பட்ட விடயங்கள் ஒழுங்குபடுத்தல் தேவைப்பாட்டின் 20% குறைந்த பட்ச திரவச் சொத்துக்களைப் பேணுகின்ற தேவைப்பாட்டைப் பூர்த்தி செய்வதற்கு அவசியமாகும். திரவச் சொத்துக்கள் பணம், குறுங்கால வங்கி வைப்புகள் மற்றும் உடனடி விற்பனைக்காக வைத்திருக்கப்படும் திரவத்தன்மைக் கடன் பிணையங்களையும் உள்ளடக்கும்.

44.3.1 திரவத்தன்மை இடர்நேர்வுக்கு உள்ளாகும் தன்மை

திரவத்தன்மை இடர்நேர்வினை முகாமை செய்வதற்காக வங்கியினால் பயன்படுத்தப்படுகின்ற முக்கிய அளவீடானது, வாடிக்கையாளர்களிடம் இருந்தான வைப்புகளுக்கான திரவச் சொத்துக்களினதும், ஏனைய பொறுப்புக்களினதும் விகிதமாகும். இந்நோக்கத்திற்காக, திரவச் சொத்துக்கள், காசு மற்றும் காசுக்கு சமமானவை அத்துடன், செயற்பாடுமிக்க சந்தை மற்றும் திரவச் சந்தை காணப்படுகின்ற முதலீடு உள்ளடங்கலானவையாகக் கருதப்படுகின்றன. இலங்கை மத்திய வங்கியினால் ஸ்தாபிக்கப்பட்ட திரவத்தன்மை வரையறையுடன், வங்கியின் இணங்குவித்தலை அளவிடுவதற்கும் இதே கணிப்பீடு பயன்படுத்தப்படுகின்றது. அறிக்கையிடும் திகதியில் உள்ளவாறும், ஆண்டு காலப்பகுதியிலும், வாடிக்கையாளர்களிடம் இருந்தான பொறுப்புகளுக்கான தேறிய

திரவச் சொத்துக்களின் அறிக்கையிடப்பட்ட வங்கி விகிதத்தின் விபரங்கள் பின்வருமாறு காணப்பட்டன.

	2022 DBU %	2021 DBU %
டிசம்பர் 31 இல்	**27.83%**	26.18%
வருடத்திற்கான சராசரி	**27.16%**	27.64%
வருடத்திற்கான அதிகபட்சம்	**29.78%**	28.46%
வருடத்திற்கான குறைந்தபட்சம்	**25.10%**	26.18%

கொவிட் - 19 நோய்த் தொற்று நிலைமை காரணமாக, 2020 மே மாதத்தில் இலங்கை மத்திய வங்கியினால் நடைமுறைப்படுத்தப்பட்ட அதிவிசேட ஒழுங்குமுறைப்படுத்தல் வழிமுறைகளின் பிரகாரம் 2022 டிசம்பர் 31 வரையிலும் நியதி திரவச் சொத்துக்கள் விகிதத்தை கணக்கிடுகையில், திரவச் சொத்துக்களாக பின்வரும் சொத்துக்களைக் கருதுவதற்கு உரிமம் பெற்ற வங்கிகள் அனுமதிக்கப்பட்டுள்ளன.

- சிரேஷ்ட பிரஜைகள் விசேட வைப்புத் திட்டம் மீது கிடைக்கப் பெறத்தக்க வட்டி உதவுதொகை
- இலங்கை அரசாங்கத்தினால் உத்தரவாதம் அளிக்கப்பட்ட, அரசாங்கத்திற்குச் சொந்தமான நிறுவனங்களுக்கான கடன் அளவுகள் மற்றும் 10% கொண்ட உச்ச வரம்புடன் ஒரு ஆண்டை விஞ்சாத முதிர்ச்சியுடன்கூடிய நிதியியல் அறிக்கையிடல் நோக்கங்களுக்காக SLFRS 9 நிதியியில் சாதனங்களின் கீழ் கட்டம் 1 இல் வகைப்படுத்தப்பட்டவை.
- ஏனைய உரிமம் பெற்ற வங்கிகளில் உரிமம் பெற்ற வங்கிகளினால் வைத்திருக்கப்படும் நிலையான வைப்புகள்:

(அ) 20% உச்ச வரம்புடன் முதிர்ச்சி ஒரு ஆண்டை விஞ்சுவதற்கு காலம் எஞ்சியிருக்கின்றவிடத்து ஆயினும், இரண்டு ஆண்டுகளை விடக் குறைவாக அல்லது அதற்குச் சமமாக இருத்தல் வேண்டும்.

(ஆ) 30% உச்ச வரம்புடன் முதிர்ச்சிக்கான எஞ்சியிருக்கின்ற காலப்பகுதி இரண்டு ஆண்டுகளை விஞ்சுமாயின் ஆயினும், மூன்று ஆண்டுகளுக்குக் குறைவாக அல்லது அதற்குச் சமமாக இருத்தல்.

- வைப்புகளின் 20% க்குச் சமமாக வைப்புகள் மூலம் பிணையளிக்கப்பட்ட கடன்கள்
- கடன்களைத் தீர்ப்பனவு செய்வதில் ஊழியர் சேமலாப நிதியத்திடமிருந்து (EPF) கிடைக்கப் பெறத்தக்கவை.

எவ்வாறாயினும், வங்கியின் வலுவான திரவத்தன்மை நிலை காரணமாக வங்கிக்கு தாக்கம் எதுவும் இருக்கவில்லை.

44.3.2 எஞ்சிய ஒப்பந்தம்சார் முதிர்வுகளின் அடிப்படையில் நிதிப் பொறுப்புக்களின் பகுப்பாய்வு

கீழே தரப்பட்டுள்ள அட்டவணை 2022 டிசம்பர் 31 இல் உள்ளவாறு வங்கியின் நிதிப் பொறுப்புக்களின் தள்ளுபடி செய்யப்படாத நிதிப் பாய்ச்சல்களின் முதிர்வுத் தோற்றப்பாட்டைச் சுருக்கமாகத் தருகிறது. அறிவித்தலுக்கு உட்பட்ட மீள் கொடுப்பனவுகள் உடனடியாக அறிவித்தல் கொடுக்கப்பட வேண்டும் என்ற அடிப்படையில் எடுக்கப்பட்டுள்ளது. எனினும், வங்கி செலுத்த வேண்டிய தொகையை பெரும்பாலான வாடிக்கையாளர்கள் முன்னரான திகதியில் தேவைப்படுத்துவார்கள் என வங்கி எதிர்பார்க்கவில்லை. மேலும், கீழே உள்ள அட்டவணை, வைப்பு தக்கவைப்பு வரலாற்றின் அடிப்படையில் எதிர்பார்க்கப்பட்ட நிதிப் பாய்ச்சல்களைப் பிரதிபலிக்கவில்லை.

2022 டிசம்பர் 31 இல் உள்ளவாறு	கொண்டு செல்லும் தொகை ரூபா	மொத்தம் ரூபா	3 மாதங்களுக்கு குறைவான ரூபா	3 - 12 மாதங்கள் ரூபா	1 - 3 வருடங்கள் ரூபா	3 - 5 வருடங்கள் ரூபா	5 வருடங்களுக்கு மேல் ரூபா
வழித்தோன்றல் அல்லாத பொறுப்புக்கள்							
வங்கிகளுக்குச் செலுத்த வேண்டியவை	47,470,707,056	47,470,707,056	341,729,856	3,118,125,660	4,440,243,697	14,000,065,209	25,570,542,634
ஏனைய வாடிக்கையா-ளர்களுக்குச் செலுத்த வேண்டியவை	210,301,323,468	210,301,323,468	39,028,814,697	112,257,521,646	11,660,479,038	15,939,669,814	31,414,838,273
வழங்கப்பட்ட கடன்களும் ஏனைய கடன் பட்டோர் நிதியமும்	-	2,076,176,663	2,076,176,663	-	-	-	-
ஏனைய பொறுப்புக்கள்	7,293,487,262	8,804,727,995	1,713,880,930	2,363,638,596	2,110,610,176	1,135,661,764	1,480,936,529
மொத்த வழித்தோன்றல் அல்லாத பொறுப்புக்கள்	265,065,517,787	268,652,935,183	43,160,602,145	117,739,285,903	18,211,332,912	31,075,396,787	58,466,317,437

2021 டிசம்பர் 31 இல் உள்ளவாறு	கொண்டு செல்லும் தொகை ரூபா	மொத்தம் ரூபா	3 மாதங்களுக்கு குறைவான ரூபா	3 - 12 மாதங்கள் ரூபா	1 - 3 வருடங்கள் ரூபா	3 - 5 வருடங்கள் ரூபா	5 வருடங்களுக்கு மேல் ரூபா
வழித்தோன்றல் அல்லாத பொறுப்புக்கள்							
வங்கிகளுக்குச் செலுத்த வேண்டியவை	29,500,936,543	33,271,523,388	1,458,704,149	3,466,762,024	15,825,578,727	50,147,714	12,470,330,773
ஏனைய வாடிக்கையா-ளர்களுக்குச் செலுத்த வேண்டியவை	187,752,465,256	192,354,798,672	48,125,528,994	84,078,496,904	12,483,089,634	15,917,855,300	31,749,827,841
வழங்கப்பட்ட கடன்களும் ஏனைய கடன் பட்டோர் நிதியமும்	2,000,000,000	2,076,176,663	2,076,176,663	-	-	-	-
ஏனைய பொறுப்புக்கள்	7,693,300,812	7,693,300,812	1,497,536,500	2,065,274,787	1,844,186,327	992,306,358	1,293,996,840
மொத்த வழித்தோன்றல் அல்லாத பொறுப்புக்கள்	226,946,702,610	235,395,799,534	53,157,946,306	89,610,533,715	30,152,854,688	16,960,309,372	45,514,155,454

44.3.3 கடப்பாடுகள் மற்றும் இடைநேர் விளைவான பொறுப்புகளின் ஒப்பந்தம்சார் முதிர்வுகள்

பின்வரும் அட்டவணை, வங்கியின் இடைநேர் விளைவான பொறுப்புகள் மற்றும் கடப்பாடுகளை, அவற்றின் முதிர்வின் அடிப்படையில் ஒப்பந்த காலாவதியைக் காட்டுகின்றது. ஒவ்வொரு மீட்கப்படாத கடன் கடப்பாடும், அக்கடப்பாடு மீட்கப்படக்கூடிய முன்னரான திகதியை உள்ளடக்கி, நேர வரையறைக்குள் உள்ளடக்கப்பட்டுள்ளது. வழங்கப்பட்ட நிதி உத்தரவாத ஒப்பந்தங்களுக்காக குறிப்பிட்ட உத்தரவாதம், அழைக்கப்படக்கூடிய முன்னரான காலப்பகுதிக்கு உத்தரவாதத்தின் அதிகபட்ச தொகை ஒதுக்கப்பட்டுள்ளது.

2022 டிசம்பர் 31 இல் உள்ளவாறு

இடைநேர் விளைவான பொறுப்புகள்	கோரல் மீது ரூபா	3 மாதங்களுக்கு குறைவு ரூபா	3 முதல் 12 மாதங்கள் ரூபா	1 முதல் 5 வருடங்கள் ரூபா	5 வருடங்களுக்கு மேல் ரூபா	மொத்தம் ரூபா
வங்கி உத்தரவாதம் (வலுக்குறைப்பு இன்றி)	-	696,547	166,242,048	13,107,424	-	180,046,018
ஏனைய இடைநேர் விளைவான விடயங்கள் சேகரிப்புக்காக அனுப்பப்பட்ட உண்டியல்கள்	207,216,884	-	-	-	-	207,216,884
மொத்த இடைநேர் விளைவான பொறுப்புகள்	207,216,884	696,547	166,242,048	13,107,424	-	387,262,902

2021 டிசம்பர் 31 இல் உள்ளவாறு

இடைநேர் விளைவான பொறுப்புகள்	கோரல் மீது ரூபா	3 மாதங்களுக்கு குறைவு ரூபா	3 முதல் 12 மாதங்கள் ரூபா	1 முதல் 5 வருடங்கள் ரூபா	5 வருடங்களுக்கு மேல் ரூபா	மொத்தம் ரூபா
வங்கி உத்தரவாதம் (வலுக்குறைப்பு இன்றி)	-	687,730	164,137,728	12,941,508	-	177,766,966
ஏனைய இடைநேர் விளைவான விடயங்கள் - சேகரிப்புக்காக அனுப்பப்பட்ட உண்டியல்கள்	51,429,192	-	-	-	-	51,429,192
மொத்த இடைநேர் விளைவான பொறுப்புகள்	51,429,192	687,730	164,137,728	12,941,508	-	229,196,158

44.3.4 பணப்புழக்க ஒதுக்கம்

கீழே காணப்படும் அட்டவணை பணப்புழக்க நோக்கத்திற்காக வைத்திருக்கப்படும் வங்கியின் திரவச் சொத்துக்களின் கூறுகளை அமைக்கிறது.

2022 டிசம்பர் 31 இல் உள்ளவாறு	கொண்டு செல்லும் தொகை	நியாயப் பெறுமதி
காசு மற்றும் காசுக்கு சமமானவைகள்	2,889,883,677	2,889,883,677
வங்கியில் உள்ள இருப்புகள்	1,908,705,351	1,908,705,351
Repo	4,225,000,000	4,225,000,000
நிலையான வைப்புக்கள்	52,970,666,614	52,970,666,614
	61,994,255,642	61,994,255,642

*கொண்டு செல்லும் தொகைகள் அவற்றின் நியாயப் பெறுமதிகளை சராசரியாக மதிப்பீடு செய்கின்றன. ஏனெனில் அவை குறுகிய கால இயல்புடையவை (பன்னிரெண்டு மாதங்களுக்கும் குறைவாக).

44.3.5 திரவத்தன்மை உள்ளடக்க விகிதம்

ஒழுங்குமுறைப்படுத்துநர் மூலம் வரைவிலக்கணம் செய்யப்பட்டவாறான திரவத்தன்மை உள்ளடக்க விகிதமானது, 30 நாட்கள் காலப்பகுதி மீது வங்கியின் திரவத்தன்மை இடர்நேர்வுத் தொகுப்பு பற்றிய குறுகியகால தாக்குப்பிடிக்கும் தன்மையினை ஊக்குவிக்க முனைகின்றது. இவ்விகிதமானது, அழுத்தமான சூழ்நிலை ஒன்றில் உண்மையான மற்றும் எதிர்பாராத இடர்நேர்வுக்கு உள்ளாகும் தன்மையிலிருந்து தோன்றுகின்ற தேறிய காசு வெளிப்பாய்ச்சல்களின் மொத்த அளவுக்கு எதிராக அளவிடப்பட்ட திரவத்தன்மையைத் திரட்டுவதற்குப் பயன்படுத்தக்கூடிய உயர்தர திரவத்தன்மைச் சொத்துக்களின் தொகை என வரைவிலக்கணம் செய்யப்பட்டுள்ளது.

திரவத்தன்மை உள்ளடக்க விகிதமானது (LCR), வங்கியின் அழுத்தப் பரிசோதனைக் கட்டமைப்பை முழுமைப்படுத்துகின்றது. குறைந்தபட்ச ஒழுங்குமுறைப்படுத்தல் தேவைப்பாட்டிற்கு மிகையாக இவ்விகிதத்தைப் பேணுவதன் மூலம், திரவத்தன்மை உள்ளடக்க விகிதமானது, குறுகியகால திரவத்தன்மை அழுத்தத்தைத் தணிப்பதற்கு வங்கி

ஒழுங்குமுறைப்படுத்துநர் மூலம் வரைவிலக்கணம் செய்யப்பட்டவாறான திரவத்தன்மை உள்ளடக்க விகிதமானது, 30 நாட்கள் காலப்பகுதி மீது வங்கியின் திரவத்தன்மை இடர்நேர்வுத் தொகுப்பு பற்றிய குறுகியகால தாக்குப்பிடிக்கும் தன்மையினை ஊக்குவிக்க முனைகின்றது. இவ்விகிதமானது, அழுத்தமான சூழ்நிலை ஒன்றில் உண்மையான மற்றும் எதிர்பாராத இடர்நேர்வுக்கு உள்ளாகும் தன்மையிலிருந்து தோன்றுகின்ற தேறிய காசு வெளிப்பாய்ச்சல்களின் மொத்த அளவுக்கு எதிராக அளவிடப்பட்ட திரவத்தன்மையைத் திரட்டுவதற்குப் பயன்படுத்தக்கூடிய உயர்தர திரவத்தன்மைச் சொத்துக்களின் தொகை என வரைவிலக்கணம் செய்யப்பட்டுள்ளது.

திரவத்தன்மை உள்ளடக்க விகிதமானது (LCR), வங்கியின் அழுத்தப் பரிசோதனைக் கட்டமைப்பை முழுமைப்படுத்துகின்றது. குறைந்தபட்ச ஒழுங்குமுறைப்படுத்தல் தேவைப்பாட்டிற்கு மிகையாக இவ்விகிதத்தைப் பேணுவதன் மூலம், திரவத்தன்மை உள்ளடக்க விகிதமானது, குறுகியகால திரவத்தன்மை அழுத்தத்தைத் தணிப்பதற்கு வங்கி போதுமான திரவத்தன்மை வளங்களை வைத்திருக்கின்றது என்பதை உறுதி செய்வதற்கு நாடுகின்றது.

2015 ஏப்ரல் 01 தொடக்கம் தொடங்கி, அனைத்து உரிமம் பெற்ற சிறப்பியல்பு வாய்ந்த வங்கிகளும், உள்நாட்டு நாணய தொழிற்பாடுகளுக்காக ரூபா திரவத்தன்மை குறைந்தபட்ச தேவைப்பாடு மற்றும் 2019 ஜனவரி 01 தொடக்கம் ஒட்டுமொத்த தொழிற்பாடுகளுக்காக 100% இல் இருந்து அனைத்து நாணயத் திரவத்தன்மை குறைந்தபட்ச தேவைப்பாடு தொடர்பில் இலங்கை மத்திய வங்கியினால் குறித்துரைக்கப்பட்டவாறான திரவத்தன்மை உள்ளடக்க விகிதங்களைப் பேணி வந்துள்ளன.

கொவிட் - 19 நோய் தொற்று நிலைமை காரணமாக, 2021 மே மாதத்தில் இலங்கை மத்திய வங்கியினால் நடைமுறைப்படுத்தப்பட்ட அதிவிசேட ஒழுங்குமுறைப்படுத்தல் வழிமுறைகளின் பிரகாரம் திரவத்தன்மை உள்ளடக்க விகிதத்தின் குறைந்தபட்ச தேவைப்படுத்தலானது, அதிகரித்த மேற்பார்வை மற்றும் அவ்வப்போதான அறிக்கையிடல் என்பவற்றுடன் 2022 டிசம்பர் 31 வரை 90% ஆகக் குறைக்கப்பட்டது.

டிசம்பர் 31 இல் குறைந்தபட்ச தேவை (%) - 2021 ஜூலை 01	இலிலிருந்து நடைமுறைக்கு வருகிறது மே முதல் 2020 டிசம்பர் 31 2022 வரை
100	**90**

டிசம்பர் 31 இல் உள்ளவாறு வங்கியின் திரவத்தன்மை பரப்பெல்லை விகிதங்கள் (%) பின்வருமாறு:

டிசம்பர் 31 இல் உள்ளவாறு	2022	2021
உள்ளூர் நாணய நடவடிக்கைகளுக்கான ரூபாய் திரவத்தன்மைத் தேவை	**167.25**	174

44.3.6 நியதிச் சட்ட திரவச் சொத்து விகிதம்

2022 டிசம்பர் மாதத்திற்கான	**27.83%**
2021 டிசம்பர் மாதத்திற்கான	26.18%

44.3.7 ஏனைய வங்கிகள் மற்றும் வாடிக்கையாளரிடமிருந்து (வைப்புக்கள்) வரவேண்டிய கடன்கள் மற்றும் வரவுகளுக்குரிய - வங்கிகளுக்கு வரவேண்டியவையும், ஏனைய வாடிக்கையாளருக்கு நிலுவையாக உள்ளவையும் (முற்பணம்) - விகிதம்

வங்கி, அதன் கடன் செயற்பாடுகளை நடத்துவதற்கு வங்கி மற்றும் வாடிக்கையாளருக்குச் செலுத்த வேண்டிய தொகைகள் முக்கியமானவை என அறிந்துள்ளது.

இவை கீழே தரப்பட்ட விகிதங்களை அடிப்படையாகக் கொண்டு கண்காணிக்கப்படுகிறது. இவ்விகிதங்கள் வாடிக்கையாளருக்குரிய கடன்களையும், வரவுகளையும், ஏனைய வாடிக்கையாளரிடமிருந்தும் (வைப்புகள்) வங்கிகளிடமிருந்தும் வரவேண்டிய நிலுவைகளின் விகிதாசாரமாக ஒப்பிடுகிறது.

ஏனைய வங்கிகள் மற்றும் வாடிக்கையாளர்களுக்குச் செலுத்த வேண்டிய கடன்கள் மற்றும் வரவுகளுக்குரிய - வங்கிகளிடமிருந்து வரவேண்டியவையும், ஏனைய வாடிக்கையாளர்களிடமிருந்து வரவேண்டிய நிலுவைகளும் - விகிதம்

2022 டிசம்பர் 31 இல் உள்ளவாறு	**95.81%**
2021 டிசம்பர் 31 இல் உள்ளவாறு	90.64%

கீழே உள்ள அட்டவணை, 2022.12.31 மற்றும் 2021.12.31 நிலவரப்படி வங்கியில் உள்ள நிதி மற்றும் நிதி சாராத சொத்துகளின் கிடைக்கும் தன்மையைக் குறிப்பிடுகிறது.

2022	அடமானமாக	சுமை உறுதியளிக்கப்பட்ட	சுமையற்ற ஏனைய	ஏனைய	மொத்தம்
காசு மற்றும் காசுக்கு சமமானவைகள்		-	-	2,889,883,677	2,889,883,667
வங்கியில் உள்ள இருப்புகள்		-	-	6,133,705,351	6,133,705,351
இலாபம் அல்லது நட்டம் மூலம் நியாயப் பெறுமதியில் பங்குரிமைக் கருவிகள்		-	-	120,280	120,280
பதிவழிப்புச் செலவில் நிதிச் சொத்துக்கள் - ஏனைய வாடிக்கையாளரிடம் இருந்து வரவேண்டிய கடன்களும் வரவுகளும்		-	-	198,008,145,155	198,008,145,155
பதிவழிப்புச் செலவில நிதிச் சொத்துக்கள் கடன் மற்றும் ஏனைய கருவிகள்		1,347,726,270	-	63,731,909,638	65,079,635,908
ஏனைய பங்குரிமைக் கருவிகள் மூலம் நியாயப் பெறுமதியில் விரிவான வருமானம்		-	-	2,289,919	2,289,919
ஏனைய சொத்துக்கள்		-	-	8,042,615,550	8,042,615,550
மொத்தம்		1,347,726,270	-	278,808,669,570	280,156,395,840

2021	அடமானமாக	சுமை உறுதியளிக்கப்பட்ட	சுமையற்ற ஏனைய	ஏனைய	மொத்தம்
காசு மற்றும் காசுக்கு சமமானவைகள்		-	-	1,486,878,989	1,486,878,989
வங்கியில் உள்ள இருப்புகள்		-	-	6,596,072,932	6,596,072,932
இலாபம் அல்லது நட்டம் மூலம் நியாயப் பெறுமதியில் பங்குரிமைக் கருவிகள்		-	-	188,140	188,140
பதிவழிப்புச் செலவில் நிதிச் சொத்துக்கள் - ஏனைய வாடிக்கையாளரிடம் இருந்து வரவேண்டிய கடன்களும் வரவுகளும்		-	-	175,229,666,656	175,229,666,656
பதிவழிப்புச் செலவில நிதிச் சொத்துக்கள் - கடன் மற்றும் ஏனைய கருவிகள்		2,690,695,651	-	52,165,490,833	54,856,186,484
ஏனைய பங்குரிமைக் கருவிகள் மூலம் நியாயப் பெறுமதியில் விரிவான வருமானம்		-	-	2,289,919	2,289,919
ஏனைய சொத்துக்கள்		-	-	4,907,060,297	4,907,060,297
மொத்தம்		2,690,695,651	-	240,387,647,766	243,078,343,416

44.4 சந்தை இடர்

சந்தை இடர் என்பது, வட்டி விகிதங்கள், ஒப்புரவு விலைகள், வெளிநாட்டு நாணயமாற்று விகிதங்கள் மற்றும் கடன் விரிப்புகள், (இது கடப்பாட்டாளர்/ வழங்குநருடைய கடன் நிலையின் மாற்றங்களுடன் தொடர்புபடாது) போன்ற சந்தை விலைகளில் ஏற்படும் மாற்றங்களுக்கான இடராகும். இந்த இடர் வங்கியின் வருமானம் அல்லது நிதிக் கருவிகளின் வைப்புகளின் பெறுமதியைப் பாதிக்கும். வங்கியின் சந்தை இடர் முகாமைத்துவத்தின் குறிக்கோள் யாதெனில், வங்கியின் இடர் மீதான திரும்பலை உச்ச அளவில் பெறுகின்ற அதேவேளை, வங்கியின் கடனளிப்பை உறுதிப்படுத்துவதற்கு ஏற்றுக்கொள்ளக்கூடிய அளவுகோல்களுக்குள் சந்தை இடரை முகாமைத்துவம் செய்வதும், சந்தை இடர் வெளிப்பாடுகளைக் கட்டுப்படுத்துவதுமாகும்.

சந்தை இடர் தொடர்பான முழுமையான அதிகாரம் ALCO விற்கு வழங்கப்பட்டுள்ளது. ALCO ஒவ்வொரு வகையான இடர்களுக்கும் கடன் கலவைகளுக்கும் வரையறைகளை விதிக்கும். வியாபார நிதிச் சொத்துப் பட்டியல்களின் (Portfolio) வரையறைகளின் மட்டத்தைத் தீர்மானிப்பதில் ALCO சந்தை திரவத்தன்மையை முதன்மை காரணியாகக் கவனத்திற் கொள்ளும்.

கீழே தரப்பட்டுள்ள அட்டவணை, வியாபாரம் மற்றும் வியாபாரம் அல்லாத நிதிச் சொத்துப் பட்டியல்களுக்கு இடையிலான சந்தை இடருக்கு உட்பட்ட சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் ஒதுக்கீட்டைத் தருகிறது.

2022 டிசம்பர் 31 இல் உள்ளவாறு	கொண்டு செல்லும் தொகை	சந்தை இடர் அளவீடு வியாபார கலவை	வியாபாரமல்லாத கலவை
சந்தை இடருக்கு உட்பட்ட சொத்துக்கள்			
காசு மற்றும் காசுக்கு சமமானவைகள்	**2,889,883,677**	**-**	**2,889,883,677**
வங்கியுடனான வைப்புகள்	**6,133,705,351**	**-**	**6,133,705,351**
இலாபம் அல்லது நட்டம் ஊடாக நியாயப் பெறுமதியில் பங்குரிமைக் கருவிகள்	**120,280**	**120,280**	**-**
பதிவழிப்பு செலவில் நிதி முதலீடுகள் - கடன் மற்றும் ஏனைய கருவிகள்	**65,079,635,908**	**-**	**65,079,635,908**
பதிவழிப்பு செலவில் நிதி சொத்துக்கள் - ஏனைய வாடிக்கையாளர்களிடமிருந்து பெறவேண்டிய கடன்களும் வரவுகளும்	**198,008,145,155**	**-**	**198,008,145,155**
ஏனைய பங்குரிமைக் கருவிகள் மூலம் நியாப் பெறுமதியில் விரிவான வருமானம்	**2,289,919**	**-**	**2,289,919**
ஏனைய சொத்துக்கள்	**6,018,325,952**	**-**	**6,018,325,952**
சந்தை இடருக்கு உட்பட்ட பொறுப்புகள்			
வங்கிகளுக்கான நிலுவைகள்	**47,470,707,056**	**-**	**47,470,707,056**
ஏனைய வாடிக்கையாளருக்கான நிலுவைகள்	**210,301,323,468**	**-**	**210,301,323,468**
வழங்கப்பட்ட கடன் மற்றும் நிதியங்கள்	**-**	**-**	**-**
நடைமுறை வரி பொறுப்புகள்	**1,011,924,146**	**-**	**1,011,924,146**
ஏனைய பொறுப்புகள்	**6,426,430,198**	**-**	**6,426,430,198**

2021 டிசம்பர் 31 இல் உள்ளவாறு	கொண்டு செல்லும் தொகை	சந்தை இடர் அளவீடு வியாபார கலவை	வியாபாரமல்லாத கலவை
சந்தை இடருக்கு உட்பட்ட சொத்துக்கள்			
காசு மற்றும் காசுக்கு சமமானவைகள்	1,486,878,989	-	1,486,878,989
வங்கியுடனான வைப்புகள்	6,596,072,932	-	6,596,072,932
இலாபம் அல்லது நட்டம் ஊடாக நியாயப் பெறுமதியில் பங்குரிமைக் கருவிகள்	188,140	188,140	-
பதிவழிப்பு செலவில் நிதி முதலீடுகள் - கடன் மற்றும் ஏனைய கருவிகள்	54,856,210,318	-	54,856,210,318
பதிவழிப்பு செலவில் நிதி சொத்துக்கள் - ஏனைய வாடிக்கையாளர்களிடமிருந்து பெறவேண்டிய கடன்களும் வரவுகளும்	175,229,666,656	-	175,229,666,656
ஏனைய பங்குரிமைக் கருவிகள் மூலம் நியாப் பெறுமதியில் விரிவான வருமானம்	2,289,919	-	2,289,919
ஏனைய சொத்துக்கள்	3,721,641,936	-	3,721,641,936
சந்தை இடருக்கு உட்பட்ட பொறுப்புகள்			
வங்கிகளுக்கான நிலுவைகள்	29,500,936,543	-	29,500,936,543
ஏனைய வாடிக்கையாளருக்கான நிலுவைகள்	187,752,465,256	-	187,752,465,256
வழங்கப்பட்ட கடன் மற்றும் நிதியங்கள்	2,000,000,000	-	2,000,000,000
நடைமுறை வரி பொறுப்புகள்	503,021,886	-	503,021,886
ஏனைய பொறுப்புகள்	5,514,857,775	-	5,514,857,775

சந்தை இடர்நேர்வு முகாமைத்துவம்

சந்தை இடர்நேர்வு முகாமைத்துவ அறிக்கையிடலானது, இடர்நேர்வுத் தொகுப்பு மீதான வெளிப்படைத் தன்மையினை உருவாக்கி, வங்கியின் அனைத்து மட்டங்களிலும் மைய சந்தை இடர்நேர்வு இயக்கக் காரணிகளைப் புரிந்து கொள்வதை வசதிப்படுத்துகின்றது. சந்தை இடர்நேர்வு, மூலதனம் மீதான தாக்கம் மற்றும் உழைப்புகள் என்பன பற்றி அழுத்தப் பரிசோதனை ஊடாக கிரமமமான அறிக்கையிடலையும், அதேபோன்று, தேவைக்கேற்றவாறான அறிக்கையிடலையும் முகாமைத்துவமும், சபைக் குழுக்களும் பெற்றுக்கொள்கின்றன. தொழிற்பாட்டு இடர்நேர் முகாமைத்துவக் குழுவும், சொத்து மற்றும் பொறுப்புக் குழுவும் இடர்நேர்வு பற்றிய தகவல்களை மாதாந்தம் மற்றும் காலாண்டு உள்ளடங்கலாக பலவகையான கால இடைவெளிகளில் பெற்றுக்கொள்கின்றன.

வர்த்தகப்படுத்தல் மற்றும் வர்த்தகம் அல்லாத சொத்துப்பட்டியல்களுக்கு இடையில் சந்தை இடர்நேர்வுக்கான அதன் கடன் அளவுகளை வங்கி வெவ்வேறாகப் பிரிக்கின்றது. வர்த்தகப்படுத்தல் சொத்துப்பட்டியல்கள் பிரதானமாக வங்கியின் திறைசேரி பிரிவினால் வைத்திருக்கப்படுவதுடன், சந்தை விலைகுறித்தலில் இருந்து தோன்றுகின்ற நிலைமைகளையும் அது உள்ளடக்குவதுடன், சீர்மதிப்புப் பெறுமதி அடிப்படையில் முகாமை செய்யப்படும் நிதியியல் சொத்துக்களினதும், பொறுப்புக்களினதும் இலாபத்தினை உழைக்கும் நோக்குடன் வைத்திருக்கப்படுகின்றன.

சந்தை இடர்நேர்வுக்குள்ளாகும் தன்மையினைத் தணிப்பதற்கும், மட்டுப்படுத்துவதற்கும் வங்கி பல்வேறு வகையான கருவிகளை ஈடுபடுத்துகின்றது

வர்த்தகப்படுத்தல் அல்லாத சந்தை இடர்நேர்வு

வர்த்தகப்படுத்தல் அல்லாத சந்தை இடர்நேர்வானது, எமது வர்த்தகப் பிரிவுகளின் நடவடிக்கைகளுக்கு வெளியில் இருந்தும், எமது வங்கி ஏட்டிலும் சில ஐந்தொகைக்கு வெளியிலான விடயங்களில் இருந்தும் முதன்மையாகத் தோன்றுகின்றது. வங்கியை இடர்நேர்வுக்குள்ளாகும் முக்கிய சந்தை இடர்நேர்வுக் காரணிகளும், இடர்நேர்வு முகாமைத்துவக் குழுவினால் மேற்பார்வை செய்யப்படுபவையும் பின்வருமாறு:

- வட்டிவீத இடர்நேர்வு (உட்பொதிந்த தெரிவிலிருந்து தோன்றுகின்ற இடர்நேர்வு மற்றும் சிலவகையான உற்பத்தி வகைகளுக்கான நடத்தை விதங்களில் மாற்றங்கள் உள்ளடங்கலாக)
- பரஸ்பர பரிமாற்றல் ஒப்பந்தங்கள் போன்ற காப்பு சாதனங்களில் வெளிநாட்டுச் செலாவணி போன்ற வகையான ஐந்தொகை விடயங்களுக்கு வெளியில் இருந்து தோன்றுகின்ற சந்தை இடர்நேர்வுகள்.

44.4.1 வட்டிவீத இடர்நேர்வு

வட்டிவீத இடர்நேர்வு என்பது, சந்தை வட்டி வீத மாற்றங்களின் காரணமாக, வங்கியின் உழைப்புகள் மீதும், தேறிய சொத்துப் பெறுமதிகள் மீதும் சாத்தியமான தாக்கமாகும். ஐந்தொகைக்கு வெளியிலும், ஐந்தொகை மீதும் வங்கியின் முதன்மை மற்றும் வட்டி காசுப் பாய்ச்சல்கள் (இறுதி முதிர்வுகள் உள்ளடங்கலாக) மீள் விலையிடல் திகதிகளில் பொருந்தாமல் காணப்படும் போது, வட்டிவீத இடர்நேர்வு தோன்றுகின்றது. இடர்நேர்வுத் தொகையானது, வட்டிவீத மாற்றங்களின் பரிமானம் மற்றும் போக்கு அத்துடன், பொருந்தாத நிலையின் முதிர்வுக் கட்டமைப்பு என்பவற்றின் தொழிற்பாடு ஒன்றாகக் காணப்படுகின்றது. வங்கியின் கடன் வழங்கல், நிதியிடல், முதலீட்டு நடவடிக்கைகள் என்பன வட்டிவீத இடர்நேர்வுக்குத் துணையளிக்கின்றன.

அனைத்தையும் உள்ளடக்கிய வியாபார உபாயம் ஒன்றின் பின்னணியிலும், வட்டிவீத இடர்நேர்வு முகாமைத்துவம் மேற்கொள்ளப்படுகின்றது. வட்டிவீத இடர்நேர்வினை முகாமை செய்வதில் காணப்படும் உபாயங்களுக்கு அமைவாக, வட்டிவீத இடர்நேர்வினை முகாமை செய்து கட்டுப்படுத்துவதற்கான செயற்திறன் வாய்ந்த மற்றும் அனைத்தையும் உள்ளடக்கிய நடைமுறைகளை வங்கி உருவாக்கி நடைமுறைப்படுத்தியுள்ளது. இந்நடைமுறைகள், வங்கியின் வட்டிவீத இடர் எடுத்துக்கொள்ளும் செயற்பாடுகளின் அளவிற்கும், சிக்கல்வாய்ந்த தன்மைக்கும் அமைவாகக் காணப்படுகின்றன.

உகப்பான வருவாய்களில் அனுகூலம் பெறுவதற்கான நிதியங்களின் மாற்றல் விலையிடல் நுட்பங்களைப் பயன்படுத்தி, முதிர்ச்சி பொருந்தாமை இடைவெளிகளை மீள் விலையிடுவதன் ஊடாக வங்கி வட்டிவீத இடர்நேர்வினை முகாமை செய்கின்றது. நிதிய மாற்றல் விலையின் ஊடாக, சொத்துப்பட்டியல்கள் காப்பிடப்படுகின்றன. இவ்வணுகுமுறையின் ஊடாக வங்கி, கடன் வழங்குதல் மற்றும் நிதியிடல் என்பவற்றுக்கு இடையில் வட்டிவீத இடர்நேர்வு ஒவ்வொரு நேரத் தொகுதியிலும் குறைவாகக் காணப்படுகின்றது என்பதை உறுதி செய்கின்றது. ஆகையினால், வங்கியின் வட்டிவீத இடர்நேர்வில் பெரும்பாலானவை, சொத்துக்களினதும், பொறுப்புக்களினதும் காப்பிடப்படாத பாகத்திலிருந்து உருவாகின்றன.

வழமையாக, வட்டிவீத இடர்நேர்வானது, இரு கூறுகளாகப் பிரிக்கப்படுகின்றன: வர்த்தகப்படுத்தப்பட்ட வட்டி வீத இடர்நேர்வு மற்றும் வர்த்தகப்படுத்தப்படாத வட்டி வீத இடர்நேர்வு என்பன அவையாகும். வர்த்தகப்படுத்தப்பட்ட வட்டி வீத இடர்நேர்வானது, வர்த்தக செயற்பாடுகள் மற்றும் அதன் பாதிப்புக்களுடன் தொடர்புடையதாக்கப்படும் அதேவேளை, மற்றையது, பொதுவாக ஐந்தொகை மீதான அல்லது வங்கி ஏடுகளுடன் தொடர்புடைய வட்டிவீத இடர்நேர்வாகக் குறிப்பிடப்படுவதுடன், வங்கியின் மைய வங்கித் தொழில் செயற்பாடுகளில் இருந்து தோன்றுகின்றது.

வங்கி ஏடுகளில் வட்டிவீத இடர்நேர்வு (IRRBB)

வங்கி ஏட்டில் காணப்படும் வட்டிவீத இடர்நேர்வானது, வட்டி வீதங்களின் அசைவுகளில் இருந்து தோன்றுகின்ற வங்கியின் மூலதனம் மற்றும் உழைப்புகள் இரண்டுக்குமான இடர்நேர்வாகும். இது, வங்கி ஏடு கடன் அளவுகளைப் பாதிக்கின்றது. வட்டியுடைய சொத்துக்களின் மற்றும் பொறுப்புக்களின் முதிர்வுப் பொருந்தாமைகளை இது உள்ளடக்குவதுடன், வேறுபட்ட வட்டிவீத வளையிகளைப் பயன்படுத்துகின்ற நிதியியல் சாதனங்களுக்கான வட்டி வீதங்களின் தொடர்புடைய மாற்றங்கள் பற்றிய தாக்கத்தினை விபரிக்கின்றது.

வட்டிவீத இடர்நேர்வானது, காலப்போக்கில் வட்டி வீதங்கள் நகர்வதனால் அதன் நிதியியல் நிலைமைகளில் சீர்குலைவினை வங்கி எதிர்கொள்கின்ற இடர்நேர்வுமாகும்.

வங்கியின் வட்டிவீத நிலையானது, பொறுப்புக்களின் காலப்பகுதி ஓரளவிற்கு மீள் விலையிடல் தொகுப்பின் குறுகிய காலப்பகுதியில் காணப்படுகின்ற சொத்துக்களின் காலப்பகுதியினை விடக் குறைவானது என்பதாகும். இப்பொருந்தாமையினை கருத்திற் கொள்கையில், சாதாரண சூழநிலைகளின் கீழ் அதிகரிக்கும் வட்டி வீதங்கள், வங்கியின் வட்டி வருமானத்தின் மீது எதிர்மறையான தாக்கத்தினைக் கொண்டிருக்கும். மறுதரத்தில் பொறுப்புக்கள் மீள் விலையிடல் சொத்துக்களை விட மிகவும் விரைவானது என்பதனால், பொறுப்புக்கள் மீது செலுத்தப்படும் சராசரி வட்டி வீதங்கள் குறைவான சந்தை வட்டி வீதங்களுக்கு மிக விரைவாக ஏற்றதாக ஆக்கிக்கொள்ளும். இதனால், இது, வங்கியின் தேறிய வட்டி வருமானத்திற்கு ஆதரவளிக்கும்.

நடப்பு ஆண்டுக் காலப்பகுதியிலும், அதுபோன்று முற்போர்ந்த ஆண்டிலும் வங்கித் தொழிற்துறையானது, அரசிறை மற்றும் நாணயத் தூண்டுதல்களின் விளைவாக எதிர்பாராத சவால்களை எதிர்கொண்டிருந்தன. நோய்த் தொற்றுப் பரவியதன் காரணமாக, 2022ஆம் ஆண்டு காலப்பகுதியில் உள்நாட்டு பொருளாதார செயற்பாடுகள் நிச்சயமின்மை காரணமாகப் பாதிக்கப்பட்டமை மற்றும் பொருளாதார நிலைமைகளின் மோசமான தன்மையினைத் தணிப்பதற்கு, காலத்திற்குக் காலம் அமுல்படுத்தப்பட்ட பல்வேறு கொள்கைகள் மற்றும் ஒழுங்குவிதிகள் காரணமாக பாதிக்கப்பட்டிருந்தமை அதிகமான சான்றாகத் தோற்றம் பெற்றிருந்தன.

இந்நோக்கில், வங்கியானது, இடர்நேர்விலுள்ள உழைப்புகள் மற்றும் பங்குமூலதன பொருளாதாரப் பெறுமதி (EVE) என்ற இரண்டு அளவீடுகளையும் பயன்படுத்தி, வங்கி ஏட்டுக் கடனளவுகளின் வட்டிவீத இடர்நேர்வினை (IRRBB) முகாமை செய்கின்றது. தொடர்ச்சியான அடிப்படையில் வட்டிவிகித இடர்நேர்வினை மத்திய மயப்படுத்தப்பட்ட விதத்தில் முகாமை செய்வதற்கான பொறுப்பு திறைசேரி பிரிவிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. இங்கு சுயாதீன மேற்பார்வைத் தொழிற்பாட்டின் மீதான இரண்டாம் நிலை பாதுகாப்பாக செயற்படுகின்ற இடர்நேர்வு முகாமைத்துவப் பிரிவு இயங்குகின்றது.

பொருளாதார பெறுமதியின் அடிப்படையிலான வழிமுறைகள், சொத்துக்கள், பொறுப்புக்கள் மற்றும் வட்டிவீத அசைவுகளில் இருந்து ஏற்படுகின்ற ஐந்தொகைக்கு வெளியிலான கடன் அளவீடுகள், கணக்கீட்டுப் பரிகாரத்தின் சுயாதீனம் என்பவற்றின் பொருளாதாரப் பெறுமதியின் மாற்றங்களைக் (EVE) கண்காணிக்கின்றது. இதன் ஊடாக, வங்கி, வங்கி மேற்பார்வை மீதான பாசல் குழுவின் மூலம் வரைவிலக்கணம் செய்யப்பட்டவாறு, உள்ளக மூலதனப் போதுமை விகித செயன்முறைக்கான நியமச் சூழ்நிலைகளின் கீழ் வங்கி ஏட்டின் பங்குரிமை மூலதனப் பொருளாதாரப் பெறுமதியில் மாற்றத்தை அளவிடுகின்றது.

உழைப்புகள் அடிப்படையில் அமைந்த வழிமுறைகள், வட்டிவீத அசைவுகளில் இருந்து தோன்றுகின்ற வரையறை செய்யப்பட்ட கால அளவின் மீது சில வரையறை செய்யப்பட்ட அளவுகோல் சூழ்நிலைகளுடன் ஒப்பிட்டு தேறிய வட்டி வருமானத்தில் (NII) எதிர்பார்க்கப்பட்ட மாற்றத்தைக் கண்காணிக்கின்றது.

44.4.2 முதிர்ச்சி இடைவெளிகள்

இடர்நேர்வுக் குழுவினால் ஆக்கப்பட்ட பரிந்துரைகளை அடிப்படையாகக் கொண்டு, முகாமைத்துவமும், சபையும் வங்கிக்கான திரவத்தன்மை மற்றும் நிதியியல் இடர்நேர்வு உபாத்தையும், அதேபோன்ற இடர்நேர்வு ஏற்பினையும் வரையறை செய்கின்றன. திரவத்தன்மை இடர்நேர்வினை அளவிட்டு கட்டுப்படுத்துவதற்கும், அதேபோன்று எமது நீண்டகால நிதியியல் திடத்திற்கும் வங்கிக்கு பிரயோகிக்கப்படுகின்ற வரையறைகளை சபை இடர்நேர்வு முகாமைத்துவக் குழு குறைந்தது ஆண்டு தோறும் மீளாய்வு செய்து அனுமதிக்கின்றது.

அத்தகைய கண்காணித்தலானது, பிரதானமாக, வங்கியின் இடர்நேர்வு ஏற்பிற்கு அமைவாக, அனுமதிக்கப்பட்ட விகிதங்கள் மற்றும் இடர்நேர் மட்டங்கள் ஊடாக இருப்பு அணுகுமுறையினை அடிப்படையாகக் கொண்டு காணப்படுகின்ற அதேவேளை, பிரபல்யமான முதிர்ச்சி பொருந்தாமை அல்லது முதிர்ச்சி இடைவெளி பகுப்பாய்வாகக் காணப்படுகின்ற பாய்ச்சல் அணுகுமுறைக் கருவிகளை மற்றயை திரவத்தன்மை இடர்நேர்வு முகாமைத்துவ மற்றும் கண்காணித்தல் முறை என்பனவற்றைப் பயன்படுத்துகின்றது.

முதிர்ச்சி இடைவெளிகளுடன் ஒன்றுசேர்த்து உரிய காசுப் பாய்ச்சலுக்கான அறிக்கையிடும் திகதியில்.். முதிர்ச்சித் திகதியில் எஞ்சியிருக்கும் காலப்பகுதியின் அடிப்படையில் 2022 டிசம்பர் 31 அன்று உள்ளவாறு வங்கியின் மொத்த சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் பற்றிய தொகுப்பு அட்டவணையில் தரப்பட்டுள்ளது.

2022 டிசம்பர் 31இல் உள்ளவாறு	கொண்டு செல்லும் தொகை ரூபா	3 மாதங்களுக்கு குறைவு ரூபா	3 - 12 மாதங்கள் ரூபா	1 - 5 5 வருடங்கள் ரூபா	வருடங்களுக்கு மேல் ரூபா
வட்டி ஈட்டும் சொத்துக்கள்					
மத்திய வங்கியுடனான காசு மற்றும் மீதிகள்	2,889,883,677	2,889,883,677	-	-	-
வங்கிகளுடனான வைப்புகள்	6,133,705,351	6,133,705,351	-	-	-
இலாபம் அல்லது நட்டம் மூலம் நியாயப் பெறுமதியில் பங்குரிமைக் கருவிகள்	120,280	120,280	-	-	-
பதிவழிப்பு செலவில் நிதிச் சொத்துக்கள் - ஏனைய வாடிக்கையாளர்களிடமிருந்து வரவேண்டிய கடன்களும் வரவுகளும்	215,372,501,881	20,765,534,350	68,158,625,869	88,021,524,268	38,426,817,393
பதிவழிப்பு செலவில் நிதி முதலீடுகள் - கடன்கள் மற்றும் ஏனைய கருவிகள்	65,082,462,630	36,189,771,645	22,925,323,999	4,858,812,738	1,108,554,248
நிதிச் சொத்துக்கள் - ஏனைய விரிவான வருமானம் ஊடாக நியாயப் பெறுமதி	2,289,919	-	-	-	2,289,919
மொத்த சொத்துக்கள்	289,480,963,738	65,979,015,303	91,083,949,869	92,880,337,006	39,537,661,560
வட்டி ஏற்கும் பொறுப்புக்கள்					
வங்கிகளுக்கான நிலுவைகள்	47,470,707,056	341,729,856	3,118,125,660	18,440,308,907	25,570,542,634
ஏனைய வாடிக்கையாளருக்கான நிலுவைகள்	210,301,323,468	39,028,814,697	112,257,521,646	27,600,148,852	31,414,838,273
வழங்கப்பட்ட கடன்பத்திரங்கள் மற்றும் ஏனைய பெறப்பட்ட நிதியங்கள்	2,000,000,000	2,000,000,000	-	-	-
மொத்தப் பொறுப்புகள்	259,772,030,524	41,370,544,552	115,375,647,306	46,040,457,758	56,985,380,907
இடைவெளிகள்	29,708,933,214	24,608,470,751	(24,291,697,438)	46,839,879,248	(17,447,719,347)

2021 டிசம்பர் 31இல் உள்ளவாறு	கொண்டு செல்லும் தொகை ரூபா	3 மாதங்களுக்கு குறைவு ரூபா	3 - 12 மாதங்கள் ரூபா	1 - 5 5 வருடங்கள் ரூபா	வருடங்களுக்கு மேல் ரூபா
வட்டி ஈட்டும் சொத்துக்கள்					
மத்திய வங்கியுடனான காசு மற்றும் மீதிகள்	1,486,878,989	1,486,878,989	-	-	-
வங்கிகளுடனான வைப்புகள்	6,596,072,932	6,596,072,932	-	-	-
இலாபம் அல்லது நட்டம் மூலம் நியாயப் பெறுமதியில் பங்குரிமைக் கருவிகள்	188,140	188,140	-	-	-
பதிவழிப்பு செலவில் நிதிச் சொத்துக்கள் - ஏனைய வாடிக்கையாளர்களிடமிருந்து வரவேண்டிய கடன்களும் வரவுகளும்	189,039,666,420	18,110,092,805	49,460,589,634	87,271,577,867	34,197,406,113
பதிவழிப்பு செலவில் நிதி முதலீடுகள் - கடன்கள் மற்றும் ஏனைய கருவிகள்	54,857,971,211	39,183,286,650	10,237,166,224	623,946,610	4,813,571,726
நிதிச் சொத்துக்கள் - ஏனைய விரிவான வருமானம் ஊடாக நியாயப் பெறுமதி	2,289,919	-	-	-	2,289,919
மொத்த சொத்துக்கள்	251,983,067,611	65,376,519,517	59,697,755,858	87,895,524,478	39,013,267,758
வட்டி ஏற்கும் பொறுப்புக்கள்					
வங்கிகளுக்கான நிலுவைகள்	29,500,936,543	1,364,318,523	2,778,809,963	15,000,220,002	10,357,588,055
ஏனைய வாடிக்கையாளருக்கான நிலுவைகள்	187,752,465,256	47,613,449,121	80,321,397,135	28,159,887,937	31,657,731,062
வழங்கப்பட்ட கடன்பத்திரங்கள் மற்றும் ஏனைய பெறப்பட்ட நிதியங்கள்	2,000,000,000	2,000,000,000	-	-	-
மொத்தப் பொறுப்புகள்	219,253,401,799	50,977,767,644	83,100,207,098	43,160,107,939	42,015,319,117
இடைவெளிகள்	32,729,665,812	14,398,751,873	(23,402,451,240)	44,735,416,540	(3,002,051,360)

வட்டிவீத அளவுகோல் மறுசீரமைப்புகள்

வங்கிகளுக்கிடையில் முன்வைக்கப்படும் வீதங்கள் போன்ற வட்டிவீத அளவுகோல்கள், உலகளாவிய ரீதியிலும், அதேபோன்று உள்நாட்டு நிதிச் சந்தைகளிலும் முக்கிய பங்காற்றுகின்றன. மாற்றுவழி அண்ணளவு இடர்நேர்வற்ற வீதங்களைக் கொண்டு ("வங்கிகளுக்கிடையில் முன்வைக்கப்பட்ட வீத மறுசீரமைப்பு" எனக் குறிப்பிடப்படும்) சில வங்கிகளுக்கிடையில் முன்வைக்கப்படும் வீதங்களைப் பதிலீடு செய்து, முக்கிய வட்டிவீத அளவுகோல்களின் அடிப்படை மறுசீரமைப்பு ஒன்று உலகளவில் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. இச்சந்தை முழுவதுமான உலகளாவிய முயற்சியின் பாகமாக மறுசீரமைக்கப்பட்டு வருகின்ற அதன் நிதியியல் சாதனங்கள் மீதான சில வங்கிகளுக்கிடையில் முன்வைக்கப்பட்ட விகிதங்களுக்கு வங்கி இடர்நேர்வுக்குள்ளானவை கொண்டுள்ளது.

இதற்கான முக்கிய இடர்நேர்வுகளாக, வங்கிகளுக்கிடையில் முன்வைக்கப்பட்ட மறுசீரமைப்பு தொழிற்படுவதன் விளைவாக, இடர்நேர்வுக்கு உட்பட்டு வருகின்றது. உதாரணமாக, வாடிக்கையாளர்களுடன் இருதரப்புப் பேச்சுவார்த்தை ஊடாக கடன் ஒப்பந்தங்களை மீளப் பேரம் பேசுதல், ஒப்பந்த நியதிகளை இற்றைப்படுத்தல், மறுசீரமைப்பு மற்றும் ஒழுங்குமுறைப்படுத்தல் இடர்நேர்வுகளுடன் தொடர்புடைய வங்கிகளுக்கிடையில் முன்வைக்கப்பட்ட வீத வளையிகளைப் பயன்படுத்துகின்ற, அத்துடன், தொழிற்பாட்டுக் கட்டுப்பாடுகளைத் திருத்துகின்ற முறைமைகளை இற்றைபடுத்துதல். நிதியியல் இடர்நேர்வானது, பெரும்பான்மையாக வட்டிவீத இடர்நேர்வுக்கு மட்டுப்படுத்தப்படுகின்றது.

வங்கிகளுக்கிடையில் முன்வைக்கப்படும் வீதங்களின் பயன்பாட்டில் இருந்து மாற்று வீதங்களுக்கு அதன் மாறுதலை முகாமை செய்வதற்கு சொத்து மற்றும் பொறுப்புக் குழு ஊடாக வங்கி முனைகின்றது. 2022 இறுதியில் இருந்து நிலுவையாக வருகின்ற ஒப்பந்தங்கள் அநேகமாக நிலையான விலையிடலின் அடிப்படையில் ஐந்து அமெரிக்க டொலர் லண்டன் வங்கிகளுக்கு இடையில் முன்வைக்கப்பட்ட வீத அமைப்புகளின் மீள் விலையிடப்பட்டுள்ளன. இது, 2023 நடுப்பகுதி வரை, குழும வங்கி சமர்ப்பனங்களைப் பயன்படுத்தி தொடர்ந்தும் கணிக்கப்படவுள்ளது. அடிக்கடி மீள் விலையிடல் திகதிகளைக் கொண்டுள்ள நீண்டகால முற்பணங்களை மீள் விலையிடுவதற்குத் தேவைப்படுமெனில் இது பயன்படுத்தப்படுகின்றது. எனினும், புதிய தொழில்களுக்காக இவ் லண்டன் வங்கிகளுக்கிடையில் முன்வைக்கப்பட்ட வீதங்களைப் பயன்படுத்துவது (LIBOR) 2021 இறுதியில் இருந்து மட்டுப்படுத்தப்பட்டுள்ளது.

முன்னோக்கி நோக்குகையில், இடர்நேர்வு முகாமைத்துவத் தொழிற்பாடான இடர்நேர்வு முகாமைத்துவப் பிரிவு, வங்கிகளுக்கிடையில் முன்வைக்கப்பட்ட வீதத்தின் பெறுபேறாக அத்தகைய ஒப்பந்தங்கள் திருத்தப்பட வேண்டுமா என்பது பற்றி கடன்கள், முற்பணங்கள், கடன் கடமைப் பொறுப்புகள், பொறுப்புகள் மற்றும் பெறுதிகள் போன்ற வங்கிகளுக்கு இடையில் முன்வைக்கப்பட்ட வீத காசுப் பாய்ச்சல்களில் தொடர்புகள் என்ற ரீதியில் அதிகரிக்கும். வங்கிகளுக்கிடையிலான முன்வைக்கப்பட்ட வீதங்களின் இம்மறுசீரமைப்புக்களில் இருந்து தோன்றுகின்ற தொழிற்பாட்டு மற்றும் ஒழுங்குமுறைப்படுத்தல் இடர்நேர்வுகளை இனங்கண்டு, இணைத் தரப்பினர்களுடன் வங்கிகளுக்கிடையில் முன்வைக்கப்பட்ட மறுசீரமைப்பு பற்றிய தொடர்பாடலை எவ்வாறு முகாமை செய்வது என்பது பற்றி வட்டிவீத இடர்நேர்வை முகாமை செய்வதற்கும், நெருங்கிப் பணியாற்றுவதற்கும் துணையளிப்பதற்காக இவ்வாறு கண்டறியப்பட்டவை சொத்து மற்றும் பொறுப்புக் குழுவுக்கும் திறைசேரிக்கும் அறிக்கையிடப்படும். இவ்வாறு கண்டறியப்பட்டவைகள், காலாண்டு அடிப்படையில் சபை ஒருங்கிணைந்த இடர் நேர்வு முகாமைத்துவக் குழுவுக்கு அறிக்கையிடப்படும் என்பதுடன், தேவைப்படும் போது ஏனைய தொழிற்பிரிவுகளுடனும் ஒருங்கிணைக்கப்படும்.

44.4.3 ஏனைய சந்தை இடர் நேர்வுகளுக்கு உட்படுதல்
வெளிநாட்டு நாணய இடர்நேர்வு

ஒரு நாணயம், வேறொரு நாணயத்தின் செலாவணி வீத அசைவில் இருந்து தோன்றுகின்ற வெளிநாட்டுச் செலாவணி இடர்நேர்வு, வங்கியின் உழைப்புகள் அல்லது பங்குரிமை மூலதனம் மீது பாதகமான தாக்கத்திற்கு வழிவகுக்கின்றது. வங்கியானது, வெளிநாட்டு நாணய சொத்துக்கள் மற்றும் முன்னைய லங்காபுத்ர அபிவிருத்தி வங்கியிடமிருந்து பொறுப்பேற்றுக்கொண்ட பொறுப்புக்கள், அத்துடன், ஆசிய அபிவிருத்தி வங்கியிடமிருந்தான கடன் என்பவற்றில் இருந்து தோன்றுகின்ற வெளிநாட்டு நாணய இடர்நேர்வுக்கு உட்படுகின்றது. அண்மைய எதிர்காலத்தில் சாத்தியமான வெளிநாட்டு நாணய இடர்நேர்வினைத் தவிர்ப்பதற்கு/ தணிப்பதற்கு அவசியமான முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் செயற்பாட்டில் உள்ளன.

ஆண்டு காலப்பகுதியில் வெளிநாட்டுச் செலாவணி திரவத்தன்மை, விசேடமாக ஐக்கிய அமெரிக்க டொலர்கள் போதாமையின் காரணமாக, சந்தை நிலைமைகளின் நிச்சயமின்மையை வங்கித் தொழிற்துறை அனுபவித்தது. பொறுப்பு மாற்றல் கொடுக்கல் வாங்கல்களில் விசேடமாக வர்த்தகம் தொடர்புபட்ட கொடுக்கல் வாங்கல்களில் எதிர்பார்க்கப்பட்ட மட்டங்களை நிறைவு செய்வதற்கு வங்கித் தொழிற்துறை இயலாமை இருந்தமைக்கு அநேகமாக இது வழிவகுத்தது. உள்முக வெளிநாட்டுப் பண வரவுகள் மற்றும் ஏற்றுமதிக் கட்டணங்கள் போன்ற சொத்து மாற்றல் கொடுக்கல் வாங்கல்களில் வீழ்ச்சியினையும் சந்தை எதிர்கொண்டது. இந்நிலைமை, ஐக்கிய அமெரிக்க டொலர்/ ரூபா வீதங்கள் தேய்வடைவதற்கு வழிவகுத்து, சுமார் 200 தொடக்கம் 203 வரையான மட்டங்களில் வர்த்தகம் செய்யப்பட்ட அநேகமாக கட்டுப்படுத்தப்பட்ட செலாவணி வீதமாக இது அமைந்திருந்தது.

மத்திய வங்கியினால் வெளியிடப்பட்ட பிந்திய பணிப்புரைகளில் குறிப்பிடப்பட்டவாறும், உள்நாட்டிலும், உலகளவிலும் பின்பற்றப்பட்ட சிறந்த சந்தை நடத்தைகளுக்கு அமைவாகவும், அனைத்து சந்தை இடர்நேர்வு வழிமுறைகளும் கடைப்பிடிக்கப்படுவதை வங்கி உறுதி செய்தது.

கீழே கொடுக்கப்பட்டுள்ள வெளிநாட்டு நாணய வெளிப்பாடுகள் மற்றும் வங்கி வர்த்தகம் செய்யும் முக்கிய நாணயங்கள் அவற்றின் ரூபாய்க்கு சமமானவை.

டிசம்பர் 31 இல் உள்ளவாறு	உண்மையான வெளிநாட்டு நாணயத்தில்		வங்கியின் செயற்பாட்டு நாணயம்	
	2022	2021	2022	2021
	அமெ.டொ	அமெ.டொ	ரூபா	ரூபா
நிகர அந்நியச் செலாவணி வெளிப்பாடு				
வெளிநாட்டு நாணயத்தில் குறிப்பிடப்பட்ட நிதிச் சொத்துக்கள்	**68,070,895**	53,803,708	**24,913,947,739**	10,801,094,369
வெளிநாட்டு நாணயத்தில் குறிப்பிடப்படும் நிதிப் பொறுப்புகள்	**63,099,435**	53,658,862	**23,094,393,092**	10,772,016,498

செலாவணி வீதம் மீதான தேய்மானத்திற்காகவும், ஒட்டுமொத்த வெளிநாட்டு நாணய தேறிய திறந்த நிலை (NOP) (ஐக்கிய அமெரிக்க டொலரில்) மீதான தாக்கத்திற்காகவும் 5%, 10%, 15% கொண்ட அதிர்வு மட்டங்களைப் பிரயோகித்து, வெளிநாட்டு நாணய தேறிய திறந்த நிலைமை பற்றிய தாக்கப் பகுப்பாய்வு மேற்கொள்ளப்பட்டதுடன், வருமானக் கூற்று மீதான தாக்கம் கீழே அட்டவணையில் காண்பிக்கப்பட்டுள்ளது.

டிசம்பர் 31 இல் உள்ளவாறு	2022		2021	
	அமெ.டொ	ரூபா	அமெ.டொ	ரூபா
தேறிய திறந்த நிலை (NOP)	**4,971,461**	**1,819,554,647**	144,846	29,077,872

அதிர்ச்சி மட்டத்தில்	திருத்தப்பட்ட ரூபாவின் நிலை	வருமான அறிக்கை மீதான தாக்கம்	திருத்தப்பட்ட ரூபாவின் நிலை	வருமான அறிக்கை மீதான தாக்கம
5%	1,910,532,380	90,977,732	30,531,766	1,453,894
10%	2,001,510,112	181,955,465	31,985,659	2,907,787
15%	2,092,487,844	272,933,197	33,439,553	4,361,681

44.5 செயற்பாட்டு இடர்

"செயற்பாட்டு இடர்" என்பது, வங்கியின் செயன்முறைகள், பணியாளர்கள், தொழில்நுட்பம் மற்றும் உட்கட்டமைப்புக் கடன் தவிர்ந்த ஏனைய வெளிப்புறக் காரணிகள், சட்ட மற்றும் ஒழுங்குபடுத்தல் தேவைப்பாடுகளில் இருந்து எழுகின்ற சந்தை மற்றும் திரவ இடர்கள் என்பவற்றுடன் சம்பந்தப்பட்ட பலதரப்பட்ட காரணிகளில் இருந்து எழுகின்ற நேரடியான அல்லது மறைமுகமான நட்டம் ஆகும். அத்துடன், இவ் இடர் கூட்டுறவு நடத்தையில் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட தரங்களைக் கொண்டவை. செயற்பாட்டு இடர்கள், வங்கியின் அனைத்துச் செயற்பாடுகளில் இருந்தும் எழுகின்றன.

ஒட்டுமொத்த சிறந்த விலைக் கட்டுப்பாட்டு வினைத்திறன் மற்றும் புதிய கண்டுபிடிப்புகளுடன் வங்கியின் நன்மதிப்புக்கு ஏற்படுகின்ற சேதம் மற்றும் நிதி நட்டங்களைத் தவிர்த்து, அவற்றை ஒரு சமநிலையில் வைக்கக்கூடிய வகையில் செயற்பாட்டு இடரைக் கையாள்வது வங்கியின் குறிக்கோளாகும். அனைத்து சந்தர்ப்பங்களிலும், அனைத்து பொருத்தமான சட்ட மற்றும் ஒழுங்குபடுத்தல் தேவைப்பாடுகளுடன் இணங்கி நடப்பதே வங்கியின் கொள்கையாகும்.

பணிப்பாளர் சபை, செயற்பாட்டு இடர் தொடர்பான பொறுப்பை அதன் வங்கி செயற்பாட்டு இடர் குழுவிடம் கையளித்துள்ளது. இக்குழு, தொழிற்பாட்டு இடரை நிவர்த்தி செய்வதற்குரிய கட்டுப்பாடுகளை அபிவிருத்தி செய்வதற்கும் அமுல்படுத்துவதற்கும் பொறுப்பாக உள்ளது. இந்தப் பொறுப்பு கீழே தரப்பட்டுள்ள துறைகளில் செயற்பாட்டு இடரை முகாமைத்துவம் செய்வதற்கான ஒட்டுமொத்த வங்கித் தரங்களை அபிவிருத்தி செய்வதன் மூலம் ஆதரவளிக்கப்படுகிறது.

- பரிவர்த்தனைகளின் சுயாதீன அதிகாரமளித்தல் உள்ளடங்கலாக, கடமைகளின் பொருத்தமான வகைப்படுத்தல் தேவைப்பாடு
- பரிவர்த்தனைகளின் இணக்கம் மற்றும் மேற்பார்வை தொடர்பான தேவைப்பாடு
- ஒழுங்குபடுத்தல் மற்றும் ஏனைய சட்டத் தேவைப்பாடுகளுடனான இணக்கம்
- கட்டுப்பாடுகள் மற்றும் நடைமுறைகளின் ஆவணப்படுத்துகை
- எதிர்கொள்ளப்படும் செயற்பாடுகளின் இடர்களின் காலாந்தர மதிப்பீட்டுத் தேவைப்பாடுகள் மற்றும் இனங்காணப்பட்ட இடர்களைப் பூர்த்தி செய்வதற்கான கட்டுப்பாடுகள் மற்றும் நடைமுறைகளின் போதுமான தன்மை.
- செயற்பாட்டு நட்டங்கள் மற்றும் முன்மொழியப்பட்ட குறைதீர்ப்பு நடவடிக்கைகளின் அறிக்கையிடல் தொடர்பான தேவைப்பாடுகள்
- இடைநேர் விளைவான திட்டங்களின் உருவாக்கம்
- பயிற்சிநெறி மற்றும் தொழில்முறை அபிவிருத்தி
- ஒழுக்க மற்றும் வணிகத் தரங்கள். மற்றும்,
- விலை வினைத்திறனுடனான காப்புறுதி உட்பட இடர் தணிப்பு.

45. மூலதன முகாமைத்துவம்

45.1 ஒழுங்குபடுத்தல் மூலதனம்

வங்கியின் முதன்மை ஒழுங்குபடுத்துநரான இலங்கை மத்திய வங்கி, முழுமையான அடிப்படையில் வங்கியின் மூலதனத் தேவைப்பாடுகளை உருவாக்குவதுடன், அவற்றைக் கண்காணித்து வருகிறது. தனிப்பட்ட வங்கி நடவடிக்கைகள், நேரடியாக முன்னணி ஒழுங்குபடுத்துநர்களால் கண்காணிக்கப்படுகிறது. குழும மூலதன முகாமைத்துவ இலக்குகள் பின்வருமாறு:

A. குறைந்தபட்ச ஒழுங்குபடுத்தல் மூலதன போதுமான விகிதமான 12.5% தேவைப்பாடுகள் விட்டுக் கொடுக்கப்படவில்லை என்பதை உறுதிப்படுத்தல்.
B. வங்கி அதன் சர்வதேச மற்றும் உள்ளூர் கடன் மதிப்பிடலைப் பேணுதல், மற்றும் வங்கியின் இடர் மூலதனத்தின் சீரழிவு காரணமாக எந்தவித தரையிறக்கமும் மேற்கொள்ளப்படவில்லை என்பதை உறுதிப்படுத்தல்.
C. வங்கித் துறையினால் பேணப்படுகின்ற கைத்தொழில் சராசரி மூலதன போதுமான விகிதத்திற்கு மேற்பட்ட விகிதத்தை உறுதிப்படுத்துதல்.
D. தரமான மூலதனத்தைப் பேணுதலை உறுதிப்படுத்துதல்.
E. வணிகத் தீர்மானங்களின் மூலதன தாக்கம் முறையாக மதிப்பிடப்பட்டது என்பதை உறுதிப்படுத்துதலும், இவற்றைத் தயாரிப்புத் திட்டமிடல் மற்றும் அங்கீகார செயன்முறையின் போது கருத்திற் கொள்ளலை உறுதிப்படுத்தலும்,
F. வணிகச் செயற்பாடுகள் போதுமான அளவில் விலையிடப்படுவதன் மூலம் மூலதன நுகர்வை உறுதிப்படுத்தல்.
G. வங்கியின் சராசரி நீண்டகால பங்கிலாபக் கொடுப்பனவு விகிதம் பேணுவதை உறுதிப்படுத்தல்.

இலங்கை மத்திய வங்கி, தனிப்பட்ட அடிப்படையில் ஒழுங்குபடுத்தல் மூலதனத் தேவைப்பாட்டை உருவாக்குவதோடு கண்காணித்தும் வருகிறது. ஒழுங்குபடுத்தல் மூலதனம் தொடர்பில் பாசல் (BASEL) II பாசல் (BASEL) III ஆகியவற்றின் ஏற்பாடுகளைப் பின்பற்றுமாறு வங்கி தேவைப்படுத்துகிறது.

மூலதன முகாமைத்துவம்

மூலதன போதுமை என்பது, அதன் வியாபாரத்தின் இணைந்த இடர்நேர்வுகளை எதிர்த்து நிற்பதற்கான வங்கியின் இயலுமை பற்றிய அளவீடு ஒன்றாகும். தொடர்ந்து இயங்கும் எண்ணக்கருவாக எதிர்பாராத இழப்புகளை ஈர்க்கின்ற அதேவேளை, எதிர்பார்க்கப்பட்ட இடர்நேர்வுகள் பற்றி கவனம் எடுத்துக்கொள்வதற்கு அவற்றின் உற்பத்திகளையும், சேவைகளையும் அவர்கள் விலைகுறிப்பதற்கு ஒவ்வொரு வங்கியும் போதுமான மூலதனத்தைக் கொண்டிருக்கின்றன என்பதற்கு இது அவசியமானதென ஒழுங்குமுறைப்படுத்துநர்கள் நோக்குகின்றனர். மூலதன போதுமை விகிதமானது (CAR), 2017 ஜூன் 30 வரையிலும், பாசல் II இன் கீழ் அளவிடப்பட்டதுடன், அதன் பின்னர் பாசல் II இன் கீழ் அளவிடப்பட்டதுடன், கொடுகடன், சந்தை மற்றும் தொழிற்பாட்டு இடர் நேர்வுகளைக் கவனத்திற் கொள்கின்றது. வங்கித்தொழில் ஒழுங்குமுறைப்படுத்துநர்கள் மற்றும் மேற்பார்வை நடைமுறைகள் மீதான பாசல் குழுவின் சர்வதேச தர நியமங்களைப் பேணி, இலங்கை 2017 ஜூலை 01 தொடக்கம் பாசல் III மூலதன போதுமை விகித கணித்தலை பின்பற்றி வருகின்றது.

45.2 மூலதன ஒதுக்கு

முகாமைத்துவம் அதன் மூலதனத் தளத்தை மேற்பார்வை செய்வதற்கு ஒழுங்குபடுத்தல் மூலதன விகிதங்களைப் பயன்படுத்துகிறது. குறிப்பான செயற்பாடுகள் மற்றும் நடவடிக்கைகளுக்கு இடையிலான மூலதன ஒதுக்கு, பாரியளவில் ஒதுக்கப்பட்ட மூலதனத்தின் மீது அடையப்பெற்ற திரும்பலின் உச்ச பயன்பாட்டின் மூலம் இயக்கப்படுகிறது. ஒவ்வொரு செயற்பாடு அல்லது நடவடிக்கைக்கு ஒதுக்கப்படுகின்ற மூலதனத் தொகை, ஒழுங்குபடுத்தல் மூலதனத் தேவைப்படுகளின் மீது முதன்மையாகத் தங்கியுள்ளது. எனினும், சில சந்தர்ப்பங்களில், பல்வேறுபட்ட நடவடிக்கைகளில் தொடர்புபட்ட இடர்களின் அளவுகள் வேறுபடுவதன் காரணமாக, ஒழுங்குபடுத்தல் தேவைப்பாடுகள் முழுமையாகப் பிரதிபலிக்கப்படுவதில்லை. இத்தகைய சந்தர்ப்பங்களில், ஒழுங்குபடுத்தல் தேவைப்பாடுகளுக்காக, தேவைப்படுகின்ற குறைந்தபட்ச தேவைப்பாட்டிற்குக் கீழே செல்லாத வகையில், ஒரு குறிப்பிட்ட செயற்பாடு அல்லது நடவடிக்கைக்கு ஆதரவளிக்க, ஒட்டுமொத்த மூலதன மட்டம் இருக்கின்றது என்ற அடிப்படையில், பல்வேறுபட்ட இடர் தோற்றப்பாடுகளைப் பிரதிபலிக்கக்கூடிய வகையில், மூலதனத் தேவைப்பாடுகள், நெகிழ்வுபடுத்தப்படலாம். குறிப்பாக, செயற்பாடுகளுக்கும், நடவடிக்கைகளுக்கும் மூலதனத்தை ஒதுக்கும் செயன்முறை, வங்கி இடர் மற்றும் வங்கிக் கடன் ஆகிய செயற்பாட்டிற்குப் பொருத்தமான ஆட்கள் தவிர்ந்த ஏனைய ஆட்களினால் சுயாதீனமாக எடுக்கப்படுகின்றது. அத்துடன், இது, ALCO உடைய மீளாய்வுக்கு உட்பட்டது.

இடர் சீராக்கப்பட்ட மூலதனத்தின் மீதான திரும்பலின் அதிகரிப்பு, வங்கிக்குள் குறிப்பிட்ட செயற்பாடுகளுக்கும், நடவடிக்கைகளுக்கும் மூலதனம் எவ்வாறு ஒதுக்கப்படுகின்றது என்பதைத் தீர்மானிப்பதற்கு முதன்மை அடிப்படையாக இருந்த போதிலும், தீர்மானம் எடுத்தலில் இதுவொரு தனித்த காரணியாகப் பயன்படுத்தப்படுவதில்லை. ஏனைய செயற்பாடுகள் மற்றும் நடவடிக்கைகளுடனான கூட்டு விளைவுகள், முகாமைத்துவத்தின் இருப்பு ஏனைய வளங்கள், வங்கியின் நீண்டகால மூலோபாய இலக்குகளுடனான செயற்பாட்டின் பொருத்தம் என்பனவும் கருத்திற் கொள்ளப்படும். மூலதன முகாமைத்துவம் மற்றும் ஒதுக்கம் தொடர்பான வங்கியின் கொள்கைகள் பணிப்பாளர் சபையினால் காலாந்தர அடிப்படையில் மீளாய்வு செய்யப்படும்.

45.3 கிடைக்கபெறும் மூலதனம்

பாசல் III உடன்படிக்கையானது, மூன்று மூலதனக் கூறுகளை அதாவது, பொதுப் பங்குரிமை மூலதன அடுக்கு (CET) 1 மூலதனம், மேலதிக அடுக்கு 1 மூலதனம் மற்றும் அடுக்கு 2 மூலதனம் என்பவற்றை அங்கீகரிக்கின்றது.

பொதுப் பங்குரிமை மூலதன அடுக்கு 1 மூலதனமானது, பங்குரிமை மூலதனம், ஒதுக்கு நிதியம், வெளியிடப்பட்ட பிடித்து வைக்கப்பட்ட உழைப்புகள் (ஒன்றுசேர்ந்த பிடித்து வைக்கப்பட்ட இழப்புகள்), பொது மற்றும் ஏனைய ஒதுக்குகள் மற்றும் வெளியிடப்படாத நடப்பு ஆண்டின் இலாபம்/ (நட்டம்) அத்துடன், ஏனைய அனைத்தையும் உள்ளடக்கிய வருமானத்தின் பிரதிபலிக்கப்பட்ட இலாபங்கள் என்பவற்றை உள்ளடக்குகின்றது. நன்மதிப்பு (தேறியது), ஏனைய அருவச் சொத்துக்கள், ஆதனம் பொறித்தொகுதி மற்றும் உபகரணங்களின் மீள் விலைமதிப்பீட்டு இழப்புகள், பிற்போடப்பட்ட வரிச் சொத்துக்கள், காசுப் பாய்ச்சல் காப்பு ஒதுக்கு, குறிப்பான ஏற்பாடுகளுக்கான திரண்ட சேத இழப்பு பற்றாக்குறை, வரையறை செய்யப்பட்ட நல ஓய்வு நிதிச் சொத்துக்கள், சொந்தப் பங்குகளில் முதலீடுகள், வங்கித்தொழில் மற்றும் நிதியியல் நிறுவனங்கள் என்பனவற்றின் மூலதனத்தில்
முதலீடுகள் அத்துடன், ஒழுங்குமுறைப்படுத்தல் பணிப்புரைகளின் பிரகாரம் ஏனைய சீராக்கங்கள் என்பன பொதுப் பங்குரிமை மூலதன அடுக்கு 1 மூலதனத்தை நிர்ணயிப்பதில் ஏற்புடையவாறு கழிக்கப்படுகின்றன.

மேலதிக அடுக்கு 1 மூலதமானது, ஒழுங்குமுறைப்படுத்தல் பணிப்புரைகளுக்கு அமைவாக, தகைமை பெறுகின்ற சாதனங்களை உள்ளடக்குகின்றது. சொந்தப் பங்குகளில் முதலீடுகள், வங்கித்தொழில் மற்றும் நிதியியல் நிறுவனங்கள் என்பனவற்றின் மூலதனத்தில் முதலீடுகள் அத்துடன், ஒழுங்குமுறைப்படுத்தல் பணிப்புரைகளின் பிரகாரம் ஏனைய சீராக்கங்கள் என்பன மேலதிக அடுக்கு 1 மூலதனத்தை நிர்ணயிப்பதில் ஏற்புடையவாறு கழிக்கப்படுகின்றன.

அடுக்கு 2 மூலதனமானது, தகைமை பெறுகின்ற அடுக்கு 2 மூலதன சாதனங்கள், மீள் விலைமதிப்பீட்டு வருவாய்கள் மற்றும் பொதுவான ஏற்பாடுகள் போன்றனவற்றை உள்ளடக்குகின்றது. சொந்தப் பங்குகளில் முதலீடுகள், வங்கித்தொழில் மற்றும் நிதியியல் நிறுவனங்கள் என்பனவற்றின் மூலதனத்தில் முதலீடுகள் அத்துடன், ஒழுங்குமுறைப்படுத்தல் பணிப்புரைகளின் பிரகாரம் ஏனைய சீராக்கங்கள் என்பன மேலதிக அடுக்கு 2 மூலதனத்தை நிர்ணயிப்பதில் ஏற்புடையவாறு கழிக்கப்படுகின்றன.

2017 ஜூலை 1 தொடக்கம் செயற்பாட்டிற்கு வந்த பாசல் III மற்றும் 2019 டிசம்பர்20 ஆம் திகதியிடப்பட்ட, 2019ஆம் ஆண்டின் 11ஆம் இலக்க பணிப்புரைகளின் கீழ் அதற்கான திருத்தங்கள் ஆகியவற்றின் கீழ் மூலதனத் தேவைப்பாடுகள் மீது 2016 டிசம்பர் 21ஆம் திகதியிடப்பட்ட, 2016ஆம் ஆண்டின் 01ஆம் இலக்க வங்கித்தொழில் சட்டப் பணிப்புரைக்கு அமைவாக வங்கி மூலம் பேணப்பட வேண்டிய குறைந்தபட்ச வேண்டப்பட்ட மூலதன விகிதங்கள் பின்வருமாறு:

- ஒவ்வொரு உரிமம் பெற்ற சிறப்பியல்பு வாய்ந்த வங்கியும் எல்லா நேரங்களிலும் கீழே அட்டவணையில் விதித்துரைக்கப்பட்ட குறைந்தபட்ச மூலதன விகிதங்களைப் பேணுதல் வேண்டும் என்பதுடன், உரிமம் பெற்ற வங்கிகளுக்கான பாசல் III இன் கீழ் மூலதனத் தேவைப்பாடுகள் மீதான 2016 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க வங்கித்தொழில் சட்டப் பணிப்புரைகளுக்கான அட்டவணை 1 உடனான இணங்குவித்தலை உறுதி செய்தல் வேண்டும்.
- காலத்திற்குக் காலம், உள்நாட்டு ரீதியாக முறைமைசார்ந்த முக்கியத்துவம் மிக்க வங்கியாக நிர்ணயிக்கப்பட்டுள்ள உரிமம் பெற்ற சிறப்பியல்பு வாய்ந்த வங்கிகள் கீழே அட்டவணையில் தரப்பட்டவாறு பொதுவான பங்குரிமை அடுக்கு 1 இன் வடிவில் நாணய சபையினால் குறித்துரைக்கப்பட்டவாறான உயர்வான இழப்பு ஈர்ப்பு தேவைப்பாடுகளைப் பேணுதல் வேண்டும்.

மூலதனக் கூறுகள்	உரிமம் பெற்ற வங்கிகளினால் பராமரிக்கப்பட வேண்டிய மூலதனப் போதுமை அளவு விகிதம்
பொதுவான பங்குரிமை அடுக்கு 1 உட்பட மூலதனப் பாதுகாப்பு இடையகம்	7.50%
மூலதனப் பாதுகாப்பு இடையகம் உட்பட மொத்த அடுக்கு 1	8.50%
மூலதனப் பாதுகாப்பு இடையகம் உட்பட மொத்த மூலதன விகிதம்	12.50%

2020 மார்ச் மாதத்தில் இலங்கை மத்திய வங்கியினால் நடைமுறைப்படுத்தப்பட்ட அதிவிசேட ஒழுங்குமுறைப்படுத்தல் வழிமுறைகளுக்கு அமைவாக, கொவிட் - 19 நோய்த்தொற்று நிலைமை காரணமாக, உள்நாட்டு முறைமை ரீதியாக முக்கியத்துவம் மிக்க வங்கிகளும், உள்நாட்டு முறைமை ரீதியாக முக்கியத்துவம் அல்லாத வங்கிகளும் அவற்றின் மூலதனப் பாதுகாப்பு காப்புக்களில் முறையே 250 அடிப்படைப் புள்ளிகளைக் கொண்ட மொத்தத்தில் இருந்து 100 அடிப்படைப் புள்ளிகளாலும் 50 அடிப்படைப் புள்ளிகளாலும் வரைபு செய்வதற்கு அனுமதிக்கப்பட்டுள்ளன.

டிசம்பர் 31 இல் உள்ளவாறு வங்கி மூலதனப் போதுமை அளவு (பாசல் III) விபரங்கள் கீழே தரப்பட்டுள்ளன:

டிசம்பர் 31 இல் உள்ளவாறு	பாசல் III	
	2022 ரூபா	2021 ரூபா
சொத்துக்கள்		
மொத்த இடர்நேர்வு நிறையேற்றப்பட்ட தொகை (ஐந்தொகைக்கு வெளியிலான விடயங்கள் உட்பட)	**143,939,205,752**	153,296,177,322
இடர்நேர்வு நிறையேற்றப்பட்ட ஐந்தொகைக்கு வெளியிலான கடன் அளவுகளின் தொகை	**35,609,204**	35,553,393
மூலதனம்		
பொதுவான பங்குரிமை அடுக்கு 1 மூலதனம்	**11,932,386,377**	14,189,229,195
மொத்த அடுக்கு 1 மூலதனம்	**11,932,386,377**	14,189,229,195
மொத்த மூலதனம்	**21,908,992,974**	20,168,998,565
மூலதன போதுமை விகிதங்கள்		
பொதுவான பங்குரிமை அடுக்கு 1 மூலதன விகிதம் (%)	**8.29%**	8.72
அடுக்கு 1 மூலதன விகிதம் (%)	**8.29%**	8.72
மொத்த மூலதன விகிதம் (%)	**15.22%**	14.27

46. நிதியியல் சாதனங்களின் சீர்மதிப்புப் பெறுமதி

46.1 சீர்மதிப்புப் பெறுமதிகளை நிர்ணயித்தல்

வங்கி மதிப்பீடுகளை மேற்கொள்வதில் பயன்படுத்தப்படுகின்ற உள்ளீடுகளின் முக்கியத்துவத்தைப் பிரதிபலிக்கின்ற சீர்மதிப்புப் பெறுமதி படிநிலையினைப் பயன்படுத்தி சீர்மதிப்புப் பெறுமதிகளை அளவிடுகின்றது.

மட்டம் - 1 ஒரேவிதமான சாதனங்களுக்காக செயற்பாடுமிக்க சந்தைகளில் விலைகோரப்பட்ட சந்தை விலைகளாகக் காணப்படுகின்ற (சீர்செய்யப்படாத) உள்ளீடுகள்

மட்டம் - 2 ஒன்றில் நேரடியாக (அதாவது விலைகளாக) அல்லது நேரடியின்றி (அதாவது, விலைகளில் இருந்து பெறப்படுகின்ற) அவதானிக்கத்தக்கவையாகக் காணப்படுகின்ற மட்டம் - 1 இனுள் உள்ளடக்கப்பட்ட கோரப்பட்ட விலைகளைத் தவிர்ந்த உள்ளீடுகள். ஒரேவிதமான சாதனங்களுக்காக செயற்பாடு மிக்க சந்தையில் விலைகுறிக்கப்பட்ட சந்தை விலைகள்: செயற்பாடுமிக்கதைவிடக் குறைவானதாகக் கருதப்படும் சந்தைகளில் ஒரே மாதிரியான அல்லது அதனையொத்த சாதனங்களுக்காக விலைகுறிக்கப்பட்ட விலைகள் : அல்லது சந்தைத் தரவுகளில் இருந்து நேரடியாக அல்லது நேரடியற்று அவதானிக்கத்தக்க அனைத்து முக்கிய உள்ளீடுகளிலும் காணப்படும் ஏனைய விலைமதிப்பீட்டு நுட்பங்கள் என்பவற்றை பயன்படுத்தி விலைமதிப்பீடு செய்யப்பட்ட சாதனங்களை இவ்வகை உள்ளடக்குகின்றது.

மட்டம் - 3 அவதானிக்க முடியாத உள்ளீடுகள். அவதானிக்க முடியாத உள்ளீடுகளை உள்ளடக்குகின்ற விலைமதிப்பீட்டு நுட்பத்திற்கான அனைத்து சாதனங்கள் மற்றும் சாதனத்தின் விலைமதிப்பீட்டின் மீது அவதானிக்க முடியாத உள்ளீடுகள் முக்கிய தாக்கத்தினைக் கொண்டிருக்கின்ற அனைத்து சாதனங்களையும் இவ்வகை உள்ளடக்குகின்றது. சாதனங்களுக்கு இடையிலான வேறுபாடுகளைப் பிரதிபலிப்பதற்கு முக்கிய அவதானிக முடியாத சீராக்கங்கள் அல்லது ஊகங்கள் தேவைப்படுகின்ற அதனையொத்த சாதனங்களுக்கான விலைகுறிக்கப்பட்ட விலைகளின் அடிப்படையில் பெறுமதி விலைமதிப்பீடு செய்யப்பட்ட சாதனங்களை இவ்வகை உள்ளடக்குகின்றது.

46.2 விலைமதிப்பீட்டு மாதிரிகள்

விலைமதிப்பீட்டு நுட்பங்களானவை, அவதானிக்கத்தக்க சந்தை விலைகள் காணப்படுகின்ற அதனையொத்த சாதனங்களுடன் ஒப்பிட்டு, தேறிய தற்போதைய பெறுமதி மற்றும் கழிவு செய்யப்பட்ட காசுப் பாய்ச்சல் மாதிரிகள் ஆகியவற்றை உள்ளடக்குகின்றது. விலைமதிப்பீட்டு நுட்பங்களில் பயன்படுத்தப்படும் ஊகங்களும், உள்ளீடுகளும், இடர்நேர்வு அற்ற மற்றும் அளவுகோல், வட்டி வீதங்கள், கொடுகடன் பரம்பல்கள் மற்றும் கழிவு வீதங்களை மதிப்பிடுவதில் பயன்படுத்தப்படும் ஏனைய கட்டுப்பணங்கள், முறிகள் மற்றும் பங்கு விலைகள், வெளிநாட்டு நாணயச் செலாவணி வீதங்கள், பங்குரிமை மூலதன மற்றும் பங்குச் சுட்டெண் விலைகள் மற்றும் எதிர்பார்க்கப்படும் விலைத் தளம்பல்கள் அத்துடன் தொடர்புகள் என்பவற்றை உள்ளடக்குகின்றன.

விலைமதிப்பீட்டு நுட்டபங்களின் குறிக்கோள், அளவீட்டுத் திகதியில் சந்தைப் பங்கேற்பாளர்களுக்கிடையில் ஒழுங்கான கொடுக்கல் வாங்கல் ஒன்றில் சொத்தினை விற்பனை செய்வதற்கு பெற்றுக்கொள்ளக்கூடிய அல்லது பொறுப்பினை மாற்றுவதற்கு செலுத்தப்படக்கூடிய விலையினைப் பிரதிபலிக்கின்ற சீர்மதிப்புப் பெறுமதி அளவீட்டில் தீர்மானிப்பதாகும்.

46.3 விலைமதிப்பீட்டுக் கட்டமைப்பு

சீர்மதிப்புப் பெறுமதிகளை அளவிடுவது தொடர்பில், நிறுவப்பட்ட கட்டுப்பாட்டுக் கட்டமைப்பு ஒன்றினைக் கொண்டுள்ளது. இக்கட்டமைப்பானது, முன்னரங்கு அலுவலக முகாமைத்துவத்தில் இருந்து சுயாதீனமாகக் காணப்படுகின்ற சந்தை இடர்நேர்வுப் பிரிவின் மூலமான மேற்பார்வையினை உள்ளடக்குகின்றது. வர்த்தகப்படுத்தல் மற்றும் முதலீட்டுத் தொழிற்பாடுகளை சுயாதீனமாக உறுதிப்படுத்துவதற்கும், அனைத்து முக்கிய சீர்மதிப்புப் பெறுமதி அளவீடுகளை

உறுதிப்படுத்துவதற்குமான ஒட்டுமொத்தப் பொறுப்பினை சந்தை இடர்நேர்வுப் பிரிவு கொண்டுள்ளது. குறிப்பான கட்டுப்பாடுகள் உள்ளடக்குவன:

- அவதானிகத்தக்க விலையிடலை உறுதிப்படுத்தல்,
- மாதிரி விலை மதிப்பீடுகளின் மீள் செயலாற்றம்
- புதிய மாதிரிகளுக்காக மீளாய்வு மற்றும் அனுமதிச் செயன்முறை. அத்துடன், உற்பத்திக் கட்டுப்பாடு மற்றும் குழு சந்தை இடர்நேர்வு இரண்டினையும் ஈடுபடுத்துகின்ற மாதிரிகளுக்கான மாற்றங்கள்,
- அவதானிக்கப்பட்ட சந்தைக் கொடுக்கல் வாங்கல்களுக்கு எதிரான மாதிரிகளை காலாண்டு ரீதியாக அளவு அமைத்தல் மற்றும் பின்நோக்கிய பரிசோதனை
- முக்கிய நாளாந்த விலைமதிப்பீட்டு அசைவுகள் பற்றிய பகுப்பாய்வும் விசாரணையும்,
- அவதானிக்க முடியாத உள்ளீடுகள், விலைமதிப்பீட்டுச் சீராக்கங்கள் அத்துடன், முன்னைய காலப்பகுதியுடன் ஒப்பீட்டு மட்டம் - 3 சாதனங்களின் சீர்மதிப்பீட்டுப் பெறுமதி அளவீட்டுக்கான முக்கிய மாற்றகள் என்பன பற்றிய மீளாய்வு.

சீர்மதிப்புப் பெறுமதியினை அளவிடுவதற்கு தரகர், விலைக்குறிபீடுகள் அல்லது விலையிடல் சேவைகள் போன்ற மூன்றாம் தரப்புத் தகவல்களைப் பயன்படுத்துகின்ற போது, அத்தகைய விலை மதிப்பீடுகள் SLFRS/ LKAS என்பவற்றின் தேவைப்பாடுகளை நிறைவு செய்கின்றனவா என்ற தீர்மானத்திற்கு ஆதரவளிப்பதற்கு மூன்றாம் தரப்புகளில் இருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட சான்றினை சந்தை இடர்நேர்வு மதிப்பீடு ஆவணப்படுத்துகின்றது. இது உள்ளடக்குவன:

- நிதியியல் சாதனத்தின் தொடர்புடைய வகையினை விலையிடுவதில் பயன்படுத்துவதற்கான தரகர் அல்லது விலையிடல் சேவை வங்கியினால் அனுமதிக்கப்பட்டுள்ளது என்பதனை உறுதி செய்தல்:
- சீர்மதிப்புப் பெறுமதி எவ்வாறு தீர்மானிக்கப்பட்டது என்பதனையும், அது உண்மையான சந்தைக் கொடுக்கல் வாங்கல்களைப் பிரதிநிதித்துவப்படுத்துகின்ற அளவினையும், ஒரேமாதிரியான சாதனம் ஒன்றுக்காக செயற்பாடுமிக்க சந்தையில் குறிக்கப்பட்ட விலை ஒன்றினை அது பிரதிநிதித்துவப்படுத்துகின்றதா என்பதையும் புரிந்துகொள்ளல்.
- ஒரேவிதமான சாதனங்களுக்கான விலைகள் சீர்மதிப்புப் பெறுமதியினை அளவிடுவதற்குப் பயன்படுத்தப்படும் போது, அளவீட்டுக்கு உட்படுகின்ற சாதனத்தின் குணாதிசயங்களைப் பிரதிபலிப்பதற்கு இவ்விலைகள் எவ்வாறு சீர் செய்யப்பட்டுள்ளன:
- அதே நிதியியல் சாதனத்துக்காக பல்வேறு விலைக்குறிப்பீடுகள் பெற்றுக்கொள்ளப்பட்டிருப்பின், அவ்வாறான விலைக்குறிப்பீடுகளைப் பயன்படுத்தி எவ்வாறு சீர்மதிப்புப் பெறுமதி தீர்மானிக்கப்பட்டுள்ளது.

46.4 சீர்மதிப்புப் பெறுமதியில் அளவிடப்பட்ட நிதியியல் சாதனங்கள் - சீர்மதிப்புப் பெறுமதி படிநிலை

சீர்மதிப்புப் பெறுமதி அளவீடானது, வகைப்படுத்தப்பட்டுள்ள சீர்மதிப்புப் பெறுமதி படிநிலை மட்டத்தின் மூலம் அறிக்கையிடும் திகதியில் சீர்மதிப்புப் பெறுமதியில் அளவிடப்பட்ட நிதியியல் சாதனங்களை பின்வரும் அட்டவணை பகுப்பாய்வு செய்கின்றது. தொகைகள், நிதியியல் நிலைக் கூற்றில் இனங்காணப்பட்ட பெறுமதிகளின் அடிப்படையில் அமைந்துள்ளன. அவதானிக்கத்தக்க உள்ளீடுகளைப் பயன்படுத்துகின்ற விலைமதிப்பீட்டு நுட்பத்தின் அடிப்படையில் சீர்மதிப்புப் பெறுமதி அமைகின்ற போது, கொடுக்கல் வாங்கல் விலைக்கும், ஆரம்ப இனங்காணல் மீதான சீர்மதிப்புப் பெறுமதிக்கும் இடையில் ஏதேனும் பிற்போடப்பட்ட வேறுபாடுகளை சீர்மதிப்புப் பெறுமதிகள் உள்ளடக்குகின்றன.

டிசம்பர் 31 இல் உள்ளவாறு	2022			
	மட்டம் 01	மட்டம் 02	மட்டம் 03	மட்டம் 04
	ரூபா	ரூபா	ரூபா	ரூபா
இலாபம் அல்லது நட்டம் மூலம் நியாயப் பெறுமதியில் பங்குரிமைக் கருவிகள்	**120,280**	**-**	**-**	**120,280**
நிதிச் சொத்துக்கள் - ஏனைய விரிவான வருமானம் மூலம் நியாயப் பெறுமதி	**-**	**-**	**2,289,919**	**2,289,919**
	120,280	**-**	**2,289,919**	**2,410,199**

டிசம்பர் 31 இல் உள்ளவாறு	2021			
	மட்டம் 01	மட்டம் 02	மட்டம் 03	மட்டம் 04
	ரூபா	ரூபா	ரூபா	ரூபா
இலாபம் அல்லது நட்டம் மூலம் நியாயப் பெறுமதியில் பங்குரிமைக் கருவிகள்	188,140	-	-	188,140
நிதிச் சொத்துக்கள் - ஏனைய விரிவான வருமானம் மூலம் நியாயப் பெறுமதி	-	-	2,289,919	2,289,919
	188,140	-	2,289,919	2,478,059

46.5 சீர்மதிப்புப் பெறுமதியில் அளவிடப்பட்ட வர்த்தகச் சொத்துக்களும் ஏனைய சொத்துக்களும்

சீர்மதிப்புப் பெறுமதியில் அளவிடப்பட்ட நிதியியல் சொத்துக்கள், விலைகுறிக்கப்பட்ட பங்குரிமை மூலதனங்களும், விலை குறிக்கப்படாத பங்குரிமை மூலதனங்களுமாகும். விலைகுறிக்கப்பட்ட பங்குரிமை மூலதனங்களுக்காக வங்கி, அறிக்கையிடும் திகதியில் உள்ளவாறு செயற்பாடு மிக்க சந்தைகளில் உள்ள விலைகுறிக்கப்பட்ட சந்தை விலையிலும் பயன்படுத்துகின்றது. விலைகுறிக்கப்படாத பங்குரிமை மூலதனங்கள், சீர்மதிப்புப் பெறுமதி நம்பகமாக அளவிடப்பட முடியாது என்பதனால் செலவில் அளவிடப்படுகின்றது.

46.6 சீர்மதிப்புப் பெறுமதியில் அளவிடப்படாத நிதியியல் சாதனங்கள்

சீர்மதிப்புப் பெறுமதியில் அளவிடப்படாத நிதியியல் சாதனங்களின் சீர்மதிப்புப் பெறுமதிகளை பின்வரும் அட்டவணை எடுத்துரைப்பதுடன், ஒவ்வொரு சீர்மதிப்புப் பெறுமதி அளவீடும் வகைப்படுத்தப்பட்டுள்ளவற்றினுள் சீர்மதிப்புப் பெறுமதி படிநிலையின் மட்டத்தின் மூலம் அவற்றைப் பகுப்பாய்வு செய்கின்றது.

		2022		2021	
	நியாயப் பெறுமதி படிநிலை ரூபா	கொண்டு செல்லும் பெறுமதி ரூபா	நியாயப் பெறுமதி ரூபா	கொண்டு செல்லும் ரூபா	நியாயப் பெறுமதி
நிதிச் சொத்துக்கள்					
காசு மற்றும் காசுக்கு சமமானவை	மட்டம் 2	**2,889,883,677**	**2,889,883,677**	1,486,878,989	1,486,878,989
வங்கிகளுடனான வைப்புகள்	மட்டம் 2	**6,133,705,351**	**6,133,705,351**	6,596,072,932	6,596,072,932
பதிவழிப்புச் செலவில் நிதிச் சொத்துக்கள் - கடன் மற்றும் ஏனைய கருவிகள்	மட்டம் 2	**65,079,635,908**	**65,079,635,908**	54,856,210,318	54,520,749,578
பதிவழிப்புச் செலவில் நிதிச் சொத்துக்கள் - ஏனைய வாடிக்கையாளரிடமிருந்து பெற வேண்டிய கடன்களும் வருமதிகளும்					
அடகு	மட்டம் 2	**42,234,452,674**	**42,234,452,674**	20,173,958,657	20,173,958,657
ஊழியர் கடன்கள்	மட்டம் 2	**5,501,098,905**	**5,501,098,905**	4,614,968,345	4,470,424,793
குறுங்கால	மட்டம் 2	**13,716,623,362**	**13,716,623,362**	9,989,450,293	9,989,450,293
நீண்டகால	மட்டம் 2	**152,522,804,644**	**152,522,804,644**	153,291,882,926	95,480,281,792
ஏனைய சொத்துக்கள்	மட்டம் 2	**6,018,325,952**	**6,018,325,952**	3,721,641,936	3,721,641,936
		294,096,530,472	**294,096,530,472**	254,731,064,396	196,439,458,971
நிதிப் பொறுப்புக்கள்					
வங்கிகளுக்குரிய நிலுவைகள்	மட்டம் 2	**47,470,707,056**	**47,470,707,056**	29,500,936,543	29,211,567,919
ஏனைய வாடிக்கையாளருக்குரிய நிலுவைகள்	மட்டம் 2	**210,301,323,468**	**210,301,322,468**	187,752,465,256	187,752,465,256
வழங்கப்பட்ட கடன்கள் மற்றும் ஏனைய கடன் பெற்ற நிதி	மட்டம் 2	**-**	**-**	2,000,000,000	2,000,000,000
ஏனைய பொறுப்புக்கள்	மட்டம் 2	**6,426,430,198**	**6,426,430,198**	5,514,857,775	5,514,857,775
		264,198,460,722	**264,198,460,722**	224,768,259,574	224,478,890,950

46.7 சீர்மதிப்புப் பெறுமதியில் கொண்டு செல்லப்படாத நிதியியல் சொத்துக்களினதும் பொறுப்புக்களினதும் சீர்மதிப்புப் பெறுமதிக்கான அளவீட்டு அடிப்படை

சீர்மதிப்புப் பெறுமதியானது, கொண்டு செல்லும் பெறுமதியினை அண்ணளவாக்குகின்ற சொத்துக்கள்

குறுகியகால முதிர்ச்சியினைக் கொண்டுள்ள (ஒரு வருடத்தைவிடக் குறைந்த) நிதியியல் சொத்துக்கள் மற்றும் பொறுப்புகளுக்காக கொண்டு செல்லும் தொகைகள், அவற்றின் சீர்மதிப்புப் பெறுமதியினை அண்ணளவாக்குகின்றன என ஊகிக்கப்படுகின்றது. குறிப்பான முதிர்ச்சியற்ற சேமிப்புக் கணக்குகளுக்காகவும் இவ் ஊகம் பிரயோகிக்கப்படுகின்றது.

வாடிக்கையாளர்களுக்கான கடன்களும் கிடைக்கப் பெறத்தக்கவைகளும்

வாடிக்கையாளர்களுக்கான கடன்கள் மற்றும் முற்பணங்களின் மொத்தச் சொத்துப் பட்டியலில் 36% க்கும் மேல், ஒரு வருடத்துக்கும் குறைவான எஞ்சியிருக்கின்ற ஒப்பந்த முதிர்ச்சியினைக் கொண்டுள்ளன. ஆகையினால், வாடிக்கையாளர்களுக்கான குறுகியகால கடன்களினதும், முற்பணங்களினதும் சீர்மதிப்புப் பெறுமதி, அறிக்கையிடும் திகதியன்றுள்ளவாறு அவற்றின் கொண்டு செல்லும் பெறுமதினை அண்ணளவாக்குகின்றது.

கடன்தீர் செலவில் கொண்டு செல்லப்படும் நிலையான வீத நிதியியல் சொத்துக்களினதும், பொறுப்புக்களினதும் சீர்மதிப்புப் பெறுமதியானது, அதே நிதியியல் சாதனங்களுக்காக நடப்பு சந்தை வீதங்களுடன் அவை முதலில் இனங்காணப்பட்டிருந்த போதான சந்தை வட்டி வீதங்களை ஒப்பிடுவதன் மூலம் மதிப்பிடப்படுகின்றன. நிலையான வட்டியினைக் கொண்டுள்ள வைப்புகளின் மதிப்பிடப்பட்ட சீர்மதிப்புப் பெறுமதியானது, அதே கொடுகடன் இடர்நேர்வு மற்றும் முதிர்ச்சியுடன் கூடிய படுகடன்களுக்காக நிலவுகின்ற பணச் சந்தை வட்டி வீதங்களைப் பயன்படுத்தி, கழிவு செய்யப்பட்ட காசுப் பாய்ச்சல்களை அடிப்படையாகக் கொண்டதாகும். விலைகுறிக்கப்பட்ட சந்தை விலைகள் கிடைக்கப்பெறாத, வழங்கப்பட்ட அத்தகைய குறிப்புகளுக்காக முதிர்ச்சி மற்றும் கொடுகடன் பரம்பல்களுக்கு எஞ்சியிருக்கின்ற காலப்பகுதிக்காக பொருத்தமான நடப்பு வட்டிவிகித விளைவு வளையியின் அடிப்படையில் அமைந்த கழிவு செய்யப்பட்ட காசுப் பாய்ச்சல் மாதிரி பயன்படுத்தப்படுகின்றது. ஏனைய மாறிலி வீத சாதனம் முதலில் இனங்காணப்பட்டதில் இருந்து வேண்டப்பட்ட கொடுகடன் பரம்பலில் காணப்படும் மாற்றத்தினைப் பிரதிபலிப்பதற்கு சீராக்கம் மேற்கொள்ளப்படுகின்றன.

வாடிக்கையாளர்களுக்கு செலுத்த வேண்டியவை

வாடிக்கையாளர்களின் வைப்புகளில் சுமார் 68% ஆனவை, ஒன்றில் கோரிக்கையின் பேரில் மீளச் செலுத்தத்தக்கவை அல்லது ஒரு வருடத்திற்கும் குறைவான எஞ்சியிருக்கின்ற ஒப்பந்த முதிர்ச்சியினைக் கொண்டவை. ஒரு வருடத்திற்கு மேற்பட்ட ஒப்பந்த முதிர்ச்சியுடன் கூடிய வாடிக்கையாளர் வைப்புகள் முன்கூட்டிய முதிர்ச்சித் தரமுயர்த்தலுக்கு உட்படுகின்றன. முன்கூட்டிய முதிர்ச்சித் தரப்படுத்தல் நிகழ்வில் வாடிக்கையார்களுக்குச் செலுத்தப்படும் தொகைகள், அறிக்கைத் திகதியில் உள்ளவாறு அதன் கொண்டு செல்லும் பெறுமதிக்கு முக்கிய வேறுபாட்டினைக் கொண்டிராது. ஆகையினால், வாடிக்கையாளர் வைப்புகளின் சீர்மதிப்புப் பெறுமதியானது, அறிக்கையிடும் திகதியன்றுள்ளவாறு அவற்றின் கொண்டு செல்லும் பெறுமதியினை அன்னளவாக்குகின்றது.

முதிர்ச்சிக்காக வைக்கப்பட்டுள்ள நிதியியல் முதலீட்டின் சீர்மதிப்புப் பெறுமதியானது, அதே நிதியியல் சாதனங்களுக்கான நடப்பு சந்தை வீதங்களைக் கொண்டு, அவை முதலில் இனங்காணப்பட்ட போதான சந்தை வட்டி வீதங்களை ஒப்பிடுவதன் மூலம் மதிப்பிடப்பட்டுள்ளன.



மேலதிகத் தகவல்கள்

ஐந்து வருட சாராம்சம் | 232
முதலீட்டாளர் தகவல் | 234
கிளைகளின் புவியியல் ரீதியான பங்கீடு | 235
குறிப்புகள் | 238
கூட்டுறவுத் தகவல்கள் | 239

ஐந்தாண்டு சாராம்சம்

விபரம்	2022 ரூபா	2021 ரூபா	2020 ரூபா
இலாபம் மற்றும் நட்டம்			
மொத்த வருமானம்	**36,202,749,629**	24,492,768,957	24,354,246,869
வட்டி வருமானம்	**35,273,433,857**	23,545,299,165	23,182,459,141
வட்டிச் செலவுகள்	**(19,639,529,550)**	(9,893,373,234)	(12,294,380,832)
தேறிய வட்டி வருமானம்	**15,633,904,307**	13,651,925,931	10,888,078,309
ஏனைய தேறிய வருமானம்	**574,130,849**	635,357,741	899,852,505
மொத்த செயற்பாட்டு வருமானம்	**16,208,035,156**	14,287,283,672	11,787,930,814
நிதிச் சொத்துக்கள் மீதான வலுக்குறைப்பு நட்டம்	**(2,852,677,176)**	(3,256,775,862)	(2,010,929,062)
தேறிய செயற்பாட்டு வருமானம்	**13,355,357,980**	11,030,507,810	9,777,001,752
ஆளணிச் செலவுகள்	**(8,739,537,602)**	(7,292,269,883)	(5,983,362,037)
தேய்மானம் மற்றும் பதிவழிப்புச் செலவுகள்	**(532,733,987)**	(520,988,009)	(616,792,758)
ஏனைய செலவுகள்	**(2,084,970,281)**	(1,290,468,186)	(1,115,987,925)
செயற்பாட்டு இலாபம்	**1,998,116,109**	1,926,781,733	2,060,859,032
நிதிச் சேவைகள் மீதான NBT	-	-	-
நிதிச் சேவைகள் மீதான பெறுமதி சேர்க்கப்பட்ட வரி (VAT)	**(1,561,474,848)**	(1,151,277,133)	(1,047,410,630)
சமூகப் பாதுகாப்பு பங்களிப்பு வரி	**(77,525,933)**	-	-
கடன் மீள் கொடுப்பனவுத் தீர்வை	-	-	-
வரிக்கு முன்னரான இலாபம்	**359,115,328**	775,504,600	1,013,448,401
இலாபம் மீதான வரி	**990,279,323**	(469,201,889)	(609,412,349)
வரிக்குப் பின்னரான இலாபம்	**1,349,394,652**	306,302,711	404,036,052
சொத்துக்கள்			
காசு மற்றும் காசுக்கு சமமானவை	**2,889,883,677**	1,486,878,989	3,758,858,141
வங்கிகளுடனான வைப்புகள்	**6,133,705,351**	6,596,072,932	8,436,353,244
இலாபம் அல்லது நட்டம் ஊடாக நியாயப் பெறுமதியில் பங்குரிமைக் கருவிகள்	**120,280**	188,140	145,160
பதிவழிப்புச் செலவில் நிதிச் சொத்துக்கள் - ஏனைய வாடிக்கையாளரிடமிருந்து பெற வேண்டிய கடன்களும் வருமதிகளும்	**198,008,145,155**	175,229,666,656	156,694,052,473
பதிவழிப்புச் செலவில் நிதி முதலீடுகள் - கடன் மற்றும் ஏனைய கருவிகள்	**65,079,635,908**	54,856,210,318	46,962,354,137
ஏனைய விரிவான வருமானம் ஊடாக நியாயப் பெறுமதியில் பங்குரிமைக் கருவிகள்	**2,289,919**	2,289,919	2,289,919
ஆதனம் மற்றும் இயந்திரங்களும் உபகரணங்களும்	**926,615,241**	928,568,438	970,538,655
அருவச் சொத்துக்கள்	**68,867,744**	113,688,780	21,272,699
சொத்துக்களைப் பயன்படுத்தும் உரிமை	**718,096,698**	505,092,023	598,978,557
ஒத்திவைக்கப்பட்ட வரி சொத்துக்கள்	**3,525,174,919**	1,263,795,071	903,720,969
ஏனைய சொத்துக்கள்	**8,042,615,550**	4,907,060,297	2,760,586,570
மொத்த சொத்துக்கள்	**285,395,150,443**	245,889,511,562	221,109,150,524
பொறுப்புக்கள்			
வங்கிகளுக்குரிய நிலுவைகள்	**47,470,707,056**	29,500,936,543	21,796,679,350
ஏனைய வாடிக்கையாளருக்குரிய நிலுவைகள்	**210,301,323,468**	187,752,465,256	172,882,632,278
வழங்கப்பட்ட கடன்பத்திரம் மற்றும் ஏனைய பெறப்பட்ட நிதிகள்	-	2,000,000,000	2,000,000,000
நடைமுறை வரி பொறுப்புகள்	**1,011,924,146**	503,021,886	378,203,555
ஏனைய பொறுப்புகள்	**7,293,487,262**	7,693,300,812	6,154,443,776
ஓய்வூதிய நலன் கடப்பாடு	**3,091,581,136**	3,046,464,739	2,782,874,624
மொத்தப் பொறுப்புக்கள்	**269,169,023,068**	230,496,189,235	205,994,833,583
பங்குரிமை			
கூறப்பட்ட மூலதனம்	**8,221,864,565**	8,047,229,930	8,047,229,930
நியதிச்சட்ட ஒதுக்க நிதி	**845,247,866**	777,778,133	762,462,998
தக்க வைக்கப்பட்ட சம்பாத்தியங்கள்	**2,889,785,536**	2,636,433,521	2,449,318,947
ஏனைய ஒதுக்குகள்	**4,269,229,407**	3,931,880,743	3,855,305,066
மொத்தப் பங்குதாரர் பங்குரிமை	**16,226,127,375**	15,393,322,327	15,114,316,941
மொத்த பங்குரிமை மற்றும் பொறுப்புகள்	**285,395,150,443**	245,889,511,562	221,109,150,524
நியதிச்சட்ட திரவச் சொத்துக்கள் விகிதம்	**27.83%**	26.18%	29.30%
மூலதன போதுமான விகிதங்கள் - பாசல் III அடிப்படையில்			
பொது பங்குரிமை அடுக்கு 1 மூலதன விகிதம்	**8.29%**	8.72%	10.34%
மொத்த அடுக்கு 1 மூலதன விகிதம்	**8.29%**	8.72%	10.34%
மொத்த மூலதன விகிதம்	**15.22%**	14.27%	14.94%

2019 ரூபா	2018 ரூபா
27,507,821,054	26,070,610,605
26,357,071,298	24,865, 108,981
(13,903,881,276)	(12,959,526,709)
12,453,190,022	11,905,582,272
872,445,458	946,396,458
13,325,635,480	12,851,978,730
(2,408,748,853)	(1,409,784,095)
10,916,886,627	11,442,194,635
(5,931,625,972)	(5,877,946,793)
(617,322,679)	(319,020,738)
(1,407,680,268)	(1,638,896,765)
2,960,257,709	3,606,330,338
(123,625,704)	(154,490,412)
(1,012,948,950)	(1,158,678,090)
-	-
(601,522,646)	(190,079,946)
1,222,160,409	2,103,081,890
(723,565,878)	(1,029,495,530)
498,594,531	1,073,586,360
2,750,187,219	689,184,136
9,798,242,492	6,496,628,053
123,000	115,600
136,205,641,441	133,432,804,004
45,664,745,400	27,920,326,465
2,289,919	4,176,342,999
1,228,419,894	1,275,785,603
45,356,343	60,787,719
855,183,154	-
696,316,484	467,332,859
2,732,423,840	2,418,011,987
199,978,929,186	176,937,319,425
22,050,009,005	11,098,334,822
149,599,829,047	141,559,973,557
4,707,852,534	4,707,852,534
448,881,448	473,833,076
5,970,920,446	2,460,286,430
2,236,115,128	1,926,924,377
185,013,607,608	162,227,204,796
8,047,229,930	8,047,229,930
742,261,195	717,331,468
2,421,534,400	2,315,905,812
3,754,296,053	3,629,647,420
14,965,321,578	14,710,114,631
199,978,929,186	176,937,319,426
32.38%	24.27%
10.90%	11.58%
10.90%	11.58%
16.27%	13.61%

முதலீட்டாளர் தகவல்

குறிப்பிடத்தக்க விகிதங்கள்

விகிதங்கள்	31/12/2022	31/12/2021
சொத்துக்கள்		
ஒரு பங்கிற்கான தேறிய சொத்துக்களின் பெறுமதி (ரூபா)	**29.43**	28.24
பங்குரிமைக்குக் கடன் (%)	**6.93%**	12.99%
வட்டிக் காப்பீடு (தடவைகள்)	**1.93**	2.63

பங்குத் தகவல்கள்

பங்குதாரர்கள்	நடைமுறை வருடம் 31/12/2022		கடந்த வருடம் 31/12/2021	
	சாதாரண பங்குகளின் எண்ணிக்கை	வைத்திருத்தல் %	சாதாரண பங்குகளின் எண்ணிக்கை	வைத்திருத்தல் %
பொதுத் திறைசேரி	**501,941,973**	**91%**	495,758,027	91%
இலங்கை வங்கி	**16,448,448**	**3%**	16,448,448	3%
மக்கள் வங்கி	**16,448,448**	**3%**	16,448,448	3%
தேசிய சேமிப்பு வங்கி	**16,452,126**	**3%**	16,452,126	3%
	551,290,995		545,107,049	

கிளைகளின் புவியியல் ரீதியான பங்கீடு

இலங்கையின் மாகாணங்கள்

1. வட மேல் மாகாணம்
2. சப்ரகமுவ மாகாணம்
3. தென் மாகாணம்
4. கிழக்கு மாகாணம்
5. மத்திய மாகாணம்
6. மேல் மாகாணம்
7. ஊவா மாகாணம்
8. வட மத்திய மாகாணம்
9. வட மாகாணம்

இலங்கையின் மாவட்டங்கள்

1. குருநாகல் மாவட்டம்
2. புத்தளம் மாவட்டம்
3. கேகாலை மாவட்டம்
4. இரத்தினபுரி மாவட்டம்
5. காலி மாவட்டம்
6. ஹம்பாந்தோட்டை மாவட்டம்
7. மாத்தறை மாவட்டம்
8. அம்பாறை மாவட்டம
9. மட்டக்களப்பு மாவட்டம்
10. திருகோணமலை மாவட்டம்
11. கண்டி மாவட்டம்
12. மாத்தளை மாவட்டம்
13. நுவரெலியா மாவட்டம்
14. கம்பஹா மாவட்டம்
15. களுத்துறை மாவட்டம்
16. கொழும்பு மாவட்டம
17. பதுளை மாவட்டம்
18. மொனராகல மாவட்டம்
19. அநுராதபுரம் மாவட்டம்
20. கிளிநொச்சி மாவட்டம்
21. யாழ்ப்பாணம் மாவட்டம்
22. முல்லைத்தீவு மாவட்டம்
23. மன்னார் மாவட்டம்
24. வவுனியா மாவட்டம்
25. பொலன்னறுவை மாவட்டம்

வட மேல் மாகாணம்		சப்ரகமுவ மாகாணம்	
நிர்வாக மாவட்டம்	கிளை	நிர்வாக மாவட்டம்	கிளை
குருநாகல்	அலவ்வ	கேகாலை	அறநாயக்க
குருநாகல்	அம்பன்பொல	கேகாலை	புலத்கொஹுபிட்டிய
குருநாகல்	அத்துகல்புர	கேகாலை	தெஹியோவிட்ட
குருநாகல்	கல்கமுவ	கேகாலை	தெரணியகல
குருநாகல்	கிரிஉல்ல	கேகாலை	தேவாலேகம
குருநாகல்	இப்பாகமுவ	கேகாலை	ஹெம்மாதகம
குருநாகல்	குளியாப்பிட்டிய	கேகாலை	கேகாலை
குருநாகல்	குருநாகல்	கேகாலை	கித்துல்கல
குருநாகல்	மஹாஓயா	கேகாலை	கொட்டியாகும்புர
குருநாகல்	மாவத்தகம	கேகாலை	மாவனெல்ல
குருநாகல்	மெல்சிரிபுர	கேகாலை	நெலும்தெனிய
குருநாகல்	நாரம்மல	கேகாலை	பிட்டகல்தெனிய
குருநாகல்	நிக்கவரெட்டிய	கேகாலை	றம்புக்கன
குருநாகல்	பண்டுவஸ்நுவர	கேகாலை	ருவன்வெல்ல
குருநாகல்	பரகஹதெனிய	கேகாலை	வரக்காபொல
குருநாகல்	பெரகும்புர	கேகாலை	எட்டியாந்தோட்டை
குருநாகல்	பொல்பித்திகம	இரத்தினபுரி	பலாங்கொடை
குருநாகல்	பொத்துஹேர	இரத்தினபுரி	எஹலியகொட
குருநாகல்	ரிதீகம	இரத்தினபுரி	எம்பிலிப்பிட்டிய
குருநாகல்	வாரியப்பொல	இரத்தினபுரி	எரத்ன
புத்தளம்	ஆனமடுவ	இரத்தினபுரி	கொடக்காவெல
புத்தளம்	போவத்த	இரத்தினபுரி	கஹவத்த
புத்தளம்	சிலாபம்	இரத்தினபுரி	கலவான
புத்தளம்	தும்மலசூரிய	இரத்தினபுரி	கிரிஎல
புத்தளம்	கற்பிட்டி	இரத்தினபுரி	கொலன்ன
புத்தளம்	கிரிமெட்டியான	இரத்தினபுரி	குருவிட்ட
புத்தளம்	மஹாவெவ	இரத்தினபுரி	நிவித்திகல
புத்தளம்	மாம்புரி	இரத்தினபுரி	பெல்மதுல்ல
புத்தளம்	முந்தல்	இரத்தினபுரி	பொத்துபிட்டிய
புத்தளம்	நாத்தான்டிய	இரத்தினபுரி	புலுங்குபிட்டிய
புத்தளம்	நவகத்தேகம	இரத்தினபுரி	இறக்குவான
புத்தளம்	பாலக்குடா	இரத்தினபுரி	இரத்தினபுரி
புத்தளம்	பன்னல	இரத்தினபுரி	சிறி பாலபத்தல
புத்தளம்	புத்தளம்	இரத்தினபுரி	வெலிகேபொல
புத்தளம்	சாந்த ஆனபுர		
புத்தளம்	வென்னப்புவ		

கிளைகளின் புவியியல் ரீதியான பங்கீடு

தென் மாகாணம்

நிர்வாக மாவட்டம்	கிளை
காலி	அஹங்கம
காலி	அக்மீமன
காலி	பத்தேகம
காலி	பலப்பிட்டிய
காலி	பட்டபொல
காலி	எல்பிட்டிய
காலி	காலி
காலி	கொனாகொல புர
காலி	ஹிக்கடுவ
காலி	இமாதுவ
காலி	களுவெல்ல
காலி	கரந்தெனிய
காலி	கராப்பிட்டிய
காலி	நெலுவ
காலி	பிட்டிகல
காலி	தல்கஸ்வெல
காலி	உடுகம
காலி	ஊரகஸ்மன் ஹந்திய
காலி	யக்கலமுல்ல
ஹம்பாந்தோட்டை	அங்குணகொல பெலஸ்ஸ
ஹம்பாந்தோட்டை	அம்பலாந்தொட
ஹம்பாந்தோட்டை	பரவாகும்புர
ஹம்பாந்தோட்டை	பெலியத்த
ஹம்பாந்தோட்டை	ஹம்பாந்தோட்டை
ஹம்பாந்தோட்டை	கட்டுவன
ஹம்பாந்தோட்டை	லுணுகம் வெஹர
ஹம்பாந்தோட்டை	மித்தெனிய
ஹம்பாந்தோட்டை	ரண்ண
ஹம்பாந்தோட்டை	சூரியவெவ
ஹம்பாந்தோட்டை	தங்காலை
ஹம்பாந்தோட்டை	திஸ்ஸ மஹாராம
ஹம்பாந்தோட்டை	வலஸ்முல்ல
ஹம்பாந்தோட்டை	வராப்பிட்டிய
ஹம்பாந்தோட்டை	வீரகெட்டிய
மாத்தறை	அக்குரஸ்ஸ
மாத்தறை	தெய்யந்தர
மாத்தறை	தெனியாய
மாத்தறை	தெவிநுவர
மாத்தறை	திக்வெல்ல
மாத்தறை	கந்தர
மாத்தறை	ஹக்மன
மாத்தறை	கம்புறுகமுவ
மாத்தறை	கம்புறுப்பிட்டி
மாத்தறை	கெக்கனதுர

தென் மாகாணம்

நிர்வாக மாவட்டம்	கிளை
மாத்தறை	கிரிந்த
மாத்தறை	மாத்தறை நகரம்
மாத்தறை	மாவறல்ல
மாத்தறை	மிரிஸ்ஸ
மாத்தறை	மொறவக்க
மாத்தறை	பம்புரான
மாத்தறை	பிட்டபெத்தர
மாத்தறை	திஹகொட
மாத்தறை	ஊறுபொக்க
மாத்தறை	வெலிகம

கிழக்கு மாகாணம்

நிர்வாக மாவட்டம்	கிளை
அம்பாறை	அக்கரைப்பற்று
அம்பாறை	அம்பாறை தமன
அம்பாறை	தெஹியத்த கண்டி
அம்பாறை	கல்முனை
அம்பாறை	மஹாஓயா
அம்பாறை	நிந்தவூர்
அம்பாறை	பொத்துவில்
அம்பாறை	சம்மாந்துறை
அம்பாறை	உஹன
மட்டக்களப்பு	மட்டக்களப்பு
மட்டக்களப்பு	மட்டக்களப்பு 2வது நகரம்
மட்டக்களப்பு	செங்கலடி
மட்டக்களப்பு	ஏறாவூர்
மட்டக்களப்பு	களுவாஞ்சிகுடி
மட்டக்களப்பு	காத்தான்குடி
மட்டக்களப்பு	கொக்கட்டிச் சோலை
மட்டக்களப்பு	வாழைச்சேனை
மட்டக்களப்பு	கந்தளாய்
மட்டக்களப்பு	மூதூர்
மட்டக்களப்பு	திருகோணமலை

மத்திய மாகாணம்

நிர்வாக மாவட்டம்	கிளை
மாத்தறை	கெக்கனதுர
கண்டி	தந்துரே
கண்டி	தவுலகல
கண்டி	கம்பளை
கண்டி	ஹத்தரலியத்த
கண்டி	ஹெதெனிய
கண்டி	கண்டி
கண்டி	கண்டி 2வது நகரம்
கண்டி	கட்டுகஸ்தோட்டை
கண்டி	மெனிக்ஹின்ன
கண்டி	மாரஸ்ஸன
கண்டி	மொறயாய
கண்டி	நாவலப்பிட்டி
கண்டி	பேராதனை
கண்டி	பூஜாப்பிட்டிய
கண்டி	செங்கடகல
கண்டி	தெல்தெனிய
கண்டி	உடவெல
கண்டி	உடுதும்பர
கண்டி	வத்தேகம
மாத்தளை	தம்புள்ள
மாத்தளை	கலேவெல
மாத்தளை	லக்கல
மாத்தளை	மாத்தளை
மாத்தளை	நாஉல
மாத்தளை	இரத்தோட்டை
மாத்தளை	வில்கமுவ
நுவரெலியா	அக்கரப்பத்தன
நுவரெலியா	கினிகத்ஹேன
நுவரெலியா	ஹங்குரங்கெத்த
நுவரெலியா	கொட்டகல
நுவரெலியா	நில்தன்டாஹின்ன
நுவரெலியா	நுவரெலியா
நுவரெலியா	பூண்டுலோயா
நுவரெலியா	ரிகில்லகஸ்கட

கிளைகளின் புவியியல் ரீதியான பங்கீடு

மேல் மாகாணம்		ஊவா மாகாணம்		வட மத்திய மாகாணம், வட மாகாணம்	
நிர்வாக மாவட்டம்	கிளை	நிர்வாக மாவட்டம்	கிளை	நிர்வாக மாவட்டம்	கிளை
கொழும்பு	அவிஸ்ஸாவெல்ல	பதுளை	பதுளை	அநுராதபுரம்	அநுராதபுரம்
கொழும்பு	ஹோமாகம	பதுளை	பண்டாரவளை	அநுராதபுரம்	கலென் பிந்துணுவெவ
கொழும்பு	கொலன்னாவ	பதுளை	போகஹகும்புர		
கொழும்பு	நுகேகொடை	பதுளை	தியத்தலாவ	அநுராதபுரம்	கல்நேவ
கொழும்பு	பிலியந்தலை	பதுளை	கிராந்துருகோட்டே	அநுராதபுரம்	கோணபத்திராவ
கம்பஹா	திவுலப்பிட்டிய	பதுளை	ஹல்தும்முல்ல	அநுராதபுரம்	கஹட்டகஸ் திகிலிய
கம்பஹா	கம்பஹா	பதுளை	ஹப்புத்தளை		
கம்பஹா	ஜா-எல	பதுளை	கந்தேகெட்டிய	அநுராதபுரம்	கெக்கிராவ
கம்பஹா	களனி	பதுளை	லுணுகல	அநுராதபுரம்	மதவாச்சி
கம்பஹா	கிரிந்திவெல	பதுளை	மஹியங்கன	அநுராதபுரம்	மிஹிந்தலை
கம்பஹா	மாவரமண்டிய	பதுளை	மீகஹகிவுல	அநுராதபுரம்	புதிய நகர் - அநுராதபுரம்
கம்பஹா	மினுவாங்கொடை	பதுளை	பசறை		
கம்பஹா	மீரிகம	பதுளை	ரிதீமாலியத்த	அநுராதபுரம்	ரம்பேவ
கம்பஹா	மிரிஸ்வத்த	பதுளை	ஊவா மாளிகாதென்ன	அநுராதபுரம்	தலாவ
கம்பஹா	நீர்கொழும்பு			அநுராதபுரம்	தம்புத்தேகம
கம்பஹா	நிட்டம்புவ	பதுளை	ஊவா பரணகம	அநுராதபுரம்	தம்புத்தேகம நகரம்
கம்பஹா	றாகம	பதுளை	வெலிமட		
களுத்துறை	புலத்சிங்கள	மொனராகல	படல்கும்புர	அநுராதபுரம்	திறப்பனே
களுத்துறை	வலகெதர	மொனராகல	பிபிலை	பொலன்னறுவை	அரலகன்வில
களுத்துறை	அகலவத்த	மொனராகல	புத்தள	பொலன்னறுவை	பக்கமூன
களுத்துறை	மில்லனிய	மொனராகல	மடுல்ல	பொலன்னறுவை	கல்அமுன
களுத்துறை	கோணபொல	மொனராகல	மெதகம	பொலன்னறுவை	ஹிங்குராக் கொட
களுத்துறை	மொறொன்தொடுவ	மொனராகல	மொனராகல		
களுத்துறை	பேருவளை	மொனராகல	செவனகல	பொலன்னறுவை	கதுருவெல
களுத்துறை	பாணந்துறை	மொனராகல	சியம்பலாண்டுவ	பொலன்னறுவை	மன்னம்பிட்டி
களுத்துறை	ஹொரண	மொனராகல	தனமல்வில	பொலன்னறுவை	மெதிரிகிரிய
களுத்துறை	வரகாகொட	மொனராகல	வெள்ளவாய	பொலன்னறுவை	பொலன்னறுவை
களுத்துறை	இங்கிரிய			பொலன்னறுவை	புலஸ்திகம
களுத்துறை	தொடங்கொட			பொலன்னறுவை	செவனபிட்டிய
களுத்துறை	மீகஹதென்ன			பொலன்னறுவை	சிரிபுர
களுத்துறை	பதுரெலிய				
களுத்துறை	களுத்துறை				
களுத்துறை	மொறகஹஹேன				
களுத்துறை	மத்துகம				
களுத்துறை	வாதுவ				

குறிப்புகள்

கூட்டுறவுத் தகவல்

வங்கியின் பதிவு செய்யப்பட்ட பெயர்
பிரதேச அபிவிருத்தி வங்கி

சட்ட அந்தஸ்து
2008 ஆம் ஆண்டின் 41 ஆம் இலக்க பிரதேச அபிவிருத்தி வங்கி சட்டத்தின் கீழ் உருவாக்கப்பட்ட உரிமம் அளிக்கப்பட்ட விசேட வங்கி.

கடன் தர மதிப்பீடு
“BBB+” பாதகமான ICRA லங்கா லிமிட்டெட்

சபையின் பணிப்பாளர்கள்
சுயாதீன நிறைவேற்று அல்லாத பணிப்பாளர்கள்

திரு. M. மஹிந்த சாலிய - தலைவர்
திரு. லலித் அபேசிறிவர்தன
திரு. W.M. கருணாரத்ன
பேராசிரியர் H.M.W ஆரியரத்ன ஹேரத்
கலாநிதி நிர்மால் டி சில்வா
திருமதி ஹிரந்தி கருணாரத்ன

சுயாதீனமற்ற நிறைவேற்று அல்லாத பணிப்பாளர்கள்
திரு. K. ரவீந்திரன்
திரு. G.A. ஜயஷாந்த
திரு. M.S.S.S. பெர்ணான்டோ
திருமதி V.K. நாரங்கொட
திரு. W.A. சரத் குமார

பொது முகாமையாளர்/ பி.நி.அ
திரு. சுமேத எதிரிசூரிய
(பதில் கடமை)

பணிப்பாளர் சபையின் செயலாளர்
திருமதி R.M.T. ராஜபக்ஷ

கிளைகளின் எண்ணிக்கை
272

தலைமை அலுவலகம்
இல. 933, கண்டி வீதி, வெதமுல்ல, களனி.
தொலைபேசி : +94112035454 / +94112035455-9
தொலைநகல் : +94112035467
மின்னஞ்சல் : info@rdb.lk
இணைய தளம் : www.rdb.lk
வரி செலுத்துவோர் அடையாள இல. (TIN) : 409272339
VAT பதிவிலக்கம் : 409272339 - 7000

கணக்காய்வாளர்கள்
கணக்காய்வாளர் நாயகம்
தேசிய கணக்காய்வு அலுவலகம்,
இல. 306/72, பொல்துவ வீதி, பத்தரமுல்ல.

மாகாண அலுவலகங்கள்

வட மத்திய மாகாண அலுவலகம்
இல. 65D, 4வது ஒழுங்கை, அபய பிளேஸ், அநுராதபுரம்

ஊவா மாகாண அலுவலகம்
இல. 1/315, பசறை வீதி, பதுளை

சப்ரகமுவ மாகாண அலுவலகம்
இல. 510, கொழும்பு வீதி, வெரலுப, இரத்தினபுரி

தென் மாகாண அலுவலகம்
இல. 28B, எஸ்ப்லானடே வீதி, உயன்வத்த, மாத்தறை

மத்திய மாகாண அலுவலகம்
இல. 16, தர்மாசோக மாவத்தை, கண்டி

மேல் மாகாண அலுவலகம்
இல. 36, கண்டி வீதி, மிரிஸ்வத்த, முதுன்கொட

வட மேல் மாகாண அலுவலகம்
இல. 155, நீர்கொழும்பு வீதி, குருநாகல்

கிழக்கு மாகாண அலுவலகம்
இல. 51A, புதிய கல்முனை வீதி, கல்லடி, மட்டக்களப்பு





RDB
ප්‍රාදේශීය සංවර්ධන බැංකුව
பிரதேச அபிவிருத்தி வங்கி
Regional Development Bank

No. 933, Kandy Road, Wedamulla,
Kelaniya, Sri Lanka